

# பரிபாடல் மூலமும் பரிமேலழகர் உரையும்

டாக்டர் உ.வே.சா.நூல் நிலையம்
சென்னை - 600 090

உ

கணபதி துணை

எட்டுத்தொகையுள் ஐந்தாவதாகிய

# பரிபாடல் மூலமும்

## பரிமேலழகருரையும்

இவை

பொருட்சுருக்கம் விசேடக்குறிப்பு முதலியவற்றுடன்

டாக்டர் உ.வே.சா. அவர்களின் பதிப்பு

நூல் சேர்க்கை
எண். ..........

டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம்
2, அருண்டேல் கடற்கரைச்சாலை
பெசன்ட்நகர், சென்னை - 600 090.

2010

டாக்டர் உ.வே.சா.நூல்நிலையம்
வெளியீட்டெண்: 219
2010
1200 பிரதிகள்

முதற் பதிப்பு - 1918
இரண்டாம் பதிப்பு - 1935
மூன்றாம் பதிப்பு - 1948
நான்காம் பதிப்பு - 1956
ஐந்தாம் பதிப்பு - 1980
ஆறாம் பதிப்பு - 1995
ஏழாம் பதிப்பு - 2010

©
டாக்டர் உ.வே.சா.நூல்நிலையம்

பக்கங்கள் : 84+264=348

விலை ரூ. 150/-

அச்சும் கட்டும்
பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்
எண். 16 (142) ஜானி ஜான் கான் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 2848 2441, 2848 2973

# பதிப்புரை

பரிபாடல் என்பது இசைப்பாடல். எழுபது பரிபாடல் இடைச்சங்க காலத்தவை என்பது இறையனார் களவியலுரைகாரர் கருத்து. எண்ணிறந்த பரிபாடல்கள் என்பர் அடியார்க்கு நல்லார். தொல்காப்பியர்,

"பரிபாடல்லே
நால் ஈர் ஐம்பது உயர்பு அடிஆக
ஐஐந்து ஆகும் இழிபு அடிக்கு எல்லை"

எனப் பரிபாடலின் அடியெல்லைக்கு இலக்கணம் எழுதினார். இருபத்தைந்து அடிகள் முதற்கொண்டு நானூறடி வரை பரிபாடல் அமையும் என்பது அதன் கருத்து. கிடைக்கப் பெற்றுள்ளவரை பாலையாழ்ப் பண்ணமைந்த ஆசிரியர் நல்லந்துவனாரின் வையைப் பாடலே (பாடல் எண் 11) 140 அடிகள் பேரெல்லை கொண்டதாக உள்ளது. பண்ணோதிறம் அமைந்த கேசவனாரின் செவ்வேள் பாடல் (பாடல் எண் 14) 32 அடிகள் சிற்றெல்லை கொண்டதாக உள்ளது. பரிபாடல் திரட்டாகத் தமிழ்த்தாத்தா தொகுத்தளித்தவற்றில் தொல்காப்பியச் செய்யுளியலிலிருந்து திரட்டிய இரு பாடல்கள் முழுமையானவை. அவையிரண்டும் சிற்றெல்லைக்குக் குறையாமலும் பேரெல்லைக்கு மிகாமலும் உள்ளன. எஞ்சியன முழுப்பாடல்கள் அல்லவாகையால் அடிவரையறை அறியக்கூடவில்லை.

செவ்வேள் பற்றியும், திருமால் பற்றியும் வையை பற்றியுமான பரிபாடல்கள் நமக்குக் கிடைத்துள்ளன. வையைபற்றிய பாடல்களை அகம் பற்றியன என்றும் எஞ்சியன பத்தியுள் அடங்குமாகையால் புறம் பற்றியன என்றும் அதனால் பரிபாடல் அகமும் புறமும் கலந்த இலக்கியம் என்றும் கூறுவர். தலைமக்கள் பெயர் அறியும் வண்ணம் அமைவதும், காமமுற்றாரே கூறுவதாக-வெளிப்படைக் காமமாக அமைவதும் அகப்புறம் எனப்படும். அதுவேறு. எனவே இந்நூலை அகப்புற இலக்கியம் எனக்கூறாது அகமும் புறமும் கலந்த இலக்கியம் எனக் கூறுவதே பொருளிலக்கண அமைதிக்கு ஏற்புடையதாகும்.

டாக்டர் உ.வேசா. அவர்கள் பதிப்பித்தவாறே பதிப்பிக்க வேண்டும் என்னும் நியதியுடன் இப்பதிப்பு வெளிவருகிறது.

டாக்டர் உ.வேசா.அவர்கள் 'ஆயிரம் விரித்த' என்று தொடங்கும் தலைச் செய்யுளின் அராகத்தை உரைநடை போலப் பதிப்பித்து அதன் அடிக்குறிப்பில் 'பிரதி உதவியும் உரை உதவியும் இல்லாமையால் அடிவரையறையும் பொருள் வரையறையும் செய்து இந்த அராகங்கள் நான்கினையும் ஒழுங்குபடுத்த இயலவில்லை. இங்ஙனமே மூலத்திலும் உரையிலும் சிலசில பின்னும் உள்ளன' எனக்குறித்தார். அவ்வராகத்தை ஒராற்றான் வரையறை செய்து பின்னர் வெளியிடப்பட்டுள்ளன (காண்க: செம்மொழித்தமிழ் இலக்கண இலக்கியங்கள், தமிழ்ப்பல்கலைக் கழக வெளியீடு 2010) இதனாலும் மேலும் சில அடிவரையறைகளாலும் அப்பாடலின் அடிகள் 60 ஆக உயர்ந்தன. டாக்டர் உ.வேசா.அவர்கள் செய்த வரையறைப்படி அடி எண்ணிக்கை 65 ஆகும். தமிழ்த்தாத்தா கண்டெடுத்தவற்றிற்கு மேலாக ஒரு பரிபாடலைக் கூட இன்னமும் நம்மில் யாரும் கண்டெடுக்கவில்லை என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

இசைவகுத்த சங்கநூல் என்ற பெருமைக்குரியது பரிபாடல். இசைக்கேற்பப் பாடலமைக்கும்போது இசைவகுப்போர் முதன்மை இடம் பெறுவர். இயற்றப் பெற்ற பாடலுக்கு இசைவல்லோர் இசை அமைத்தலில் பாடலாசிரியர் முதன்மை இடம் பெறுவர். பாடலுக்கு இசையமைத்தல் என்ற முறையே பழந்தமிழ் முறை என்பது இந்நூலால் அறியக் கிடைக்கும் அரிய செய்தியாகும். இசையமைத்தோர் பதின்மருள் கண்ணகனார், கேசவனார், நல்லச்சுதனார் ஆகிய மூவரும் இயற்றமிழ்ப் புலவர்களாகப் பாடல் புனையும் ஆற்றலும் பெற்றவர் என்பது கருதத்தக்கதாகும்.

இந்நூலில் உள்ள செவ்வேள் பற்றிய பாடல்கள் திருமால் பற்றிய பாடல்கள் பத்தி வைராக்கியத்தில் மிக உச்சநிலை உடையன எனினும் அவ்வத்தலவழிபாட்டிடங்களிலும், வழிபாடுகளிலும் இவை சிறப்பிடம் பெறாமைக்குக் காரணம் இவற்றின் மிகப்பழமையான செஞ்சொல்லாட்சியே எனலாம். அன்றியும் இவற்றைப் பாடினோர் அருளாளர்களாக அறிவிக்கப்படாமை என்ற ஒரு காரணத்தையும் கருதலாம்.

தமிழ்த்தாத்தா அவர்கள் மிக அரிதின் முயன்று முதன்முதலாகப் பரிமேலழகர் உரையுடன் இந்நூலை 1918ஆம் ஆண்டு வெளியிட்டார். அவர்தம் வாழ்நாளிலேயே 1935ஆம் ஆண்டு இந்நூலின் இரண்டாம்

பதிப்பையும் வெளியிட்டார். இந்நூலின் மூன்றாம் பதிப்பு 1948ஆம் ஆண்டு அன்னாரின் திருமகனார் எஸ். கல்யாணசுந்தரையர் அவர்களால் வெளியிடப்பெற்றது. அப்பதிப்பின் முகவுரையில் "எந்தையாரவர்களுடைய உருவச்சிலை, சென்னை இராசதானிக் கல்லூரியில் நிறுவப்பெறும் இச்சமயத்தில் இப்பதிப்பை வெளியிடக் கிடைத்ததை என்பெரும்பேறாகக் கருதுகிறேன்'' எனக் குறிப்பிட்டுள்ளதைக் கொண்டு அப்பெருமகனார் இந்நூலின்பால் கொண்டிருந்த ஈடுபாட்டை உய்த்துணரலாம். இந்நூலின் ஐந்தாம் ஆறாம் பதிப்புகள் டாக்டர் உ.வேசா.நூல்நிலைய வெளியீடாக 1980, 1995ஆம் ஆண்டுகள் வெளிவந்தன.

இப்பதிப்புத் தட்டச்சாகி வருங்கால் மெய்ப்பு, ஒப்பு நோக்குதல் செய்த இந்நூலகப்புலவர் முனைவர் ஞா.மேகலா அவர்கட்குப் பாராட்டுகள். இந்நூலகத்தில் பல்லாண்டுகளாகப் பணியாற்றிவரும் திரு.சா.சாய்ராமன் அவர்கள் மெய்ப்பொப்புச் செய்வதில் வல்லவராவார். அவர் இந்நூல் செப்பமுற வெளிவர மெய்ப்பொப்புச் செய்துதவியமைக்காக எல்லாம் வல்ல திருவருட்சக்தி அவருக்கு நீண்ட ஆயுளும், திடமும் வளங்களும் வழங்கியருள்வதாகுக. தட்டச்சுப் பணியைச் செவ்வனே செய்துதவிய திருமதி. ச.சத்தியவாணி அவர்கட்கும் திருவருள் நலம் புரிவதாகுக.

தமிழ்த்தாத்தா அவர்களின் அரும்பெரும்பணிகளை ஏற்றுப் போற்றிக் கொண்டாடும் தமிழ் கூறு நல்லுலகம் இப்பதிப்பையும் கொண்டாடுமென்பது ஒருதலை.

......................................................யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல ; நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருள் இணர்க் கடம்பின் ஒலிதாரோயே

— கடுவன் இளஎயினனார்

சென்னை-600090
நாள் : 29-9-2010

ம.வே.பசுபதி
மதிப்பியல் காப்பாட்சியர்

## பரிபாடலுக்கு ஐயரவர்கள் எழுதிய *ஒப்புமைப் பகுதிகள் முதலியன

1. 2:36. ஒருங்குடன் : "நிலவரையாற்றி நிறைபய னொருங்குடன்" 15 : 6; "பெருமலை விடரகத் தொருங்குடன் குழீஇ" கலி. 103 : 19.
2. 2:62. உரை : படிகால் முறை ; படிகால் - ஏணி ; தேவாரம்.
3. 2:73. பன்மாண் : "நீயவர் முன்னடி யொல்கி யுணர்த்தினவும் பன்மாண்" கலி. 92 : 55-6.
4. 3:12. உரை : ஞாபகவேது : காரகஹேது, ஞாபகஹேதுவென ஹேது இருவகை.
5. 3:82. பச்சை - பச்சும்மன் ; பாரதம்.
6. 4:19. இடிமுரசு : "படுமழை யுருமி னிரங்கு முரசு" புறநா. 350:4.
7. 4:62. நின்னிற் சிறந்த நின்றாள் : "எம்மாவீடு" திருவாய். 2.9:11.
8. 5:42. தடவு: "வடபான் முனிவன் றடவு" புறநா. 201:8.
9. 7:40. இறுவரை : "இறுவரை வேங்கையி னொள்வீ சிதறி" கலி. 41:11.
10. 7:67, 11:93. ஆயிடை : குறுந். 43:3, 340:3; பதிற். 11:24.
11. 10:121. திரிதர்வாய் : "நின்னின் விடாஅ நிழல்போற் றிரிதர்வாய்" கலி. 61:8.
12. 12:19. பி-ம்: "வாச நறுநெய் யாட்டி" ஆட்டி - பூசி.
13. 15:45. கடந்தடல் : "கடந்தடுமுன்பொடு", "தாளிற் கடந்தட்டு", "அரைசுபடக் கடந்தட்டு", கலி. 2:4, 101:31, 105:1.
14. 16:4. உரை : அழியா நிற்கும் - வழியாநிற்கும்.
15. 16:8. முஞ்சம் - ஒருவகைப்புல்; விசுவாமித்திரம்; முஞ்சகேசர் - திருமால்.
16. **திரட்டு - மதுரை 8 : 2. புகழ்பூத்தலல்லது : "நீங்குங்கா னிறஞ்சாய்ந்து புணருங்காற் புகழ் பூத்து" கலி. 78:11.

* இவை இப்பதிப்பில் புதிதாகச் சேர்க்கப்பெற்றுள்ளன. நூற்பெயரோடு இல்லாத எண்கள் பரிபாடலுக்கு உரியவை எனக் கொள்க.

** பரிபாடற்றிரட்டு

## பரிபாடல் இரண்டாம் பதிப்பின் பின் வந்த பதிப்புக்களில் சேர்க்கப்பெற்ற குறிப்புக்கள்

1. 1:2. அணவரல் : குறுந். 64:3, ஒப்பு.
2. 1:8. "திருஞெமர்ந்தமர்ந்த மார்பு" : ஒப்பு : "திருஞெமரகலம்" பதிற். 31:7.
3. 3:4 - 5. உரை: அட்டமூர்த்தங்கள் : திருவாய்மொழி 3. 6:5.
4. 3:84. நீயாநினைவை : நீயா - விட்டு நீங்காத; இறை சூ. 43. உரை; குறுந். 36:3; ஐங்குறு. 22:4.
5. பதுமத்துப்பாயல் ; 5 : 49; குமரகுருபர. 392.
6. 13:50-51. ஒப்பு : திருவாய். 8.5:1; திருவரங்கக். 73; திருவேங்கடமாலை 8; குமரகுருபர. 479.
7. 13:54. அல்குல் : குமரகுருபர. 540, 554.
8. 20:4-5 : ஒப்பு : நற். 151:2-4.
9. பரிபாடற்றிரட்டு 2 : 25. பெற்றான்-கணவன்; அகநா. 86:14; குறள். 58; நான்மணிக். 21.
10. பரிபாடற்றிரட்டு 7:2. பி-ம். பூவொடுபுரையும் பேரூர்.

நூற்பெயரோடு இல்லாத எண்கள் பரிபாடலுக்கு உரியவை எனக்கொள்க.

# இப்புத்தகத்தில் அடங்கியவை

பக்கம்

1. நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி... viii
2. முகவுரை ... ... ... ... ix
3. பரிபாடற் பொருட்சுருக்கம் ... ... xvii
4. பரிபாடற்றிரட்டின் பொருட் சுருக்கம் ... lxiv
5. இந்நூலாலும் உரையாலும் தெரிந்த விசேடச்செய்திகள் ... ... ... lxvii
6. பாடினோர் வரலாறு ... ... ... lxxi
(ஆசிரியன் நல்லந்துவனார், இளம்பெருவழுதியார் கடுவன் இளவெயினனார், கரும்பிள்ளைப் பூதனார், கீரந்தையார், குன்றம்பூதனார், கேசவனார், நப்பண்ணனார், நல்லச்சுதனார், நல்லழுசியார், நல்லெழுனியார், நல்வழுதியார், மையோடக் கோவனார்.)
7. இசை வகுத்தோர் வரலாறு ... ... lxxix
(கண்ணகனார், கண்ணனாகனார், கேசவனார், நந்நாகனார், நல்லச்சுதனார், நன்னாகனார், நாகனார், பித்தாமத்தர், பெட்டனாகனார், மருத்துவனல்லச்சுதனார்.)
8. இந்நூலிலுள்ள சிறந்த பாகங்கள் ... ... lxxx
9. இந்நூலை எடுத்தாண்ட உரையாசிரியர் முதலியோர் பெயர்கள் ... ... lxxx
10. பரிமேலழகர் வரலாறு ... ... lxxxi
11. உரைச் சிறப்புப் பாயிரம்... ... ...lxxxiv
12. பரிபாடல் - பரிமேலழகருரை ... ... 1
13. பரிபாடற்றிரட்டு ... ... 165
14. விசேடக் குறிப்பு ... ... ... 176
15. தொல்காப்பியம், தெய்வச்சிலையாருரையில் மேற்கோளாக எடுத்தாளப்பட்ட இந்நூற்பகுதிகளும் இடமும் ... ... 207
16. அரும்பத முதலியவற்றின் அகராதி... ... 208
17. செய்யுள் முதற்குறிப்பகராதி ... ... 264

## ஐப்பதிப்பில் எடுத்துக்காட்டிய நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி

அகநா : அகநானூறு
அடிக் : அடிக்குறிப்பு
அறநெறி : அறநெறிச்சாரம்
இ.கொ. : இலக்கணக்கொத்து
இலிங்க : இலிங்கபுராணம்
இ.வி: இலக்கண விளக்கம்
இள, இளம் : இளம்பூரணருரை
இறை : இறையனாரகப் பொருள்
ஐங், ஐங்குறு : ஐங்குறு நூறு
கட: கடவுள் வாழ்த்து
கந்த: கந்தபுராணம்
கம்ப : கம்பராமாயணம்
கலி : கலித்தொகை
கலிங்கத் : கலிங்கத்துப்பரணி
காஞ்சி : காஞ்சிப்புராணம்
குலோத் : பிள்ளைத் : குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ்
குறிஞ்சி : குறிஞ்சிப்பாட்டு
குறுந் : குறுந்தொகை
கூர்ம : கூர்மபுராணம்
சிலப் : சிலப்பதிகாரம்
சிற் : திருச்சிற்றம்பலக்கோவையார்
சீகாளத்திப் : சீகாளத்திப் புராணம்
சீவக : சீவகசிந்தாமணி
சூ-சூத்திரம்
சூளா : சூளாமணி
செய் : செய்யுள்
தக்க : தக்கயாகப்பரணி
தஞ்சை : தஞ்சைவாணன் கோவை
தண்டி : தண்டியலங்காரம்
தணிகை : தணிகைப்புராணம்
தனிப் : தனிப்பாடல்
திணைமா : திணைமாலை நூற்றைம்பது
திருக்குற் : திருக்குற்றாலப்புராணம்
திருச்சந்த : திருச்சந்த விருத்தம்
திருச்சிற் : திருச்சிற்றம்பலக் கோவையார்
திருவா : திருவாசகம்
திருவால : திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம்
திருவிளை : திருவிளையாடற் புராணம்
திவ் : திவ்யப் பிரபந்தம்
திவ். பெரிய : திவ்யப் பிரபந்தம், பெரிய திருமொழி
தே : தேவாரம்
தொல் : தொல்காப்பியம்
ந : நச்சினார்க்கினியருரை
நள, நளவெண்: நளவெண்பா
நற் : நற்றிணை
நன் : நன்னூல்
நாற்கவி : நாற்கவிராச நம்பியகப் பொருள்
பட், பட்டினப் : பட்டினப்பாலை
பதிற்: பதிற்றுப்பத்து
பரி : பரிபாடல்
பரி, பரிமேல் : பரிமேலழகருரை
பிரபு : பிரபுலிங்கலீலை
பிரயோக : பிரயோக விவேகம்
பிக்ஷாட : பிக்ஷாடன நவமணி மாலை
பு. வெ : புறப்பொருள் வெண்பா மாலை
புறநா : புறநானூறு
பெரிய : பெரியபுராணம்
பெரியாழ்வார் : பெரியாழ்வார் திருமொழி
பெருங் : பெருங்கதை
பேர் : பேராசிரியருரை
மணி : மணிமேகலை
மதுரை, மதுரைக் : மதுரைக் காஞ்சி
மயிலேறும் : மயிலேறும்பெருமாள் பிள்ளை யுரை.
மு : முற்றும்
மேருமந்தர : மேருமந்தரபுராணம்
மேற் : மேற்கோள்
யசோதர : யசோதர காவியம்
யா. கா : யாப்பருங்கலக்காரிகை
யா. வி : யாப்பருங்கல விருத்தி
விக்கிரம. உலா : விக்கிரம சோழனுலா
வி. பா, வி - பாரதம் : வில்லி புத்தூராழ்வார் பாரதம்.

உ

கணபதி துணை

# முகவுரை

"எண்ணிய வெண்ணியாங் கெய்துப கண்ணுதற்
பவள மால்வரை பயந்த
கவள யானையின் கழல்பணி வோரே."

(பழைய பாடல்)

"ஆவியந் தென்றல் வெற்பி னகத்தியன் விரும்புந் தென்பால்
நாவலந் தீவம் போற்றி நாவலந் தீவந் தன்னுள்
மூவர்கட் கரியா னிற்ப முத்தமிழ்ச் சங்கத் தெய்வப்
பாவலர் வீற்றி ருக்கும் பாண்டிநன் னாடு போற்றி."

(திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம்.)

பரிபாடலென்பது கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்த நல்லிசைப் புலவர்கள் அருளிச் செய்த * எட்டுத்தொகையுள் ஐந்தாவது ; சொற்சுவை பொருட்சுவைகளிற் சிறந்து பொருள்களின் இயற்கையழகுகளை நன்குதெரிவிப்பது ; மதுரை, வையையாறு, திருமருதந்துறை, திருப்பரங்குன்றம், திருமாலிருஞ்சோலைமலையென்பவற்றின் பண்டைக்கால நிலைமைகளையும் அக்கால நாகரிக முறையையும் வைதிக ஒழுக்கங்களையும் தெய்வவழிபாட்டு முறையையும் பிறவழக்கங்களையும் தமிழ்நாட்டின் வரலாறுகள் சிலவற்றையும் செவ்வனே தெரிந்து கொள்ளுதற்குக் கருவியாகவுள்ளது ; பதினோராம் பாடலின் முதலிற் கூறப்பெற்றுள்ள கோள்களின் நிலைமை கடைச்சங்கத்தார் காலத்தை ஒருவகையாகப் புலப்படுத்தும். "நற்றிணை நல்ல" என்னும் வெண்பாவில், 'ஓங்கு பரிபாடல்' எனப் பாராட்டப் பெற்றிருத்தலால் இந்நூலின் உயர்வு நன்கு விளங்கும்.

* எட்டுத்தொகை இன்னவையென்பதை, "நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ, றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல், கற்றறிந்தார் சொல்லுங் கலியோ டகம்புறமென், றித்திறத்த வெட்டுத் தொகை" என்னும் வெண்பாவால் உணர்க; இவை எண்பெருந்தொகை யெனவும், எண்கோவை யெனவும் வழங்கும்.

இந்நூல், பரிபாடலென்னும் பாவால் தொகுக்கப் பெற்றமையின் இப்பெயர்பெற்றது ; பரிபாட்டெனவும் வழங்கும்; இதனை, எண்வகை வனப்பினுள் இழைபென்பர் பேராசிரியர் (தொல். செய். சூ. 242.) பரிபாடலாவது * இசைப்பாவென்றும் † பரிந்து வருவதென்றும் கூறப்படும் ; பரிந்து வருவது - ஏற்றுவருவது.

அறம் பொருள் இன்பம் வீடென்னும் உறுதிப்பொருள் நான்கனுள் இன்பத்தையே பொருளாகக்கொண்டு கடவுள் வாழ்த்து, மலைவிளையாட்டு, புனல்விளையாட்டு முதலியவற்றில் இப்பாடல் வருமென்பர் பேராசிரியர் (தொல். செய். சூ. 121); தெய்வ வாழ்த்து உட்படக் காமப்பொருள்குறித்து உலகியலே பற்றிவருமென்பர் நச்சினார்க்கினியர் (தொல். அகத். சூ. 53); தெய்வமும் காமமும் பொருளாக வருமென்பர் யாப்பருங்கலவிருத்தி யுடையார் முதலியோர்.

தொல்காப்பியச் செய்யுளியலிலுள்ள, "நெடுவெண்பாட்டே", "பரிபா டல்லே, கொச்சக மராகம்", சொற்சீ ரடியும்", "கட்டுரைவகையான்", "உருட்டுவண்ணம்" என்னும் சூத்திரங்கள் முதலியவற்றாலும் அவற்றின் உரைகளாலும் பரிபாடலின் இலக்கணம் நன்கு விளங்கும்; "பரிபாட் டெல்லை" என்னும் சூத்திரம் இப்பாடல்களின் சிற்றெல்லை 25-அடியென்றும் பேரெல்லை 400-அடியென்றும் தெரிவிக்கின்றது.

அன்பினைந்திணை (இறை. சூ.1) என்பதனுரையிலும், தரவின்றாகி (தொல். செய். சூ. 149) என்பதனுரையிலும் 150 - கலியும் 70 - பரிபாடலும் என வரையறை செய்திருத்தலால் இந்நூல் எழுபது பாடலையுடையதென்றும்,

---

* இப்புத்தகம் 5-ஆம் பக்கத்துள்ள 'பரிபாட்டென்பது இசைப்பாவாதலான்' என்பது முதலியவற்றையும், 'கலியும் பரிபாடலும்போலும் இசைப்பாட்டாகிய செந்துறைமார்க்கத்தன' (தொல். செய். சூ. 242, பேர்.) என்பதையும் நோக்குக.

† 'பரிந்தபாட்டு பரிபாட்டெனவரும்; அஃதாவது ஒருவெண்பாவாகி வருதலின்றிப் பலஉறுப்புக்களோடு தொடர்ந்து ஒரு பாட்டாகி முற்றுப்பெறுவது' (தொல். செய். சூ.112, இளம்.); 'பரிபாடலென்பது பாரிந்துவருவது; அஃதாவது கலியுறுப்புப் போலாது பலவடியும் ஏற்றுவருவது' (தொல். செய். சூ.118, பேர்.); 'பரிபாடலென்பது பரிந்துவருவது; அது கலியுறுப்புப்போலாது நான்கு பாவானும் வந்து பலவடியும் வருமாறு நிற்குமென்றுணர்க' தொல். செய். சூ.118, ந.

*"திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்*
*தொருபாட்டுக் * காடுகாட் கொன்று - மருவினிய*
*வையையிரு பத்தாறு மாமதுரை நான்கென்ப*
*செய்யபரி பாடற் றிறம்"*

என்னும் வெண்பாவால் அப்பாடல்களுள், எட்டு திருமாலுக்கும், முப்பத்தொன்று முருகக்கடவுளுக்கும் ஒன்று காடுகிழாளுக்கும் இருபத்தாறு வையையாற்றிற்கும், நான்கு மதுரைக்கும் உரியன வென்றும் தெரிகின்றன.

இப்பாடல்களுள், முதலிலிருந்து தொடர்ச்சியாகவுள்ள இருபத்திரண்டு பாடல்களும், பழைய உரைகளிற் காட்டப்பட்ட மேற்கோள்களிலிருந்து கிடைத்த இரண்டு முழுப்பாடல்களும், சில உறுப்புக்களும். புறத்திரட்டு முதலியவற்றிலிருந்து கிடைத்த சில உறுப்புக்களுமே இப்புத்தகத்தில் உள்ளன.

இவ்விருபத்திரண்டனுள், திருமாலுக்குரியவை ஆறு (1, 2, 3, 4, 13, 15); முருகக்கடவுளுக்குரியவை எட்டு (5, 8, 9, 14, 17, 18, 19, 21) ; இப்பதினான்கும் கடவுள் வாழ்த்து. வையைக்குரியவை எட்டு (6, 7, 10, 11, 12, 16, 20, 22.) கடவுள் வாழ்த்துள் திருப்பரங்குன்றமும் திருமாலிருஞ்சோலைமலையும் கூறப்பெற்ற பாடல்களில் மலைவிளையாட்டும், வையைக்குரிய பாடல்களிற் புனல்விளையாட்டும் வந்துள்ளன.

இவற்றின்பின்னே பதிப்பிக்கப்பெற்ற பகுதிகளுள், திருமாலுக்குரிய முழுப்பாடல் ஒன்று ; வையைக்குரிய முழுப்பாடல் ஒன்று; உறுப்பு ஒன்று ; மதுரைக்குரிய உறுப்புக்கள் ஏழு ; சில உறுப்புக்கள் இன்ன வகையைச் சார்ந்தனவென்று விளங்கவில்லை.

இந்நூலிலுள்ள, "புலவரையறியா" எனத்தொடங்கும் 15-ஆம் பாடல் திருமாலிருஞ்சோலைமலை ஆலயத்திலுள்ள பழைய சிலாசாஸனங்களுள் ஒன்றிற் காணப்படுகின்றது. "இருமை வகை தெரிந்து" (குறள், 23, பரி.) என்பதன் விசேடவுரையில் மேற்கோளாகக் காட்டப்பெற்ற "தெரிமாண் டமிழ்மும்மைத் தென்னம் பொருப்பன், பரிமா நிரையிற் பரந்தன்று வையை" என்பது பரிபாடற் பகுதியென்று நுண்பொருண்மாலையால் பின்பு தெரியவந்தது.

முற்றுமுள்ள கையெழுத்துப் பிரதிகளில் ஒவ்வொரு தொகை நூலின் இறுதியிலும் தொகுத்தோர்பெயரும் தொகுப்பித்தோர் பெயரும் அடிகளின் சிற்றெல்லை பேரெல்லைகளும் பெரும்பாலும்

* "கார்கோளுக்கு" என்றும் பிரதிபேதமுண்டு; கார்கோள்-கடல்.

வரையப்பெற்றிருக்கும்; இந்நூல் முற்றுமுள்ள பிரதி அகப்படாமையால் அவற்றுள் ஒன்றும் புலப்படவில்லை.

கிடைத்த பிரதிகளில் இரண்டாவது முதலிய 20-பாடல்களுக்கு மட்டுமே ஒவ்வொரு பாடலின் பின்னும் துறையும், இயற்றிய ஆசிரியரது பெயரும், அதற்கு இசைவகுத்தோர் பெயரும், அதற்குரிய பண்ணின் பெயரும் எழுதப்பெற்றிருந்தன; ஆனாலும் 13-ஆம் பாடலுக்கு இசைவகுத்தோர் பெயர் காணப்படவில்லை.

இரண்டாவது முதலிய பதினொன்றின்பண் பாலையாழென்றும், 13-ஆவது முதலிய ஐந்தின்பண் நோதிறமென்றும், 18- ஆவது முதலிய நான்கன்பண் காந்தாரமென்றும் இருத்தலை உற்று நோக்கும்பொழுது இந்நூற்பாடல்கள் தேவாரங்கள் போலவே பண்டைக்காலத்தில் பண்முறையால் தொகுக்கப்பெற்று உரிய பண்களுடன் பாடப்பெற்று வந்தனவென்று தெரிகின்றது; "எழுத்துரு வொக்கும், பகுதியின் வந்த பாடகர் பிழைப்பும்" (அடி.11-2) என்னும் இந்நூல் உரைச்சிறப்புப்பாயிரப்பகுதியும் இக்கருத்தை வலியுறுத்தும்; பிற்காலத்திற் பண்ணொடு பாடும் வழக்கம் இல்லாமற் போனமையின் அம்முறையை இப்போது சிறிதும் தெரிந்துகொள்ள இயலவில்லை.

திருவாவடுதுறையாதீனத்துப் பிரதியொன்றும், தருமபுரவாதீனத்திலிருந்து கிடைத்த "பாயிரும் பனிக்கடல்" என்னும் 5-ஆம் பாடல் மட்டுமெழுதிய இரண்டு ஒற்றை ஏடுகளும், ஆழ்வார் திருநகரி ஸ்ரீ. தே. லக்ஷ்மணகவிராயரவர்கள் வீட்டுப் பிரதிகள் இரண்டும், ஸேதுஸம்ஸ்தான மகாவித்வான் பாஷாகவிசேகர ஸ்ரீமத் ரா. இராகவையங்காரவர்கள் அன்புடனுதவிய இரண்டு மூல ஒற்றையேடுகளுமே இந்நூற் பரிசோதனைக்குக் கருவியாக இருந்தன.

இவற்றுள், முதற்பிரதி முதலும் இறுதியுமின்றி மிகவும் சிதைந்து போயிருந்தமையால் பார்த்தவுடன் இன்னநூலென்று புலப்படவில்லை; பிரித்துப் பார்த்தபோது, வண்ணவண் டின்குரல் பண்ணைபோன் றனவேணி என்ற பகுதியைக்கண்டு, அஃது இலக்கணக்கொத்தில் மேற்கோளாக வந்திருத்தலையறிந்து, இது பழைய நூலாக இருக்கவேண்டுமென்று மட்டும் எண்ணினேன்; பிறகு திருமுருகாற்றுப்படையை நச்சினார்க்கினியருரையுடன் ஆராய்ச்சி செய்து வருகையில், "அறுவேறு வகையி னஞ்சுவர மண்டி" (அடி, 58) என்பதன் விசேடவுரையில், முருகக்கடவுளின் திருவவதார வரலாற்றைக்

கூறி, 'இதனைப் பாயிரும் பனிக்கடலென்னும் பரிபாடற் பாட்டானுணர்க' என்றிருந்ததையும், இப்புத்தகத்தில் அம்முதற்குறிப்புள்ள பாடல் அவ்வரலாற்றுடன் ஐந்தாவதாக இருந்ததையும் அறிந்து இச்சுவடி பரிபாடலென்றும், "நற்றிணை நல்ல குறுந்தொகை" என்னும் வெண்பாவால் இஃது எட்டுத்தொகையுள் ஐந்தாவதென்றும் தெளிந்து கொண்டேன். இந்தப்பிரதியில் முதற்பாட்டிறுதியின் உரை தொடங்கி 19-ஆம் பாடலின் 38-ஆம் அடியின் உரைவரையிலுள்ள பகுதிகள் மட்டுமே இருந்தன; நெடுநாள் வரையில் முதலிலிருந்த உரைக்குரிய பாடல் கிடைக்கவில்லை; பின்பு, "கட்டுரை வகையின்" (தொல். செய். சூ. 117) என்பதன் உரையில் இளம்பூரணவடிகள் மேற்கோளாகக் காட்டிய "ஆயிரம் விரித்த" என்னும் பாடலின் இறுதிக்கு இவ்வுரைப்பகுதி பொருளாயிருத் தலைக்கொண்டு அதுவே இந்நூலின் முதற்பாடலென்று நிச்சயிக்கப்பெற்றது.

ஆழ்வார்திருநகரிப்பிரதிகள் இரண்டிலும் 2-ஆவது முதல் 22-ஆவது இறுதியாகவுள்ள பாடல்கள் உரையுடன் இருந்தன; ஒன்று மற்றொன்றைப் பார்த்து எழுதப்பெற்றதாதலின் அவ்விரண்டிற்கும் வேறுபாடு சிறிதும் காணப்படவில்லை; ஆனாலும் ஏட்டின் தேய்வு, ஒடிவு, இராமபாணத்துளை முதலி யவற்றால் ஒரு பிரதியிற் சிதைந்துபோன எழுத்துக்களுட் சில சில மற்றொருபிரதியால் விளக்கமுற்றன; 22-ஆம் பாடலின் பிற்பகுதியும் அதற்குரிய உரையின் முற்பகுதியும் உள்ள ஓரேடு இரண்டு பிரதிகளிலும் இல்லை; இக்குறையைத் தீர்த்துக் கொள்ளுதற்கு எவ்வளவோ இடங்களுக்குச்சென்று பலவருடங் களாகத் தேடியும் பிரதிகள் கிடைக்கவில்லை.

இந்நூல் உரைப்பிரதிகளில் பாடல்களுக்குத் தரவுமுதலிய உறுப்புக்கள் வரையப்படவில்லை; தொல்காப்பியவுரையில் மேற்கோள்களாக வந்த பாடல்களுள் "ஆயிரம் விரித்த", "வானாரெழிலி" என்பவற்றிற்கு மட்டும் இளம்பூரணவடிகள் முதலியோரால் உரிய இடங்களில் உறுப்புக்கள் வரையப் பெற்றிருந்தமையின் அவ்விரண்டு பாடல்கள் மட்டும் அங்ஙனமே பதிப்பிக்கப்பெற்றன.

உரைக்குரிய மூலத்தின் இடங்களை வருத்தமின்றி அறிந்து கொள்ளுதற்காகவே மூலங்களுக்கு அடியெண்கள் ஒருவாறு வரையறை செய்து அமைக்கப்பெற்றன.

ஒப்புமைப்பகுதிகளும், பிறவுரையாசிரியர்கள் மேற்கோள் களாக எடுத்தாண்டிருக்கும் இந்நூற்பகுதிகளும் இவ்வுரையில் விளங்கிய மேற்கோள்களுள்ள இடங்களும், இன்றியமையாக் குறிப்புக்களும் ஆங்காங்குப் பதிப்பிக்கப்பெற்றுள்ளன ; 21-ஆம் பாடலின் 3-ஆம் அடியிலுள்ள, 'தைப்பமை சருமத்து' என்பது சான்றோர் செய்யுட்கண் வடசொற் சிதைந்து இயைந்ததற்கு உதாரணமாகக் காட்டப்பெற்றிருத்தல் (தொல். எச்ச. சூ. 6, ந; இ-வி. சூ. 175) பின்பு தெரியவந்தது.

பின்னுள்ள இரண்டு மேற்கோள்களுக்குமட்டும் இடம் விளங்கவில்லை.

(i) "நெட்டிலை வஞ்சிக்கோ" (பக் - 96)

(ii) "அரக்கிறலி .... ...டைந்து" (பக் - 133)

இப்புத்தகத்திற் சேர்க்கப்பட்டுள்ள அரும்பத முதலியவற்றின் அகராதியில் இந்நூல் மூலம் உரை இவற்றிலுள்ள சொற்களும் வாக்கியங்களும், விஷயங்களும் உவமைகளும் அடங்கியுள்ளன ; விளங்குதற் பொருட்டு அவற்றுட் சிற்சில வெவ்வேறு விதமாகவும் இதில் அமைக்கப் பெற்றுள்ளன.

தலைச்சங்கத்தில் எத்துணையோ பரிபாடல்கள் இருந்தனவென்று இறையனாரகப்பொருளுரை முதலியவற்றால் தெரிந்தாலும் அவற்றுள் ஒன்றேனும் இப்போது கிடைக்கவில்லை ; ஆயினும், பிற்காலத்தில் திருக்குருகைச் சடகோபாழ்வார் சந்நிதிக்கவிராயர் பரம்பரையிலிருந்த சிறந்தகவிஞரொருவரால் இயற்றப்பெற்றதாகத் தெரிகின்ற பாப்பாவினம் என்னும் நூலில் அவரியற்றிய நான்கு பரிபாடல்கள் காணப்படுகின்றன ; அவற்றின்பின் தனித்தனியே எழுதப்பெற்றிருந்த அடியிலுள்ள குறிப்புக்கள் இந்நூலாராய்ச்சிக்கு மிக உபயோகமாக இருந்தன. அவை வருமாறு :

"கருங்கடலுடுத்த" என்னும் பாடலின் குறிப்பு :

"தொல்காப்பியனார் 'செப்பிய நான்குந் தனக்குறுப் பாக' என்று கூறவும் இப்பரிபாடலகத்து எருத்தென்பதோருறுப்பினையும் கூட்டி ஐந்தாகக் கூறியதென்னையெனின், அஃதே! நன்று சொன்னாய்; 'தரவே யெருத்தே யராகங் கொச்சக, மடக்கியல் வாரமொ டைந்துறுப் புடைத்தே' என்பது அகத்தியமாதலின் ; எருத்தமென்பதனைத் தரவென்றொருசாராசிரியர் கூறவும் அகத் தியமுணர்ந்த ஒருசாராசிரியர் பாட்டிற்கு முகம் தரவாதலானும் எருத்தமென்பது கழுத்தின் புறத்திற்குப் பெயராதலானும் அவ்வுறுப்புத் தரவைச் சார்ந்து கிடக்கவேண்டும் என்பதானும் எல்லா நூலிற்கும் அகத்தியம் முந்து நூலாகலானும் அகத்தியனார் நோக்கத்தோடும் ஐந்துறுப்பாக்கினாரெனவுணர்க ; அஃதாக ; இதனுள்,

எண்விராயதென்னை யெனின், 'கொச்சக வகையி னெண்ணொடு விராஅ, யடக்கிய லின்றி யடக்கவும் பெறுமே' என்பதனால் விராயதறிக; 'காமங் கண்ணிய நிலைமைத் தாகும்' எனவே அறத்தினும் பொருளினும் வாராதெனக் கூறிய பரிபாடலை இச்செய்யுளுடையார் வாழ்த்தியலாகக் கூறியதென்னையோ வெனின், 'வாழ்த்தியல் வகையே நாற்பாக்கு முரித்தே' எனச் சிறப்புவிதி ஓதினமையான் நான்கு பாவினுள்ளும் பரிபாடல் வெண்பாயாப்பிற்றாதலாற் கடவுள் வாழ்த்தாகியும் வரப்பெறு மென்னும் முதனூலாசிரியர் நோக்கம்பற்றிச் சங்கத்தார் பரிபாடல் கூறிய வகையாற் கூறினாரெனவுணர்க ; 'ஆயிரம் விரித்த வணங்குடை யருந்தலை' என்னும் பரிபாடற் றரவின்பின், 'எரிமலர் சினைஇய கண்ணை... ... நாவ லந்தண ரருமறைப் பொருளே' என்பது எருத்தம் ; இதனை ஒரு சாராசிரியர் ஆசிரியமென்றுங் கூறுவர்."

"யாஅர்வாழ்வார் யாஅர்வாழ்வார்" என்னும் பாடலின் குறிப்பு:

"இது, சங்கப்பாடலாகிய பரிபாடலுள், கடுவனிளவெயினனார் பாட்டாய் முதலே மூன்றாவதாய்ப் பெட்டனாகனாரிசை பண்ணுப்பாலை யாழாய 'மாஅயோயே' என்னும் பரிபாடல்போல எருத்தமும் கொச்சகமுமின்றி வந்த பரிபாடல்."

"வேல்விழி யிணையென" என்னும் பாடலின் குறிப்பு:

"சங்கப் பரிபாடலுள், 'கார்மலி கதழ் பெயல்...பூமலர்ந்தனவே' என்னும் பதினாலாம் பாட்டின் நடையதாய் அமைந்தது".

"விழுமிய திறத்துறை" என்னும் பாடலின் குறிப்பு:

"இது, பரிபாடலுள், 'தொன்முறையியற்கையின்' என்னும் இரண்டாம் பாட்டினுறுப்புடை நடைத்தாய் வந்தது."

ஏட்டுப்பிரதிகள் தேடுகையிற்கிடைத்த சில குறிப்புக்களாலும், "கண்ணுதற் கடவுள்" என்னும் இந்நூல் உரைச்சிறப்புப்பாயிரத் தாலும், செந்தமிழ், 6, 7, 9, 10-ஆம் தொகுதிகளிற் பதிப்பிக்கப் பெற்றுள்ள திருக்குறட்பரிமேலழகருரை நுண்பொருண்மாலை யாலும் இந்த உரை பரிமேலழகர் இயற்றியதென்று தெரியவந்தது.

இந்தவுரை, பலவிடத்துப் பொழிப்புரையாயும் சிலவிடத்துப் பதவுரையாயும் சிலவிடத்துக் கருத்துரையாயும், சிறிதும் புலப்படாத சொற்களின் பழைய வடிவங்களைப் புலப்படுத்தியும், உரிய இடங்களில் இலக்கணக்குறிப்புக்களைப் பெற்றும், சிலவிடத்து மிக அழகான பதசாரத்துடன் கூடியும், விளங்காத சிலவற்றைத் தக்க தமிழ்நூல் மேற்கோள்களாலும் வேதம் உபநிடதம் முதலியவற்றின் கருத்துக்களாலும் விளக்கியும் மிக விரிவாக அமைந்துள்ளது ;

நுணுகி ஆராயின், திருக்குறளுரையிலும் இவ்வுரையிலும் ஒத்த கருத்துக்களும் ஆசிரியர் பரிமேலழகருடைய கொள்கைகளும் பல காணலாகும்.

இந்நூல் 1918-ஆம் வருஷத்தில் முதன்முறையாகப் பதிப்பிக்கப்பெற்றது. அப்பதிப்பைப்பற்றிய வேறு சில செய்திகளை அதன் முகவுரையிற் காணலாம்.

அதன்பின் வேறு கையெழுத்துப் பிரதிகள் கிடைக்கவில்லை. ஆயினும் பலகாலமாகச் செய்துவந்த ஆராய்ச்சியால் இப்போது இந்நூல் அடைந்த திருத்தங்கள் சில. முதற்பதிப்பு வெளிவந்த பின்பு அவ்வப்பொழுது இந்நூற் செய்யுட்பகுதிகள் சிலவற்றிற்கு எழுதி வைத்திருந்த குறிப்புக்கள் இப்பதிப்பில் நூலுக்குப்பின்பு 'விசேடக்குறிப்பு' என்னும் தலைப்பின்கீழ்ப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. படிப்பவர்கள் எளிதில் இந்நூலின் அருமையையும் சுவையையும் அறியும் பொருட்டு இதன்பாலுள்ள செய்யுட்களின் பொருட் சுருக்கம் ஒருவாறு பரிமேலழகருரையைத் தழுவி வசனமாக எழுதி இப்போது சேர்க்கப்பட்டிருக்கின்றது.

இப்பதிப்பிற்கு உடனிருந்து உதவிசெய்தவர்கள் சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் சிரஞ்சீவி வித்வான் வி.மு. சுப்பிரமணிய ஐயரும், வித்வான் கி.வா. ஜகந்நாதையரும் ஆவர்.

இதிற் காணப்படும் பிழைகள் என்னுடைய மறதி, அயர்ச்சி முதலியவற்றால் நேர்ந்தனவென்று எண்ணிப் பொறுத்துக் கொள்ளும்படி அன்பர்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

ஒன்றுக்கும் பற்றாத என்னை இம்முயற்சியிற் புகுத்தி இந்த அளவிலாவது இந்நூல் வெளிவரும்படி செய்தருளிய திருவாலவாய்ப் பெருமான் பெருங்கருணையைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

'தியாகராஜ விலாசம்'
திருவேட்டீசுவரம் பேட்டை
சென்னை, 24-8-1935

இங்ஙனம்,
*வே. சாமிநாதையர்.*

நூல் சேர்க்கை

# பொருட் சுருக்கம்

## 1. திருமால்

திருமாலே! ஆயிரம் முடியையுடைய ஆதிசேடன் நின் திருமுடி மேற் கவிக்கப் பெற்றாய் ; நீ திருமகள் தங்கும் மார்பையுடையை; சங்கைப்போன்ற திருமேனியையும் யானைக்கொடியையும் கலப்பையாகிய படையையும் ஒற்றைக் குழையையுமுடைய பலதேவனாக உள்ளாய்.

தாமரை மலரைப்போன்ற கண்களையும் காயாம்பூவை யொத்த திருமேனியையும் திருமகள் விரும்பி வீற்றிருக்கும் மார்பினையும் அம்மார்பில் விளங்குகின்ற கௌஸ்துபமணியினையும் பீதாம்பரத்தையும் உடையை ; கருடச் சேவற்கொடியுடையாய் ! வேதம் நின் பெருமையைக் கூறாநிற்கும்.

* * *

நின்னோடு போர்புரிவேமென்று வந்தவர்களது வலிகெடும்படி வென்ற அண்ணலே ! காமன் பிரமனென்னும் இருவருக்கும் தந்தையே ! விளங்கும் ஆபரணங்களையணிந்த திருமாலே ! நின்னுடைய வரலாற்றை அறிதல் மயக்கம் நீங்கிய ஞானியர்க்கும் அரிதாகும். அத்தகையையுடைய நின்னை இத்தகையனென்று கூறுதல் அடியேமுக்கு எங்ஙனம் எளிதாகும்?

திருமறுமார்ப ! நின்வரலாற்றை அறிதல் அருமையென்பதை நன்கு அறிந்தேமாயினும் நின்பால் எமக்குள்ள அன்பு பெரிதாதலின் சொல்லுதற்குரிய ஆற்றலில்லாத யாம் இங்கே சொல்பவற்றைப் பொருளற்றனவென்று வெறாமல் அருள்புரிதல் வேண்டும்.

அந்தணர்களாற் காக்கப்படும் அறமும், அன்பர்களுக்கு அன்பும் நீ. நெறியில் நில்லாதாரைத் திருத்தி ஆட்கொள்ளும் மறக் கருணையும் பகைவர்களுக்குச் செய்யும் வருத்தமும் நீ. வானத்தில் திகழும் திங்களும் கதிரவனும் நீ. ஐந்து திருமுடிகளையுடைய ஈசனும் அவனால் உண்டாகும் சங்காரமும் நீ. வேதமும், பிரமனும், படைத்த லாகிய தொழிலும் நீ. மேகமும் வானமும் நிலமும் இமயமலையும் நீ.

இங்ஙனம் பல பொருளாயிருத்தலினால், இன்னாரை ஒத்தாய், இத்தகையை என்று நினக்கு உவமை கூறத் தகுவோரை யாம் காணேம் ; பொன்னாலழகுபெற்ற சக்கரப்படையை வலத்தேயேந்திய நீ எல்லா உயிர்கட்கும் முதல்வனாயுள்ளாய். நின் புகழோடு விளங்கி நீ நின்னையே ஒக்கின்றாய்.

நின்னைப்போன்ற புகழையுடையை ; பொன்னாடையை யுடையை ; கருடக்கொடி, சங்கு, பகைவரை யழிக்கும் சக்கரப்படை, நீலமணி போன்ற திருமேனி, எண்ணிறந்த புகழ், அழகிய மார்பு ஆகிய இவற்றையுடையை.

இங்ஙனம் புகழ்ந்து, எம் சுற்றத்தாரோடு நின் திருவடிக்கண் பொருந்தி என்றும் விளங்குக வென்று, நின் திருவடியைத் தொழுது பரவுகின்றோம் ; அருள்புரிவாயாக.

## 2. திருமால்

திருமாலே ! மண்ணுலகமும் விண்ணுலகமும் பாழ்பட மதியமும் ஞாயிறும் கெடுதலால் அழகிழந்த வானமும் கெட்ட ஊழிகள் முறையே கழிய அதன்பின் ஆகாய ஊழியும், காற்றுத்தோன்றிய ஊழியும், அதினினின்று செந்தீயும் அதனினின்று மழை முதலி யனவும் அவற்றினின்று நிலமும் தோன்றிய ஊழிகளுமாகிய அளவில்லாதகாலம் கழிந்தபின் உயிர்கள் உளவாதற்பொருட்டு வராகத்திருக்கோலம் கொண்டு நீ நிலத்தினை யெடுத்தாய். அச்செயலால் இக்கற்பம் வராககற்பமென்னும் பெயர்பெற்றது. அப்பெயர் நின்செயலுள் ஒன்றனையே உணர்த்தும். இங்ஙனம் நீ செய்த பல செயல்களுக்கும் உரிய கற்பங்கள் யாவரானும் அறியப்படாதன. அத்தகைய பெருமையை உடைய ஆழிமுதல்வ! நின்னைத் தொழுவேம்.

சங்கின் நிறத்தையுடைய பலதேவனுக்கு நீ பிறப்புமுறையால் இளையை ; இருள்போலும் உடையையும் பனைக்கொடியையும் உடைய அவனுக்குச் சிறப்புமுறையால் முதியையாகின்றாய் ; ஞானியர்கள் ஆராய்ந்தவேதத்தை ஆராய்ந்துணரின் நீ உயிர்தொறும் அந்தர்யாமியாய் நிற்கின்றாயென்பது விளங்கும் ; இவை நின்நிலைமைகள்.

நின் திருமார்பிலுள்ள ஆபரணங்கள் இந்திரவில்லை யொக்கும்; அவற்றின் இடையே உள்ள நித்திலமதாணியோ சந்திரனையொக்கும்; அந்தச் சந்திரனுக்குரிய மறுவைப்போலத் திருமகள் வீற்றிருக் கின்றாள். நீ ஆதிவராகமான காலத்தில் வெள்ளத்துள்மூழ்கி எடுத்த நிலமகளைக் கொம்பிடைக்கொண்டு தழுவுதலாலே புள்ளியள

வேனும் அந்நிலம் வெள்ளத்தால் வருந்தவில்லையென்ற புகழோடு அத்திருமார்பு விளங்குகின்றது. எதிர்த்துவந்த அவுணர்கள் கலங்க இடியோசை போல் நின் சங்கு முழங்குகின்றது.

நீ ஏந்திய சக்கராயுதம் அவுணர்களுடைய தலைகளைப் பனங் காய்கள்போல உருளச்செய்து அவர்களை அழிக்கும். அவ்வாயுதத்தின் உருவம் பகைவரின் உயிரையுண்ணும் கூற்றத்தையொக்கும் ; அதன் நிறம் சுட்ட பொன்னோடு விளங்கும் நெருப்பின் கொழுந்தை ஒக்கும்.

நினது திருமேனியின் ஒளி நீலமணியையும், நின்கண்கள் இணைத் தாமரையையும், நின்வாய்மை தப்பாது வருகின்ற தினத்தையும், நின்பொறை நிலத்தையும், நின்அருள் நீர்நிறைந்த மேகத்தையும் ஒக்குமென்று வேதம் கூறும். யாம் கூறிய அப்பொருள்களையும் பிறவற்றையும் பண்புகளாலும் தொழில்களாலும் ஒத்தனை; எப்பொருளின் அகத்தும் நீ இருக்கின்றாய்.

கருடக்கொடியை உடையோய் ! வேள்வியாசானது உரை நின் உருவம் ; வேள்விக்குரிய பசுவைக்கொள்ளல் யூபஉருவாகிய நினக்கு உணவு ; வேள்வித்தீயை முறையாக மூட்டிச் சுடரினது பெருக்கத்தை உண்டாக்கிக் கோடல் அந்தணர் காண்கின்ற நின்வெளிப்பாடு ; கடவுள் இல்லையென்பாரும் அது கண்டு உண்டெென்பர்.

தேவர்களுக்கு உணவாகிய அமிர்தத்தைக் கடைந்து கொடுப்பதாக நின்திருவுள்ளத்தில் நினைந்த அளவிலே அத்தேவர்க்கு மூவாமையும் ஒழியாவலியும் சாவாமையும் உரியவாயின. ஆகவே நின் பல புகழ் எங்கும் பரந்தன.

அத்தகைய அரிய மரபினோய் ! எம்முடைய அறிவு கொடும்பாடு அறியாமல் எமக்கு மெய்யுணர்வே உண்டாக வேண்டுமென்று நின் அடியைத் தலையுற வணங்கிப் பலமுறை வாழ்த்திச் சுற்றத்தோடு பரவுகின்றோம் ; அருள்புரிவாயாக.

## 3. திருமால்

மாயோய் ! பணிந்தாரது பிறவிப்பிணியைப்போக்கும் சேவடி யையும் நீலமணிபோன்ற திருமேனியையும் உடையோய்! தீ, காற்று, வானம், நிலம், நீரென்னும் ஐந்து பூதங்களும் சூரிய சந்திரரும் வேள்வித் தலைவனும் செவ்வாய் முதலிய ஐந்து கோள்களும் அசுரரும் துவாதசாதித்தியரும் வசுக்கள் எண்மரும் ஏகாதசருத்திரர்களும் அச்சுவினிதேவர்களும் யமனும் அவனுடைய ஏவலனாகிய கூற்றுவனும் மூவேழுலகமும் அவற்றிலுள்ள உயிர்ப்பன்மையும் ஆகிய

இவையெல்லாம் நின்னிடத்திற்றோன்றிப் பரந்தவையென்று வேதம் கூறும் ; அதனால் யாமும் கூறினேம். தாமரை மலரில் தோன்றிய பிரமதேவனும் அவனுக்குத் தந்தையும் நீயென்று அந்தணரருமறை சொல்லும். தேவர்களிடமிருந்து அமிர்தத்தைக்கொணர்ந்து தன் தாயின் இடுக்கணைத் தீர்த்த கருடனை ஊர்தியாக உடையை ; அக் கருடனையே கொடியாகவும் உடையை. நின் திருவடிகளைத் தொழாரும் உளரோ? கீழேழுலகமும் அளந்த திருவடியை உடையை, நெருப்பும் கூற்றுவனும் யமனும் சூரியனும் கூடும் ஊழிமுடிவில் ஏழும் ஒன்றாகிய கடலிலே அழுந்துகின்ற நிலமகளை அழகிய வராகமாகிக் கொம்பினால் எடுத்தோயெனவும் மேகங்கள் பொழிவதனால் வீழ்கின்ற நீரை அன்னச்சேவலாகி நின் சிறகினால் வறளச் செய்தோ யெனவும் முனிவரும் தேவரும் விரும்பி நின்னைப் புகழ்வார். அவர்கள் புகழும் முறையிலேயே யாமும் நின்னைப் புகழ்வேம்.

கேசியென்னும் அசுரனை அழித்தோய் ! எண்ணிறந்தமையால் நின்புகழைப்போன்றன நின் கைகள். மோகினியாகவந்த காலத்து அமுது கடைந்த இருசாராருள் அசுரரை யொழித்து அமரருக்கே அமுதத்தை அளித்தமையால் நடுவுநிலை திறம்பிய ஒருகையை உடையாய். அளவற்ற கைகளையும் அளவற்ற யாக்கைகளையும் உடையாய் நீ. நின் உயர்வு கூறக் கருதின் நீயே உணரினல்லது பிறரால் உணரப்படுவதோ?

வேதமுதல்வ ! ஆகமங்களாலும், அகங்காரத்தாலும், மனத்தாலும், உணர்வினாலும், மற்று எல்லாவற்றாலும் வனப்பும் எல்லையும் அறியப்படாதாய் நீ. பதினாறு கலைகளுள்ள சந்திரனுடைய கிரணங்களை உணவாகவுடைய தேவர்களுக்கு முதல்வன் நீ. நீ உலகளந்த காலத்தில் நினக்கு அஞ்சியோடிக் கடலிற் பாய்ந்த அவுணர்க்கும் பிழை செய்யாது நின்ற அவுணர்க்கும் முதல்வன் நீ. அதனால் நினக்குப் பகைவர், நட்டோரென்னும் முறை உண்டோ? ஆயிரந்தலைகளையுடைய ஆதிசேடனைத் தன் வாயிற் கௌவிய நின் ஊர்தியாகிய கருடன் தன் தருக்கு அடங்கி ஓவெனக் கதறுவதற்குக் காரணமாகியவனும் காலமுதல்வனும் நீ.

நீ இத்தன்மையினையென்று சாமவேதம் கூறுதலின் இவற்றை விளங்க அறிந்தோம். அங்ஙனம் அறிந்தவாறு : தீயினுள் வெம்மையும், மலரினுள் மணமும், கல்லினுள் மணியும், சொல்லினுள் வாய்மையும், அறத்தினுள் அன்பும் மறத்தினுள் வன்மையும், வேதத்துள் உபநிடதமும், பூதத்துள் ஆகாயமும், ஆதித்தனில் ஒளியும், சந்திரனில்

தண்மையும் நீ. வியாபகமாகிய பொருள்களும் அவற்றுள் வியாப்பியமும் நீ. ஆதலின் நீ உறைதலும் இல்லை ; உறையுமிடமும் இல்லை. அவை நினக்கு உளவாதல் மாயம். நீ பிறவாப் பிறப்பில்லை ; நின்னைப் பிறப்பித்தோரும் இல்லை.

காயாம்பூவின் நிறத்தையுடையோய்! அருளைக் குடையாகவும், அறத்தைக் காம்பாகவும் கொண்டு, மூவேழுலகத்தையும் பொதுக் கடிந்து தனியே காக்கும் காப்பை யுடையாய் நீ.

பூதங்கள் ஐந்தும் கன்மேந்திரியங்கள் ஐந்தும் ஞானேந்திரியங்கள் ஐந்தும் புலன்கள் ஐந்தும் மனம் முதலிய அந்தக்கரணங்கள் மூன்றும் மூலப்பகுதியும் புருடனுமெனப்பட்ட தத்துவம் இருபத்தைந்தனாலும் நால்வகை யுகங்களிலும் ஆராயப்படும் பெருமையை உடையை.

சிவந்த கண்களையுடைய வாசுதேவனே ! கரிய கண்களையுடைய சங்கருடணனே ! சிவந்த உடம்பினையுடைய பிரத்தியும்நனே ! பசிய உடம்பினையுடைய அநிருத்தனே ! ஆய்ச்சியரோடு குரவை கோத்தலால் அவர்களுக்கு இடமும் வலமும் ஆயினோய் ! குடக்கூத்தாட எடுத்த குடத்தையுடையோய் ! அலப்படையையுடையோய் ! கோவல! காத்தற்றொழிலையுடையோய் ! அறியப்படாத மரபினோய் ! அன்பரது நினைவின்கண் உள்ளோய் ! என்றும் நிலைபெற்றோய்! உலகையாளும் மன்னவ ! இயலறிந்த புலவ ! யாழையுடைய பாண! வனமாலையை யணிந்தோய் ! தோல்வியை யடையாத சங்கையுடையோய் ! பீதாம்பரத்தை யுடையோய் ! வலம்புரிவண்ண! சக்கரத்தை வலத்திற் றரித்தோய் ! பொருதிறன்மல்ல ! திருவின்கணவ! பெரிய வீரனே !

நிலந்தோன்றாத ஆதிகாலத்தே வெள்ளத்தின் நடுவில் பிரமனோடு உந்திக்கண் தோன்றிய தாமரையையுடையவனாகிய நினது சக்கரமே உலகிற்கு நிழலாவது. அருள்புரிவாயாக.

## 4. திருமால்

திருமாலே ! இந்திரியம் ஐந்தையும் மயக்கமற நீக்கி மைத்திரி, கருணை, முதிதை, இகழ்ச்சியென்னும் நான்கினாலும் சித்தத்தைத் தூயதாக்கிச் சமாதிகூடிய நின் அன்பர்கள் நின்னைத் தொழுதேத்தி நின்புகழை விரித்தனர்; அப்புகழ்களெல்லாம் நினக்கு இயல்பாவன வன்றி வியக்கப்படுவன அல்ல; இதனை அறிந்தும் அத்தன்மையின ரல்லாத யாங்கள் அவற்றுட் சிலவற்றை இங்கும் அங்குமாகப் பிறழக்

கூறுகின்றேம் ; அதுகண்டு நீ நகைத்தலும் தகுதியே ; அதனால் யாம் கூறுவதை ஒழிவேமல்லேம்.

நின்னுடைய திருமேனி நீலமணியையும் அலையடங்கிய கடலையும் நீர்நிறைந்த மேகத்தையும் ஒத்தது. அத்தகைய கரியமேனியுடன் மாறுபட்ட பொன்னிற ஆடையை உடையை நீ.

இயல்பாகவே சிவந்த கண்ணையுடையோய் ! பிரகலாதன் நின்னைப் புகழ, அவனை இரணியன் சினத்தாற் பிணித்தகாலத்தில் பிரகலாதனுடைய நெஞ்சிலே பொருந்திய நீ தூணிலிருந்து புறப்பட்டு அவ்விரணியனுடைய மார்பை வகிர்ந்த நகத்தையுடையை.

முன்பு பூமியானது வெள்ளத்தில் அழுந்தின காலத்தில் வராகமாகிக் கழுத்தால்தாங்கி அதனை அவ்வெள்ளத்தினின்று எடுத்த நின் செயல் மேருவின் தொழிலை ஒக்கும்.

நின் வெம்மையும் ஒளியும் சூரியனிடத்துக் காணப்படுகின்றன. நின் தண்மையும் மென்மையும் திங்களிடத்தும், நின் சுரத்தலும் வண்மையும் மாரியினிடத்தும், நின் தாங்குந்திறனும் பொறுமையும் பூமியினிடத்தும், நின்மணமும் ஒட்பமும் காயாம்பூவினிடத்தும், நின் தோற்றமும் பெருமையும் நீரினிடத்தும், நின் உருவமும் ஒலியும் ஆகாயத்தினிடத்தும், நின்வருகையும் ஒடுக்கமும் வாயுவினிடத்தும் காணப்படும். ஆதலின் இவையும் உவையும் அவையும் பிறவுமாகி நின்னிடத்திலிருந்து தோன்றிக் காக்கப்பெற்றனவெல்லாம் பின்னும் நின்னோடே பொருந்தின.

கருடக்கொடியையுடையாய் ! நின்னுடைய கொடிகளாகப் பனை, கலப்பை, யானை என்பனவுளவேனும் அவை கருடக்கொடியைப் போலத் தனியே உயர்ந்தனவல்ல. அக்கருடன் பாம்பினது உடலையும் உயிரையும் உண்ணுவான். அவன் வயிற்றின்மேற் கட்டப்பட்டிருப்பதும் பாம்பு ; அவனது தொடி, கண்ணிகள், கழுத்துப்பூண், சூட்டு, சிறகுகளின் மேலிருப்பன எல்லாம் பாம்பு. பகைவர் வலியைக் கெடுத்தோய் ! கொடிமேல் இருந்த அவனது இரையும் பாம்பு.

கோபமும் அருளும் பட்சபாதமும் நடுவுநிலையும் ஆகிய இவற்றை மறமும் அறமும் உடையார்பால் முறையே உடையை; இல்லாரிடத்து இல்லாய் ; இங்ஙனம் அன்றிப் பகைவருயிரை நீக்குதலும் நட்டோருயிரைப் பாதுகாத்தலுமாகிய தொழிலை உடையையல்லை ; ஏனெனின் நினக்குப் பகைவரும் நட்டோரும் இல்லை. உயிர்களது இயல்பால் நினக்குப் பகையும் நட்பும் உளபோலத் தோன்றுவன வல்லது நின் இயல்பால் அவை இருப்பனவல்ல.

அன்பர்மனத்திற் கொண்டனவன்றி நினக்கென வேறு திருவுருவம் உடையையல்லை. நீலமணிபோன்ற திருமேனிக்கண் மணங்கமழுந் துளவத்தால் தொடுத்த கண்ணியையுடையை. பொன்போலத் தோன்றும் ஸ்ரீவத்ஸத்தையுடைய மார்ப ! நின் திருவுந்தியில் தோன்றிய தாமரையைப்போன்ற கண்களை உடையை ; அளவிடுதற்கு அரியை.

வீடளிக்குங்கால் நின்னினும் சிறந்த தாளிணையை உடையை; நிறைந்த கடவுட்டன்மையை உடையை ; இன்னும் பலவேறு இயல்புகள் நின்பால் உள ; அவை நின்னையொத்த முனிவர்கள் உணரும் உபநிடதத்தின்பொருள் ; யாம் உணர்வனவல்ல.

ஆலமரமும், கடப்பமரமும், யாற்றிடைக்குறையும், குன்றும் பிறவுமாகிய இடங்களிற் பொருந்திய பல தெய்வங்களாக வகுத்துச் சொல்லப்படும் பலவேறு திருநாமங்களை உடையோய்! எங்கும் நீயே நிறைந்திருக்கின்றாய். நின் அன்பர்கள் தொழுத கைகளின் தாழ்ச்சிக்கண் அகப்பட்டவனும் நீயே; அவ்வன்பர்களுக்கு ஏவலாளனும் நீயே. அவரவர் செய்வனவற்றிற்குப் பாதுகாப்பாக இருப்பவனும் நீயே. அருள்புரிவாயாக.

## 5. செவ்வேள்

பிணிமுகமென்னும் யானையின்மேல் எழுந்தருளி வேலாயுதத்தால் சூரபன்மனாகிய மாமரத்தைத் தடிந்து கிரவுஞ்சமலையை ஊடறுத்தோய் ! ஆறு திருமுடியை உடையோய்!

நீ ஆறுதலையுடனும் பன்னிரண்டு தோளுடனும் சூரியனது எழுச்சிபோன்ற நிற அழகுடனும் தாமரைப்பூவின்கண் தோன்றிய தோற்றத்தை உடையை. ‘சங்காரக்கடவுளுக்கு மகனே ! செவ்வேளே! சால்பினையுடையாய் ! தலைவனே !’ என்று வெறியாட்டில் வேலனாகிய படிமத்தான் ஏத்தும் வெறிப்பாட்டும் உள ; இவ்வுலகிற்கெல்லாம் நீயே தலைவனாதலின் அவ்விடத்து அவன் கண்டு ஏத்துகின்ற அப்பாட்டுக்கள் மெய்யல்ல ; ஆயினும் அங்கே நீ வெளிப்படுதலால் அவை பொய்யுமல்ல ; அவன் ஏத்துவனவற்றுள் ஒன்றாகியவழி தலைமைச் சிறப்பினையுடைய நீ அச்சிறப்பின்றி நிற்பாய் ; ஆயினும், நல்வினையாற் சிறப்புடைய உயர்பிறப்பினராதலும் தீவினையால் இழி பிறப்பினராதலுமாகிய இது நின்னாணைக்கண்ணது ; ஆதலின் அச்சிறப்பு நினக்கு ஒருகாலும் ஒழியாது.

நான்முகனாகிய பாகன் செலுத்த வேதக்குதிரைகளைப் பூட்டிய பூமியாகிய தேரையூர்ந்து நாகம் நாணாகவும் மலை வில்லாகவும் கொண்டு திரிபுரங்களை ஓர் அழலம்பினால் அழியும்படி எய்தவனும் அமரர்களுடைய வேள்விப்பாகம் உண்டவனும் பசியகண்ணை யுடையவனுமாகிய இறைவன் உமாதேவியாரோடு இன்புறுகையில் உண்டான கருவை இந்திரனுடைய வேண்டுகோளுக்கு இணங்கிப் பலவாகச் சேதித்தருளினான். அக்கருவை முனிவர்கள் எழுவரும் பெற்றுத் தீயை மூட்டி அதன்கண் அவியோடு பெய்தனர். பின்னர், அதனை அருந்ததியொழிந்த ஏனையவராகிய கார்த்திகைமாதர் அறுவரும் உண்டு கருப்பங்கொண்டு சரவணப் பொய்கையில் தாமரைப்பூவாகிய பாயற்கண்ணே நின்னைப் பெற்றாரென்பர்.

முருகா ! அவ்வாறு நின்னைப்பெற்ற அன்றே இந்திரன் இகல் மிகுதியால் நின்மேல் தனது வச்சிராயுதங்கொண்டு எறிய, ஆறு வேறு உருவமாகிப் பின்னும் ஒருவனாயினை.

குழவிப்பருவத்தில் முற்ற வளராத திருமேனியினையுடைய நீ விளையாட்டாகச் செய்த போரில் படைக்கலமில்லாத நின்கைக்கு இந்திரன் தோல்வியுற்றான் ; ஆதலால், 'இவ்வாற்றலுடைய இவனே நம்சேனைக்குத் தலைவன்' எனக்கருதி நினக்கு அக்கினிதேவன் கோழியைத் தந்தான். இந்திரன் மயிலையும் யமன் வெள்ளாட்டு மறியையும் தந்தனர். அங்ஙனம் அவரும் பிறரும் தத்தம் மெய்யினின்றும் வாங்கிப் படையாகத் தந்த மறியும் மயிலும் கோழிச்சேவலும் வில்லும் மரனும் வாளும் ஈட்டியும் கோடரியும் மழுவும் கனலியும் மாலையும் மணியும் ஆகிய இவற்றைப் பன்னிரண்டு திருக்கரங்களிலும் கொண்டு அத்தாமரையினின்றும் பெயராத அவ்விளமைப் பருவத்திலேயே தேவர் சேனைக்குத் தலைவனாயினை ; அதனால் அவர்களுக்கு அரசனாகிய இந்திரனது புகழ்வரம்பைக் கடந்தோய் ! உருள்கின்ற பூங்கொத்தை யுடைய கடப்பமலர்மாலையை யணிந்தோய் ! உயிர்களைச் செறுகின்ற தீயநெஞ்சத்திற் சினத்தை உடையோரும் அறத்தின்கண் சேராத புகழில்லோரும் கூடாவொழுக்கத்தால் அழிந்த தவவிரதத்தினரும் இப்பிறப்பின் நுகர்ச்சியே உண்மை; மறுபிறப்பு இல்லையென்னும் மடவோருமாகிய இவர்கள் நின் தாள் நிழலை அடையார். நினது குணத்தை ஏற்றுக்கொண்டாராகிய அறங்கொண்டோரும் வீடுபெறும் குணமுடையோராகிய மாதவரால் வணங்கப்பட்டோரும் நின் தாள் நிழலை அடைவர் ; ஆதலால், நின்னை யாம் இரந்து வேண்டுவன நுகர் பொருள்களும்

அவற்றைப் பெறுதற்குக் காரணமாகிய பொன்னும் அவ்விரண்டாலும் நுகரும் நுகர்ச்சியுமல்ல ; எமக்கு வீடு பயக்கும் நின் அருளும் அதனைப்பெற நின்னிடத்தே செய்யும் அன்பும் அவ்விரண்டாலும் வரும் அறமுமாகிய இம்மூன்றையுமே வேண்டுகின்றேம் ; அருள்புரிவாயாக.

## 6. வையை

மேகங்கள் கடல்நீரை முகந்து நிறைந்து தம்முடைய பாரம் நீங்கும்படி மழையைப் பொழிந்தன. அதனால் நிலம் மறைவதுபோல நீர்நிறைந்தது. மலையிலுள்ள மானினம் கலங்கவும் மயிலினம் அகவவும் மலையின் மாசு கழியவும் அருவி விரைந்து இழிந்தது. அவ்வருவி நீர் வரும்வழிகள் பல பொருந்தின சாரலிலே புலவர் பாடிய செய்யுள் பொய்யாகாமல் நாட்ட நீரானது எங்கும் பரந்து உழவு முதலிய தொழில்கள் பெருகும்படி தாவி ஓடியது.

வையையில் வெள்ளம் மிக்கது. அதனால், புனலாட எண்ணி மகளிர் தாம் புனலாடியபின் ஈரம் புலர்த்துதற்பொருட்டுப் புகைக்கும் அகில் முதலியவற்றையும் அவற்றைப் புகைக்க அழலையும் சூடுதற்குப் பூவையும் வையைக்குரிய ஆராதனைப் பொருளாகிய அவியையும் பொன்மீன் முதலியவற்றையும் ஏந்தினர் ; தம் காதலரையும் அந்நாளுக்குரிய அணியை அணியச் செய்தனர்.

கைகள் பூரித்தலால் தொடியை அழுந்தப் பண்ணவும், தோள் வளைகள் முன்கைக்கண் வந்து அலையவும், மகளிருடைய தோள் முதலியவற்றில் எழுதின தொய்யில்கள் ஒன்றோடொன்று கலந்து அழியவும், மேகலை வடங்கள் அற்று உதிர்ந்து நூல் தோன்றவும், ஆணி முத்து வடங்கள் கலங்கிப் பூசிய சந்தனமுதலியவற்றால் நிறம் மழுங்கவும், நகத்திலும் கபோலத்திலும் எழுதிய செம்பஞ்சி அழியவும், நகிலில் அணிந்த குங்குமக் குழம்பு வண்டலிடவும், படலைமாலையும் குலைந்த மயிரும் பூசினசாந்தத்தைச் சிதைக்கவும், மகளிரும் மைந்தருமாகிய இருவர் அணிகளும் தம்முள் மயங்கவும் அவர்களது உள்ளத்துள்ளே இருந்த நிறையை இவ்வையை உடைத்தது ; அதைப் போலவே வரையை ஒத்த அணைகளையும் உடைத்தது ; அதன் அலைகள் கரையை உடைத்தன. அதனை அடைக்கும் பொருட்டுப் பறையறைய வேண்டுமென்று கரைகாவலர் உரைத்தனர் ; உடனே அப்பறையொலி எழுந்தது ; அதனைக்கேட்டு ஊரிலுள்ளாரும் கிளர்ந்தெழுந்தனர்.

அங்ஙனம் கிளர்ந்த அன்று போருக்குரிய அணிவகுப்பிற் களிற்றினங்கள் சிறந்தாற்போல வையை நீராட்டத்தின் பொருட்டு அணிந்த அணியையுடைய பிடிகள் வரிசை வரிசையாகச் சென்றன. அழகாக அணிந்த அணிகளையுடைய மைந்தரும் மகளிரும் அவ்வணிகளை நீக்கிப் புனலாடற்கேற்ற அணிகளை அணிந்து யானையின்மேலும் மெல்லிய நடையையுடைய குதிரையின் மேலும் இவர்ந்து புறப்பட்டனர். நீர்விளையாட்டாகிய போரை விரும்பி வையையாற்றைப் போர்க்களமாகக் குறித்து ஒருவரின் ஒருவர் முற்பட்டுத் துறையை அடையும் வன்மையோடு திரள்திரளாகச் சென்றனர் ; அப்போருக்கு ஏற்ற படைக்கலங்களைக் கொண்டனர் ; உள்ளே புழுகுநெய்யை இட்ட துருத்தியையும் பனிநீரை ஊற்றிவைத்த கொம்பையும் வெள்ளை நெட்டியால் அமைத்த மிதவையையும் நிறம் ஊட்டிய நெட்டியாற் செய்த தேரையும் கொண்டு நெருங்கிச் சென்றனர்.

இந்த நெருக்கத்தினாற் புறச்சேரியில் உள்ள இளையர் போக முடியாத நிலைமையராயினார். மெலியோர் நீருட் புகமாட்டாமையால் துறைகளை விரும்பினர். வலியோர் புதுப்புனலினுள்ளே புக்கு ஆடினர் ; அதனால் வையையானது அவர்கள் பூசியனவாகிய பத்து வகையான துவரில் ஊறின நீரும் சந்தனக் குழம்பும் வாச வெண்ணெயும் சூடிய பூக்களும் மணக்கும்படி சென்றது. அங்ஙனம் செல்லும் அவ்வாற்றைக்கண்டு வேதத்தை விரும்பும் அந்தணர், அது தூய்மை யழிந்து வேறுபட்டதென மருண்டு அதில் நீராடுதலையும் ஆசமனம் செய்தலையும் நீங்கினர் ; சூடிக்கழித்த மலரும் மைந்தர் தாரும் மகளிர் கோதையும் கரையிலுள்ள மரம் கொடியாகியவற்றின் வேரும் தூரும் காய்களும் கிழங்கும் பரவ, கீழாகிய மக்கள் உண்டு உகுத்த கள்ளும் கலத்தலால் அந்நீர் நலனழிந்து வேறாயிற்றென்று பிறரும் நீங்கினர். சேறாகிய நீரினது ஓட்டம் இத்தகையதாயிற்று.

திருப்பரங்குன்றத்தின் கண்ணே அருவி தாலாட்டவும் காற்றுப் பாராட்டவும் தலைவர் மகளிரோடு இன்புற்றுத் துயில்கின்றனரென்ற செய்தியை மதுரையிலுள்ளார்க்குச் சென்று சொல்வதேபோலத் தமிழையுடைய வையைப்புனல் பரந்தது.

இங்ஙனம் பரந்த புனலிலே ஒரு தலைமகன் இற்பரத்தையுடன் நீராடினான். அதனையறிந்த காதற்பரத்தை ஊடினாள் ; அவளது ஊடலைத் தணிக்கும்பொருட்டு அத்தலைமகன் தளிரைக் கையுறை யாகக் கொண்டுவந்து காட்டி வையைநீர் விழவின் பெருமையை

மேற்கூறியவாறு புகன்றான். அவன் கூறியவற்றை உட்கொண்டு மேலும் புலந்த காதற்பரத்தை கூறலானாள்:

காதற்பரத்தை: - நான் பழையவள் ; நீ இந்தத் தளிர்கொய்தது என்பொருட்டன்று ; எப்பொழுதும் புதியராக இருப்பவரும் நீ விரும்புபவருமாகிய மகளிர்பொருட்டே கொய்தாய்.

தலைமகன்: - ஆகா! நீ அறிந்தாய்! அவைதாம் இவை; நீ சொல்வது மிக்க உண்மை!

காதற்பரத்தை:- நீ பணிந்து நிற்கின்றாயேயன்றி நின்பால் உண்மை அன்பு இல்லை. நின்பாலிருந்த பழைய பண்பு முறிந்து விட்டது. இப்பொழுது உன் திருட்டுத்தனம் வெளிப்பட்டது. பழைய காலத்தில் நீ எனக்காகத் தளிர்கொய்தாயல்லவா? அப்பொழு தெல்லாம் நீ உடனே என்பால் அதைக்கொடுக்க விரைவில் வருவாய்; அந்தத் தளிரில் துவட்சியிராது. இப்பொழுதோ இந்தத் தளிர் துவண்டிருக்கிறது. அவளுக்காக இதைக் கொய்து சென்று அவளுக்குக் கொடுத்தாய் ; அவள் மறுத்துவிட்டாள்; பிறகு இங்கே கொணர்ந்தாய்; அதனால்தான் துவண்டது; பார். உன் மார்பில் உள்ள தார் வாடும்படி நீ இதைக் கொய்தாயே; அப்படிச் செய்தும் அவள் உனக்கு உடம்படவில்லையோ? இத் தளிரை நீ கொண்டு சென்று செய்த வணக்கத்திற்குக்கூட அவள் மனம் இரங்கவில்லையா? சொல்.

தலைமகன் : - வையையில் வெள்ளம் வந்தமையால் நான் தெப்பம் ஏறி வரவேண்டியிருந்தது ; ஆதலின் இத் தளிர்கள் துவண்டன. திருப்பரங்குன்றத்தின்மேல் ஆணையாகச் சொல்கிறேன்; வையைப் பெருக்கு மிக அழகிதல்லவா?

இதைக்கேட்ட காதற்பரத்தை இற்பரத்தையது காமப்பெருக்கம் வையைப் பெருக்கை யொக்குமென்று குறிப்பதாக உட்கொண்டாள்.

காதற்பரத்தை: - ஆமாம்; நீ சொல்வது சரியே. காதலையுடைய காமம் எப்பொழுதும் ஒரு தன்மையிலேயே நிற்குமா? சிலர்பால் விரைவிற் சுருங்குகின்றது; சிலர்பால் விரைவிற் பெருகுகின்றது; அதனால் அது வையைப் பெருக்கை யொப்பதுதான்; நீ ஏன் அவசியமின்றி ஆணையிட்டுப் பிழை செய்கின்றாய்? இனிமேல் ஆணை யிடாதே; எனது இருப்பிடம் நினது இருப்பிடத்திற்கு அருகிலிருக் கவும் வையையானது கார்காலத்தில் வெள்ளம் மிக்குப் புணையேறும் பொருட்டு நின்னைத் தாமதிக்கச் செய்யும்; இளவேனிற்காலத்திலோ பறவைகள் இரைதேடும்படி நீர் சுருங்கிக்கிடக்கும்; நின் காமமும்

அத்தகையதே. கவர்ந்துகொள்வதில் வன்மையையுடைய மகளிர்க்கு நீ புனல்வழியே செல்லும் தெப்பக்கட்டையைப் போலப் புணையாகிய மார்பினையுடையையாயினை; அங்ஙனம் இருந்ததற்குச் சிறிதும் அஞ்சாமல் இரவெல்லாம் அவளோடு தங்கினை. உடைந்த மடையை அடைத்தபின்பும் வையையின்கண் ஒழுகும் ஊற்றைப்போல அம் மகளிருடைய துன்பங்கெட நீ சேர்ந்தபின்பும் அவர் கண்ணீர்வார்த்து ஊடி நிற்பார் ; இங்கே வரின் அவர்களுடைய நெஞ்சம் பின்னும் கனலும்; ஆதலின் இங்கே வருதலை ஒழிவாயாக.

தலைமகன்: - ஒருத்தி ஒரு தடாகத்தின் கரையில் நின்றாள், நான் அங்கே குளித்தேன். அவள் அந்தக்கரையில் நில்லாமல் தன் பேதைமையால் தடாகத்தில் இறங்கி அலைக்குள் அழுந்திப் பின்பு எழுந்து மயங்கி என்மேல் விழுந்தாள் ; குளித்த யான் எழுந்து அவளை எடுப்பதற்கு முன்பு என்னை எதிர்பாராமல் அவளே எழுந்தாள்; அதனால் அவள் காமநுகர்ச்சியறியும் பருவத்தினள் அல்லள். அவளையன்றி என்னை அணைந்தவள் வேறு யார்? அவளோடு நான் ஆடிய ஆறு யாது?

காதற்பரத்தை: - அதுவா? நான் சொல்லுகின்றேன்; நீயே தெளிவாக அறிந்துகொள். அத்தன்மையது வேறு ஆறு ஒன்று இருக்கிறதா? அந்த ஆறு இந்த வையையாறுதான்.

தலைமகன்: - யான் தடாகத்தில்தான் குளித்தேன் ; நீயோ இவ்வையையாறு என்கின்றாய்! என்ன மாறுபாடு இது? பரங்குன்றின் தலையைத் தொட்டு ஆணையிடுகின்றேன் : யான் அங்ஙனம் செய்தேனில்லை.

இங்ஙனம் தலைமகன் கூறியது கேட்டுக் காதற்பரத்தையின் இல்லிலுள்ள முதிய பெண்டிர்கள் அவளைநோக்கி, "என்ன காரியம் செய்கிறாய்? நீ சினந்ததற்கு அஞ்சுகின்றான் தலைமகன்; அவன் பாலுள்ள சினத்தை விட்டுவிட்டு அவனோடு அளவளாவுவாயாக. அங்ஙனமின்றிச் சினம் பெருகுவையாயின் அவன் காம இன்பம் கெடும். நின்சினத்துக்குக் காரணமாக நீ சொல்லுகிறவள் பேதைப் பருவத்தாள். ஆதலின் துனிநீங்குக. அவனைக் கோபித்து அவன் நெஞ்சில் மயக்கத்தை உண்டாக்கினால் அவன் உன்னை நீங்குவான். இரவின்கண் நீ அவனைத் தேடிக்கொண்டு புறப்பட வேண்டுவதுதான். இருட்பொழுதில் அங்ஙனம் நீ நீங்குதல் தகாது. சமயமறிந்து ஊடி இனிதின் அவ்வூடல் தீரும் ஒழுக்கத்திற்கு இப்படிச் செய்தல் பிழையாகும்'' என்று கூறி அவளைக் கடிந்தனர் ; மேலும்

ஊடலை நீக்குதற்குரிய வாயில்கள் இரந்தும் பரந்து நின்று வருந்தியும் உணர்த்தினர். அதனால் அக்காதற்பரத்தை ஊடல் நீங்கினாள். பின்னர் அவளும் தலைவனும் கூடி மதுவையுண்டு களித்தனர்; களிப்பால் வையைக்கண் குளித்தனர் ; குளித்துக் காமமிகுதியால் அளவளாவினர்; பின்பு இன்பமுண்டாக ஊடினர் ; அவ்வவ்விடந்தோறும் விளையாடினர்.

இவற்றையெல்லாம் அறிந்த தலைமகள் ஊடினாள்; அதனை யறிந்த தலைமகன் விறலியைத் தூதாகவிடுத்தான். அவ்விறலியைக் கண்ட தலைவி, காதற்பரத்தை புலந்ததும் அவள் புலவியை நீக்கித் தலைமகன் இன்புற்றதும் அறிந்தவளாதலின் அவற்றைக் கூறிவிட்டு, "வையையே! நின்பால் நீராடுவோர் நெஞ்சத்தில் இத்தகைய காமத்தை உண்டாக்கும் தன்மை நினக்கு எப்பொழுதும் குறையாமல் இருப்பதாக" என வாழ்த்தும் முகத்தால் தலைவனுக்கு வாயிலை மறுத்தாள்.

## 7. வையை

ஒரு தலைமகன் தலைமகளோடு புனலாடினானெனக் கேட்ட செவிலித்தாய் தோழியை நோக்கி, "நீங்கள் ஆடிய நீர்விழவு எங்ஙனம் இருந்தது? கூறுக" என்று கேட்க அவள் கூறலானாள்:

அலையையும் குளிர்ச்சியையுமுடைய கரிய கடலை வற்ற முகந்து இடிமுழங்கத் தன்பாலுள்ள பாரத்தைப் பொறுக்கமாட்டாமற் கரையுடைந்த குளத்திலுள்ள நீர் கழலுவதுபோல அப்பாரம் கழலும்படி மேகமானது மழையைப் பெய்தது; அதனால் மலைச் சிகரங்களில் அருவிநீர் பெருகிற்று.. அந்நீர் மற்றையிடங்களிலிருந்து வந்த புனலோடு கூடியது; அங்ஙனம் பெருகிய பெருக்கு வெற்றிமுரசையுடைய பாண்டியர்களுடைய போர்ப்படையானது பகைவரது நாட்டைக் கொள்ளக் கருதிக் கிளர்ந்ததுபோல வந்தது; அதனால் வையையாற்றிற் புனல்பெருகி உயிர்களுக்கு நன்மை மிக நன்செய்கள் அழகுபெறவும் புன்செய்கள் விளையவும் வந்தது.

அங்ஙனம் வருகையில் அவ்வெள்ளம் நரந்தப்புல்லிற்பரந்தும் வேங்கைமரத்திலிருந்து உதிர்ந்த பூக்களை மேற்கொண்டும் மலையுச்சி களிலுள்ளனவும் காற்றால் அலையும் கொம்புகளையுடையனவுமாகிய பெரிய மரங்களை வேரோடு அகழ்ந்தும் மேட்டிலுள்ளவற்றைப் பள்ளத்திற் பரப்பியும் சென்றது; முழாக்களும் பெரும்பறைகளும் முழங்க ஆடலியல்பை அறியாத பெண்ணைப் போலத் தான் வேண்டிய

இடங்களிலெல்லாம் படர்ந்தது ; ஊடலின் இயற்கையை அறியாத ஒருத்தி தன் கணவனைக் கடந்து நீங்குவதைப் போல அணைகளை உடைத்துப் புக்கது; நூலிற் கூறப்பட்ட முறையிற் கூட்டியதும் மெய்யிற் பூசிக்கொள்ளுதற்குரியதுமாகிய கலவையினது மணத்தைப் போலப் பல வாசனைப்பண்டங்களை உள்ளேயடக்கி மேலே புதிய தாகிய மணத்தை வீசியது அவ்வையைப் புனல்.

ஒருசார், வெள்ளத்தால் ஓடையிலுள்ள நீரானது மலர்களுக்கு மேலே பெருகியது; ஒருசார் இளம்பெண்கள் மணலில் எழுதிய பாவைகளை அவ்வெள்ளம் சிதைக்க அவர்கள் அதனால் அழுதனர்; ஒருசார்வயலுக்குள்ளேயிருந்த இளநெல்லின் கண்ணும் அரிந்துவைத்த நெற்கதிர்களிடத்தும் ஒருங்கே புனல் பரந்ததென்று துடியை முழக்கினர்; ஒரு பக்கத்தில் ஊரைக் கடல் சுற்றியதென்றனர்; ஒருசார் வானத்திலுள்ள மேகம் ஓட்டையாயிற்றென்றனர்; பாடுபவர்களிருந்த பாக்கத்தைக் கொண்டதெனவும், கூத்தர்களுள்ள சேரியை அடைந்த தெனவும், கழனிகளில் வெள்ளம் வந்து பொருந்தியதெனவும், வெள்ளம் பரந்து தென்னை கமுகு என்பவற்றின் கழுத்தளவு உயர்ந்தமையால் வாளைமீன்கள் அவற்றின் பாளையை உண்டனவெனவும், நாற்றங்கால் வண்டலிட்டு மேடாயிற்றெனவும் அங்கங்கே உள்ளார் கூறினர். அவ்வெள்ளம், ஊடலைத் தாம் உணர்த்தவும் உணராத மகளிரைச் சமாதானம் செய்யமுயலும் கணவரது ஆசை வெள்ளத்தைப் போல விரைந்தது. உழவர்கள் தம்முடைய சுற்றத்தினரோடு தம் தொழில்செய்ய வாளைகளைப் போலப் புனற்கண்ணே பரந்தனர்.

மேலும், அவ்வையைப் புனலானது மலைபோன்ற இரண்டு கரைகளுக்கு உட்பட்டு நுரை பல சுமந்து பூவால் மூடப்பட்டுச் சோலைகளிற் பரந்தது; தன்பால் ஆடியமகளிர் காதுகளில் தளிரைச் செருகியது; மைந்தர் கண்ணியைப் பறித்தது; மகளிர் கைவளையையும் தலைக்கோலத்தையும் உடுத்த துகிலையும் மேகலையையும் காஞ்சியையும் மைந்தருடைய ஆழிமோதிரத் தையும் வாகுவலயத்தையும் பறித்துக்கொண்டு சென்றது; இச் செயல் பகைவர்நிலத்திற் பாண்டியன் புக்கதைப் போன்றிருந்தது.

அவ்வையை யாற்றின்கண் மகளிர் ஆடப் புக்கனர்: ஒருவரை யொருவர் துரத்தி நீரை அள்ளி வீசினர் ; அந்நீரை அவர்களுடைய மலர்போன்ற கண்கள் ஏற்றுக்கொண்டன; அவருள் ஒருத்தி அதற்குத் தோற்றுத் தன் கண்களைக் கையால் மூடிக்கொண்டாள்; உடனே அவள்மேல் நீர் வீசிய பெண் தன் பொன்னாணால் அவளது தோளைக்

கட்டிச் சிறையாகப் பிடித்தாள் ; அங்ஙனம் சிறையானவட்குப் பரிந்து அவளுடைய கட்டை நீக்கும் பொருட்டு ஒருத்தி பாய்ந்தாள் ; பாய்ந்த அவளுடைய கண்ணொளியால் செந்நிறத்தையுடைய புதுப்புனலானது தன் நிறமிழந்து இருள் நிறமாயிற்று.

அப்பொழுது தலைவியானவள் புனலாட்டுத் தீர்ந்து தன் உடம்பிலுள்ள குளிர் நீங்கி வெப்பம் உண்டாவதற்காகக் குடிக்கக் கருதி வெப்பமுள்ள மதுவை ஏந்தினாள் ; ஏந்தியபொழுது அவளுடைய கண்கள் நெய்தற்பூவைப்போலக் கறுத்திருந்தன ; அம்மதுவை உண்ட பின்னர் அவை கண்டார்க்கு மகிழ்ச்சியைச் செய்யும் பெரிய நறவமலரைப்போலச் சிவந்தன. தலைவன் அக்கண்களின் இயல்பைக் கண்டு ஏத்தி அவற்றின் அழகைப் பாராட்டிப் பாணரைப் போலப் பலவகையாகப் பாடினான். தலைவியை யெண்ணி அதனை அவன் பாடினானென்பதை யறியாத வேறொருத்தி அத்தலைவனோடு அளவளாவக் கருதி வருத்தமுற்றாள். அதனையறிந்த தலைவன், "இஃது என்ன விபரீதமாயிருக்கிறது? நமக்கு என்ன வரப்போகிறதோ?" என்று அஞ்சித் தலைவியையடைந்து நடுக்கமுற்றான். அப்பொழுது தலைவி அவள்மேற் பகை மிக்குத் தன் மாலையைப் பிய்த்து எறிந்தாள் ; மதுவுண்டதனாற் சிவந்திருந்த கண்கள் இவ்வூடலாற் பின்னும் சிவந்தன; அப்பொழுது அவளைப் புகழ்ந்த தலைவன் கீழே விழுந்து வணங்கினான்; அவள் அவன் தலைமேல் உதைத்துப் பின்னும் வெகுளி யடங்காமல் ஊடினாள்.

யாழும் மிடற்றுப் பாடலும் இசைந்து நின்றன ; சுருதியோடு குழல்கள் ஒலித்தன; முழவுகள் ஆர்த்தன; அரங்கேறிய தலைக்கோல் மகளிரும் பாணரும் ஆடலைத் தொடங்கினர்; அவற்றால் உண்டாகிய முழக்கத்தோடு கரையை மோதி ஓடும் நீரின் ஒலியானது இடியோடு சேர்ந்த மழைமுழக்கத்தை ஒத்து விளங்கிய திருமருதமுன்றுறையின்கண் நீர்விழவை அநுபவிப்பவர்களுடைய மாலைகளைப் பெற்றுப் புனைகின்ற வையையே! இன்று நின்பால் மூழ்கி இத்தகைய பயனைப் பெற்றாற்போல யாம் என்றும் பயன் பெற்று நின்னைப் பாராட்டித் துன்பம் நீங்கி இன்புறுவேமாக.

## 8. செவ்வேள்

முருக ! துழாய்மாலையையும் கருடக்கொடியையுமுடைய திருமாலும், சிவபிரானும், பிரமதேவரும், துவாதசாதித்தியரும், மருத்துவர் இருவரும், வசுக்கள்எண்மரும், ஏகாதசருத்திரர்களும், எட்டுத்

திக்குப்பாலகர்களும் மற்றத் தேவர்களும், அசுரர்களும், தெய்வ முனிவர்களும் நின்னைத் தரிசிக்கும் பொருட்டு இம்மண்ணுலகத்தில் வந்து உறைவதற்குரிய இடமாயிற்று நின் திருப்பரங்குன்றம் ; அதனால் அஃது இமயமலையை ஒக்கும். அக்குன்றின் அருவி வீழும் சுனையானது அவ்விமாசலத்தின்கண் நீ எழுந்தருளியிருந்த தாமரை மலர்ந்த பொய்கையை ஒக்கும். அங்குள்ள மேக முழக்கமானது நின்னுடைய யானையினது முழக்கத்தைப் போன்றது; அம்முழக்கத்தைக் கேட்ட கோழி வெருவிக் குன்றில் எதிரொலி உண்டாகும்படி கூவியது ; மதமிக்க யானைகள் மாறுமாறாகப் பிளிறின ; இவற்றால் முழைக்கண் எதிரொலி எழுந்தது.

அப்பரங்குன்றத்திற்கும் மதுரைக்கும் இடையிலுள்ள வழியில், ஏழுதுளையையுடைய புல்லாங்குழலிலும் ஐந்து துளையையுடைய புல்லாங்குழலிலும் யாழிலும் பிறந்த இசைச் சுருதியைப் போலத் தும்பியும் வண்டும் மிஞிறும் முறையே ஒலித்தன ; சுனையிற் பூக்கள் மலரவும், கொன்றைமரத்தில் மாலைபோன்ற பூங்கொத்துக்கள் மலரவும், கொடிப்பூக்கள் நறுமணத்தோடு மலரவும், மலர்ந்த காந்தட்பூக்கள் இடமெல்லாம் மணக்கவும், நன்றாக மலர்ந்த வேறு பல மலர்கள் மணக்கவும் இத்தகைய மணங்களோடு தென்றல் மெல்ல உலாவும் சிறப்பையுடையது அவ்வழி.

கிரவுஞ்சகிரியைத் துளைத்த வேலையுடையோய் ! மதுரையின் கண்ணே மணமுரசின் முழக்கம் எழுந்தது ; காற்றால் ஏறுண்ட கடலைப்போலவும் கடலைக்குடிக்கும் மேகமுழக்கத்தைப் போலவும் இந்திரனது இடிமுழக்கத்தைப் போலவும் அம்முரசு அதிர அதிர நின்பரங்குன்றத்தில் எழுந்த முழக்கம் அதற்கு மாறுமாறாக அதிரும்.

தலைவியரால் தூதாக ஏவப்பட்ட வண்டுத் தொகுதியின் ரீங்காரமானது அத்தலைவியருடைய காதலை மதுரை நகரின்கண் புலப்படுத்தியது. தலைவியர்பால் தலைவர்கள் போந்தனர். அவருள் பரத்தையர்பாற் சென்று மீண்ட ஒரு தலைமகன் தன் தலைவியை நோக்கி, "திருப்பரங்குன்றமானது சோலையிலுள்ள பூப்படுக்கையின் கண் தலைவரோடு தலைவியர் அளவளாவும் களவுப்புணர்ச்சி யையும் தன் அடிவரையிலுள்ள மகளிர் தமக்குரிய காதலர்களுடைய மார்பினின்றும் அகலாமல் பூவின்கண் வாழும் மகன்றிலைப்போல இடைவிடாதமைந்த நல்ல புணர்ச்சியையும் தரும் சிறப்பையுடையது" என்றான்.

அதுகேட்டுப் பொறாத தலைமகள் புலந்து உரைக்கலானாள்:-

தலைவி :- இப்பொழுது உன்னுடைய உடம்பில் அயல்மகளிர் மேலுள்ள மணம் மணக்கின்றது. அவரோடு அளவளாவுதற்கே காலையில்பிரிந்து சென்று மாலைதோறும் வருகின்றாய் ; ஆதலின் இனி நீ என்பாற் செய்த பழைய சூளைத் தவிர்வாயாக.

தலைமகன் :- இனிய மணலையுடைய வையைக் கரையிலுள்ள பொழிலின்மேல் ஆணை; திருப்பரங்குன்றச்சாரன்மேல் ஆணை ; பார்ப்பார்மேல் ஆணை; நீ கோபியாதே. மலர்போன்ற கண்ணையுடையாய் ! நீ சொல்லும் அச்சொல் எனக்குப் பொருந்துவதன்று. இந்த வாசனையானது திருப்பரங்குன்றத்திலுள்ள கனியிலும் மலரிலும் பயின்ற காற்று அடித்ததனால் வந்ததேயன்றி வேறன்று ; ஆகையால் மிகவும் சினங்கொள்ளாதே.

தலைவி :- நீ நின் சூளைவிடு.

தோழி :- ஏடா ! நான் ஒன்று சொல்கின்றேன் ; அது வரையிலும் நில் நில் ; அப்புறம் ஆணையிடு ; சான்றாண்மையுடையார் பெற்ற தகுதியில்லாத மகனே ! நினக்கு இச்சூளால் துன்பம் உண்டானால் இவள் இறந்துபடுவாள் ; இவள் ஒரு தாய்க்கு ஒருபெண்.

தலைவன் :- அப்படியா? இவள் தன்னை ஈன்றவளுக்கு ஒரே மகளா? அத்துணை அருமையுடையவளா? நீ சொல்லுவதற்குமுன் நான் இதை அறிந்திலேன் ; இந்தா, இதைப்பார் : வையையாற்றின் மணலைத் தொடுகின்றேன் ; மணத்தைத்தரும் முருகவேளுக்குரிய திருப்பரங்குன்றத்தின் அடியைத் தொட்டேன்.

தோழி :- கேளிரையொத்த மணலோடு உனக்குள்ள நட்பு இத்தன்மையதோ ; அது கிடக்க ; பரங்குன்றத்தின்மேல் ஆணையிட்டாய்; அதன்பால் உள்ள அன்பு இரங்கத்தக்கது ; ஆதலால் எனக்கு அருள்செய்தல் வேண்டி முருகவேள்மேல் ஆணையிடின், அவனைச் சார்ந்த அருளில்லாத தெய்வமும் முருகனுடைய வேலும் உன்னை வருத்தும் ; அதுவேயன்றிப் பார்ப்பாருடைய அடிதொட்டுச் சூளுற்றாலும் உறலாம், அம்முருகவேளது மயிலையும் அவனுடைய வேல் நிழலையும் நோக்கி ஆணையிடாதே ; குறவன் மகளாகிய வள்ளிமேல் ஆணையிடுகின்றாய் ; ஏடா ! அதனையும் செய்யாதே. ஐயனே ! நீ ஆணையிடுவதாயின் வணங்கப்படும் திருப்பரங் குன்றையும் வையை மணலையும் கூறி ஆணையிடாதே.

இங்ஙனம் தோழி தலைமகன் செய்யும் ஆணையை விலக்கினாள். மேல் தலைமகன் கூறலானான்:

தலைமகன் :- நேரிழையே ! யார் பிரிவது? யார் வருவது? யார் வினவுவது? யார் விடைகூறுவது? இருதலைப் புள்ளின் ஓருயிரேமாகிய எமக்குள் பிரிவும் வரவும் வினாவும் விடையும் எங்ஙனம் உண்டாகும்? நீ அதனைக் கருதாமல், 'நீர் இடும் ஆணையானது நியாயமில்லாத கொடிய ஆணை' என்கின்றாய். நெய்தற் பூவையும் நறவம்பூவினது இதழையும் ஒத்த கண்களையும் ஒளிபொருந்திய நுதலையும் முல்லையை வென்று முத்தை ஒக்கும் வெண்மையாகிய பற்களையும் உடைய இவள் என்மேல் ஏற்றிக் கூறிய குற்றம் நகைத்தற்குரிய கனவுமன்று ; நனவுமன்று ; பொய்யே. என்பால் குற்றம் இல்லாமலிருக்கவும் இவள் மேற்கொண்ட கோபத்தின் வழியாக என் ஒழுக்கத்தை உணரப்புக்கு நான் இடுவது பொய்யாணையென்று தவறாகக் கருதி இறைவன் துயரம் மிக என்னை ஒறுப்பான் ; ஆதலின் அதுசெய்யாமல் தோழீ ! நீ சென்று அவனடியைச் சேர்ந்து வணங்கி ஆற்றுவாயாக ! ஏவலிளையர்காள்! இவ்வுரையை எல்லோர்க்கும் அறிவியும் ; முருகன் திருவடியை யாவரும் தொழும் திருப்பரங்குன்றத்தே சென்று நாம் மலர் தூவுவோம் ; நிவேதனம் செய்வோம் ; தாளத்தோடு இசைப்பாட்டைப் பாடுவோம் ; கிணையை முழக்குவோம்.

தோழி :- ஏடா ! ஆற்றுவதற்கு என்னைச் செல்கவென்றாய். அதனாலே நின் பொய்ச்சூளாலாகிய துன்பம் நின்னை மேற்கொள்ளுதலை அறிந்தேம். கூற்றுவனது ஆணையையும் இகழும் ஆற்றலையுடைய முருகன் திருவுள்ளம் வேறுபடுதற்கு முன்பே இத்தலைவியானவள் சென்று மணியை அடித்து முருகவேளை வணங்கி நின்பொய்ச்சூளால் வரும் துன்பத்தை ஆற்றுவாள் ; அங்ஙனம் அவள் செய்தலை நீ அயலாரோடு இன்புறுவதற்குப் பலகாலும் அங்கே செல்லுதலால் பார்ப்பாயாக.

தோழி கூறியவாறே தலைமகள் தன் கணவனுக்கு ஏதம் வாரா வண்ணம் முருகவேளைத் தொழுது ஆற்றுவாளாயினள்.

இங்ஙனமே, மதுரையிலிருந்து பரங்குன்றத்திற்குச் செல்லும் அழகிய வழியில் பூசைசெய்ய எழுந்து சந்தனமும், தூபத்துக்குரிய பொருள்களும், காற்றால் அவியாத விளக்கமும், மணங்கமழ்கின்ற மலர்களும், முழவமும், மணியும், பாசமும், மயிலும், கோடரியும், பிணிமுகமும் ஆகியவற்றையும் பின்னும் முருகவேளுக்கு உவந்த வேறுபல பொருள்களையும் ஏந்திப் பரங்குன்றத்தையடைந்து தொழுபவர்களும், யாம் எம்காதலரோடு அளவளாவியதாகக் கண்ட கனவு பொய்யாகாமல் அவர் நனவில் எய்தி நீராடும் பொருட்டு நினக்குரிய

வையைநதி புது வெள்ளத்தைப் பெறுகவென்று வரங்கொள்வோரும், எமக்குக் கருப்பம் உண்டாக வேண்டுமென்று பலபொருள்களைக் காணிக்கையாகச் செலுத்துவோரும், எம்கணவருக்குப் பொருள் வாய்ப்பதாக வென்று பிரார்த்தனை செய்வோரும், எம் கணவர் தாம் மேற்கொண்ட போரில் வெற்றிபெறுகவென்று அருச்சிப் போருமாய்த் தலைமகளிர் நின்றனர். பாடுபவர்களது பாட்டிற்குரிய தாளமும் ஆடுபவர்களது கூத்திற்குரிய தாளமும் மலையின்கண் உண்டாகும் எதிரொலியும் கலத்தலால் பெருமுழக்கம் உண்டாயிற்று. தாமரையைப் போன்ற கண்ணையும் முகத்தையும் அடியையும் கையையும் ஆம்பலைப் போன்ற வாயையும் கூர்மையான பற்களையும் உடையவரும் சுனையின்கண் பாய்ந்து எழுபவருமாகிய மகளிருடைய பூணோடு அவர்களுடைய கணவர் பூண்களும் மயங்கின. மகளிரால் உண்டாக்கப்பட்ட காமபானத்தையும் மடைத் தொழில் புரிவோரால் சமைக்கப்பட்ட உணவையும் அம்மகளிருக்குக் கொடுக்க அவற்றை உண்டு அவர்கள் தம் கணவரால் வந்த சோர்வினின்றும் நீங்குவார்.

பரங்குன்றமே ! இங்ஙனம் பிரியாத மகளிரும் மைந்தரும், இவரையல்லாத வரம்வேண்டுவாரும் கூடி நீலகண்டப் பெருமானுக்கும் உமாதேவியாருக்கும் திருக்குமரனாகிய கடம்பமர் செல்வன் திருக்கோயிலை வழிபட்டு நிற்ப, மண்ணகம் வருந்தும்படி மழை அற்றுப் போயினும் அருவியானது நீர்மிக்கிருக்கும் செல்வம் நினக்கு நிலைபெற்றிருப்பதாக.

## 9. செவ்வேள்

பெரிய நிலம் அசையாமல் வடதிசைக்கண் ஓங்கி இந்திரனாற் காக்கப்படும் இமயமலையின் சிகரத்தில் தெய்வமுனிவர் அறுவரும் உடம்பட மதிப்புடைய கார்த்திகை மகளிர் அறுவர்களிடத்தே ஆகாய கங்கையைப் பூப்போலச் சடைப்பாரத்தின்கண் தாங்கிய கங்காதரராகிய நீலகண்டப் பெருமானுடைய குமாரனாகப் பிறந்தோய்!

மையணிந்த கண்ணையுடைய மான்மகளாகிய வள்ளி நாய்ச்சியாரைக் களவின்கண் மணந்த அன்று ஆயிரங்கண்ணை யுடைய இந்திரன் மகளாகிய தேவசேனையது கண் நீரைப் பொழிந்ததுபோலப் பரங்குன்றத்தில் முதுவேனிற்பருவத்தில் கார்ப்பருவத்தைப்போல மழை பெய்தது.

நான்மறைப்பொருளை விரித்து அம்மறையினது நல்லிசையை விளக்கும் புலவீர்! சிறந்ததொரு பொருளைக் கேட்பீர்களாக : காமத்திற்

சிறந்தது காதலையுடைய களவுக்காமம் ; அதுதான் மெய்யுற்றறியார் இருவர் அன்பொத்து ஊழ்வகையினால் தாமே மெய்யுற்றுப் புணரும் புணர்ச்சி. இனி அன்பு ஒவ்வாத கற்பென்னும் ஒழுக்கமானது புலத்தலாற் சிறந்தது ; அப்புலவி, தலைவன் வாயில் வேண்டலும் தலைவி வாயில் நேர்தலுமாகிய இவற்றையுள்ளிட்டுத் தலைவனுடைய பரத்தைமையான் உண்டாவது. மேலும் தலைவன் இன்பம் நுகரும் பரத்தையில்லிற்குத் தலைவியானவள் தன் தோழி யொருத்தியைக் காலையிலே செவ்வணியணிந்து விட்டுத் தன் பூப்பை அறிவிக்க, அதனால் தலைவன் தலைவிபால் வந்து உவக்கும் புணர்ச்சியையுடையது அக்கற்பொழுக்கம். அப்புணர்ச்சிகள், தலைவிக்குப் பாங்காயினார் கேட்டு வருத்தமுறும்படி பரத்தையராலே பழிகூறப்படுவனவாம். அன்றியும் அப்புணர்ச்சியின்பந்தான் இயல்பாகவின்றி ஊடலால் உண்டாவது.. அதனால், கற்பில் தலைவர் நீங்குதலைப் போலின்றி என்றும் பிரிவின்றியமையும் களவுப் புணர்ச்சியையுடைய மகளிர் தம்தலைவரோடு மாறுபட்டு ஊடுகின்ற குற்றத்தையுடையவரல்லர். இத்தகைய சிறப்புப் பொருந்திய களவுப் புணர்ச்சியைப் பாராட்டும் பொருளிலக்கணத்தையுடைய தமிழை ஆராயாத தலைவரே களவொழுக்கத்தைக் கொள்ளமாட்டார்.

சந்தன மரங்களையுடைய கரையை உடைத்து வையைப் புனல் கொண்டுவந்த வயிரம் பொருந்திய சந்தனத்தின் புகை சூழ்ந்த தார் விளங்கும் மார்பின்கண் முத்தாரம் அழகுபெற முருகவேள் தேவ சேனையோடு அளவளாவச் சென்றார் ; தேவசேனை அவரைத் தொழுது, "வஞ்சனே! வாழ்வாயாக. நின்னை அறியாமல் நின்பால் மயங்கி அகப்பட்ட மகளிருடைய இயல்பு, இனி மழைபெய்தலை எதிர்நோக்கி வருந்தும் சோலையினது இயல்பை யொக்கும்; ஆதலால் அவரே தவறுடையாரல்லது நீ தவறுடையையல்லை; நின்னையடையும் பேறுடையார்களது தோள்மேல் தங்கி அருள் செய்தலும் நின்பால் இல்லை. ஆகையால் நின்னோடு இன்புறக் கடவேனோ?" என்று கூறிச் சின நோக்கத்தோடு வள்ளி நாய்ச்சியார் காரணமாக உண்டான புலவியால் அவள் நீங்கினாள். அவளை அணுகி முருகவேள் தம் தலையில் அணிந்த மாலை அவள் அடியிற் படும்படி வணங்கி நிற்ப அவள் கோபம் நீங்கி, "இனி வருந்தாதே" என்று சொல்லி அணைந்தாள். அதுகண்ட வள்ளி, "இனி, தேவசேனையை அணுகாதே" என்று சொல்லி அவர் திருக்கரத்தைக் கட்டித் தன் மாலையைக் கோலாகக் கொண்டு அடித்தாள். அதனைக் கண்டு,

தேவசேனை வள்ளியென்னும் இருவருள் ஒருவருடைய மயில் மற்றொருவர் மயிலை எதிர்த்தது ; ஒருவர் கிளி மற்றொருவருடைய கிளியோடு மழலைப் பேச்சுப் பேசி எதிர்த்தது; வள்ளியின் குன்றத்து வண்டு தேவசேனையது கொண்டைமேற் செறிந்த வண்டின்மீது சென்று பாய்ந்தது.

இவற்றைக் கண்ட தேவசேனையினுடைய பாங்கியர் வள்ளியின் பாங்கியரோடு பகைத்து மாலையும் மாலையும் சிக்குறச் செய்வார் ; தம் மார்பிலுள்ள கச்சினைக் கொண்டு அடிப்பார் ; கோதையையும் பந்தையும் கொண்டு எறிவார். ஊதினால் அசைகின்ற இடையையுடைய மெல்லியராக இருந்தும் தம் கண்கள் சினத்தாற் சிவக்க அவர்கள் இங்ஙனம் போரை மேற்கொண்டனர்.

அதனைக்கண்டு வள்ளியின் பாங்கியராகிய மயிலியலையுடைய மகளிர் மதம்பட்ட களிற்றின் தன்மையை மேற்கொண்டனர் ; குதிரைகள் நடப்பதுபோல வந்தனர் ; தேர்ப்படைபோல வடிக்கயிற்றைக் கைக்கொண்டு வந்தனர் ; அம்பை எய்யும்பொருட்டு வில்லை வளைத்தனர் ; வாளையுடையவராய் நின்றனர் ; தோள்வளையாகிய சக்கரத்தைச் சுழற்றினர்.

இங்ஙனம் அவர் நிற்றலையறிந்த இந்திரன் மகளுடைய பாங்கியர் அஞ்சி முருகனைக் கூடிச் சூழ்ந்துகொண்டு சுனைநீருண் மறைந்து நீராடினர் ; அச்சுனையின்கண் வண்டாய் நின்று முரன்றனர்; மயிலாக நின்று ஆடினர் ; குயிலாக நின்று கூவினர் ; பலவகையாகத் துன்புற்றனர். இங்ஙனம் அவர்கள் செய்யும்படி குறிஞ்சி நிலத்து மக்களாகிய குறவர் பெற்ற மகளிர் போரை விளைத்தனர் ; அதனாலே பரங்குன்றம் முருகவேளுக்கு இயைந்தது.

கொடிய சூரபன்மனாகிய மாமரத்தைத் தடிந்த வேலையுடைய போர்வீர ! நினக்குரிய பரங்குன்றத்தின்கண் ஆடல் பயின்றவரை அவ்வாடல் பயின்றார் வெல்லவும் பாடல் பயின்றோரைப் பாடல் பயின்றார் வெல்லவும் சூதாடுதல் வல்லாரைச் சூதுவல்லார் வெல்லவும் பிறகல்வியுடையார் இங்ஙனமே வெற்றி பெறவும் இத்தகைய வெற்றிகளால் ஒப்பில்லாத புகழ்பரவத் தடாகம் போன்ற சுனைப் பக்கத்தில் கொடி நின்றது.

நீ நினக்குப் பொருந்திய வேலினையுடையை ; வெற்றிபெற்று உயரப்பறக்கவிட்ட கொடியினால் விறல்பொருந்தினை ; கற்புப்பொருந்திய நெறியையுடைய தேவியரது அன்பு பொருந்திய ஊடலுரிமையை விரும்புகின்ற பண்பையுடைய குமர ! அன்புடைய யாம்

நின்திருவடிக்கண் உறையும் செயல் நாடோறும் வளர்ச்சியுற்றுப் பயன் தந்து சிறக்கவென்று நின்னைத் தலைவணங்கி வாழ்த்தி வேண்டுகின்றேம் ; அருள்புரிவாயாக!

## 10. வையை

ஒரு தலைவன் போர்செய்யும் பொருட்டுத் தன் தலைவியைப் பிரிந்து சென்றான் ; செல்லுகையில் இன்ன பருவத்தில் வருவேனென்று கூறிச்சென்றனன். அவன் அங்ஙனம் கூறிய பருவம் வந்தது ; அப்போது தலைவன் வாராமையால் வருந்திய தலைவியிடம் தோழி, "அவர் வந்துவிடுவார்" என்று கூறி வற்புறுத்தினாள் ; தலைவி அது கேட்டும் வருந்துவாளாயினாள் ; அவளுடைய ஆற்றாமையைக் கண்ட தோழி ஒரு பாணனைத் தலைவன்பால் தூதுவிட்டாள். அப்பாணன் தலைவன் இருந்த பாசறைக்கண் சென்று அவனைக்கண்டு கார்ப்பருவவரவையும் வையையில் நிகழும் நீர்விழாவின் சிறப்பு முதலியவற்றையும் கூறலானான்:

மலையில் மாலையிற் பெய்த பெருமழையால் காலையில் வையை யானது வெள்ளத்துடன் கடலோடு கலக்கும்பொருட்டு, பல மலர் களாகிய போர்வையையும் பருமணலையும் மேலே மூடிக் கொண்டு, உலகிற் பசி முதலிய துன்பங்கள் நீங்கவும் வண்டுகள் ஒலிக்கவும் கரைகாவலரை அழைக்கின்ற பறைகள் அறையவும் போந்தது.

அங்ஙனம் போந்த புனலில் ஆடும்பொருட்டு யாவரும் புறப்பட லானார்கள். மகளிர் மேகலையை இறுகப்புனைந்தனர். வண்ணநீரை வீசும் கருவிகளையும் பனிநீர் கலந்த சந்தனத்தையும் எடுத்துக் கொண்டு குதிரைமீதும் பிடிமீதும் எருதுபூண்ட வண்டியின் மீதும் கோவேறு கழுதையின்மீதும் குதிரைவண்டியின்மீதும் சிவிகையின் மீதும் ஏறினர். மலராத முகையைப் போன்ற பருவத்தினரும் புது மலர் மலர்ந்தது போன்ற பருவத்தினருமாகிய இளைய மாதரும், கரு மயிருக்கிடையே நரைவிராவிய கூந்தலுடையவரும் முழுநரையாகிய கூந்தலுடையவருமாகிய முதியமாதரும், கற்புடை மகளிரும், பரத்தையரும், இவர்களுடைய தோழியர்களும், ஏவன்மகளிர்களும் மெல்ல நடந்து சென்று ஆற்றின் கரையைச் சேர்ந்தனர் ; அவர்களுடைய மெல்லிய நடை தாளவிதியாற் கூட்டப்பட்ட பல வாத்தியங்களின் மென்னடையைப் போல இருந்தது.

இங்ஙனம் சேர்ந்த மகளிருள் மலர்ந்த மலர்போன்ற பருவத்தை யுடைய மகளிரிற்சிலர் நீரின் அழகைக் கண்டனர் ; சிலர் நீரணி

மாடத்தில் ஏறிச் சென்றனர் ; சிலர் குதிரையிலேறிச் சென்றனர் ; சிலர் பிடிமீதேறிச் செலுத்தினர் ; சிலர் மலர்நிறைந்த ஆற்றிடைக் குறையிற் சென்று தம்மால் விரும்பப்படும் கணவரைத் தழுவினர் ; சிலர் யாமத்து உண்டான ஊடலின் குறையாகிய தேனை நுகர்ந்தனர் ; சிலர் காமமாகிய மழு உடைப்பதனால் ஊடலை அகற்றிவிட்டுத் திரையை வீழ்த்துப் படுக்கையிற்சேர்ந்தனர். இவரையன்றி முகைப் பருவத்துமகளிர் பூவைநாடி வந்து அடையும் வண்டைப்போலத் தம்முடைய காதற்கணவர் தம்மை வந்து எதிர்ப்பட்டு இன்புறும்படி நீராடலைக் குறித்துச்சென்றனர்; அவர்கள் தமக்குக் காவலாகிய பாட்டியர்களையும் தப்பி அவர் தடுத்தலையும் கடந்துபோய், தாம் நினைத்த பட்டினத்தைச் சேர்ந்து ஏற்றிவிட்ட பண்டங்களைக் கொடுத்து ஆண்டுள்ளன கொண்டு இடையூறின்றி வந்து கரையைச்சேரும் நாவாயை எதிர்கொள்பவரைப் போல விருப்பமுற்றுச் சென்று வையைப்புனலை எதிர்கொண்டனர்.

இத்தகைய மதுரையில், ஒரு களிறானது தனக்குப் பக்கத்தில் வரும் பிடியைக்கண்டு காமத்தால் மயக்கமுற்றுத் தன்மேலிருந்த மைந்தர் செலுத்தச் செல்லாமல் ஒரு புலிமுகமாடத்துக்கு அருகிலே நின்றது. அப்பொழுது அந்தப்பிடி அக்களிற்றினிடம் சென்ற மனத்தோடு மயக்கமடைந்து மேலுள்ள மகளிரோடு நடத்தலிற் சோர்ந்து சென்றது. அது களிறு நின்ற புலிமுகமாடத்திற் பண்ணி வைத்திருந்த புலியுருவத்தைக் கண்டு மெய்யான வேங்கையென்றும் களிற்றின் மேற் பாயுமென்றுங் கருதி அஞ்சித் தன்மேலிருந்த மகளிர் நடுங்கும்படி, பாகர் என்ன செய்யினும் அடங்காமல் சிதைந்தது ; அதனைக் கண்ட களிறு பிளிறி அங்குசத்துக்கும் அடங்காமல் சிதைந்தது. அதுகண்ட அம்மைந்தர் அக்களிற்றைப் புலி முகமாடத்தினின்றும் போக்கிப் பிடியின்பால் அணைவித்தனர் ; அதனால் பிடியும் களிறும் அமைதியுற்றன ; மகளிர் நடுக்கந் தீர்ந்தனர். இங்ஙனம் அம்மைந்தர் மகளிரது நடுக்கத்தைத் தீர்த்த செயல், பாயும் கயிறும் பாய்மரமும் நீங்கச் சிதையும் நிலையிலுள்ள மரக்கலக்கத்தைத் திருத்தி அதன் உள்ளே யுள்ளாரது நடுக்கத்தைக் களையும் மீகாமன் செயலை ஒத்தது.

ஊடலையுடைய மகளிரும் மைந்தரும் யாழிசை, மிடற்றுப்பாடல், கூத்து என்பவை தம் திண்மையை யழித்துக் காமத்தை உண்டாக் கியதனால் ஒருவரோடொருவர் அளவளாவும் ஆர்வம் உடையவராக இருந்தும் அவ்விருசாராருள் ஒவ்வொருவரும் தாம்தாம் ஊடல் நீங்கி முற்படுதற்கு நாணினர் ; அதனாற் கூடாது மெலிவுற்றனர். இவர்

செயல், மாறுபாடுடைய மன்னவர் இருவருடைய சேனைகள் தம்முட் போர்செய்து நொந்து பின்பு இருசாராரும் சமாதானம் செய்து கொள்ளும் நோக்கம் உடையவர்களாக இருந்தும், 'இப்படை முன்னாகச் சமாதானம் செய்ய உடம்பட்டது' என்னும் வார்த்தை பிறக்கு மென்று நாணி அதற்கு அஞ்சிப் பின்னும் நொந்து நிற்றலை ஒத்தது.

காமம் மிக்கு எழ அதனால் உண்டாகிய கண்ணின் களிப்புப் புலப்படா நிற்கவும், ஊரிலுள்ளவருக்கு அஞ்சி அதனைச் சிலர் ஒளித்தனர்; அவரது நிலைமை, கள்ளை உண்டு அதனால் உண்டான மயக்கம் எழ, அம்மயக்கத்தால் உண்டான மதர்ப்பே அவர்கள் நிலையை வெளிப்படத் தெரிவித்துநிற்கவும் ஊராருடைய பழிமொழியையஞ்சி மறைப்பார் நிலைமையைப் போன்றது.

இந்த வையைப் புனலானது கள்ளையும் காமத்தையும் பொருந்தியதனாற் கரையற்ற இன்பவெள்ளத்தைத் தந்தது.

நீர் விளையாட்டினால் இளைத்த மகளிரெல்லாம் புணையைவிட்டுக் கரையேறினர். அகிற்புகையால் உடம்பின் ஈரத்தைப் புலர்த்தி மார்பிலே கலவைக்குழம்பைப் பூசினர்; அதன் மணம் திசையெங்கும் கமழ்ந்தது. சில மகளிர் உறையினின்றும் கழற்றிய வள்ளத்தில் வெப்பமுள்ள மதுவை வார்த்துக் கையிலேந்தித் தேவமகளிர் மதியை வாயில்வைத்து அதன் கிரணங்களை உண்ணுதல்போலத் தம் வள்ளத்தை வாயில்வைத்து மதுவை உண்டனர் ; சிலர் மேலே வெண்டுகிலைப் போர்த்தனர் ; சிலர் தம் கூந்தலில் வெள்ளையாடையைச் சுற்றி ஈரம் புலர முறுக்கினர் ; சிலர் குங்குமச் சேறு, அகிற்சாந்து, பச்சைக் கருப்பூரம் ஆகிய இவற்றைச் சாந்தம்மியிலிட்டு நெருப்பைப் போன்ற நிறத்தையடையும்படி குழவியினால் அரைத்தனர்; சிலர் பொன்னாற் செய்த சங்கு, நண்டு, இறவு, வாளை என்பவற்றை நீரின் கண் இட்டு, 'விளைக பொலிக' என்று வாழ்த்தினர்; சிலர் வறியோரது நிலையையறிந்து அவர்கள் ஈகவென்று கேட்பதற்கு முன்னரே அவர்கள் விரும்பும் பொருளைத் தானம்செய்தனர்; சிலர் நீல மணிபோன்ற கூந்தலில் பத்துவகைத் துவர்களையும் தேய்த்துக் கொண்டு நீராடினர்; சிலர் எண்ணெய் நீங்கும்படி அரைப்பினைத் தேய்த்துக்கொண்டனர் ; சிலர் மாலையையும் சந்தனத்தையும் கஸ்தூரியையும் ஆபரணங்களையும் நீரில் இட்டனர் ; சிலர் அப்புனலில் மதுவை ஊற்றினர்.

இங்ஙனம் அமைந்த மகளிருடைய நிறம் நீர்விளையாட்டினால் ஒளிபெற்றது ; முகமுதலியன சிவந்தன. இப்படி அவர்கள் நீரில்

விளையாடியும் பின்னும் அவர் கண்கள் அப்புனலின்மேற் சென்றன; அவை காமபாணத்தினது கூரிய வாயைப் போன்று இருந்தன.

மகளிர் இவ்வாறு இருப்ப, புனல்விளையாட்டால் மெலியாத மைந்தர்களிற் சிலர் வாழைத்தண்டைக் கையால் தழுவி நீரின்மேல் தாவித் தாவி நீந்திச்சென்றனர்; சிலர் தாழம்பூவின் தாதை அலையிலும் நுரைமேலும் தூவினர்; சிலர் ஓடத்திலேறி அதை நீரோட்டத்தோடு விட்டனர் ; சிலர் புனலுக்கு எதிராகச் சென்று விளையாடிய இளைப்பினால் மெல்ல விளையாடினர் ; மகளிர் தாம் இழைத்த சிற்றிலில் அட்ட சிறுசோற்றையிட அதைச் சிலர் உண்ணச் சென்றனர் ; சிலர் தமக்கு முன் இட்டுப் பின் மறுப்பாராகிய மகளிருடைய பந்தையும் கழங்கையும் களவுகொண்டு ஓடி நீரிலே பாய்ந்தனர். வீரர் வேலாலும் வாளாலும் போர்செய்யக் களிறுகள் எதிர்த்துப் போரிடும் களத்தைப் போன்றமையால் அவ்வையைப் புனல் தெளிவிலதாயிற்று.

இவ்வண்ணம் நீர்விளையாட்டு நிகழ்ந்தபின் மாலைப்பொழுது வரவே சந்திரன் தோன்றினான். அங்குள்ள சனங்கள் மீண்டு மதுரை யிற் புகத்தொடங்கினர். தங்கள்மேலிருந்த பகற்காலத்துக்குரிய அணி களை நீக்கினர். மாலைக்காலத்தில் மலரும் மலர்களையும், தோளணி, தோடு, முத்துவடம் முதலான ஆபரணங்களையும் அணிந்தனர். பலர் பாடினர். அவர்களுடைய பாடலும் பரவலும் புகழ்தலும் ஆடு வாருடைய ஆடலொலியும் அதற்குரிய தாளவொலியும் தேனீக் களுடைய ஒலியும் மிக்கன. அங்ஙனம் எழுந்த பண்ணொலியைக் கேட்டுத் தம் இனமென்று கருதி ஊரிலிருந்த வண்டுகள் எதிர்வந்து ஊதின; பாடுவார்களது பூவேய்ந்த கொண்டைமேல் தேனை யுண்டிருக்கும் வண்டுகள் உடன்வந்து ஊதின. யாவரும் தென்றிசையை நோக்கி மீண்டனர். அப்பொழுது மாடத்தினுள்ளிருந்து மேலெழுந்த அகிற்புகையானது மலையின்மேல் தங்கி எழுந்த பனியை ஒத்தது.

வெள்ளத்தைக் கண்டு இவ்வாறு விருந்தயரும் மதுரையில் இசைக்குரிமையுடைய பாணரும் கூத்தரும் ஒருங்கு புகழ்ந்து தொழ வறுமையையுடைய புலவர்களுடைய கைந்நிறையப் பொன்னைச் சொரியும் பாண்டியனைப்போல வையைநதியானது வயலின்கண் பொன்னைப் பரப்பும் செயல் நீங்காமல் என்றும் இருப்பதாக!

## 11. வையை

கோள்கள் மழைபெய்தற்குரிய நிலையில் அமையக் கார்காலத்தில் சையமலைக்கண் மழைபெய்தது. வையையில் வெள்ளம் மிக்கது. மலையிலுள்ள புன்னையும் கரைகளிலுள்ள சுரபுன்னையும் சண்பகமும்

தேற்றாமரமும் வில்வமும் வேங்கைமரமும் காந்தளும் தோன்றியும் நீலமலரும் ஆகிய இவற்றை அருவியானது கொண்டுவந்து சொரிய அவற்றை அலைகள் தள்ளிக்கொண்டுவந்து திருமருதந்துறைக் கண்ணே தந்தன ; அதனால் அத்துறையைப் பூப்பறிக்கும் மக்கள் பல நிறங்கொண்ட மலர்களைக் கொணர்ந்து குவிக்கும் மலர்மண்டப மென்பேனோ? வையையாகிய அரிவையது ஆடையென்பேனோ? கள்ளைப் பருகும் நிலமகளது மிடறென்பேனோ? இவற்றுள் யாதென்று அதனைச் சொல்லுவேன்!

"பிறை பூர்வபட்சத்தில்வளர அதன் நிலவு எங்கும்பரந்ததைப் போல வையைநதி எங்கும் நீரைப்பரப்பி உலகிற்குப் பயன்பட்டது; ஆனால் அபரபக்கத்துச் சந்திரனைப்போல வையையானது வற்றிய காலத்திலும் அஷ்டமி சந்திரனைப்போல ஒருபகுதி குறைவதை யன்றி அமாவாசையைப்போல முற்றுங் குறைபடுதலைக் காண்பாரில்லை. நெடுந்தூரத்தைக் கடந்து வந்த வையையே ! நீ வெள்ளத்தைப்பெற்ற நாளின் புதுவருவாயை இந்த உலகம் பெறுவ தோடு வற்றின நாளின் புதுவருவாயையும் பெறும்படி இந்நீர் மிகுதி தணிந்து ஏகுவாயாக!

"வையையே ! மந்தணமாக இன்புற்ற மைந்தரும் மகளிரும் காமச்சிறப்புடைய அக்களவொழுக்கத்தைக் கைவிட்டுத் தாழ்வுடைய கற்பொழுக்கத்தை மேற்கொண்டாற்போல நீ நின் பிறந்தகமாகிய மலையைக் கைவிட்டுக் கடலாகிய தலைவனது இல்லத்துக்குத் தனியே செல்லுதல் இழிவாகும் ; ஆதலின் அங்கே செல்லற்க" என்று கண்டார் சொல்ல வையைநதி வந்தது. தலைவியைக் கைக்கொண்டு படையொடும் சென்ற தலைவனை அத்தலைவியின் சுற்றத்தார் சுரத்திடையில் சென்று மறித்துப் பொருதாற்போல மதுரையிலுள்ள மக்கள் இடையே தடைசெய்து புகுந்து நீராடுவதற்குரியதாயிற்று அவ்வையைநதி.

அவர்களுட் சிலர் நெட்டியினாலாகிய வாளைச் சுழற்றுவார் ; அதனாலாகிய ஈட்டியை ஏந்துவார் ; கொள்வதற்குரியார் கோல் கொள்ளச் சிலர் தேரில் ஏறுவார்; சிலர் குதிரையையும் யானையையும் நீர் வெள்ளத்துக்குள் விட்டு ஊர்ந்து உழக்குவார்; மூங்கிற்கழியால் நீரைத் தெறிப்போரை அரக்குநீரையுடைய வட்டினால் வீசுவார் சிலர் ; மாலையைச் சுழற்றி யெறிவார்மேல் கொம்பிலுள்ள நீரை வீசுவார் சிலர். இங்ஙனம் தம்தம் அன்பரோடு அளவளாவித் திளைக்கும் இத்தோற்றத்தால் வையையானது போர்க்களத்தை ஒத்தது.

இளவேனிற்காலத்தில், அவ்வையையகம் தேவருலகத்தில் திரியும் விமானங்களைக் காட்டும் தெளிந்த நீரோட்டத்தையுடையது; அக்காலத்தில் நீராடற்கமைந்த அணிகளை அணிந்த ஆடவர், மகளிரோடு இன்புறும் பொருட்டுப் பாகோடுகூடிய இளமதுவை நுகர்ந்து களிப்புமிக்குச் செவிநிறையப் பாட்டைக்கேட்டு இன்புறுவர்; அழகாகிய மதுவை ஒருவரினொருவர் கண்ணாலுண்பார்.

வையையே ! இங்ஙனம் கார்காலத்துக் கலங்கி வேனிற் காலத்துத் தெளிதலால் உன் நிலைமை எப்பொழுதும் ஒருபடியாயிருக்கின்றதில்லை.

கார்வானம் அதிர்குரல் நீங்கப் பனி மிகுதலாற் குளிரால் நடுங்குதலையுடைய முன்பனிப் பருவத்தில் மார்கழிமாதத்தில் திருவாதிரை நட்சத்திரத்தில் ஆகமங்களை யுணர்ந்த பூசகர் அத்திருவா திரைக்குத் தெய்வமாகிய சிவபெருமானுக்குரிய விழாவைச் செய்யத் தொடங்கினர் ; அந்தணர் பொற்கலத்தை யேந்தினர் ; உலகம் மழையாற் குளிர்வதாக வென்று அம்பாவாடலைச் செய்யும் கன்னியர், முதிய அந்தணமகளிர் நோன்பு செய்யும் முறைமையைக் காட்டப் பனியையுடைய விடியற்காலத்தே நீராடினர் ; அங்ஙனம் ஆடிய பின்னர்க் குளிர்வாடை வீசுவதால் அம்மகளிர் கரையில் அந்தணர் வேத மந்திரங்களால் வளர்த்த அக்கினியினருகிற் சென்று தம் ஈர ஆடை களை உலர்த்தினர். அவ்வந்தணர் அந்த அக்கினியினிடம் கொடுக்கும் அவியானது வையையே ! நினக்கு வாய்த்ததாக இருந்தது.

மையோலை பிடித்த இளைய பிள்ளைகளின் விளையாட்டிற்கு மாறாக எழுந்து காமக்குறிப்பில்லாத விளையாட்டைச் செய்கின்ற ஆயத்தினையுடைய அக்கன்னிமகளிர் தம்புலன்களை யடக்கித் தவத்தைப் பலகால் செய்தோ, தம்தாய்மார்க் கருகில் நின்று தைந் நீராடலாகிய தவத்தை நின்பாற் செய்யப் பெற்றனர்? சொல்வாயாக.

அங்ஙனம் தைந்நீராடும்பொழுது ஒருத்தி தன்காதில் நீலமலரை அணிந்துகொண்டு வேறொருத்தியைப் பார்த்தாள் ; அவள், அசோகமரத்தின் தளிரைத் தன்காதின்கண்ணே செருகிக் கொண்டாள். முன்னவள் அணிந்த நீலமலர் அவ்வசோகந் தளிரின் ஒளியால் இளவெயிலைப்போலாயிற்று. அப்பொழுது பின்னவள் முன்னவளைச் சுட்டி, 'இவள் தன்காதுகளில் நீலமலரைச் செருகி நான்கு விழிபடைத்தாள்' என்று சொல்லிக் கொற்றவையின் திருக்கோலத்துக்கு ஒப்பாகும்படி நெற்றியிலுள்ள கனல்விழியைப் போலத் தோற்றும் வண்ணம் திலகமொன்றையிட்டாள்.

பவளவளையைக் கையில் செறித்த ஒருத்தியைக் கண்டு வேறொருத்தி குவளைத்தண்டைப் பச்சை வளையாகத் தன் கையில் அணிந்துகொண்டாள். செங்கழுநீர்ப் பூவினாற் கண்ணி தொடுத்த ஒருத்தியை நில்லென்று சொல்லுபவளைப்போல வேறொருத்தி மல்லிகையோடு நெய்தற் பூவை விரவித்தொடுத்தாள்.

முன்பு ஒருவன் வையையுள் வாழைத்தண்டைத் தழுவி நீந்தும் போது ஒருத்தியைக் கண்டான் ; கண்டபொழுதில் அவனது நெஞ்சத்தை அவள் கவர்ந்தாள். அதனால் கைசோர்ந்தது. அவனுடைய கண் அவளிடத்திலே நின்றது. அவன் விரும்பின அவளிருந்த இடத்தே கொண்டு செல்லாதே நீர்தன்னுடைய போக்கில் அவனை இழுத்துச்சென்றது. அதனையறிந்த அவள் ஆயத்துடன் நில்லாமல் அவனைத் தொடர, தாய் அவ்வன்புடைமையை அறியாமல், "தனியே செல்லாதே ; ஆயத்தோடு சேர்ந்திரு" என்று விலக்கினாள்; அதனால், அம்மகள் அரற்றினாள். இங்ஙனம் அரற்றும்படி கார்காலத்து வெள்ளமானது கரையைப் பொருதுவந்தது. இப்பொழுது அங்ஙனம் இராமல், "தைந்நீரே! யாம் ஆடும் அளவோடு தெளிந்து வருகின்றாய். நீ தக்காய்" என்பார் சிலர் ; "எம்காதலரைத் தழுவும் வீறுபெறுக வென்று வேண்டுகின்றோம்" என்பார் சிலர் ; "பூவில் விழும் வண்டு பின்னர் அப்பூவை நீங்கித் தனியேவிட்டுப் போவது போலப் போகாமல் எம்மால் விரும்பப்படுங் கணவர் எம்மைப் பாதுகாப்பாராக" என்பார் சிலர் ; "எம்கணவரும் யாமும் கிழவர் கிழவியரெனப்படாமல் இத்தவம் நிலைபெற்ற இளமையைத் தரச் செல்வத்தோடும் சுற்றத்தோடும் நிலைபெறுக" என்பார் சிலர்.

"இவ்வழகுடையாள் தன்னைக் கண்டாரைத் தீண்டிவருத்துந் தெய்வம் போன்றவள் ; இவ்ளைப்பாருங்கள். அங்குள்ளவள் காமனுக்குரிய கருவூலமும் படையுமாவாள் ; அவளைப்பாருங்கள். மகளிர் விலக்கவும் நீங்காமல் அவர்களுடைய 'மாலைகளிலுள்ள பூவையூதும் வண்டினம் யாழைப்போலப்பாடும் இசையைக் கேண்மின்; இனிய சுரும்பினது பாலை இசையைக்கேண்மின் ; விளரிப்பாலையிற்றோன்றும் யாமப்பண்ணைத் தாளத்தோடு பாடும் தும்பியினத்தைக் காண்மின் ; தான்விரும்பிய பூவைநெரித்த ஒருத்தியைக் கோபத்தோடு அடித்து மீண்டும் அடிக்கவரும் ஒரு தும்பியின் கோபத்தைப்பார்மின்" என்று சில ஆடவர் அங்கே நிகழ்வனவற்றைக் காட்டினர்.

பரிபாடலாற் புகழப்பெற்ற வையையே ! கன்னித்தன்மை முதிராத கைக்கிளைக் காமத்தைத்தருகின்ற நின்னிடத்து இத்தைந்

நீராடலை முற்பிறப்பிற் செய்த தவத்தாலே இப்பிறப்பிற் பெற்றேம்; அதனை நின் நீர்நிறைவின்கண்ணே மறுபிறப்பினும் பெறுவேமாக!

இங்ஙனம் வரைவு மலிந்த தோழி வையையை நோக்கித் தலைமகன் கேட்பக் கூறினாள்.

## 12. வையை

ஒரு தலைவன் தான் கூறிய காலத்தில் வாராமையைக் கருதிய தோழி ஒருத்தி அவன் பின்னர் வந்தபொழுது அவன் கேட்கும் படி பின்வருமாறு கூறலானாள்:-

சையமலையில் மழைபொழிய அதனால் வையையானது அம் மலைச்சாரலில் உதிர்ந்தமலர் தன்மேற் பரக்கக் கரையிலுள்ள நாகம், அகில், சுரபுன்னை, ஞெமை, சந்தனம் இவைவருந்தத் தகரத்தையும் ஞாழலையும் தேவதாரத்தையும் ஏந்திக்கொண்டு வருகிற வரவு ஒரு கடல் கிளர்ந்து வருகின்றதை ஒத்தது. அவ்வாறு அங்ஙனம் வந்து மதுரைமதிலைப் பொருமெனக் கேட்டு அந்நகரமாந்தருட் சில மகளிர் ஒளிபொருந்திய ஆபரணங்களை அணிந்துகொண்டனர் ; சிலர் பொற்றகட்டாற் செய்த பூவை அணிந்தனர் ; சிலர் சந்தனச்சாந்தை மாற்றி அகிற்சாந்தைப் பூசினர் ; சிலர் தம் கூந்தலைக்குழலாக முடித்தனர்; சிலர் அக்கூந்தலின்கண்ணே வெட்டிவேரோடு தொடுத்த பல மலர்மாலையை அணிந்தனர் ; சிலர் நீராடற்குரிய புடைவைகளை உடுத்தனர் ; சிலர் முத்துவடங்களைப் பூண்டனர் ; சிலர் வாசனைத் தைலங்களைப் பூசிக் கண்ணாடியை விளக்கித் தம்முடைய அழகை நோக்கினர் ; சிலர் பஞ்சவாசங்கலந்த தாம்பூலத்தை மென்றனர் ; சிலர் கையிலும் தோளிலும் வளைகளையும் தொடிகளையும் அணிந்தனர். சிலர் கட்டுவடத்தினையும் கான்மோதிரத்தையும் அணிந்தனர் ; சிலர் தேனொழுகும் மாலையைப்பூண்டனர் ; சிலர் யோசனைதூரங் கமழும் வாசனைப் பொருள்களை உடம்பிற் பூசினர் ; இங்ஙனம் புனைந்து கொண்டு சிலர் மென்னடையையுடைய குதிரையின்மேல் ஏறினர்; சிலர் பிடிகளின்மேல் அன்னப் பெடைகளைப் போல இவர்ந்தனர்.

ஆடவர்களுட் சிலர் கடியநடையையுடைய குதிரைகளைச் செலுத்தினர் ; சிலர் களிறுகளின்மேற் சென்றனர் ; சிலர் தேர்களை ஊர்ந்து சென்றனர்.

இங்ஙனம் யாவரும் விரைந்து விரைந்து மிகுதியாகக் கூடினர்; நீர்விளையாட்டானது இடந்தோறும் சிறப்புற நிகழவும் மதுரைமா நகரத்தினர் யாவரும் புகழவும் வையைநீர் வந்தது ; அதனைக்

காண்பவருடைய தொகுதி அதன் கரையை ஒத்தது; அந்த நீர்வெள்ளம் கரைக்கு மேலே ஏறிற்று ; அது தன்னைக் காண்பவருடைய காதல் வெள்ளைத்தை யெல்லாம் பருகியதுபோலப் பெருகியது.

முன்வந்து அவ்வாற்றில் நிகழ்வனவற்றைக் கண்டவர் பின் காண வருவார்க்குத் தாம் கேட்டவற்றைப் பின்வருமாறு கூறலானார்கள்:-

நீர்த்துறையில் வரிசையாக நின்றவர்களுடைய மொழிகள் ஒன்றையொன்று ஒவ்வாமற் பலபலவாய் ஒரேகாலத்தில் எழுந்தன. அவற்றையெல்லாம் தெளிவாகக் கேட்டவர் யார்? அவை கேட்க இயலாதன ; புல்லாங்குழலின் இசை எழ, முழவு, மத்தரி, தடாரி, தண்ணுமை, மகுளி ஆகிய இவற்றின் தாளத்தை ஆடன் மகளிர் தம் கையால் அளந்து நிற்ப உண்டாகும் ஓசையே அங்ஙனம் கேளாமைக்குக் காரணம் ; ஆயினும் யாம் கேட்டன சிலசில. 'தோழி! ஒருத்தி நாணம் நிரம்பப்பெற்ற குலமகளாயிருக்கவும் தன் கணவன் பரத்தையர்பாற் பிரிந்து சென்றானென்று அவனோடு சினந்து இப்பொழுது இந்நீர் வெள்ளத்தில் அவனோடு பிடியின்மீது ஏறினாள்; அவள் நாணம் உடையவளல்லளோ?' என்றார் சிலர் ; 'பலர் கூடி யிருக்கிற இடத்திலே நின்று அப்பூங்கொம்பு போன்றவளுடைய நகில்களை ஒருவன் நோக்கினான்; அவன் இளநெஞ்சன்; திண்மை யற்றவன்' என்றார் சிலர். 'வழியே செல்பவன்பின் இவள் தன் நெஞ்சைப் போக்கினாள் ; பெண்டிர் தம் அன்புமிகுந்தால் நிறையழியும்; அதனால் அன்புமிகுதியை நீக்குவேமல்லமோ?' என்றார் சிலர். 'அவன் இப்பெண் பூண்ட முத்துமாலையின் அழகைப் பார்த்து இதற்குப் பொருத்தமாயிருக்கின்றன இவள் நகில்கள் என்று அவற்றைப் பார்த்தான் ; இவள் அதற்கு நாணமடையவில்லை' என்றார் சிலர்.

இங்ஙனம் தாம் கேட்டவற்றைக் கூறி உவந்தவற்றைக் காட்டலாயினார்.

தன்கணவனை ஒருத்தி பார்க்க அதனைப் பொறாத அவன் மனைவி, 'நீ பிழையை யுடையை' என்று சொல்லித் தன் கோதை யைக் கோலாகக் கொண்டு அவனைப் புடைத்துத் தன் மார்பிலுள்ள வடத்தைவாங்கி முன்கையை இறுக இறுகக் கட்டினாள். அவன் தன் பிழையொன்றுங் காணானாகி அவளைத்தொழுது, 'என்பிழை யாது?' என்று கேட்கின்றான் ; அவனைக் காண்மின். ஊடல் கொண்ட ஒருத்தியை அவளுடைய தலைவன் சூளுரைத்தும் வெகுண்டும் அவ்வூடலைத் தீர்க்கவும் அவள் பின்னும் மிக்குப் புலந்து அரக்கு நீரால் நிறைந்த வட்டை அவன் மார்பில் எறிந்தாள் ; அந்நீர்

அவன் மார்பில் இரத்தம் ஒழுகுவதுபோலச் சோர அவன் நெஞ்சு சோர்ந்து கீழேவிழுந்து வணங்கினான்; அதுகண்ட அவள் தான் அவன் மார்பில் வட்டெறிந்தமையால் வீழ்ந்துவிட்டானென அஞ்சி முன்புள்ள கோடமெல்லாம் நீங்க அவனைத் தழுவினாள் ; இவ்வாறு ஒன்று படும்படி வையைப்புனல் இன்றேயன்றி என்றும் வல்லதாயிருக்கிறது; இதனைக்காண்மின். மல்லிகை, முல்லை, சண்பகம், அல்லி, செங்கழுநீர், தாமரை, ஆம்பல், துளவு, வகுளம், குருக்கத்தி, பாதிரி, நாகம், நறவம், சுரபுன்னையாகிய எல்லாமலர்களும் மணக்கின்ற இரண்டு கரை களிடையே சென்று மாலையில் தெளிந்து அணைகளால் தேங்கிநின்று தேவலோகத்தின் நிழலைத் தன்நீரிற்காட்டும் வையையாறு காலையில் கலங்கின செங்குருதியைப் போன்று இருந்தது. சுடுபொன்னா லமைத்த குழையைப் போலத் தூங்கும்படி தன்காதில் அசோகமலரைச் செருகிக்கொண்டு பூங்கொடியைப்போல அசைந்து முன்கையாலே தன்கூந்தலிற் கண்ணியை ஒருத்தி அழகாகத் திருத்தினாள் ; இவள் செய்த இக்குறிப்புத் தொழிலால் அருகிலிருக்கும் இவன் இந்நல்லவளுடைய கணவனாகவிருந்தான். இதனைக் காண்மின்.

இங்ஙனம் உவந்தவை காட்ட, மகளிரும் மைந்தரும் நீர்விளை யாடினர். துகிலின்கண் சேர்ந்த பூத்தொழிலைப் போலப் புனலின்கண் ஆடினவர்களுடைய ஆபரணங்களிலிருந்து உதிர்ந்த மணிகள் நிறைந்தன. அவர் புனலாடிய வார்த்தை ஊரில் மலிந்தது. அவருடைய அழகு அவ்வார்த்தையிலும் மிக்கது. அவ்வழகு மிக்கு மற்றவற்றோடு மாறுபாட்டினைக் கொண்டது. அவர் மார்பினின்று அழிந்து வீழ்ந்த தகரச்சாந்தால் மணல்சேறாயிற்று. அவருடைய ஈரத்துகிலிலிருந்து பொசிந்த நீரால் கரை கார்காலத்துக்குரிய தன்மையைப் பெற்றது. இத்தகைய நீர்விழவால் வானுலகம் சிறப்பொழிந்தது.

வையையே! நின்னால் இப்பழைய நகரில் வாழ்வார்க்கு இன்பமும் அழகும் மிகப்பல உளவாயின ; அதனால் இவ்வுலகம் அகன்றதாயினும் நின்புகழை அடக்கிக்கொள்ள மாட்டாதாயிற்று ; அவ்வளவு விரிந்த புகழை உடையாய் நீ.

இவ்வகைப்பட்ட இன்பத்தையுடைய நின்னையும் நினைத்திலர் தலைவர்.

## 13. திருமால்

அழகிய பீதாம்பரத்தையும் முடியையும் மாலையையும் கருடக் கொடியையும் சந்திரனைப் போன்ற அளித்தற் றொழிலையுங் கொண்ட திருமாலே !

பெரிய கரிய மேகம் இருபாலும் சூரிய சந்திரர்களை அணிந்து கொண்டதைப் போலச் சக்கரத்தையும் சங்கையும் ஏந்திய திருக்கரங் களுடன் நின் திருமார்பையுந் தொழுவோர்க்கு நினது வைகுண்டம் உரியதாகின்றது. சுவை முதலாகிய புலன்களும் நீ ; அவற்றை நுகரும் பொறிகளும் நீ.

அடுபோரண்ணால் ! முன்பு கூறப்பட்ட புலன்கள் ஐந்தனுள் ஒன்றாகிய ஓசையாலறியப்படும் ஆகாயமும் நீயே ; ஓசையாலும் பரிசத்தாலும் அறியப்படும் காற்றும் நீயே ; ஓசையாலும் பரிசத்தாலும் ஒளியாலும் உணரப்படும் தீயும் நீயே ; ஓசை, ஊறு, ஒளி, சுவை, என்பவற்றாலுணரப்படும் நீரும் நீயே ; ஓசை, ஊறு, ஒளி, சுவை, மணம் என்பவற்றால் உணரப்படும் நிலமும் நீயே. ஆதலால், மூலப் பகுதியும் அறமும் அநாதியான காலமும் ஆகாயமும் காற்றும் கனலும் கூடிய இம்மூவேழுலகத்து உயிர்களெல்லாம் நின்னிடத்து உளவாயின. பாற்கடல் நடுவே ஆயிரந் தலையினையுடைய ஆதிசேடன் மேல் அறிதுயில் செய்வோனும், படைவலியுடனே ஒழுக்கத்தைக் கடந்துவரும் பகைவருயிரை அகற்றி அவர் மார்பை உழும் கலப்பைப் படையையுடையோனும், பூமியானது நடுக்கமற எடுத்தற்குரிய கொம்பையுடைய வராகமுகமாகிய மூன்று திருவுருவங்களாகப் பிரிந்த ஒருவன் நீ. நீ பாம்புக்குப் பகையாகிய கருடனைக் கொடியாகக் கொண்டாய். வேதத்தாற் சொல்லப்படுகின்ற நல்ல புகழையுடையை. மேகம், காயாம்பூ, கடல், இருள், நீலமணி யென்னும் ஐந்தையும் ஒக்கும் திருமேனியை உடையை. அருளாற் பிறக்கும் நின்மொழி வலம்புரி முழக்கையும் வேதமுழக்கையுமொக்கும் ; கோபத்தாற் பிறக்கும் நின்மொழி மேக முழக்கையும் இடிமுழக்கையும் ஒக்கும். தோன்றியதும் தோன்றுகின்றதும் தோன்றுவதுமாகிய காலக்கூறு பாடுகளைக் கடந்து அக்காலங்கள் தாமே பொருந்திய தாள்நிழலை யுடையை. நின்னைத் துதிக்கும் அன்பர்கள் இருவினையுமிலர். நீ காத்தலாகிய ஒரு தொழிலினிடத்தே விருப்பம் பூண்ட திருவுள்ளத்தையுடையை. நின் திருவடியும் கையும் கண்களும் திருவாயும் தாமரைமலரை ஒக்கும். நின் தோள்வளையும் திருவுந்தியும் வாகுவலயமும் திருத்தாளும் தோளும் பிடரியும் பெரியன. திருமார்பும் பின்புறமும் திருவுள்ளமும் பருமையுடையன. நின் கேள்வியும் அறிவும் அறமும் நுண்ணியன. யாகத்தின்பால் விருப்பமும் வெவ்விய மறமும் உடையை. நீங்காத வன்மையினையும் சினவாமலே சிவந்த கண்ணினையும் போர்செய்யும் சக்கரப்படையையுமுடைய செல்வ! நெருப்பையொத்த

வெட்சி மலரை இடையிட்டுக் கட்டின துழாய் மாலையைப் பூண்ட திருமார்பையுடையோய் !

நீ அத்தன்மையையுடையாயெனத் தியானித்து முற்பிறப்புக் களில் யாம் செய்த தவப்பயனால் நின்திருவடியைக் கையாற் றொழுது பலமுறை இறைஞ்சி வாழ்த்தும் பேறுபெற்றேம் ; யாம் மேலும் மேலும் ஆசைப்படுவது இங்ஙனம் செய்தலையே ; அருள்புரிவாயாக.

## 14. செவ்வேள்

முருகவேளே ! மிக்க மழையை மேகம் பெய்தலால் நிறைந்த சுனைகளில் பூக்கள் மலர்ந்தன. குளிர்ந்த கடம்பமலர்த் தாதை ஊது கின்ற வண்டுகளின் குரல்கள் பண்களைப்போல இருந்தன. மலைப் பக்கங்களிலுள்ள மூங்கில்கள் அடியுறை மகளிர்களின் தோளை யொத்தன. வாகைப்பூவைப்போன்ற கொண்டையுள்ள மயில்கள் கூவுங்குரல்கள் தலைவியரோடு அளவளாவிப் பிரிந்து சென்றோர்களை நோக்கி, 'இனித்தாமதம் செய்யன்மின் ; மீண்டு வருக' என அழைப்பவர் களுடைய சொற்களைப் போன்றன. கொன்றைமலர்க் கொத்துக்கள் பொன்னாலாகிய மாலைகளைப் போன்றன. அழுகையையுடைய பேதைமகளிர்க்குத் தாய்மார்கள் புலிபுலியென்று சொல்லும்படி பாறைகளில் வேங்கைமலர்கள் பரந்தன. நெருங்கிய மொட்டுக் களையுடைய காந்தள்கள் மலர்ந்தன ; அவற்றினிடையே செங்காந்தளின் பூக்கள் பரந்தன. இங்ஙனம் நின்பரங்குன்றம் கார்காலத்தன்மை மிக்கது.

சூரபன்மாவைக் குலத்தோடு அழித்த வேற்படையை யுடை யோய் ! கார்காலத்தில் வெண்மேகம் எழுந்தாற்போன்ற அகில் முதலிய வற்றாற் புகைத்த தூபத்தை விரும்பினோய் ! ஆறு திருமுகத்தையும் பன்னிருதோளையும் கொண்டு வள்ளியென்னும் மலர்போன்ற மகளை விரும்பியோய் ! பிரிந்த தலைவர் வந்து சேர்ந்து பின்பு நீங்காமலிருக்கும் பொருட்டு மகளிர் யாழை வாசித்துப் பாடுகின்ற பாட்டை விரும்பியோய் ! திருவவதாரம் செய்தவுடனே இந்திரன் முதலியோர் அஞ்சிய சிறப்புடையோய் ! இரண்டு பிறப்பையும் அப்பிறப்பால் வந்த இரண்டு பெயரையும் அன்புபொருந்திய நெஞ்சத்தையுமுடைய அந்தணர்களது அறத்தை விரும்பியோய் ! அத்தன்மைகளையுடையா யாதலின் நாங்கள் விரும்பி நின்பாற் பொருந்திப் பொருந்தி வழிபாடு செய்கின்றோம் ; அங்ஙனம் செய்வதன் பயனாகப் பின்னும் பின்னும் நின்புகழைக் காட்டிலும் பலவாக அவ்வழிபாடுகள் ஆகும்படி அருள்புரிவாயாக.

# 15. திருமால்

அறிவெல்லையால் அறியப்படாத புகழுடனே விளங்கி நிலத்தைத் தாங்கும் சக்கரவாளம் முதலாகத் தொல்லிசைப் புலவர்கள் ஆராய்ந்துரைத்த குன்றங்களைப் பொதுவகையால் உரைக்கப் புகுந்தால் பலவாம் ; அப்பலவற்றுள்ளும் நிலத்திலுள்ளோரது பசித் துன்பத்தை நீக்கி நிறைபயன்களெல்லாவற்றையும் எப்பொழுதும் அவர் பெறப் பயன்படும் குன்றுகள் சில ; அச்சிலவற்றுள்ளும் தெய்வங்கள் தாமாக விரும்பும் மலர்களையுடைய தடாகங்களும் மேகம் படியும் சிகரங்களும் உடைய குலவரைகள் சில சிறந்தன ; அவற்றுள்ளே கடலும் கானலும்போல வேறுவேறாகிய நிறத்தினையும் சொல்லும் பொருளும்போல வேறுபடாத தொழிலினையுமுடைய மாயோனும் பலதேவரும் எழுந்தருளியிருக்கும் சோலைமலை சிறந்தது. துழாய் மாலையையுடைய திருமால் அருள்புரிந்தாலல்லாமல் துறக்கம் அடைதல் எளியதாகுமோ? அரிதிற் பெறுந்துறக்கத்தை எளிதிற் பெறச்செய்வதனால் திருமாலிருஞ்சோலைமலையை ஏத்தக்கடவேம்.

பலதேவரது திருமார்பிலுள்ள வெண்கடப்பமாலையைப் போல அருவி வீழ்வதனால் சிலம்பாறு அழகுபெறும். திருமாலிருஞ்சோலை யென்னும் பெயர் உலகமெல்லாம் பரவ மகளிரும் மைந்தரும் காமத்தை விதைத்து விளைக்கும் யாமத்தியல்பையுடைய இருங்குன்றத்தில் இளவெயில் சூழ இருள் வளர்தலையொத்துப் பீதாம்பரத்தையுடைய திருமால் பலதேவரோடு அமர்ந்து நிற்கும் நிலைமையை மாந்தர்களே! தியானம் செய்மின் ; அம்மலையின் சிறப்பைக் கேண்மின்:

சுனைகளிலெல்லாம் நீலமலர் மலர அச்சுனையைச்சூழ அசோக மரங்கள் மலர்தலாலும் வேங்கை மரங்கள் மலர்தலாலும் மாயோனை ஒத்த நிலையினதாயிற்று அம்மலை. இருங்குன்றென்னும் பெயர் பரவி உலகத்தில் பழையதாகிய புகழையுடைய அது தன்னைக் கண்டார்கள் மயக்கத்தை அறுக்குந்தெய்வம்; அதனால் சென்று திருமாலைத் தொழமாட்டாதீர் ! அம்மலையைக் கண்டேனும் பணிமின்.

குட்டியால் தழுவப்பட்ட மந்தி பாயவும் முல்லைமலர் கற்பு நிகழ்ச்சியைக் காட்டவும் மயில்கள் அகவவும் குருக்கத்தியின் இலை உதிரவும் அதன்கண் இருந்து குயிலினம் கூவவும் அவ்விருங்குன் றத்தில் குகைக்குள் முழங்குகின்ற எதிரொலி ஒழியாது.

நும்மனைவியரோடும் தாய்தந்தையரோடும் குழந்தைகளோடும் சுற்றத்தோடும் கூடி அக்குன்றத்தைத் தெய்வமாக மதித்துத் திசைநோக்கித் தொழுது சென்மின்.

தன் திருவுந்தியில் முன்பு உண்டாகிய கமலத்தை யொக்கும் கண்ணையுடையவனும், மேகம் இருள் மணியாகியவற்றை யொத்த திருமேனியையுடையவனும் எல்லா உலகத்திலும் வெளிப்பட்டு அவ்விடத்து உயிர்க்கூட்டங்களின் பிறவித்துன்பத்தைக் களைவோனுமாகிய திருமால் அன்புகொண்டு அக்குன்றத்தின்கண் எழுந்தருளியிருக்கின்றான்.

திருமாலே ! நீ பசுந்துழாய்மாலையை யுடையை ; நீலமலையைப் போன்றாய் ; மிக்க ஒளியினையுடையை ; ஒற்றைக்குழையை யுடையை ; கருடக்கொடியை உடையை ; வளைந்த கலப்பையையுடையை தண்டு, சங்கு, சக்கரம், வில், அம்பு, பாராவளை, வாள் என்பவற்றை ஏந்தினை.

இங்ஙனம் வேதம் அவன் பெருமை ஈதென்று உரைத்தலால் யாமும் அவற்றுள் அறிந்தவற்றைக் கூட்டி உரைத்துத் திருமால், பலதேவரென்னும் இருவரையும் தொழுது அவ்விருங்குன்றத்தின் அடியில்வாழ்தல் எமக்கு உண்டாகுகவென்று வேண்டுவேமாக.

## 16. வையை

காதற்பரத்தையுடன் நீராடிய ஒருதலைவன் தலைவியினுடைய தோழியினிடம் வந்து தலைவிபாற் செல்லுதலை விரும்புகையில் அவள் அவ்வையைநீர் விழாவைக் கூறலானாள்:-

வையையில் நீர்ப்பெருக்கினால், அதன் கரையின்மேல் மிளகு கொடி, சந்தனமரம், நுரை இவற்றை, 'இப்பொருள்கள் பாண்டியனது ஈகை போன்றன' என்று கண்டார் கூறும்படி அலைகள் மேன்மேல் வீசிக்கொண்டே இருக்கும்; துறையானது முத்துவடம், தலைக்கோல முத்து, பொன்னணி, நீர்கொணர்ந்த மணிகள், நீராடும் புதல்வர் முச்சியிலுள்ள முஞ்சமென்னும் அணியென்பவற்றைக் கைக்கொண்டு தம் கணவரோடு நீராடும் மகளிர்பால்வரும் நீர்வெள்ளத்தையுடையது. அயலிலுள்ள வயல்கள், விடுமலர் சுமத்தலாலும் பூவும் நீரும் நிறைதலாலும் நாடக அரங்கினை ஒக்கும். சோலையானது, தனக்கு விருந்தயர்ந்த நீருக்குத் தான் எதிர்விருந்தயர்தலைப்போலச் சுரும்புகள் ஒலிக்கும் தாதுடனே மணமிக்க மலர்களை மிகச் சொரியாநிற்கும். வையை நதியின் வரவினால் சோலையிலும் குளங்களிலும் ஆற்றிடைக்குறையிலும் மதுவையுண்டு வண்டுகள் பாடப் பூநிறைந்த அழகு விளங்கியது.

ஒருபால் ஒரு காதற்பரத்தையைச் சுற்றி நின்ற ஆயத்தார் தம் கையிலுள்ள மூங்கிற்குழாயினாலே செந்நிறநீரை அவள்மீது வீசினர்.

அந்நீர் அவள் மார்பிற்பட அவள் அதனைத்துடையாமல் தன் துகில் கொண்டு ஒற்றினாள் ; அப்பொழுது அவள்பால் தலைமகன் வந்தான். அவனைப் பார்த்த தோழியர், ''இவள் பூப்பெய்தினாள் ; இவள்பாற் செல்லற்க'' என்று பொய்யாகக் கூறி நகைத்தனர். அவன் உண்மை யின்னதென்பதைச் செஞ்சாந்தின் நாற்றத்தினால் அறிந்தானேனும் நகைத்து நீங்கிவிரைந்து இல்லத்தின்கண் சென்று அவள்மேலிருந்த செந்நீரைத் துடைத்தான். தோழியர் அதுகண்டு, 'இவள் பூப் பெய்தினள்' என்று கூற அக்காதற்பரத்தை நாணினாள். வையையின் வரவு இங்ஙனம் நிகழச்செய்தது.

கரைகளில் நின்ற மரங்களின் பூவும் மகளிர் கூந்தலினின்று வீழ்ந்த மலரும் மைந்தர் மார்பினின்று உதிர்ந்த மலரிதழ்களும் பரந்து விளங்க நட்சத்திரங்களாகிய முத்துவிளங்கும் வானத்திலுள்ள கங்கையை ஒத்து இருத்தல் வையைக்கு இயல்பாகும்.

ஒருசார், கெண்டையைப் போன்ற கண் மதுபானத்தாலும் புனலாட்டாலும் புலவியாலும் நிறம்சிவக்கவும் கூந்தலினின்று விழும் பூக்களிலிருந்து தேனொழுகவும் நீரில்விளையாடும் காதற்பரத்தையைப் பன்முறை ஒரு தலைவன் தழுவினான் ; அதனால் அவன் மார்பிலுள்ள கத்தூரிக் குழம்பு அழிந்ததும் அழியாததுமாக இருந்தது. அத்தோற்றம் பனியால் வளைந்த மூங்கில் அப்பனிநீங்க மேலே கிளர்ந்து தாக்குதலால் தேன் சோர்ந்துவிழும் மலையையொத்தது. இத்தகைய நிகழ்ச்சிகள் பாண்டியனது வையையின்கண் இயல்பாக நிகழ்வன.

மேகம் மலையின்கண் பரவிய அளவிலே கரையில் திரைகள் பரவிநிற்கும்.

வையையே ! கண்ணியும் தாரும் உடைய மைந்தரும் கோதையை யுடைய மகளிரும் பொருள்களைத் தானம்பண்ணி அதன் பயனாகிய போகத்தை நுகர விரும்பி நாடோறும் ஆடுதலால், அவர் கையுறை யாகிய பொன்மீன் முதலியனவும் அவரணிந்த சாந்தும் மாலையும் ஈரம்புலர்த்தும் புகையும் நினக்குத்தரும் நிவேதனமும் இடையறாமல் இருக்கும் வண்ணம் மழையானது மறாமற் பெய்க ; அதனால் வெள்ளம் பெருகி நின்பால் வற்றாதாகுக.

இங்ஙனம் கூறுமுகத்தால் தோழி வாயின்மறுத்தாள்.

## 17. செவ்வேள்

நெருப்பையும் இசைக்கருவிகளையும் சந்தனம் முதலிய வாசனைப்

பொருள்களையும் அகிற்புகையையும் கொடிகளையும் உடன்வருவார் கொணரத் தாம் மலர்களையும் குழைகளையும் பூந்துகில்களையும் மணியினையும் வேலினையும் சுமந்து வந்து முருகக்கடவுள் எழுந்தருளி யிருக்கும் கடப்பமரத்தைத் துதித்துப்பாடித் திருப்பரங்குன்றத்தின் அடியில் மாலைதோறும் பலர் உறைகின்றனர் ; அவர்களுள் தேவருலகத்து உறைதலை வேண்டுவார் யார்?

அக்குன்றத்தில் ஒரு பக்கம் பாணர்களுடைய யாழோசையெழ அதனெதிர் வண்டின் இன்னிசை எழும் ; ஒருசார் புல்லாங்குழலின் ஒலியெழ அதனெதிர் தும்பி முரலும் ; ஒருபால் முழவின் முழக்கம் உண்டாக அதனெதிர் அருவிநீர் ஒலிக்கும் ; ஒருபுறம் ஆடுமகளிர் அசைய அவரெதிர் பூங்கொடிகள் வாடையினால் அசையும் ; ஓரிடத்தில் பாடுமகளது பாலைப்பண் நிறைகுறைவோடு ஒலிக்க அதனெதிர் ஆடும் மயிலினது அரித்தெழுங்குரல் எழும். இங்ஙனம் கல்விகளால் வென்றிபெற எண்ணியவர்கள் மாறுமாறாக எழுந்தாற்போன்ற தன் மையை முருகனது பரங்குன்றம் உடையது. புகழ்பெற்ற மதுரைக்கும் பரங்குன்றத்திற்கும் இடையே உள்ள இடம் சமீபித்ததாயினும் மகளிரும் மைந்தரும் நெருங்கி விளையாடுதலால் மிகச் சேய்த்தாகா நின்றது. அம்மகளிரது கூந்தலினின்றும் மைந்தரது குஞ்சியினின்றும் வீழ்ந்த மாலைகளால் தடுக்கப்பட்டு வழியானது இல்லையாயிற்று. முருகக்கடவுள் அத்தகைய திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளி உலகில் அங்கங்கே செய்யப்படும் பூசைக்கண்ணே ஏற்றுக்கொள்ளும் அகிற்புகை மேலே போதலால் தேவர்கள் இமைப்பார்கள் ; சூரிய மண்டிலமும் தோன்றாமல் மறையும்.

மகளிரும் மைந்தரும் சுனையின்கண் பாய்ந்து விளையாடினர்; அதனால் வண்டுகள் பயந்து அச்சுனைமலர்த் தாதினை ஊதாவாயின; பரங்குன்றத்தின் அலங்காரங்கள் அத்தன்மையன.

மலையிலுள்ள அருவி பரந்து மலைக்குக் கீழுள்ள உழவரது வயல்களிலே பரக்கும். அவ்வருவியில் விளையாடு மகளிர் ஆபரணங் களினின்றும் விழுந்த நீலமணி அவ்வுழுநிலத்தைச் சிதைக்கும்.

தெய்வவிழாவும், விருந்தயர்தலுமாகிய இவை பரங்குன்றிற்கும், வையைக்கும், மதுரைக்கும் தடுமாறி வருதல் நல்லொழுக்கமாயிற்று.

மணிநிறமயிலையும் உயர்ந்தகோழிக்கொடியையும் உடைய முருக! பிணிமுகத்தின்மேல் ஊர்ந்து போர்செய்து வெல்லுந் தலைவ! பிறவித் துன்பம் நீங்கிய இன்பம்மலிந்த நாட்களை யாம் பெறுகவென்று வேண்டி யாமும் எம் சுற்றத்தாரும் மக்களைப் பணிந்தொழுகாமல் நின்

புகழை யேத்தி நின்பரங்குன்றத்தைப் பாடித் தொழுகின்றோம்! அருள்புரிவாயாக.

## 18. செவ்வேள்

அசுரர்களுடைய படைவலியால் உண்டான பெருமிதம்கெடும் படியாகக் கடலிற் புக்கிருந்த சூரபன்மாவாகிய மாமரத்தை அழித்தோய்! நீ விரும்புதலால் இத்திருப்பரங்குன்றம் நின்னைப் பெற்ற இமாசலத்தைப்போலப் புகழ்பெற்றது.

நினக்குரிய திருப்பரங்குன்றத்தில் ஒரு கானவன் ஒருமயிலை நோக்கி அதன் அழகையும் களிப்பினையும் தன் உள்ளத்தே கொண்டு நின்றான் ; அப்பொழுது அவன் காதலி, "நீ என்னை நோக்காமல் அதனைப் பார்ப்பதன் காரணம் யாது? இச்செயலால் என்னை இகழ்கின்றாய்?" என்று ஊடினாள். அவன் அவ்வூடலை மாற்றி, "அன்புடையாய் ! கொள்ளுதற்கரிய நின்சாயலைக் களவுகொள்ள எண்ணி அதனைத் தான்பெறாமல் வருத்தமுறும் இம் மயிலைக் கண்டு நின்சாயலின் அருமையை நினைத்து நின்றேன் ; நீ இகழ்ந்ததாக எண்ணுகின்றாய்" என்று தெளியச்செய்தான். இது திருப்பரங்குன்றத்தின் இயல்பாகும்.

ஒருசார் பரத்தையிற் பிரிந்து சென்ற தலைவனால் அனுப்பப் பட்ட பாணன் ஒருவன் தலைவிபால் வந்து பாடினான். அதுகண்ட தலைவி, "பொன்னணியினையுடைய பாணா! தலைவனுடைய உடம்பிலுள்ள வடுக்கள் அவனது பரத்தைமையைப் புலப்படுத்த அறிந்தேம்; நீ பாடிய பாட்டுப் பொய்ம்மிகுதியை உணர்த்திற்று" என்றாள்.

வேலையுடைய வேளே ! விரைந்த மயிலின் மேல்வரும் ஞாயிறே! மழைமுழங்கிய சிகரமும் அதன்கண்ணுள்ள கொடி மின்னும் நின் ஓடையையுடைய களிற்றையொக்கும் ; நின்குன்றத்தின்கண் உள்ள சித்திரசாலையானது காமவேளது படைக்கொட்டிலை ஒக்கும். சோலை களும் சுனைகளும் மலர்களின் செறிவால் அக்காமவேளது அம்பறாத் தூணியை ஒக்கும். கார்காலத்தில் தோன்றும் காந்தட்பூவின் குலைகள் அவன் போரிற்றோற்றுக்கட்டுண்டார் கைகளை ஒக்கும். தும்பியினாற் கட்டவிழ்க்கப்படும் காந்தளின் முகைகள் யாழ் நரம்பினது கட்டை நெகிழ்ப்பவர் கையை ஒத்தன. அழகிய மேகம் முன்பனிக் காலத்தின்கண் முழங்கி இந்திரவில்லை வளைத்தது ; நினது பரங்குன்றத்திலுள்ள மரங்கள் அவ்வில்லாற் சொரியப்படும் கணைகளைப் போல மெல்லிய மலரைப் பரப்பின. அக்குன்றத்தின்கண்

தாள ஒலியும் சிறந்த வாத்தியங்களின் ஒலியும் மேகங்களின் முழக்கமும் போர் முழக்கத்தைப் போல எழுந்தன. அருவிகள் ஒலித்து இழிவதால் சிகரங்கள் முத்தாரங்களை அணிந்தாற்போன்றுள்ளன. குருவிகள் ஆரவாரம் செய்யுமாறு தினைக்கதிர்கள் விளைந்தன. கரையினின்றும் சாய்ந்த கொறுக்காந்தட்டையை முட்டுகின்ற பலநிற மலர்கள் நிறைந்தசுனை இந்திரவில்லை வளைத்த வானத்தை ஒத்தது.

வேற்படையையுடைய செல்வ ! யாழோசையும் இயற்பாட்டுக் களும் பொருந்தி வேதவொலியும் பூவும் தூபதீபங்களும் ஆகிய உபசாரங்களை ஏற்றருளிய நின் அடியின்கண் எமக்குரிய இருப்பிடத்தைச் சேர்ந்தாற்போல எம் சுற்றத்தோடு உறைதலை நீங்காது இருப்பேமாக ! அங்ஙனம் இருக்க அருள்புரிவாயாக !

## 19. செவ்வேள்

முருகவேளே ! தேவலோகத்தில் நீ எழுந்தருளியிருப்பது போலவே இப்பூவுலகத்தும் எழுந்தருளியிருக்கும் விருப்பத்தைக் கொண்டு அறிவெல்லையால் அறியப்படாத கடம்பினைமேவித் தேவர்கள் அடையும் இன்பத்தை மக்களும் அடைக என்று திருவருள்புரியும் திருப்பரங்குன்றத்தின் கண்ணே நீ வள்ளிநாய்ச்சியாரை மணம் புரிந்தருளியது வானுலகத்தில் தேவயானையை மணந்ததற்கு மாறாக இவ்வுலகத்திற் புரிந்த செயல் போலும்.

அறிவினாலும் வீரத்தாலும் பிறரைப் போர்வெல்லும் மதுரையி லுள்ள மைந்தரும் மகளிரும் இரவு நீங்கியபின் விடியற்காலையில் பரங்குன்றத்தை நோக்கிப் புறப்பட்டனர். அவர் அறத்தைச் செய்து அதன் பயனை நுகர்தற்குத் தேவலோகத்துக்குச் செல்வாரைப் போலச் சென்றனர். அவர் தத்தமக்கேற்ற அணிகலங்களையும் நல்லதுகில்களையும் அணிந்துகொண்டு புறப்பட்டனர் ; சிலர் குதிரை மீதேறினர் ; சிலர் தேரிலேறினர். அவர் மார்பிலே மாலைகள் விளங்கின. அவர்களுடைய உடம்பின் விளக்கம் வழியிலுள்ள இருளைப் போக்கியது. இங்ஙனம் அவர்கள் திருப்பரங்குன்றத்திற்கும் மதுரைக்கும் இடையிலுள்ள மணல் நிரம்பியவழியிலெல்லாம் நெருங்கினர். அவர்களுடைய மாலையையுடைய தலைகள் இடை வெளியின்றிச் செறிந்து நிறைந்தமையால் அந்தவழியானது ஒத்த பூக்களை நிறைய வைத்துக்கட்டி நிலத்திற்கு இட்ட மாலைபோலத் தோற்றியது.

ஒலிக்கின்ற மணியை யணிந்த யானையையுடைய நெடிய முருகவேளே ! அறிவுசிறந்த பாண்டியன் மடமயிலனைய மகளிரோடும்

செய்யவேண்டிய கடமைகளை நன்கறிந்த கண்போன்ற அமைச்சர்களோடும் கூடி நாடும் நகரும் தன்னை அடையவந்து நின் மலையிலேறி நின் திருக்கோயிலை வலம்வந்தான் ; அச்செயல் பல நட்சத்திரங்கள் தன்னைச் சூழச் சந்திரன் மேருமலையை வலம் வருவதையொத்தது. அப்பாண்டியனுடன் வந்தோர் சிலர் தலையில் துகிலை யணிந்திருந்தனர். அவர்கள் நின்னைத் துதித்த நாவினராய்ப் பெருகிய உவகையோடு வந்தனர். அவர்களுட் சிலர் மதத்தால் வண்டுகள் சூழும் கபோலத்தையுடைய யானைகளை வழியினின்றும் அகற்றி மரங்களிற்கட்டி. அவற்றிற்கு உணவாகக் கரும்பை முறித்துக் கொடுத்தனர் ; சிலர் குதிரைகளை வழியினின்றும் நீக்கினர் ; சிலர் தேர்களை வழியினின்றும் போக்கி நிறுத்தினர். இவை பரந்தமையால் நினக்குரிய திருப்பரங்குன்றத்தின் கீழுள்ள நிலப்பரப்பு, பாண்டியனது பாசறையைப் போலத் தோற்றியது.

வழுதியுடன் ஏறிச்சென்றவர்களுட் சிலர் அங்குள்ள குரங்குகளுக்கு உண்ணுவதற்குரிய பண்டங்களைக் கொடுத்தனர் ; சிலர் கருமுக முசுக்கலைகளுக்குக் கரும்பை அளித்தனர் ; இசையறிவுடையவர்களுட் சிலர் தெய்வத் தன்மையையுடைய பிரமவீணையை வாசித்தனர் ; சிலர் புல்லாங்குழல் ஊதினர் ; சிலர் யாழைச் சமனாக வாசித்தனர் ; சிலர் பூசைச்சிறப்பைப் பாராட்டினர் ; சிலர் யாழோசைக் கேற்றவாறு முரசை ஒலித்தனர்.

இவர்கள் இங்ஙனம் இருப்ப வேறு சிலர் அக்குன்றத்துள்ள சித்திரசாலைகளிற் சென்று அங்குள்ள சித்திரங்களைக் கண்டு மகிழலாயினர். அவருட் சிலர் துருவசக்கரத்தைப் பொருந்திவரும் சூரியன் முதலிய கிரகங்களின் நிலைமையை விளக்கும் சித்திரத்தைக் கண்டனர். தம் மனைவியர் சில சித்திரங்களைச் சுட்டி வினாவக் கணவர்கள், "இவள் இரதி, இவன் காமன்" என்று விடைகூறினர். வேறோரிடத்திலுள்ள சித்திரத்தைப் பார்த்து, "இவ்வுருவம் பூனையுருவெடுத்த இந்திரனது ; இவள் அகலிகை ; இவன் கௌதமன்; இவன் கோபித்தலால் அகலிகை கல்லுருவானவாறு இது" என்று சிலர் கூறினர். இங்ஙனம் பரங்குன்றத்தில் முருகவேளின் திருக்கோயிலின் பக்கத்துள்ள இடம் பல சித்திரசாலைகளையுடையதாய்ச் சோபனமான நிலையையுடையதாயிற்று.

பேதைப்பருவத்தாள் ஒருத்தி தன்தமரினின்றும் பிரிந்து போய்விட்டாள் ; பிறகு அவர்களைப்பார்க்கக் கருதி அங்குள்ள கற்களின் இடையிடையே புகுந்து திகைத்து 'ஏஎ, ஓஒ' வென்று

கூவினாள் ; அதனால் அங்குள்ள குகைகளில், 'ஏஏ, ஓஓ' என்ற எதிரொலி எழுந்தது. அதனையறியாத அவள் தன் தமரும் தன்னை அழைப்பதாக நினைந்து அவ்விடந்தோறும் சென்று சென்று அவரைக் காணாமல் மீண்டாள் ; மீண்டு மேலும் மேலும் கூவினாள்; அன்பரது வாழ்த்தினை உவக்கும் முருகவேளது பரங்குன்றத்திலுள்ள இடவேறுபாடு சிறுபிராயத்தினருக்கு மடமையைச் செய்கின்றது.

நெடியாய் ! இளைய மகளிர் சுனையருகிலிருந்த மரங்களிலுள்ள இளந்தளிர்களை விளையாட்டாகச் சுனையிலே உதிர்த்தனர் ; அவை அச்சுனையின்கண் உள்ள மலர்களையும் அரும்புகளையும் பொருந்தித் தலைதூக்கிக்கிடந்தன. இவற்றுள் மலர்ந்த மலரோடு பொருந்திக் கிடந்ததை ஐந்தலையையுடைய அரவென்றும் அதனருகில் முதிர்ந்த பேரரும்போடு பொருந்திக்கிடந்ததை அதன் மூத்தபிள்ளையென்றும் முதிராத இளைய அரும்போடு கிடந்ததை அதன் இளைய பிள்ளையென்றும் கருதி அம்மகளிர் மயங்கினர்.

அதனருகிலே, பச்சிலையினது இளங்கொழுந்தும், மகளிர் வாய்போன்ற ஆம்பலும், கைபோற்பூத்த குலையையுடைய காந்தளும், பஞ்சாய்க்கோரையின்பூவும், வேங்கைப்பூங்கொத்தும், தோன்றிப் பூவும், நறவம்பூவும், கோங்கமலரும், இலவமும் ஆகிய இவையெல்லாம் தெற்றின மாலைகளைப்போல மலர் நிறைந்தும், கோத்த மாலைகளைப்போல நிறம் மாறு பட்டும், தொடுத்த மாலைகளைப்போல இடையிட்டும், தூக்கிக் கட்டின மாலைகளைப்போல நெருங்கியும் பூத்தன. இங்ஙனம் விரவிப் பூத்த மலர்ப்பரப்பானது நின் திருப்பரங்குன்றத்துக் குவடெங்கும் விடியற்காலத்திலே பல நிறத்தையுடைய மேகங்கள் நிறைந்த வானம்போல விளங்கும்.

நின்குன்றத்தையடைந்து நினது கொடி ஏற்றப்படும் யானையின் கும்பத்தைக் குங்குமத்தால் அலங்கரித்துப் பூவும் நீரும் தெளித்துச் செவிக்கவரிகளைச் சார்த்திப் பவளக்காம்புடைய பொற்குடையை மேலே கவித்துக் கல்யாணமான மகளிரும் கன்னிமகளிரும் பூசை செய்தனர் ; அப்பூசைக்கண் அந்த யானையுண்ட கவளத்தின் சேடத்தை அவர்கள் உவந்து உண்டனர் ; அங்ஙனம் உண்ணாவிடின் மகளிர் தம் காதலருடைய சிறந்த அன்பை எய்தார் ; கன்னி மகளிர் குறைவற்ற மணாளரைப் பெறார்.

குறப்பெண்ணாகிய வள்ளி நாய்ச்சியாரை மணம் புரிந்தருள்வோய் ! எம் வாழ்த்தை நின்செவிக்கு உணவாகக் கேட்டருளல் வேண்டும்.

நின் ஆடையும் மாலையும் சிவந்த நிறமுடையன. அங்ஙனமே நின் வேலாயுதமும் பவழக்கொடியைப்போன்ற நிறத்தைக் கொள்ளும். நின் திருவுருவமும் எரிகின்ற தீயை ஒக்கும். திருமுகமும் இளங்கதிரவனை ஒக்கும். உலகிற்குத் துன்பத்தைச் செய்த சூரபன்மாவாகிய மாமரத்தைத் தடிந்தோய் ! பகைமையையுடைய கிரவுஞ்ச மலையில் வேலைச் செலுத்தி அம் மலையை உடைத்தோய் ! நீ இக்குன்றத்தில் கடம்பமரத்தின்கண் விரும்பிப் பொருந்திய நிலையை உடன்மேவிய சுற்றத்தாரோடு துதித்துத் தொழுது வாழ்த்தினேம் ; அருள்புரிவாயாக.

## 20. வையை

தான் மீண்டு வருவதாகத் தலைமகன் கூறிப்போன பருவத்தில் வாரானாகத் தலைவியினது ஆற்றாமை மிக்கது ; அது கண்டு தோழி ஒரு பாணனைத் தலைவனிடத்தில் தூது விடுத்தாள். அவன் தலைமகன்பாற் சென்று கார்ப்பருவத்தைப்பற்றியும் வையை நீர் விழவணியைப் பற்றியும் கூறலானான்:

சூல் முதிர்ந்த மேகம் மலைவரிசையைச் சூழ்ந்து சூழ்ந்து பெய்து, புலியைக் குத்திய யானையினது கொம்பிலுள்ள இரத்தக் கறையைக் கழுவிற்று. காலைப்பொழுதிலே கடனீரை முகந்து மாலைப் பொழுதில் மலையைச் சேர்ந்து மேகம் மழைபெய்தலால் வையை யாறானது மலர் மணமும், வெங்கார் மணமும், மரங்களிலிருந்து உதிர்ந்த கனிகளின் மணமுமாகிய இவற்றை உடன் கலந்து தான் கொண்டு பிறர்க்குக் கொடாநின்றது. அவ்வையைக் கரையிலுள்ள சோலையின் ஆற்றினது வெம்மையால் உண்டான ஒருவகை மணமும் கலந்தது ; ஊர்கள்தோறும் பறை அறையப்பட்டது. அப்பொழுது சுருங்கை வழியாக நீர் ஓடுகின்ற அரவத்தால் மதுரையிலுள்ளார் துயில்நீங்கி வையையில் நீராடும் பொருட்டு விரைந்தனர். அந்த வேகத்தில் அவர்களிற் சிலர் தேரிலேற எண்ணியவராய்த் தேர்க் குதிரையைப் பள்ளியோட வையத்திற் பூட்டி அதன்கண் ஏறினர்; சிலர் வங்கத்திலேற எண்ணி அதற்குரிய எருதுகளைத் தேரிற்பூட்டி அதன்மேல் ஏறினர்; சிலர் குதிரைகளுக்கு இடும் சேணம் முதலிய வற்றை யானைக்கு இட்டனர் ; சிலர் மறதியால் யானைகளுக்கு ஒன்றும் அணியாமல் நடத்தினர் ; மகளிர்களுக்குரிய கோதைகளை மைந்தர்கள் அணிந்தார்கள் ; மைந்தர்களுக்குரிய தாரை மகளிர் புனைந்தனர். இங்ஙனம் தாம்தாம் முந்திச் செல்லவேண்டுமென்னும் ஆர்வ வேகத்தால் தாம் அணியும் முறைமையை மறந்து மாறியணிந்தவரெல்லாம்

வையையைக் குறுகினர் ; அணிந்து கொள்ளாத ஏனையவர் வீதியின் கண் வந்துநின்று வருந்தினர். இவ்வாற்றால் வையையானது மதுரைமா நகரிலுள்ளவர்கள் விரும்பும் தன்மையையுடையதாயிற்று.

அப்போது பூங்கோதைகளையும் தாரையும் மாலைகளையும் அணிந்தவர்களும் சூட்டும் கண்ணியும் வலையுமுமாகிய இவற்றாலியன்ற அணிகளையுடைய கூட்டத்தினரும் வையைக்கரையின் கண்ணே நின்றனர். சிலர் அயலாரணிந்த அணிகலங்களைப் பார்த்துக்கொண்டே வந்தனர். அப்பொழுது ஒரு தலைவியின் ஆயத்தார், தம் தலைவன் தலைவியுடன் இருப்பவும் ஒரு பரத்தையின் கையிலே அவனாலே கொடுக்கப்பட்ட தலைவியின் வளையைக் கண்டார்கள் ; அதனால், ‘இவள் நம் தலைவிக்கு மாற்றாள்’ என்று எண்ணி அவளைப் பார்த்தனர். அதையுணர்ந்த தலைவன் நாணினன். அவ்வாயத்தார், “ஆரத்தையும் வளையையும் இவளுக்குத் தந்த இக்கள்வனுடைய நாணும் முகத்தைப் பாருங்கள்” என்றனர். அதுகேட்ட பரத்தை தன்னோடு சேர்ந்த மகளிர் திரளுக்குள்ளே ஓடி ஒளித்தனள். அவளை அவ்வாயத்தார் மணற்கண்ணே சென்று தேடினர். அதுகண்ட அப்பரத்தை அவர்களை எதிர்த்து, “நீவிர் என்னைத் தொடர்வதற்குக் காரணம் யாது?” என்றாள்; அங்கே தலைவி சித்தந்திகைத்து ஒன்றுஞ்சொல்லாது நின்றாள். அப்பொழுது ஆய மகளிர் பரத்தையை நோக்கி, “காமத்தைப் பொய்யொடுங்கூட்டி விற்கும் கணிகையே! ஒருத்தனுக்கே உரிமையின்றிப் பலர்க்கும் பொதுமை யையுடையாய்! ஐம்புல உணர்ச்சியைப் பெறும் காமுகராகிய பன்றிகள் நுகர்கின்ற தொட்டியே! வனப்பாகிய வயலிலே கள்ளாகிய நீரைவிட்டுக் காமமாகிய கலப்பையால் எம்முடைய எருது சோம்பிக் கிடவாமல் உழுகின்ற பழைய சாலே ! பொருள் ஈபவர்களை வெளியே போகாமல்தடுத்துக் கண்ணே கயிறாகக்கொண்டு தோளாகிய தறியோடு கட்டிக் காமம் மிகும்பொருட்டு யாழிசையை நுகரச் செய்வதோடு எம்முடைய அணிகலங்களையும் வளையையும் பூண்டு நின் அழகையும் நுகரச்செய்யும் இன்பத்தில் பொதுவாக உள்ள மகளே! முன்னேகெட்டுப்போன எம் எருத்தை யாம் தேடித்திரிந்து இவ் விளையாட்டு மகளிர் கண்காண வணக்குவோம்; இவ்வையையாகிய தொழுவத்திற் புகவிட்டு நன்றாக அலங்கரித்து முழக்குஞ்செய்து மாலையையே கோலாகக் கொண்டு அடித்து இவ்வழக்குரைக்கும் அவையத்திலே எம் எருதாதலை யாவரும் அறியத் தொடர்ந்தோம். தம் எருதை உழுதற்றொழில் செய்யாமல் ஓடவிடும் முறைமை வேளாளர்க்கு இல்லை; ஆதலின் இங்ஙனம் செய்கின்றேம். எம் தலைவியினுடைய

ஆரத்தைத் தலைவன் நினக்குத் தந்தான். அதனை அணிவதற்கு நின் மார்பும் தலைவியின் மார்பும் ஒத்தனவாகுமோ?'' என்றுசொல்லி அப்பரத்தையை வைவாராயினர். அவள் அத்தலைவியைக் கடுமையாகப் பேசினாள், அதனைக் கேட்ட சில முதிய மகளிர் அவளை வெறுத்து, "சிந்தித்த அளவிலே பாவம் நீங்குதற்குரிய கற்புடையாளைச் சினவாதே; நீ அறியாமையினால் கடுஞ்சொற் கூறுகின்றாய் ; அது நீங்க இவளை வணங்க வருவாயாக'' என்றனர்.

அதுகேட்ட பரத்தை, "இது துன்பமாக இருக்கிறது'' என்று மனத்துள் எண்ணி அம்முதிய மகளிருள் ஒருத்தியை நோக்கி, "தாயே ! பகைவரைப் பகைவர் தொழுதல் இழிவு; அதனை நீ அறிந்திலை. பெரியோய் ! அவ்வாறே மாற்றாளை மாற்றாள் வணங்குதலும் பெருமையன்று'' என்றாள்.

பின், தலைவி பரத்தையை நோக்கி, "நாணமின்றி இனிய சொற் களைப் பல அரங்குகளிற் சொல்லி ஆடும்பொருட்டு முழவுடனே வருவோய் ! நின்பெருமையை இங்கே சொல்லல் வேண்டா. என் தந்தை எனக்குச் செய்து இட்டவளையும் ஆரமும் நின்பால் களவினால் வந்தனவல்லவாயின் நினக்கு இவற்றைத் தந்தவனைக் காட்டிவிட்டுப் பின்பு உன்பெருமையைப் பேசிக்கொள்'' என்றாள்.

அதுகேட்ட பரத்தை, "அதிரற்கண்ணியை உடையாய் ! நீ அன்பூண்ட அவன் என்பால் அன்புடையவனாதலின் இவ்வளை யையும் ஆரத்தையும் என்பால் இன்பம் பெறுதற்கு விலையாகத் தந்தான். இவையேயல்லாமல் அவன் நின்காலிலுள்ள சிலம்பு களையும் கழற்றித் தருவான். அதனால் யான் கள்வியல்லேன் ; அவன்றான் கள்வன் ; அவனைத் தொடர்வாயாக'' என்றாள்.

அப்பொழுது அங்கே அணிகளை நோக்கி வருவோர் அப்பரத் தையை நோக்கி, "வசிகரித்தலையுடைய மானே ! நீ மறுத்தலை ஒழிவாயாக. உங்களை விரும்பிய காமுகர் உங்களுக்குத் தரும்பொருள்கள் நாடறிய உங்களுக்குரியனவே'' என்று அவளைத் தணித்தனர் ; பின்பு தலைவியை நோக்கி, "பரத்தையர்பாற் சென்று தங்குபவனை அங்ஙனம் செல்லாமற் காத்தலும் சென்றானென்று நீக்கி ஒழுகுதலும் மனைவியாற் கூடுமோ? கூடா. சால்புமிக்க கற்புடை மங்கையர் தம்மைக் கணவர் இகழ்ந்தாலும் தாம் அவரைப் போற்றுவர். பரத்தையரிடத்தே மயங்கி அவரை விரும்பிச்சென்று பொருந்திய மைந்தரொடு அள வளாவேமென்று இருத்தல் மங்கையர் யார்க்கும் முடிவுபோவதன்று.

ஆதலின் நீ சினங்கொள்ளாதே ; சினங்கொள்ளாதே. காமமானது தகுதியான இடத்திலேயே நிற்குமோ?'' என்று கூறினர்.

இங்ஙனம் வையையானது துனியினையும் புலவியையும் ஏற்றுக் கொள்ளும்படி செய்தது.

மகளிர்கைபோற் குவிந்த காந்தள் முகையும், பாம்புகள் ஒன்றோடு ஒன்று கோபித்துப் படமெடுத்தாற்போன்றனவும் குடைவிரிந்தது போன்றனவும் ஆகிய காந்தள்மலர்களும், சுனையினின்றுகழிந்து கீழ் விழும் மலர்களும், மரக்கிளைகளிலிருந்து உதிர்ந்த பூக்களும், புதல் களில் மலர்ந்தபோதுகளும் ஆகிய இவற்றை அருவிகள் சொரிந்தன. அவற்றை அலைகளால் தள்ளிக்கொண்டு நெடிய பெரிய சுருங்கையின் நடுவாகிய வழியிலே வரும் புனலை மதுரையிலுள்ள மதில் சொரியும் பொழுது அப்புனல் களிறுகள் கையைத் தூக்கி விடும் நீரை ஒத்தது.

இங்ஙனம் மயக்கமும் புணர்தலும் பிரிதலுமாகிய இக்காமத் தையும் கள்ளையும் உடன்விரவி மகளிர் யாவரும் பாராட்ட அவர்கள் தாம் விரும்பின காதலரோடு புனலாடுமாறு அப்பிரிந்த தலைவர்களைக் கொண்டுவந்து கூட்டுதல் வையைக்கு இயல்பு.

இவ்வாறு தலைவனுக்குக் கூறியதனாற் பாணன், "நீயும் தலைவிபால்வந்து சேர்தற்குரியை'' என்பதைக் குறிப்பித்தான்.

## 21. செவ்வேள்

முருகா! நீ வாகனமாகக் கொண்டு எழுந்தருளுவது நெருப் பைப் போன்ற முகபடாம் விளங்கும் சென்னியையுடைய வேழம்; திருவடியிலே கொண்டது, தாமரைபோன்ற அவ்வடிக்கு இயைந்ததும் தோலால் தைத்த முதுகுடையதும் பீலிப்போழால் அலங்கரிக்கப் பட்டதுமாகிய செருப்பு ; நின் திருக்கரத்தின்கண் உள்ளது சூர்மாவைத் தடிந்து கிரவுஞ்சகிரியைத் துளைத்தவேல்; நீ அணிந்துகொண்டது வள்ளிப்பூவையிடையிட்டுத் தொடுத்ததும் உருளுகின்ற பூக்களை யுடையதுமாகிய கடப்பந்தார் ; நீ விரும்பி வீற்றிருப்பது, மேலோர் நாவிலிருந்து எழும்புகழ் நிறைந்து ஏழிலைப்பாலையையுடைய தாழ் வரையாகிய இலகடத்தையும் அருவியாகிய முகபடாத்தினையும் உடைய யானையைப் போன்று விசும்புற நிவந்த தண்பரங்குன்றம். வென்றிக் கொடியணி செல்வனாகிய நின்னைத்தொழுது இக்குன்றத்து அடியின் கண் உறைதல் மறுபிறப்பினும் இயைகவென்று பரவுகின்றேம்.

சூர்மாத் தடிந்தோய் ! நின் திருப்பரங்குன்றின்மேல், பொற் சிலம்பிலுள்ள முத்துப்பரல் ஒலிக்கத் துடியின் ஓசைக்கு இயைய அடியைப் பெயர்த்துத் தோளை அசைத்துத் தூக்கிக் கள்ளுண்ட

மகிழ்ச்சி தடுக்க ஒருத்தி ஆடினாள் ; அவ்வாடலைத் தன் தலைவன் அருகிலிருப்பப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு தலைவி, ஆடுவாளது அழகு கண்டு, இஃது இவன் மனத்தை வேறுபடுத்துமென்றெண்ணி வெகுளி மிக்க பார்வையோடு அவனைச் சினந்தாள் ; வேறொருத்தி, தன் அழகைக் கண்ணாடியிற் பார்த்துத் தன் அணிகலங்களைத் திருத்தினாள்; பின்னொருத்தி தன் நகில்களில் சந்தனத்தைப் பூசி உதிர்த்துப் பின்னும் பின்னும் ஊட்டினாள்; இம்மகளிருடைய நிலையும் இத்தன்மைய பலவாறு நிகழும் மகளிருடைய நிலையும் நினைப்பின் கைவல்லான் எழுதிய ஓவியத்தின் அழகைப் போன்றன.

மேகம் ஒலிக்கின்ற இடங்களில் தம் இரண்டு சிறகையும் சாந்தாற்றிபோல விரித்து மயில்கள் ஆடின; துளைகளையுடைய குழலோசையைப் போலத் தும்பிகள் மலர்களில் ஊதின ; வண்டினங்கள் யாழினது இசையைப்போல ஒலித்தன ; அருவியின் நீர் தாளத்தையுடைய முழவைப்போல ஒலித்தது. இங்ஙனம் உண்டான ஒலிகளெல்லாம் ஒருங்கே பரந்து திருப்பரங்குன்றில் ஒலித்தன.

ஆழ்ந்த சுனையின் நடுவே ஒருத்தி மூழ்கி நீர்மேல் எழுந்தாள். அவள் கரையில் நிற்கின்ற தன்கணவனை நோக்கி நீரில் அழுந்துகின்ற தனக்குப் புணையாகிய மூங்கிலைத் தரவேண்டினாள். அவன் அதனைக் கொடாமல் அரக்குநீர் நிறைந்த வட்டை எறிந்தான். அவள் நீரில் தத்தளித்தாள். அவளது துயரைக்கண்ட கொழுநன் இன்புற்று அந்நீரின்கண் குதித்து அவளைத் தழுவினான். தண்பரங்குன்று இத்தகையது.

இடையறாது வரும் அருவி மலைப்பிளப்பின் கண்ணே பரந்த நின் திருப்பரங்குன்றம், மைந்தர் பூசிய சந்தனத்தைத் தடவிப் புலர்த்துங் காற்றையும், மகளிர் பூந்தாதை உதிர்த்த கூந்தலினூடு புக்கு அசைத்த காற்றையும், நினக்குரிய பூசைக்கண் காட்டிய தூபப் புகையூடு நுழைந்த காற்றையும் உடையது.

ஒருத்தி சுடர் பரந்த மின்னலைப் போலப் பொன்னால் இடையிடை யிழைத்துச் செய்த கோதை கூந்தலில் அசையக் கள்ளைக் குடித்த மகிழ்ச்சி தடுப்பத் தளர்ந்து துகில்நெகிழக் கண்கள் சிவப்பப் பூங்கொடிபோல அசைந்தாள்; தன் கேள்வன் ஒலிக்குந் துடியின் தாளத்திற்கேற்பத் தனது முத்துமாலை அசைய ஆடினாள்; அவளுடைய அழகு, வாடையால் அசைக்கப்பட்டு ஆடை

அசையவும் அணியசையவும் ஆடும் பூங்கொம்பின் அழகை ஒக்கும். துடியினது தாளத்துக்கு ஏற்ப முறையாகத் தோளை அசைப்பவளது கண்பிறழ்தல் அம்பு பிறழ்தலை யொத்தது.

மாற்றாரை அமரின்கண் அழித்த வேற்படையை உடையை; பன்னிரு தோளையுடையை ; ஆறு திருமுகத்துடன் விளங்குவை; பகைவரை அழித்த செல்வ! சுற்றத்தோடு ஒருங்கே நின் அடிக்கண் உறைதல் இன்றுபோல என்றும் எமக்கு இயைவதாக வென்று பரவுகின்றேம்; அருள்புரிவாயாக.

## 22. வையை

பாண்டியவரசன் போரின்கண் யானைகளை வரிசையாக நிறுத்தினாற்போல மேகங்கள் வானத்தில் நெருங்கின; அவனுடைய போர் முரசு ஆர்ப்பதுபோல அம் மேகங்கள் இடிமுழக்கம் செய்தன; அவன் பகைவர்மீது சொரியும் அம்புக் கூட்டத்தைப்போல மழைத் துளிகள் சிதறின; அவனது வேலைப்போல மின்னல் ஒளிவிட்டது. அவனுடைய வள்ளன்மையைப் போல மேகங்கள் மழைபெய்தன; அவனுடைய படை எங்கும் நிறைந்ததுபோல வெள்ளம் எங்கும் பரந்து வயல்களிற் புகுந்தது; வையையில் வெள்ளம் மிக்கது.

அப்போது நீர் விளையாட்டிற்கேற்ற அணிகளுடன் மகளிரும் மைந்தரும் மதுரையிலிருந்து புறப்பட்டனர். பத்துவகைத்துவர் களையும், புகைக்கப்படும் பொருள்களையும், சந்தனத்தையும் நீர்வீசு கருவிகளையும், கள்ளையும், பூந்துகில்களையும் பலர் ஏந்திக் கொண்டு பின் தொடர்ந்தனர். மைந்தர்களும் மகளிரும், இவர்கள் செய்த தவப்பயன் பெரிதென்று கண்டார் கூறும்படி வையைக்கரையில் நெருங்கினர். அம்மகளிரால் வையை அழகுபெற்றதோ, வையை வெள்ளத்தால் அவர் அழகு பெற்றனரோ என்பதைத் தேர்தல் அரிது. அவ்விரு திறத்தாரையும் கரையையும் வையையையும் சேர்கின்ற அழகு தேர்தற்கு அரிது, முழவின் ஒலிக்கு எதிரே இடிமாறாக முழங்கியது ; வீணை ஒலிக்க அதனெதிரிலே பூஞ்சினைகளில் வண்டினங்கள் ஒலித்தன; குழலோசை உண்டாக அதற்கு மாறாகத் தாதை ஊதுகின்ற தும்பி ஒலித்தது. காற்றாகிய நட்டுவன் பூங்கொடியாகிய விறலியை ஆடச்செய்தான். இங்ஙனம் தம்முள் மாறுகொள்ளும் நிகழ்ச்சிகள் வையைக்கண்ணுள்ள திருமருத முன்றுறையில் நிகழ்ந்தன.

# பரிபாடற்றிரட்டின் பொருட்சுருக்கம்

## 1. திருமால்

மேகங்கள் மழைபொழிய அந்நீர் மலைகளினின்று இழிந்து மதுரையிலுள்ளார் எதிர்கொள்ளும்படி வருகின்ற துறையினிடத்தே பொருந்திய இருந்தையூரில் எழுந்தருளியிருக்கும் திருமாலே ! நின் திருவடியைத் தொழுது பரவுகின்றோம்.

நீ எழுந்தருளியிருக்கும் இடத்தில் ஒருசார் மணியின் நிறங் கொண்ட மலை உள்ளது; அம்மலையில் வேங்கை, மரா, மகிழ், அசோகம் முதலியன ஓங்கி வளர்ந்திருக்கின்றன.

வேறொருபால் ஆகாயத்தில் நட்சத்திரங்கள் இருத்தலைப்போலப் பல மீன்கள் பரந்துள்ள அழகு தங்கும் கயம் உள்ளது; அதன்கண் தண்ணறுந் தாமரைப் பூவினிடையிடையே உள்ள போதுகளில் வண்டுகள் முழங்கும்.

ஒருசார் திருமகளும் விரும்பும் வயல்கள் உள்ளன.; அங்கே வெள்ளத்தின் ஒலிக்கு எதிரே உழவுக்குரிய ஓசையைச் செய்து திரிபவர்களும் ஆரவாரித்து நாற்று நடுபவர்களும் கூடியிருக்கின்றனர்.

ஒருசார் நகரம் உள்ளது; அங்கே ஒருபால் தருமத்தோடு வேதத்தாற் சொல்லப்படும் தவத்தை முடித்துப் புகழ் நிலைத்து நிற்ப விளங்குகின்றவர்களும் தம் நிலையினின்றுந் திரியாதவர்களும் ஆகிய அந்தணர் உள்ளார். அந்நகரில் ஒரு பக்கத்தில் உண்ணும் பொருள்கள், பூசும் பொருள்கள், பூண்பன, உடுப்பவை,மண்ணுவன, மணி, பொன், மலைப்பண்டங்கள், கடற்பண்டங்கள் முதலியவற்றை விற்கும் வணிகருக்குரிய வீதி உள்ளது. மென்புலத்திலும் வன்புலத்திலும் வேளாண்மை செய்யும் களமரும் உழவரும் உள்ள வீதி ஒரு சார் ; இவற்றோடு நல்லவாகிய இன்பங்கள் நன்கு கூடப் பெற்றன.

அந்நகரத்தின்கண், நல்வினையின் பயனைத் துய்க்கும் துறக்கம் போல, இரண்டு படப் பொறியை யணிந்த வரைகெழு செல்வனது (ஆதிசேடனது) திருக்கோயில் விளங்குகின்றது. அக்கோயிலின் கண்ணே, மகளிரும், மைந்தரும் இளைஞரும், முதியரும் குழுமி, நைவேத்தியத்தையும் மலர்ச்செப்பையும் தூபத்தையும் ஏந்தி இடையொழிவின்றி நெருங்கி வழிபடுவர்.

அப்பூமுடிநாகர் திருக்கோயிலில் வண்டும் தும்பியும் யாழைப் போல முரலும் ; மதயானை மேகத்தைப்போல முழங்கும்; அருவி யிசையும் முழவொலியும் ஒருங்கே ஆர்க்கும்; மகளிரும் மைந்தரும் கூடிச்செய்யும் ஆடலும் பாடலும்தோன்றும்; இத்தகையனவும் இவைபோல்வன பிறவும் அங்கே பொருந்தும்.

வரைவாய் தழுவிய கல் சேர் கிடக்கைக் குளவாயமர்ந்தான் திருக்கோயிலில் மகளிர் மைந்தரோடு வந்து இறைஞ்சுவர். இருளும் பிணியும் நீங்க நல்லவையெல்லாம் அங்கே பொருந்தும்.

கடலைக் கடைந்த காலத்தில் மலையைக் கடலில் நட்டு அவுணரும் அமரருமாகிய இருதிறத்தினரும் அமுதுகடைவதற்கு நாணாகியிருந்தவனும் ஆதிசேடனே; வன்மையெல்லாம் பூண்டவனும் அவனே; உலகத்தைத் தன் தலையில் ஆபரணத்தைப்போலத் தாங்கினவனும் அவனே; விடைப்பாகராகிய சிவபெருமான் திரிபுரத்தை அழித்த காலத்தில் மேருமலையாகிய வில்லுக்கு நாணாக இருந்து புகழ்தந்தவனும் அவனே.

அத்தகைய சிறப்பையும் ஆயிரம் திருமுடிகளையுமுடைய ஆதிசேடனை வணங்கித் திருமாலை ஏத்தி யாமெல்லாம் எம் சுற்றத்தோடு நின்னைப் பிரியாது வழிபடும்பொருட்டுப் பரவுகின்றேம்; அருள்புரிவாயாக.

## 2. வையை

பெரிய நிலம் தோன்றாமல் மிக்க மழைபொழிந்ததனால் வையை வெள்ளத்தைப்பெற்று மதுரைமாநகர்க்கு விரைந்து வந்தது. அவ்வையையானது நீரை அலங்காரமாகக் கொண்டதென்று அதனை விரும்பி மதுரையிலுள்ளார் உவகை மிக்கு நீர்விளையாட்டிற்குரிய அணிகளை மேற்கொண்டனர்.

தாரையும் கண்ணியையும், புகையையும், ஆடையையும் சிலர் எடுத்துக்கொண்டனர்; சிலர் தம் கூந்தலில் நெய்யணிந்தனர்; யானைகளின்மேற் சிலர் ஏறினர்; இங்ஙனம் தளிரியலையுடைய மகளிர் சென்றனர். அவரையன்றிச் சிலர் குதிரைமேற் செல்வார்; வண்டியையும் தேரையும் அமைப்பார்; போர்வையால் தம்மை மூடுவார்; ஊடுவார்; ஊடலொழிப்பார்; ஊடலுணர்வார்; ஆடுவார்; பாடுவார்; ஆரவாரம் செய்வார்; சிரிப்பார்; சிரித்து ஓடுவார்; ஓடித்தளர்வார்; போனவர்களைத் தேடுவார்; இங்ஙனம் கற்றாரும் கல்லாதவரும் இழிந்தவர்களும் கணவரும் கணவருக்கு மாறாக

நடவாத பெண்டிரும் பாண்டியனும் மதுரையிலுள்ளார் பிறரும் வையைத் துறையை அடைந்தனர்.

வையையாற்றில் மகளிரும் மைந்தரும் பலவகையாக நீரில்விளையாடினர். அவர்கள் அணிந்திருந்த மாலைகளும் பூசிய பொருள்களும் அவ்வாற்றில் நிறைந்தன. அதனால் ஈக்கள் பாய்கின்ற கள்ளை இவ்வையை கொண்டதென்றும் மைந்தரும் மகளிரும் கொண்ட வாசனைப் பொருள்களின் மணத்தை வீசியதென்றும் கருதி அந்தணர்கள் அதன்கண் நீராடுதலை நீங்கினர். தேனைப் பொருந்தி வழுவழுப்புற்றதென்று வாய்பூசாமலும் அவர் ஒழிந்தனர்.

இத்தகைய திருமருதமுன்றுறைக்கண் பாணர்கள் குறுகி மருதப்பண்ணைப்பாடினர். அவர்கள் பாடப்பாட ஆடியும் ஊடியும் உணர்ந்தும் கூடியும் மகிழ்ந்தும் தேடியும் சிதைந்தும் சூடியும் தொழுதும் மகளிரும் மைந்தரும் விளையாடும் வையை எச்சிலாயிற்று.

சந்தனமும் தாரும் கோதையும் சுண்ணமும் கூந்தலிலிருந்தும் குடுமியினின்றும் சோர்ந்த பூவும் நிறைந்திருத்தலா ல் இவ்வையை யாற்றில் நீரின்நிறம் தோன்றவில்லை.

மஞ்சனக்குங்குமக் கலங்கல் வழிந்த நீராதலின் வையைநீர் தூயதன்றாயிற்று.

இவ்வாறு பாண்டியன் மதுரைமாநகரத்தில் உள்ளாரோடு வையையில் நீராடியது ஆகாய கங்கையின்கண் இந்திரன் நீராடியதை ஒத்தது.

❖ ❖ ❖

## இந்நூலாலும் உரையாலும் தெரிந்த விசேடச்செய்திகள்

அணிகள் :- ஆரப்பூண், ஆழிமோதிரம், இருவடமேகலை, எண்வடக் காஞ்சி, கட்டுவடம், கடிப்பு, கழல், காஞ்சியணி, கால் மோதிரம், காழ், காற்சிலம்பு, குழை, கொக்குவாய், சுடுபொன், செறிக்கும் தோள்வளை, தலைக்கோலம், தலைக்கோல முத்து, தலைப்பாளை, திருக்கோவை, தோள்வளை, நாளணி, நித்தில அரிச்சிலம்பு, நித்தில மதாணி, பவழ மாலை, பவழ வளை, பொலங்கலம், பொற்பூ, பொன் மாலை, மகர குண்டலம், மகர வலயம், மத்தக நித்திலம், மதாணி, மார்பின் வடம், முச்சி, முஞ்சம், முத்தணி, மேகலை வகை, மேகலை வடங்களின் நூல், வளை.

ஆயுதங்கள்:- அம்பறாத்தூணி, குந்தம், செறியிலையீட்டி, பாராவளை, பொலம்படை, மத்திகை, வாள், வாளிகள்.

உடைமுதலியன:- குடை, கொண்டை-கூந்தல் முடி, திலகம், துகிலிற் பூத்தொழில், துகிலினுள் மேகலை, தொய்யிற் கரும்பு, தொய்யிற் கொடி, புட்டகம்-நீராடற்குரிய புடைவை.

ஊர்திகள்:-அத்திரி, களிறு, சிவிகை, தண்டு ஆர் சிவிகை.

கதைகள்:- அகலிகை கல்லுருவானமை, அமரர்க் கமுதருத்தியது, அவுணர் கடலிற்பாய்ந்தது, அன்னச்சேவலாகித் திருமால் மழையை வற்றச் செய்தது, இந்திரன் இமயத்தைக் காத்தல், இந்திரன் சாபமேற்றது, இறைவன் திரிபுரத்தைச் செற்றது, உருப்பசி குதிரைப் பெட்டையானமை, கடல் கடைந்தது, கருடன் வினதை சிறைமீட்டது, திருமால் கருடன் செருக்கை அடக்கியது, தேவமருத்துவரின் பிறப்பு வரலாறு, பிரமன் கங்கையைப் பூமிக்கு அளித்தது.

குன்றங்கள்:- இமயம், குருகெனப் பெயர்பெற்ற மால்வரை, சூருறை குன்று, சையமலை, சோலைமலை, திருமால் குன்றம், திருமாலிருஞ்சோலை (இருங்குன்று), திருவரை (அழகர் மலை), நெடுங்குன்றம், பரங்குன்று, மேருமலை.

சபைவகைகள் முதலியன:- அம்பலம், அரங்கு, எழிலம்பலம், எழுத்து நிலைமண்டபம், சிரமச்சாலை-ஆயுதம் பயிலும் இடம்.

சாதிகள்:- அந்தணர், உழவர், காதற்பரத்தை, காருகப்புண்ணிய வணிகர், கீழோர், குறிஞ்சி நில மாக்கள், குன்றவர், கொடிச்சியர், கொடிச்சென்னியர்-பாணர், பாண்சாதி, யாழ்ப்பாணர், விலைக் கணிகையர், வேளாளர்.

சிலசெய்திகள்:- யானைச் செவிக்கவரி, விலாப்புடை விசிப்ப மாந்தல்.

சிவபிரான்:- திருவாதிரைக்குத் தெய்வம் சிவபிரான்.

சூளுறல் வகைகள்:- குறவன் மகளாணை, குன்றத்தடி தொடல், குன்றத்தாணை, குன்றின் தலையைத் தொட்டுச் சூளுறல், கையால் தலைதொடல்.

தமிழ்:- தண்டமிழ் வேலி, தமிழ்க் குடிகள், தமிழது சிறப்பு, தமிழ் நாட்டகம்.

திருநாள் முதலியன:- ஆதிரைநாள் விழா, ஆவணி அவிட்டம்.

திருமால், பலதேவர்:- அநிருத்தன், அலப்படை, அறுகை நெடுவேள், ஆதிவராகம், ஆயிரந்தலை, ஆழிப்படை, இருந்த வளமுடையார், இருந்தையூர், உவணக்கொடி, கண்ணபிரான், காமக் கடவுள், கேழற் கோலம், சங்க சக்கரம், சங்கருடணன், செங்கட்காரி-வாசுதேவன், திருமால் கடம்பு முதலியவற்றில் வசித்தல், திருமால் வராகம் ஆனமை, திருமாலின் அகலத்தைத் தொழுதல் திருமாலின் உந்தி, திருமாலின் கொடி, திருமாலின் கூறாகிய பலதேவர், திருமாலின் தார், திருமாலின் நிறம், திருமாலின் பல கைகள், திருமாலின் பொறை, திருமாலின் மணிமுடி, திருமாலின் மேனி, திருமாலுக்கு நாஞ்சிற் படை, திருமாலுக்கு வெட்சியும் துழாயும் மாலை, நம்பி மூத்தபிரான், நாஞ்சிற் கொடி, நால்வகை வியூகம், பலதேவன், பனைக் கொடி, பாஞ்சசன்னியம், மாயோன், மாயோனும் முன்னோனும்.

தொகைப் பெயர்கள்:-அந்தக்கரணம் மூன்று, அட்டமூர்த்தம், அட்டவசுக்கள், அறுவர் தெய்வமுனிவர், ஆகாய முதல் பூதங்கள் ஐந்து, ஆதித்தர் பன்னிருவர், ஆறிருகை, ஆறு பொறி, இந்திரன் முதலிய எண்மர், இருபத்தைந்து தத்துவம், உருத்திரர் பதினொருவர், எழுமகளிர், கன்மேந்திரியம் ஐந்து, கோள்கள் ஏழு, சித்தபரிகருமம் நான்கு, ஞானேந்திரியம் ஐந்து, தாமா இருவர், பத்துத்துவர், பெரும்பெயரிருவர், முப்பத்து மூவர், மூவகை இராசி, வியூகம் நான்கு.

தொழில்:- கிடையால் வாளும் குந்தமும் செய்தல்.

நீர்நிலைகள்:-உடைகுளம், கடல், கயம்.

நீர்வாழ்வன:-இறவு, சங்கு, சினைவளர் வாளை, மீன், வாளை.

நீரிற் செலுத்தும் ஊர்திகள் முதலியன:- அம்பி, அரக்கு நீர் வட்டு, இதை, எக்குவ, எறிவன, ஓடம், கிடைத்தேர், கிடைமாடம், சிவிறி, சென்மரம்-புணை, திமில், துருத்தி, நீர்க்கோடு, நீர்வீசு கருவி, நீர்வீசு கொம்பு, நெட்டித்தேர், நெய்ச்சிவிறி (புழுகு), பள்ளியோட வையம், புனைந்த தெப்பம், மிதவை, மூங்கிற்புணை, வட்டு, வெண்கிடை மிதவை, வெள்ளக்கால்.

பறவைகள்:- கிரௌஞ்சம், கிளி, குயிலினம், குருகு, குருவி, கோகிலம், கோழி (கொடி), சக்கர வாளம், செவ்வாயுவணம், சேவல் (கொடி), தாதுண் பறவை, தோகை, மகன்றில் (நீர்ப் பறவை), மயில்.

பாண்டியன்:- சக்கரவர்த்தி, தென்னவன், பஞ்சவன், மாறன், வழுதி.

பானவகை, மதுவகை:- அடுநறா, அமிர்த பானம், கள், காம பானம், சூடா நறவு, சூர் நறா, நறவு, பழத்தேனாற் செய்த தேறல், மதுபானம்.

பூமாலைவகை:- அதிரற் கண்ணி, இணைப்பிணையல், இலைக்கோதை, இலைமாலை, ஒலியல், கண்ணி, தாமம், தார், தூக்கிக் கட்டுமாலை, நெய்தல் மாலை, படலை மாலை, பிணைத்த மாலை, புகை சுற்றிய தார், மாலையணிய விலைதருதல்.

போகப்பொருள், செய்தி முதலியன:-கத்தூரிக் குழம்பு, கபோலத்திலும் நகத்திலும் செம்பஞ்சி எழுதுதல், கலவைக் குழம்பு, கள்ளின் களிப்பை மறைத்தல், காதலர் தோளைப் புணையாகக் கொள்ளுதல், காற்று மணத்தோடு திரிதல், குங்குமக் குழம்பு, குவளைத்தண்டால் கையை அணிதல், குவளையை மகளிர் காதிற் செருகுதல், குளிர் வாடை, கேள்வன் உருட்டும் துடிக்கிசைய ஆடல், சாந்தம்மி, சாந்தாற்றி, சுண்ணம், செம்பஞ்சுக் குழம்பைக் கன்னத்தில் எழுதுதல், தகரச்சாந்து, திலகம், பஞ்சவாசம், பனி ஆவி.

மரபுகள் முதலியன:-எருது பெயர் சொல்லி அழைக்கப்படுதல், களிற்றில் ஆடவர் ஏறல், கன்னிப் பருவத்துத் தைந்நீராடல், குழலில் துகில்சுற்றி முறுக்குதல், செவித்தார், திசை நோக்கித் தொழுதல், துடிக்கு இசைய மகளிர் ஆடல், தோள்வளையை ஆழியாகக் கொண்டு சுழற்றல், தோற்றவர் வேறுவடிவம் கொள்ளல்.

மரவகை முதலியன:- அகரு (அகில்), அசோகு (பிண்டி), ஆல், இலவம், இறலி, ஏழிலைப்பாலை, கடம்பு, கரும்பு, கவிர், குருக்கத்தி, சுரபுன்னை, செயலை, ஞெமை, தேவதாரம், நாகமரம்,

பனை, பாதிரி, மகிழமரம், மராமரம், மூங்கில், வஞ்சி, வெண்கடம்பு, வேங்கை.

மலர்வகை:- அசோகம்பூ, அதிரல், ஆம்பல், இருவேரி, எருவை, கணவிரி, கல்லாரம், கழுநீர்மலர், காந்தட் குலை, காந்தள், காயாம்பூ, குல்லை, குவளை, குவளைத்தண்டு, குளிரி-கல்லாரப்பூ, கொட்டை (தாமரை), கோங்கு, சினைப்பூ, ஞாழல், தாமரை, தும்பை, துழாய், தோன்றிச் செம்பூ, நரந்தப்புல், நறவம்பூ, நாவற்பூ, நீலமலர், நெய்தற்பூ, பச்சிலை, பூதர் அருச்சனைப்பூ, மல்லிகை, மாலையில் நெய்தல், மாலை மலர்பூ, மௌவல், வெட்சி.

வாத்தியவகை:- எழுதுளை வங்கியம், ஐந்துளை வங்கியம், கலப்பை, கிணை, கிம்புரி (மடற்கிம்புரி), குழல் (வங்கியம்), தடாரி, தண்ணுமை, துடி, பறை, பெரும்பறை, மணமுரசு, முரசு, முழவு.

விலங்குகள்:- ஆண்பன்றி, எருது, களிற்றைக் கண்டு பிடி மயங்கல், குதிரை, கூங்கை மதமா, கேழல், கைம்மான், படுமணி யானை, பன்றி, பாண்டி (எருது), பிடி, பிடியைக் கண்டு களிறு மாலுறல், புலி, புள்ளியன்மா, மணியணி வேசரி, யானையும் கோழியும் விலங்கும் ஒத்த அன்பினவாதல், வெள்யாடு.

வெறியாட்டு:-தம் கேளிர் வருவதற்கு மகளிர் முருகனைப் பரவுதல், பிரதிமை பூசை, வெறிப்பாட்டு, வெறியாட்டு, வேள்வி.

வையை சம்பந்தமானவை:- ஆற்றிடைக்குறை, ஆறு மலர் போர்த்து வருதல், ஊற்றுநீர், கழுநீர், கையுறை, செவ்வணி, தடங்கள், தடாகம், தணிபுனல், தமிழ் வையை, திருமருத முன்றுறை, தைந் நீராடல், நீர் விழவணி யின்பம், பிணை மரச்சட்டம், பெருவாரி, மலர்த்துறை.

# பாடினோர் வரலாறு

1. ஆசிரியன் நல்லந்துவனார்:— இவர் செய்தனவாக இப்பகுதியில் நான்கு பாடல்கள் (6, 8, 11, 20) உள்ளன. அவற்றுள் எட்டாவது முருகக்கடவுளுக்கும் 6, 11, 20 வையைக்கும் உரியவை.

எட்டாம் பாடலில் திரிமூர்த்திகளும் ஏனைத்தேவர்களும் முருகக்கடவுளைத் தரிசித்தற்பொருட்டு வந்திருத்தலால் திருப்பரங்குன்றம் இமயமலையையும் அதிலுள்ள சுனை இமயமலையிலுள்ள சரவணப் பொய்கையையும் ஒக்குமென்றும் ஆடவரும் மகளிரும் மகப்பேறு முதலிய பயன்களைக் கருதிப் பலவகைக் காணிக்கைகளுடன் அக்குன்றத்தைச் சார்ந்து அவரை வணங்கிப் பலவகை வழிபாடுகளைச் செய்து வேண்டிய வரங்களைப் பெற்றுய்கின்றனரென்றும் கூறுதன் முகமாக அக்குன்றத்தின் பெருமையையும் அதிற் கடம்பமரத்தின் அடியிலேகோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் முருகக்கடவுளின் திருவருட் சிறப்பையும் பாராட்டியிருக்கும் பகுதியும், அக்குன்றின் வாழ்வையே தம்முடைய வாழ்வாகக் கருதி உள்ளமுருகி இவர் அதனை வாழ்த்தியிருக்கும் பகுதியும், பிறவும் அறிந்து இன்புறற் பாலன. இவற்றை உட்கொண்டே, "சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேற், சீர்மிகு முருகன் றண்பரங் குன்றத் தந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை, யின்றீம் பைஞ்சுனை" (அகநா. 59) என மதுரை மருதனிளநாகனார் கூறினர்போலும்.

மற்றைப் பாடல்களில் மழைவளமும் வையைப் பெருக்கும் புதுநீர் விழவின் பொருட்டுப் பலர் தத்தமக்கேற்ற ஊர்திகளிலேறிக் கொண்டு வையைக்குக் கையுறைப் பொருள்களாக ஏந்திச்செல்லும் பொன்மீன் முதலியனவும் நீர்விளையாட்டிற்குக் கொண்டுசெல்லும் கருவிகளும் தெப்பவகைகளும் சனநெருக்கமும் நீர்விளையாட்டும் பல வகையாக ஆணையிடும் வழக்கும் பிறவும் கூறப்பெற்றுள்ளன. பரிபாடலைப்பெற்ற பெருமை வாய்ந்ததென 11-ஆம் பாடலில் இவர் வையையாற்றைச் சிறப்பித்திருத்தலும் அது *கடலொடு கலத்தலை

* ஸ்ரீ ஸேதுஸம்ஸ்தானத்திற் கீழ்கடலோரத்தில் ஆற்றங்கரை யென்னும் ஊரிலுள்ள சத்திரம் வையைநதி கடலொடு கலக்குந்துறையில் ஸ்நானஞ்செய்ய வருவோர்க்குப் பண்டைக்காலத்தில் அமைக்கப்பெற்றதென்று கேள்வியுண்டு; மதுரை ஜில்லா

20-ஆம் பாடலில் உவமை முகத்தால் தெரிவித்திருத்தலும் அறிதற்பாலன. அதனைத் தமிழ் வையையென்றும் தென்னவன் வையையென்றும் கூறுகிறார்.

இவர் கலித்தொகையில் நெய்தற்கலியை இயற்றியவர் ; அந்நூலில் ஐந்திணைக்குமுரிய கலிப்பாக்களைக் கோத்தவர் ; இவை,

*"பெருங்கடுங்கோன் பாலை குறிஞ்சி கபிலன்*
*மருதனிள நாகன் மருதம் - அருஞ்சோழன்*
*நல்லுத் திரன்முல்லை நல்லந் துவனெய்தல்*
*கல்விவலார் கண்ட கலி"*

என்னும் வெண்பாவாலும், "புரிவுண்ட" (கலி. 142) என்பதன் உரையிலும், "உரிப்பொருளல்லன" (தொல். அகத். சூ. 13) என்பத னுரையிலும் நச்சினார்க்கினியரெழுதியுள்ள வாக்கியங்களாலும் விளங்குகின்றன. ஆசிரியனென்பது கல்விச் சிறப்பாற் பெற்றபெயர்.

திருவள்ளுவமாலையிலுள்ள "சாற்றிய பல்கலையும்" என்னும் வெண்பாவை இயற்றியவரும் இவரென்பர். மதுரை, திருப்பரங்குன்றம், இவற்றின் இடைவழி, வையையாறு, திருமருதந்துறையென்பவற்றின் இயற்கைகளையும் ஆங்காங்கு நிகழ்ந்த பலவகைச் செய்திகளையும் விளங்கக்கூறி யிருத்தலால் இவருடைய ஊர் மதுரையென்றும், "கடன்முகந்து கொண்ட" (அகநா. 43) என்பதை இயற்றியவரான மதுரையாசிரியன்நல்லந்துவனாரென்பவர் இவரேயென்றும் தோற்றுகின்றது.

2. இளம்பெருவழுதியார்: - திருமாலுக்குரிய 15-ஆம் பாடலை இயற்றியவர் இவர். இப்பாட்டில் எல்லா மலைகளுள்ளும் இருங்குன்றம் (திருமாலிருஞ்சோலைமலை) சிறந்ததென்று எடுத்துக் காட்டியிருக்கும் அழகும், சிலம்பாற்றால் அழகு பெற்றுள்ள அக்குன்றத்தின் வளமும் விரும்பி அதிலெழுந்தருளியிருக்கும் * கண்ணபிரானும் பலதேவரும் உருவத்தால் இருவராயினும்

சரித்திரத்தாலும் இது தெரிகின்றது. திருவாதவூரர் புராணமுடையாரும் பரஞ்சோதிமுனிவரும் வையை கடலொடு கலவாமைக்குக் காரணங் கற்பித்தது, கால வடைவில் பாய்ச்சல் மிகுதியால், அது கடலொடு கலத்தல் தவிர்ந்ததை நோக்கிப்போலும்.

* கண்ணபிரானையும் பலதேவரையும் இங்ஙனஞ் சேர்த்து ஒருங்கு பாராட்டி யிருத்தலை இந்நூலிலுள்ள வேறு பாடல்களாலும் அறியலாகும்; "வானுற வோங்கிய வயங்கொளிர் பனைக்கொடிப், பானிற வண்ணன்போற் பழிதீர்ந்த வெள்ளையும்,

தொழிலால் ஒருவரே யென்பதற்குக் கூறியுள்ள உவமைநயமும், அக்குன்றம் திருமால் போல்வது, தன்னைக் கண்டோருடைய மயக்கத்தை யறுப்பது, ஆதலால், சென்றேனும் கண்டேனும் திசைநோக்கியேனும் குடும்பத்துடன் வழிபடுமினென்று உலகத்தவரை நோக்கிக் கூறியிருக்கும் இவரது அன்புடைமையும், அக்குன்றத்தின் அடியுறைதலே தமக்கு வேண்டுமென்று இவர் முடித்திருத்தலும் அறிந்து இன்புறுதற்குரியன. இவர் பாண்டியர் குடியிற் பிறந்தவரென்பதை வழுதியாரென்ற பெயர் புலப்படுத்துகின்றது. இளம்பிராயத்திலேயே பேரறிவினராக இருந்ததுபற்றி இவர் இப்பெயர் பெற்றனரென்று தோற்றுகின்றது ; இப்பாடலே இவரது பேரறிவிற்குப் போதிய சான்றாகும். புறநானூற்றுச் செய்யுட்களைப்பாடிய புலவர்களுள் கடலுண்மாய்ந்த இளம்பெருவழுதி யென்று ஒருவருளர்; அவர் பாடிய "உண்டாலம்ம" என்னும் செய்யுளும் இப்பாட்டும் பரோபகாரச் செய்தி முதலிய கருத்துக்களில் ஒத்திருத்தலானும் பெயரொற்றுமையானும் அவரும் இவரும் ஒருவரென்றே கொள்ளுதல் முறையாகும். 'கடலுண்மாய்ந்த' என்னும் அடைமொழி, துஞ்சிய பின்பு இவருக்கு அமைக்கப்பட்டதென்பது சொல்லாமலே விளங்கும், நற்றிணைப்புலவர் வரிசையிலும் பழைய இலக்கணவுரைகளின் உதாரணங்களுள்ளும் பெருவழுதி யென்னும் பெயர் காணப்படுகின்றது; ஆயினும் இளமையென்னும்

---

பொருமுரண் மேம்பட்ட பொலம்புனை புகழ்நேமித், திருமறு மார்பன்போற் றிறல்சான்ற காரியும்", "வள்ளுருணேமியான் வாய்வைத்த வளைபோலத், தெள்ளிதின் விளங்குஞ்சுரிநெற்றிக் காரியு, மொருகுழை யவன்மார்பி லொண்டார்போ லொளிமிகப் பொருவறப் பொருந்திய செம்மறு வெள்ளையும்" (கலி. 104, 105); கடல்வளர் புரிவளை புரையு மேனி, யடல்வெந் நாஞ்சிற் பனைக்கொடியோனு, மண்ணுறு திருமணி புரையு மேனி, விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனும்...வலியொத் தீயே வாலி யோனைப், புகழொத் தீயே யிகழுந ரடுநனை" (புறநா. 56), "மாயவனுந் தம்முனும் போலே மறிகடலுங் கானலுஞ்சேர் வெண்மணலுங் காணாயோ" (திணைமா. 58) என்பவற்றாலும் இதனையுணர்க. "புகர்வெள்ளை நாகர்தங் கோட்டம்" (சிலப் 9:10) என்பதனாற் பலதேவர்க்குத் திருக்கோயிலிருந்தமை தெரிகின்றது. சோலைமலையிற் பலதேவர் திருவுருவம் இக்காலத்திற் காணப்படவில்லை.

அடைமொழியின்மையால், அப்பெயரையுடையார்வேறு இவர் வேறென்று கொள்ளவேண்டும்.

3. கடுவன் இளவெயினனார்:- இவர் செய்த பாடல்கள் 3, 4, 5; திருமாலையும் முருகக்கடவுளையும் வாழ்த்தியிருத்தலால் இவர் அவ்விருவரிடத்தும் அன்புடையவரென்று தெரிகிறது. மூன்றாம் நான்காம் பாடல்களில் திருமாலைத் துதித்திருக்கும் பகுதிகளும் அவருடைய நால்வகைவியூகம், வராக நரசிங்க வாமனாவதாரச் செயல்கள், அவர் அன்னமாகத் தோன்றிச் செய்த அரிய செயல், வேதத்தால் அவர் பாராட்டப்படும் வகை, யோகிகளாலே தியானிக்கப்படும் முறை, கருடனும் பனை நாஞ்சில் யானை ஆகிய இவைகளும் அவருக்குக் கொடிகளாகவுள்ளன வென்பது, ஆல் கடம்பு ஆற்றிடைக்குறை குன்றம் இவற்றில் அவர் வேறுவேறு பெயரோடு எழுந்தருளியிருத்தல், கருடனது பெருமை, அவனுக்குண்டாகிய செருக்கை அவர் அடக்கினமை, தத்துவத்தின் தோற்றவொடுக்கங்கள் முதலியவற்றை விதந்து கூறியிருக்கும் பகுதிகளும் மிக்க இனிமை பயப்பன. முருகக்கடவுளுடைய திருவவதார வரலாறு, அவதரித்தஅன்றே இந்திரன்முதலிய தேவர்களைவென்று அவர்கள் அளித்த மயில் கோழி முதலிய வற்றை அவர் பெற்றமை, வேற்படையாற் கிரௌஞ்சத்தையுடைத்து வழியுண்டாக்கினமை, பிணிமுகமென்னும் யானையை ஊர்ந்துசென்று கடலிற் சூர்மாவைத் தடிந்தமை ஆகிய இவைகளும், வெறியாட்டுச் செயல் சிவபிரான் திரிபுரதகனஞ் செய்த சரிதம் ஆகிய இவைகளும் ஐந்தாம்பாட்டில் கூறப் பெற்றுள்ளன. "எமக்கு வேண்டுவன நுகர் பொருளும் போகமுமல்ல; அருளும் அன்பும் அறனுமே" என்று வேண்டிக் கொண்டிருத்தல் இவருடைய பேரன்பைத் தெரிவிக்கின்றது. இவர் பெயர் ஒரு பிரதியிற் கடுவனிளவெயினாரென்றுங் காணப்படுகிறது.

4. கரும்பிள்ளைப் பூதனார்:- இவர் வையைக்குரியதாகிய 10-ஆம் பாடலை இயற்றியவர்; இப்பாடலிலுள்ள புதுநீர் விழாச் சிறப்பு மிக்க இன்பமளிப்பது. நீர்விளையாட்டின் முறை இதனால் நன்கு அறியலாகும். இதில் வந்துள்ள உவமைகள் யாவும் சிறந்தவை; நெருக்கத்தால் மெல்லச் செல்லுமாந்தர் நடைக்கு வாச்சியத்தின் விளம் பித நடையை உவமை கூறியிருத்தலின் இவரது இசைப் பயிற்சியும் வையையின் பேருதவிக்குப் பாண்டியன் கொடையை உவமை

கூறியிருத்தலின் அவனிடம் இவருக்கு இருந்த அன்பும் வெளியாகின்றன.

5. கீரந்தையார் :- 2-ஆம் பாடலாகிய திருமால்வாழ்த்து இவரால் இயற்றப்பெற்றது ; இதில் ஐம்பூத ஊழிகள், நெய்தல் முதலிய பேரெண்கள், திருமாலின் வியாபகம், அவர் பலதேவராகவும் கண்ணபிரானாகவும் பூவராக மூர்த்தியாகவும் ஆனமை, தேவர்களுக்கு அவர் அமுதளித்தது, வேள்வியில் அவருக்குள்ள சம்பந்தம் ஆகிய இவைகளும் பிறவும் கூறப்பெற்றுள்ளன. அவருடைய திருமேனி முதலியவற்றிற்கு இவ்வாசிரியர் கூறிய உவமை, அவரது திருமார்பைப் பாராட்டியிருத்தல் முதலியவைகள் வியக்கற்பாலன. திருவள்ளுவமாலையிலுள்ள, "தப்பா முதற்பாவால்" என்னுஞ் செய்யுளை இயற்றியவரும் இவரேயென்பர். சிலப்பதிகாரம், 23-ஆம் காதை, 42-ஆம் அடியில் கீரந்தையென்ற பெயரொன்று வந்துள்ளது. அப்பெயரையுடையாரும் இவரும் ஒருவரோ வேறோ தெரியவில்லை.

6. குன்றம்பூதனார்:- இவர் முருகக்கடவுள்பால் அன்புடையவர்; அவருக்குரிய 9, 18-ஆம் பாடல்களை இயற்றியவர். 9-ஆவதில், "நான்மறை விரித்து" என்பது முதலியவற்றாற் பாராட்டியிருக்குந் தமிழ்வழக்கு, தமிழ்மொழியின்கண் இவருக்குள்ள பேரன்பைப் புலப்படுத்தும். 18-ஆவது செய்யுளால் சூரனுடைய மாமரச் செய்தியும் திருப்பரங்குன்றத்துள்ள கோயிலின் பக்கத்தே சித்திரவம்பலம் உண்டென்பதும் தெரியவருகின்றன. குறிஞ்சித் திணைக்குரிய முதல், கரு, உரியென்ற முப்பொருள்களையும் செவ்வனே அமைத்து நயமுறக் கூறியிருத்தலை உற்று நோக்கும்பொழுது, இவர் அத்திணையைப் பாடுதலில் வல்லவரென்று தெரிகின்றது. * திருப்பரங்குன்றத்துள்ள சோலை சுனை அருவி காந்தள் தினை மயில் முதலியவற்றை வருணித்து, அக்குன்றம் இமயத்தையும் முருகக்கடவுளின் ஊர்தியாகிய யானையையுமொக்குமென்று இவர் கூறியிருப்பது பாராட்டற்பாலது. குன்றத்தை இங்ஙனம் அழகுறப் பாடியிருத்தலால் இவர் இப்பெயர்பெற்றனர் போலும்.

7. கேசவனார்: - இவர் முருகக்கடவுளுக்குரியதாகிய 14-ஆம் பாடலை இயற்றியவர் ; இப்பாடலில் திருப்பரங்குன்றத்துள்ள சுனை முதலியவற்றையும் கார்காலத்தையும் வருணித்திருத்தலும்

* இது குன்றமெனவும், குன்றெனவும் இந்நூலிலும் பிற நூல்களிலும் வழங்குகின்றது.

அங்கங்கே கூறிய உவமைகளும் முருகக்கடவுளை முன்னிலையாக்கித் துதித்திருக்கும் அருமையும் மிக்க இன்பம் பயக்கும். அவரை அடுத்தடுத்து வழிபடுவதன் பயன் மேன்மேலும் அவரை வழிபடுவதாகவே ஆகல் வேண்டுமென்று இதனிறுதியில் வேண்டுதல், அவர்பால் இவருக்குள்ள ஒப்புயர்வற்ற அன்பைப் புலப்படுத்துகின்றது. இசைச்செய்திகளை இவர் பலபடப் பாராட்டியிருக்கிறார் ; இப்பாடலுக்கு இசை வகுத்தவரும் இவரே.

8. நப்பண்ணனார் :- முருகக்கடவுளுக்குரியதாகிய 19-ஆம் பாடல் இவரால் இயற்றப்பெற்றது. திருப்பரங்குன்றத்தில் நிகழும் வள்ளியம்மையின் திருமணவிழாச் செய்தியும் முருகக்கடவுளைத் தரிசிக்கவிரும்பி மதுரையிலுள்ளார் நடந்தும் தத்தமக்குரிய ஊர்திகளில் ஏறியும் செல்லுதலும், அவர்களுடைய நெருக்கத்தால் தோன்றும் வழியின் காட்சியும், பாண்டியன் உரிமைமகளிரோடும் மந்திரிமார் முதலியவர்களோடும் வந்து அம்மலையின் மீதேறித் திருக்கோயிலை வலம்வருதலும்,தரிசிக்கவந்தவர்கள் அம்மலையில் நிகழ்த்தும் பலவகைச் செய்திகளும், ஆண்டுள்ள மண்டபத்து எழுதப்பெற்ற பழஞ்செய்திகளைப் புலப்படுத்தும் சித்திரவகைகளும், பலவகை மலர்களின் தோற்றமும், கொடியேற்றிய யானையை அலங்கரித்துப் பூசித்தலும், கன்னியரும் மணந்தமகளிரும் பயன்களைக்கருதி அந்த யானையின் கவளமிச்சிலை யுண்ணுதலும், முருகக்கடவுள் கடம்ப மரத்தின் அடியில் எழுந்தருளியிருத்தலும், பிறவும் இப்பாடலிற் கூறப்பெற்றுள்ளன. இதில் வந்துள்ள உவமைகள் மிக்க இன்பம் பயப்பவை. இவரது இயற்பெயர் பண்ணனாரென்பது; 'ந' என்பது சிறப்புப்பொருளைத் தருவதோரிடைச்சொல்.

9. நல்லச்சுதனார்:- முருகக்கடவுளுக்குரியதான 21-ஆம் பாடலை இயற்றியவர் இவர்; இப்பாட்டில் முருகக்கடவுள் ஊரும் யானை, அவர் தொடும் அடையற்செருப்பு, அவரது வேற்படை, அவர் அணிந்த கடப்பமாலை, திருப்பரங்குன்றம், அதை வழிபடும் மகளிருடைய பலவகைச் செயல்கள், அங்கே ஆடும் மயிலின் காட்சி, மகளிரும் மைந்தரும் சுனையில் நிகழ்த்தும் நீர்விளையாட்டு, பலவகை மணத்துடன் அங்கே தவழும் தென்றலின் இயல்பு, கேள்வருருட்டும் துடிச் சீர்க்கு இசையக் குன்றத்து மகளிராடல் ஆகிய இவைகளும், பிறவும் கூறப் பெற்றுள்ளன. திருப்பரங்குன்றம் யானையாக உருவகஞ் செய்யப் பெற்றிருக்கின்றது. முருகக்கடவுளுடைய அடியின் கீழும் திருப்பரங்குன்றத்தின் கீழும்

உறைதல் தமக்கு இயைய வேண்டுமென்று இவர் வேண்டுதல் அவர்பால் இவருக்குள்ள அன்பின் மிகுதியைக் காட்டுகின்றது. இந்நூலில் 16, 17, 18, 20-ஆம் பாடல்களுக்கு இசைவகுத்தவரும் இவரே. இவற்றால் இயலிசைகளில் இவர் வல்லுநரென்று தெரிகின்றது.

10. நல்லழுசியார்:- இவர் வையைக்குரியதாகிய 16-ஆம் பாடலையும் முருகக்கடவுளுக்குரியதான 17-ஆம் பாடலையும் இயற்றியவர். பதினாறாவதில் வையையினது கரை அதன் துறை அதன் கரைச்சோலை முதலியவற்றின் சிறப்பியல்பும், அதன் நீர்ப்பெருக்கும், அதில் நிகழ்ந்த நீர்விளையாட்டுச் செய்தியும், பதினேழாவதில் திருப்பரங்குன்றத்தில் முருகக்கடவு ளெழுந்தருளிய கடம்பமரத்தை அன்பர்கள் வந்து வழிபடுதலும், மாலைதோறும் அக்குன்றத்தின் அடியிலுறைவோர் விண்ணுலக இன்பத்தையும் விரும்பாரென்பதும், அதிலுள்ள பலவகை விசேடங்களும், மதுரையின் வளமும் செவ்வனே கூறப்பெற்றுள்ளன.

11. நல்லெழுனியார்:- இ வராற் பாடப்பெற்றது திருமாலுக்குரியதாகிய 13-ஆம் பாடல். இதில் திருமாலின் திருவுருவம் முதலியவற்றைப் பலபடப் பாராட்டியிருக்கும் பகுதிகளும் அவரைத் துதித்திருக்கும் பாகங்களும் அன்பர்களுடைய மனத்தை ஆநந்த வெள்ளத்தில் அழுத்தும். அதிகமானெடு மானஞ்சியின் பரம்பரையோர் பெயர்களில் 'எழுனி' என்பது விரவிவருதலால், இவர் அவன் பரம்பரையினரோவென்று நினைத்தற்கிடமுண்டு. இவர் பெயர் நல்லெழினியென்றும் வழங்கும்.

12. நல்வழுதியார்:- இவராற் பாடப்பெற்றது வையைக்குரிய தான 12-ஆம் பாடல். சையமலையிலிருந்து மரங்கள் பலவற்றை வையை அடித்துக்கொண்டு வருதல், அது மதுரையின் மதிலைப் பொருதல், அதிற் புதுநீர் பெருகி வருதலைக்கேட்ட மகளிர் தலைவர்களுடன் ஊர்திகளில் ஏறிச்செல்லல், அதுகண்ட பிறமகளிர் தம்முட்கூறுங் கூற்றுக்கள், சனங்களின் முழக்கமிகுதி, பலவகை வாச்சியவொலிகள், சென்றோர் தம்மவர்க்கு அங்கங்கே நிகழ்பவற்றை உவந்து காட்டிக் கூறல், நீர் விளையாட்டின் வகை முதலியன இதில் நன்றாகக் கூறப்பெற்றுள்ளன. வழுதியாரென்பது இவர் பாண்டியர் குடியிற் பிறந்தவரென்பதை அறிவிக்கின்றது.

13. மையோடக் கோவனார்:- இவர் வையைக்குரியதாகிய 7-ஆம் பாடலை இயற்றியவர். வையை பல பொருள்களை அடித்துக் கொண்டு பெருகிவருதற்குப் பாண்டியர்சேனை பகைமேற் செல்லுதலையும் அப்பெருக்கால் வேறுபட்ட இடங்களுக்கு அச்சேனையால் வேறுபட்ட பகைப்புலங்களையும் உவமை கூறியிருத்தலை நோக்கும்பொழுது இவர் இராசபத்தியுடையவ ரென்பது புலனாகும். இவர் கூறிய வையைப் பெருக்கின் செயல்களும், புனல்விளையாட்டுவகையும், திருமருத முன்றுறைச் சிறப்பும், பிறவும் மிக வியக்கற்பாலன. இவர் புனல் விளையாட்டிற்குக் கருவியாகிய ஓடத்தை எந்த வகையாகவோ புனைந்து கூறியதுபற்றி இப்பெயர் பெற்றிருக்கலாமென்று ஊகித்தற்கிடமுண்டு.

ஓஓஓ

# இசைவகுத்தோர் வரலாறு

1. கண்ணகனார்:- இவர் 21-ஆம் பாடலுக்கு இசை வகுத்தவர்; புறநானூற்றிலுள்ள 218-ஆம் செய்யுளியற்றியவரும் நற்றிணையில் 79-ஆம் செய்யுளியற்றியவரும் இவரே. இதனால், இவர் இயற்றமிழிலும் வல்லுநரென்று தெரிகின்றது.

2. கண்ணனாகனார்:- இவர் 5-ஆம் பாடலுக்கு இசை வகுத்தவர்.

3. கேசவனார்:- 14-ஆம் பாடலுக்கு இசைவகுத்தவர்; பிறவரலாற்றைப் பாடினோர் பெயரிற் காண்க.

4. நந்நாகனார்:- இவர் 12-ஆம் பாடலுக்கு இசை வகுத்தவர். நப்பண்ணனாரென்பதிற்போல 'ந' என்பது சிறப்புப் பொருளையுணர்த்தும்.

5. நல்லச்சுதனார்:- இவர் 16, 17, 18, 20-ஆம் பாடல்களுக்கு இசை வகுத்தவர்; பிற வரலாற்றைப் பாடினோர் பெயரிற் காண்க.

6. நன்னாகனார்:- இவர் 2-ஆம் பாட்டிற்கு இசைவகுத்தவர். புறநானூற்று ஆசிரியர்களுள் புறத்திணை நன்னாகனாரென ஒருவர் உளர்; அவரும் இவரும் ஒருவரோ வேறோ தெரியவில்லை.

7. நாகனார்:- இவர் 11-ஆம் பாடலுக்கு இசை வகுத்தவர்.

8. பித்தாமத்தர்:- இவர் 7-ஆம் பாடலுக்கு இசை வகுத்தவர்; இப்பெயர் பித்தாமக்கரென்றும் காணப்படுகின்றது.

9. பெட்டனாகனார்:- 3, 4-ஆம் பாடல்களுக்கு இசை வகுத்தவர் இவர்.

10. மருத்துவனல்லச்சுதனார்:- இவர் 6, 8, 9, 10, 15, 19-ஆம் பாடல்களுக்கு இசை வகுத்தவர். 'மருத்துவன்' என்ற சிறப்புப் பெயர் இவர் மருத்துவநூலிலும் வல்லவரென்பதைக் காட்டுகின்றது.

ஃஃஃ

# இந்நூலிலுள்ள சிறந்த பாகங்கள்

திருமால்:- (முதற்பாட்டு): அடிகள் 6-13, 26-65; (2): 20-76; (3) 1-11, 29-30, 63-94; (4) 1-9, 25-35, 49-73; (13): 46-8, 61-4; (15): 11-4, 27-34, 46-8, 51-3; (திரட்டு, 1): 7-49, 64-78.

முருகக்கடவுள்:- (5): 1-21, 50-81; (8): 1-35, 96-111, 125-30; (9): 81-5; (14): முற்றும்; (17): 7-21; (18): 15-21, 45-50; (19): 1-29; 38-57; (21): 1-17, 22-38, 68-70.

வையை:- (6): 1-10, 106; (7): 1-30; (10): 1-8, 19-31, 52-68, 74-8, 85-8, 103-11; (11): 31-8, 41-4, 50-60, 78-87, 90-92, 115-21, 138-40; (12): 45-6; (16): 1-15, 33-8, 44-7, 54-5; (20): 14-22, 32-45, 49-93, 98-100; (22): 1-8, 31-4; (திரட்டு, 2): 34-40, 55-63.

மதுரை:- 174-175-ஆம் பக்கத்துள்ளவை முற்றும்.

❁❁❁

## இந்நூலை எடுத்தாண்ட உரையாசிரியர் முதலியோர் பெயர்கள்

இலக்கணக் கொத்துரையாசிரியர்
இலக்கண விளக்க உரையாசிரியர்
இளம்பூரணர்
சங்கரநமச்சிவாயர்
சேனாவரையர்

தக்கயாகப்பரணி உரையாசிரியர்
திருக்குறட் பரிமேலழகருரை
நுண்பொருண்மாலையுடையார்
தெய்வச் சிலையார்
நச்சினார்க்கினியர்
மாறனலங்காரவுரையாசிரியர்

நாற்கவிராயநம்பி யகப்பொருளுரையாசிரியர்
பரிமேலழகர்
பாப்பாவினவுரையாசிரியர்
பிரயோக விவேக உரையாசிரியர்
புறத்திரட்டுத் தொகுத்தோர்
பேராசிரியர்
மயிலேறும் பெருமாள்பிள்ளை
மயிலைநாதர்

ஓஓஓ

# பரிமேலழகர் வரலாறு

இந்நூலுரையாசிரியராகிய பரிமேலழகர் ஸ்ரீ காஞ்சி நகரத்திலுள்ள ஸ்ரீ உலகளந்தபெருமாள் கோயில் அருச்சக பரம்பரையிற் பிறந்தவர்; வைணவ சமயத்தினர். இவர் * திருக்குறளுக்குச் சிறந்த உரையியற்றியிருப்பது யாவரும் அறிந்ததே. இவருடைய ஊர் முதலியன கர்ணபரம்பரைச் செய்தியாலும், "திருக்காஞ்சி வாழ்பரி மேலழகன், வள்ளுவர் நூற்கு வழிகாட்டி னான்றொண்டை மண்டலமே", "நீணில மளந்தோன் றாடொழு மரபிற், பரிமே லழகன்" (உரைச்சிறப்புப் பாயிரம்) என்பவற்றாலும் தெரிகின்றன.

இவர் திருமாலிடத்தும் திருமாலின் அடியார்களிடத்தும் மெய்யன்பு பூண்டொழுகியவர்; திருக்குறள், 39-ஆம் அதிகாரத்தின் அவதாரிகையில் திருமாலை இறையென்றதும், †"திருவுடை மன்னரைக் காணிற்றிருமாலைக் கண்டேனே யென்னுமென்று பெரியாரும் பணித்தார்" என்றதும், மற்றும் அந்நூலுரையிலும் இந்நூலுரையிலும் எழுதியுள்ள பல குறிப்புக்களும் இதனைப் புலப்படுத்தும்; வடமொழியிலும் தென்மொழியிலும் மிக்க பயிற்சியுள்ளவர்: "வட நூற்றுறையுந் தென்றிசைத் தமிழும், விதிமுறை பயின்ற நெறியறி புலவன்" என்பதனாலும் இவருடைய உரைநடையாலும் இது விளங்கும்.

அருச்சகரிற் பலர் பண்டைக்காலத்தில் வடமொழி தென் மொழிகளில் சிறந்த பயிற்சியுள்ளவர்களாக இருந்ததற்கு ஸ்ரீ கச்சியப்பசிவாசாரியர் முதலியோர்களே உதாரணமாவார்.

திருக்குறளுக்கும் இந்நூலுக்கும் இவர் உரை செய்தவர் என்பதை இரண்டு உரைகளிலுமுள்ள ஒற்றுமைப் பகுதிகள் பலவற்றாலும் அறியலாகும்.

---

* "தருமர்" "திருத்தகு", "தெய்வப்புலமை", "பாலெல்லாம்", "வள்ளுவர் சீர்" என்னும் வெண்பாக்களும், "திருந்திய தமிழில்" என்னுமகவலும், "வள்ளல் சிலைப் பெருமாள்" என்னும் கலித்துறையும் பிறவும் இதனைப் புலப்படுத்தும்.

† திருவாய்மொழி, 34-ஆம் திருப்பதிகம், 8.

பண்டைக்காலத்தில் அரசர்களுடைய பிறழ்ச்சியால் இந்நூல் படித்துப் பாராட்டுவோரற்றுக் கிடந்ததென்பதும் அக்காலத்தில், பழைய நூல்களினிடையே தம் சொல்லை மடுத்து வேறுபடுத்தும் இயல்புள்ள கந்தியாரென்பவராலும் பொருள் தெரியாமல் எழுதி யவர்களாலும் பாடகர்களாலும் இந்நூலில் நேர்ந்த பலவகைப்பட்ட பிழைகள் அறிஞர்களுடைய செவிகளை வெதும்பச் செய்தலைத் தெரிந்து அப்பிழைகளை நீக்கி ஆராய்ந்து உண்மையான பாடத்தை யறிந்து சிற்றறிவினர்க்கும் தெற்றெனப் புலப்படும்படி இவர் இவ்வுரையை இயற்றினரென்பதும் இந்நூல் உரைச்சிறப்புப் பாயிரத்தால் தெரியவருகின்றன.

“விரும்பியருள்” என்னும் வெண்பா இந்நூலுக்கு உரைசெய்யத் தொடங்குமுன் இவர்கூறிய கடவுள் வணக்கமாக இருக்கலாமென்று தோற்றுகின்றன.

மிக அரியனவாகிய வடநூல்களின் கருத்துக்களை எளியன வாகத் தமிழ் நாட்டார் அறிந்துகொள்ளும்படி செய்த மகோபகாரி களில் இவர் ஒருவர். சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல் முதலிய அழகுகளை யமைத்து உரையெழுதுதல் இவருக்கு இயல்பு. பழைய செய்யுட்களையே உரைநடையாக உபயோகித்த உரையாசிரி யர்களில் இவர் முதன்மையானவர்.

இவர் திருமாலடியவராக இருந்தும் பரிபாடலிற் சிவபெருமான் முருகக்கடவுள் முதலியோர்களைக் குறிப்பிடும் இடங்களில் அவரவர்களுடைய பெருமைகளை நன்கு விளக்கிச் செல்லுதலால் இவருடைய நடுவுநிலைமை புலனாகின்றது.

பரிமேலழகரையனெனவும் பரிமேலழகியாரெனவும் இவர் பெயர் வழங்கும்.

“வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்” (முருகு. 106) என்புழி, ‘வசிந்து’ என்பதற்குப் பகைவர்மார்பைப் பிளந்தென்று பொருள்கூறி, படைக்கலங்களால் வடுப்பட்டென்று பொருளுரைத்தல் இறைவனாதலிற் பொருந்தாதென்று விசேடவுரையு மெழுதிய ஆசிரியர் நச்சினார்க்கினியர் மறுப்பு, “வாண்மிகுவய மொய்ம்பின்” (பரி. 9:57) என்பதற்கு வாட்டழும்பு நெருங்கிய வெற்றிமொய்ம்பென்று இவர் பொருளெழுதியதைச் சுட்டியதாயின், இவர் இந்நூலுக்கு உரையியற்றிய காலம், அவர் பத்துப்பாட்டிற்கு உரையியற்றிய காலத்திற்கு முற்பட்டதென்று கொள்ளலாம்.

பாடினோர்களுடைய ஆழ்ந்த கருத்துக்களை விளக்கி இந்நூலுள் அங்கங்கே இவர் எழுதிய உரைநயங்களுட் பின்னர்ச் சுட்டியவை அறிந்து இன்புறற்பாலன:-

(மூன்றாம் பாட்டு) அடிகள்: 10-11, 36-43, 81-5; (4) 10; (5) 10, 37, 79, 81; (7) 40-50; (8) 72-3, 77; (9) 34; (10) 41-55, 93; (11) 1-15; (12) 90-92; (13) 55; (15) 30-33; (17) 32; (19) 22, 30 - 37, 49, 98; (20) 5, 54 ; (21) 22-8.

உரைகளில் இவர் எடுத்துக்காட்டிய மேற்கோள்கள் அமைந்த நூல்களுள் இதுகாறும் தெரிந்தவை வருமாறு:-

அகநானூறு
இறையனாரகப் பொருள்
மேற்படி நூலின் உரை மேற்கோள்
கலித்தொகை
குறுந்தொகை
சிலப்பதிகாரம்
சிறுபாணாற்றுப்படை
சீவகசிந்தாமணி
திரிகடுகம்
திருக்குறள்
திருச்சிற்றம்பலக் கோவையார்
திருவாய்மொழி
தொல்காப்பியம்
நற்றிணை
நாலடியார்
நான்மணிக்கடிகை
நெடுநல்வாடை
பட்டினப்பாலை
பரிபாடல்
புறநானூறு
புறப்பொருள் வெண்பாமாலை
பெருங்குறிஞ்சி (குறிஞ்சிப் பாட்டு)
பொருநராற்றுப்படை
மணிமேகலை
மதுரைக்காஞ்சி
முத்தொள்ளாயிரம்
வளையாபதி.

"அன்பரு ணாணொப் புரவுகண் ணோட்டம், நன்றறி வாய்மை நற்றவ முடையோன், இத்தகை யன்றி யீசன தருளால், உய்த்துணர் வுடையவோ ருண்மை யாளன்" என ஆன்றோர் புகழும் இவருடைய பலவகையான விசேடங்கள் விரிவஞ்சி இம்மட்டில் நிறுத்தப் பெற்றன.

❄❄❄

# உரைச்சிறப்புப் பாயிரம்

## நிலைமண்டில ஆசிரியப்பா

* கண்ணுதற் கடவு ளண்ணலங் குறுமுனி
முனைவேன் முருக னெனவிவர் முதலிய
திருந்துமொழிப் புலவ ரருந்தமி ழாய்ந்த
சங்க மென்னுந் துங்கமலி கடலுள்
அரிதி னெழுந்த பரிபாட் டமுதம்
அரசுநிலை திரீஇய வளப்பருங் காலம்
கோதில் சொன்மக ணோதகக் கிடத்தலிற்
பாடிய சான்றவர் பீடுநன் குணர
மிகைபடு பொருளை நகைபடு புன்சொலிற்
றந்திடை மடுத்த கந்திதன் பிழைப்பும்
எழுதினர் பிழைப்பு மெழுத்துரு வொக்கும்
பகுதியின் வந்த பாடகர் பிழைப்பும்
ஒருங்குடன் கிடந்த வொவ்வாப் பாடம்
திருந்திய காட்சியோர் செவிமுதல் வெதுப்பலிற்
சிற்றறி வினர்க்குந் தெற்றெனத் தோன்ற
மதியின் றகைப்பு விதியுளி யகற்றி
எல்லையில் சிறப்பிற் றொல்லோர் பாடிய
அணிதிகழ் பாடத்துத் துணிதரு பொருளைச்
சுருங்கிய வுரையின் விளங்கக் காட்டினன்
நீணிலங் கடந்தோன் றாடொழு மரபிற்
பரிமே லழக னுரிமையி னுணர்ந்தே.

◆ ◆ ◆

## நேரிசைவெண்பா

விரும்பி யருணீல வெற்பிமயக் குன்றின்
வரும்பரிசு புள்ளூரு மாலே-சுரும்பு
வரிபாட லின்சீர் வளர்துளவத் தோளாய்
பரிபாட லின்சீர்ப் பயன்.

---

* செந்தமிழ் முதற்றொகுதி, பக்கம், 88-90.

உ

கணபதி துணை

# பரிபாடல்

## பரிமேலழகருரை

## முதற் பாடல்

### திருமால்

ஆயிரம் விரித்த வணங்குடை யருந்தலை
தீயுமிழ்[1] திறனொடு முடிமிசை யணவர†
[2]மாயுடை மலர்மார்பின் மையில்வால் வளைமேனிச்
சேயுயர் [3]பணைமிசை யெழில்வேழ மேந்திய
வாய்வாங்கும் வளைநாஞ்சி லொருகுழை யொருவனை
(இது தரவு.)

---

* இந்நூற் பரிசோதனைக்குக் கிடைத்தவை முதலிலும் இறுதியிலும் இருக்க வேண்டிய ஏடுகளில்லாமலும் இடையிலுள்ளவை தேய்ந்தும் ஒடிந்தும் இராமபாணவாய்ப் பட்டும் பழுதுற்றிருந்த பழம்பிரதிகளாதலின், அவற்றிற் காணப்படாமல், "கட்டுரை வகையின்" என்னும் தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திரவுரையில் இளம்பூரணவடிகள் காட்டிய மேற்கோள்களிற் காணப்பெற்ற இப்பாடல் மிகச் சிதைந்திருந்த உரைப் பகுதியால் இந்நூலின் முதற்செய்யுளென்று அறியப்பெற்றுத் தமிழ்த் தெய்வத்தின் திருவருட் செயலை நினைந்து இன்புற்று இங்கே பதிப்பிக்கலாயிற்று.

† வெண்டளையும் ஆசிரியத்தளையும் விராய்த் துள்ளலோசைபடவும் கூறப்படுதலின் பரிபாடல்; இது பாவென்னும் இயனெறியின்றிப் பொதுவாய் நிற்றற்கும் உரியதென்பதற்கு 'ஆயிரம் விரித்த......அணவர' என்னும் பகுதி மேற்கோள்; தொல். செய். சூ. 119, பேர். ந.

பிரதிபேதம். 1 திறலொடு. 2. வாயுடை. 3. பனைமிசை யெழின் மேழியேந்திய.

*[1] எரிமலர் சினைஇய கண்ணை பூவை
விரிமலர் புரையு மேனியை மேனித்
திருஞெமர்ந் தமர்ந்த மார்பினை மார்பிற்
றெரிமணி [2]பிறங்கும் பூணினை மால்வரை
எரிதிரிந் தன்ன பொன்புனை யுடுக்கையை
சேவலங் கொடியோய்நின் வலவயி [3]னிறுத்து
மேவலுட் பணிந்தமை கூறும்
நாவ லந்தண ரருமறைப் பொருளே.

(இது கொச்சகம்.)

†இணைபிரியணிதுணிபிணிமணியெரிபுரை விடரிடுசுடாபடா
பொலமபுனைவினைமலா தெரிதிரடெரியுருளிகனமிகு முரண
மிகு கடறருமணியொடு முததியாததநொணி நெறிசெறி
வெறியுறு முறலவிறலணஙகணஙகுவிாறறாாணி துணிமணி
வெயிலுற ழெழிலபுகழலாமலாமாாபின னெரிவயிர நுதிநுதி
யெறிபடைய ருததுமலையிவாநவை யினிறறுணிபடலினமணி
யியலெறுழெழிலினிசை யிருளகல முறுகிறுகுபுரியொருபுரி
நாணமலாமலரிலகினவளாபருதியினொளிரமணிமார பணிமண
மிக நாறுருவின விரைவளிமிகுகடுவிசையுடுவுறுதலைநிரையித
ழணி வயிரியவமாரைப்பொரெழுநதுடனறிரைததுரை இய
தானவாசிரமுமிழபுனலபொழிபிழிநதுரமுதிரபதிரபலநதொ
டாவ மாவெனறகணை.

(இவை நான்கும் அராகம்)

[4] பொருவே மென்றவர் மதந்தபக் கடந்து
[5] செருமேம் பட்ட செயிர்தீ ரண்ணல்

---

* பரிபாடலில் ஆசிரியம் வந்ததற்கு 'எரிமலர் சினைஇய..... பொருளே' என்னும் பகுதி மேற்கோள் ; தொல். செய். சூ.121, பேர். ந; பாப்பாவினம், உரை, மேற்.

† பிரதியுதவியும் உரையுதவியும் இல்லாமையால், அடிவரையறையும் பொருள் வரையறையுஞ் செய்து இந்த அராகங்கள் நான்கினையும் ஒழுங்குபடுத்த இயலவில்லை ; இங்ஙனமே மூலத்திலும் உரையிலும் சில சில பின்னும் உள்ளன.

பி-ம். [1] அரிமலர். [2] விளங்கும் பூணை, [3] னிறுத்த. [4] பொருவ. [5] செருவிடம்படுத்த.

*இருவர் தாதை யிலங்குபூண் [1]மாஅல்*
*தெருள நின்வர வறிதல்*
*மருளறு தேர்ச்சி முனைவர்க்கு மரிதே.*
(இஃது ஆசிரியம்.)

*அன்ன மரபி னனையோய் நின்னை*
*இன்னனென் றுரைத்த லெமக் [2] கெவ னெளிது*
(இது பேரெண்.)

*அருமைநற் கறியினு மார்வ நின்வயிற்*
*பெருமையின் வல்லா யாமிவண் மொழிபவை*
*மெல்லிய வெனாஅ வெறாஅ தல்லியந்*
*திருமறு மார்பநீ யருளல் வேண்டும்.*
(இஃது ஆசிரியம்.)

*விறன்மிகு விழுச்சீ ரந்தணர் காக்கும்*
*அறனு மார்வலர்க் [3] களியு நீ*
*திறனிலோர்த் திருத்திய தீதுதீர் [4] சிறப்பின்*
*மறனு மாற்றலர்க் கணங்கு நீ*
*அங்கணேர் வானத் தணிநிலாத் திகழ்தரும்*
*திங்களுந் தெறுகதிர்க் கனலியு நீ*
*[5] ஐந்தலை யுயிரிய வணங்குடை யருந்திறல்*
*மைந்துடை யொருவனு மடங்கலு நீ*

## பரிமேலழகருரை

* ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...... ... ... ... வாறு.

43 - 6. ஐந்து தலையைத் தோற்றுவித்த அணங்குடை அருந்திறலை யுடைய...வீசன். மடங்கல் - அவனினாகிய உலகுயிர்களினது ஒடுக்கம்.

---

* மிகச் சிதைந்திருப்பினும் "ஆயிரம் விரித்த" என்னும் செய்யுளை இந்நூலின் முதற்செய்யுளென்று நன்கு அறிந்து கொள்ளும்படி பேருதவியைச் செய்த இந்த உரைப்பிரதி திருவாவடுதுறையாதீனத்துப் புத்தகசாலையிலிருந்து கிடைத்தது.

பி-ம். [1] மாஅன். [2] எவனெளிது. [3] அருளுநீ. [4] கொள்கை. [5] ஐந்தனை.

நலமுழு தளைஇய புகரறு காட்சிப்
[1] புலமும் பூவனு நாற்றமு நீ
வலனுய ரெழிலியு மாக விசும்பும்
நிலனு நீடிய விமயமு நீ

(இவை ஆறும் பேரெண்.)

அதனால், (இது தனிச்சொல்)

இன்னோ ரனையை யினையை யாலென
அன்னோர் யாமிவட் காணா மையிற்
பொன்னணி நேமி வலங்கொண் டேந்திய
மன்னுயிர் முதல்வனை யாதலின்
நின்னோ ரனையைநின் புகழொடும் பொலிந்தே.

(இது சுரிதகம்)

* நின்னொக்கும் புகழ்நிழலவை
பொன்னொக்கு முடையவை
புள்ளின் கொடியவை புரிவளை யினவை
எள்ளுநர்க் கடந்தட்ட விகனே மியவை
மண்ணுறு மணிபா யுருவினவை

---

45-6. அறமுழுதினை...ய...பூவினான்முகனும் அவனினாகிய உலகுயிர்களின் தோற்றமும் நீ.

வேதமென்னும் வடமொழித்... ...ளுணர்வென்பதாகலான் ஈண்டு அப்பொருள்பற்றி அதற்குப் புலமென்று பெயராயது ...பி...நடாத்துகின்ற நான்முகற்குப் பெயராயிற்று.

அழிப்பும் படைப்பும் கூறியவாறு.

47. ...ெ...யங்கு மாகமாகிய விசும்பும்.

மாகமாவது பூமிக்கும் சுவர்க்கத்துக்கும் நடுவ... ...

50. ...யாய் இவரையனையை யென்றற்கு.

52. வலப்பக்கத்துக்கொண்டு முத...

54. ...யையென்புழி...பத... ...ணுதலுற்ற நீயே.

59. மணிபரந்தாலொத்த உருவினையுடையை. இம்மு...செ...ச.

---

* இவ்வடியை வஞ்சித்தூக்கென்பர் ; தொல். செய். சூ. 121, பேர். ந.

பி – ம். [1] புலனும் பூவினு ணாற்றமுநீ.

*எண்ணிறந்த புகழவை யெழின்மார்பினவை*
(இவை சிற்றெண்ணும் பேரெண்ணும் இடை யெண்ணும்)
ஆங்கு, (இது தனிச்சொல்)

* *காமரு சுற்றமோ டொருங்குநின் னடியுறை*
*யாமியைந் தொன்றுபு வைகலும் பொலிகென*
*ஏமுறு நெஞ்சத்தேம் பரவுதும்*
*வாய்மொழிப் [1]புலவநின் றாணிழ றொழுதே.*
(இது சுரிதகம்)

இது கடவுள் வாழ்த்து

## இரண்டாம் பாடல்

## திருமால்

*தொன்முறை யியற்கையின் மதியொ......*
*...................................[2] மரபிற் றாகப்*
*பசும்பொ னுலகமு மண்ணும் பாழ்பட*
*விசும்பி லூழி யூழும் [3] செல்லக்*

---

62.......ரென்புழி உகரம் பகுதிப்பொருள் விகுதி.

62-5. யாம் ஏமுற்ற நெஞ்சத்தேமாய் இம்மைக்கட் காமருசுற்ற மோடொருங்கு...தலைப்பொருந்தியும் பொலிகவென நின் தாணிழல் தொழுது வைகலும் பரவுதும், வாய்மொழிப்...

பரிபாட்டென்பது இசைப்பாவாதலான், இஃது இசைப்பகுப்புப் படைத்த புலவரும் பண்ணுமிட்டெ....

### (இரண்டாம் பாடலுரை)

1-4. மண்ணுலகமும் பசும்பொனுலகமும் பாழ்பட ஒன்றற் கொன்று மாறிவருதலாகிய பழைய இயல்பினையுடைய மதியமும் ஞாயிறுங் கெடுதலால் அழகிழந்த இயல்பிற்றாக விசும்புகெட்ட ஊழிகள் முறைமுறையாகக் கழிந்தனவாக.

'பாழ்பட' எனவும், 'மரபிற்றாக' எனவுமுள்ள எச்சங்கள் 'விசும்பி லூழி' என்புழி, இன்மையாகிய குறிப்புவினை கொண்டன.

---

* பரிபாடல் காமங்கண்ணிவருமென்பதற்கு 'காமரு...தொழுதே' என்னும் பகுதி மேற்கோள் ; தொல். செய். சூ.121, பேர். ந.

பி-ம். [1] முதல்வ. [2] மரபிற்றாகிப். [3] செய்யக்.

கருவளர் வானத் திசையிற் றோன்றி
உருவறி வாரா வொன்ற னூழியும்
உந்துவளி கிளர்ந்த வூழூ ழூழியும்
செந்தீச் சுடரிய வூழியும் பனியொடு
தண்பெய றலைஇய வூழியு [1] மவையிற்
றுண்முறை வெள்ள மூழ்கி யார்தருபு
மீண்டும் பீடுயர் பீண்டி யவற்றிற்கும்
உள்ளீ டாகிய விருநிலத் தூழியும்
நெய்தலுங் குவளையு மாம்பலுஞ் சங்கமும்

---

5-6 தன்குணமாகிய ஒலியுடனே தோன்றி உருவுகாணப்படாத வளிமுதற் பூதங்களின் பரமாணுக்கள் வளர்கின்ற வானமாகிய முதற்பூதத்தினது ஊழியும்.

'உருவறிவாரா' எனக் குறைந்துநின்ற பெயரெச்சம், 'கரு' என்னும் ...பொருட்பெயர் கொண்டது.

'வளர்வானம்' என்புழி வளர்தலாகிய இடத்துநிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல்நின்று, 'தோன்றி' என்னும் வினையெச்சத்திற்கு வினைமுதல் முடிபாயிற்று.

'வானத்து' என்புழி, அத்து அல்வழிக்கண் வந்தது.

7-12. அவ்வானத்தினின்று எல்லாப்பொருள்களையுஞ் சலிப்பிக்கும் காற்றுத்தோன்றிய முறைமுறையாகிய ஊழிகளும், அக்காற்றினின்றும் செந்தீத்தோன்றிய ஊழிகளும், அத்தீயினின்றுந் தோன்றிப் பனியும் மழையும் பெய்த ஊழிகளும், அவற்றிற்குப்பின்பு அப்புனலினின்றுந் தோன்றுதலான் மீண்டும் வெள்ளத்தினுட் கிடந்து முன்றோன்றிய நான்கு பூதங்கட்கும் உள்ளீடாகிய இருநிலத்தி னூழியும்.

முன் அழிகின்ற காலத்தும் வெள்ளமூழ்குதலான், மீண்டும் வெள்ள மூழ்கியென்றார். உள்ளிடப் பட்டதனை 'உள்ளீடு' என்றார், ஆகுபெயரான்.

பரம்பொருளினின்றும் ஆகாயந்தோன்றி அதனினின்றும் காற்றுத் தோன்றி அதனினின்றும் தீத்தோன்றி அதனினின்றும் நீர்தோன்றி அதனினின்றும் நிலந்தோன்றிற்றென்று வேதத்துள்ளும் கூறப்பட்டது.

13-8. என்றிவ்வூழிகளானே நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும் கமலமும் வெள்ளமுமென எண்குறித்திட்ட பெயர்களது அளவிற்றாகிய

---

பி-ம். [1] மவற்றுண்முறைவெள்ள மூழ்கிமீணடியாக்குபபீடுயர் பீண்டியவதற்கு.

மையில் கமலமும் வெள்ளமு [1] நுதலிய
செய்குறி யீட்டங் கழிப்பிய வழிமுறை
கேழ றிகழ்வரக் கோலமொடு பெயரிய
ஊழி [2] யொருவினை யுணர்த்தலின் முதுமைக்
கூழி யாவரு முணரா
ஆழி முதல்வநிற் பேணுதுந் தொழுதும்
நீயே, வளையொடு புரையும் வாலி யோற்கவன்
இளைய னென்போர்க் கிளையை யாதலும்
புதையிரு ளுடுக்கைப் பொலம்பனைக் கொடியோற்கு
முதியையென் போர்க்கு முதுமை தோன்றலும்
வடுவில் கொள்கையி னுயர்ந்தோ ராய்ந்த
கெடுவில் கேள்வியு ணடுவா குதலும்
இந்நிலைத் தெரிபொரு [3] டேரி னிந்நிலை

[4] காலவீட்டம் கழிந்தபின் உயிர்கள் உளவாதற்பொருட்டு அந்நிலத்தினை எடுத்திட்ட கேழற்கோலத்தால் திகழ்வரப்பெயர்பெற்ற இவ்வராககற்பம் நின்செயல்களுள் ஒருசெயலின் பெயராமதனையுணர்த்துதலின் அச்செயல்கள் பலவற்றையுஞ் செய்கின்ற நின்முதுமைக்குள்ள கற்பங்கள் யாவரானும் அறியப்படாத.

20–27. அங்ஙனம் முதியையாகிய நீ வாலியோற்கு அவன்இளைய னென்று கூறுவோர்க்குப் பிறப்புமுறையால் இளையையாகலும் எல்லாப் பொருள்களையும் மறைக்கும் இருள்போலும் உடுக்கையையுடைய பனைக் கொடியோற்கு வாசுதேவமூர்த்தியாகிய நின்கட் சிறப்புமுறையான் முதியையென்போர்க்கு முதுமைதோன்றலும் தவறில்லாத விரதங்களை யுடைய ஞானிகள் ஆராய்ந்த வேதத்தால் தெரிந்துணரின் உயிர்தொறும் உயிர்தொறும் அந்தரியாமியாய் நிற்றலுமாகிய இந்நிலைமைகளும் நின்கட்டோன்றும் நின் தொன்னிலைமைபோல நினக்கேயுள்ள விசேடம்.

என்றது யாவரும் உணராமுதுமையும் ஒருவற்குப் பின் பிறத்தலும் அவற்கு முன் பிறத்தலும் எக்காலத்தும் எவ்விடத்துமுள்ள உயிர்ப் பொருள்கட்கு உட்பொருளாதலுமாகிய இவ்விரோதத்தின்கண்ணே உள்ளதென்றவாறு.

26. 'தெரிபொருள்' என்னும் வினைத்தொகை தெரியும் பொருளென்ன நிகழ்காலத்தான் விரிக்கப்படும், உயிர்ப்பொருட்கு உணர்தற் பண்பு இயற்கை யாதலின். இந்நிலையுமென்னும் உம்மை விகாரத்தாற் றொக்கது.

பி–ம். [1] நுதலிச். [2] யொருவனை. [3] டேரினினனிலை. [4] காலவட்டம்.

*நின்னிலைத் தோன்றுநின் றொன்னிலைச் சிறப்பே*
*ஓங்குயர் வானின் வாங்குவிற் புரையும்*
*பூணணி கவைஇய வாரணி நித்தில*
*நித்தில மதாணி யத்தகு மதிமறுச்*
*செய்யோள் சேர்ந்தநின் மாசி லகலம்*
*வளர்திரை மண்ணிய கிளர்பொறி நாப்பண்*
*[1] வைவான் மருப்பிற் களிறு மணனயர்பு*
*புள்ளி நிலனும் [2] புரைபட லரிதென*
*உள்ளுந ருரைப்போ ருரையொடு சிறந்தன்*
*றொடியா வுள்ளமொ டுருத்தொருங் குடனியைந்*
*திடியெதிர் கழறுங் காலுறழ் பெழுந்தவர்*
*கொடியறு பிறுபு செவிசெவிடு [3] படுபு*
*முடிக ளதிரப் படிநிலை தளர*
*நனிமுரல்வளை முடியழிபிழிபு*

---

27. 'நின்னிலைத்தோன்றும்' என்புழி 'நிலை' என்பது இடப் பொருட்டாய் நின்றது.

28-35. மிகவுயர்ந்த வானின்கண் வளைந்த வில்லையொக்கும் ஏனைப் பூணணிகளால் அகத்திடப்பட்ட அரிய அழகிய நித்திலத்தாற் செய்த நித்திலமதாணியாகிய அழகிய மதிக்கு மறுவெனச் செய்யோள் அடைந்த நின்மார்பு உரையொடு பொருந்திற்றன்று.

வளர்திரைப்புனன் மூழ்கியெடுத்தலின் அதனால் மண்ணப்பட்ட கிளர்புகரிடையதாகிய மருப்பிற்கொண்டு ஆதிவராகம் மணனயர்தலாற் புள்ளியளவாகிய நிலனும் வெள்ளத்தால் வருந்திற்றில்லையென்று வேதப்பொருளை உட்கொண்டுரைப்போர் உரையொடெனக் கூட்டுக.

ஒருத்தியொடு மணனயரும்வழிப் பிறளொருத்தி அகலத்தைச்சேர்தல் கூடாமையிற் சிறந்ததன்றென்றார்; செய்யுள் விகாரத்தால் 'சிறந்தன்று' என நின்றது.

36-40. கெடாத மனவெழுச்சியோடு வெகுண்டு உடனியைந்து காற்றை யொத்து எதிர்ந்த அவுணர் கொடிகள் அற்று இற்றுச் செவிகள் செவிடுபட்டு முடிகள் அதிரப் படிகள் நிலைதளர மிகவும் முழங்குகின்ற நின் சங்கு இடியை யொக்கும்.

37. 'எதிர்கழறும்' என்பது உவமப்பொருட்டு.

40. 'முரறல்' உயிருள்வழி அடையாய் வந்தது.

---

பி-ம். [1] வைவாண். [2] புகர்பட. [3] பட.

தலையிறுபு தாரொடு புரள
நிலைதொலைபு வேர்தூர்மடல்
குருகு பறியா நீளிரும் பனைமிசைப்
பலபதி னாயிரங் [1]குலைதரை யுதிர்வபோல்
நில்லா தொருமுறை கொய்பு கூடி
ஒருங்குருண்டுபிளந்து நெரிந்துருள்புசிதறு
பளறுசொரிபு நிலஞ்சோரச்
சேரா ரின்னுயிர் செகுக்கும்
போரடு குருசினீ யேந்திய படையே
ஒன்னா ருடங்குண்ணுங் கூற்ற முடலே
பொன்னேர் பவிரழ [2]னுடக்கத னிறனே
நின்னது திகழொளி சிறப் [3]பிரு டிருமணி
கண்ணே, புகழ்சா றாமரை யலரிணைப் பிணையல்
வாய்மை வயங்கிய வைகல் சிறந்த
நோன்மை நாடி னிருநிலம் யாவர்க்கும்

40-49. நின்றநிலையில் தொலைந்து வேரும் தூரும் மடலும் குருத்தும் பறியாத நீண்ட கரிய * பனைமிசைப் பலபதினாயிரங்குலைகள் அதன் தலையினீங்கித் தரைக்கண் உதிர்வனபோலத் தலைகள் வலியழிந்து சாய்ந்து ஒன்றும் உடன்மிசை நில்லாமற் [4]கொத்தாக இற்றுத்தரித்த தாரொடு புரளும்படி ஒரு காலத்திலே கொய்தல்பெற்று உடனே உருண்டு பிளந்து நெரிந்து பின் வேறுவேறாய் உருண்டு சிதறி அளறு சொரிந்து நிலத்தின்கட் சோர அவுணருயிரைச் செகுக்கும், நீ ஏந்திய ஆழிப்படை.

43. பறியாப்பனை எனச் சினைவினை முதன்மேனின்றது.

50. ஒன்னாரை உடங்குண்ணும் அப்படையின் உடல் கூற்றத்தை யொக்கும்.

51. அதன் நிறம், சுடுகின்ற பொன்னோடு எழுந்து விளங்குகின்ற அழல் நுடக்கத்தையொக்கும்.

52. நின் ஒளி, சிறப்பினையுடைய இருண்ட நீலமணியை ஒக்கும்.

53. நின் கண், தாமரையலர் இரண்டைப் பிணைத்ததனை ஒக்கும்.

54. நின் வாய்மை, தப்பாது வருகின்ற நாளை ஒக்கும்.

55. நின்பொறை நிலத்தையொக்கும்.

* "இலங்கையர் கோனைப், பானுநேர் சரத்தாற் பனங்கனி போலப் பருமுடி யுதிரவில் வளைத்தோன்" திவ். பெரிய. 9. 1:7.

பி-ம். [1]தலைத்தரை. [2]நுடக்கத்தினிறநெ, நுடக்கினிறநெ. [3]இருட்டிரு. [4]கொத்தாகவிதறித்தரித்த.

*சாய னினது வானிறை யென்னும்*
*நாவ லந்தண ரருமறைப் பொருளே*
*அவ்வும் பிறவு மொத்தனை யுவ்வும்*
*எவ்வயி னோயு நீயே*
*செவ்வா யுவணத் துயர்கொடி யோயே*
*கேள்வியுட் கிளந்த வாசா னுரையும்*
*படிநிலை வேள்வியுட் பற்றியாடு[1] கொளலும்*
*புகழியைந் திசைமறை யுறுகனன் முறை [2]மூட்டித்*
*திகழொளி யொண்சுடர் வளப்பாடு [3]கொளலும்*
*நின்னுரு புடனுண்டி*

55-7. யாவர்க்குமொத்த நின் அருள், நீரால் நிறைந்த மேகத்தை ஒக்குமென்று உணர்த்தும், அருமறைப்பொருள்.

50-55. 'ஒக்கும்' என்னும் உவமச்சொல் வருவித்துரைக்கப்பட்டது.

58-9. யாம் சொல்லிய அப்பொருள்களையும் சொல்லாத பிறவற்றையும் பண்புகளானும் தொழில்களானும் ஒத்தனை; ஒத்தும் ஒப்பின்றி எப்பொருளின் அகத்தாயும் நீ.

58. உகரச்சுட்டுச் சொல்லுளடங்காது குறிப்புளடங்கிய.................... ஆயிடை யிரண்டினும் அடங்காதவற்றின் மேற்று.

61-8. வேதத்துட் சொல்லப்பட்ட வேள்வி முதல்வன் சொல்லும், படிகால் முறையான் ஒன்றற்கொன்று உயர்ந்த விகுருதிவேள்வியுள் யூபமாய்ப் பசுவைப் பற்றிக்கோடலும், செய்தாரின்மையின் உலகச் சொலன்றென......தீதியிசைக்கின்ற மந்திரங்களான் உயர்ந்த எரியை முறையாற் கடைந்து அத்திகழொளியையுடைய ஒண்சுடரினது பெருக்கத்தையுண்டாக்கிக் கோடலுமாகிய இவை, முறையே நின் உருபும், நின்உண்டியும், கடவுள் இல்லையென்பார் உடம்படுதலுண்டாகவும் நின் பெருமைக்குத் தகவும் அந்தணர் காண்கின்ற நின்வெளிப்பாடுமாம்.

61. 'கேள்வியுட் கிளந்த' என்பது 'ஆடுகொளல்', 'வளப்பாடு கொளல்' என்பனவற்றோடுமியையும், அவையும் அதனுட் சொல்லப்பட்டமையின்.

65. ஒடுவின் பொருட்டாகலின், ஈண்டு எண்ணின்கண்வந்த உடனென்பது ஏனைய இரண்டிடத்தும் கூட்டி உரைக்கப்பட்டது.

வேள்விக்கிறைவனை ஆசான் என்றார், தலைமைபற்றி. அவனுரையாவது வேதத்துள் நான்காம் வேற்றுமையை ஈறாகவுடைய தெய்வப்பெயர்ச்சொல். அதனை வைதிகர் உத்தேசத்தியாகமென்ப. [4]அச் சொல்லே கடவுட்கு உருவென்பது * [5]சயிமினியாற் செய்யப்பட்ட வைதிக

* சயிமினியாற் செய்யப்பட்ட வைதிகநூல் - பூருவமீமாஞ்சை.

பி-ம். [1]கோடலும். [2]மூட்டத். [3]கோடலும். [4]அச்சொல்லோடே. [5]சயமுனியாற்.

*பிற [1]ருடம் படுவாரா*
*நின்னொடு புரைய*
*அந்தணர் [2]காணும் வரவு*
*வாயடை யமிர்தநின் மனத்தகத் [3]தடைத்தர*
*மூவா [4]மரபு மோவா நோன்மையும்*
*சாவா மரபி னமரர்க்காச் சென்றநின்*
*..........................................மரபினோய் நின்னடி*
*தலையுற வணங்கினேம் [5]பன்மாண் யாமும்*
*கலியி னெஞ்சினே மேத்தினேம் வாழ்த்தினேம்*
*கடும்பொடுங் கடும்பொடும் பரவுதும்*
* கொடும்பா டறியற்க வெம்மறி வெனவே.
கடவுள் வாழ்த்து. [7]நன்னாகனாரிசை.
[6]கீரந்தையார் பாட்டு. [8]பண்ணுப் பாலையாழ்.

---

நூற்றுணிபாகலின் அதனை உருபு என்றும், யூபமாவது மாயோனாகச் சொல்லப்படுதலால் பகக்களைப் பிணித்துக்கொள்கின்ற அதனை உண்டி என்றும், ஊன்கணார்க்குப் படிமையினும் அந்தணர்க்கு வேள்வித்தீயினும் யோகிகட்கு உள்ளத்தினும் ஞானிகட்கு எவ்விடத்தும் வெளிப்படுதலாற் சுடர்வளப்பாடுகோடலை அந்தணர்காணும் வரவு என்றும் கூறினார்.

69-75. அமரர்க்குணவாகிய அமிர்தத்தைக் கடைந்துகொடுப்பதாக நின்மனத்தின்கண் நினைந்த அளவிலே அவர்க்கு அதன்பயனாகிய மூவாமரபும் ஒழியாவலியும் தம் சாவாமரபுபோல உரியவாயின ; ஆகவே நின் பல்புகழ் பரந்தன ; அதனால் அத்தன்மைத்தாகிய அரிய மரபினோய்! நின்அடியை யாமும் துளக்கமில் நெஞ்சினேமாய் வணங்கிப் பலகாலும் ஏத்திவாழ்த்தி வேண்டிக்கோடும்.

69. வாயின்கண் அடுக்கப்படுதலின், உணவிற்கு 'வாயடை' என்று பெயராயிற்று.

75. 'கடும்பொடும் கடும்பொடும்' என்னும் † அடுக்குப் பன்மைக் கண் வந்தது.

76. எம்மறிவு கொடும்பாடறியற்கவென மெய்யுணர்வினையே வேண்டினார், ‡ வீடு அதனாலல்லது எய்தப்படாமையின். (2)

---

* "கொடும்பாடன்" தே. நாகை. சுந்தர.

† குறள், 341, 423, பரிமேல்.

‡ "ஞானத்தால் வீடாக நாட்டு" சிறுபஞ்ச. 36.

பி-ம். [1] உடம்பாடுவாரா. [2] காணின்வரவு. [3] அடைதர. [4] மரபினோவா நோன்மைச். [5] பலமாபனமா யாண்டுங். [6] ...னார்பாட்டு [7] மருத்து வனல்லச்சு வனாரிசை. [8] பண்ணுக் குறிஞ்சியாழ் பண்ணுப் பாலையாழ்.

# மூன்றாம் பாடல்

## திருமால்

*மாஅ யோயே மாஅ யோயே
மறுபிறப் பறுக்கு மாசில் சேவடி
மணிதிக [1] ழுருபின் மாஅ யோயே
தீவளி விசும்பு [2] நிலனீ ரைந்து
ஞாயிறுந் திங்களு மறனு மைவரும்

### (மூன்றாம் பாடலுரை)

1. மாயோனென்பது, கரியோனென்னும் பொருள்குறியாது பெயர் மாத்திரையாய் நின்றது; அது விளியேற்று 'மாயோய்' என்றாயிற்று.

2. அடிகளைப் பணியவே பணிந்தாரது மறுபிறப்பறுதலின், †'மறுபிறப் பறுக்கு மாசில் சேவடி' என்றார்.

3. மணிதிகழுருபு - 3 நீலமணிபோல விளங்கா நின்ற நிறம்.

அச்சேவடி பெறுதற்கு முகம்புகுகின்றாராதலிற் பலகாலும் எதிர் முகமாக்கினார் ; ஆக்கி வாழ்த்துகின்றவர் அவன் கட்டோன்றிய பொருள்கள் கூறுவான் தொடங்கி முதற்கண் ‡ ஈசற்கு வடிவாகிய அட்டமூர்த்தங்கள் கூறுகின்றார்:

4-5. அவை: தீ, வளி, விசும்பு, நிலம், நீரென்னும் பூதங்கள் ஐந்தும் ஞாயிறும் திங்களும் வேள்விமுதல்வனுமென இவை.

5. வேட்கின்ற வடிவு தருமமாதலின் அஃது அறனெனப்பட்டது.

உலக நடைக்கு ஏதுவாகிய கோட்கள் எழுவருள் ஞாயிறும் திங்களும் மேற்சொல்லிய அட்டமூர்த்தங்களுள் அடங்கினமையின், ஏனையோரைப் பெயர் கூறாது 'ஐவரும்' என்றார்; பாம்புகள் காணப்படுவன அன்மையிற் கூறாராயினர்.

---

*"ஏனைப்புள்ளி" (தொல். விளி. சூ.12, ந.) என்பதனுரையில், 'மாயோய்' என்பது மேற்கோளாகக் காட்டப் பெற்றுள்ளது.

† "பிறவிப் பெருங்கட லீந்துவர் நீந்தார், இறைவ னடிசேரா தார்" என்பது (திருக்குறள், 10) ஈண்டு அறிதற்பாலது.

‡ ஈசற்கு அட்டமூர்த்தங்கள் உளவென்பதை, "அட்ட மூர்த்தி தன் வெண்கா டடைநெஞ்சே", அட்ட மூர்த்தியண் ணாமலை கை தொழக், கெட்டுப் போம்வினை கேடில்லை காண்மினே" என்னும் தேவாரங்களாலும் அறியலாகும்.

பி-ம். [1] உருவின். [2] நிலநீர். [3] நீல நிறம் போல.

*திதியின் சிறாரும் விதியின் மக்களும்*
*மாசி லெண்மரும் பதினொரு கபிலரும்*
*தாமா விருவருந் தருமனு மடங்கலும்*
*மூவே ழுலகமு முலகினுண் மன்பதும்*
*மாயோய் நின்வயிற் பரந்தவை யுரைத்தேம்*
*மாயா வாய்மொழி யுரைதர வலந்து*

---

6. திதியின் சிறார் - அசுரர். விதியின் மக்கள் - *ஆதிப்பிரமற்கு நினைவாற்றோன்றிய †பிரமர் பதின்மருட் காசிபன்மக்களாகிய ஆதித்தர் பன்னிருவரும்.

7. எண்மர் - வசுக்கள். உருத்திரரைக் கபிலரென்றார், அவர் செய்யராதலின்.

8. ‡ தேவர்மருத்துவரைத் தாவும் மாவின்கட்டோன்றிய இருவரென்றார்; உருப்பசி குதிரைப் பெட்டையாகியாளைக் கண்டு நயந்து தானும் குதிரைவடிவினனாய் அவள்பாற் செல்கின்ற ஆதித்தனுடைய நாசிகைத் துளைகளால் இரண்டு வீரியவிந்துக்கள் வீழ, அவர் அங்கே இரட்டைகளாய்த் தோன்றினாராதலின்.

'விதியின் மக்கள்' என்பது முதல் இத்துணையும் முப்பத்து மூவரைக் கூறினார்.

தருமன் - யமன் ; மடங்கல் - அவனேவல்செய்யும் § கூற்றம்.

9. மூவேழுலகம் - ஒரோவொன்று எழுவகைப்பட்ட மூன்றுலகம். மன்பது - ஒழிந்த உயிர்ப்பன்மை.

10-11. மாயோய், இவையெல்லாம் நின்கட்டோன்றிப் பரந்தவையாகத் [1] தொடுத்துக் கூறினேம், வேதம் சொல்லுதலான்.

நித்தமாகிய வேதம், தேவரும் மூவேழுலகுகளும் உயிர்ப்பன்மையும் நின்கட்டோன்றியவாறு அறிந்து கூறும் ; சிற்றறிவினேமாகிய யாம் அவற்றுட் சிலவற்றை முறைபிறழக் கூறுவதல்லது அவ்வாறு எல்லாம் கூறுதற்கு உரியமல்லமென்பார் வலந்துரைத்தேமென்றார்.

---

* ஆதிப்பிரமன் - பிரமதேவர் ; "ஆதிப் பிரமனு நீ" கம்ப. கவந்த. 45.

†"புயல்வண்ணன் பொற்பதுமப் போதிற் புவனச், செயல் வண்ணங் காட்டிய சேயோன் - உயிரனைத்தும், காட்டும் பதின்மரினுங் காசிபனேழ்புரவி, பூட்டுந் தனியாழிப் பொற்றேரோன்" என்னும் இராசராசசோழனுலாவால் ஆதிப்பிரமனிடத்துத் தோன்றிய பிரமர் பதின்மரென்பதும் அவருட் காசிபர் ஒருவரென்பதும் பிறவும் அறிந்துகொள்க.

‡ தேவர் மருத்துவர் - அசுவினி தேவர்கள்.

§ கூற்றம் யமனுடைய ஏவலாளனென்பது, "தருமரா சற்கா வந்த, கூற்றினைக் குமைப்பர் போலுங் குறுக்கைவீ ரட்ட னாரே" என்னும் தேவாரத்தாலும் அறியலாகும் ; தக்க. 444.

பி-ம். [1] தொகுத்து.

*வாய்மொழி யோடை மலர்ந்த*
*தாமரைப் பூவினுட் பிறந்தோனுந் தாதையும்*
*நீயென மொழியுமா லந்தண ரருமறை*
*ஏஎர், வயங்குபூ ணமரரை வெளவிய வமிழ்திற்*
*பயந்தோ ளிடுக்கண் களைந்த புள்ளினை*
*பயந்தோ ளிடுக்கண் களைந்த புள்ளின்*

---

* திணைவிராய் எண்ணப்பட்ட பெயர் செய்யுளகத்துப் பெரும் பான்மையும் அஃறிணைச் சொற்கொண்டு முடிதலின், 'பரந்தவை' (10) என்றார்.

12. தாமரைப்பூப் படைப்பிற்கு முதலாகவந்து மலருமென்பதற்கு, வேதம் ஞாபகவேதுவாதலின், அதற்கு அதனை ஓடையாக உபசரித்துக் கூறினார்.

உபநிடதத்தின்பொருள் பொருந்துங் கூற்றாற் கூறுகின்றாராகலின், 'வாய்மொழியோடை' என்றார். ஒரோவழி அவ்வருமறைதானும் [1] அவனை அவ்வாறு கூறுமாதலின், அதன் கூற்றெனவும் அமையும்.

15. காவலாய்நின்ற அமரரையோட்டி எடுத்துக்கொண்டு போந்த அமிர்தினால்.

அழகுவிளங்காநின்ற பூணினையுடைய அமரரென்க.

16. பயந்தோள் - தன்னைப்பெற்ற வினதை.

அவளது இடுக்கணாவது : இந்திரன் குதிரைவால் வெள்ளையாயிருப்ப தென்றும் அன்றாயின் நினக்கு அடிமையாவலென்றும் கத்துருவினோடு ஒட்டமொட்ட அவள் அதனை வஞ்சனையாற் கரிதாக்க அஃதறியாது அவட்கு அடிமையாய் வருந்துதல் ; அதனைக்களைதலாவது : இந்திரன் அமராபதிக்கட் கொண்டுபோய்வைத்த அமிர்தந் தரின் அவள் அடிமை மீளுமென்று கத்துருச் சொல்ல அவட்கு அதுகொடுத்து அவ்வடிமை மீட்டல்.

புள்ளினை - புள்ளை ஊர்தியாக வுடையை.

17-8. மிக ஓங்கிய கொடிக்கண் எழுதிய பயந்தோள் இடுக்கண் களைந்த அப்புள்ளாகிய சேவலையுடையோய்.

என்றாராயினும், பயந்தோளிடுக்கண்களைந்த அப்புள்ளாகிய சேவலை எழுதிய மிகவோங்கிய கொடியோயென்பது கருத்தாகக் கொள்க; † "கொடுவரிக், கோண்மாக் குயின்ற சேண்விளங்கு தொடுபொறி, நெடுநீர்க் கெண்டையொடு பொறித்த, குடுமிய வாகபிறர் குன்றுகெழு

---

*"பலவயி னானு மெண்ணுத்திணை விரவுப்பெயர், அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே" (தொல். கிளவி. சூ.51) என்பதும், 920-ஆம் திருக்குறளும் அதன் உரையும் ஈண்டு அறியற்பாலன. † புறநா. 58.

பி-ம். [1] நின்னை.

* நிவந்தோங் குயர்கொடிச் சேவ லோய்நின்
சேவடி தொழாரு முளரோ வவற்றுட்
கீழே முலகமு முற்ற வடியினை
தீசெங் கனலியுங் [1] கூற்றமு ஞமனும்
மாசிலா யிரங்கதிர் ஞாயிறுந் தொகூஉம்
† ஊழி யாழிக்க ணிருநில முருகெழு
கேழலாய் மருப்பி னுழுதோ யெனவும்
மாவிசும் பொழுகுபுனல் வறள வன்னச்

நாடே" என்பதனுள், 'குன்றுகெழுநாடு' என்றாராயினும் 'நாடுகெழு குன்று' என்பது கருத்தாயினாற்போல.

இதனால் அவ்வூர்திப்புள்ளினையே கொடியாகவுமுடையை யென்பது கூறப்பட்டதாம்.

18. 'நிவந்தோங்குயர்' என்பன ஒருபொருட் பன்மொழி.

19-20. அளக்கின்றகாலத்து மேற்சொல்லிய (9) மூவேழுலகினுட் கீழவாகிய ஏழுலகத்தையும் எஞ்சாமலுற்ற அடியினையுடையை.

இதனாலே, மூவேழுலகாவன மேலேழும் கீழேழும் நடுவு சம்புத் தீவு முதலிய தீவேழுமென்பது பெற்றாம். தொல்காப்பியனாரும், ‡ "மாயோன் மேய காடுறை யுலகமும், சேயோன் மேய மைவரை யுலகமும்" என இவ்வுலகினுட் பாகுபாடுகளையும் உலகென்றார்.

21. தீ செங்கனலி - எல்லாம் தீகின்ற செந்நெருப்பு ; எல்லாம் தீதற்குக் காரணமாகிய செந்நெருப்பென்றவாறு. கூற்றம் - மேற் சொல்லிய மடங்கல்.

22. ஞாயிறும் - ஞாயிறு பன்னிரண்டும்.

22-4. இவை கூடும் ஊழிமுடிவினுள் ஏழும் ஒன்றாகிய ஆழிக்கண் அழுந்துகின்ற நிலமகளை அழகிய வராகமாகி மருப்பாற் பெயர்த் தெடுத்தோ யெனவும்.

25. புட்கலமுதலிய மேகங்கள் பொழிய விசும்பினின்றும் வீழ்கின்ற நீரை.

*"கழிபெருங்காரிகை யென்புழி ஒரு பொருட்பன்மொழிபற்றி இவ்வுயிர் அழகது சிறப்பு உணர நின்றதென்றார் ; ... ... ... பரிபாட்டினுள், நிவந்தோங்குயர் கொடிக்கும் இவ்வாறுரைத்தார்*" என்பது, திருக்குறள் நுண்பொருண்மாலை. 571 ; செந்தமிழ். தொகுதி 7, பக்கம் 526-பார்க்க.

† 'ஊழியூழிக்கண்...உழுதோய்' என்னும் பகுதி, தக்கயாகப்பரணி, 340-ஆம் தாழிசையுரையில் மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ளது.

‡ அகத்திணையியல், சூ.5

பி-ம். [1] கூற்று.

*சேவலாய்ச் சிறகர்ப் புலர்த்தியோ யெனவும்*
*ஞாலத் துறையுட் டேவரும் வானத்து*
**நாலெண் டேவரும் நயந்துநிற் பாடுவோர்*
*பாடும் வகையேயெம் [1] பாடறாமப்*
*பாடுவார் பாடும் வகை*
*கூந்த லென்னும் பெயரொடு கூந்தல்*
*எரிசினங் கொன்றோய் நின் [2] புகழுரு வினகை*
*நகை †யச் சாக நல்லமிர்து கலந்த*
*நடுவுநிலை திறம்பிய நயமி லொருகை*

---

26. சிறகரால்.

27. ஞாலத்தை உறையுளாகவுடைய தேவர் - முனிவர்.

28. நால்வகைப்பட்ட எண்ணினையுடைய தேவரென்றது, மேற் சொல்லிய முப்பத்து மூவரையும்.

28-30. நின்னை நயந்து பாடுவாராகிய இவர்கள் பாடுவது தமக்கு முன்னோராகிய பாடுவார் பாடும்வகையே; எம்பாடல்தாமும் எமக்கு முன்னோராகிய அப்பாடுவார் பாடும்வகையே; அதனால், நின்தொன்மையும் பெருமையும் அறியாமைக்கண் எம்மோடு அவரிடை வேற்றுமையின்று.

29. உம்மை, செய்யுள் விகாரத்தாற்றொக்கது.

31-2. ‡ கூந்தன்மா என்று கண்டார் சொல்லும் வடிவொடுவந்த கேசியது கனல்கின்ற சினத்தை அழித்தோய்.

கூந்தலையுடையமாவை, ‘கூந்தல்’ என்றும் பெயரினையுடைய வடிவை ‘பெயர்’ என்றுங் கூறினார், ஆகுபெயரான்.

கேசி - குதிரையாய்வந்து பொருதானோரசுரன் ; இப்பெயர் கேசமென்னும் வடமொழி முதனிலையாக முடிந்தமையின் அதன் பொருண்மைபற்றி, ‘கூந்தல்’ என்றார்.

32. எண்ணிறந்தமையான் நின்கைகள் நின்புகழை யொத்தன.

கடந்தன, கழிந்தன என்பனபோல உருவின வென்பது ஈண்டு உவமச்சொல்லாய் நின்றது.

33.-4. மோகினியாகிய நின்வடிவினைக் கண்டு மகிழ்ந்த மகிழ்ச்சியே அவுணர்க்கு அச்சமாய் முடிய அமரர்க்கு நல்லமிர்தினைப் பகுத்திடுதலால் நடுவுநிலைமையிற்றப்பிய நலமில்லாத ஒரு கையினையுடையை.

---

* நாலெண்டேவரை, “நால்வே றியற்கைப் பதினொரு மூவர்” என்பர்; முருகு. 167.

† அச்சு - அச்சம் ; கடைக்குறை ; பதிற். 90.

‡ மேவார் விடுத்தந்த கூந்தற் குதிரையை, வாய்பகுத் திட்டு” (கலி. 103) ; “கூந்தல்வாய் கீண்டானை” இயற்பா. 2-ஆம் திரு. 93.

பி-ம். [1] பாடறாமுமப. [2]. புகழொருவின.

இருகை மாஅல்
முக்கை முனிவ நாற்கை யண்ணல்
ஐங்கைம் மைந்த வறுகை நெடுவேள்
எழுகை யாளி வெண்கை யேந்தல்
* ஒன்பதிற்றுத் தடக்கை மன்பே ராளா
பதிற்றுக்கை மதவலி நூற்றுக்கை யாற்றல்
ஆயிரம் விரித்தகைம் மாய மள்ள
பதினா யிரங்கை முதுமொழி முதல்வ
நூறா யிரங்கை யாறறி கடவுள்
அனைத்து மல்லபல [1] வடுக்க லாம்பல்
இனைத்தென வெண்வரம் பறியா யாக்கையை
நின்னைப் புரைநினைப்பி னீயல துணர்தியோ
முன்னை மரபின் முதுமொழி முதல்வ
நினக்குவிரிந் தகன்ற கேள்வி யனைத்தினும்
வலியினு மனத்தினு முணர்வினு மெல்லாம்

---

33. அமிர்துண்டலை மறப்பித்த காமமகிழ்ச்சி பின் இறத்தற்குக் காரணமாயினமையின், 'நகையச்சாக' என்றார்.

34. இருதிறத்தாரும் கடைய ஒரு திறத்தார்க்கே இட்ட கை 'நடுவு நிலை திறம்பிய நயமி லொருகை' எனப்பட்டது. அவுணர்க்கெனவும் அமரர்க்கெனவும் வருவித்துரைத்ததூஉம் இது நோக்கி.

35. இருகை மாலே!

36 - 43. † தனக்கோர் வடிவும் பெயரும் இன்றி அன்பராயினார் கருதிய வடிவே வடிவாகவும் அவர் இட்ட பெயரே பெயராகவுமுடைய னாதலின், 'முக்கை முனிவ' என்பது முதலாக 'நூறாயிரங்கை யாறறி கடவுள்' என்பது ஈறாக வடிவுவேற்றுமையும் பெயர் வேற்றுமையும் சொல்லப்பட்டன.

44-6. அவ்வளவுமல்ல ; பலவாக அடுக்குதலையுடைய ஆம்பலென்னும் எண்தாம் இனைத்தென எண்ணும் எண்ணிற்கு எல்லையறியப்படாத வடிவினையுடையை; நின்னை உயர்வுகூறக் கருதின் அது நீயே உணரினல்லது பிறரான் உணரப்படுதியோ?

47. அநாதியாய் வருகின்ற மரபினையுடைய வேதத்திற்கு முதல்வ!

48-50. விரிந்து அகன்ற ஆகமங்களனைத்தானும் அகங்காரத்தானும்

---

* "ஒன்பானிறுதி யுருபுநிலை" (தொல். குற். இள. ந.) என்பதனுரையில், 'ஒன்பதிற்றுத் தடக்கை' என்பது மேற்கோளாகக் காட்டப் பெற்றுள்ளது.

† 'மனக்கோ ணினக்கென வடிவுவே றிலையே' பரி. 4: 56.

பி-ம். [1] வடுக்காம்பல்.

*வனப்புவரம் [1] பறியா மரபி னோயே*
*அணிநிழல் வயங்கொளி யீரெண் டீங்கதிர்ப்*
*பிறைவளர் நிறைமதி யுண்டி*
*அணிமணிப் பைம்பூ ணமரர்க்கு முதல்வனீ*
*திணிநிலங் [2] கடந்தக்காற் றிரிந்தயர்ந் தகன்றோடி*
*நின்னஞ்சிக் கடற்பாய்ந்த பிணிநெகிழ் பவிழ்தண்டார்*
*அன்னவர் படவல்லா வவுணர்க்கு முதல்வனீ*
*அதனால், பகைவ ரிவரிவர் நட்டோ ரென்னும்*
*வகையு முண்டோநின் மரபறி வோர்க்கே*
*ஆயிர வணர்தலை யரவுவாய்க் கொண்ட*
*சேவ லூர்தியுஞ் செங்கண் மாஅல்*
*[3] ஓவெனக் கிளக்குங் கால முதல்வனை*

மனத்தானும் உணர்வினானும் மற்றும் எல்லாவற்றானும் நினக்கு வனப்பும் எல்லையும் அறியப்படாத மரபினோய்.

49. வலியுடையதனை வலியென்றார்.

51-3. மதியென்பதனை அழகிய குளிர்ச்சிமிகுமதி, ஒளிமதி, பிறையாய் வளர்மதி, நிறைமதியென வினைத்தொகை யடுக்கொடு கூட்டியும் இனிய கலைகள் பதினாறினையும் உடையமதியென வேற்றுமைத் தொகையாகக் கூட்டியுமுரைக்க.

52-3. *அம்மதியை உணவாகவுடைய அமரர்க்கு முதல்வன் நீ.

54-6. மயங்கி நினக்குப் பிழைசெய்து, நீ † அணுத்திணிந்த நிலவுலகத்தை அளக்க அப்பெருமையைக் கண்டு நின்னை அஞ்சி அகன்று போய்க் கடற்கட்பாய்ந்த அத்தன்மையையுடைய அவுணர்க்கும் அகப்பட அவ்வாறு பிழைசெய்யாது நின்ற அவுணர்க்கும் முதல்வன் நீ.

55-6. கட்டவிழ்ந்து மலர்ந்த தண்டாரையுடைய அன்னவரென்க. திரிந்து அயர்ந்து அஞ்சி அகன்று ஓடியென்னும் செய்தெனெச்சங்கள் பாய்ந்த என்னும் வினைமுதல்வினை கொண்டன.

57. அதனால் -அத்தன்மையையுடைய இருதிறத்தார்க்கும் நீ ஒத்திருத்தலால்.

57-8. நின் இயல்பினை அறிவார்க்கும் இவர் பகைவர் இவர் நட்டோரென்னும் கூறுபாடுண்டோ?

59-61. ஆயிரமாகிய கிளர்ந்த தலையையுடைய அரவை வாய்க்கட்கொண்டநின் ஊர்தியாகிய சேவலும் நொந்து, ‘செங்கண்மாலே! ஓ!’ என அலறும் காலமுதல்வன் நீ.

* “அருந்த வானவர்க் காரமு தன்புட னளிப்போன்” வில்லி. பாரதம், குருகுல. 2. † புறநா. 2:1, உரை.

பி-ம். [1] வனப்பறியா. [2] கடந்தகாற். [3] ஓஓவென.

[1] ஏஎ இனகிளத்தலி னினைமைநற் கறிந்தனம்
தீயினுட் டெறனீ பூவினு ணாற்றநீ
*கல்லினுண் மணியுநீ சொல்லினுள் வாய்மைநீ
அறத்தினு ளன்புநீ மறத்தினுண் மைந்துநீ
வேதத்து மறைநீ பூதத்து முதலுநீ
வெஞ்சுட ரொளியுநீ திங்களு ளளியுநீ
அனைத்துநீ யனைத்தினுட் பொருளுநீ யாதலின்
உறைவு முறைவது மிலையே யுண்மையும்
மறவியில் சிறப்பின் மாயமா ரனையை
முதன்முறை யிடைமுறை கடைமுறை தொழிலிற்
பிறவாப் பிறப்பிலை பிறப்பித்தோ ரிலையே

என்றது, நீ இந்திரற்கு இளையோனாய் அசுரரை வெல்கின்ற காலத்து 'இவ்வெற்றியெல்லாம் இவனின் ஆயவல்ல; இவனைத் தாங்கிச் செல்கின்ற என்னின் ஆய' என்று கருடன் தன்னை வியந்திருப்ப, அக்கருத்தை ஒழித்தற்பொருட்டு 'நீ என் மெய்ம்முழுதும் தாங்கல் வேண்டா; ஒருகையிற் சிறுவிரற்றுணை தாங்கினையெனின் நீ கூறியவாறே யாகும்' என்று அத்துணை அவன்மேல் வைப்ப அவ்விரற்கு ஆற்றாது பாதலத்து வீழ்ந்து நெடுங்காலம் கிடந்து துதித்தான்; அத்தன்மைத்தாய வலி தாழக்கொண்ட மெய்களினு முடையை யென்றவாறு.

61. காலமுதல்வன் -காலத்திற்கு முதல்வன்.

62. நின்னைச் சாமவேதம் இத்தன்மையையெனச் சொல்லுதலின் இத்தன்மையை விளங்க அறிந்தனம்.

உபசாரவழக்கால் ஏஎ என்னும் இசையுடையதனை 'ஏஎ' என்றார்.

இனி அறிந்தவாறு:-

63. தெறல்- வெம்மை. நாற்றம் - மணம்.

64. மணி - மணியாந் தன்மை.

65. அன்பு - மென்மை. மைந்து - வன்மை.

66. மறை - உபநிடதம். முதல் - ஆகாயம்.

67. வெஞ்சுடர் - ஆதித்தன்.

68 - 70. இனிச் சொல்லாத எல்லாப் பொருளும் நீ ; அவற்றின் உட்பொருளும் நீ; ஆதலால் நீ உறைதலுமில்லை ; உறையுமிடமுமில்லை; மறவியுடையார் மறவியில் சிறப்புப்பெறுதல் காரணமாக அவை நினக்கு உளவாந் தன்மையும் பொய்; மேற்சொல்லிய தன்மையையாதலான்.

70, ஆர் : அசை.

71-2. உலகில் முதலினும் இடையினும் இறுதியினும் படைப்பு.

* நான்மணி. 5; சீவக. 4.

பி-ம். [1] ஏஎயெனக்.

பறவாப் பூவைப் பூவி னோயே
அருள்குடை யாக வறங்கோ லாக
இருநிழல் படாமை மூவே ழுலகமும்
ஒருநிழ லாக்கிய வேமத்தை மாதோ
பாழெனக் காலெனப் பாகென வொன்றென
இரண்டென மூன்றென நான்கென வைந்தென

அளிப்பு அழிப்பென்னுந் தொழில் வேற்றுமைபற்றிப் பிறவாப்பிறப் புடையையல்லை; அங்ஙனம் பிறந்துவைத்தும் பிறப்பித்தோரையுடையை யல்லை.

73. காயாம்பூவின் நிறத்தினை யுடையோய்!

பறவாப்பூவை: வெளிப்படை. பூ: ஆகுபெயர்.

74. கோல் - காம்பு.

76. முழுநிழற்கண்ணவாகச் செய்த. மாதோ: அசை.

77. பாழ் - புருடன்.

சாங்கியர் பிறிதொன்று பிறத்தற்கிடனாகாதென்பவாகலான், அவர் மதம்பற்றிப் புருடனை, 'பாழ்' என்றார், ஈண்டுத் * தத்துவங் கூறுகின்றமையின். கால் - ஆகாயமுதற் பூதங்களைந்தும்.

தாம் பிறவற்றிற்றோன்றுதலானும் பிற தோன்றுதற்கு இடனாதலானும் அவ்வாறு கூறப்பட்டன. பாகு - வாக்கும் காலும் கையும் [1] பாயுவும் உபத்தமும் ஆகிய கன்மேந்திரியங்கள் ஐந்தும்.

இவையும் பூதங்களாயடங்குமாயினும் சொல்லல், இயங்கல், கொடுத்தல், விடுத்தல், இன்புறுதலென்னும் தொழிலாற் பாகுபட்டமையிற் பாகென்றார்; கூறுபட்ட பொருள்களைக் கூறென்றாற்போல.

ஒன்று - ஆகாயத்தின் பண்பாகிய ஓசை. எல்லாப்பண்பிற்கும் முற்றோன்றுதலான் ஒன்றெனப்பட்டது.

இங்ஙனம் பிறப்புமுறைபற்றி எண்ணாற் கூறப்படுதல் வருகின்ற பண்புகட்குமொக்கும்.

78. இரண்டு-காற்றின் சிறப்புப் பண்பாகிய ஊறு. மூன்று - தீயின் சிறப்புப்பண்பாகிய உருபு. நான்கு - நீரின்சிறப்புப் பண்பாகிய சுவை. ஐந்து - நிலத்தின் சிறப்புப்பண்பாகிய நாற்றம்.

இரண்டு முதலாகிய எண்கள் நான்கும் ஈண்டுப் புரணப் பொருளவாய் நின்றன.

---

* 27-ஆம் திருக்குறளின் விசேடவுரையில் இவ்வுரையாசிரியரெழுதிய வாற்றாலும் இங்கேயுள்ள தத்துவமுறைகள் நன்கு உணரலாகும்.

பி-ம். [1] பாயுரும்.

ஆறென வேழென வெட்டெனத் தொண்டென
நால்வகை [1] யூழியெண் ணவிற்றுஞ் சிறப்பினை
* செங்கட் காரி கருங்கண் வெள்ளை
பொன்கட் பச்சை பைங்கண் மாஅல்
இடவல குடவல கோவல காவல

79 ஆறு - செவி தோல் கண் நா மூக்கு என்னும் ஞானேந்திரியங்கள் ஐந்தும் மனமும். மனத்தோடுகூட இந்திரியங்கள் ஆறென்பாரும் உளராதலின் ஒருங்கோதினார்.

ஏழு - அகங்காரம். எட்டு - மான். † தொண்டு - மூலப்பகுதி.

மனம் தொடங்கிச் சிறப்புமுறைபற்றி எண்ணுகின்றாராகலின், இவற்றை இவ்வெண்களாற் கூறினார். ஈண்டும் ஏழு முதலாய எண்கள் புரணப்பொருள.

80. நால்வகையுகங்களிலும் இவ்வெண்களால் நவிலப்படுஞ் சிறப்பினையுடையை.

என்றது: பூதங்களைந்தும் கன்மேந்திரியங்களைந்தும் ஞானேந்திரியங்களைந்தும் புலன்களைந்தும் மனமுதலிய அந்தக்கரணங்கள் மூன்றும் மூலப்பகுதியும் புருடனுமெனப்பட்ட தத்துவம் இருபத்தைந்தனாலும் எக்காலத்தும் ஆராயப்படும் பெருமையையுடையை யென்றவாறு.

81. செங்கட்காரி - வாசுதேவனே ! கருங்கண் வெள்ளை - சங்கருடணனே!

82. பொன்கட்பச்சை - சிவந்த உடம்பினையுடைய காமனே ! பச்சையென்பது பிரத்தியும்நனென்னும் வடமொழித்திரிபு. பைங்கண்மால் - பசிய உடம்பினையுடைய அநிருத்தனே! நால்வகை வியூகமுங் கூறியவாறு.

83. இடவல - ஆய்ச்சியரொடு குரவைகோத்தலால் அவர்க்கு இடமும் வலமும் ஆயினோய்! ‡குட அல - கூத்தாடுதற்கு எடுத்த குடத்தினையும் பகைவரைக் கொல்லுதற்கு எடுத்த அலப்படையினையு முடையோய்.

'இடவலவ', 'குடவலவ' எனற்பாலன செய்யுள் விகாரத்தாற் குறைந்து நின்றன.

* திருச்சந்தவிருத்தம், 44. † தொண்டு - ஒன்பது.

‡ குடக்கூத்தென்பது திருமாலிற்குரிய கூத்துக்களுள் ஒன்று ; அதற்குரிய உறுப்புக்கள் ஐந்து: "குடத்தாடல் குன்றெடுத்தோ னாடலதனுக், கடைக்குவ வைந்துறுப் பாய்ந்து", "வாணன் பேரூர் மறுகிடை நடந்து, நீணில மளந்தோ னாடிய [illegible]" (சிலப். 6:54-5); அக்கூத்தாவது தலையிலே அடுக்கு[illegible]இருக்க[illegible] இரண்டு தோள்களிலும்

பி-ம். [1] யூழியுமெ[illegible]

நூல் சேர்க்கை
எண். ______
சென்னை-600 008

*காணா மரப நீயா நினைவ*
*மாயா [1] மன்ன வுலகாண் மன்னவ*
*தொல்லியற் புலவ நல்லியாழ்ப் பாண*
*மாலைச் செல்வ தோலாக் கோட்ட*
*பொலம்புரி யாடை வலம்புரி வண்ண*
*பருதி வலவ பொருதிறன் மல்ல*
*திருவின் கணவ பெருவிறன் மள்ள*
*மாநில மியலா முதன்முறை [2] யமையத்து*
*நாம வெள்ளத்து நடுவட் டோன்றிய*
*வாய்மொழி மகனொடு மலர்ந்த*
*தாமரைப் பொகுட்டுநின் னேமி நிழலே.*

கடவுள் வாழ்த்து
கடுவனிளவெயினனார் பாட்டு
பெட்டனாகனார் இசை
பண்ணுப் பாலையாழ்.

---

84. காணாமரப - அறியப்படாத மரபினோய் ! நீயா நினைவ - அன்பரது விடாத நினைவின்கண்ணோய்!

85. மாயா மன்ன - மாயாத மன்னும் நிலையையுடையவனே!

87. மாலைச்செல்வ - வனமாலையையணிந்த செல்வனே!

88. பொலம்புரியாடை - பொன்னிறத்தான் மிக்க ஆடையினை யுடையாய்!

'பொலம்புரியாடை' என்னும் ஆகுபெயர் அண்மைவிளியேற்று நின்றது.

89. பருதி வலவ - ஆழியை வலப்பக்கத்து உடையாய்!

90. மள்ள - வீர!

91-4. நிறைந்த வெள்ளத்துநடுவு தோன்றிய மாநிலந்தோன்றாத முதற்காலத்துப் பிரமனைக் கொண்டு உந்திக்கண்மலர்ந்த பொகுட்டுத் தாமரையையுடைய நின் நேமியே உலகிற்கு நிழலாவது. எ-று.

'தாமரைப்பொகுட்டு' என்பது, வரையறையின்மையாற் சிறுபான்மை முன்மொழி பின்மொழியாகத் தொக்க இரண்டாம் வேற்றுமைத்தொகை.

(3)

---

குடமிருக்க இரண்டுகைகளிலும் குடங்களை ஏந்தி ஆகாயத்திலே எறிந்து ஆடுவதென்பர்; "குடங்க ளெடுத்தேற விட்டுக் கூத்தாட வல்லவெங் கோவே", "குடமாடீ", "குடமாடிய கூத்தனை", "குடமாடு தடமார்பர்" (திவ்.) என்னும் பெரியார் திருவாக்குக்களும் ஈண்டு அறியற்பாலன.

பி-ம். [1] மன்னவ. [2] யமைந்த.

# நான்காம் பாடல்

## திருமால்

ஐந்திருளறநீக்கி நான்கினுட் டுடைத்துத்தம்
ஒன்றாற்றுப் படுத்தநின் னார்வலர் தொழுதேத்தி
நின்புகழ் விரித்தனர் கிளக்குங்கா லவைநினக்
கிறும்பூ தன்மைநற் கறிந்தே மாயினும்
நகுதலுந் தகுதியீங் கூங்குநிற் கிளப்பத்
திருமணி * திரைபா டவிந்த முந்நீர்
வருமழை யிருஞ்சூன் மூன்றும் புரையு மாமெய்

### (நான்காம் பாடலுரை)

1-2. செவிமுதலாய இந்திரியம் ஐந்தையும் மயக்கமற நீக்கி மைத்திரி, கருணை, முதிதை, இகழ்ச்சியென்னும் நான்கினாலும் சித்தத்தை மாசறுத்துத் தம்மைச் சமாதியாகிய ஒரு நெறிக்கண்ணே படுத்திய நின் அன்பர்.

ஈண்டு ஐந்தென்றது ஐந்தன் காரியங்களை. ஐந்தையுமெனவும் நான்கினானுமெனவும் வந்த முற்றும்மைகள் செய்யுள் விகாரத்தால் தொக்கன. மைத்திரிமுதலிய நான்கும் சித்தத்தை அழகுசெய்தலின், அவற்றை வடநூலார் சித்தபரிகருமமென்ப.

3-5. அப்புகழ்களெல்லாம் நினக்கு இயல்பாவனவல்லது வியக்கப்படுவன அல்லாமையை அறிந்துவைத்தும் அத்தன்மையமல்லாத யாங்கள் அவற்றுட் சிலவற்றை ஈங்கும் ஊங்குமாகப் பிறழக் கூறுவதற்கு நீ நகுதலும் எமக்கு ஒரு தகுதியாம்; அதனால் யாம் கிளத்தலும் ஒழிதற்பாற்றன்று.

6-7. திருமணியும் முந்நீரும் காலத்தின்கண்வரும் சூன்மேகமுமாகிய இம்மூன்றையு மொக்கும், கரியமேனி.

அடுத்துவரலுவமை.

திரைகிளர்ந்தவழி வெண்மையுடைமையின் ‘திரைபாடவிந்த’ என்றார். † ‘மழையிருஞ்சூல்’ என்பதனை மேல் ‘தாமரைப்பொகுட்டு’ (3:94) என்றதுபோலக் கொள்க.

---

* “திரைபாடவிந்த” என்பது, அவிதல் குறைதலென்பதற்கு மேற்கோள்;சீவக. 289, ந.

† “உள்ளூர்-ஊர்நடு; முன்பின்னாகத்தொக்க ஆறாம் வேற்றுமைத்தொகை...இவ்வுரையாசிரியர், வடநூன்மரபும் வடநூலை மொழிபெயர்த்துச் செய்த வீரசோழிய முதலிய பின்னூலுங்கண்டு இவ்வாறுரைத்தார் போலுமென்க; பரிபாட்டினுள், ம் ழையிருஞ்சூல்’

மாஅ மெய்யொடு முரணிய வுடுக்கையை
நோனா ருயிரொடு முரணிய நேமியை
செயிர்தீர் செங்கட் செல்வ [1] நிற் புகழப்
புகைந்த நெஞ்சிற் புலர்ந்த சாந்திற்
பிருங்க லாதன் பலபல பிணிபட
வலந்துழி, மலர்ந்த நோய்கூர் கூம்பிய நடுக்கத்
தலர்ந்த புகழோன் றாதை யாகலின்
இகழ்வோன், இகழா நெஞ்சின னாகநீ யிகழா
நன்றா [2] நட்டவவ னன்மார்பு முயங்கி
ஒன்றா நட்டவ னுறுவரை மார்பிற்
படிமதஞ் சாம்ப வொதுங்கி
இன்ன லின்னரொ டிடிமுர சியம்ப
[3] வெடிபடா வொடிதூட் டடியொடு
தடிதடி பலபட [4] வகிர்வாய்த்த வுகிரினை
[5] புருவத்துக் கருவல் [6] கந்தத்தாற்
றாங்கியிவ் வுலகந் தந்தடிப் படுத்ததை நடுவண்
ஓங்கிய பலர்புகழ் குன்றினோ டொக்கும்

8. முரணுதல் - பொன்னிறத்ததாய் மாறுகோடல்.

10. செயிர்தீர்செங்கண் - கோபத்தாலன்றி இயல்பாகவேசிவந்த கண்.

10-21. பிருங்கலாதன் நின்னைப் புகழ்தலாலே இரணியன் சினத்தீயாற் புகைந்த நெஞ்சொடும் புலர்ந்த சாந்தொடும் அவன் பலபல பிணிகள் படப் பிணித்தவழி அம்மிக்க நோயால் ஒடுங்குதற்குக் காரணமான நடுக்கத்தையுடைய அப்பிருங்கலாதன் தன் தாதையாகலின் அவ்விகழப்படுவோனை இகழாத நெஞ்சினனாக, நீ அவனை இகழ்ந்து தனக்கு நன்றாகநட்ட அப்பிருங்கலாதன் வருந்தாமல் அவன் நெஞ்சிற்பொருந்தி நின்னோடு ஒன்றாக வரங்கொண்ட இரணியனது உறுவரைபோலும் மார்பிற் பகைவலி கெடச்சென்று துன்பத்தைக்காட்டும் உற்பாதங்களோடு பொருந்தி அவன் இடிமுரசு ஒலிப்ப நீ புறப்படுதலால் வெடித்து ஒடிந்த தூணின் பிளப்போடொத்த நின்னால் தடியப்பட்ட ஊன்தடி பலபட வகிர்தல் வாய்த்த உகிரினை.

மார்பின் (17) வகிர்தல் (21) என இயையும்.

* படியென்பது பாகதச்சிதைவு. ஒருகாலத்தே இரண்டுதடியும் வீழ்ந்தனவென விரைவு கூறியவாறு.

22-4. முன் வெள்ளத்தழுந்தினகாலத்து வராகமாய்க் கருமையையும்

என்பதனை முன்பின்னாகத் தொக்க இரண்டாம் வேற்றுமைத்தொகை யென்றார் இவ்வுரையாசிரியர். ஆகையால் அவர்கருத்து எம்மனோர்க்கு அறிதலரிதென்க" திருக்குறள் நுண்பொருண்மாலை, 216; செந்தமிழ், 7-ஆம் தொகுதி 89-ஆம் பக்கம்.

* "படிமதஞ் சாய்த்தோய்" என்பர் பின்னும் ; 47.

பி-ம். [1] நிற்புகழ்பு. [2] நட்டவன்வண்ணமார்பு. [3] வெடிபட. [4] வகிர்தல் வாய்த்த. [5] பூருவத்து. [6] கந்தரத்தாற்.

நின், *வெம்மையும் விளக்கமு ஞாயிற்றுள
நின், தண்மையுஞ் சாயலுந் திங்களுள
நின், சுரத்தலும் வண்மையு மாரியுள
நின், புரத்தலு நோன்மையு ஞாலத்துள
நின், நாற்றமு மொண்மையும் †பூவையுள
நின், தோற்றமு மகலமு நீரினுள
நின், உருவமு மொலியுமா காயத்துள
நின், வருதலு மொடுக்கமு மருத்தினுள

---

வன்மையையுமுடைய கழுத்தாற் றாங்கி இவ்வுலகத்தை அவ்வெள்ளத்தினின்றும் எடுத்துத் திருத்தியதொழில் மேருவின் தொழிலோடொக்கும்.

25. ஞாயிற்றுள - ஞாயிற்றின்கண்ணே காணப்படாநின்றன. வருகின்றவற்றையும் இவ்வாறு உரைக்க.

26. சாயல் - மென்மை; திங்களின் கண்ணேயுள.

25-6. வெம்மை தண்மையென்றது பகைவர்மாட்டு வெகுளுதலையும் அன்பர்மாட்டு அருளுதலையும்.

27. சுரத்தல் - கொடுக்கக் கொடுக்கப் பொருள் வளர்தல். வண்மை - கொடை.

28. புரத்தல் - தாங்குதல். நோன்மை - பொறை.

29. பூவை - பூவைப்பூ.

30. தோற்றம் - வெளிப்படுதல். அகலம் - பெருமை.

நாராயணனென்னுந் திருநாமம் நீரின்கட் காணப்படுதலாகிய இக்காரணம்பற்றி வந்தது.

31. உருவம் - ஞானக்கண்ணாற் காணப்படும் உருவம். ஒலி - சொல்; ஆகாயத்துளவென்றார், அதன் பண்பாகலின்.

32. வருதல் - அவதரித்தல். ஒடுக்கம் - மீண்டு சென்று அடங்குதல். மருத்து - காற்று.

---

* "ஈண்டுநீர் மிசைத்தோன்றி யிருள்சீக்குஞ் சுடரேபோல், வேண்டாதார் நெஞ்சுட்க வெருவந்த கொடுமையும், நீண்டுதோன் றுயர் குடை நிழலெனச் சேர்ந்தார்க்குக், காண்டகு மதியென்னக் கதிர்விடு தண்மையும்" (கலி. 100); புறநா. 55: 13-6; 59:6-7.

† பூவைநிலையென்னுந் துறை ஈண்டு அறியற்பாலது.

*அதனால், இவ்வு முவ்வு மவ்வும் பிறவும்*
*ஏம மார்ந்த [1] நிற் பிரிந்து*
*மேவல் சான்றன வெல்லாம்*
*சேவலோங் குயர்கொடி யோயே*
*சேவலோங் குயர்கொடி*
*நின்னொான் றுயர்கொடி பனை*
*நின்னொான் றுயர்கொடி நாஞ்சில்*
*நின்னொான் *றுயர்கொடி யானை*
*நின், [2] ஒன்றா வுயர்கொடி யொன்றின்று*
*விடமுடை யரவினுட [3] லுயிருருங் குவணம்*
*அவன், மடிமேல் வலந்தது பாம்பு*

---

33-5. இவையும் உவையும் அவையும் பிறவுமாய் நின்கணின்று பிரிந்து நின்னால் ஏமமுற்றனவெல்லாம் பின்னும் நின்னொடு மேவலமைந்தன.

என்றது, உலகுயிர்களின் தோற்றமும் நிலைபேறும் ஒடுக்கமும் நின் கண்ணவென்றவாறாம்.

† இவையென்றது நணியவற்றை ; உவை யென்றது அவற்றிற்சேயவற்றை; அவையென்றது அவற்றினும் சேயவற்றை ; பிறவென்றது காணப்படாதவற்றை.

37-42. சேவலோங்கு உயர்கொடியையுடைய நின்னுயர்கொடி ஒன்று பனை. இவ்வண்ணம் பலகொடியுளவேனும் நின் ‡ ஒன்றாக உயர்ந்த கொடியை அக்கொடிகள் ஒன்றுதலின்று ; தன்... ... ...ம் பாம்பின் விடத்தையும் உடலையும் உயிரையும் உண்ணும் உவணமாதலால்.

41. ஒன்றாதல் - முதலாதல் ; ஒன்றுதல் - ஒத்தல்.

43. இன்னும் அது கடவுட்கொடியென்பதுதோன்ற ‘அவன்’ என உயர்திணையாற் கூறினார்; செய்யுளாகலிற் § சுட்டுப்பெயர் முற்கூறப்பட்டது.

---

* “பணைமிசை யெழில்வேழ மேந்திய...ஒருவனை” பரி. 1:4-5.

† “அஅவனும் இஇவனும் உஉவனுங் கூடிய்க்கால், எஎவனை வெல்லா ரிகல்” (யா. வி. சூ.7, மேற்); இங்கிவ ரிங்கிவ ரிங்கிவ ரங்கவ ரங்கவ ருங்குவ ருங்குவரே”, “இந்நிரை யிந்நிரை யந்நிரை யந்நிரை யுந்நிரை யுந்நிரையே” திருவால. 39: 25-6.

‡ கலிங்கத்துப். 18; தக்க. 4, உரை முதலியவற்றைப் பார்க்க.

§ தொல். கிளவி. 39-ஆம் சூத்திரம் இதற்கு விதி.

பி-ம். [1] நிற்பிரிந்த. [2] ஒன்றுயர்கொடி.. [3] லுயிர் நுங்குவணம்.

*பாம்புதொடி பாம்பு முடிமேலன*
*பாம்புபூண் பாம்பு தலைமேலது*
*பாம்புசிறை தலையன*
*பாம்பு, படிமதஞ் சாய்த்தோய் பசும்பூணவை*
*கொடிமே லிருந்தவன் றாக்கிரை யதுபாம்பு*
*கடுநவை யணங்குங் கடுப்பு நல்கலும்*
*கொடுமையுஞ் செம்மையும் வெம்மையுந் தண்மையும்*
*உள்வழி யுடையை யில்வழி யிலையே*
*போற்றா ருயிரினும் போற்றுந ருயிரினும்*
*மாற்றே மாற்ற லிலையே நினக்கு*
*மாற்றோ ரும்மிலர் கேளிரு மிலரெனும்*

---

43. வயிற்றின்மேல் உதரபந்தமாய் வலந்தது.

* "படியை மடியகத் திட்டான்" என்புழியும் வயிறு மடியெனப்பட்டது.

44. முடிமேலன - கண்ணிகள்.

45. பூண் - கழுத்திற் பூண்பது. தலைமேலது - சூட்டு.

46. சிறகுகளின் தலையிடத்தன.

விகாரத்தால் ஒற்றுக் குறைந்தது.

47. பகைவர் மதங்கெடுத்தோய்! பசும்பூணவை - பொன்னிறத்தவை.

48, தாக்கிரை-எறிந்தெடுக்கும் இரை.

இதனாற் கருடனுக்கு அறனுடைமையும் மறனுடைமையும் கூறப்பட்டன.

49-54. † கடுநவையுண்டாக வருத்தும் வெகுளியும் அருளும் கோட்டமும் செப்பமுமாகிய இவை மறமும் அறமும் உடையாரிடத்து உடையையாய் இல்லாரிடத்து இல்லாயாயிருத்தலல்லது மாற்றாருயிரின் கண்ணும் கேளிருயிரின் கண்ணும் அதனை மாற்றுதற்றொழிலும் அதற்கு ஏமஞ்செய்தற்றொழிலுமுடையையல்லை ; நினக்கு மாற்றோரும் கேளிரும் இலராதலான்.

என்றது, குற்றமாகிய மறமுடையாரிடத்து வெகுளியும் கோட்டமும் உடையையாய் அஃது இல்லாரிடத்து இல்லையாதலும், குணமாகிய அறமுடையாரிடத்து அருளும் செம்மையுமுடையையாய் அஃதில்லாரிடத்து இல்லையாதலுமல்லது நினக்குப் பகையாயினாருயிரின்கண் அதனை மாற்

---

* நான்மணிக். கடவுள்.

† கடுநவை - கடியகுற்றம் ; கலி. 12.

*வேற்றுமை யின்றது [1] போற்றுநர்ப் பெறினே*
*மனக்கோ ணினக்கென வடிவுவே றிலையே*
*கோளிரு ளிருக்கை யாய்மணி மேனி*
**நக்கலர் துழாஅய் நாறிணர்க் கண்ணியை*
*பொன்னிற் றோன்றிய புனைமறு மார்ப*
*நின்னிற் றோன்றிய நிரையிதழ்த் தாமரை*
*அன்ன நாட்டத் தளப்பரியவை*

றுதற்றொழிலும் நினக்குக் கேளிராயினாருயிரின்கண் அதற்கு ஏமஞ்செய்தற்றொழிலும் உடையையல்லை; †அவ்விருதிறத்தாரும் நினக்கு இன்மை யானென்றவாறு.

55. இவ்வாற்றான் இருதிறத்தாரும் நினக்கு இலரென்றாலும் முன் 'உள்வழி யுடையை இல்வழியிலை' (51) என்ற அதனொடு வேறு பாடின்று, அஃது உணர்வாரைப்பெறின்.

என்றது, உயிர்களது இயல்பான் நினக்குப் பகையும், நட்பும் உளபோலத் தோன்றுவதல்லது நின் இயல்பான் அவை உளவல்லவென்றவாறாம்.

56. ‡ அன்பர் மனத்திற் கொண்டனவன்றி நினக்கென வேறு வடிவு உடையை யல்லை.

57-8. கண்ணைக் கொள்ளுதலையுடைய இருட்கு இடமாய நீல மணி போலும் மேனிக்கட் பிணிவிட்டலர்ந்த துழாயது நாறிணராற் றொடுத்த கண்ணியையுடையை.

59. நிறத்தாற் பொன்போலத் தோன்றிய புகழப்படும் மறுவையுடைய மார்ப!

§திருமகளாதலால், 'புனைமறு' என்றார்.

60-61. நின் உந்தியிற்றோன்றிய தாமரைபோலும் நாட்டத்தை யுடையையாய் அளத்தற்கரியை.

* "கமழ்குரற் றுழாஅய், அலங்கற் செல்வன்" பதிற். 31.

† "வேண்டுதல் வேண்டாமை யிலான்" திருக்குறள், 4.

‡ இந்நூல், 3-ம் பாடலின் 36-43-ஆம் அடிகளின் உரையைப் பார்க்க ; "பேசுவா ரெவ்வளவு பேசுவா ரவ்வளவே, வாச மலர்த்துழாய் மாலையான்-தேசுடைய, சக்கரத்தான் சங்கினான் சார்ங்கத்தான் பொங்கரவ, வக்கரனைக் கொன்றான் வடிவு" திவ். மூன்றாந்திருவந்தாதி.

§ "திருமறுமார்பு" என்பதற்குத் திருவாகிய மறுவையணிந்த மார்பென்று இப்படியே பொருளெழுதினர் நச்சினார்க்கினியர் ; பெரும்பாண். 29, உரை.

பி-ம். [1] போற்றினர்.

*நின்னிற் சிறந்த நின்றா ளிணையவை*
*நின்னிற் சிறந்த நிறைகட வுளவை*
*அன்னோ ரல்லா வேறு முளவவை*
*நின்னோ ரன்னோ *ரந்தண ரருமறை*
*அழல்புரை குழைகொழு நிழறரும் பலசினை*
*ஆலமுங் கடம்பு நல்யாற்று நடுவும்*
*கால்வழக் கறுநிலைக் குன்றமும் பிறவும்*
*அவ்வவை மேய வேறுவேறு பெயரோய்*
*எவ்வயி னோயு நீயேநின் னார்வலர்*
*தொழுதகை யமைதியி னமர்ந்தோயு நீயே*

---

62. வீடளிக்குங்கால் நின்னினுஞ் சிறந்த நின் தாளிணையை யுடையை.

63. நின்கட்சிறந்த நிறைந்த கடவுட்டன்மையையுடையை.

61-3. அகரங்கள் இசைநிறையும் இடைச்சொல்.

64-5. அத்தன்மையவல்லாத இயல்புகள் நினக்கு வேறுமுள; அவை நின்னையொத்த தெய்வமுனிகள் உணரும் உபநிடதப்பொருள்; யாம் உணர்வனவல்லவென்றவாறு.

65. 'அன்ன' எனற்பாலது 'அன்' எனக் குறைந்துநின்றது. † 'ஓர்' இரண்டும் அசைநிலை. அருமறை : ஆகுபெயர்.

66-70. அழல்புரை குழையையும் நிழலைத் தரும் சினையையுமுடைய ‡ ஆலும் கடம்பும் யாற்றிடைக்குறையும் குன்றும் பிறவுமாகிய அவ்விடங்களைப் பொருந்திய பலதெய்வங்களாக வகுத்துச்சொல்லப் படும் பெயரை யுடையோய்!

68. காற்றும் வழங்காத திணிந்த நிலைமையையுடைய குன்றமென்க.

70-71. நின் அன்பர் தொழுத கையினது தாழ்ச்சிக்கண் அகப்பட்டோயும் நீ.

---

* "அந்தண ரருமறை" பரி. 1, 2; இறை. சூ.1.

† "தன்னோ ரன்னோர்க்குத் தான்பயப் படுதலும்" (ஆத்திரையன் பேராசிரியன் பொதுப்பாயிரம்) என்பதிலும் ஓரென்பது அசைநிலையாய் அமைந்திருத்தல் காண்க.

‡ "துறையு மாலமுந் தொல்வலி மராஅமும், முறையுளி பராஅய்", "ஆலுங் கடம்பு மணிமார்" (கலி. 101, 106), "கடவுளாலத்து", (நற். 343, புறநா. 196), "புதுப்பூங் கடம்பும்" (முருகு. 225) என்பவற்றாலும் ஆல் முதலியவற்றில் தெய்வமுறைதல் அறியப்படும்.

*அவரவ ரேவ லாளனு நீயே*
*அவரவர் செய்பொருட் *கரணமு நீயே.*

**கடவுள் வாழ்த்து**
**கடுவனிளவெயினனார் பாட்டு**
**பெட்டனாகனார் இசை.**
**பண்ணுப் பாலையாழ்.**

72. நினைத்தன முடித்தலான், அவரவர் ஏவல் செய்வானும், நீ.
73. அவரவர் செய்த பொருள்கட்குக் காவலும் நீ.
செய்பொருளாவன : அறம், பொருள், இன்பம், வீடென்பன.
70-73. ஏகாரம் நான்கும் ஈற்றசை. (4)

* திருச்சந்தவிருத்தம் 69-ஆவதில் "வரந்தர மிடுக்கிலாததேவரை, யாணமென் றடைந்து வாழு மாதர்காள்" என்புழிக் காவலென்னும் பொருளில் ஆணமென்பது எதுகையில் வந்திருத்தலால், இங்கே "ஆணமு நீயே" எனப் பாடங்கொள்ளுதலும் பொருந்தும்.

# ஐந்தாம் பாடல்
## செவ்வேள்

*பாயிரும் பனிக்கடல் † பார்துகள் படப்புக்குச்
‡ சேயுயர் பிணிமுக மூர்ந்தம ருழக்கித்

(4)

(ஐந்தாம் பாடலுரை)

1. பரந்த கரிய குளிர்ச்சியையுடைய கடலை இடையிற் பாறைகள் பிதிர்ந்து துகள்படப் புக்கு,

2. சேயுயர் - மிக உயர்ந்த. § பிணிமுகம் - முருகற்குரித்தாகிய

* "இறைவன் உமையை வதுவைசெய்துகொண்டநாளிலே இந்திரன் சென்று நீ புணர்ச்சி தவிரவேண்டுமென்று வேண்டிக்கொள்ள அவனும் அதற்கு உடம்பட்டு அது தப்பானாகிப் புணர்ச்சிதவிர்ந்து கருப்பத்தை இந்திரன் கையிற்கொடுப்ப அதனை இருடிகள் உணர்ந்து அவன் பக்கனின்றும் வாங்கித் தமக்குத்தரித்தல் அரிதாகையினாலே இறைவன் கூறாகிய முத்தீக்கட்பெய்து அதனைத் தம் மனைவியர் கையிற் கொடுப்ப அருந்ததி யொழிந்த அறுவரும் வாங்கிக்கொண்டு விழுங்கிச் சூன் முதிர்ந்து சரவணப் பொய்கையிற் பதுமப்பாயலிலே பயந்தாராக, ஆறு கூறாகி வளர்கின்ற காலத்து இந்திரன் தான் இருடிகளுக்குக் கொடுத்த நிலையை மறந்து ஆண்டுவந்து வச்சிரத்தான் எறிய அவ்வாறு வடிவுமொன்றாய் அவனுடனே பொருது அவனைக் கெடுத்துப் பின் சூரபன்மாவைக் கொல்லுதற்கு அவ்வடிவம் ஆறாகிய வேறுபட்ட கூற்றாலே மண்டிச் சென்றதென்று புராணம் கூறிற்று. இதனை, 'பாயிரும் பனிக்கடல்' என்னும் பரிபாடற் பாட்டானுணர்க" என்பதும், "அங்ஙனம் அங்கியின்கணிட்டுச் சத்தி குறைந்த கருப்பத்தை முனிவரெழுவரும் வாங்கித் தம் மனைவியர்க்குக் கொடுப்ப அருந்ததியொழிந்தோர் விழுங்கிச் சூன்முதிர்ந்து சரவணப்பொய்கையிற் பதுமப்பாயலிலே பெற ஆறு வடிவாக வளர்ந்தமை கூறிற்று,.. ...இது பரிபாடலிற் 'பாயிரும் பனிக்கடல்' என்னும் பாட்டானுணர்க" என்பதும் திருமுருகாற்றுப்படையில், 58, 255-ம் அடிகளின் விசேடவுரை ; ந.

† "பார் - வன்னிலம்; முருகாற்றுப்படையுள், 'பார்முதிர் பனிக்கடல்' என்பதுமது; பரிபாட்டுள், 'பார்துகள்பட' என்பதுமது; அதனை இக்காலத்தார் சில்லந்தட்டிற்றென்பர்" என்பது திருக்குறள் நுண்பொருண் மாலை, 1068; செந்தமிழ் 9-ஆம் தொகுதி, பக்கம், 546

‡ இவ்வடி, "பொடித்தரும்பாத" என்னும் கல்லாடச் செய்யுளில், 'பிணிமுக மஞ்ஞை' என்பதற்கு மேற்கோள்; மயிலேறும்.

§ "பிணிமுக வூர்தி யொண்செய் யோனும்" (புறநா, 56); "ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி" முருகு. 247.

*தீயழ றுவைப்பத் திரியவிட் டெறிந்து*
*நோயுடை [1] நுடங்குசூர் மாமுத றடிந்து*
*வென்றியின் மக்களு ளொருமையொடு பெயரிய*
*கொன்றுண லஞ்சாக் [2] கொடுவினைக் கொஃறகை*
*மாய [3] வவுணர் மருங்கறத் தபுத்தவேல்*
**நாவலந் தண்பொழில் வடபொழி லாயிடைக்*
*குருகொடு பெயர்பெற்ற மால்வரை [4] யுடைத்து*
*மலையாற்றுப் படுத்த மூவிரு கயந்தலை*

---

யானை,

3-4, தீயின்கொழுந்து ஒலிப்பத் திரித்துவிட்டெறியப்பட்டு அச்சத்தையுடையனாதலால் நடுங்குகின்ற சூர்மாவினது முதலையறுத்து.

திரித்தென்பது திரியவெனத் திரிந்துநின்றது. விட்டெறிந்தெனச் செயப்படுபொருள் வினைமுதல்போலக் கூறப்பட்டது.

மாவென்னும் பெயரொப்புமைபற்றி 'முதறடிந்து' என்றார்.

5-7, வென்றியுடைமையாற் புண்ணியசனம் பாவசனமென்று இருகூறாய மக்களுட் புண்ணியசனமென ஒரு கூற்றாற் பெயர்பெற்ற அவுணர்.

அஃது அவர்க்குப் பெயர்மாத்திரமே யென்றற்குக் கொன்றுணலான் வரும் பாவத்திற்கு அஞ்சாதவென்றார்.

தீவினையினையும் கொல்லப்படும் தகைமையினையுமுடைய மாயத்தை வல்ல அவுணரென்க.

அவரைக் கிளையறக் கொன்ற வேலால்.

விட்டெறிந்து (3) தடிந்து (4) தபுத்தவேல் (7) என்க.

8-10, நாவலந்தீவினுள் வடகூற்றிற் கௌஞ்சமென்னும் மால்வரையைத் துளைத்து அதனை வழிப்படுத்தின ஆறு மென்றலையினையுடையாய் !

ஈண்டுக் குருகென்றது அன்றிலை. அதற்கு வடமொழிப்பெயர் அதுவாதலின், 'குருகொடு பெயர்பெற்ற மால்வரை' என்றார். வழிப்படுத்துதல் - வழிக்கண் நிகழும் இயக்கத்தை அதன்கண்

---

* "பொருப்புவளன்வேண்டி" என்னும் கல்லாடச்செய்யுளில், "குருகுபெயர்க் குன்றத் துடல்பக வெறிந்த, நெடுவேற் கடவுட்கு" என்பதன் விசேடவுரையில், 'நாவலந்தண்,,,உடைத்து' என்னும்பகுதி மேற்கோள்; மயிலேறும்.

பி-ம், [1] நுணங்குசூர். [2] கொதிவினை. [3] வல்லவுணர். [4]. யுடைத்தம்மலை,

மூவிரு கயந்தலை முந்நான்கு முழவுத்தோள்
ஞாயிற்றேர் [1] நிறத்தகை நளினத்துப் பிறவியை
காஅய் *கடவுள் சேஎய் செவ்வேள்
சால்வ தலைவவெனப் பேஎ விழவினுள்
வேல னேத்தும் வெறியு முளவே
அவை, வாயு மல்ல பொய்யு மல்ல
நீயே [2] வரம்பிற்றிவ் வுலக மாதலிற்
சிறப்போய் சிறப்பின்றிப் பெயர்குவை
சிறப்பினு [3] ஞுயர்பாகலும்
பிறப்பினு [4] ளிழிபாகலும்
ஏனோர்நின் வலத்தினதே

நிகழ்வித்தல், குழவிப் பருவத்து இவ்வீரமெல்லாம் செய்தாயென்னுங் கருத்தால், 'கயந்தலை' என்றார்.

ஊர்ந்து (2) புக்கு (1) உழக்கி (2) உடைத்து (9) ஆற்றுப்படுத்த (10) வெனக் கூட்டுக.

10, † கயந்தலையென்பது பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை ; அஃது ஈண்டு ஆகுபெயராய் அண்மைவிளி ஏற்று நின்றது.

11-2, மூவிரு கயந்தலையுடனும் முந்நான்கு முழவுத்தோளுடனும் ஞாயிற்றின் எழுச்சிபோலும் நிறவழகுடனும் தாமரைப்பூவின்கட் பிறந்த பிறப்பையுடையை,

13, உலகத்தை அழிக்கும் கடவுட்கு மகனே!

14, சால்வ - சால்பினையுடையாய்!

14-5, நீ வெளிப்படுதலிற் கண்டார்க்கு அச்சஞ்செய்யும் வெறியாட்டு விழவினுள் வேலன்கண்டு இவ்வாறு சொல்லி ஏத்தும் வெறிப்பாட்டும் உள.

15, வெறி ; ஈண்டு ஆகுபெயர்,

16-21, இவ்வுலகிற்கெல்லாம் தலைவன் நீயேயாகலான் அவ்விடத்து அவன்கண்டு ஏத்துகின்ற அப்பாட்டுக்கள் மெய்யுமல்ல; ஆயினும் நீ

* "கடவுட் புதல்வ" எனக்கொண்டு அதற்கு இலக்கணமுமெழுதுவர்; முருகு.256, ந.

† "பெருவலி-பெருவலியையுடையன; பண்புத்தொகைப்புறத்து வந்த ஆகுபெயரென்னாது ஆகுபெயரென்றார்; 'பாயிரும் பனிக்கடல்' என்னும் பரிபாட்டினுள், கயந்தலைக்குப் பண்புத்தொகைப்புறத்து வந்த அன்மொழி; ஈண்டு ஆகுபெயரென்றார் இவ்வுரையாசிரியர்" என்பது. திருக்குறள் நுண்பொருண்மாலை, 380; செந்தமிழ், தொ. 7; பக்,324.

பி-ம். 1 நிறத்தகை. 2 வரம்பிற்றுலக. 3 ஞுயர்வா. 4 ளிழிவா.

*ஆதி யந்தண னறிந்து [1] பரி கொளுவ*
*வேத மாபூண் வையத்தே ரூர்ந்து*
*நாக நாணா மலைவில் லாக*
*மூவகை, ஆரெயி லோரழ லம்பின் முளிய*
*மாதிர மழலவெய் தமரர் வேள்விப்*
*பாக முண்ட பைங்கட் பார்ப்பான்*
*உமையொடு புணர்ந்த காம வதுவையுள்*
*அமையாப் புணர்ச்சி [2] யமைய நெற்றி*
*இமையா நாட்டத் தொருவரங் கொண்டு*
*விலங்கென விண்ணோர் வேள்வி முதல்வன்*
*விரிகதிர் மணிப்பூ ணவற்குத்தா னீத்த*
*தரிதென [3] மாற்றான் வாய்மைய னாதலின்*
*எரிகனன் றானாக் குடாரி [4] கொண் டவனுருவு*
*திரித்திட் டோனிவ் வுலகேழு மருளக்*
*[5] கருப்பெற்றுக் கொண்டோர் கழிந்தசே யாக்கை*
*நொசிப்பி னேழுறு முனிவர் நனியுணர்ந்து*

---

வெளிப்படுதலான் அவை பொய்யுமல்ல; அவற்றுள் ஒன்றாயவழி அத் தலைமைச் சிறப்பினையுடைய நீ அச்சிறப்பின்றி ஒழிகுவை ; நின்னை யொழிந்தார் நல்வினையாற் சிறப்புடைய உயர்பிறப்பினராதலும் தீவினை யால் இழிபிறப்பினராதலுமாகிய இது நின்னாணைக்கண்ணது; ஆதலின், அச்சிறப்பு நினக்கு ஒருகாலும் ஒழியாது ; அதனால் அவற்றுள் ஒன்றாகாது.

22-54, நான்முகனாகிய பாகன் கொளுவுமாறறிந்து செலவினைக் கொளுவ வேதங்களாகிய குதிரை பூண்ட பூமியாகிய தேரையேறி வாசுகி நாணாக * இமயம் வில்லாக வெள்ளி பொன் இரும்பென்னும் மூவகையையுமுடைய அரிய மதில்கள் ஒரு தீயாகிய அம்பாலே வேவ அவற்றைத் திசைகள் வெதும்ப எய்து அமரர்க்குச் செய்யும் வேள்விக் கண் அவிப்பாகத்தையுண்ட கோபத்தாற் பசிய கண்ணையுடைய ஈசன் உமையோடு புணர்ந்து காமத்தை நுகர்கின்ற வதுவைநாளின்கண் அமையாத புணர்ச்சியை ஒருகாலத்து அமைந்தானாக, நெற்றிக்கண் இமையாநாட்டத்தையுடைய அவன்பக்கலிலே இந்திரன் ஒரு வரத்தைக் கொண்டு 'இந்தப் புணர்ச்சியாற்றோன்றிய கருவை அழிப்பாயாக' என, மழுப்படையைத் தரித்தவன் வாய்மையனாதலின், அவ்விந்திரனுக்குத் தான் கொடுத்தவரத்தைச் செய்தற்கு அரிதென மாற்றாதே இவ்வுல

---

* "இமையவில் வாங்கிய வீர்ஞ்சடை யந்தணன்" கலி, 38,

பி-ம், 1 பரிக்கொளுவ. 2 யமைக்க. 3 மாற்றாதுவாய்மையதனால். 4 கொண்டதன். கொண்டதைத். 5 கருவேற்று.

*வசித்ததைக் கண்ட மாக மாதவர்*
*மனைவியர் நிறைவயின் வசிதடி சமைப்பிற்*
*சாலார் தானே [1] தரிக்கென வவரவி*
*உடன்பெய் தோரே யழல்வேட் டவ்வவித்*
*[2] தடவுநிமிர் முத்தீப் பேணிய [3] மன் னெச்சில்*
*வடவயின் [4] விளங்கா லுறையெழு மகளிருட்*
** கடவு ளொருமீன் சாலினி யொழிய*
*அறுவர் மற்றையோரு மந்நிலை யயின்றனர்*
*மறுவறு கற்பின் மாதவர் மனைவியர்*
*நிறைவயின் வழாஅது நிற்சூ லினரே*
*நிவந்தோங் கிமயத்து † நீலப்பைஞ் சுனைப்*
*பயந்தோ ரென்ப பதுமத்துப் பாயற்*

---

கேழும் தன் மெய்ம்மையை வியக்க அதனுருவைப் பலகண்டமாகச் சேதித்தான் ; அங்ஙனம் சேதித்தலாற் கழிந்த சேயாக்கையாதற்கு உரியகருவை 'இஃது, அமரர் சேனைக்குத் தலைவனாம்' எனச்சமாதி யானுணர்ந்து (?) இந்திரனுக்கிரதம் வாராமை கூறி அவன் பக்கலிலே பெற்றுக்கொண்டுபோன தெய்வ முனிவர்கள் எழுவரும் இறைவன் கண்டமாக வசித்ததாகிய வசிதடியை நம்மனைவியர் தரித்துச் சமைவிப்பாராயின் நிறைவயிற்சாலார் ; அதனால் அங்கியாகிய தானே தரிக்கவென வெண்ணி, அம்மாதவர் அழலைவேட்டு அதன் கண் அவியுடனே பெய்தார் ; பெய்ய, அவ்வவியோடு குண்டங்களில் நிமிர்ந்த முத்தீக்கொள்ளுதலால், புரோடாசமாகிய அதனை வானத்து வடவயினுறைகின்ற மகளிர் எழுவருட் கடவுட்கற்பினையுடைய ஒரு மீனாகிய அருந்ததியொழிய விளங்குகின்ற கார்த்திகையாகிய அறுவரும் அப்பொழுதே அயின்றார்; அயின்றும் தம் கணவர் வேண்ட அயின்ற புரோடாசமாதலால் மறுவற்ற கற்பினையுடைய அம்மாதவர் மனைவியர் நிறையுடைமையின் நீங்காதே நின்னைச் சூற்கொண்டார். கொண்டு பின் இமயத்துச் சரவணமென்னுஞ் சுனையில் தாமரைப் பூவாகிய பாயற்கண்ணே ஒருங்கு பெற்றாரென்று பௌராணிகர் சொல்லுவர் ;

---

* "கடவுளொரு மீன்,,,அயின்றனர்" என்னும் பகுதி, தொல். கிளவி. சூ.49, ந. மேற்கோள்; 'கடவுளொருமீன்...பதுமத்துப் பாயல்' என்னும் பகுதி, "பாய்திரை யுடுத்த" என்னும் கல்லாடச் செய்யுளில், 'இமயம் பூத்த சுனைமாண் டொட்டி, லறிவிற் றங்கி...வைத்தோய்' என்னும் பகுதிக்கு மேற்கோள் ; மயிலேறும்.

† "நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை" முருகு. 253.

பி-ம். 1 தரிக்கென வலியுடன் பெய்தோர். 2 தடவுநிறை. 3 மனெச்சில், மாணெச்சில். 4 விளங்கிற்றால். 5 ஏற்றுக்கொண்டு.

*பெரும்பெயர் முருகநிற் பயந்த ஞான்றே
அரிதமர் சிறப்பி னமரர் [1] செல்வன்
எரியுமிழ் வச்சிரங்கொண் டிகந்துவந் தெறிந்தென
அறுவேறு துணியு [2] மறுவ ராகி
ஒருவனை வாழி யோங்குவிறற் சேஎய்
ஆரா வுடம்பினீ யமர்ந்துவிளை யாடிய
† [3] போரால் வறுங்கைக்குப் புரந்தர னுடைய
‡ அல்லலி லனலன் றன்மெய்யிற் பிரித்துச்
செல்வ வாரணங் கொடுத்தோன் வானத்து
வளங்கெழு செல்வன்றன் மெய்யிற் 4 பிரித்துத்
திகழ்பொறிப் பீலி யணிமயில் கொடுத்தோன்
திருந்துகோன் ஞமன்றன் மெய்யிற் பிரிவித்
திருங்கண் [5] வெள்யாட் டெழின்மறி கொடுத்தோன்

---

முருகா! அவ்வாறு நின்னைப்பெற்ற அன்றே இந்திரன் இகன் மிகுதியான் முனிவர்க்குத் தான் கொடுத்த 6 வரத்தைக்கடந்து வந்து வச்சிரத்தைக்கொண்டெறிந்தானாக முன் அறுவேறாகிய துணியும் அறுவராய்ப் பின்னும் ஒருவனாயினை.

30 நாட்டத்தையுடையவனை ஆகுபெயரால் 'நாட்டம்' என்றார்.

31. வேள்விகளைச்செய்த விண்ணோர்முதல்வனென்க.

37. மனத்தினை ஒன்றாக்கி நுண்ணியதாகக் காண்டலாதலிற் சமாதி 'நொசிப்பு' எனப்பட்டது.

43. §ஆரலென்னும் பெயர், ஆலெனக் குறைந்துநின்றது.

48. நீலப் பூக்களையுடைய பசிய சுனை.

55-70. குழவிப்பருவத்தையாகலான் வளரா உடம்பினையுடைய நீ மேவிவிளையாடிய போரின்கண் வறுங்கைக்கு இந்திரன் உடைதலால்இவ்வாற்றலுடைய இவனே இனி நம் சேனைக்குத் தலைவ

---

* "பெரும்பெயர் முருக" முருகு. 269.

† புறப்பொருள்வெண்பாமாலை, 209, பார்க்க.

‡ "பாய்திரையுடுத்த" என்னும் கல்லாடச் செய்யுளில், 'ஒருமயிலாகி' 'வாரணக் கொடும்பகையாகி'; என்பவற்றின் விசேடவுரையில் 'அல்லலி லனலன்... ...மயில் கொடுத்தோன்' என்னும்பகுதி மேற்கோள்; மயிலேறும்.

§ "அகலிரு விசும்பி னாஅல் போல, வாலிதின் விரிந்த புன்கொடி முசுண்டை" (மலைபடு. 100-101) என்பதும், 'ஆரல் ஆலென விகாரம்' என்னும் அதன் உரையும் இங்கே அறியற்பாலன.

பி-ம். [1] செல்வன்றன்.. [2] மறுவராகிய. [3] போரார்வறுங்கைக்கு. [4] பிரிவித்து. [5] வெளியாட்டு, வெள்ளாட்டு. [6] வாற்றை.

ஆஅங், கவரும் பிறரு மமர்ந்துபடை யளித்த
மறியு மஞ்ஞையும் வாரணச் சேவலும்
பொறிவரிச் சாபமு மரனும் வாளும்
செறியிலை யீட்டியுங் குடாரியுங் கணிச்சியும்
தெறுகதிர்க் கனலியு மாலையு மணியும்
வேறுவே [1] றுருவினிவ் வாறிரு கைக்கொண்டு
மறுவி [2] றுறக்கத் தமரர்செல் வன்றன்
பொறிவரிக் கொட்டையொடு புகழ் [3] வரம் பிகந்தோய்
நின்குண மெதிர்கொண்டோ [4] ரறங்கொண்டோ ரல்லதை
மன்குண முடையோர் மாதவர் வணங்கியோ ரல்லதை
செறுதீ நெஞ்சத்துச் சின [5] நீடி னோரும்
சேரா வறத்துச் சீரி லோரும்
[6] அழிதவப் படிவத் தயரி யோரும்

---

னெனக் கருதி அங்கி கோழியைத் தந்தான்; அவ்விந்திரன் மயிலைத் தந்தான்; யமன் வெள்ளாட்டு மறியைத்தந்தான்; அவ்வாற்றான், அவரும் பிறருமுவந்து தத்தம் மெய்யின் வாங்கிப் படையாகத் தந்த மறிமுதல் மணியீறாகச் சொல்லப்பட்ட வேறு வேறு உருவினவாகிய இவற்றை ஆறிருகையினுங்கொண்டு அத் தாமரைக் கொட்டையிற் பெயரமாட்டாத அப்பருவத்தே அமரர் சேனைக்குத் தலைவனாயினமையின் அவர்க்கு அரசனாகிய இந்திரனது புகழ்வரம்பைக் கடந்தோய்!

62. இருங்கண் - கரிய கண்.

58, 60, 62. கொடைச்சொல் முன்னிலைக்கண் வழுவமைதியாய் வந்தது.

67. மாலை - பாசம்.

68. ஆறிருகையினுமென்னும் முற்றும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கது.

71-80. நினது குணத்தை ஏற்றுக்கொண்டோராகிய அறங்கொண்டோரல்லது வீடுபெறுங் குணமுடையோராகிய மாதவரால் வணங்கப்பட்டோரல்லது உயிர்களைச் செறுகின்ற தீயநெஞ்சத்துச் சினத்தையுடையோரும் அறத்தின்கட் சேராத புகழில்லோரும் கூடா வொழுக்கத்தால் அழிந்த தவவிரதத்தையுடையோரும் இப்பிறப்பின்

---

பி-ம். [1] உருவினவ்வாறிரு, உருவினவாறிரு. [2] துறக்கத்தவமரர். [3] வரம்பிறந்தோய். [4] ரறங்கேட்டோர். [5] நீட்டினோருஞ். [6] பழிதவப்.

*மறுபிறப் பில்லெனு மடவோருஞ் சேரார்*
*நின்னிழ லன்னோ ரல்ல தின்னோர்*
*[1] சேர்வா ராதலின் யாஅ மிரப்பவை*
*பொருளும் பொன்னும் போகமுமல்ல நின்பால்*
*அருளு மன்பு மறனு மூன்றும்*
**உருளிணர்க் கடம்பி னொலிதா ரோயே*

கடவுள் வாழ்த்து
கடுவனிளவெயினனார் பாட்டு
[2] கண்ணனாகனார் இசை
பண்ணுப் பாலையாழ்.†

---

நுகர்ச்சியேயுள்ளது மறுபிறப்பு இல்லையென்னும் மடவோருமாகிய இவர் நின் ‡ தாள்நிழலை அடையார்; அத்தன்மையோரல்லது இத்தன்மையோர் நின் தாள்நிழலை அடைவர்; ஆதலான், நின்னை யாம் இரப்பவை நுகரப்படும் பொருள்களும் அவற்றை உளவாக்கும் பொன்னும் அவ்விரண்டானும் நுகரும் நுகர்ச்சியுமல்ல; எமக்கு வீடுபயக்கும் நின்னருளும் அதனை உண்டாக்க நின்னிடத்து யாம் செய்யும் அன்பும் அவ்விரண்டானும் வரும் அறனுமாகிய இம்மூன்றுமே.

81. ஒலிதார் - தழைத்த தார். (5)

---

* "உருளிணர்க் கடம்பி னொன்றுபடு கமழ்தார்" (பரி.21); "பராரை மராஅத், துருள்பூந் தண்டார் புரளு மார்பினன்" முருகு. 10-11.

† 'இந்தப் பாட்டிற் கெல்லாம் பரிமேலழகரையனுரையாற் பொருளுணர்ந்து கொள்க' என்பது இச்செய்யுள்மட்டும் தனியே எழுதப் பெற்றிருந்த ஓரேட்டின் இறுதியில் எழுதப்பட்டிருந்தது.

‡ 'ஒருவ னிருதாணிழல்' ஐங்குறு. கடவுள்.

பி-ம். [1] சேர்வர்நின்னிழலாதலின். [2] கண்ணகனாகனார், கண்ணாகனார், கண்ணகனார்.

ஓஓஓ

# ஆறாம் பாடல்

## வையை

நிறைகடன் முகந்துராய் நிறைந்துநீர் துளும்புந்தம்
பொறைதவிர் பசைவிடப் பொழிந்தன்று வானம்
நிலமறை வதுபோன் [1] மலிர்புன றலைத்தலைஇ
மலைய வினங்கலங்க மலைய மயிலகவ
மலைமாசு கழியக் கதழு [2] மருவி யிழியும்
[3] மலிநீ ரதர்பல கெழுவு [4] தாழ்வரை
மாசில் பனுவற் புலவர் புகழ்புல
நாவிற் புனைந்த நன்கவிதை மாறாமை
மேவிப் பரந்து விரைந்து வினைநந்தத்
தாயிற்றே தண்ணம் புனல்.

---

## (ஆறாம் பாடலுரை)

1. உராய் - பரந்து.

1-2. நீர் நிறைதலால் துளும்பும் தம் பாரந் தீர்ந்து இளைப்பாற.

3. *ஊழிக்கண் நிலமறையும் வெள்ளம் போலே வெள்ளம்மேலே பரக்க.

4. இனம் - மானினம் முதலாயின.

5-6. விரையும் அருவியாய் வீழ்கின்ற மிக்கநீர் வரும்வழிகள் பல பொருந்தின சாரல்.

7-10. புகழப்படும் அறிவினையுடைய நாவாற் புலவர் பாடிய நன் செய்யுள் பொய்யாகாமல் நாட்ட விரைந்து எங்கும் பரந்து உழவுமுதற் றொழில்கள் பெருக.

8. கவிதை - கவியதுதன்மை. அஃது ஈண்டுச் செய்யுண்மேனின்றது.

வானம்(2) முகந்து உராய்த்தம் (1) பொறைதவிர்ந்து இளைப்பாறவும் (2) நிலத்தின்மேலே வெள்ளம் பரக்கவும் (3) பொழிந்தது; (2) பொழிய மலைச்சாரலில் (6) தண்ணம்புனல் (10) மேவிப் பரந்து நந்தத் (9) தாயிற்று (10) எனக்கூட்டுக.

---

* பரிபாடல், 2-ஆம் பாடலில் 7-12ஆம் அடிகளின் விசேடவுரையைப் பார்க்க ; வையகம் போர்த்த வயங்கொலிநீர் பு.வெ.35.

பி-ம். [1] மலிபுனறலைக்கலைய. [2] மருவிபொழியும். [3] மலிகதிர்பல. [4] தாலவரை.

[1] புகைபூ, அவியா ராதனை யழல்பல [2] வேந்தி
நகையமர் [3] காதலரை நாளணிக் கூட்டும்
வகைசாலும் வையை வரவு..
தொடிதோள் [4] செறிப்பத் தோள்வளை யியங்கக்
[5] கொடிசோ ரத்திருக் கோவை காழ்கொளத்
தொகுகதிர் முத்துத் [6] தொடைகலிழ்பு மழுக
உகிருங் கொடிறு [7] முண்டசெம் பஞ்சியும்
நகிலணி யளறு நனிவண்டன் மண்ட
இலையு [8] மயிரு மீர்ஞ்சாந்து நிழத்த
முலையு மார்பு முயங்கணி மயங்க

11-3 புனலாடு மகளிர் தமக்கு ஈரம் புலரப் புகைக்கப்படும் அகின்மரமுதலாயினவும் அவை புகைத்தற்கு அழலும் சூடுதற்குப் பூவும் வையைக்கு ஆராதனைப் பொருளாகிய அவியும் *பொன்மீன் முதலிய பலவுமேந்தித் தம் மகிழ்ச்சி பொருந்திய காதலரை நாளணியொடு கூடப்பண்ணும் வகை மிக்கது, வையை வரவின்கண்.

11. ஈண்டுப் புகையென்பதூஉம் ஆராதனையென்பதூஉம் ஆகு பெயர்.

14-24. கைகள்தாம் பூரித்தலால் தொடியை அழுந்தப்பண்ண, தோள்வளைபோந்து முன்கைக்கண் அலைய, எழுதின தொய்யிற்கொடிகள் ஒன்றோடொன்று கலந்து அழிய, மேகலைவடங்கள் அற்று உதிர்ந்து நூல் தோன்ற, ஆணிதிரண்ட முத்தினாகிய வடம் கலங்கிப் பூசியவற்றால் நிறம் மழுக, உகிரினும் கபோலத்தினும் எழுதிய செம்பஞ்சியும் அழிய, முலைக்கு அணிந்த குங்குமக்குழம்பு வண்டலிட, படலைமாலையும் குலைந்த மயிரும் பூசின சாந்தத்தைச் சுருக்க, முலையைப் பொருந்தியனவும் மார்பைப் பொருந்தியனவுமாகிய இருவர் அணிகளும் தம்முள் மயங்க, அன்பொத்த அவர் உள்ளம் நிறைவெள்ளத்தை உடைத்தாற்போல வையை வரையையொத்த அணைகளை யுடைத்தது; உடைப்ப, வையையின் திரையாகிய சிறகு கரையாகிய காவலையுடைத்தது; அஃது அடைக்க ஆளேறுதற்குப் பறையறைகவென்னும் கரைகாப்பாருரையாகிய காவலோடே அப்பறையொலியெழ அவற்றைக் கேட்டு ஊர் கிளர்ந்தது.

19. இலை: ஆகுபெயர்.

அழியவென்னும் வினைச்சொல் வருவிக்கப்பட்டது.

* புண்ணிய நதியில் நீராடுவோர் பொன் முதலியவற்றாற் செய்வித்த மீன்முதலியவற்றை அதிற் செல்லவிடுதல் மரபு; காசி காண்டம், 27: 6, பார்க்க.

பி-ம். [1] புகையூ. [2] வேந்திய. [3] காதலர் நாளணிகூட்டும். [4] செறுப்ப. [5] கொடிச்சேருத்திருக்கோவைகாழ்க்கொள. [6] தொடைக்கலிழ். [7] முட்செம்பஞ்சியும். [8] மயிருந்திமிர்சாந்து.

*விருப்பொன்று பட்டவ [1] ருளநிறை யுடைத்தென
வரைச்சிறை யுடைத்ததை வையை வையைத்
திரைச்சிறை யுடைத்தன்று கரைச்சிறை [2] யறைகெனும்
உரைச்சிறைப் பறையெழ வூரொலித் தன்று.
அன்று, போரணி யணியிற் புகர்முகஞ் சிறந்தென
நீரணி யணியி னிரைநிரை பிடிசெல
ஏரணி யணியி னிளையரு மினியரும்
†ஈரணி யணியி னிகன்மிக நவின்று
[3] தணிபுன லாடுந் தகைமிகு போர்க்கண்
துணிபுன லாகத் துறைவேண்டு மைந்தின்
அணியணி யாகிய தாரர் கருவியர்
அடுபுன லது [4] செல வவற்றை யிழிவர்
கைம்மா னெருத்தர் கலிமட மாவினர்
நெய்ம்மாண் சிவிறியர் நீர்மணக் கோட்டினர்
வெண்கிடை மிதவையர் நன்கிடைத் தேரினர்
சாரிகை மறுத்துத் தண்டா வுண்டிகை
[5]ஓரிய வுறுத்தர வூருர் பிடந்திரீஇச்

25-37. அங்ஙனம் கிளர்ந்த அன்று, போர்க்கு அணியும் அணியினையுடைய களிற்றினங்கள் சிறந்தாற்போலக் கிளர்ச்சியையுடைய வையைவாய் நீராட அணிந்த அணியுடனே நிரைநிரையாகப் பிடிகள் செல்லுதலானும் அழகாக அணிந்த அணிகளையுடைய மைந்தரும் மகளிரும் அவற்றை நீக்கிப் புனலாட அணிந்த அணிகளுடனே யானையெருத்தத்தாரும் கலித்த மென்னடைமாமிசையாருமாய் விளையாட்டிகலை மிகவிரும்பித் தண்புனலாடுதற்குவேண்டும் தகுதிமிக்க துணிபுனல் போர்க்களமாகக் குறித்து ஒருவரினொருவர் முற்பட்டுத் துறையை வேண்டுமைந்துடனே திரள்திரளாகிய தூசித்தன்மையராய் அவ்விகற்கு ஏற்ற படைக்கலங்களையுடையராய் உள்விட்ட புழுகுநெய்யான் மாண்ட துருத்தியராய் உள்விட்ட பனிநீரான் மணமிக்க கொம்பினராய் வெண்கிடையாற் சமைத்துச் செல்கின்ற மிதவையராய் நிறம் பிடித்த நன்கிடையாற் சமைத்துச் செல்கின்ற தேரினராய்ச் செலவு தவிராத

* "காமக் கணிச்சி யுடைக்கு நிறையென்னும், நாணுத்தாழ் வீழ்த்த கதவு" (குறள். 1251) என்பது இங்கே அறிதற்பாலது.

† "நீரணி கொண்ட வீரணி நீக்கி" பெருங். 1.42:143.

பி-ம். [1] ருள்ளநிறை. [2] யறையெனு. [3] தண்புனல். [4] செலவு வறையொழியா. [5] ஓரியமுறுத்தர.

*சேரி யிளையர் செலவரு நிலையர்*
*வலிய ரல்லோர் துறைதுறை [1] யயர*
*மெலிய ரல்லோர் விருந்துபுன லயரச்*
*சாறுஞ் சேறு [2] நெய்யு மலரும்*
*நாறுபு நிகழும் யாறுவர லாறு.*
*நாறுபு நிகழும் யாறுகண் டழிந்து*
*வேறுபடு புனலென விரைமண்ணுக் [3] கலிழைப்*
*புலம்புரி யந்தணர் கலங்கினர் மருண்டு.*

---

யானைத்திரளும் குதிரைத்திரளும் தம் கதியிற் சேறலொழிந்து அவ்வொருநெறியிற் செல்வாரை நெருக்குமாற்றான் அவற்றை ஊர்ந்தூர்ந்து இடந்தொறுந் திரிதலானும்.

மைந்துடனே (30) திரிதலானும் (37) என இயையும்.

31. தூசித்தன்மை - முன் செல்லுதல்.

36. 'உண்டை' என்பது * "கோவுண்டை கோட்டாற் றழிவித்த கோன்" என்புழிப்போலத் திரள்மேலதாய் 'உண்டிகை' எனத் திரிந்து நின்றது.

37. 'திரீஇ' என்பது திரிய என்பதன் திரிபு.

38-42. காதலாற் செல்லும் புறச்சேரியில் இளையர் செல்லுதற்கரிய நிலைமையராக மெலியோர் உள்புகமாட்டாமையால் துறையைத் துறையை விரும்ப, வலியோர் புதுப்புனலை உள்புக்காடுதலாற் † பத்துத்துவர் முதலாயின ஊறினநீரும் சந்தனமுதலியவற்றது குழம்பும் ‡ வாச எண்ணெயும் சூடிய பூக்களும் நாற ஒழுகாநின்றது, இவ்வியாறு வருகின்றவாறு.

43-45. அங்ஙனம் நாறியொழுகாநின்ற ஆற்றை மறையைவிரும்பும் அந்தணர் கண்டு, அதன்கண் மகளிரும் மைந்தரும் பூசிய விரைகளைக் கழுவின கலங்கல் நீரை அது தூய்தாய நிலைமையழிந்து வேறுபட்ட புனலென மருண்டு நீராடலும் வாய்பூசலு முதலிய தம் தொழில் செய்யாது நீங்கினர்.

---

* இறை. சூ. 2, மேற். 5-ஆம் கலித்துறை.

† "பத்துத் துவரினு மைந்து விரையினு, முப்பத் திருவகை யோமாலி கையினு, மூறின நன்னீ ருரைத்தநெய் வாச, நாறிருங் கூந்த னலம்பெற வாட்டி" (சிலப். 6 : 76-9) என்பதன் உரையைப் பார்க்க.

‡ "வாச வெண்ணெயும் வண்டிமிர் காந்தமும்" சீவக. 864.

பி-ம். 1 யமர. 2 நேயமு. 3 கலுழை, கலிழ.

*மாறுமென் மலருந் தாருங் கோதையும்*
*வேருந் தூருங் காயுங் கிழங்கும்*
*பூரிய மாக்க ளுண்பது மண்டி*
*நாரரி [1] நறவ முகுப்ப நலனழிந்து*
*வேறா கின்றிவ் விரிபுனல் வரவெனச்*
*சேறாடு புனலது செலவு.*
*[2] வரையழி வாலருவி (?) வாதா லாட்டக்*
*கரையழி வாலருவிக் கால்பா ராட்ட*
*இரவிற் புணர்ந்தோ [3] ரிடைமுலை யல்கல்*
*புரைவது பூந்தாரான் குன்றெனக் [4] கூடார்க்*
*குரையோ டிழிந்துரா யூரிடை யோடிச்*
*[5] சலப்படை யானிரவிற் றாக்கிய தெல்லாம்*

---

46-51. அவரேயன்றிச் சூடிக்கழித்த மென்மலரும் * மைந்தர் தாரும் மகளிர் கோதையும் கரைக்கண் மரத்தனவும் கொடியனவுமாகிய வேரும் தூரும் காய்களும் கிழங்குகளும் பரக்க அதன் மேலும் கீழாய மாக்கள் உண்ணலின் மிக்கு நறவத்தை உகுத்தலான் அவ்விரிபுனல் வரவு அடியின் நலனழிந்து வேறாகாநின்றதென்று பிறரும் நீங்கினர்; அச்சேறாடு புனலது செலவு இது.

'பரக்க' என்பதூஉம் 'பிறரும்' என்பதூஉம் 'இது' என்பதூஉம் வருவிக்கப்பட்டன.

52-60. இரவுக்குறிக்கண் மணந்த தலைவர் எல்லையின்றி இழியும் வெளிய அருவி (?) மண... ...று பாராட்டத் தடையின்றிச் செல்லும் உருவிலதாகிய நல்ல காற்றுத் தாலாட்ட அம்மகளிர் இடைமுலைக்கட்கிடந்து துயிறல்கூடுவது முருகன் பரங்குன்றதன் கண்ணேயென, ஆண்டுச் செல்லாதார்க்குச் சொல்லுதற்றொழிலோடும் இழிந்துபோந்து மதுரையில் தெருவின்கண் ஓடி வஞ்சனைசெய்யும் படையான் இரவிற்செய்ததெல்லாம் ஊர்காப்பார்க்குப் புலப்படநின்று அத்தெருவு வைகறைக்கண் வெறு நிலமாக வார்ந்தது; இவ்வாற்றான் எங்கும் பரந்தது, தமிழையுடைய வையைப் புனல்.

---

* "கலிகொளாயம்...இசையே" என்பதும், 'புதுநீர்விழவின் ஆரவாரத்தைத் தம்மிடத்தேகொண்ட மகளிர்திரள் தம்மிடத்து நெருங்கின கோதை தம் கணவர் மார்பின் மாலையுடனே அழகுபெறக்கூடி அவர்களுடனே நீராடுமோசை' என்னும் அதனுரையும் இங்கே அறியற் பாலன ; மதுரை 264-6, ந.; பட்.109-10, பார்க்க.

பி-ம். [1] நறவழகுவப்பநலனணிந்து. [2] வரையிழிவாலருவிபாதா லாட்ட. [3] ரிடையல்கல். [4] கூட்டார்க்கு, [5] சலப்படை தானிரவிற்.

[1] புலப்படப் புன்னம் புலரியி னிலப்படத்
தான்மலர்ந் தன்றே
தமிழ்வையைத் தண்ணம் புனல்.
விளியா விருந்து [2] விழுவார்க்குக் கொய்தோய்
தளிரறிந்தாய் [3] தாமிவை
பணிபொசி பண்பபண் டெல்லா [4] நனியுருவத்
தென்னோ துவள்கண்டீ
எய்துங் [5] களவினி [6] நின்மார்பிற் றார்வாடக்
கொய்ததும் வாயாளோ கொய்தழை கைபற்றிச்
செய்ததும் வாயாளோ செப்பு.

---

இற்பரத்தையுடன் நீராடிய தலைமகன் காதற்பரத்தைக்கு வையை நீர் விழவு கூறியது.

மேல் அக்காதற் பரத்தை 'நகையமர் காதலரை நாளணிக் கூட்டும், வகைசாலும்' (12-3) எனவும், 'விருப்பொன்று பட்டவ ருளநிறை யுடைத்து' (21) எனவும், 'ஏரணி யணியி னிளையரு மினியரு, மீரணி யணியி னிகன்மிக நவின்று' (27-8) எனவும், இரவிற் புணர்ந்தோ ரிடைமுலை யல்கல், புரைவது பூந்தாரான் குன்று' (54-5) எனவும் அவன் கூறியவற்றை உட்கொண்டு தனக்குக் கையுறைகாட்டினானோடு புலந்து கூறுகின்றாள்:-

61. இத்தளிர் கொய்தது பழையேனாதலான் நீ இகழாநின்ற எனக்கு அன்று ; எப்பொழுதும் புதியராக விரும்பும் மகளிர்க்குக் கொய்தாயென,-

மேல் தலைமகன்:-

62. நீ அறிந்தாய் ; அவைதாம் இவை; மெய்யென்றான்.

என்றது, நீ அறிந்திலை; இத்தளிர்கள் அத்தன்மையவல்லவென்னும் குறிப்பிற்று.

மேல் காதற்பரத்தை:-

63-7. பணியாநிற்கவும் அன்பின்றி [7]முறிந்த பண்பினையுடையாய்! இப்பொழுது களவு வெளிப்படாநின்றது ; பண்டு எனக்கு நீகொய் துழியெல்லாம் கடிதின்வருதலால் தளிர் உருவத் துவட்சியுண்டோ? இஃது அவட்குக் கொய்து சென்று அவளால் மறுக்கப்பட்டமையால் துவண்டவாறு பாராய்; இனி அவள்தான் இதனை நின்மார்பிற்றார்வாட நின்று கொய்ததற்கும் நேர்ந்திலளோ? இக்கொய்தழையைக் கையிற் கொண்டு நீ செய்த தாழ்ச்சிக்கும் நேர்ந்திலளோ? சொல்லு என,-

---

பி-ம். [1] புலப்புடைப்புன்னம்புலரின். [2] வீழ்வார்க்கு. [3] தாமவை. [4] நணியுருவத், நளியுருவத். [5] கனவினின். [6] நின்மார்விற். [7] முரிந்த.

புனைபுணை யேறத் தாழ்த்ததை [1] தளிரிவை
நீரிற் றுவண்ட சேய்குன்றங் காமர்
பெருக்கன்றோ வையை வரவு.
ஆமா [2] மதுவொக்குங் [3] காதலங் காமம்
ஒருக்க வொருதன்மை நிற்குமோ வொல்லைச்
சுருக்கமு மாக்கமுஞ் சூளுறல் வையைப்
பெருக்கன்றோ [4] பெற்றாய் பிழை.
அருகு பதியாக [5] வம்பியிற் றாழ்ப்பிக்கும்
குருகிரை தேரக் [6] கிடக்கும் பொழிகாரில்
இன்னிள வேனி [7] லிதுவன்றோ வையைநின்...
வையை வயமாக வை.
செல்யாற்றுத் தீம்புனலிற் சென்மரம் போல

---

மேல் தலைமகள்:-

68 70. புனைந்த புணையேற வேண்டுகையாலே பொழுதுதாழ்த்தது; அதனால், இத்தளிர்கள் வையைநீர் காரணமாகத் துவண்டன; சேய் குன்றத்து ஆணை ; வையை வரவு அழகிய பெருக்கன்றோ என,-

காதற் பரத்தை, அவள் காமப்பெருக்கம் வையைவரவொக்குமென்றா னாக உட்கொண்டு பின்னும் புலந்து கூறுகின்றாள்:-

71-4. ஆமாம் ; நீ சொல்லுகின்றதொக்கும்; காதலையுடைய காமம் எப்பொழுதும் அவ்வொருதன்மையிலே நிற்குமோ? சிலர்பால் விரையச் சுருங்குதலானும் சிலர்பால் விரையப் பெருகுதலானும் வையைப் பெருக்குத்தானன்றோ? வேண்டாது சூளுற்றுப் பிழையுடையையாயினாய்; இனிச் சூளுறல்.

75-8. வானம் பொழிகின்ற கார்காலத்து எம்பதி நின்பதிக்கு அருகாயிருக்க, புணைகாரணமாக நின்னைத் தாழ்ப்பிக்கும் இன்னிள வேனிற்கண் குருகுகள் இரைதேரும் அளவிற்றாய்க் கிடக்கும் இத்தன் மைத்தன்றோ வையை; அதனால் நின்காமத்தையும் வையைவழித்ததாகக் கருது.

மேல், 'வையைப், பெருக்கன்றோ' (73-4) என்ற துணையல்லது அதன் இயல்பு கூறிற்றிலள்; கூறாதாள் இதனால் அதன் இயல்பு கூறி இவ்வொப்புமையுண்மையான் அதன்கண் அவளொடு நுகர்ந்தநுகர்ச்சி இன்னும் ஒழிதற்பாற்றன்றென்றாளாம் (?)

79-86. தனக்கென ஒரு செலவின்றி* யாற்றின்கட் செல்கின்ற

---

* "நீர்வழிப் பட்ட புணை" நீதிநெறி. 44.

பி-ம். [1] தளரிய. [2] மதுவொக்குமாகாதாங்காமம். [3] காதரங். [4] பெற்றாம்பிழை. [5] வம்பிற்றாழ்ப். [6] கடக்கும். [7] லிதுவொன்றோ.

*[1] வவ்வுவல் லார்புணை யாகிய மார்பினை*
*என்னும் பனியா யிரவெல்லாம் வைகினை*
*வையை யுடைந்த மடையடைத்தக் கண்ணும்*
*பின்னு மலிரும் பிசிர்போல வின்னும்*
*அனற்றினை துன்பவிய [2] நீயடைந்தக் கண்ணும்*
*[3]பனித்துப் பனிவாருங் கண்ணவர் நெஞ்சம்*
*கனற்றுபு காத்தி வரவு.*
*நல்லாள் கரைநிற்ப நான்குளித்த பைந்தடத்து*
*நில்லா டிரைமூழ்கி நீங்கி யெழுந்தென்மேல்*
*அல்லா [4]விழுந்தாளை யெய்தியெழுந் தேற்றியான்*
*கொள்ளா வளவை யெழுந்தேற்றாள் கோதையின்*
*உள்ளழுத்தி யாளெவளோ [5]தோய்ந்த தியாதெனத்*
*தேறித் தெரிய [6]வுணர்நீ பிறிதுமோர்*
*யாறுண்டோ விவ்வையை யாறு.*

---

புனல்வழியே செல்லும் மரம்போல வௌவிக்கொள்ளுதல்வல்ல மகளிர்க்குப் புனலாடுதற்கட் புணையாகிய மார்பினையாய் அதற்குச் சிறிதும் அஞ்சுவதுஞ்செய்யாதே இரவெல்லாம் அவளோடு தங்கினை; அவ்வையைக் கண் உடைந்தமடையை அடைத்தவிடத்தும் பின்னும் ஒழுகும் ஊற்றுநீர் போல முன் அனற்றிய துன்பங் கெட நீ சேர்ந்தவிடத்தும் பில்கிப் பனிவாருங் கண்ணினையுடைய மகளிர் நெஞ்சத்தை இன்னும் கனற்றா நின்று வருதலையொழி ; என,-

மேல் தலைமகன்:-

87-91. ஒருத்தி கரையின்கண் நிற்ப, நான் குளித்த தடத்துள்ளே அவள் பேதைமையாற் கரையில் நில்லாது புகுந்து திரையின்கண் அழுந்திப் பின்னர் அதனை நீங்கியெழுந்து என்மேல் அல்லாந்து விழுந்தாளைக் குளித்த யான் எழுந்து அணுகி ஏற்றுக் கொள்ளாவளவை எழுந்தாள்; அதனால் அவள் காமநுகர்ச்சியறியும் பருவத்தளல்லள்; அவளொழியக் கோதைபோல என் மார்பினுள் அழுத்தப்பட்டவள் யாவளோ? அவளோடு யான் ஆடியயாறு யாது? என,-

90. 'எழும்' என்பது காலமயக்கம்.

மேல் காதற்பரத்தை:-

92-3. அதனை யான் சொல்லத் தேறி நீயே தெளிய அறி; அத் தன்மையது பிறிதுமோர் யாறுண்டோ? அது இவ்வையை யாறு; என,-

---

பி-ம். [1] வவ்வல்லார். [2] நீயடைக்கண்ணும். [3] பனிற்றுப். [4] விழுந்தாரை. [5] தோய்ந்தறியாதென. [6] வுரைநீ.

இவ்வையை யாறென்ற மாறென்னை கையாற்
றலைதொட்டேன் றண்பரங் குன்று.
சினவனின் னுண்கண் சிவப்பஞ்சு வாற்குத்
துனிநீங்கி [1] யாட றொடங்கு துனிநனி
கன்றிடிற் காமங் கெடூஉ மகளிவன்
அல்லா [2] நெஞ்ச முறப்பூட்டக் காய்ந்தே
வல்லிரு ணீய லதுபிழை யாகுமென
[3] இல்லவ ராட விரந்து பரந்துழந்து
வல்லவ ரூட லுணர்த்தர நல்லாய்
களிப்பர் குளிப்பர் காமங் கொடிவிட
அளிப்ப துனிப்ப வாங்காங் காடுப

---

மேல் தலைமகன்:-

94-5. யான் தடத்துக் குளிக்க நீ இவ்வையையாறென்ற மாறுபாடு என்னை? முன்பு போலன்றித் தண்பரங்குன்றின் தலையைக் கையாற் றொட்டேன்.

என்று பின்னும் சூளுற்றானென்று இவ்விருவர் கூற்றையுங்கொண்டு கூறினாள்.

காதற் பரத்தையை அவள் இல்லின் முதுபெண்டிர் கழறியவாறும் வாயில்கள் ஊடலுணர்த்தியவாறும் அவளைத் தலைமகன் புணர்ந்தவாறும் விறலிக்குத் தலைமகள் கூறுகின்றாள்:-

96-100. நின் உண்கண் சிவப்பிற்கு அஞ்சுவான் அவனுக்குத் துனி நீங்கி அவனொடு விளையாடலைத் தொடங்கு; இவ்வாறு துனியின் கண் மிகுவையாயின் அவன் காமவின்பங் கெடும்; அதற்குக்காரணமாகிய மகள் இவன் சொல்லிய பேதைப்பருவத்தாள் ; இவனைக்காய்ந்து இவன் நெஞ்சின்கண் அல்லாப்பை இறுகப்பூட்டுதலால் நீ (?) பெ... ...ண் இருட்பொழுதினில் நீங்கற்பாலையல்லை ; நீங்கின் * இடனறிந்து ஊடி இனிதின் உணரும் ஒழுக்கத்திற்குப் பிழையாமென்று அவளை அக்குடியின் முதிர்பெண்டிர் கழற,-

101-4. ஊடலுணர்த்தவல்ல வாயில்கள் இரந்தும் பரந்தும் வருந்தி யுணர்த்த அவ்விருவருங்கூடி மதுவாற் களிப்பார்கள் ; களியால் வையைக்கட் குளிப்பார்கள் ; குளித்துக் காமமிகுதியாற் கலப்பார்கள்; கலந்து, † அதற்கு இன்பமுண்டாகப் புலப்பார்கள் ; அவ்வவ்விடந்தோறும் விளையாடாநிற்பர்.

என விறலிக்குக் கூறிப் பின் அவள்கேட்ப வையையைக் குறித்து,-

---

* "இடனறிந் தூடி யினிதினுணரு, மடமொழி மாதராள் பெண்" நாலடியார், கற்புடை. 4.

† "ஊடுதல் காமத்திற் கின்பம்" திருக்குறள், 1330.

பி-ம். [1] யாறுடங்கு. [2] நெஞ்சமபூறபபூணடக்காய்ந்தே [3] இல்லவரூட.

105 ஆடுவார் நெஞ்சத் தலர்ந்தமைந்த காமம்
வாடற்க வையை நினக்கு.

என்பது, வையைநீர் விழவணியிற் காதற்பரத்தை இற்பரத்தையுடன் நீராடினான் தலைமகனெனக் கேட்டுப் புலந்தாளைப் புலவிநீக்கிப் புணர்ந்தானெனக் கேட்ட தலைமகள் வாயிலாகப்புக்க விறலிக்கு அவ்வையைநீர் விழவணியும் ஆங்குப்பட்ட செய்தியுங் கூறி வாயின் மறுத்தது.

[1] ஆசிரியன் நல்லந்துவனார் பாட்டு.
மருத்துவன் நல்லச்சுதனார் இசை.
பண்ணுப் பாலையாழ்.

---

105-6. 'வையாய் ! நின்கட் புனலாடுவார் நெஞ்சத்து மிக்குப் பொருந்திய இக்காமத்தையுண்டாக்குந் தன்மை நினக்கு எஞ்ஞான்றும் குறையா தொழிக' என வாழ்த்துவாளாய்த் தலைமகள் செய்தியை வற்புறுத்தி வாயின் மறுத்தவாறு கண்டு கொள்க.

104. 'துனிப்ப' எனப் பன்மையாற் கூறிற்று, * உணர்ப்புவயின் வாரா வூடலை நோக்கி. (6)

---

* "உணர்ப்புவயின் வாரா வூடறோன்றிற், புலத்த றானே கிழவற்கும் வரையார்" இறை. சூ.50.

பி-ம். [1] ஆசிரியர் நல்வந்துவனார்.

# ஏழாம் பாடல்

## வையை

திரையிரும் பனிப்பௌவஞ் செவ்விதா வறமுகந்
துரவுரு முடன்றார்ப்ப வூர்பொறை கொள்ளாது
கரையுடை குளமெனக் கழன்றுவான் வயிறழிபு
வரைவரை தொடுத்த வயங்குவெள் ளருவி
இரவிருள் பகலாக விடமரிது செலவென்னாது
[1] வலனிரங்கு முரசிற் றென்னவ ருள்ளிய
நிலனுற நிமிர்தானை நெடுநிரை [2] நிவப்பன்ன
பெயலாற் பொலிந்து பெரும்புனல் பலநந்த
நலனந்த நாடணி நந்தப் புலனந்த
வந்தன்று வையைப் புனல்.
நளியிருஞ் சோலை நரந்தந் தாஅய்
ஒளிர்சினை வேங்கை விரிந்தவிண ருதிரலொடு
துளியி னுழந்த தோய்வருஞ் சிமைதொறும்
வளிவாங்கு சினைய மாமரம் வேர்கீண்

## (ஏழாம் பாடலுரை)

1-10. திரையையும் குளிர்ச்சியையுமுடைய கரியகடலை நேராக வற்ற முகந்து வலிய உருமேறு வெகுண்டார்ப்பத் தன்மேலேறின பாரத்தைப் பொறுக்கமாட்டாது கரையுடைந்த குளத்துநீர் கழலுமாறுபோல அப்பாரம் கழல மேகம் வயிறழிதலாற் [3] சயிலத்திற் சிகரந்தோறும் தொடுத்த அருவிநீர் பெயலாற் பொலிந்து மற்றையிடங்களிற் சேரும் புனல்பலவற்றோடுங் கூடிப்பெருகுதலால், வையைப்புனல் உயிர்கட்கு நன்மை மிக மென்புலங்கள் அழகுபெற வன்புலங்கள் விளைய வந்தது.

5-7. *வெற்றியுண்டாக ஒலிக்கும் முரசினையுடைய தென்னவர் கொள்ளக்கருதிய நாட்டையுற நிமிரும் அவர்தானையது நெடுநிரையின் நிமிர்ச்சியொக்க யாம்செல்லுமிடம் அரிதென்னாது இருளையுடைய இரவும் பகலாக வந்ததெனக் கூட்டுக.

11. நளி - செறிவு.

11-4. நரந்தப்புல்லின்கட் பரந்து வேங்கையது இணரினின்று உதிர்ந்த பூவோடு கூடி மழையால் ஏறுண்ட கிட்டுதற்கரிய மலையுச்சிகடோறு முளவாய்க் காற்றான் அலையுங் கொம்புகளையுடைய பெரியமரங்களை வேர் அகழ்ந்து.

*"வலம்படு வியன்பணை" (பதிற்.17) என்பதன் உரையைப்பார்க்க.

பி-ம். [1] வலனீங்கு. [2] நிரப்பன்ன, நிமிர்ப்பன்ன. [3] சையத்திற்.

டுயர்ந்துழி யுள்ளன பயம்பிடைப் பரப்பி
உழவர் களிதூங்க [1] முழவு பணைமுரல
ஆட லறியா வரிவை போலவும்
ஊட லறியா வுவகையள் போலவும்
வேண்டுவழி நடந்து தாங்குதடை பொருது
விதியாற்றா னாக்கிய [2] மெய்க்கலவை போலப்
பொதுநாற்ற முள்ளுட் கரந்து புதுநாற்றம்
செய்கின்றே செம்பூம் புனல்.
கவிழ்ந்த புனலிற் கயந்தண் கழுநீர்
அவிழ்ந்த மலர்மீ துற்றென வொருசார்
மாதர் மடநல்லார் மணலி னெழுதிய
பாவை சிதைத்த தெனவழ வொருசார்
அகவய லிளநெல் [3] லரிகாற் சூடு
தொகுபுனல் பரந்தெனத் துடிபட வொருசார்
ஓதஞ் சுற்றிய தூரென வொருசார்
கார்தூம் பற்றது வானென வொருசார்
பாடுவார் [4] பாக்கங் கொண்டென

15. பயம்பு - பள்ளம்

16-22. முழாக்களும் பெரும்பறைகளுமொலிக்க ஆடலியல்பு அறியாத அரிவையைப்போலத் தான்வேண்டிய இடங்களில் நடந்தும் ஊடலி யற்கையறியாத ஊடலுவகையள் கணவனைக் கடந்து நீங்குமாறு போலத் தகைந்த அணைகளை முறித்தும் போய் நூனெறியானாக்கிய மெய்ப்படுக்கும் கலவையது நாற்றம்போல் நறியனபலகூடியநாற்றத்தை உள்ளேயுள்ளே யடக்கி மேலே புதியவான நாற்றத்தைச் செய்யாநின்றது, அப்புனல்.

23-4. வெள்ளம் பாயப் புகுந்த நீராலே ஓடை மலர்மீதுற்ற தென்ன ஒருபக்கம்.

25. எழுதிய - புனைந்த.

25-6. பாவைமேற் காதலையுடைய மடவார் அழவென்க.

27. இளநெல்லின்கண்ணும் அரிகாற் சூட்டின்கண்ணும்.

29. ஊரைக் கடல் சுற்றியதென்ன.

30. வானின்மழை தூம்பற்றதென.

31. பாடுவாரிருந்த பாக்கத்தை.

பி-ம். [1] முழவுப்பணை. [2] மெய்க்கலனவை. [3] லரிகால்சூடு. [4] பாகங், பக்கங்.

*ஆடுவார் சேரியடைந்தெனக்*
*கழனிவந்து கால்கோத்தெனப்*
**பழனவாளை பாளையுண்டென*
*வித்திடுபுல மேடாயிற்றென*
*உணர்த்த வுணரா வொள்ளிழை மாதரைப்*
*புணர்த்திய விச்சத்துப் பெருக்கத்திற் றுனைந்து*
*சினைவளர் வாளையிற் கிளையொடு கெழீஇப்*
*பழன வுழவர் பாய்புனற் பரத்தந்*
*திறுவரை புரையுமா றிருகரை யேமத்து*
*வரைபுரை யுருவி னுரைபல சுமந்து*
*பூவேய்ந்து பொழில்பரந்து*
*1 துனைந்தாடுவா ராய்கோதையர்*
*அலர்தண்டா ரவர்காதிற்*
*றளிர்செரீஇக் கண்ணிபறித்துக்*
*கைவளை யாழி † தொய்யகம் புனைதுகில்*
*மேகலை காஞ்சி வாகு வலயம்*
*எல்லாங் கவரு மியல்பிற்றாய்த் தென்னவன்*

33. கழனியை வெள்ளக்கால் வந்து கோத்ததென.

34. நீர் தெங்கு கமுகுகளின் கழுத்தை முட்டுதலான் வாளை அவற்றின் பாளையை உண்டதென.

35. நாற்றங்கால் வண்டலிட்டு மேடாயிற்றென.

'ஒருசார்' (30) என்பதனைப் பின்பில் எனவெனெச்சங்களொடுங் கூட்டுக.

36-7. ஊடலைத் தானுணர்த்த உணராத மாதரைக் கூட்டுவித்தற்கு முயலும் கணவனது ஆசைவெள்ளம்போல் விரைந்து.

38-9. விலாப்புடைமருங்குல் விசிப்ப மாந்திய உழவர் கிளையொடும் கூடிச் சினைவளர்ந்த வாளைபோலப் பாய்புனற் கண்ணே தொழில் களோடு பரக்க.

40-50. இறுவரைபோலக் குத்துண்டுநிற்கும் இருகரையாகிய காவலுட்பட்டு நுரைபலசுமந்து பூவான் மூடப்பட்டுப் பொழிலின் கட் பரந்து தன்கண் விரைந்தாடுவாராகிய மகளிர்காதின்கண் தளிரைச்

*"பாளை தந்த மதுப்பருகிப் பரு, வாளை நின்று மதர்க்கு மருங்கெலாம்" கம்ப. நாட்டு, 24.

† சிலப். 6 : 106-8.

பி-ம். 1 துணைந்தாடுவர்.

*ஒன்னா ருடைபுலம் புக்கற்றான் மாறட்ட
தானையான் வையை வனப்பு.
புரிந்த தகையினான் யாறாடு வாருட்
டுரந்து புனறூவத் தூமலர்க் கண்கள்
அமைந்தன வாங்க ணவரு ளொருத்தி
கைபுதைஇ யவளை
ஏக்கழுத்து நாணாற் கரும்பி † னணைமென்றோள்
[1] போக்கிச் சிறைபிடித்தா ளோர்பொன்னங் கொம்பு
பரிந்தவளைக் கைப்பிணை நீக்குவான் பாய்வாள்
இரும்பீர் [2] வடியொத்து மைவிளங்குங் கண்ணொளியாற்
செம்மைப் புதுப்புனல் சென்றிரு ளாயிற்றே
வையைப் பெருக்கு வடிவு.
விரும்பிய வீரணி மெய்யீரந் தீரச்
சுரும்பார்க்குஞ் சூர்நறா வேந்தினாள் கண்ணெய்தல்

செருகி மைந்தர் கண்ணியைப் பறித்து மகளிர்கைவளையும் தலைக்கோலமும் உடுத்த துகிலும் இருவடமாய்த் துகிற்குள்ளணியு மேகலையும் எண் வடமாய் அதன் புறத்தணியுங் காஞ்சியும் மைந்தராழிமோதிரமும் வாகுவலயமும் என்றிவையெல்லாவற்றையும் கொள்ளுமியல்பிற்றாய்ப் பகைவர் நிலத்திடைத் தென்னவன் புக்க தன்மையையுடைத்து; அவன் வையை வனப்பு இது.

51-6. மிக்க தகைமையையுடைய அவன் யாற்றின்கணாடும் ஆயமகளிரெல்லாம் தம்முட்டுரந்து புனலைத் தூவ அவர்கண்கள் அதனை ஏற்று அமைந்தன......யதற்குத் தோற்றுக் கண்களைக் கையாற்புதைத்தாளை ஒருத்தி வெற்றியால் இறுமாந்த தன் கழுத்திற் பொன்னாணாலே தொய்யிற்கரும்பினையுடைய அணைபோலும் மென்றோள்களைக் கட்டிச் சிறையாகப் பிடித்தாள்.

57-60. அச்சிறையானவட்குப் பரிந்து அவளைக் கைப்பி... ... ... ... ... ... ...தலைவி கண்ணொளியாற் செம்மையையுடைய புதுப்புனல் அந்நிறம்போய் இருள்நிறமாயிற்று. வையைப்பெருக்கின் வடிவு இது.

இவ்வளவும் தோழி புனலணியின்பங் கூறி, மேல் தலைமகன் காதன்மை கூறுகின்றாள்.

61-4. விரும்பிய புனலாட்டணியையுடைய மெய் ஈரந்தீர்ந்து வெய்தாக நுகர்தற்குக் கடியநறாவை ஏந்தினபொழுது அவள்கண் நெய்தற்

*"அன்னா யறங்கொ ளலங்கிளர் சேட்சென்னி, ஒன்னா ருடைபுலம் போல நலங்கவர்ந்து, துன்னான் றுறந்து விடல்" யா-வி. மேற்.

† கலி. 14, 66.

பி-ம். [1] பொககிறைபிடித்தாள். [2] வடியொத்த.

[1] பேர்மகிழ் செய்யும் பெருநறாப் பேணியவே
கூர்நறா வார்ந்தவள் கண்.
கண்ணியல் கண்டேத்திக் காரிகைநீர் நோக்கினைப்
பாணா தரித்துப் பலபாட வப்பாட்டுப்
பேணா தொருத்தி பேதுற வாயிடை
என்னை வருவ தெனக்கென் றினையா
நன்ஞெமர் மார்ப னடுக்குற நண்ணிச்
சிகைகிடந்த வூடலிற் செங்கண் [2] சேப் பூர
வகைதொடர்ந்த வாடலு ணல்லவர் தம்முட்
பகைதொடர்ந்து கோதை பரியூஉ [3] நனிவெகுண்
டியாறாடு மேனி யணிகண்ட தன்னன்பன்
சேறாடு மேனிதிரு நிலத்துய்ப்பச் சிரமிதித்துத்
தீர்வில தாகச் செருவுற்றாள் செம்புனல்
ஊருட னாடுங் கடை.

பூவையொத்தன ; அந்நறவை ஆர்ந்தபொழுது அவள்கண் கண்டார்க்கு மிக்க மகிழ்ச்சியைச்செய்யும் பெரிய நறவம்பூவை யொத்தன.

67. பேணல் : ஈண்டு உவமச்சொல்.

65-76. அக்கண்ணியல்பைக் கண்டு ஏத்தி அவற்றது காரிகைநீர் மையையுடைய நோக்கினை ஆதரித்துத் தலைவன் பாண்சாதிபோலப் பலவகையாற் பாட அப்பாட்டைத் தன்காதலியைப் பாடுகின்றதென்றறியாது வேறொருத்தி கேட்டு அவனோடுகூடுதற்கு வருத்தமுற அவ்விடத்து அதனைக்கண்டு இனி எனக்கு என்வரப்புகுகின்றதென்று அஞ்சி நல்ல பரந்தமார்பன் தலைவியைச்சேர்ந்து நடுக்கமுற, நறவுண்டு சிவந்தகண் முன் குறைகிடந்த ஊடலின்மேல்விளைந்த இதனாலும் சிவப்பூர வகுப்புப் பொருந்திய நீராட்டின்கண்வந்த மகளிர்காண அவளோடு பகைமைமிக்குத் தன்மாலையைப் பரிந்து மிகவெகுள, யாறாடுந்தன்மேனியழகை உட்கொண்டு பாராட்டிய காதலன் தன்சந்தனச்சேறாடிய மேனியை நிலத்துய்த்து வணங்க, அவன்சிரத்தை மிதித்துப் பின்னும் வெகுளிதீராமையால் ஊடினாள், செம்புனலை ஊரெல்லாம் ஆடுகின்ற காலத்து.

இனி இந்நீரணியின்பம் பெறுக யாமென வையையைக் குறித்துக் கூறுகின்றாள்.

பி-ம். [1] பௌமகிழ்ச். [2] சேப்புச்சார. [3] நகைவெகுண்டு, நகவெகுண்டு.

புரிநரம் பின்கொளைப் புகல்பாலை யேழும்
[1] எழூப்புணர் யாழு மிசையுங் கூடக்
குழலளந்து நிற்ப [2] முழவெழுந் தார்ப்ப
[3] மன்மகளிர் சென்னிய ராட றொடங்கப்
பொருதிழி வார்புனற் பொற்பஃ
துருமிடி சேர்ந்த முழக்கம் புரையும்
திருமருத முன்றுறை சேர்புனற்கண் டுய்ப்பார்
தாமந் [4] தலைபுனை பேஎ நீர்வையை
[5] நிற்பயம் பாடி விடிவுற் றேமாக்க
நிற்படிந்து [6] நீங்காமை யின்றுபுணர்ந் தெனவே.

என்பது, தலைமகன் தலைமகளோடு புனலாடினானெனக் கேட்டு இன்புற்ற செவிலித்தாய் தோழியை நீங்களாடிய புனலணியின்பம் கூறுகென்றாட்கு அப்புனலணியின்பமும் பல்வேறு வகைப்பட்ட இன்பமும் தலைமகன் காதன்மையுங் கூறி என்றும் இந்த நீரணி யின்பம் பெறுகயாமென்றது.

மையோடக் கோவனார் பாட்டு.
பித்தாமத்தர் இசை.
பண்ணுப் பாலையாழ்.

77-86. பாலையேழினையுமுடைய புரிநரம்பின்கண் இனிய கொளையைத் தருகின்ற யாழும் மிடற்றுப்பாடலும் தம்முளொக்க வங்கியம் அவற்றின் சுருதியை அளந்துநிற்ப முழவு எழுந்து ஆர்ப்ப அரங்கேறிய தலைக்கோல் மகளிரும் பாணரும் ஆடலைத் தொடங்க அக்கம்பலையொடு சேர்ந்த கரையைப்பொருது இழியும் வார்புனலின் கம்பலையாகியபொற்பு உருமிடிசேர்ந்த மழைமுழக்கத்தையொக்கும் திருமருதமுன்றுறைக்கட் சேர்ந்த நீர்ப்பரப்பை அனுபவிப்பார் மாலைகளை வாங்கி நின்தலைக்கட் புனையும் வையாய்! இன்று நின்னைப் படிந்துநீங்காத இப்பயனைப் பெற்றாற்போல என்றும் நின்னால் யாம்பெறும் பயனைப்பாராட்டி விடிகின்ற பொழுதின் தன்மையையுற்று ஏமாப்பேமாக.

84. பேஎ நீர் - ஆழத்தான் அச்சத்தைத் தரும்நீர்.

85. விடிவுறுதல் - துன்பம் நீங்கி இன்பமாதல்.

'ஏமாக்க' என்னும் வியங்கோள் வேண்டிக்கோடற்பொருட்டாகலின், தன்மைக்கண் வந்தது. (7)

பி-ம். [1] ஏழுப்புணர். [2] முழவிழிந்தார்ப்ப. [3] மனைமகளிர், மணமகளிர். [4] தலைஇபுனைபெளவநீர். [5] பயம்பாராட்டி. [6] நீங்காது புணர்ந்தெனவே.

# எட்டாம் பாடல்

## செவ்வேள்

*மண்மிசை யவிழ்துழாய் மலர்தரு செல்வத்துப்*
*புண்மிசைக் கொடியோனும் புங்கவ மூர்வோனும்*
*மலர்மிசை முதல்வனு மற்றவ னிடைத்தோன்றி*
*உலகிரு ளகற்றிய பதின்மரு மிருவரும்*
*மருந்துரை யிருவருந் திருந்துநூ லெண்மரும்*
*ஆதிரை முதல்வனிற் கிளந்த*
*நாதர்பன் னொருவரு நன்றிசை காப்போரும்*
*யாவரும் பிறரு மமரரு மவுணரும்*
*மேவரு முதுமொழி விழுத்தவ முதல்வரும்*
*பற்றா கின்றுநின் [1] காரண மாகப்*
*பரங்குன் றிமயக் குன்ற நிகர்க்கும்*
*இமயக் குன்றினிற் [2] சிறந்து*
*நின்னீன்ற நிரையிதழ்த்தாமரை*
*மின்னீன்ற விளங்கிணரூழா*
*ஒருநிலைப் பொய்கையோ டொக்குநின் குன்றின்*

## (எட்டாம் பாடலுரை)

1-2. மலர்ந்த துழாய்மாலையையும் அளவற்ற செல்வத்தினையுமுடைய புள்ளை மேலே எழுதப்பட்ட கொடியோனும்.

2. புங்கவம் - ஏறு.

4. உலகின்கண் இருள்.

6-7. ஆதிரைமுதல்வன் பெயராற் சொல்லப்பட்ட நாதர் - உருத்திரர்.

4-7. ஆதித்தர்முதலாக உருத்திரரீறாக முப்பத்துமூவரையுங் கூறினார்.

7. நல்லதிசையைக்காப்போர் - இந்திரன் முதலிய எண்மர்.

8. இவரெல்லாரும் இவரொழிந்த பிறருமாகிய அமரரும் அவுணரும்.

9. அதிகரித்தற்கரிய வேதத்தினை அதிகரித்த விழுத்தவ முதல்வர்-தெய்வமுனிகள்.

10-11. நின்னைக் காண்டல் காரணமாக மண்மிசை வந்து உறையும் இடமாகாநின்றது; ஆதலாற் பரங்குன்று அவர் பழைய இடமாகிய இமயக்குன்றத்தை யொக்கும்.

12-6. அவ்விமயக்குன்றின்கட் சிறப்பெய்தி நின்னையீன்ற தாமரையினது

பி-ம். [1] காரணம் பரங்குன்று. [2] சிறந்த.

அருவிதாழ் மாலைச் சுனை.
முதல்வநின் *யானை முழக்கங் கேட்ட
கதியிற்றே காரின் குரல்.
குரல்கேட்ட கோழி [1] குன்றதிரக் கூவ
மதநனி வாரண மாறுமா றதிர்ப்ப
எதிர்குதி ராகின் றதிர்ப்பு மலைமுழை
ஏழ்புழை யைம்புழை யாழிசைகேழ்த் தன்ன [2]வினம்
வீழ்தும்பி வண்டொடு மிஞிறார்ப்பச் சுனைமலரக்
†கொன்றை கொடியிண ரூழ்ப்பக் கொடிமலர்
[3] மன்றல மலர மலர்காந்தள் வாய்நாற
நன்றவிழ் பன்மலர் நாற நறைபனிப்பத்
[4] தென்ற லசைவரூஉஞ் செம்மற்றே யம்மநின்
குன்றத்தாற் கூடல் வரவு.

---

மின்போலும் இணருதிராத வற்றாப்பொய்கையொக்கும், நினது குன்றின் அருவி தங்கும் ஒழுங்குபட்ட சுனை.

18. கதியிற்று - இயல்பினையுடைத்து.

19-21. அக்குரலைக்கேட்ட கோழி வெருவிக் குன்றெதிர் கூவக் கூவுதலானும் மதமிக்க வாரணம் அக்குரற்கு மாறுமாறாகப் பிளிறுதலானும் மலைமுழைக்கண் எழுகின்ற எதிரொலி அவற்றிற்கு மறுதலையாகா நின்றது.

19. 'கேட்ட' என்பதனை வாரணத்தொடுங் கூட்டுக.

21. எதிர்குதிரென்பது ஒருலகவழக்கு.

22-8. எழுதுளையான வங்கியத்தும் ஐந்துதுளையான வங்கியத்தும் யாழினும் பிறந்த இசைச்சுருதியொத்து நிறத்தாலொத்த இனம் விரும்பும் ‡ தும்பியும் வண்டும் மிஞிறும் ஆர்ப்பச் சுனை பூக்களை மலரக் § கொன்றை தாராகிய இணர்களை மலரக் கொடிமலர்கள் மன்றலை யுடையவாய் மலர மலர்ந்தகாந்தட்பூ இடமெல்லாம் நாற மற்றும் நன்றாக மலர்ந்த பன்மலர்கள் நறைபனிப்ப நாற அந்நாற்றங்களோடு தென்றல் அசையுந் தலைமைத்து, நின் குன்றத்தொடு கூடலிடைவழி.

---

* "களிறுங் களித்ததிருங் கார்" பு.வெ. 37.

† "கொன்றை...கொடியிண ரூழ்த்த" குறுந். 66.

‡ சீவக. செய்.892, பார்க்க.

§ "குறும்பல் கோதை கொன்றை மலர" ஐங்குறு. 497.

பி-ம். [1] குன்றதிர்கூவ, குன்றெதிர்கூவ. [2] நனைவீழ்தும்பிவண் டொடினமிஞிறு. [3] மன்றன்மலர. [4] தென்றலசைவுந் தகைமைத்தேவரூஉஞ்.

குன்ற முடைத்த [1] வொளிர்வேலோய் கூடல்
மன்றல் கலந்த மணிமுரசி னார்ப்பெழக்
காலொடு மயங்கிய கலிழ்கடலென
மால்கடல் குடிக்கு மழைக்குரலென
ஏறதிர்க்கு மிந்திர னிருமுருமென
மன்ற லதிரதிர மாறுமா றதிர்க்குநின்
குன்றங் குமுறிய வுரை.
தூதேய வண்டின் றொழுதி முரல்வவர்
காதன்மூ தூர்மதில் கம்பலைத் தன்று
வடுவகிர் வென்றகண் மாந்தளிர் மேனி
நெடுமென் பணைத்தோட் குறுந்தொடி மகளிர்
ஆராக் காம மார்பொழிற் பாயல்
வரையகத் தியைக்கும் வரையா நுகர்ச்சி
முடியா நுகர்ச்சி முற்றாக் காதல்
அடியோர் மைந்த ரகலத் தகலா
அலர்ஞெமன் மகன்றி னன்னர்ப் புணர்ச்சி

29-35. கூடலின் மணத்தைப் பொருந்திய மணிநிறமுரசின் ஆர்ப்பு எழுந்ததாக, காற்றால் ஏறுண்ட புடைபெயர் கடலெனவும் மயங்குகடலைக் குடிக்கும் மேகக்குரலெனவும் இந்திரனது அதிர்க்கும் பெரிய உருமேறெனவும் அம் மன்றல்முரசு அதிரவதிர அதற்கு மாறுமாறாக அதிர்க்கும், நின் குன்றம் முழங்கிய முழக்கம்.

35. முழக்கம் மலைக்கு வார்த்தைபோறலின் 'உரை' எனப்பட்டது.

இவ்வளவும் முருகவேளை எதிர்முகமாக்கி வாழ்த்தி மேல் அவன் பரங்குன்றை வாழ்த்துவார், பிரிந்த தலைமக்களது வரவும் அவருட் பரத்தையிற் பிரிந்து வந்தானொரு தலைமகன் கூற்றும் தலைவிகூற்றும் தோழி கூற்றுமாகிய த... ... ...

36-7. தலைவியரால் தூதாக ஏவப்பட்டுத் தலைவரோடு மீண்ட வண்டின்தொழுதியது முரற்சி அத் தலைவியர்காதலை மதில்மூதூர்க்கண் அரவமாக்கின்று.

37. 'கம்பலைத்தன்று' என்பது உரிச்சொல்லடியாகப் பிறந்த வினைத்திரிசொல்.

தலைமக்களது வரவு கூறியவாறு.

39-46. மகளிரது ஆராக்காம இன்பத்தைப் பொழிற்பாயற்கண் தலைவரொடு கூட்டும் களவிற் புணர்ச்சியையும் அடியுறைமகளிர்

பி-ம். [1] வொளிறுவேலோய்.

புலரா மகிழ்மறப் பறியாது நல்கும்
சிறப்பிற்றே தண்பரங் குன்று.
இனிமன்னு மேதிலர் நாறுதி யாண்டுப்
பனிமலர்க் கண்ணாரோ டாட நகைமலர்
மாலைக்கு மாலை வருஉம் வரைசூணில்
காலைப்போய் மாலை வரவு.
இனிமணல் வையை யிரும்பொழிலுங் குன்றப்
பனிபொழி சாரலும் பார்ப்பாரும் ...
துனியன் மலருண்கண் சொல்வேறு நாற்றம்
கனியின் மலரின் மலிர்கால்சீப் பின்னது
துனிய னனிநீநின் [1] சூள்.
என்பாணி நின்னி லெலாஅபாணி நீநின்சூள்
சான்றாள ரீன்ற தகாஅத் தகாஅமகாஅன்
ஈன்றாட் கொருபெண் ணிவள்.

---

பூவின்கண் திரியும் மகன்றில்போல மைந்தர் அகலத்தையகலாத நல்ல புணர்ச்சியையும் மறவாது அம்மகளிர் மனமெனத் தருஞ்சிறப்பிற்று, தண்பரங்குன்று.

என்று தலைமகன் மகளிர்மேல் வைத்துக்கூறி........ய இன்பமிகுதி கூறியதுபொறாது மேல் தலைமகள் புலந்து உரைக்கின்றாள்:-

47-50. இப்பொழுது மிகவும் அயல்மகளிர் நாற்றத்தை நாறா நின்றாய்; ஆண்டு அவரொடு கூடுதற்கு நீ காலைப்போய் மாலைவருதல் ஒளி மலரையுடைய மாலைப்பொழுதுதோறும் உண்டாகாநின்றது; இனிப் பண்டைச் சூளைத் தவிர்.

49. 'மாலைக்குமாலை' என்றது, 'அடிக்கடி' என்றாற்போல நின்றது.

மேல் தலைமகன்:-

51-5. இனிய மணலையுடைய வையைக்கண் இரும்பொழிலானை; குன்றத்துச் சாரலானை; பார்ப்பாரானை; துனியல்; மலருண் கண்ணாய்! அது சொல் எனக்கு இயைவதன்று; இந்நாற்றம் பரங்குன்றத்துக் கனியினும் மலரினும் பயின்ற காற்றுச் சீத்து அடித்துவந்தது; ஆதலான், மிகவும் துனியல்; என,-

மேல் தலைமகள் வையை மணலையும் பரங்குன்றத்தையும் சூளுற்றான் குறிப்புநோக்கி,

55. நீ நின் சூளைவிடு ; என,-

மேல் தோழி:-

56-8. ஏடா! யானொன்று சொல்லுங் காலத்தளவும் நில்லு நில்லு;

---

பி-ம். [1] சூள் சூளேல் பாணி.

*இருண்மையீ ருண்கணிலங்கிழை யீன்றாட்*
*கரியளோ வாவ தறிந்ததிலே னீதா*
*வருபுனல் வையைமண றொட்டேன் றருமணவேள்*
[1] *தண்பரங் குன்றத் தடிதொட்டே னென்பாய்*
*கேளிர் மணலின் கெழுவு மிதுவோ*
*ஏழுலகு மாளி திருவரைமே லன்பளிதோ*
*என்னை யருளி யருண்முருகு சூள்சூளின்*
*நின்னை யருளி* [2] *லணங்கான்மெய் வேறின்னும்*
*விறல்வெய்யோ னூர்மயில் வேனிழ னோக்கி*
[3] *அறவ ரடிதொடினு மாங்கவை சூளேல்*
*குறவன் மகளாணை கூறேலா கூறேல்.*

---

நீ நின்சூளைப் பின்னை உறு; அமைதியுடையோர்பெற்ற மிகத்தகுதியில்லாத மகனே ! இவள் தாய்க்கு ஒரு பெண்.

என, நினக்கு இச்சூளான் ஏதம் வரின் இவள் இறந்துபடுமென்பது கூறிப் பின்னும் அவன் கூற்றைக் கொண்டு கூறுகின்றாள்:-

59-60. இலங்கிழை ஈன்றாட்கு அரியளோ? அரியளாவது நீ சொல்லுதற்குமுன் யான் அறிந்திலேன் ; இதனைப் பார்.

அறிந்திலேனென்பது குறிப்புமொழி.

ஈதாவென்பது ஒரு மரூஉமுடிபு; அஃது இக்காலத்து * இந்தாவென்று வழங்கப்படும் ; † சுட்டு நீண்டது.

61. மணத்தைத் தரும் வேள்.

63. கேளிரையொத்த மணலொடு நட்பும் இத்தன்மைத்தோ? அது கிடக்க.

64-6. திருவரைமேல் அன்பு அளிக்கத்தக்கது ; ஆதலால், எனக்கு அருள் செய்தாயாக அருள் முருகன் சூளைச் சூளுறின், நின்னை அருளில்லாத அணங்குடனே அவன் வேல் மெய்யாக வருத்தும்.

67-8. அதுவேயன்றிப் பார்ப்பாரடியைத் தொடினும் விறல் வெய்யோனூர் மயிலையும் அவன் வேல் நிழலையும் நோக்கி அவற்றைச் சூளுறல்.

68. ஆங்கு : அசைநிலை.

69. குறவன் மகளாணையைக் கூறலுறுகின்ற ஏடா! அதனையும் கூறல்.

---

* "இந்தா விஃதோ ரிளங்குழவி" கந்த. வள்ளியம்மை. 35.

† "இதா தோன்றுகின்ற சோலை" சீவக. 1232.

பி-ம். [1] தன்பரங்குன்று. [2] லணங்குடகானமெய். [3] யாவரடி.

ஐய சூளி னடிதொடு குன்றொடு
வையைக்குத் தக்க மணற்சீர்சூள் கூறல்
யார்பிரிய யார்வர யார்வினவ யார்செப்பு
நீருரைசெய் நீர்மையில் சூளென்றி நேரிழாய்
[1] கயவாய நெய்தலலர் கமழ்முகை மணநகை
நயவரு நறவிதழ் மதருண்கண் [2] வாணுதல்
முகைமுல்லை வென்றெழின் முத்தேய்க்கும் வெண்பல்
நகைசான்ற கனவன்று நனவன்று நவின்றதை
இடுதுனி கையாறா வெற்றுயர் கூரச்
சுடுமிறை யாற்றிசி னடிசேர்ந்து சாற்றுமின்
மிக, ஏற்றுதுமல ரூட்டுது மவி
[3] கேட்டுதும் பாணி யெழுதுங் கிணைமுருகன்
தாட்டொழு தண்பரங் குன்று.

---

70-71. ஐயனே! சூளுறல் வேண்டின், வணங்கப்படும் குன்றொடு வையைக்கேற்ற சீர்மணலைச் சூளுறாதொழி.

என்று சூள்விலக்க, மேல் தலைமகன்:-

72-3. நேரிழாய் ! யார் பிரிய, யார் வர, யார் வினவ, யாரது *செப்பு உண்டாகின்றது?

என்றது † இருதலைப்புள்ளின் ஓருயிரேன் ஆதலாற் பிரிவும் வரவும் வினாவும் செப்பும் நம்மிடை உளவாகாவென்றவாறு.

73-7. நீ அது கருதாது, 'நீருரைக்குஞ் சூள் நீர்மையில் கடுஞ் சூள்' என்றி; கயத்தின்கணுள்ள நெய்தற்பூவையும் கமழ்முகைகளது மணத்தைத் தருகின்ற அலர்ச்சியான் நயக்கப்படும் நறவம்பூவினது இதழையுமொத்த கண்ணினையும் நுதலையும் வெண்பல்லையுமுடையாள் நவின்ற குற்றம் நனவுமன்று, கனவுமன்று.

76. முகைமுல்லை - முல்லையது முகை.

77. பொய்யாதலால், நகைமிக்க நனவு.

78-82. என்மாட்டு இன்றியிருக்க இவள் இட்ட இத்துனிக்காரணத்தை என் ஒழுக்கம் நெறியாக ஓர்த்தலால் இதனைப் பொய்ச் சூளென்று கருதி என்னை இறை துயர்கூரச் சுடும் ; இது செய்யாமல் நீ சென்று

---

* செப்பு - விடை.

† "யாமே, பிரிவின் றியைந்த துவரா நட்பின், இருதலைப் புள்ளி னோருயி ரம்மே" (அகநா. 12); கலி. 89-ம் செய்யுளையும் பார்க்க.

பி-ம். [1] கயவருநெய்தல். [2] வாணுதலார். [3] தோற்றுதும்.

தெரியிழாய் [1] செல்கென்றா யெல்லாயாம் பெற்றேம்
[2] ஒருவர்க்கும் பொய்யாநின் [3] வாயில்சூள் வௌவல்
பருவத்துப் *பன்மாணீ சேறலிற் காண்டை
எருமை யிருந்தோட்டி யெள்ளீயுங் காளை
செருவஞ் [4] செயற்கென்னை முன்னைத்தன் சென்னி
அருள்வயினாற் றூங்கு மணிகையாற் றாக்கி
நிரைவளை யாற்றிருஞ் சூள்.
வளிபொரு சேட் [5] சிமை வரையகத்தால்
[6] தளிபெருகுந் தண்சினைய
பொழில்கொளக் குறையாமலரக்
குளிர்பொய்கை யளறுநிறைய

---

அவனடியைச் சேர்ந்து ஆற்றுவாயாக ; இவ்வுரையை எல்லார்க்கும் அறிவிம்மின்; முருகன் தாளை யாவருந் தொழும் பரங்குன்றத்தின் கட் சென்று மலரை ஏற்றுதும் ; அவியை யூட்டுதும்; பாணித்தாளத்தை யுடைய பாட்டைத் தோற்றுவிப்பேம்; கிணையொலியை எழுவிப்பேம்.

79-81. 'ஆற்றிசின்' என்றது, தோழியை நோக்கி ; 'சாற்றுமின்' என்றது, தன் ஏவலிளையரை நோக்கி. உளப்பாடுகள் அவளையும் அவரையும் நோக்கி.

மேல் தோழி:-

83-9. ஏடா! என்னைச் சாந்திசெய்யச் செல்கவென்றாய்; அதனாலே நின் பொய்ச்சூளானாகிய ஏதம் நின்னை வௌவுதலை யாம் அறிந்தேம்; கூற்றினது மிக்க ஆணையையும் இகழும் ஆற்றலையுடைய முருகன் மாறுபடுதற்குமுன்னே என் நிரைவளை தூங்கும் மணிநாவைக் கையால் தாக்கித் தன் சென்னியான் வணங்கி இருஞ்சூளான் வரும் ஏதத்தை அருட்கூற்றான் ஆற்றுதலை ஏதிலரைப் புணரும்பருவத்து ஆண்டு நீ பல காலும் சேறலாற் காண்டி.

என்றது, யான் ஆற்றவேண்டா;அவள் தானே ஆற்றுமெனத் தலைமகள் கற்புடைமை கூறியவாறு.

84. 'ஒருவர்க்கும் பொய்யாநின்' என்றது குறிப்புமொழி.

கணவற்கு வரும் ஏதமஞ்சிச் செய்தலால் தம் கற்பிற்கும்.........

தலைமகளிர் யாவரும் இத்தன்மைய செய்வரென அவரது செய்தி கூறுகின்றார்:-

90-99. மழையான் வளர்ந்த தண்சினைப் பொழில்கள் பூக்கள் பறிக்கத்

---

* பன்மாண் - பலகாலும் ; பரி. 2 : 73 ; 13. 62.

பி-ம். [1] சொல்லென்றாயேலா. [2] ஒருவற்கும். [3] வாயிற்சூள். [4] செயற்கென்ன. [5] சிமைய. [6] தளிர்பெருகும், தளிர் பெருஞ்சினை.

*மருதநளி மணன் [1] ஞெமர்ந்த*
*நனிமலர்ப் பெருவழிச்*
*சீறடியவர் சாறுகொள வெழுந்து*
*வேறுபடு சாந்தமும் வீறுபடு புகையும்*
*மாறுசெல் வளியி னவியா விளக்கமும்*
*நாறுகமழ் வீயுங் கூறுமிசை முழவமும்*
*மணியுங் கயிறு மயிலுங் குடாரியும்*
*பிணிமுக முளப்படப் பிறவு மேந்தி*
*அருவரைச் [2] சேராத் [3] தொழுநர்*
*கனவிற் றொட்டது [4] கைபிழை யாகாது*
*நனவிற் சேஎப்பநின் னளிபுனல் வையை*
*வருபுன லணிகென வரங்கொள் வோரும்*
*கருவயி றுறுகெனக் [5] கடம்படு வோரும்*
*செய்பொருள் வாய்க்கெனச் [6] செவிசார்த்து வோரும்*
*ஐயம ரடுகென வருச்சிப் போரும்*
*பாடுவார் பாணிச்சீரு மாடுவா ரரங்கத் தாளமும்*
*மஞ்சாடு மலைமுழக்கும்.*

---

தொலையாவாக மலரக் குளிர்பொய்கைகள் நீரால் நிறையச் செறிந்த மணல்பரந்த வரையோடு கூடலிடைவழி......பூசை செய்ய எழுந்து சாந்தமும் புகைப்பனவும் மாறாயியங்கும் காற்றால் நந்தாத விளக்கிற்கு வேண்டுவனவும் நாறுகின்ற கமழ்வீயும் இசையைக் கூறுகின்ற முழவமும்.

100. கயிறு-பாசம்.

102-5. அருவரைக்கட் சென்று சேயது அடிமலரைத் தொழுது, கனவின் யாம் எம் காதலரைத் தொட்டது பொய்யாகாமல் நனவின் கண் எய்த வையை புதுப்புனலை அணிக.

106. யாம் வயிறுகருவுறுகவெனப் பொருள்களை நேர்வோரும்.

107. எம் கணவர் செய்பொருள் வாய்க்க.

108. எம் கணவர் வியக்கத்தக்க அமரையடுகவென அருச்சிப் போருமாய்.

109. பாடுவாரது பாணியாகிய தாளமும்.

110-11. மலைக்கண் எதிரொலியுமாகிய இக்கெடாத கம்பலைக் கண்ணே.

---

பி-ம். 1 ஞெமிரநனி. 2 சேஎத்தெடுநர்க்கு. 3 தொடுநர். 4. கைபிழையாது. 5 கடன்படு. 6 செவிசாத்துவோரும்.

துஞ்சாக் கம்பலைப்
பைஞ்சுனைப் பாஅ யெழுபாவையர்
ஆயித ழுண்க ணலர்முகத் தாமரை
தாட்டா மரைத்தோட் டமனியக் கயமலர்
எங்கைப் பதுமங் கொங்கைக் கயமுகைச்
செவ்வா யாம்பல் சென்னீர்த் தாமரை
புனற்றா மரையொடு புலம்வேறு பாடுறாக்
கூரெயிற்றார் குவிமுலைப் பூணொடு
மார னொப்பார் மார்பணி கலவி
அரிவைய ரமிர்தபானம்
உரிமை மாக்க [1] ளுவகையமிர் துய்ப்ப
மைந்தர் மார்வம் வழிவந்த
செந்தளிர் மேனியார் செல்ல [2]நீர்ப்ப
எனவாங்கு

---

111. ஏழாவது * வினைசெய் இடத்தின்கண் வந்தது.

112. சுனைக்கட் பாய்ந்தெழு பாவையராகிய கூரெயிற்றார் (118) என மேலே கூட்டுக.

113-24. கண்ணாகிய தாமரைப்பூவும் முகமாகிய தாமரைப்பூவும் தாளாகிய தாமரைப் பூவும் தோளாகிய பொற்கயத்து மலர்ந்த எம்கையாகிய தாமரைப்பூவும் கொங்கையாகிய பெரிய தாமரைமுகையுமாய்ச் செவ்வாயாம்பலொடுங் கூடி இயங்கும் நீர்மையையுடைய இத்தாமரைகள் அந்நீரின் கட்டாமரையொடு வேறுபாடுறாத கூரெயிற்றார் முலைப் பூணொடு கணவர்மார்பணிகள் மயங்க, அவர்க்கு அரிவையராக்கும் அமிர்தம்போலும் காமபானத்துடனே அமுதாக்குதற்குரியர் மடையர் உவகையைச் செய்யும் அமிர்தத்தைக் கொடுக்கத் தம் கணவர் மார்பின் கண் வழிவந்த செல்லலைச் செந்தளிர் மேனியார் தீரா நிற்பர்.

119. 'கலவ' என்பது கலவியென நின்றது.

சீறடியவர் சாறுகொளப் (96) பெருவழியிடத்து (95) எழுந்து (96) பிறவுமேந்தி (101) வரையகத்துச் சென்று தொழுது (102) கம்பலைக் கண்ணே (111) மார்பணி கலக்க (119) உவகையமிர்துய்ப்ப (121), வரங்கொள்வோரும் (105) கடம்படுவோரும் (106) செவி சார்த்துவோரும் (107) அருச்சிப்போருமாய் (108) செல்லல் தீர்ப்ப (123) எனக் கூட்டுக.

124. எனவாங்கு - என்றிவ்வாற்றால்.

---

* தொல்காப்பியம், வேற்றுமையியல், சூ.20, பார்க்க.

பி-ம். [1] ளுவகையமிர்துவாக்க. [2] தீர்ப்பவாங்க.

[1] உடம்புணர் காதலரு மல்லாருங் கூடிக்
கடம்பமர் செல்வன் கடிநகர் பேண
மறுமிடற் றண்ணற்கு மாசிலோ டந்த
நெறிநீ ரருவி யசும்புறு செல்வ
மண்பரிய வானம் வறப்பினும் மன்னுகமா
தண்பரங் குன்ற நினக்கு.

கடவுள் வாழ்த்து
[2] ஆசிரியன் நல்லந்துவனார் பாட்டு.
[3] மருத்துவன் நல்லச்சுதனார் இசை.
பண்ணுப் பாலையாழ்.

---

125-30. பரங்குன்றமே! தம்முட் பிரியாத மகளிரும் மைந்தரும் அல்லாத வரம்வேண்டுவாருங் கூடி மறுமிடற்றண்ணற்கு மாசிலோள் தந்த கடம்பமர்செல்வன் கடிநகரை வழிபடச் செல்வத்துடனே மண்வருந்த மழை வறந்ததாயினும் நெறிநீர் அருவி அசும்புமிகுஞ்செல்வம் நினக்கு மன்னுவதாக.

129. மா : வியங்கோளசைச்சொல்.

முருகற்கு இடமாகிய பரங்குன்றை வருணித்த முகத்தால் எதிர்முகமாக்கியும் படர்க்கையாக்கியும் அவனையே வாழ்த்தி முடித்தமையிற் கடவுள் வாழ்த்தாயிற்று. (8)

---

பி-ம். [1] உடன்புணரக்காதலரும். [2] ஆசிரியர் நல்லந்துவனார், ஆசிரியநல்லந்துவனார், ஆரியநல்லந்துவனார். [3] மருத்துவ நல்லச்சுதனார்.

# ஒன்பதாம் பாடல்

## செவ்வேள்

இருநிலந் துளங்காமை வடவயி னிவந்தோங்கி
[1] அருநிலை யுயர்தெய்வத் [2] தணங்குசா றலைகாக்கும்
உருமுச்சூழ் சேட்சிமை யுயர்ந்தவ ருடம்பட
எரிமலர்த் தாமரை யிறை [3] வீழ்த்த பெருவாரி
விரிசடைப் பொறையூழ்த்து விழுநிகர் மலரேய்ப்பத்
தணிவுறத் தாங்கிய தனிநிலைச் சலதாரி
மணிமிடற் றண்ணற்கு மதியாரற் பிறந்தோய்நீ
மையிருநூற் றிமையுண்கண் மான்மறிதோண் மணந்தஞான்
றையிருநூற்று மெய்ந்நயனத் தவன்மகண் மலருண்கண்
மணிமழை தலைஇயென மாவேனில் காரேற்றுத்
தணிமழை தலையின்று தண்பரங் குன்று.

## (ஒன்பதாம் பாடலுரை)

1-11. பெரியநிலம் அசையாமல் வடதிசைக்கண்ணே மிக ஓங்கி அணங்குதல்சான்ற தெய்வசாதிக்கு இறையாகிய இந்திரனாற் காக்கப்படும் இமயச்சிமையத்தின்கண் தெய்வமுனிவர் அறுவரும் உடம்படக் கற்பால் நன்கு மதிக்கப்படும் ஆரலிடத்தே மணிமிடற்றண்ணற்குப் பிறந்தோய்! மையாகிய கரிய நூற்றான் அணியப்பட்ட இமைக்குங்கண்ணையுடைய வள்ளிதோளை நீ களவின்கண் மணந்த அன்று மெய்யின்கண் ஆயிரங்கண்ணையுடைய இந்திரன் மகள் தேவசேனையது கண் முதுவேனில் காராந்தன்மைபெற மணிநிற மழைபெய்தாலொக்கப் பரங்குன்றின் கண் நீராகிய தணிந்த மழையைப் பெய்தது.

4-8. அயனால் வீழ்த்தப்பட்ட ஆகாயகங்கையை மலர்ந்துவிழும் பூவையொப்ப வேகந்தணியச் சடைப்பாரத்தின்கட்டாங்கிய ஒப்பில்லாத நிலைமையினையுடைய சலதாரியாகிய மணிமிடற்றண்ணலெனக் கூட்டுக.

6. சலதாரி - சலத்தைத் தரிக்கும் இயல்பையுடையவன்.

8. வள்ளியை 'இமையுண்கண் மான்மறி' என்றார், [4] மானுடை மகளாகலின்.

இவ்வளவும் முருகவேளை எதிர்முகமாக்கிக் [5] கைகோளிரண்டிற்கு முரிய தேவியராற் காதலிக்கப் பாடுகூறி வாழ்த்தி மேல் வள்ளியது

---

பி-ம் [1] அகனிலையுயர். [2] தணங்குகாறலை. [3] வீழத்த முருகுபெருவாரி. [4] மானுடமகள், மானிடமகள். [5] கைக்கோ.

*நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவீர் [1] கேண்மின் சிறந்தது
காதற் காமங் காமத்துச் சிறந்தது
விருப்போ ரொத்து மெய்யுறு புணர்ச்சி
புலத்தலிற் சிறந்தது கற்பே யதுதான்
இரத்தலு மீதலு மிவையுள் ளீடாப்
பரத்தையுள் ளதுவே பண்புறு கழறல்
தோள்புதி துண்ட பரத்தையிற் சிவப்புற
நாளணிந் துவக்குஞ் சுணங்கறை யதுவே
[2] கேளணங் குறமனைக் கிளந்துள சுணங்கறை
சுணங்கறைப் பயனு மூடலுள் ளதுவே, அதனால்,
அகற லறியா வணியிழை நல்லார்
இகறலைக் கொண்டு [3] துனிக்குந் தவறிலரித்
தள்ளாப் பொருளியல்பிற் [4] றண்டமிழாய் வந்திலார்
கொள்ளாரிக் குன்று பயன்.

---

சிறப்பும் அவன் பரங்குன்று அவட்கொத்தவாறும் கூறலுறுவார், நான் மறைப்புலவரை நோக்கித் தமிழது சிறப்புக் கூறுவாராய்ப் பொதுவகையான் அவற்றிற்குக் காரணம் கூறுகின்றார்:-

12-3. நான்மறைப்பொருளை விரித்து அம்மறையது நல்லிசையை விளக்கும் புலவீர் ! சிறந்ததொரு பொருளைக் கேண்மின்:

14-5. காமத்துச் சிறந்தது காதலையுடைய காமம் ; அஃதாவது, மெய்யுற்றறியாதார் இருவர் அன்பொத்துப் பான்மைவகையால் தாமே மெய்யுற்றுப் புணரும் புணர்ச்சி.

16-26. இனி அன்பு ஒவ்வாத கற்புப் புலத்தலாற் சிறந்தது; அப்புலவியாவது, தான் வாயில்வேண்டலும் வாயினேர்தலுமாகிய இவையுள்ளீடாகத் தலைவனது பரத்தைமையான் வருவது. இனிப் புதிதாகத் தோள் நுகரப்பட்ட பரத்தையில்லின் கண்ணே ஒருத்தியை நாட்காலையே செவ்வணியணிந்து விட்டும் பூப்பு அறிவிப்ப அப்பண்புறு கழறலால் தலைவன் வந்து உவக்கும் புணர்ச்சியை யுடைத்து ; அப்புணர்ச்சிகடாம் தலைவிக்குப் பாங்காயினார் கேட்டு வருத்தமுறப் பரத்தையால் தன் மனைக்கண் அலர் தூற்றப்பட்டுள. அப்புணர்ச்சியின்பந்தான் உண்டாவது இயல்பானன்றி ஊடலானாயது ; அதனால், இக்கற்பிற் போலத் தலைவர்

---

பி-ம். [1] கேண்மினறந்தது. [2] கேளணங்குறமனைமனைக். [3] துணிக்குந்தவறிலரைத். [4] தண்டமிழாவந்துழார், தண்டமிழாயவந்திப்பார்.

ஊழாரத் தோய் [1] கரை நூக்கிப் புனறந்த
காழாரத் தம்புகை [2] சுற்றிய தார்மார்பிற்
கேழாரம் பொற்ப வருவானைத் தொழாஅ
வாழிய மாயாநின் றவறிலை யெம்போலும்
கேழிலார் மாணல முண்கோ திருவுடையார்
மென்றோண்மே லல்கி நல்கலு மின்று
வையெயிற் றெய்யா மகளிர் திறமினிப்
பெய்ய வுழக்கு மழைக்காமற் றைய
[3] கரையாவெந் நோக்கத்தாற் கைசுட்டிப் பெண்டின்
இகலி [4] னிகந்தாளை யவ்வே டலைக்கண்ணி
திருந்தடி தோயத் திறைகொடுப் பானை

---

நீங்குதலறியாத களவிற் புணர்ச்சியையுடைய மகளிர் அவரொடு மாறுகொண்டு துனிக்கும் குற்றமுடையரல்லார்; இப்புணர்ச்சியை வேண்டுகின்ற பொருளிலக்கணத்தையுடைய தமிழை ஆராயாத தலைவர் களவொழுக்கத்தைக் கொள்ளமாட்டார்.

18. பண்புறுகழறலாவது:- * "பூப்பின் புறப்பா டீராறு நாளும் நீத்தகன் றுறைத லறத்தா றன்றே" எனும் அறத்தொடு பொருந்திய உறுதிச்சொல்.

இனி அக்களவிற் புணர்ச்சியையுடைமையான் வள்ளி சிறந்தவாறும் அத்தமிழை ஆய்ந்தமையான் முருகன் சிறந்தவாறுங் கூறுகின்றார்:-

27-44. சந்தனமரங்களையுடைய ஊழான் மெலிந்த கரையை முறித்து வையைப்புனல்கொண்டுவந்த வயிர்த்த சந்தனத்தினது புகை சூழ்ந்த தாரையுடைய மார்பின் கண் நிறத்தையுடையமுத்தாரம் அழகு பெறத் தன்னொடு கலத்தற்குவரும் முருகவேளைத் தொழுது 'எம்போலி ...வஞ்சனே! வாழ்வாயாக; நின்னை அறியாது அகப்பட்ட அவ்வையெயிற்று மகளிர்திறம் இனி மழைபெய்ய வேண்டி வருந்தும் காவையொக்கும்; ஆதலால் அவரே தவறுடையராவதல்லது நீ தவறுடையையல்லை; நின்னையெய்துந் திருவுடையார் மென்றோண்மேலல்கி நல்கலும் நினக்கின்று; ஆகையால் நின் மாணலம் உண்ணக்கடவேனோ' என்று தன்னைக் கையாற் சுட்டிச்சொல்லி வெகுளி மிக்க நோக்கத்துடனே அவன் பெண்டுகாரணமாக உண்டான புலவியானீங்கிய [5]தேவசேனையைச் சென்றெய்தி அவ்வேள் தன் தலைமாலை அவள் திருந்தடியைத்தோய வணக்கமாகிய திறையைக் கொடுப்ப, அவள் புலவிநீங்கி அவனை வருந்தலென்று சொல்லித்

---

* "பரத்தையிற் பிரிந்த கிழவோன் மனைவி, பூப்பின் புறப்பா டீராறு நாளு, நீத்தகன் றுறைத லறத்தா றன்றே" இறை. சூ.43.

பி-ம். [1] கரைநீங்கிப். [2] சுற்றிய மார்பிற். [3] கரையாவ நோக்கத்தாற். [4] னிகந்தானை வேள்கண்ணித். [5] தெய்வச்சேனை.

[1] வருந்த லெனவவற்கு மார்பளிப் பாளைக்
குறுகலென் றொள்ளிழை கோதைகோ லாக
* [2] இறுகிறுக யாத்துப் புடைப்ப
ஒருவர் மயிலொருவ ரொண் [3] மயிலோ டேல
[4] இருவர் வான்கிளி யேற்பின் மழலை
செறிகொண்டை மேல்வண்டு சென்றுபாய்ந் தன்றே
வெறிகொண்டான் குன்றத்து வண்டு.
தார்தார் [5] பிணக்குவார் கண்ணியோச்சித் தடுமாறுவார்
[6] மார்பணி கொங்கைவார் மத்திகையாப் புடைப்பார்
† கோதை வரிப்பந்து கொண்டெறிவார்

தன் மார்பையளிப்ப வள்ளி அதனைக்கண்டு 'இனி அவளைக் குறுகல்' என்று அவன்கையை மிக இறுகயாத்துத் தன் ‡ கோதை கோலாகப் புடைப்ப அதனைக்கண்டு ஒருவர் மயில் ஒருவர் மயிலோடேல, இருவர் வான்கிளியும் தம்முள் மழலையேற்கின்ற அளவிலே, வெறியாட்டை விரும்பினான் குன்றத்து வண்டு தேவசேனையது கொண்டைமேற் செறிந்த வண்டை மேற்சென்று பாய்ந்தது.

34. காவையொத்தலாவது:- கா, தனக்கு இன்றியமையாத மழையை வருவித்துக்கொள்ள மாட்டாது அது தானே வந்துழிப் பொலிந்து வாராதவழியும் ஆமளவுமாற்றி ஆகாத எல்லைக்கண் [7] இறந்து படுதல்.

44. குன்றத்து வண்டென்றமையான் அது வள்ளியுடையதாயிற்று.

45. அங்ஙனம் பாய்ந்த அதனைக் கண்டு தேவசேனை பாங்கியர் வள்ளி பாங்கியரோடு இகலித் தாரையும் தாரையும் பிணக்குவார்.

46. மார்பை அழகுசெய்த கொங்கைக்கண்.

47-9. கோதையையும் வரிப்பந்தையும் கொண்டெறிவாராய்த் தம் பேதைமையையுடைய மெல்லிய நோக்கம் வெகுளியான் வேறுபட

* பரி. 10 : 11; "இறுகிறுகத் தோட்கோப்புக் கொள்ளார்" நாலடி. புல்லறிவாண்மை, 8.

† "கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி" கலி. 51.

‡ "கோதை கோலா...அலைப்பேன் போலவும்" கலி. 128.

பி-ம். [1] வருந்தாலெனவவடாரக்கு. [2] இறுதிறுக. [3] மயிலோடல. [4] இருவான கிளி. [5] பிணங்குவார். [6] மாரணி. [7] இறந்துபடுமாகலானத் தொழில்களானொத்தல்.

பேதை மடநோக்கம் பிறிதாக வூத
நுடங்கு நொசிநுசுப்பார் நூழி றலைக்கொள்ளக்
கயம்படு கமழ்சென்னிக் களிற்றியல்கைம் மாறுவார்
வயம்படு [1] பரிப்புரவி மார்க்கம் வருவார்
தேரணி யணிகயிறு தெரிபு வருவார்
வரிசிலை வளைய மார்புற வாங்குவார்
[2] வாளி வாளிக ணிலைபெற மறலுவார்
தோள்வளை யாழி சுழற்றுவார்
மென்சீர் மயிலிய லவர்.
[3] வாண்மிகு வயமொய்ம்பின்
வரையகலத்தவனை வானவன்மகள்
மாணெழின் மலருண்கண்
[4] மடமொழியவ ருடன்சுற்றிக்
கடிசுனையுட் குளித்தாடுநரும்
அறையணிந்த வருஞ்சுனையான்
நறவுண் [5] வண்டாய் நரம்புளர்நரும்
சிகைமயிலாய்த் தொகைவிரித்தாடுநரும்
கோகுலமாய்க் கூவுநரும்
ஆகுல மாகுநரும்

---

ஊத நுடங்கும் நுசுப்பினராயிருந்தே மிடைந்த போரை மேற்கொள்ள.

50-56. அதனைக்கண்டு, வள்ளிபாங்கியராகிய மென்சீர்மயிலிய லவர்,தோட்டிப்புண்ணால் மென்மைபட்ட சென்னியை யுடைத்தாய... ............................மதத்தாற் கமழ்கின்ற களிற்றியல்பைத் தம்பாற்கொள்வார்; வெற்றிபட்ட செலவினையுடைய புரவிகளது கதியால் வருவார்; தேரணிபோல வடிக்கயிற்றைத் தெரிந்துகொண்டு வருவார்; வாளிமார்புற வரிசிலையை வளைய வாங்குவார்; வாளையுடையவர் நிலைமைபெற மறலுவார்; தோள்வளையாகிய ஆழியைச் சுழற்றுவாராக.

57-60. வானவன் மகளுடைய பாங்கியர் அதற்கு அஞ்சி வாட்டமும்பு நெருங்கிய வெற்றிமொய்ம்பினையுடைய முருகனைத் தொக்குச் சூழ்ந்துகொண்டு.

62-3. அப்பாறையணிந்த சுனைக்கண் வண்டாய் நின்று.

66. ஆகுலமாகுநருமாக.

---

பி-ம் [1] படுபுரவிமாறகம். [2] வாவாளிகள். [3] வாணவயமொய்ம்பின். [4] மடிமொழி. [5] வண்டாறு.

குறிஞ்சிக் குன்றவர் [1] மறங்கெழு வள்ளிதமர்
வித்தகத் தும்பை விளைத்தலான் வென்வேலாற்
கொத்தன்று தண்பரங் குன்று.
கடுஞ்சூர் மாமுத றடிந்தறுத்தவேல்
அடும்போ ராளநின் குன்றின்மிசை
ஆட னவின்றோ [2] ரவர்போர் செறுப்பவும்
பாடல் பயின்றோரைப் பாணர் செறுப்பவும்
[3] வல்லாரை வல்லார் செறுப்பவும்
அல்லாரை யல்லார் செறுப்பவு மோர்சொல்லாய்ச்
செம்மைப் புதுப்புனற்
றடாக மேற்ற தண்சுனைப் பாங்கர்ப்
[4] படாகை நின்றன்று
மேஎ வெஃகினவை
வென்றுயர்த்தகொடி விறல்சான்றவை
[5] கற்பிணை நெறியூ டற்பிணைக் கிழமை
நயத்தகு மரபின் வியத்தகு குமர
வாழ்த்தினேம் பரவுதுந் தாழ்த்துத்தலை நினையா

67-9. குறிஞ்சிநிலத்து மக்களாகிய குறவர்பெற்ற மறங்கெழு கொடிச்சியர் திருந்திய போரை விளைத்தலால் வென்வேலானுக்கு இயைந்தது. இவ்வாறு அவனைப் படர்க்கையாக்கி இவை கூறிப் பின்னும் எதிர்முகமாக்கி வாழ்த்துகின்றார்.

70. வேலால்.

72. ஆட்டல் பயின்றாரை அவ்வாடல் பயின்றார் வெல்லவும்.

74. வல்லாரை - வல்லுப்போர் வல்லாரை.

75. அல்லார் - ஒழிந்த கல்விகளையுடையார்.

இக்கல்வி வென்றிகளான் ஒப்பில்லாத புகழ் பரப்ப.

77-8. தடாகம்போலும் சுனைப்பக்கத்துக் கொடியெடுத்து நின்றது.

79. நினக்குப் பொருந்தின வேலினை.

80. வென்றுயர்த்தகொடியால் விறலமைந்தனை.

81-5. கற்புப்பொருந்திய நெறியையுடைய தேவியரது அன்பு

பி-ம். [1] மறகெழு. [2] ரவைபோர். [3] வல்லாரை வல்லாணர் செறுப்பவும். [4] படாக்கைநினகுன்று. [5] கற்பினை.

*நயத்தலிற் சிறந்தவெம் மடியுறை*
*பயத்தலிற் சிறக்க நாடொறும் பொலிந்தே.*

கடவுள் வாழ்த்து

குன்றம்பூதனார் பாட்டு
மருத்துவன் நல்லச்சுதனார் இசை.
பண்ணுப் பாலையாழ்.

---

பொருந்திய அவ்வூடலுரிமையை நயத்தற்கேற்ற பண்பினையுடைய குமர! யாம் நின்னை வணங்கி வாழ்த்தி வேண்டிக்கொள்ளாநின்றேம்; அன்பாற் சிறந்த எம்மடிக்கணுறைவு நாடோறும் பொலிந்து பயன்தருதலொடு சிறக்கவென்று.

என்றென்பது அவாய்நிலையான் வந்தது. (9)

# பத்தாம் பாடல்

## வையை

*மலைவரை மாலை யழிபெயல் காலைச்*
*செலவரை காணாக் [1] கடறலைக் கூட*
*நிலவரை [2] யல்ல னிழத்த விரிந்த*
*பலவுறு போர்வைப் [3] பருமணன் மூஉய்*
*வரியரி யாணு முகிழ்விரி சினைய*
*[4] மாந்தீந் தளிரொடு வாழையிலை மயக்கி*
*ஆயந்தளவா வோசை [5] யறையூஉப் பறையறையப்*
*போந்தது வையைப் புனல்.*
*புனன்மண்டி யாடல் புரிவான் சனமண்டித்*
*தாளித நொய்ந்நூற் சரணத்தர் மேகலை*
*ஏணிப் படுகா [6] விறுகிறுகத் தாளிடீஇ*
*நெய்த்தோர் நிறவரக்கி * னீரெக்கி யாவையும்*
*முத்துநீர்ச் சாந்தடைந்த மூஉய்த் தத்திப்*

---

## (பத்தாம் பாடலுரை)

1-8. வையைப்புனல் மலையிடத்து மாலைக்கட்பெய்த மிக்க பெயலான் எல்லைசென்று காணப்படாத கடலைக் கூடுதற்குக் காலைப்... ... ... போந்தது.

1. ஈண்டு ஏதுப்பொருண்மைக்கண் வந்த ஆனுருபு இறுதிக்கட்டொக்கு நின்றது.

2. 'சென்று' என்பது 'செல்ல' எனத் திரிந்தது.

3-8. நிலவெல்லைக்கட் பசிமுதலிய துன்பங்கள் சுருங்க விரிந்த பல பூக்கள் நெருங்கின போர்வையுடனே பருமணலை மூடி வரியை யுடையவண்டு... ... ...முகிழ்விரிசினையின் கண்ணவாகிய மாந்தளிர்களுடனே வாழையிலைகளை மயக்கி ஆராய்ந்து அளவிடப்படாத பல ஓசையும் ஒலிக்கக் கரைகாவலரையழைக்கின்ற பறை அறையப் போந்ததெனக் கூட்டுக.

6. 'மாந்தீந்தளிரொடு வாழையிலை மயக்கி' என்பது புனல் கரையிற் சோலைகளுள் மரச்சினைகளைத் தோய்ந்து செல்கின்றமை தோன்ற நின்றது.

9-18. அப்புனலின்கண் மண்டியாடுதலைச் செய்ய வேண்டிச்சனம் செல... ... ... ... ... ... ... ... ... ... ... ...யவிதமான சரணத்தை யுடையராய்

---

* 'நீரேக்குவோரும்' என்றும் இது படித்தற்கு இடமுண்டு.

பி-ம். [1] கடல்வரைக்கூடி. [2] அல்லலிழக்கவிரிந்தபுலவுறு. [3] பயிரு மணல். [4] மாந்தளிரோடு. [5] அறையிற்பறையறைய. [6] இறுகுறுகுதன்னார்.

*புகவரும் பொங்குளைப் *புள்ளியன் மாவும்*
*மிகவரினு மீதினிய வேழப் பிணவும்*
*[1] அகவரும் பாண்டியு மத்திரியு மாய்மாச்*
*சகடமுந் தண்டார் சிவிகையும் பண்ணி*
*வகைவகை யூழூழ் கதழ்புமூழ்த் தேறி*
*முதிய ரிளையர் முகைப்பரு வத்தர்*
*வதிமண வம்பலர் [2] வாயவிழ்ந் தன்னார்*
*இருதிற மாந்தரு மின்னினி யோரும்*
*விரவுநரை யோரும் [3] வெறுநரை யோரும்*
*பதிவத மாதர் பரத்தையர் பாங்கர்*

---

மேகலையாகிய ஏணிப்படுகாலை மிக இறுகுமாறு தாளிட்டு அரக்குநீரை † எக்கும் கருவியெல்லாவற்றையும் முத்துப்போலும் பனிநீரோடு அளவிய சந்தனத்துடனே மூயின்கட்கொண்டு தத்துதலான் மேற்கொளற்கரிய மாவையும் … … … … … … …மேலிருத்தற்கு இனிய பிடியையும் பெயர் சொல்லி அழைக்கப்படும் அரிய எருதுபூண்ட வையத்தையும் கோவேறு கழுதையையும் ஆய்மாபூண்ட சகடத்தையும் தண்டு ஆர்ந்தசிவிகையையும் வகைவகையாகப் பண்ணி முறைமுறையாக வந்து மொய்த்து விரைந்தேறி.

10–11. ‡ இருகோவை முதல் முப்பத்திருகோவையீறாக ஒன்றற்கொன்று வடமேறுதலான் மேகலையை § 'ஏணிப் படுகால்' என்றார்.

13. மூடுதலுடைமையாற் பூப்பெட்டியை, 'மூஉய்' என்றார்.

16. பாண்டியென்பது ஆகுபெயர்.

19–26. முகைபோலும் பருவத்தாரும் தங்கிய மணத்தையுடைய புதுமலர் வாயவிழ்ந்தன்ன பருவத்தாருமாகிய இளையவரும் விரவுநரையோரும் வெறுநரையோருமாகிய முதியவரும் என்ற இவ்விருதிற மாந்தரும்

---

* "புள்ளேர் புரவி" (பரி. 11 : 52) ; "புள்ளியற் கலிமா" தொல். கற்பு. சூ. 53.

† "மருப்பினீரெக்குவோரும்" (பரி.11), "சிலிறிப் பொறிநீரெக்கியும்", "குருதிச் செம்புன றவிரா தெக்கவும்" பெருங். 1. 42:188, 46:29.

‡ "எண்ணிரண் டிரட்டி கோத்த விரிசிகை யிருபத் தொன்றிற் பண்ணிய கலாப மீரேழ் பருமநா லிரண்டிற் செய்த, வண்ணமே கலையி ரண்டிற் காஞ்சியிவ் வகையோ ரைந்தும், புண்ணியக் கொடி வண்டார்ப்பப் பூத்தபோற் புலம்பப் பூட்டி" திருவிளை. திருமணப். 158.

§ ஏணிப்படிகாலெனவும் வேறு நூல்களில் இப்பெயர் வழங்கும்.

பி-ம். [1] அகவவரும். [2] வாய்பிளந்தன்னார். [3] வெற்றுநரையோரும், வறநரையோரும்.

அதிர்குரல் வித்தக ராக்கிய தாள
விதிகூட் டியவிய மென்னடை போலப்
பதியெதிர் சென்று பரூஉக்கரை நண்ணி
நீரணி காண்போர் [1] நிரைமாட மூர்குவோர்
பேரணி நிற்போர் பெரும்பூச றாக்குவோர்
மாமலி யூர்வோர் வயப்பிடி யுந்துவோர்
வீமலி கான்யாற்றின் றுருத்தி குறுகித்
* தாம்வீழ்வா ராகந் தழுவுவோர் தழுவெதிரா
தியாமக் குறையூட லின்னசைத் தேனுகர்வோர்
காமக் கணிச்சியாற் கையறவு வட்டித்துச்
சேமத் திரைவீழ்த்துச் சென்றமளி சேர்குவோர்

கற்புடையமகளிர் பரத்தையரெனப்பட்ட இப்பருவங்களின் மகளிரும் இம்மாந்தர்க்கும் மகளிர்க்கும் பாங்காயினாரும் வித்தகராக்கிய தாளவிதியாற் கூட்டப்பட்ட அதிர்குரலியங்களது மென்னடைபோலப் பிறபதியிலுள்ளாரோடு யாற்றெதிரே நடந்துசென்று அதன் உயர்ந்த கரையைச் சேர்ந்து.

உம்மைகள் வேண்டியவழிக் கூட்டியுரைக்கப்பட்டன.

24-5. தாளவிதி கூட்டிய இயமென்னடை போறலாவது: இயங்கள் ஒன்றற்கொன்று கூறுவேறுபாடுடையவேனும் விளம்பித நடையையுடைய தாளகதியால் எல்லாம் மென்னடையவாய்ச் செல்லுமாறுபோல எதிர் செல்கின்றவர்களும் வன்மை மென்மை இடைமையாகிய பண்பு வேறுபாடுடையரேனும் நெருக்கத்தால் எல்லாரும் மென்னடையராய்ச் சேறல்.

நீரினது அழகுகாண்டல் (27) முதலாக அமளிசேர்தல் (34) ஈறாகச்சொல்லிய விளையாட்டுக்கள் அலர்வாயவிழ்ந்தன்ன பருவத்துக் (20) கற்புடை மகளிர் பரத்தையரன ; அவற்றில் மாவின் திரளை ஊர்தலும் பிடியை உந்துதலும் பரத்தையர்க்கேயுரிய.

27. நிரைத்த நீரணிமாடம்.

28. மைந்தரொடு பொரும் விளையாடற்போர்க்குப் பேரணியாய் நிற்பார்; தூசியராய்ச் சென்று தாக்குவார்.

30. நறுநாற்றத்தையுடைய பூ மிக்க யாற்றிடைக்குறை.

31-4. அத்தழுவுதலைச் செய்யாது யாமத்து ஊடற்குறையாகிய இனிய கலவிநசையைத்தரும் தேனை நுகர்வோர் ; † காமக் கணிச்சி உடைத்தலால் ஊடலைச் சுழற்றியெறிந்துவிட்டு அமளிசேர்வோராக.

* "தாம் வீழ்வார் மென்றோள்" திருக்குறள், 1103.

† "காமக் கணிச்சி யுடைக்கு நிறையென்னும், நாணுத்தாழ் வீழ்த்த கதவு" திருக்குறள், 1251.

பி-ம். [1] நிரைமரம்.

*தாம்வேண்டு காதற் கணவ ரெதிர்ப்படப்*
*பூமேம்பா டுற்ற புனைசுரும்பிற் சேம*
*மடநடைப் பாட்டியர்த் தப்பித் தடையிறந்து*
*தாம்வேண்டும் பட்டின மெய்திக் கரைசேரும்*
*ஏமுறு நாவாய் வரவெதிர் கொள்வார்போல்*
*யாம்வேண்டும் வையைப் புனலெதிர்கொள் கூடல்*
*ஆங்க, அணிநிலை மாடத் தணிநின்ற பாங்காம்*
*மடப்பிடி கண்டு வயக்கரிமா லுற்று*
*நடத்த நடவாது நிற்ப மடப்பிடி*
*அன்ன மனையாரோ [1] டாயா நடைக்கரிமேற்*
*[2] சென்மன மாலுறுப்பச் சென்றெழின் மாடத்துக்*
*கைபுனை கிளர்வேங்கை காணிய வெருவுற்று*

---

35-40. ஏனை முகைப்பருவத்து மகளிர் (19) பூவின் மேம்பாட்டை நாடிவந்துற்ற சுரும்புபோலத் தாம் விரும்பும் காதற்கணவர் தம்மைவந்து எதிர்ப்பட்டுப் புணர்தற்பொருட்டு நீராடல் குறித்துத் தமக்குக் காவலாகிய பாட்டியரைத் தப்பி அவர் தடுத்தலையுங் கடந்து போய் நாவாயது வரவை எதிர்கொள்வார்போல் விருப்பமுற்று யாம் விரும்புகின்ற வையைப் புனலை எதிர்கொள்கின்ற கூடலின்கண்.

38-9. தாம் நினைத்த பட்டினத்தைச் சேர்ந்து ஏற்றிவிட்ட பண்டங்களைக் கொடுத்து ஆண்டுள்ளன கொண்டு இடையூறின்றிவந்து கரையைச் சேரும் நாவாயென்க.

சரணத்தராய்த் (10) தாளிட்டுக்கொண்டு (11) ஏறிச் (18) சென்று நண்ணி (26) அலர்வாயவிழ்ந்தன்னார் (20) இப்பெற்றிய செய்ய (27-34) முகைப்பருவத்தர் (19) எதிர்கொள்கின்ற கூடல் (40) என முடிக்க.

41. ஆங்க : அசை.

41-55. ஒரு வயக்கரி தனக்குப் பாங்காய பிடியைக்கண்டு காமத்தால் மயக்கமுற்று மேலிருந்த மைந்தர் நடத்த நடவாது அழகிய நிலைகளை யுடையமாடத்தையணைந்த இடத்திலே நிற்ப அப்பிடிதானும் கரிமேற் சென்ற மனம் மயக்கமுறுப்ப மேலிருந்த மகளிரொடு நடத்தல் சுருங்கிச் சென்று அப்புலிமுகமாடத்துப் பண்ணிவைத்த * வேங்கையைக் கண்ட அளவிலே அதனை மெய்வேங்கையென்றும் கரியைப்பாயுமென்றுங்

---

* பிடி வேங்கைக்கு அஞ்சுதல், நற்றிணை, 47, 85, 144-ஆம் செய்யுட்களாலும் விளங்கும்.

பி-ம். [1] டயர்நடை. [2] சென்மெனமாலுறுப்ப.

மைபுரை மடப்பிடி மடநல்லார் விதிர்ப்புறச்
செய்தொழில் கொள்ளாது மதிசெத்துச் [1] சிதைதரக்
கூங்கை மதமாக் கொடுந் *தோட்டி [2] கைந்நீவி
நீ ங்கும் பதத்தா லுருமுப் பெயர்த்தந்து
வாங்கி முயங்கி வயப்பிடி [3] கால்கோத்துச்
சிறந்தார் நடுக்கஞ் சிறந்தார் [4] களையல்
இதையுங் கயிறும் பிணையு மிரியச்
† சிதையுங் கலத்தைப் [5] பயினாற் றிருத்தும்
திசையறி [6] நீகானும் போன்ம்.

---

கருதி வெருவி அம்மேகத்தையொத்த பிடி அம்மகளிர் நடுங்கப் பாகர்செய்யும் தொழிலைக்கொள்ளாது சிதைய அச்சிதைவிற்கு ஆற்றாது பிளிறுகின்ற அக்கைம்மா தோட்டியைக் கடந்து சிதையுமளவில் அம்மைந்தர் ‡ உருமுப்போலும் முழக்கத்தை யொழியுமாறு அதனைப் புலிமுகத்தினின்றும் வாங்கிப் பிடிசிதையாமல் அதனை அணைவித்து அம்மகளிர் நடுக்கத்தை அவர் களைகின்ற செயல், பாயும் கயிறும் மரக்கூட்டமும் இரியச் சிதையப் புகாநின்ற மரக்கலத்தைப் பயினால் திருத்தி அதனகத்தார் நடுக்கம் களையும் நீகான் செயலோடொக்கும்.

41. அணிநிலைமாடம் : ஆகுபெயர்.

54–55. கலங்களை ஓட்டும் திசையறிந்த நீகானென்க.

55. உம்மை : இசைநிறை.

§ வையைநீர் விழவின்கண் மைந்தரும் மகளிருமேயன்றி விலங்குகளும் ஒத்த அன்பினவாயின; அது நின்மாட்டு இல்லையாயிற்றென்பது கூறியவாறு.

---

*"தோட்டி நீவி" பதிற். 53.

† 'சிதையுங் கலத்தை...போன்ம்' என்னும் பகுதி, "செய்யுளிறுதிப் போலி மொழிவயி, னகார மகார மீரொற்றாகும்" (தொல். மொழி. சூ.18, ந.) என்பதற்கும், "ளளமெய்...ளுள்ளே" (நன்.சூ.119, மயிலை. மேற்படி சூ.120, விருத்தி) என்பதற்கும் மேற்கோள்.

‡ பரி. 8 : 17–8 ; "உருமுக்குர லோடையானை" சீவக.7.

§ "குறியா வின்ப மெளிதி னின்மலைப், பல்வேறு விலங்கு மெய்து நாட, குறித்த வின்ப நினக்கெவ னரிய" (அகநா. 2) என்பதும், "வருக்கைப் பழம்விழுதே, னெய்யா தயின்றிள மந்திகள் சோரு மிருஞ்சிலம்பா, மெய்யா வரியதென்" (திருச்சிற். 262) என்பதும் அதன் விசேடவுரையும் இங்கே அறியற்பாலன.

பி–ம். [1] சிதைததாங்கூர்ங்கைமடமா. [2] கைந்நிறுவி. [3] கோல் காத்து. [4] களைய, விதையு. [5] பயிராற்றிருத்தித். 6 மீகானும்.

*பருக்கோட்டி யாழ்ப்பக்கம் பாடலோ டாடல்*
*அருப்ப மழிப்ப வழிந்த [1] மனக் கோட்டையர்*
*(?) ஒன்றோ டிரண்டா முன்றேறார் வென்றியிற்*
*பல்சன நாணிப் [2] பதைபதைப்பு மன்னவர்*
*தண்ட மிரண்டுந் தலை இத் [3] தாக்கி நின்றவை*
*ஒன்றியு முடம்பா டொலியெழுதற் கஞ்சி*
*நின்ற நிகழ்ச்சியும் போன்ம்.*
*காமங் கனைந்தெழக் கண்ணின் [4] களியெழ*
*ஊர்மன்னு மஞ்சி யொளிப்பா ரவர்நிலை*
**கள்ளின் களியெழக் காத்தாங் கலரஞ்சி*
*உள்ள முளையெழ வூக்கத்தா னுள்ளுட்*
*பரப்பி மதர்நடுக்கிப் [5] பாரலர் தூற்றக்*
*கரப்பார் களிமதரும் போன்ம்.*
*[6] கள்ளொடு காமங் கலந்து கரைவாங்கும்*
*வெள்ளந் தருமிப் புனல்.*

---

56-62. பரிய கோட்டையுடைய யாழின்கூறு மிடற்றுப்பாடல் ஆடல் இவை திண்மையையழிப்ப அழிந்த துனியினையுடைய மகளிரும் மைந்தரும் கூடுதற்குச் செல்கின்ற ... ... ... ...னும் ஒத்திருக்கவும் வென்றி காரணமாக ஒருவரினொருவர் முற்படுதலை நாணிக் கூடாது மெலி வுறுதல், மாறுபாட்டையுடைய மன்னவர் சேனையிரண்டும் தம்முட் கண்ணுற்றுப் பொருதுநொந்தவை சந்தியாதற்கு மனத்தான் இயைந்துவைத்தும் முன்னாக ... ... ... ...உடம்பட்டதென்னும் வார்த்தை பிறக்குமென்று அதனையஞ்சிப் பின்னும் நோவோடுநின்ற ஒழுக்கத்தையொக்கும்.

63-8. காமம் மிக்கெழ அதனானாகிய கண்ணின்களிப்புப் புலப்படா நிற்கவும் ஊரினுள்ளாரை மிகவுமஞ்சி அதனையொளிப்பாரது நிலைமை, கள்ளின் களிமிக அதனினாகிய மதரு... ... ... ...யெழுமாறு உள்ளேயுள்ளே நடுக்கிப் பாரிலுள்ளார்க்குப் பரப்பி அலர்தூற்றவும் அவ்வலரையஞ்சி ஊக்கத்தாற் பாதுகாத்து அக்களிமதரை மறைப்பாருடைய நிலைமையைப் போலும்.

69-70. கள்ளையும் காமத்தையும் பொருந்துதலாற் கரையறும் இன்பவெள்ளத்தைத் தாராநின்றது. சொல்லுகின்ற இப்புனல்.

---

* கலி. 115; திருக்குறள், 928.

பி-ம். [1] மனக்கோட்டை யொன்றோடி. [2] பதைபதைப்ப மன்னவர். [3] தாக்கிநின்றன, தாக்குநின்றானை. [4] கனியெழ, [5] பார்த்தலர்தூற்ற. [6] கள்ளடைகாமங்.

*புனல்பொருது மெலிந்தார் திமில்விடக்*
*கனல்பொருத வகிலினாவி [1] காவெழ*
*நகின்முகடு மெழுகிய வளறுமடை திறந்து*
*திகைமுழுது கமழ [2] முகிலகடு கழிமதியின்*
*உறைகழி வள்ளத் துறுநறவு வாக்குநர்*
*அரவுசெறி யுவவுமதியென வங்கையிற் றாங்கி*
**எறிமகர வலய மணிதிகழ் நுதலியர்*
*[3] மதியுணர மகளென வாம்பல்வாய் மடுப்ப*
*மீப்பால் வெண்டுகில் போர்க்குநர் பூப்பால்*
† *வெண்டுகில் சூழ்ப்பக் குழன்முறுக்குநர்*
*செங்குங்குமச் செழுஞ் [4] சேறு*
*பங்கஞ் செய்யகில் பலபளிதம்*
*மறுகு படவறை புரையறு குழவியின்*

---

71. இப்புனலொடு பொருது இளைத்தமகளிரெல்லாம் புணைகளை விட்ட அளவில்.

72-4. கனல்கட்ட அகிலின்புகை காவின்கண் எழ அதனான் ஈரம் புலர்த்தித் தம் முலைமுகட்டின்கண் மெழுகிய கலவைக்குழம்பு மடைதிறந்தாலொக்கப் பரந்து திசையெங்கும் கமழ.

75. உறு நறவு - வெம்மைமிக்க நறவு.

77. தலைக்கோலம் அழகுவிளங்கும் நுதலியர் சிலர்.

78. மதியது கலையையுண்கின்ற தெய்வமகள்போல், மடுப்ப-மடாநிற்க.

79. போர்க்குநர் - போர்ப்பார்.

79-80. பூத்தொழிலைத் தன்பாலுடைய வெண்டுகிலைச் சிலர் குழல்மேற் சுற்ற அதனை முறுக்குவார்.

81. குங்குமச்சேறு.

82-4. சேறாகச்செய்த அகிற்சாந்து பலவாகிய கருப்பூரம் இவை தம்முள் மறுகச் சாந்தம்மிக்கண் புரையற்ற குழவியால் அவியைப் பொருந்தின குண்டத்தின்கண் அழலென நிறம்பெற அரைப்பார்.

---

*"மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்து" முருகு. 25.

† 'வெண்டுகில்' என்றும், "கோபத் தன்ன தோயாப் பூந்துகில்" என்றும் கூறலின், துகில் வெண்மை செம்மை இரண்டிற்கும் பொது; சீவக. 34, ந.

பி-ம். [1] காவெழந்நதினமுகடு மெழுகியளறுமடையடைதிறந்து. [2] முகிலககெழியமதியின. [3] மதியுண மராமகள், மதியுணராமகள். [4] சேறும் பங்கஞ் செயல்கில் பலபளிததம்.

அவியம ரழலென வரைக்குநர்
நத்தொடு நள்ளி நடை [1] யிறவு வயவாளை
வித்தி யலையில் விளைக பொலிகென்பார்
இல்லது நோக்கி *யிளிவரவு கூறாமுன்
நல்லது வெஃகி வினைசெய்வார்
மண்ணார் மணியின் வணர்குரல் வண்டார்ப்பத்
தண்ணந் துவர்பல வூட்டிச் சலங்குடைவார்
எண்ணெய் கழல [2] விழைதுகள் பிசைவார்
மாலையுஞ் சாந்து மதமு [3] மிழைகளும்
கோலங் கொளநீர்க்குக் கூட்டுவா ரப்புனல்
உண்ணா நறவினை யூட்டுவா ரொண்டொடியார்

அம்மிக்குழம்பிற்கு உவமையாவது அவியமர்குண்டத்தின்மீது தோன்றுகின்ற அழலாகலின், 'அவியமரழல்' என்றார்.

85-6. †பொன்னாற்செய்த நந்து நண்டு இறவு வாளை இவற்றை நீரின்கண் வித்தி.

87-8. இரப்போரது இன்மையை நோக்கி ‡ அவர் ஈயென்பதைச் சொல்லுதற்குமுன்பே அறத்தைவிரும்பி அவர் நயக்கும் தானங்களைப் பண்ணுவார்.

89-91. மண்ணுதலுற்ற நீலமணிபோல நெறித்த மயிர்க்கற்றைக் கண் வண்டார்ப்பப் §பத்துத்துவரையுமூட்டி நீராடுவார். இழைபொடியை இட்டுப் பிசைவார்.

92. மதம் - கத்தூரி.

93. நீர்க்கு ஒப்பனையாதல் கூடாமையிற் கூட்டுவாரென்றார்.

93-4. இங்ஙனம் கூட்டுவார் ஊட்டுவாராயது, தமக்கு அப்புனல் செய்த உதவிக்குக் கைம்மாறு கருதி.

* இளிவரவென்றது இங்கே ஈயென்றிரத்தலை; "ஈயெனவிரத்த விழிந்தன்று" (புறநா. 204) ; "நாவிற் கிரவி னிளிவந்த தில்" திருக்குறள், 1066.

† நீரிற் பொன்மீன்முதலியவற்றை விடுத்துவழிபடுதல், இப்புத்தகத்தின் 40-ஆம் பக்கத்துக் கீழ்க்குறிப்பாலறியலாகும்.

‡ "இலனென்னும் மெவ்வ முரையாமை" என்னும் திருக்குறளும் அதனுரையும் இதனுடன் ஒப்புநோக்கற்பாலன.

§ "பத்துத் துவரினு மைந்து விரையினும்........ஆட்டி" சிலப். 6; 76-9.

பி-ம் [1] யிறவுவயலுளவாளை, யிரவுலவலுளவாளை, [2] விழை யதுகள் பிசைவார். [3] மிழைகணாங் கோலங்கொணீர்க்கு.

[1] வண்ணந் தெளிர முகமும் வளர்முலைக்
கண்ணுங் கழியச் சிவந்தன வன்னவகை
ஆட்டயர்ந் தரிபடு *[2] மைவிரை மாண்பகழி
அரந்தின்வாய் போன்ம்போன்ம் போன்ம்
பின்னு மலர்க்கண் புனல்.
[3] தண்டித் தண்டிற் றாய்ச்செல் வாரும்
கண்டற்றண் டாது திரைநுரை தூவாரும்
வெய்ய திமிலின் [4] விரைபுனலோ டொய்வாரும்
மெய்ய துழவி னெதிர்புனன் மாறாடிப்
[5] பைய விளையாடு வாருமென் பாவையர்
[6] செய்தபூஞ் சிற்றடிசி லிட்டுண்ண வேற்பார்

---

94-9. இத்தன்மையாராகிய ஒண்டொடியார்க்குப் புனலாட்டான் நிறம் ஒளிபெற்று நீரான் ஏறுண்டமுகமும் முலைக்கண்களும் மிகச் சிவந்தன; காதலரோடு அன்னவாகிய விளையாட்டை அயர்ந்திருக்கவும் பின்னும் புனலின்மேற் செல்கின்ற அவர்கண்கள் வண்டுமொய்க்கின்ற ஐந்தாகிய விரைமாண்ட காமபாணத்தினது அரத்தாற் கூர்மையிடப்பட்ட வாய்போலும்.

இது தொழில்பற்றிவந்த இல்பொருளுவமை.

98. அடுக்கு, துணிவுபற்றி வந்தது.

இனிப் புனல்பொருது மெலியாத மைந்தரைக் கூறுகின்றார்.

100-102. விரும்பி வாழைத்தண்டாலே நீர்மேற் றாவிச்செல்வாரும் கண்டற்றாதைத் திரையினும் நுரையினும் தூவுவாரும் விசையையுடைய ஓடத்தின்கண் ஏறி அதனை விரைபுனலோடு ஒழுக்குவாரும்.

103. புனலுக்கு எதிர்மாறாக ஆடி உண்டான மெய்யது உழப்பால்.

104-5. மென்பாவையர் இழைத்த பொலிந்தசிற்றிலில் தாம் அட்ட சிறுசோற்றையிட உண்டற்கு ஏற்பாரும்.

106. முன் இடுவாராய்ப் பின் மறுப்பாராகிய மகளிருடைய.

---

* “செம்மேனி, பொன்போன்ம்பல் வெண்முத்தம் போன்ம்” என்பதற்கு ‘ஐவிரைமாண்பகழி ... ...கண்புனல்’ என்னும் பகுதியை மேற்கோள் காட்டினர், மாறனலங்காரவுரையாசிரியர்; சூ. 98.

பி-ம். 1 வண்ணமுந்தெளிர. 2 ஐயவிரை. 3 தண்டிற்றண்டிற். 4 விரைபுனலோடாயவாருமெய்யாதுழவி. 5 பைவிளையாயவோரும். 6 செய்யபூஞ், செயபூஞ்.

இடுவார் மறுப்பார் சிறுகிடையார்
* பந்துங் [1] கழங்கும் பலகளவு கொண்டோடி
அந்தண் கரைநின்று [2] பாய்வாராய் மைந்தர்
ஒளிறிலங் கெஃகொடு வாண்மா றுழக்கிக்
களிறுபோ ருற்ற †களம்போல நாளும்
தெளிவின்று தீநீர்ப் புனல்.
‡ மதிமாலை மாலிருள் கால்சீப்பக் கூடல்
வதிமாலை மாறுந் தொழிலாற் புதுமாலை
நாளணி நீக்கி நகைமாலைப் பூவேய்ந்து
[3] தோளணி தோடு சுடரிழை [4] நித்திலம்
பாடுவார் பாடல் பரவல் பழிச்சுதல்
ஆடுவா ராட [5] லமர்ந்தசீர்ப் பாணி

108. அவரறிந்து வாங்கச்சென்றுழி எட்டாமல் நீருட் பாய்வாருமாய்.

105-108. இரண்டிடத்தும் உம்மை வருவிக்கப்பட்டது.

108-11. மைந்தர் எஃகானும் வாளானும் மாறுபட்டு உழக்கக் களிறுகள் தம்மிற் பொருதலுற்ற களம்போறலான் இனிய நீர்மையையுடைய புனல் தெளிவின்றாயிற்று.

இனி எல்லாரும் புனலாடி மீண்டவாறு கூறுகின்றார்.

112-25. மாலைக்கண் மாலிருளை மதி கால்சீத்த அளவிலே கூடற்கண் வதியும் இயல்பை நோக்கி மீளுந்தொழிலுடனே புதிய இயல்பையுடைய நாளணிகளைநீக்கி மாலைக்கண் நகுதலையுடைய பூக்களை வேய்ந்து தோளணி தோடு மற்றுள்ள சுடரிழை முத்துவடம் இவற்றை யணிந்து பாடுதற்குரியாரது பாடலும் பல்லாண்டு முதலாய பரவுதலும் புகழ்தலும், ஆடுதற்குரியாரது ஆடலும் அதற்குப்பொருந்தின சீருடன் கூடிய பாணியென்னுந்தாளமும் மேல் ஆர்க்கின்ற தேனீக்களதுசெறிந்த வழக்கமுமாகிய அவற்றினாகிய ஓசையெல்லாவற்றொடும் பாடுகின்ற பண்ணொலியைக்கேட்டுத் தம் இனமென்று அதன்வழியே ஊரினின்றும் வருகின்ற வண்டுகள் அப்பாடுவார் வருந்த எதிரேவந்தூத நகைமாலைப்பூ வேய்ந்த மயிர்க்கற்றைக்கண் தேன்கொள்ளையைக் கொள்வனவாகிய

* விளையாட்டுப் பருவத்தில் சிறுமிகளுடைய பந்து முதலியவற்றை இளைஞர் கவர்ந்தோடுதல் இயல்பு; "வரிப்பந்து கொண்டோடி" (கலி .51); "வரிப்பந்து கொண்டொளித்தாய்" (பு.வெ.238); "முற்றிலைப் பந்தைக் கழங்கைக்கொண் டோடினை" திருவேங்கடத்தந்தாதி, 97.

† பரி. 11 : 61. ‡ "தூங்கிருண் மான்மாலை" பு.வெ.320.

பி-ம். [1] கழுங்கும் புலன்களவு. [2] பாய்வாரமைந்த. [3] தோளணி கொடு. [4] நித்தலம். [5] லமாசாபபாணி.

*நல்ல கமழ்தே னளிவழக்க மெல்லாமும்*
*பண்டொடர் வண்டு [1] பரியவெதிர் வந்தூதக்*
*கொண்டிய வண்டு கதுப்பின் குரலூதத்*
*தென்றிசை நோக்கித் திரிதர்வாய் மண்டுகாற் சார்வா*
*நளிர்மலைப் பூங்கொடித் தங்கு புகக்கும்*
*[2] பனிவள ராவியும் போன்ம் மணிமாடத்*
*துண்ணின்று தூய பனிநீ ருடன்கலந்து*
*[3] காறிரிய வார்க்கும் புகை.*
**இலம்பாடு புலவ ரேற்றகை ஞெமரப்*

---

வண்டுகள் உடன்வந்தூத எல்லாரும் தென்றிசையை நோக்கி மீள்கின்ற எல்லைக்கண் ஊரின்மாட... ...லுந்தித்தூவிய பனிநீர் மணத்தொடுகூடிக் காற்றுத்திரிய அதனொடு மாடத்துள் நின்று புறப்பட்டுப் பரக்கும் அகிற்புகை மலையிற் பூங்கொடிக்கட்டங்கிப் பின் மேல் மண்டியேறும் வளர்பனி யாவிபோலும்.

115. 'அணிந்து' என்பது வருவிக்கப்பட்டது.

நீக்கி வேய்ந்து (114) அணிந்து (115) திரிதர்வாய் (121) என்க.

118. நல்ல கமழ்தேனென்பது, செய்யப்படுவதாகிய தன்பொருட்கு ஏற்ற அடையடுத்துச் செய்வதன்மேல் நின்ற ஆகுபெயர்.

புனலாட் டின்ப நுகர்ச்சி ... ... ... ... .. ... ... ... .. ... ... .. ... ... ...

இனி அவ்வின்பங்கட்கு ஏதுவாகிய வையையை வாழ்த்தி [4] முடிக்கின்றார்;

123. உம்மை இசைநிறை.

126-31. † இன்மையாற் பற்றப்பட்ட புலவரது ஏற்றகைநிறையப் பொன்னைச்சொரியும் வழுதியைப் போலவே வையை செய்யின்கட் பொன்னைப்பரப்பும் இயல்புவினை மாறாதொழிக; துன்பமறியாது தானே வருபுனற்கு விருந்துசெய்யுங் கூடற்கண் குற்றமின்றி இசைக்கின்ற இசைக்குரிமை யுடையவராகிய பாணரும் கூத்தரும் மேவிய கூட்டத்தோடு ஒருங்கு ஏத்தித் தொழ. எ-று. (10)

---

*"இலம்படு புலவ ரேற்றகைந் நிறையக், கலம்பெயக் கவிழ்ந்த கழறொடித் தடக்கை" மலைபடு. 576-7.

†"படுதல்-உண்டாதல்; இனி, இவ்வுரையாசிரியர் பரிபாட்டினுள், 'இலம்படு...வழுதி' என்பதற்குத் தொல்காப்பியத்துள், 'இலமென்கிளவிக்கு' என்னும் சூத்திரத்திற்கு இளம்பூரணருரைத்தாங்குரைத்தார்;

பி-ம். [1] பெரியவெதிரினவந்தூத. [2] பனிவளாவாவியும். [3] காறிரிவாக்கும். [4] முடிக்கின்றான்.

பொலஞ்சொரி வழுதியிற் புனலிறை பரப்பிச்
செய்யிற் பொலம்பரப்புஞ் செய்வினை யோயற்க
வருந்தாது வரும்புனல் விருந்தயர் கூடல்
அருங்கறை யறையிசை வயிரிய ருரிமை
ஒருங்கம ராயமொ டேத்தினர் தொழவே.

என்பது, பருவங்கண்டு வன்புறை எதிரழிந்த தலைமகளது ஆற்றாமைகண்டு தோழி தூதுவிடச் சென்ற பாணன் பாசறைக்கண் தலைமகற்குப் பருவவரவும் வையைநீர் விழவணியும் ஆங்குப் பட்ட செய்தியும் கூறியது.

கரும்பிள்ளைப் பூதனார் பாட்டு.
மருத்துவன் நல்லச்சுதனார் இசை.
பண்ணுப் பாலையாழ்.

---

அத்தன்மை எம்மனோர்க்கு அறிதலரிதென்க; நச்சினார்க்கினியர் அதனை வேறுரைத்தாரென்க” என்பது, திருக்குறள்நுண்பொருண்மாலை, 231; செந்தமிழ் 7-ஆம் தொகுதி 91-ஆம் பக்கம் பார்க்க. (10)

# பதினோராம் பாடல்

## வையை

விரிகதிர் [1] மதியமொடு வியல்விசும்பு புணர்ப்ப
எரிசடை யெழில்வேழந் தலையெனக் கீழிருந்து
தெருவிடைப் படுத்தமூன் றொன்பதிற் றிருக்கையுள்
உருகெழு வெள்ளிவந் தேற்றியல் சேர
[2] வருடையைப் படிமகன் வாய்ப்பப் [3] பொருடெரி
புந்தி மிதுனம் பொருந்தப் புலர்விடியல்

---

## (பதினோராம் பாடலுரை)

1-3. விசும்பு மதியத்தோடு புணர்ப்பனவாகிய எரியும் சடையும் வேழமுமுதலாக அவற்றின் கீழிருந்து வீதியால் வேறுபடுக்கப்பட்ட ஓரொன்று ஒன்பது நாளாகிய மூவகையிராசிகளுள்.

மேலவாய நாண்மீன்களைக் கீழதாகிய மதி புணர்தலாவது அவ்வநேர்நிற்றன்மாத்திரமாகலின், அவற்றை 'விசும்புபுணர்ப்ப' என்றார்.

2. எரி - அங்கியைத் தெய்வமாகவுடைய கார்த்திகை ; அதனால் அதன் முக்காலையுடைய இடபமுணர்த்தப்பட்டது. சடை - சடையை யுடைய ஈசனைத் தெய்வமாகவுடைய திருவாதிரை; அதனால் அதனையுடைய மிதுனமுணர்த்தப்பட்டது. வேழம் - வேழத்திற்கு யோனியாகிய பரணி ; அதனால் அதனையுடைய மேடம் உணர்த்தப்பட்டது.

இவைமுதலாக இவற்றின்கீழிருத்தலாவது, இவற்றதுபெயரான் *இடபவீதி, மிதுனவீதி, மேடவீதியென வகுக்கப்பட்டு அம்மூவகை வீதியுள்ளும் அடங்குதல். அவற்றுள் இடபவீதி, கன்னி துலாம் மீனம் மேடமென்பன; மிதுனவீதி, தேள் வில்லு மகரம் கும்பமென்பன. மேடவீதி, இடபம் மிதுனம் கற்கடகம் சிங்கமென்பன. ஓரிராசியாவது இரண்டேகால் நாளாகலின் நந்நான்கிராசியாகிய இவை ஓரொன்று ஒன்பதுநாளாயின. கோட்களுக்கு இடனாகலான் இவை பன்னிரண்டும் 'இருக்கை' எனப்பட்டன.

4-10. நிறத்தையுடைய வெள்ளி இடபத்தைச் சேரச் செவ்வாய் மேடத்தைச்சேரப் புதன் மிதுனத்தைச்சேரக் கார்த்திகை உச்சமாக

---

* "மேடவீதி யிடப வீதி, மிதுன வீதி யெனவொரு மூன்றே, அவைதாம், இருசுடர் முதலிய வியங்கு நெறியே", "இடபஞ் சிங்க மிதுனங் கடக, மினைய நான்கு மேட வீதி", "மீன மேடங் கன்னி துலாமு, மானவிடப வீதிக் கமைந்தன", "வில்லு மகரங் குடமே விருச்சிகஞ், சொல்லிய மிதுன வீதித் துறையே" பிங்கலந்தை.

பி-ம். [1] மதியொடு. [2] வருடைபடிமகன். [3] பொருடரு.

*அங்கி யுயர்நிற்ப வந்தணன் பங்குவின்
இல்லத் துணைக்குப்பா லெய்த விறையமன்
வில்லிற் கடைமகர மேவப்பாம் பொல்லை
மதிய மறைய வருநாளில் வாய்ந்த
பொதியின் முனிவன் புரைவரைக் கீறி
மிதுன மடைய விரிகதிர் வேனில்
எதிர்வரவு மாரி யியைகெனவிவ் வாற்றால்
புரைகெழு * சையம் பொழிமழை தாழ
நெரிதரூஉம் வையைப் புனல்.
வரையன புன்னாகமும்
கரையன சுரபுன்னையும்
[1] வண்டறைஇய சண்பகநிரை தண்பதம்
மனைமாமரம் வாள்வீரம்*

---

விடிதலுண்டாக வியாழம் சனியின் இல்லமிரண்டாகிய மகரகும்பங்கட்கு உப்பாலை மீனத்தைச்சேர யமனைத்தமையனாகவுடைய சனி வில்லுக்குப் பின்னாகிய மகரத்தைச்சேர இராகு மதியமறையும்படி வருநாளின்கண்.

6-7. ஆதித்தன் சீயத்தையடைய வென்பார், 'புலர்விடியலங்கி யுயர்நிற்ப' என்றார்.

9-10. பாம்பு மதியமறைய ஒல்லைவருநாளென்றது, அவ்வாவணி மாதத்து மதிநிறைநாளாகிய அவிட்டத்தை. எனவே, மதியும் இராகுவும் மகரத்துநிற்கவென்பதூஉம் கேது அதற்கு ஏழாமிடமாகிய கற்கடகத்து நிற்கவென்பதூஉம் பெறப்பட்டன.

இதனாற்சொல்லியது, ஆவணித்திங்கள் அவிட்டநாளின் இக்கோட்கள் தமக்குரியநிலமாகிய இவ்விராசிகளில் நிற்பச் சோமனை அரவுதீண்ட வென்பதாயிற்று.

11-2. அகத்தியனென்னுமீன் உயர்ந்த தன்னிடத்தைக்கடந்து மிதுனத்தைப் பொருந்த.

பொதியிலைவிட்டெனவும் தோன்றநின்றது.

12-4. முறுகினவெயிலையுடைய முதுவேனிற்குப் பின்வரும் கார்காலத்து மழைபெய்கவென்ற இவ்விதிவழியால் உயர்ந்த சைய மலைக்கண் மழைபெய்ய.

18. பூமணத்தான் வண்டு ஒலித்தற்குக்காரணமாகிய சண்பகநிரை.

19. மனைமரம் - இல்லம் ; ஆவது தேறு.

வாள்வீரமென்னுமரம் கூவிளை.

---

* சையம், மேன்மலையென்றுங் கூறப்படும் ; பரி. 12 : 2.

பி-ம். [1] வண்டறைஇ.

*சினைவளர் வேங்கை கணவிரி காந்தள்*
*தாய தோன்றி தீயென [1] மலரா*
*ஊதை யவிழ்த்த வுடையித ழொண்ணீலம்*
*வேய்பயில் சோலை யருவி தூர்த்தரப்*
*பாய்திரை யுந்தித் தருதலா னாய்கோல்*
*வயவ ரரிமலர்த் துறையென்கோ*
*அரிமலர் மீப்போர்வை யாரந்தாழ் மார்பிற்*
*றிரைநுரை மென்பொகுட்டுத் தேமணச் சாந்தின்*
*அரிவை யதுதானை யென்கோகள் ளுண்ணூஉப்*
*பருகு படிமிட றென்கோ பெரிய*
*திருமருத நீர்ப்பூந் துறை.*
*ஆநா ணிறைமதி யலர்தரு பக்கம்போல்*
*நாளி னாளி [2] ளிவரைச் சிலம்புதொட்டு*
*நிலவுப்பரந் தாங்கு நீர்நிலம் பரப்பி*

---

20. கணவிரி - செவ்வலரி.

21. தீயென மலர்ந்து தழைத்த தோன்றி.

22. சிறுகாற்றால் விடுக்கப்பட்ட அலர்ந்த இதழையுடைய சுனைநீலம்.

23-30. இவற்றின்மலர்களைச் சாரலிற் சோலைக்கண்ணே அருவி கொண்டுவந்து சொரிய அவற்றைத் திரை தள்ளிக்கொண்டுவந்து திருமருதத்துறைக்கண்ணே தருதலான், அத்துறையை, பூவாராய்ந்துபறிக் கும் கோலினையுடைய வலியகுடிகள் நிறத்தவாகிய பூக்களைக்கொண்டு வந்து குவிக்கும் பூமண்டபமென்கோ? வையையாகிய அரிவையது அல்குற்றானையென்கோ? கள்ளை வாய்க்கொண்டு பருகும் நிலமகள் மிடறென்கோ?இவற்றுள் யாதென்று சொல்லுவேன்!

24-8. அரிமலராகிய படாத்தையும் மலையினுள்ள முத்துக்கள் தாழ்ந்தமார்பினையும் திரையையும் நுரையையும் குமிழியையும் இனிய மணத்தையுடைய சந்தனத்தினையுமுடைய அரிவையென்க.

வரைவுமலிந்த தோழி வையைச்சிறப்புக்கூறுவாள் இத்துணையும் தான் கருதியவாற்றாற்கூறி மேற் கண்டார் கூறுகின்றவாற்றாற் கூறுகின்றாள்:-

31-40. பிறை தோன்றியநாள் தொடங்கி நாடோறும் ஒருகலை வளர்கின்ற முற்பக்கம்போல் நாளுக்குநாட்பெருகி, அதனிலவு எங்கும் பரந்தாற்போல மலைச்சாரல் தொடங்கியுள்ள நிலத்தின்கண் நீரைப்பரப்பி உலகிற்குப் பயன்பட்டு அதன்பிறபக்கத்து அமரர்க்கு உணவாகிய அம்

---

பி-ம். [1] மலரவூதையவித்த. [2] நனிவரை.

உலகுபயம் பகர வோம்புபெரும் பக்கம்
வழியது பக்கத் *தமர ருண்டி
மதிநிறை வழிவதின் வரவு சுருங்க
எண்மதி நிறையுவா † விருண்மதி போல
நாள்குறை படுதல் காணுநர் [1] யாரே
சேணிகந்து கல்லூர்ந்த மாணிழை வையை
வயத்தணிந் தேகுநின் யாணரிரு நாள்பெற
மாமயி லன்னார் மறையிற் புணர்மைந்தர்
காமங் களவிட்டுக் கைகொள்கற் புற்றென
[2] மல்லற் புனல்வையை மாமலை விட்டிருத்தல்
இல்லத்து நீதனிச் சேற லிளிவரல்
எனவாங்கு

---

மதியும் நிறைவு சுருங்குமாறுபோல... ...குமிடத்தும் எட்டாம் பக்கத்து மதியளவாதலன்றி இருளுவாவினைப்போல நீர்நேராகக் குறைபடுதலை யுடையநாளைக் காண்கின்றாரில்லை; அதனால், நெடுந்தூரத்தைக் கடந்து வந்த வையாய்! நீ பெருகின நாளின்யாணரேயன்றி வற்றினநாளின் யாணரையும் உலகம்பெற இந்நீர் மிகுதியைத் தணிந்து ஏகு.

34. பகர்ந்தென்பது பகரவெனத் திரிந்துநின்றது.

40. இருநாளுமென்னும் உம்மை செய்யுள் விகாரத்தாற் றொக்கது.

41-4. மறையிற்புணர்ந்த மைந்தர் மாமயிலன்னார் ‡ காமம் சிறப்புடைய அக்களவொழுக்கத்தைவிட்டு இளிவந்த கற்பொழுக்கத்தை யுற்றாற்போல, வையாய்! நின் § பிறந்தையாகிய மலையைவிட்டு இருத்தற்குரிய நின்கடற்றலைவனில்லத்து நீ தனியேசேறல் இளிவரவு; ஆதலால் ஆண்டுச் சேறற்பாலையல்லை.

45. என - என்று கண்டார்சொல்ல.

ஆங்கு : அசை.

---

* பிற்பக்கத்துமதி அமரர்க்கு உணவாதல் : பரி. 3 : 52-3; 10 : 78.

† "குணமுதற் றோன்றிய வாரிருண் மதியிற், றேய்வன கெடுகநின் றெவ்வ ராக்கம்" மதுரை. 195-6.

‡ இந்நூல், 9-ஆம் பாடலின் 14-ஆம் அடி முதலியவற்றையும் அவற்றினுரையையும் பார்க்க. § பிறந்தை - பிறந்தவீடு.

பி-ம். [1] யார். [2] மல்லாம்புனல்.

கடையழிய நீண்டகன்ற [1] கண்ணாளைக் காளை
படையொடுங் கொண்டு [2] பெயர்வானைச் சுற்றம்
இடைநெறித் தாக்குற்ற தேய்ப்ப வடன்மதுரை
ஆடற்கு நீரமைந்த தியாறு.
ஆற்றணி, வெள்வாள் விதிர்ப்போர் மிளிர்குந்த மேந்துவோர்
கொள்வார்கோல் கொள்ளக் கொடித்திண்டே ரேறுவோர்
* புள்ளேர் புரவிபொலம்படைக் கைம்மாவை
வெள்ளநீர் நீத்தத்து ளூர்பூர் புழக்குநரும்
கண்ணாருஞ் சாயற் கழித்துரப் போரை
[3] வண்ணநீர் கரந்த வட்டுவிட் டெறிவோரும்
மணம்வரு மாலையின் வட்டிப் போரைத்
துணிபிணர் மருப்பி னீரெக்கு வோரும்
தெரிகோதை நல்லார்தங் கேளிர்த் திளைக்கும்
உருகெழு தோற்ற முரைக்குங்கா னாளும்
பொருகளம் போலுந் தகைத்தே பரிகவரும்
பாய்தேரான் வையை யகம்.

---

46-9. எல்லையற நீண்டு அகன்ற கண்ணாளை உடன்கொண்டு படையொடும் பெயர்ந்த தலைவனை அவள்சுற்றம் இடைச்சுரத்துச் சென்று பொருதாற்போல வெற்றியையுடைய மதுரையார் இடையே புகுந்து நீராடுதற்கு ஏற்றது யாறு.

50. வாளும் குந்தமும் † கிடைமுதலியவற்றான் அமைக்கப்பட்டன.

51. கொள்வாரெனப் பொதுப்படக் கூறியவதனான் மகளிர் தேர்க்கு மகளிரும் மைந்தர்தேர்க்குப் பாகரும் கோல்கொள்ளவென்பது பெற்றாம்.

52-3. வெள்ளநீராழத்துள் இவற்றை ஊர்ந்தூர்ந்து.

54-9. கண்ணுக்கு ஆரும் அழகையுடைய மூங்கிற்கழியால் நீரைத் துரப்போரை அரக்குநீரையடக்கிய வட்டால் எறிவோரும் மாலையினாற் சுழற்றியெறிவோரை அற்ற பிணரையுடைய கொம்பினீரால் எக்குவோருமாய்த் தம் கேளிரொடு நாளும் திளைக்கும்.

இது காரின்கண் ஆடல்.

மேல் இளவேனிற்காலம்.

---

* "புள்ளியன் மாவும்" பரி. 10:14.

† கிடை - நெட்டி.

பி-ம். [1] கண்ணளை. [2] பெயவாளை. [3] வணநீர்.

*நீரணி வெறிசெறி மலருறு கமழ்தண்*
*தார்வரை யகலத்தவ் வேரணி நேரிழை*
*ஒளிதிகழ்தகை வகைசெறி [1] பொறி*
*புனைவினைப்பொலங் கோதையவரொடு*
*பாக ரிறைவழை மதுநுகர்பு களிபரந்து*
*நாகரினல் வளவினை வயவேற [2] நளிபுணர்மார்*
*காரிகைமது வொருவரினொருவர் கண்ணிற் கவர்புறச்*
*சீரமை பாடற் பயத்தாற் கிளர்செவிதெவி*
*உம்ப ருறையு மொளிகிளர்வா னூர்பாடும்*
*அம்பி கரவா வழக்கிற்றே யாங்கதை*
*காரொவ்வா வேனில் கலங்கித் தெளிவரல்*
*நீரொவ்வா வையை நினக்கு.*

62-71. நீராடற்கமைந்த அணியினையுடைய அகலத்து அவ்வழகிய ஒப்பனையையும் அதற்கேற்ற இழைகளையுமுடைய அரிமாலையவரோடு நல்வளந்தருகின்ற புண்ணியத்தைச் செய்த நாகரைப்போல இடைவிடாது இறுகப்புணர்தற்குப் பாகுதங்கிய இளமதுவை நுகர்ந்து களிமிக்குத் தாளமமைந்த பாடலின்பத்தால் தங்கள் செவியைநிறைத்துத் தம் அழகாகிய மதுவை ஒருவரினொருவர் கண்ணாலுண்ண, உம்பருறையும் ஒளிகிளர் வானத்தின்கண் வைமானிகர் ஊர்ந்துதிரியும் விமானங்களைக் காட்டும் [3] நீரோட்டத்தையுடைத்து, அவ்வையையகம்.

ஐம்புலன்களாலும் இன்பம் நுகர்தற்கு இடனாயிற்றென்றவாறு.

64-5. ஒளிதிகழாநின்ற கட்டுதல் வகைமை செறிந்த மூட்டுவாய் புனைந்த தொழிலையுடைய அரிமாலையென்க.

வினைத்தொகை அடுக்கு.

பரந்து (66) தெவி (69) என்னும் செய்தெனெச்சங்கள் கவர்புற (68) என்னும் வினைமுதல்வினைகொள்ள, அச்செயவெனெச்சம் வழக்கிற்று (71) என்னும் பிறவினைகொண்டது.

71. ஆங்கு, அதையென்பன அசை.

இத்துணையும் வையையைப் படர்க்கையாக்கிக் கூறி, மேல் எதிர் முகமாக்கி.

72-3. வையாய்! இவ்வாறு கார்காலத்துக்கலங்கி வேனிற்காலத்துத் தெளிதலான் இந்நீர்மை எஞ்ஞான்றும் ஒத்திருக்கின்றதில்லை.

எனப் பழிப்பாள்போலப் புகழ்ந்து, மேல் தைந்நீராடல் கூறுகின்றாள்:-

பி-ம். [1] பொறிபுனை. [2] நனிபுணர்மார். [3] நீரோடத்தை.

கனைக்கு மதிர்குரல் கார்வான நீங்கப்
பனிப்படு பைதல் விதலைப் பருவத்து
ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து
மாயிருந் திங்கண் [1] மறுநிறை யாதிரை
விரிநூ லந்தணர் விழவு தொடங்கப்
புரிநூ லந்தணர் பொலங்கல மேற்ப
வெம்பா தாக வியனில வரைப்பென
அம்பா [2] வாடலி னாய்தொடிக் கன்னியர்
முனித்துறை முதல்வியர் முறைமை காட்டப்
பனிப்புலர் பாடிப் பருமண லருவியின்
ஊதை யூர்தர வுறைசிறை வேதியர்
நெறிநிமிர் நுடங்கழல் பேணிய சிறப்பிற்
றையன் மகளி ரீரணி புலர்த்தர
வையை நினக்கு மடைவாய்த் தன்று

74-7. கார்வானம் அதிர்குரல் நீங்கப் பனிமிகுதலாற் குளிரால் நடுங்குதலையுடைய முன்பனிப்பருவத்து ஞாயிறுதெறாத கடைமாரியை யுடைய மார்கழிமாதத்துத் திங்கள் மறுவொடுநிறைந்த திருவாதிரை நாளின்கண்.

திருவாதிரை நிறைமதிநாளாங்கால் ஆதித்தன் 3 * பூத்தடத்தின் கண் நிற்குமாதலின் அதனையுடைய மார்கழிமாதம் குளமெனப்பட்டது.

78. ஆகமங்களையுணர்ந்த பூசகர் அத்திருவாதிரைக்குத் தெய்வமாகிய இறைவனுக்கு விழாவைத் தொடங்க... ... ... ... ... ... ... ...

80. வெம்பாதாக - மழையாற் குளிர்வதாக.

81-7. அம்பாவாடலையுடைய கன்னியர் சடங்கறிந்த முதுபார்ப்பனிமார் நோற்குமுறைமைகாட்டப் பனியையுடைய புலர்தற்கண் ஆடிப் பருமணலையுடைய ஒழுகுகின்ற நீரின்கண்ணே குளிர்வாடை வீசுதலான் நின்கரைக்கணுறையும் அந்தணரது வேதநெறியால் வளர்ந்த நுடங்கழலைப் பேணிய சிறப்புடனே அவ்வொப்பனையையுடைய மகளிர்சென்று அதன்கண் தம் ஈரவணியைப்புலர்த்தாநிற்க, அவ்வந்தணர் அவ்வழற்கட் கொடுக்கும் மடை, வையாய், நினக்கு வாய்ப்புடைத்தாயிருந்தது.

81. † அம்பாவாடலென்று தைந்நீராடற்குப் பெயராயிற்று, தாயோடாடப்படுதலின்.

* புனர்பூசம் † அம்பா - தாய் ; வடமொழி.

பி-ம். [1] மறைநிறை. [2] வாடியவாய்தொடி. [3] பூராடத்தின்கண்.

*மையாட லாடன் மழபுலவர் மாறெழுந்து*
*பொய்யாட லாடும் புணர்ப்பி னவரவர்*
*தீயெரிப் பாலுஞ் செறுதவமுன் பற்றியோ*
*தாயருகா நின்று தவத்தைந்நீ ராடுதல்*
*நீயுரைத்தி வையை நதி.*
*ஆயிடை, மாயிதழ் [1] கொண்டோர் மடமாதர் நோக்கினாள்*
*வேயெழில் வென்று வெறுத்ததோ ணோக்கிச்*
*[2] *சாய்குழை பிண்டித் தளிர்காதிற் றையினாள்*
*பாய்குழை நீலம் பகலாகத் தையினாள்*
*குவளை குழைக்காதின் கோலச் செவியின்*
*இவள்செரீஇ நான்கு விழிபடைத்தா ளென்று*
*நெற்றி விழியா நிறைதிலக மிட்டாளே*

---

83. புலர்தற்கணெென்னும் ஏழனுருபு தொக்குநின்றது.

இம்மையின்பங்குறித்துக் கன்னியர் தைந்நீராடலும் மறுமையின் பங்குறித்து... ... ...கிய இவை நினக்கன்றி ஏனையா... ... ...வென்றது.

88-92. மையோலை பிடித்த இளையபுலவரது விளையாட்டிற்கு மாறாயெழுந்து காமக்குறிப்பில்லாத விளையாட்டைச் செய்கின்ற ஆயத்தினையுடைய அம் மகளிர், நீர்க்கண்... ...புலன்களடக்கிச் செய்யுந் தவத்தை முன் அடுத்தடுத்துச் செய்தோ தாயருகாக நின்று தவமாகிய தைந்நீராடலை நின்கட் பெற்றது?

88. கல்விதொடங்கின அளவாதலின், 'மழபுலவர்' என்றார்.

93. ஆயிடை - அவராடுதற்கண்.

93-6. வேயழகைவென்று மிக்க தோளழகை...யு...நீலத்தைச் செவித்தாராக அணிந்து ஒரு மடமாதைப் பார்த்தாள் ; அவள் குறிப்பறிந்து அப்பொழுது அம்மாது குழைத்த பிண்டியது சாய்ந்த தளிரைத் தன் காதின்கண் அணிந்தாள் ; அணிகின்றாள் அப்பாய்குழையையுடையாள் அணிந்த நீலமெல்லாம் அத்தளிரின் செம்மையால் இளவெயிலாம் படி யணிந்தாள்.

97-8. குழைக்காதினையுடைய கோலச்செவிக்கட் குவளையை இவள் செருகி.

99. திலகம், செம்மையால் நெருப்பாகிய நெற்றிவிழியாயிற்று.

100. கொற்றவை கோலங்கொண்டது, அவற்றின் மிக்க விழி காட்டுதற்கு.

---

*"கடிமலர்ப் பிண்டிதன் காதிற் செரீஇ" பரி 12 : 88.

பி-ம். [1] கொண்டு நேர்மடமாதர். [2] சாய்குழைப்பிண்டி.

கொற்றவைகோ லங்கொண்டோர் பெண்.
பவள வளைசெறித்தாட் [1] கண்டணிந்தாள் பச்சைக்
[2] குவளைப் பசுந்தண்டு கொண்டு.
கல்லகா ரப்பூவாற் கண்ணி தொடுத்தாளை
மல்லிகா மாலை [3] வளாய்.
தண்டு தழுவாத் தாவுநீர் வையையுட்
கண்ட பொழுதிற் கடும்புனல் கைவாங்க
நெஞ்ச மவள்வாங்க [4] நீடு புணைவாங்க
நேரிழை நின்றுழிக் கண்ணிற்ப நீரவன்
தாழ்வுழி யுய்யாது தான்வேண்டு மாறுய்ப்ப
ஆயத் துடனில்லா ளாங்கவன் பின்றொடரூஉத்
தாயத் திறமறியா டாங்கித் தனிச்சேறல்
ஆயத்திற் கூடென் றரற்றெடுப்பத் [5] தாக்கிற்றே
சேயுற்ற கார்நீர் வரவு.

101-2. பவளவளையைக் கையிற் செறித்தாளொருத்தியைக் கண்டு வேறொருத்தி குவளைப்பூவினது மரகதம்போலும் பச்சைத்தண்டைக் கொண்டு தன்கையை யணிந்தாள்.

103. கல்லகாரம் - குளிரி.

104. நில்லென்பாள் போல்.

* இகவென்னுமசை இகாவென ஈறுதிரிந்தது.

104-5. வேறொருத்தி மல்லிகை மாலையின்கண் நெய்தலை விரவித் தொடுத்தாள்.

மேல் அவர் கருத்தும் வேண்டிக்கோடலும் கூறுகின்றாள்:-

106-14. பண்டு ஒருவன் வையையுள் வாழைத்தண்டைத் தழுவி ஆடாநிற்க ஒருத்தியைக் கண்டான் ; கண்டபொழுதிலே அவன் நெஞ்சு அழிதலாற் புனல் கையை வலிக்க, புணை தன்னை நெடுந்தூரம் வலிக்க, நீர் அவன் விரும்பின அவளிடத்துக் கொண்டு செல்லாதே... ... ... அவடான் அதனைக்கண்டு அவன்பின் தொடர, தாய் அவ்வன்புடைமையை அறியாதே தனிச்சேறலை விலக்குதலால் அவள்

*"கணமணி காணிகா" கலி. 105.

பி-ம். [1] டண்டணிந்தாள். [2] குவளைத்தண்டு. [3] வாளாய். [4] நீடூர்புனை. [5] தாங்கிற்றே.

*நீதக்காய் தைந்நீர் நிறந்தெளிந்தா [1] யென்மாரும்*
*[2] கழுத்தமை கைவாங்காக் காதலர்ப் புல்ல*
*விழுத்தகை [3] பெறுகென வேண்டுது மென்மாரும்*
*பூவீ ழரியிற் [4] புலம்பப் போகா*
*தியாம்வீழ்வா ரேம மெய்துக வென்மாரும்*
*கிழவர் கிழவிய [5] ரென்னாதேழ் காறும்*
*மழவீன்று மல்லற்கேண் மன்னுக வென்மாரும்*
*கண்டார்க்குத் தாக்கணங்கிக் காரிகை காண்மின்*
*பண்டாரங் காமன் படையுவள் கண்காண்மின்*
*நீனெய்தாழ் கோதை யவர்விலக்க நில்லாது*
*பூவூது வண்டினம் யாழ்கொண்ட [6] கொளைகேண்மின்*
*கொளைப்பொரு ளெரிதரக் கொளுத்தாமற் குரல்கொண்ட*

---

அரற்றும்படி கரையைப் பொருதுவந்தது, சிவப்புற்ற கார்காலத்து நீர் வரவு.

115. அந்நீர்போலாது, தைந்நீரே, யாம் ஆடுமளவினையாய் நிறந் தெளிந்தாய் ; அதனால் நீ தக்காயென்பாரும். 117. விழுத்தகை - வீறு.

118. அரி - வண்டு. யாம் புலம்பப் பிரியாது.

120-21. எம் கணவரும் யாமும் கிழவர் கிழவியரெனப்படாமல் நிலையுறுதலையுடைய இளமையை இத்தவம்தரச் செல்வத்தோடும் சுற்றத்தோடும் நிலைபெறுக வென்பாருமாக.

121. 'மல்லற்கேள்' என்பது உம்மைத்தொகை. ஆகவென்பது வருவிக்கப்பட்டது.

இனி ஒருவன் *உவந்தவை காட்டுதல் கூறுகின்றாள்:-

122. இக்காரிகை தாக்கணங்கு ; ஆதலால் இவளைக் காண்மின்.

123. உவள்கண் காமபண்டாரமும் படையுமாயிருக்கும்; அவ்வாறாதலைப் பார்மின்.

124-5. நீலநிறத்தையுடைய தேனெய்தங்கிய கோதையையுடைய மகளிர் விலக்க நில்லாது அக்கோதையிற் பூவையூதும் வண்டினம் யாழை ஒத்தற்குக் காரணமாகிய பாட்டைக் கேண்மின்.

126-7. கொளைப்பொருள் தெரிதரக் கொளுத்தாதிருக்க இனிதாகின்ற சுரும்பினது இசையைக் கேண்மின்.

---

* பெருங்கதையிலுள்ள 'உவந்தவை காட்டல்' என்னும் பகுதி இதனோடு ஒப்புநோக்கற்பாலது.

பி-ம். [1] யென்மார். [2] தழுத்தமை. [3] மக்கள்பெறுகென. [4] புலம்பும்போகாது. [5] ரென்குகெழ. [6] கோள்.

*கிளைக்குற்ற வுழைச்சுரும்பின் கேழ்கெழுபாலை யிசையோர்மின்*
*பண்கண்டு திறனெய்தாப் [1] பண்டாளம் பெறப்பாடிக்*
*கொண்டவின் னிசைத் [2] தாளங்(?) கொளைசீர்க்கும் விரித்தாடும்*
*தண்டும்பி யினங்காண்மின் றான்வீழ்பூ நெரித்தாளை*
*முனைகெழு சினநெஞ்சின் முன்னெறிந்து பின்னும்*
*கனைவர லொருதும்பி காய்சினத் தியல்காண்மின்*
*எனவாங்கு*
*இன்ன பண்பி னின்றைந்நீ ராடல்*
*மின்னிழை நறுநுதன் மகண்மேம் பட்ட*
*கன்னிமை கனியாக் கைக்கிளைக் காம*

---

குரல்கொண்ட கிளையாகிய இளிக்குக் கிளையாப்பொருந்தின *உழை குரலான அரும்பாலையிற்றோன்றிய மருதப்பண்ணாகிய இசையெனக் கூட்டுக.

† இடமுறையாற் குரற்கு ஐந்தாவதாகையால், உழை இளிக்குக் கிளையாயிற்று.

128. பண்கண்டு திறனெய்தாப்பண் - விளரிப்பாலையிற்றோன்றும் ‡ யாமயாழ் ; அதனைத் தாளத்தொடு பொருந்தப் பாடி.

129. அவ்விசைத்தாளத்திற்கேற்ப ... ... ... ... ... ... ...

131-2. மாறுபாடுபொருந்தின சினநெஞ்சுடனே...பின்னும் எறிதற்கு ஒலித்துவருதலையுடைய ஒருதும்பியது காய்சினம்.

133. என - என்று காட்ட. ஆங்கு - அசை.

இங்ஙனம் தைந்நீராடல் கூறி மேல் தலைமகன்கேட்ப வையையை நோக்கிக் கூறுகின்றாள்:-

134-40. இனிய இயலின்மாண்ட தேர்ச்சிபொருந்திய பரிபாடலை

---

* "உழைகுர லாயி னரும்பாலை யென்ப" (பிங்கலம், 1406) எனவும், 'உழை குரலாகவும் கைக்கிளை தாரமாகவும் நரம்புகளை நிறுத்தி யென்றது அரும்பாலையென்னும் இசையைப் பிறப்பித் தென்றவாறு' (சிலப். 13 : 109, உரை) எனவும் வருவன இங்கே அறியற்பாலன.

† இடமுறையாற் குரனரம்பிற்கு உழைநரம்பு ஐந்தாவதாதலைக் குரல், தாரம், விளரி, இளி, உழை என எண்ணி அறிந்துகொள்க.

‡ யாமயாழ் : நற். 335 ; மதுரை. 584 ; கம்ப. நாடவிட்ட, 43.

பி-ம். [1] பண்டாழம். [2] தாழங்கொளச்.

*[1] இன்னியன்மாண் டேர்ச்சி யிசைபரி பாடன்*
*முன்முறை செய்தவத்தி [2] னிம்முறை யியைந்தேம்*
*மறுமுறை யமையத்து மியைக*
*நறுநீர் வையை [3] நயத்தகு நிறையே.*

*என்பது வரைவு மலிந்த தோழி கன்னிப்பருவத்துத் * தைந் நீராடத் தவம் தலைப்பட்டேமென வையையைநோக்கித் தலைமகன் கேட்பச் சொல்லியது.*

ஆசிரியன் நல்லந்துவனார் பாட்டு.
நாகனார் இசை.
பண்ணுப் பாலையாழ்.

---

யுடைய நறுநீர்வையாய்! மின்னிழையையும் நறுநுதலையுமுடைய [4] மகட்டன்மை மேம்பட்ட கன்னிமை முதிராத கைக்கிளைக்காமத்தைத் தருகின்ற நின்னிடத்து இத்தைந்நீராடலை † முற்பிறப்பிற்செய்த தவத்தாலே இப்பிறப்பிற் பெற்றேம் ; அதனை யாவரும் நயக்கத்தக்க நின்னீர் நிறைக்கண்ணே மறுபிறப்பினும் பெறுவேமாக. (11)

---

* "தையினீ ராடிய தவந்தலைப் படுவாயோ" (கலி. 59); "நறுவீ யைம்பான் மகளி ராடுந், தைஇத் தண்கயம்" ஐங்குறு. 84.

† "தவமுந் தவமுடையார்க் காகும்" திருக்குறள், 262.

பி-ம். [1] இன்னியலிசைமாண்டேர்ச்சி. [2] அம்முறையியைந்தே. [3] நயகக. 4 மக்கட்.

# பன்னிரண்டாம் பாடல்

## வையை

வளிபொரு மின்னொடு வானிருள் பரப்பி
விளிவின்று கிளையொடு மேன்மலை முற்றித்
தளிபொழி சாரற் றதர்மலர் தாஅய்
ஒளிதிக ழுத்தி யுருகெழு நாகம்
[1] அகரு வழைஞெமை யார மினையத்
தகரமு ஞாழலுந் தாரமுந் தாங்கி
நளிகடன் முன்னி யதுபோலுந் தீநீர்
வளிவரல் வையை வரவு.
வந்து மதுரை * மதில்பொரூஉம் [2] வான்மலர்தாஅய்

---

## (பன்னிரண்டாம் பாடலுரை)

1-8. வளியாற் பொரப்பட்ட வானம் மின்னையும் இருளையும் மாறிமாறிப் பரப்பிக் கிளையோடு சையமலையை முற்றித் தளியை இடைவிடாது பொழிந்த அதன் சாரலில் உதிர்ந்தமலர் தன்மேற்பரக்கக் கரைக்கண் நாகம் அகில் வழை ஞெமை சந்தனம் இவை வருந்தத் தகரத்தையும் ஞாழலையும் தேவதாரத்தையும் ஏந்திக்கொண்டு வையைவருகின்றவரவு ஒருகடல் கிளர்ந்து வருகின்றாற்போலும்.

4. "நெட்டிலைவஞ்சிக்கோ" என்புழியும், † "புல்லிலை வஞ்சிப் புறமதி லலைக்குங், கல்லென் பொருநை" என்புழியும் மரவிசேடத்திற் குள்ளன அதன் பெயர்த்தாய ஊரின்கண்ணும், ‡ "திங்கள்வெண் குடையினாற்குத் திருவிழுக் குற்ற வண்ணம், பைங்கதிர் மதியிற் றெள்ளிப் பகர்ந்தெடுத் துரைத்தும்" என்புழிச் சந்திரற்குள்ளது அவன்பெயர்த்தாய 3 அறிவின்கண்ணும் ஏற்றப்பட்டாற்போல் ஒளிதிகழாநின்ற உத்தியினையுடைய அச்சத்தைத்தருகின்ற நாகமெனப் பாம்பிற்குள்ளது அதன் பெயர்த்தாய மரத்தின்கண் ஏற்றப்பட்டது.

8. வளிபோலும் விரைந்த வரவு.

---

* வையைநதி மதுரைமதிலைப் பண்டைக்காலத்திற் பொருது சென்றதென்பதை, "வையைதன், நீர்முற்றி மதில்பொரூஉம் பகையல்லா னேராதார், போர்முற்றொன் றறியாத புரிசைசூழ் புனலூரன்" (கலி. 67), "அமிழ்த வெண்டிரை வையையு மொருபுறத் தகழாம்" (திருவிளை. நகர.17) என்பவற்றாலும் அறிக.

† புறநானூறு, 387. ‡ சீவகசிந்தாமணி, 199.

பி-ம். 1 மகரவாழை. 2 வான்மலர் தாஅயவந். 3 அவ்வூரினகணு நதிங்க கணொவினகணணு மேறபட்டாறபொல.

அந்தண் புனல்வையை யாறெனக் கேட்டு
மின்னவி ரொளியிழை வேயு மோரும்
*பொன்னடர்ப் பூம்புனை திருத்துவோரும்
அகில்கெழு சாந்த [1] மாற்றி யாற்றப்
புகைகெழு சாந்தம் பூசு வோரும்
கார்கொள் கூந்தற் கதுப்பமைப் போரும்
[2] வேர்பிணி பன்மலர் வேயு மோரும்
புட்டகம் பொருந்துவ புனைகு வோரும்
கட்டிய [3] கயிலணி காழ்கொள் வோரும்
வாச நறுநெய் [4] யாடி வான் றுகள்
மாசறக் கண்ணடி [5] வயக்கி வண்ணமும்
[6] தேசு மொளியுந் திகழ நோக்கி

---

9-10. வையையாறு தன்மேல் வான்மலர் பரக்கவந்து மதுரை மதிலைப் பொருமெனக் கேட்டு.

11. வேயுமோர் - அணிவோர்.

உம்மை இசைநிறை.

12. பொன் அடராற்செய்த பூவாகிய அணியை.

13-4. சந்தனச் சாந்தை மாற்றி அகிற்புகையினாகிய சாந்தைப் பூசு வோரும்.

15. கதுப்பு - † குழல்.

16. அக்கூந்தலின்கண் ‡ இருவேரியோடு தொடுத்த பலமலர் மாலையை.

17. நீராடற்குரிய புடைவைகளை அலங்கரித்து உடுப்போரும்.

18. கட்டிய § கொக்குவாய் அழகு செய்த வடங்களைப் பூண்போரும்.

19. வாசவெண்ணெயைப் பூசி வாலிய கற்பொடியால்.

20. வண்ணம் - இயற்கையழகு.

21. தேசு - செயற்கையழகு. ஒளி - கலவியால் வந்த நிறம்.

---

* "அடர்பொற் சிரகம்" கலி. 51.

† குழல் - ஐம்பால் வகையுள் ஒன்று; சீவகசிந்தாமணி 2437 - ஆம் பாடலின் உரையைப் பார்க்க.

‡ இருவேரி - வெட்டிவேர்.

§ கோக்குவாயென்றும் படித்தற்கு இடமுண்டு ; கொக்குவாய் கொக்கியென வழங்கும்.

பி-ம். [1] மாறி. [2] வொனபனமலாமொரும. [3] கலணி. [4] யாடடி. [5] வயககிய. [6] தெசுறுமொளியுநதிசைநொககி.

வாச [1] மணத்துவர் வாய்க்கொள் வோரும்
[2] இடுபுணர் வளையொடு தொடுதோள் வளையர்
[3] கட்டுவடக் கழலினர் மட்டு மாலையர்
* ஓசனை கமழும் வாச மேனியர்
மடமா மிசையோர்
பிடிமே லன்னப் [4] பெரும்பெடை யனையோர்
கடுமா கடவுவோருங் களிறுமேல் கொள்வோரும்
வடிமணி நெடுந்தேர் மாமுள் [5] பாய்க்குநரும்
விரைபு விரைபு மிகைமிகை யீண்டி
ஆட றலைத்தலை சிறப்பக் கூடல்
உரைதர வந்தன்று வையைநீர் வையைக்
கரைதர வந்தன்று காண்பவ ரீட்டம்
நிவந்தது நீத்தங் கரைமேலா நீத்தம்

---

22. † பஞ்சவாசத்தினோடுங் கூட்டி இடித்த பாக்கை வாய்க்கண் அடுப்போருமாய்.

23. ஆணியிடும் புணர்வளையுடனே செறிக்கும் தோள்வளையராய்.

24. கட்டுவடத்தோடு கான்மோதிரத்தராய்.

26. மட மா - நடைமெல்லிய குதிரை.

27. பிடியை நடையால் வென்று ஏறினாரென்பது போதர அன்னப்பெடை யனையோரென்றார்.

இவ்வளவும் மகளிர ; மேலன மைந்தர.

29. தேர்களிற்பூட்டின மாக்களை முட்கோலாற் பாய்ந்து செலுத்துவோருமாய்.

31. ஆடல் - நீராடல்.

31-3. கூடலாரெல்லாரும் புகழ வையைநீர் வந்தது ; அதனைக் காண்பவர் ஈட்டம் அதன் கரையை ஒக்கவந்தது.

34. அந்நீர்வெள்ளம் கரைக்கு மேலே ஏறிற்று.

---

* நல்லமணம் ஒருயோசனையளவு கமழுமென்றல் மரபு; "கமுகின் மேல் விரிந்தபாளையும் ஓரோசனையுலாவி நாறுமே", "ஓசனை நறும் புகை கமழ" (சீவக. 99, 953) என்பவற்றாலும் யோசனகந்தியென்னும் பெயராலும் உணர்க.

† பஞ்சவாசமாவன : "தக்கோலந் தீம்பூத் தகைசா லிலவங்கம், கப்பூரஞ் சாதியோ டைந்து."

பி-ம். [1] மணதது வாயாக. [2] இருபுணா தொடுவளையா. [3] கட்டுவக் கழலினர். [4] பெயரும்படை. [5] பாய்குநரும்.

*கவர்ந்தது போலுங் காண்பவர் காதல்*
*முன்றுறை நிறையணி நின்றவர் மொழிமொழி*
*ஒன்றல பலபல வுடனெழுந் தன்றவை*
*எல்லாந் தெரியக் கேட்குநர் யாரவை*
*கில்லா* [1] *கேள்வி கேட்டன சிலசில*
*ஒத்த குழலி னொலியெழ முழவிமிழ்*
*மத்தரி தடாரி தண்ணுமை மகுளி*
*ஒத்தளந்து சீர்தூக்கி யொருவர் பிற்படார்*
*நித்தந் திகழு நேரிறை முன்கையால்*
*அத்தக வரிவைய ரளத்தல் காண்மின்*
*நாணாள்கொ றோழி நயனில் பரத்தையிற்*
* *றோணல முண்டு துறந்தா னெனவொருத்தி*
*யாணர் மலிபுன னீத்தத் திரும்பிடி*

---

34-5. காண்பவர் காதல்வெள்ளத்தையெல்லாம் பருகியது போலப் பெருகிற்று.

என்றிவ்வளவும் பருவவரவும் வையைநீர் வரவுங் கூறிற்று.

மேல், அதுகாண வருவோர்க்கு முன்வந்து கண்டவர் ஆண்டுத் தாம் கேட்டன கூறுகின்றவாற்றானும் காட்டுகின்றவாற்றானும் விழவணி இன்பம் கூறுகின்றார்:

36-44. துறைமுன் நிறைந்த அணியாக நின்றவர் மொழிகின்ற மொழி ஒன்றையொன்று ஒவ்வாது பலபலவாய் ஒருகாலத்தெழுந்தது ; அவற்றையெல்லாம் தெரியக் கேட்க வல்லார் யார்? அவை கேட்டல் கூடா; அவற்றுள், யாம் கேட்டன சிலசில; அதற்குக் காரணமிது:- பொருந்திய வங்கியத்தின் இசையெழ முழவு மத்தரி தடாரி தண்ணுமை மகுளி இவற்றது ஓசையையுடைய தாளத்தையளந்து அழகுதக நிருத்தத்தின்கண் ஒக்கத்திகழும் அரிவையர் தம் நேரிறை முன்கையால் அத்தாளத்தைத் தூக்கி அளத்தலைக் காண்மின்.

என்று எல்லாம் கேளாமைக்குக் காரணங்காட்டி, மேல் கேட்டன சொல்லுகின்றார்:

45-9. தோழி, ஒருத்தி நாணுக்குறையில்லாத குலமகளாயிருக்கத் தனக்குச் சிறந்தவன் தன் தோள்நலத்தையுண்டு பரத்தையிற் பிரிந்தானென

---

* "தோணல முண்டு துறக்கப்பட்டோர்" கலி. 23.

பி-ம். [1] கேளவி கேள்வி கேட்டன சில சிலலொழுத்த.

[1] சேண வெரிநிற் சிறந்தானோ டேறினாள்
நாணுக் குறைவில ணங்கைமற் றென்மரும்
கோட்டியுட் கொம்பர் குவிமுலை நோக்குவோன்
*ஓட்டை மனவ னுரமிலி யென்மரும்
சொறிந்ததூஉஞ் சொற்றதூஉம் பற்றா ணிறந்திரிந்தாள்
நெஞ்சத்தை நீத்தா ணெறிசெல்வான் பின்னிறை
அஞ்சிக் கழியாமோ வன்புற்றா லென்மரும்
பூணார நோக்கிப் புணர்முலைபார்த் தானுவன்
நாணா ளவனையிந் நாரிகை யென்மரும்
[2] அமிர்தன நோக்கத் தணங்கொருத்தி பார்ப்பக்
கமழ் † கோதை கோலாப் புடைத்துத்தன் மார்பில்
[3] இழையினைக் கையாத் திருகிறுக்கி வாங்கிப்
பிழையினை யென்னப் பிழையொன்றுங் காணான்

---

அவனோடு புலந்து இதுபொழுது புனல்வெள்ளத்திலே அவனொடு இரும்பிடி வெரிநின் உயரவேறினாள், அந்நங்கை நாணுடைய எல்லளோ வென்பாரும்.

50-51. அவைக்கண்ணே நின்று கொம்பரொப்பாளுடைய குவி முலையை நோக்குகின்றவன் இளநெஞ்சன், திண்மையிலனென்பாரும்.

52. பற்றாள் - அறியாள்.

53-4. இவள் நெறிசெல்வானொருவன்பின் நெஞ்சைப் போக்கினாள்; [4] பெண்டிராதலானே, அன்புமிக்கால் நிறையழிவிற்கு அஞ்சி அம்மிகுதியைக் கழிக்கக்கடவேமல்லமோ.

55-6. உவன் இந்நாரிகை பூண்ட முத்தாரத்தினது அழகை நோக்கி இதற்கேற்றன இவையென நெருங்கிய முலைகளைப் பார்த்தான்; அதற்கு இவள் நாணுகின்றிலளென்பாருமாயினார்.

என்று கேட்டன கூறி, மேல் உவந்தவை காட்டல் கூறுகின்றார்:-

57-60. தன் கணவனை அமிர்தையொத்த நோக்கால் அணங்கை யொப்பாளொருத்தி பார்க்க, அது பொறாது அவனைக் கோதையைக்

---

* "ஓட்டை நெஞ்சின ராயுழல் வார்களும்" (சீவக. 642). "ஓட்டை மனத்தோ டுயிர்தாங்கி" நளவெண். சுயம். 64.

† "கோதை கோலாக, இறுகிறுக யாத்துப் புடைப்ப" (பரி. 9:39-40); "கோதை கோலா விறைஞ்சி நின்ற, ஊதையஞ் சேர்ப்பனை யலைப்பேன் போலவும்" கலி. 128.

பி-ம். [1] செணவரிநிற [2] அமர்தருநோக்கத, [3] இழைகையாத் தறுக்கி. [4] பெண்டிரானே.

தொழுது பிழைகேட்குந் தூயவனைக் காண்மின்
பார்த்தா ளொருத்தி [1] நினையெனப் பார்த்தவளைப்
பொய்ச்சூளா ளென்ப தறியேன்யா னென்றிரந்து
மெய்ச்சூ ளுறுவானை மெல்லியல் பொய்ச்சூளென்
றொல்லுவ சொல்லா துரைவழுவச் சொல்ல
உறைத்துஞ் செறுத்து முணர்த்து வானைப்
புல்லா தூடிப் [2] புலந்து நின்றவள்
பூவெழில் வண்ணநீர் பூரித்த வட் [3] டெறிய
வேலெழி லுண்க ணெறிநோக்கம் பட்டபுட்
பாய்குருதி சோரப் பகையின் [4] றுளஞ்சோர
நில்லாது நீங்கி நிலஞ்சோர வல்லாந்து
மல்லா ரகலம் வடுவஞ்சி மம்மர்கூர்ந்
தெல்லாத் துனியு மிறப்பத்தன் [5] காதலன்
நல்லே ரெழிலாகஞ் சேர்வித்த லெஞ்ஞான்றும்
வல்லதால் வையைப் புனல்.

---

கோலாகக் கொண்டு புடைத்துத் தன்மார்பின்வடத்தை வாங்கி முன்கையை இறுகஇறுகக் கட்டி நீ பிழையையுடையை யென்ன.

61. தூயவனை - பிழையில்லாதானை.

62. என - என்று அவள் சொல்ல.

65. ஒல்லுவ - பொறுப்பன.

66-75. அச்சூளின்கண் மிக்கும் வெகுண்டும் ஊடல் தீர்ப்பானைக் கூடாது ஊடனிலைமையினீங்கிப் புலவி நிலைமைக்கண்நின்றவள் பூ நாற்றத்தையும் அழகையுமுடைய அரக்குநீரால் நிறைக்கப்பட்ட வட்டை மார்பிலெறிய அந்நீர் அவளுண்கண்ணின் வேலேறுபோலும் நோக்கம் பட்ட புண்ணிற் குருதி சோர்வதுபோலச் சோரப் பகைத்தலைக்கெடுத்து உள்ளஞ்சோர அவன் ஆற்றானாய் நேர்நில்லாது நீங்கி வணங்க, அதனைத் தான் மல்லாரகலத்தெறிந்த வட்டால் வீழ்ந்தானென்றஞ்சி மயங்கி முன்புள்ள துனிகளுமுட்படநீங்க அவள் தன் காதலனாகத்தைச் சேர்ந்தாள்; இவ்வாறு சேர்வித்தலை வையைப்புனல் இன்றேயன்றி என்றும் வற்று; இதனைக் காண்மின்.

நீரையெறிய வட்டையெறிந்தது, ஊடி விளையாட்டு ஒழிந்தமையின்.

74. சேர்ந்தாளென்பது வருவிக்கப்பட்டது.

---

பி-ம். [1] நினையெனப பொயசசூளாளெறி யெனபதனயானென றறிந்து மெய்ச்சூளறிவானை. [2] புலனதுநிறைவாள். [3] டெறியா. [4] றுளஞ்சொ வலலாநது. [5] காதலானல.

*எனவாங்கு*
*மல்லிகை மௌவன் மணங்கமழ் சண்பகம்*
*அல்லி கழுநீ ரரவிந்த மாம்பல்*
*குல்லை வகுளங் குருக்கத்தி பாதிரி*
*நல்லிணர் நாக நறவஞ் சுரபுன்னை*
*எல்லாங் கமழு [1] மிருசார் கரைகலிழத்*
*தேறித் தெளிந்து செறியிருண் மான்மாலைப்*
*பாறைப் பரப்பிற் [2] பரந்த சிறைநின்று*
*[3] *துறக்கத் தெழிலைத்தன் னீர்நிழற் காட்டும்*
*காரடு காலைக் கலிழ்செங் குருதித்தே*
*போரடு தானையான் யாறு.*
*சுடுநீர் வினைக்குழையின் ஞாலச் சிவந்த*
*† கடிமலர்ப் பிண்டிதன் காதிற் செரீஇ*

---

76. என - என்று காட்ட.

ஆங்கு : அசை.

77-81. இப்பூக்களெல்லாங்கமழும் இருசார்கரையுஞ்... ... ... ...

82. மாலைப்பொழுதின்கண்.

83. பாறைப்பரப்புப்போலச் சலியாத அணைகளால் தேங்கி நின்று.

77-80. மல்லிகை முதலாயவை ஆகுபெயர்கள். மணங்கமழ்சண்பகம், நல்லிணர்நாகமென்பன தம் பொருட்கேற்ற அடையடுத்துநின்றன.

81. கரையென்றது, கரையணைந்த நீரோட்டத்தை.

தன்னீரி ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

85. இருளையடும் காலைப் பொழுதின்கட் கலங்கின செங்குருதித் தன்மைத்து.

இங்ஙனம் புனலாட ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

87-8. சிவக்கச் சுட்ட நீர்மையையுடைய வினைக்குழைபோல நாலும்படி சிவந்த பிண்டிப்புதுமலரைத் தன் காதிற் செருகி.

---

*"குடவ ளைக்குலம் வயிறுளைந் தினமணி கொழிக்கு, மடுவில் வானக ருருவுகாட் டியதுபோன் மதில்சூழ், கடிகொண் மாநகர்" நைடதம், நகர. 1.

† அசோகந்தளிரை மகளிர் தம் காதிற் செருகுதல்: பரி. 11 : 95; "வண்காது நிறைந்த பிண்டி யொண்டளிர், நுண்பூ ணாகந் திளைப்ப" முருகு. 31-2.

பி-ம். [1] மிருசாரறகரை. [2] பரநது. [3] துறககததொழிலை.

*விடுமலர்ப் பூங்கொடி போல நுடங்கி*
*[1] அடிமே லடிமே லொதுங்கித் தொடிமுன்கைக்*
*காரிகை யாகத்தன் கண்ணி திருத்தினாள்*
*நேரிறை முன்கை நல்லவள்கேள் காண்மின்*
*[2] துகில்சேர் மலர்போன் மணிநீர் நிறைந்தன்று*
*புனலென மூதூர் மலிந்தன் றவருரை*
*[3] உரையினுயர்ந் தன்று கவின்.*
*[4] போரேற் றன்று நவின்று [5] தகர*
*மார்பழி சாந்தின் மணலளறு பட்டன்று*
*துகில்பொசி புனலிற் கரைகா ரேற்றன்று*
*விசும்புகடி விட்டன்று [6] விழவுப்புன லாங்க*

---

89. விடுமலர் - கட்டு விட்ட மலர்.

90-92. முன்கையாலே தன் கூந்தலிற் கண்ணியை அழகுடைத்தாகத் திருத்தினாள்; இவள் செய்த இக்குறிப்புத் தொழிலால், இவன் இந்நல்லவள் கொழுநனாயிருந்தான் ; இதனைக் காண்மின்.

நெஞ்சம் பிணிப்பதோர் அவயவங்காண்டல் குறித்து அவள் செய்தலால், இது குறிப்புத் தொழிலாயிற்று.

93. துகிலின்கட்சேர்ந்த பூத்தொழில்போலப் புனலின்கண் நீரினையுடைய மணி நிறைந்தது.

மணி, ஆடினாராபரணங்களினின்று உக்கன.

94. அவர் புனலாடிய வார்த்தை மூதூர் மலிந்தது.

95. அவர்கவின் அவ்வுரையிலும் மிக்கது.

96. அக்கவின்மிக்குப் பிறகவினோடு மாறுபாட்டினைக்கொண்டது.

96-7. அவர்மார்பினின்று அழிந்து வீழ்ந்த தகரச்சாந்தால் மணல் சேறாந்தன்மைப்பட்டது.

98. அவர் துகில்வார்ந்த புனலால் கரை கார்காலத்துத் தன்மை பெற்றது.

99. இப்புனல்விழவால் வானுலகம் சிறப்பொழிந்தது.

ஆங்க : அசை.

இவ்வின்பங்கட்கெல்லாம் காரணமாகிய வையையை வாழ்த்தி முடிக்கின்றாள்.

---

பி-ம். [1] அடிமெனுடங்கி. [2] துகிலிற்சேர். [3] உரையுள். [4] கவினபோர். [5] ததாமாரழி. [6] வீழபுனல்.

இன்பமுங் கவினு மழுங்கன் மூதூர்
[1] நன்பல நன்பல நன்பல வையை
நின்புகழ் கொள்ளாதிம் மலர்தலை யுலகே.

என்பது, கார்ப்பருவத்து வையைநீர் விழவணியிற் பல்வேறு வகைப்பட்ட இன்பங் கூறி, இவ்வகைப்பட்ட இன்பத்தையுடைய நின்னையும் நினைத்திலரென வையையை நோக்கித் தலைமகன் கேட்பத் தோழி இயற்பழித்தது.

நல்வழுதியார் பாட்டு.
[2] நந்நாகனார் இசை.
பண்ணுப் பாலையாழ்.

100-102. வையாய்! நின்னால் அழுங்கன்மூதூரின் வாழ்வார்க்கு இன்பமும் கவினும் நன்பல நன்பல நன்பல உளவாயின ; அதனால், இவ்வுலகு அகன்ற இடத்தை யுடைத்தாயினும் நின்புகழை அடக்க மாட்டாது.

101. அடுக்கு, பன்மை பற்றி வந்தது. (12)

பி-ம். [1] நன்பலநன்பலவையை. [2] நன்னாகனார்.

# பதின்மூன்றாம் பாடல்
## திருமால்

*மணிவரை யூர்ந்த மங்குன் ஞாயிற்*
*றணிவனப் பமைந்த பூந்துகில் புனைமுடி*
*இறுவரை யிழிதரும் பொன்மணி யருவியின்*
*நிறனொடு மாறுந்தார்ப் புள்ளுப்பொறி புனைகொடி*
*விண்ணளி கொண்ட வியன்மதி யணிகொளத்*
*தண்ணளி கொண்ட வணங்குடை நேமிமால்*
**பருவம் வாய்த்தலி னிருவிசும் பணிந்த*
*இருவேறு மண்டிலத் திலக்கம் போல*

### (பதின்மூன்றாம் பாடலுரை)

1-6. நீலவரைக்கட் பரந்த இளஞாயிற்றினது அழகுபோலும் அழகமைந்த பீதாம்பரத்தையும் நீலவரையை ஊர்ந்த இளஞாயிற்றினது அழகுபோலும் அழகமைந்த புனைமுடியையும் அவ்வரையினின்றிழியும் பொன்மணிகளையுடைய அருவியின் நிறத்தொடு மாறுகொள்ளும் தாரினையும் புள் எழுதிய புனைகொடியையுமுடையையாய் விண்ணின்கண்நின்று அளித்தற்றொழிலைக்கொண்ட † நிறைமதியது குளிர்ச்சியையொக்கக் குளிர்ந்த அளித்தற்றொழிலைக்கொண்ட மாலே!

1. மங்குல் ஞாயிறு - இருளைக் கெடுக்கும் ஞாயிறு ; இதனை, ‡ "நோய்மருந்து" என்றாற்போலக் கொள்க.

6. அணங்குதல் - அசுரரை வருத்துதல்.

7-13. கார்ப்பருவம் வாய்த்தலையுடைய பெரிய மேகத்தை இருபாலுமணிந்த இருசுடர்களது இலங்குதல்போல இலங்கும் நேமியையும் சங்கையுமேந்திய கையுடனே § அகலத்தைத்தொழுவோர்க்கு நினக்குரித்தாய் நீ மேவிய வைகுண்டமும் உரிமையாதலையுடைத்து.

---

*"விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி...நன்னிற மேக நின்றது போலப், பகையணங் காழியும் பால்வெண் சங்கமும், தகைபெறு தாமரைக் கையி னேந்தி, நலங்கிள ரார மார்பிற் பூண்டு,...செங்கணெடியோ னின்ற வண்ணமும்" சிலப் 11:43-51.

† பரிபாடல், 4 : 26. ‡ குறுந்தொகை, 360.

§ "அகலநோக்கின" என்பதற்கு, 'கொடுக்கும் பொருள் மார்பின் வலியான் உளதாமாகலின்' என்ற கருத்து ஈண்டு உணரற்பாலது ; புறநா. 155, உரை.

நேமியும் வளையு மேந்திய கையாற்
கருவி மின்னவி ரிலங்கும்[1] பொலம்பூண்
*அருவி யுருவி னாரமொ டணிந்த †நின்
திருவரை யகலந் தொழுவோர்க்
குரிதமர் துறக்கமு முரிமைநன் குடைத்து
[2] சுவைமை யிசைமை தோற்ற நாற்றமூ
றவையு நீயே யடுபோ[3] ரண்ணால்
அவையவை கொள்ளுங் கருவியு நீயே
முந்தியாங் கூறிய வைந்த னுள்ளும்
ஒன்றினிற் போற்றிய விசும்பு நீயே
இரண்டி னுணரும் வளியு நீயே
மூன்றி னுணருந் தீயு நீயே
நான்கி னுணரு நீரு நீயே
ஐந்துடன் முற்றிய நிலனு நீயே
அதனால், நின்மருங் கின்று மூவேழுலகமும்
மூலமு மறனு முதன்மையி னிகந்த

7. வாய்த்தலினையென்னும் இரண்டாவது விகாரத்தால் தொக்கது. தொகுதியையுடைய மின்னினது அவிர்தலையொத்து இலங்கும் பொன்னாரத்தை (10) முத்தாரத்தோடணிந்த நின் (11) வரைபோலும் அகலம் (12) என்க.

13. துறக்கமுமென்னும் உம்மை, சிறப்பும்மை.

14-6. சுவைமுதலாய புலன்களும் நீ ; அவற்றை நுகரும் பொறிகளும் நீ.

17-22. இவற்றுள் முன்னர்க் கூறப்பட்ட புலன்களுள், ஒன்று - ஓசை ; இரண்டு - ஓசையும் ஊறும் ; மூன்று - ஓசையும் ஊறும் ஒளியும் ; நான்கு - ஓசையும் ஊறும் ஒளியும் சுவையும் ; ஐந்து - ஓசையும் ஊறும் ஒளியும் சுவையும் நாற்றமும்.

இவ்வ குணங்களால் உணரப்படுவனவாகிய பூதங்களும் நீ.

23-5. ஆதலால், மூலப்பகுதியும் அறனும் அநாதியானகாலமும்

*"மாயோன் மார்பி னாரம் போல, மணிவரை யிழிதரு மணிகிள ரருவி" தொல். செய். சூ. 78, பேர். மேற்.

† "நாறிணர்த் துழாயோ னல்கி னல்லதை, ஏறுத லெளிதோ வீறுபெறு துறக்கம்" பரி. 15 : 15-6.

பி-ம். 1 பெரும்பெருமபூண. 2 சுவைமையினிசைமை. 3 ரணணல.

காலமும் விசும்புங் காற்றொடு [1] கனலும்
தன்னுரு வுறழும் பாற்கட னாப்பண
மின்னவிர் சுடர்மணி *யாயிரம் விரித்த
கவைநா வருந்தலைக் காண்பின் சேக்கைத்
துளவஞ் சூடிய வறிதுயி லோனும்
மறமிகு மலியொலி மாறடு தானையாற்
றிறனிகந்து வரூஉ மவருயி ரகற்றும்
விறன்மிகு வலியொலி பொலிபகழ் புழுதியின்
நிறனுமு வளைவாய் நாஞ்சி லோனும்
நானிலந் துளக்கற முழுமுத னாற்றிய

---

ஆகாயமும் காற்றொடு கனலுங்கூடிய இம்மூவேழுலகத்து உயிர்களெல்லாம் நின்னிடத்தவாயின.

23. மூவேழுலகமென்பது, ஈண்டு ஆகுபெயர்.

24. மூலப்பகுதியாவது, சாத்துவிகம் இராசதம் தாமதமென்னும் குணங்கள் மூன்றும் தம்முள் ஒத்த நிலைமையதாதலால் அது கூறவே அறிவறியாமைகள் இன்ப துன்பங்களென்னும் உயிர்க்குணங்களும் அடங்கின.

அறமாகிய சிறப்புடைக்குணம் கூறவே சிறப்பில்குணமாகிய பாவமும் அடங்கிற்று.

இதனால், ஈண்டு எண்ணப்பட்டவற்றது கூட்டம் உயிரென்பது உணர்த்தப்பட்டது.

அவ்வுயிர்களின் பொருட்டு அறிதுயிலோனும் (29) நாஞ்சிலோனும் (33) களிறும் (36) ஆயதுவேயன்றி முக்குணங்களது வேறுபாட்டான் மும்மூர்த்திகளுமாகிய தலைபிரிந்த ஒருவனை (37) என்க.

36-7. ஆகியென்னும் வினையெச்சம் ஆகியவென்னும் பெயரெச்சத்து ஆதலொடு முடிந்தது.

26-36. தன் நீலநிறத்தொடு மாறுபடும் வெண்மைநிறத்தினையுடைய பாற்கடல் நடுவே மின்னையொத்து அவிர்கின்ற சுடர்மணியொடு விரித்த தலையாயிரத்தினையுடைய சேக்கைக்கட்டுயிலும் துளவஞ்சூடிய அறிதுயிலோனெனவும் மிக்க ஒலியினையுடைய மறமிக்க மாறடுதானை யுடனே ஒழுக்கமுடைமையைக் கடந்துவரும் பகைவருயிரை அகற்றும் விறல்மிகுவலியும் ஒலியும் பொலிந்து புழுதியை அகழுமாறுபோல அவர்

---

*"ஆயிரம் விரித்த வணங்குடை யருந்தலை" (பரி.1), ஆயிரம் விரித்தெழு தலையுடை யருந்திறற், பாயற் பள்ளிப் பலர்தொழு தேத்த... திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும் சிலப். 11 : 37-40.

பி-ம். [1] கனலுங்கூட்டி.

*பொலம்புனை யிதழணி மணிமடற் பேரணி*
*இலங்கொளி மருப்பிற் களிறு மாகி*
*மூவுரு வாகிய [1] தலைபிரி யொருவனை*
*படர்சிறைப் பன்னிறப் பாப்புப் பகையைக்*
*கொடியெனக் கொண்ட கோடாச் செல்வனை*
*[2] ஏவலின் முதுமொழி கூறும்*
*சேவலோங் குயர்கொடிச் செல்வநற் புகழவை*
*கார்மலர்ப் பூவை கடலை யிருண்மணி*
*அவையைந்து முறழு மணிகிளர் மேனியை*
*வலம்புரி வாய்மொழி யதிர்புவான் முழக்குச்செல்*
*அவைநான்கு முறழு மருள்செறல் வயின்மொழி*
*முடிந்தது முடிவது முகிழ்ப்பது மவைமூன்றும்*
*கடந்தவை யமைந்த கழலி னிழலவை*
*இருமை வினையுமில வேத்துமவை*

---

நிறத்தையுழும் நாஞ்சிற்படையையுடையோனெனவும் நானில... ... ... எடுத்தற்குப் பரிய முதலொடு கவித்த பொன்னிதழணிந்த மணிமடற்கிம்புரியையுடைய மருப்பின்வராகமெனவும் கூட்டுக.

29. யோக உறக்கமாதலால் அறிதுயிலெனப்பட்டது.

அகற்றும் (31) நாஞ்சிலோன் (33) எனவும், நாற்றிய (34) மருப்பு (36) எனவும் இயையும்.

38. பகை : கருடன்.

39. கோடாமை - சலியாமை.

40-41. ஓதுதற்கு இனிய வேதத்தாற் சொல்லப்படுகின்ற நல்ல புகழையுடையை.

42. கார் - மேகம். மலர்ப்பூவை - பூவையது மலர்.

44-5. நின் அருள்வயின்மொழி வலம்புரி முழக்கையும் வேத முழக்கையுமொக்கும் ; நின்செறல்வயின்மொழி வான்முழக்கையும் உருமேற்றின் முழக்கையுமொக்கும்

46-7. தோன்றியதும் தோன்றுவதும் தோன்றாநின்றதுமாகிய காலக்கூறுபாடுகளைக் கடந்து அவைதாம் பொருந்திய தாள்நிழலை யுடையை.

48. நின்னை ஏத்துமன்பர் இருவினையும் உடையரல்லர்.

---

பி-ம். [1] தலைவிரியொருவனைப. 2 மெவலின.

ஒருமை வினை [1] மேவு முள்ளத்தினை
*அடையிறந் தவிழ்ந்த வள்ளிதழ்த் தாமரை
அடியுங் கையுங் கண்ணும் வாயும்
தொடியு முந்தியுந் தோளணி வலயமும்
[2] தாளுந் தோளு மெருத்தொடு பெரியை
மார்பு மல்குலு மனத்தொடு [3] பரியை
கேள்வியு மறிவு மறத்தொடு நுண்ணியை
வேள்வியு மறனும் விருப்பொடு வெய்யை
[4] அறாஅ மைந்திற் செறாஅச் செங்கட்
செருமிகு திகிரிச் செல்வ வெல்போர்
எரிநகை † யிடையிடு பிழைத்த நறுந்தார்ப்
புரிமலர்த் துழாஅய் [5] மேவன் மார்பினோய்

49. காத்தலாகிய ஒருவினைக்கண் மேவுகின்ற.

50. வளவிய இதழையுடைய தாமரைப்பூவை யொக்கும்.

அடை, மேனிக்கு உவமை.

53. எருத்து - கழுத்தடி.

அம்மேனியது பெருமை கூறியவாறு.

சினைவினை முதன்மேல் நின்றது.

55. அன்பர் தம் குறை தம்முள்ளே கூறியும் அறிதலால், கேள்வி நுண்ணியை யென்றார்.

அருளிச்செய்த அறத்தொடு.

இடத்து நிகழ் பொருளின்தொழில் இடத்தின்மேல் நின்றது.

56. யாகத்தை விரும்புதலொடு மறம் வெவ்வியை.

57-8. நீங்காத வலியினையும் 6 செறாதிருக்கச்செய்தே செய்ய கண்ணினையும் செருவின்மேம்பட்ட திகிரியாற் செய்யும் வெல்போரையு முடைய செல்வ!

59-60 நிறத்தால் எரியையொத்த வெட்சிமலரை இடையிட்டுக் கட்டின புரிமலர் நறுந்தார்த்துழாயை மேவலையுடைய மார்பினோய்!

*"அடைநிவந்த, முட்டாள சுடர்த்தாமரை", மதுரை. 248-9.

† "பச்சிலை யிடையிடுபு தொடுத்த, மலரா மாலை" புறநா. 33

பி-ம். [1] மேவுள்ளத் [2] தாருந்தொளும, [3] பெரியை. [4] மறாஅ. [5] வெயனமராபினொய. [6] செறாதிருக்கச்செய்யகண்.

அன்னையென நினைஇ நின்னடி தொழுதனெம்
பன்மா [1] ணடுக்க [2] விறைஞ்சினெம் வாழ்த்தினெம்
முன்னு முன்னும்யாஞ் செய்தவப் பயத்தால்
இன்னு மின்னுமெங் காம மிதுவே.

கடவுள் வாழ்த்து

நல்லெழுநியார் பாட்டு.

... ... ... ... ... ...

பண்ணோதிறம்

---

61-4. பண்டும் பண்டும் யாம்செய்த தவப்பயத்தால் அத்தன்மை யையென நினைத்து நின்னடியைக் கையாற்றொழுது பலகாலும் அடுத்து இறைஞ்சி வாழ்த்தப்பெறேம்; யாம் மேன்மேலும் ஆசைப்படுகின்ற பொருள் இது.

அடுக்குக்கள், காலநீட்டங்குறித்து வந்தன. (13)

---

* நேர்திறமென்றே இதுகாறும் வழங்கப்பட்டுவரினும், இந்நூற் கையெழுத்துப் பிரதிகளிலெல்லாம், 'பண்ணொதிறம' என்றே காணப்பட்டமையின், இவ்வாறு பதிப்பிக்கலாயிற்று.

பி-ம். 1 னடுககலிறைஞ, 2 விறைஞ்சினேமேத்தினேம் வாழ்த்தினேம்.

# பதினான்காம் பாடல்

## செவ்வேள்

*கார்மலி கதழ்பெய றலைஇ யேற்ற*
*நீர்மலி நிறைசுனை பூமலர்ந் தனவே*
*தண்ணறுங் கடம்பின் கமழ்தா தூதும்*
*வண்ண [1] வண் டிமிர்குரல் பண்ணைபோன் றனவே
† *அடியுறை மகளி ராடுந் தோளே*
*நெடுவரை யடுக்கத்து வேய்போன் றனவே*
‡ *வாகை யொண்பூப் புரையு முச்சிய*
§ *தோகை யார்குரன் மணந்து தணந்தோரை*
*நீடன்மின், வாரு மென்பவர் சொற்போன் றனவே.*

---

## (பதினான்காம் பாடலுரை)

1-2. மிக்க கதழ்பெயலை மேகம்பெய்தலால் அதனை ஏற்ற மிக்க நீரான் நிறைதலையுடைய சுனைகள் பூமலர்ந்தன.

2. இடத்துநிகழ் பொருளின்தொழில் இடத்தின் மேல் நின்றது.

4. பண்ணையென்புழிஐகாரம் பகுதிப்பொருள்விகுதி.

5-6. வேய், ஆடும் அடியுறைமகளிர் தோள்களை ஒத்தன.

7-8. சூட்டினவாகிய மயில்களின் குறைவற்ற குரல்.

8. கூடிப் பிரிந்தோரை.

---

* பண்ணையென்பதில் ஐகாரத்தைத் தமிழ்நூலோர் பகுதிப் பொருள் விகுதியென்பரென்பதற்கு இவ்வடி மேற்கோள் ; இ. கொ. சூ. 117.

† அடியுறைமகளிரை அடியோரென்றும் வழங்குவர் ; பரி. 8: 43.

‡ "குமரி வாகைக் கோலுடை நறுவீ, மடமாத் தோகைக் குடுமியிற் றோன்றும் குறுந். 347.

§ குயில் இங்ஙனம் அழைப்பதாக வேறு நூல்களிற் காணப்படுகின்றது: "புணர்ந்தீர் புணர்மி னோவென...இருங்குயி லெதிர்குரல் பயிற்றும்", பூங்கணிருங்குயில்...அகற லோம்புமி னறிவுடை யீரெனக். கையறத் துறப்போர்க் கழறுவ போல... ... ...நுவல" (நற். 224, 243); "கூடிப் புணர்ந்தீர் பிரியன்மி னீடிப். பிரிந்தீர் புணர்தருமி னென்பன போல... இருங்குயி, லான தகவும்" (கலி. 92); "ஊடினீ ரெல்லா முருவிலான் றன்னாணை, கூடுமி னென்று குயில்சாற்ற" சிலப். 8. இறுதிவெண்பா.

பி-ம். 1 வண்டின் குரல்.

நாண்மலர்க் *கொன்றையும் பொலந்தார் போன்றன
மெல்லிணர் வேங்கை வியலறைத் தாயின
அழுகை மகளிர்க் குழுவை செப்ப
† நீரயற் கலித்த [1] நெறிமுகைக் காந்தள்
வார்குலை யவிழ்ந்த வள்ளிதழ் நிரைதொறும்
விடு ‡ கொடிப் பிறந்த மென்றகைத் தோன்றிப்
பவழத் தன்ன செம்பூத் தாஅய்க்
கார்மலிந் தன்றுநின் குன்று போர்மலிந்து
§ சூர்மருங் கறுத்த சுடர்ப்படை யோயே

10. கொன்றை மலர்களும்.

11-2. அழுகையையுடைய மகளிர்க்கு அது தீர்தற்பொருட்டுத் தாயர் || புலிபுலியென்று சொல்லுமாறு வேங்கைப்பூ வியலறைக்கட்பரந்தன.

13-7. இவற்றோடு, நெருங்கிய முகையையுடைய காந்தள் அவிழ்ந்த இதழ்நிரைதொறும் தோன்றியது விட்டகொடிக்கட்பூத்த செம்பூப் பரக்க நின் குன்று கார்காலத்தன்மை மிக்கது.

இவற்றோடென்பது வருவிக்கப்பட்டது.

16. தாவவென்பது தாயெனத் திரிந்தது.

18. சூரைக் கிளையொடறுத்த.

* கொன்றைப்பூங்கொத்திற்குத் தார் உவமையாதல் : பரி. 8 : 24; "கொன்றைக்கோதை நிலை", "குறும்பல் கோதை கொன்றை மலர" (ஐங்குறு. 462, 497); "பொன்போறார் கொன்றை புரிந்தன" (திணைமா.109); "மாலிருஞ் சோலையிற் கொன்றைகண்மேற், றூங்குபொன் மாலைக ளோடுட னாய்நின்று தூங்குகின்றேன்" நாச்சியார் திருமொழி, 9 : 9.

† "அருவி யார்ந்த தண்ணறுங் காந்தள்" குறுந். 259.

‡ "தோன்றி மென்கொடி" சூளா, சீய, 244.

§ "சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேற், சீர்மிகு முருகன்" அகநா. 59.

|| வேங்கைப்பூப் பரந்த பாறை புலிபோற்றோன்றுமென்பது பின் வருவனவற்றாலும் விளங்கும் : "கருங்கால் வேங்கை வீயுகு துறுக, லிரும்புலிக் குருளையிற் றோன்றும்" (குறுந். 47); "வேங்கை, மாத்தகட்டொள்வீதாய துறுகல், இரும்புலி வரிப்புறங் கடுக்கும்" (புறநா. 202); "கருங்கா லினவேங்கை கான்றபூக் கன்மே, லிருங்கால் வயவேங்கை யேய்க்கும்" (திணைமா. 26); "நறமனை வேங்கையின் பூப்பயில் பாறையை நாகநண்ணி, மறமனை வேங்கை யெனநனி யஞ்சும்" திருச்சிற்.96.

பி-ம். [1] நொமுகை.

*[1] கறையில் கார்* மழை பொங்கி யன்ன*
*[2] நறையி னறும்புகை நனியமர்ந் தோயே*
*அறுமுகத் தாறிரு தோளால் வென்றி*
*நறுமலர் வள்ளிப் பூநயந் தோயே*
*கெழீஇக் கேளிர் சுற்ற நின்னை*
*எழீஇப் பாடும் பாட்டமர்ந் தோயே*
*† பிறந்த ஞான்றே நின்னை யுட்கிச்*
*சிறந்தோ ரஞ்சிய சீருடை யோயே*
*இருபிறப் பிருபெய ரீர நெஞ்சத்*
*தொருபெய ‡ ரந்தண ரறனமர்ந் தோயே*

---

19-20. கார்காலத்து § வெண்மேகம் கிளர்ந்தாலன்ன நறிய அகில் முதலியவற்றாற்புகைத்த || நறும்புகையை மிகவிரும்பினோய்!

21-2. அறுமுகத்தையும் ஆறிருதோளையும் உடையையாய் அழகாற் பிறமகளிரை வென்ற ¶ வெற்றியையுடைய வள்ளியது [3] நலத்தை நயந்தோய்!

ஆலென்னும் உருபு வேறுவினை ஒடுவின் கண்வந்தது.

22. நறுமலர்வள்ளியென்பது, தன்பொருட்கேற்ற அடையடுத்து நின்ற ஆகுபெயர்.

23-4. பிரிந்தகேளிர் வந்துபுணர்ந்து பின் நீங்காமைப்பொருட்டு மகளிர் யாழையெழுவி நின்னைப் பாடுகின்ற பாட்டை விரும்பினோய்!

26. **சிறந்தோர் - இந்திரன் முதலாய தேவர்கள். அஞ்சிய - அஞ்சுதற்குக்காரணமாகிய.

27-8. இரண்டு பிறப்பினையும் அப்பிறப்பான்வந்த இரண்டுநாமத்

---

* " பொங்கல் வெண்மழை" (நெடுநல் 19); பொங்க லாடி விண்டுச் சேர்ந்த வெண்மழை" பதிற். 55.

† பரிபாடல், 5:50-56.

‡ "விறன்மிகு விழுச்சீ ரந்தணர் காக்கும், அறனும்" பரி. 1 : 37-8.

§ "புகைபுரை யம்மஞ் சூர", வெண்மழை கவைஇக், கலஞ்சுடு புகையிற் றோன்றும்" (அகநா. 97, 308); அகிலெழு கொழும்புகை மஞ்சி னாடவும்" சூளா. நகர. 6.

|| பரி. 17 : 28-30 ; "நறும்புகை யெடுத்துக் குறிஞ்சி பாடி" (முருகு. 239) ; "குறிஞ்சி பாடுமி னறும்புகை யெடுமின்" சிலப். குன்ற.

¶ "இவள்விறனலம்" (கலி.3) என்பதும், அதனுரையும் ஈண்டு அறிதற்பாலன.

** பரிபாடல், 19 : 11.

பி-ம். [1] கரையில. [2] நறையுணறும். [3] நயத்தை.

*அன்னை யாகலி னமர்ந்தியா நின்னைத்*
*துன்னித் துன்னி வழிபடு வதன்பயம்*
*இன்னு மின்னுமவை யாகுக*
**தொன் [1] முதிர் மரபினின் புகழினும் பலவே.*

*என்பது, பருவங்கண்டு அழிந்த தலைமகள்கேட்ப முருகவேளைப் பரவுவாளாய், இப்பருவத்தே தலைமகன் வருமென்பதுபடத் தோழி வற்புறுத்தியது.*

கேசவனார் பாட்டு.
இசையும் அவர்.
பண்ணோதிறம்

---

தினையும் ஈர நெஞ்சத்தினையும் ஒப்பில்லாத புகழினையுமுடைய அந்தணரது வைதிக அறத்தைப் பொருந்தினோய்!

29-32. நின்னை யாங்கள் மேவி அடுத்தடுத்து வழிபடுவதன் பயம், இன்னும் இன்னும் நின்புகழினும் பலவாக அவ்வழிபாடுகள் தாமே யாகுக.

32. மிகவும் பழையதாகிய மரபு.

'வாருமென்பவர் சொற்போன்றன' (9) என்றதனாலும், 'எழீஇப்பாடும் பாட்டமர்ந்தோய்' (24) என்றதனாலும் இப்பருவத்தே தலைமகன் வருமென்பது பட்டவாறு கண்டுகொள்க. (14)

---

* "தொன்றியல் புகழ்து" (பரி. 15 : 36), "தொல்சீர்" நன். பாயிரம்.
பி-ம். 1 மிகுமரபுநின்.

ஓஓஓ

# பதினைந்தாம் பாடல்
## திருமால்

*புலவரை யறியாப் [1] புகழொடு பொலிந்து
[2]நிலவரை தாங்கிய [3] நிலைமையிற் பெயராத்
தொலையா நேமிமுத றொல்லிசை [4] யமையும்
[5] புலவராய் புரைத்த புனைநெடுங் குன்றம்
பலவெனி னாங்கவை பலவே பலவினும்
நிலவரை யாற்றி நிறைபய னொருங்குடன்
நின்றுபெற நிகழுங் குன்றவை சிலவே
சிலவினுஞ் சிறந்தன தெய்வம் பெட்புறும்
மலரகன் மார்பின் [6] மைபடி குடுமிய
குலவரை சிலவே குலவரை சிலவினும்

---

(பதினைந்தாம் பாடலுரை)

1-5. அறிவெல்லையால் அறியப்படாத புகழுடனே பொலிந்து நிலவெல்லையைத் தாங்கிய நிலைமைநீங்காத கெடாத சக்கரவாளமுதலாகத் தொல்விசைப்புலவர் ஆராய்ந்துரைத்த கொண்டாடப்படும் நெடிய குன்றங்களைச் சிறப்புவகையாற் கூறாது பொதுவகையாற் பலவென்றுரைக்கின்.

5. ஆங்கு : அசை.

5-10. அப்பலவற்றுள்ளும் நிலத்துள்ளோரைப் பசிவெம்மை ஆற்றி நிறைபயன்களெல்லாவற்றையும் எப்பொழுதும் அவர் பெறப் பயன்படுகுன்று சில ; அச்சிலவற்றுள்ளும் தெய்வங்கள் தாமாக விரும்பும் மலரையுடைய அகன்ற தடங்களுடனே மேகங்கள் படியும் சிகரத்தை யுடையவாகிய குலவரைகள் சில சிறந்தன.

10-14. அக்குலவரைகள் சிலவற்றினும் கல்லென அறையும் கடலும் கானலும் போல வேறுவேறாகிய நிறத்தினையும் பிரிவில்லாத சொல்லும்

---

*"புலவரை யிறந்த புகழ்சா றோன்றல், நிலவரை யிறந்த குண்டு கண் ணகழி" (புறநா. 21); "புலவரை யிறந்தோய்" (சிலப். 28: 174), "நிலவரை யிறந்தோர் முடங்குநா நீட்டும், புலவரை யிறந்த புகார்" மணி. 5 : 108-9.

பி-ம். [1] புகழொடும். [2] நிலவரைத்தாங்கிய. [3] நிலையிற்பெயராது. [4] யறையும். [5] புலவராயபபுரையயுபுரைத்த. 6 மைபடு.

*சிறந்தது, *கல்லறை கடலுங் கானலும் போலவும்*
*புல்லிய சொல்லும் பொருளும் போலவும்*
*எல்லாம், வேறுவே றுருவி னொருதொழி லிருவர்த்*
*தாங்கு நீணிலை †யோங்கிருங் குன்றம்*
*‡நாறிணர்த் [1] துழாயோ னல்கி னல்லதை*
*ஏறுத லெளிதோ வீறுபெறு துறக்கம்*
*§ அரிதிற் பெறுதுறக்க மாலிருங் குன்றம்*
*எளிதிற் பெறலுரிமை யேத்துகஞ் சிலம்ப*
*|| அராவணர் கயந்தலைத் தம்முன் மார்பின்*
*மராமலர்த் தாரின் [2] மாண்வரத் தோன்றி*

---

பொருளும்போல வேறுபடாத தொழிலினையுமுடைய மாயோனையும் தம் முன்னோனையுந் தாங்கும் நீண்ட நிலைமையினையுடைய ¶ புகழான் உயர்ந்த இருங்குன்றம் சிறந்தது.

புகழானென்பது வருவிக்கப்பட்டது.

15. நல்கினல்லது - வெளிப்பட்டுக் கொடுப்பினல்லது.

17-8. அவ்வரிதிற்பெறு துறக்கத்தை எளிதிற்பெறுதலுரிமையான் மாலிருங்குன்றத்தை எல்லாரும் கேட்க ஏத்தக்கடவேம்.

என்று ஏத்துகின்றார்:-

19. அரவின் மெல்லிய தலையாற் கவிக்கப்பட்ட தம்முன்.

20. **மராம் - வெண்கடம்பு.

---

* "மாயவனுந் தம்முனும் போலே மறிகடலும், கானலுஞ்சேர் வெண்மணலுங் காணாயோ" (திணைமா. 58), "மணிகிளர் நெடுமுடி வானவனுந் தம்முனும்போன், றணிகிளர் நெடுங்கடலுங் கானலுந் தோன்றுமால்" யா. வி.சூ. 78;இ. வி.சூ.738, மேற்.

† "ஓங்குயர் மலையத்து" சிலப். 11:105.

‡ பரிபாடல், 13:12-3.

§ "அரிதுபெறு சிறப்பிற் புத்தே ணாடு" குறுந். 101.

|| பரிபாடல், 1 : 1-2.

¶ "தென்கொ டிசைக்குத் திலகமாய் நின்ற திருமாலிருஞ்சோலை" திருவாய்மொழி, 10, 7 : 4.

** மராம் : "இணர்சேர்ந்த மராமும்" கலி. 26.

பி-ம். 1 துழாயோனல்லதை. 2 மான்வரத்.

*அலங்கு மருவி யார்த்திமிழ் [1] பிழியச்*
* *சிலம்பா றணிந்த சீர்கெழு திருவிற்*
*சோலையொடு தொடர்மொழி †மாலிருங் குன்றம்*
*தாம்வீழ் காமம் [2] வித்துபு விளைக்கும்*
*நாமத் தன்மை [3] நன்கனம் படியெழ*
*யாமத் [4] தன்மையிவ் வையிருங் குன்றத்து*
*மன்புன விளவெயில் [5] வளாவவிருள் வளர்வெனப்*
*பொன்புனை யுடுக்கையோன் [6] புணர்ந்தமர் நிலையே*
*நினைமின் மாந்தீர் கேண்மின் கமழ்சீர்*

21-2. அசையுமருவி மிக ஆர்த்து இழிதலாற் சிலம்பாறு அழகு செய்த இவ்வியக்கத்தக்க இருங்குன்றத்து (26).

22-6. அழகுபொருந்திய திருவென்னுஞ்சொல்லொடும் சோலை யென்னுஞ் சொல்லொடும் மாலிருங்குன்றமென்னுஞ்சொல் தொடர்ந்த மொழியாகிய திருமாலிருஞ்சோலைமலை யென்னும் நாமத்தினது பெருந் தன்மை நன்றாகப் பூமியின்கட்பரக்க, மகளிரும் மைந்தரும் தாம்வீழ் காமத்தை ‡ வித்தி விளைக்கும் யாமத்தியல்பையுடைய இவ்வையிருங் குன்றத்தெனக் கூட்டுக.

26. § குறிஞ்சிக்குச் சிறுபொழுதாகலான் யாமங் கூறினார்.

27-8. நிலைபெற்ற குளிர்ச்சியையுடைய இளவெயில் சூழ அதனிடையே இருள்வளர்தலையொக்கப் பீதாம்பரத்தையுடையோன் தம்முன்னொடுகூடி அமர்ந்துநிற்கும் நிலையை.

29. மாந்தீர் ! நினைமின்; இனி, அம்மலையது சிறப்பைக்கேண்மின்.

* "நிலம்பக வீழ்ந்த சிலம்பாற் றகன்றலை" (சிலப். 11 : 108) ; "சிலம்பார்க்க வந்து தெய்வ மகளிர்க ளாடுஞ்சீர்ச், சிலம்பாறு பாயுந் தென்றிரு மாலி ருஞ்சோலையே" (பெரியாழ்வார் திருமொழி, 4. 2 : 1). "சிலம்பாறுடைமாலிருஞ் சோலைநின்ற சுந்தரனை" (நாச்சியார் திருமொழி, 9 : 10) ; "சிலம்பியலாறுடைய திருமாலிருஞ்சோலை நின்ற, நலந்திகழ் நாரணனை" பெரியதிருமொழி. 9. 9:9.

† "திருமால் குன்றத்துச் செல்குவி ராயின்" சிலப். 11 : 91.

‡ "வித்தி விளைத்து" அறநெறி. 95.

§ "குறிஞ்சி, கூதிர் யாம மென்மனார் புலவர்" தொல். அகத். சூ.6.

பி-ம். [1] பிழியாச். [2] வித்திவிளைக்கு. [3] நனகனபடியெழ. [4] தனமைததனமையிவ. [5] வளாவிருள. [6] புணாமாநிலை.

சுனையெலா நீல மலரச் சுனைசூழ்
சினையெலாஞ் செயலை மலரக் காய்கனி
உறழ நனைவேங்கை யொள்ளிணர் மலர
*மாயோ னொத்தவின் னிலைத்தே
சென்றுதொழு கல்லீர் கண்டுபணி மின்மே
இருங்குன் றென்னும் [1] பெயர்பரந் ததுவே
பெருங்கலி ஞாலத்துத் தொன்றியல் புகழது
கண்டுமய ரறுக்குங் காமக் கடவுள்
மகமுயங்கு மந்தி வரைவரை பாய
முகிழ்மயங்கு [2] முல்லை முறைநிகழ்வு காட்ட

---

30-33. சுனையெல்லாம் நீலமலர அச்சுனைசூழ்ந்த † செயலை சினையிடமெல்லாம் மலர்தலானும் காய்கனிகளொடு நிறம் மாறுபட வேங்கையிணர் மலர்தலானும் மாயோனையொத்த இனிய நிலைமையையுடைத்து.

நீலமலரைச்சூழ்ந்த செயலைமலர் அவன்பொன்புனை ‡ உடுக்கைக்கு ஒப்பு ; குன்றத்துக் காய்கனியுறழ மலர்ந்தவேங்கை அவன்மணிமுடிக்கு ஒப்பு.

34-7. பெருங்கலிஞாலத்து இருங்குன்றென்னும் பெயர் பரந்த அத்துணையே பழைதாய் இயல்கின்ற புகழையுடைய § அது காண மயரை அறுப்பதொரு வழிபடுதெய்வம் ; அதனால், சென்று || அவனைத் தொழமாட்டாதீர் ! அதனைக்கண்டு பணிமின்.

38. மகவால் முயங்கப்பட்ட மந்தி ஒரு சிகரத்தினின்று ஒருசிகரத்திற் பாய.

39. முகிழ்நெருங்கின முல்லை மகளிர் கற்புநிகழ்ச்சியைக் காட்ட.

---

* "மாயோ னன்ன மால்வரை" நற். 32.

† செயலை - அசோகமரம்.

‡ திருமாலுடைய உடுக்கையும் பொன்முடியும் : 13-ஆம் பாடலின் முதலிரண்டடிகளைப் பார்க்க.

§ அம்மலை காணமயரையறுப்பதொரு வழிபடுதெய்வமென்பதைத் திருவாய்மொழி, 2-ஆம் பத்து, "கிளரொளி" என்னும் பத்தாந் திருவாய்மொழியின் பின் இரண்டடிகளாலும் அவற்றின் வியாக்கியா னங்களாலு முணர்க.

|| "திருமா லிருஞ்சோலை மலையென்றே னென்னத், திருமால்வந் தென்னெஞ்சு நிறையப் புகுந்தான்" திருவாய்மொழி. 10. 8 : 1.

பி-ம். [1] பெயாபொந்ததுவே. [2] முல்லைநிறை.

மணிமரு [1]ணன் னீர்ச்சினை மடமயி லகவக்
குருகிலை யுதிரக் குயிலினங் கூவப்
பகர்குழல் பாண்டி லியம்ப வகவுநர்
நாநவில் பாடன் [2] முழவெதிர்ந் தன்ன
சிலம்பிற் சிலம்பிசை [3] யோவா தொன்னார்க்
கடந்தட்டான் கேழிருங் குன்று.
தைய லவரொடுந் தந்தா ரவரொடும்
கைம்மக வோடுங் காத லவரொடும்
தெய்வம் பேணித் திசைதொழுதனிர் சென்மின்
*புவ்வத் தாமரை புரையுங் கண்ணன்
வெளவற் காரிருண் மயங்குமணி மேனியன்
எவ்வயி னுலகத்துந் தோன்றி யவ்வயின்
†மன்பது [4] மறுக்கத் துன்பங் [5] களைவோன்

---

40-45. சினையிடத்தவாகிய மணிமருள் மயில்கள் அகவவும், குருக்கத்தி இலையுதிர அதன்கணிருந்து குயிலினம் கூவவும், முழைக்கட் சிலம்புகின்ற எதிரொலி ஓவாது, அவுணரை நேரே பொருதுகொன்றானது நிறத்தையுடைய குன்றத்தின்கண்.

42-3. சுருதியையுணர்த்துகின்ற குழலும் தாளமும் இயம்ப அவற்றைப் பாடுவாரது மிடற்றுப்பாடலும் முழவோசையும் எதிர்ந்தாற் போன்ற.

இசையென்றவழி, குழலொலியும் மிடற்றுப்பாடலும் குயிலினத்தது கூவற்கும் அதன் எதிரொலிக்கும் உவமை. தாள ஒலியும் முழவொலியும் மயிலது அகவற்கும் அதன் எதிரொலிக்கும் உவமை.

மந்தி பாய (38) முல்லை காட்ட (39) எனநின்ற செயவெனெச்சங்கள், இசையோவாதென்னும் (44) பிறவினை கொண்டன.

46-8. அதனை நும்மனைவியரோடும் இருமுதுகுரவரோடும் குழவிகளோடும் சுற்றத்தோடுங்கூடத் தெய்வமாக மதித்துத் ‡ திசைநோக்கித் தொழுது சென்மின்.

49-53. தன் நாபிகமலத்தையொக்கும் கண்ணையுடையனாய்

---

* இவ்வடியும் இதனுரையும், இந்நூல் 4-ஆம் பாடல், 60-61-ஆம் அடிகளுடனும் அவற்றின் உரைகளுடனும் ஒப்புநோக்கற்பாலன.

† "உலகினுண் மன்பதும்" பரி. 3:9.

‡ "திசைநோக்கித் தொழுகின்றான்" (கம்ப. குகப். 30); "திசை நோக்கி மெய்பூ சனைபுரியும் வேங்கடமே" திருவேங்கடமாலை, 13.

பி-ம். [1] ணனிரமாட. [2] முழவெதிர நதமனனலதிரநத. [3] யோவாதெயொனனாரக. [4] மறுபககததுனபங. [5] களைவானெனபது.

அன்பது மேஎ யிருங்குன் றத்தான்
[1] கள்ளணி பசுந்துளவினவை கருங்குன் றனையவை
ஒள்ளொளியவை யொருகுழையவை
புள்ளணி பொலங்கொடியவை
வள்ளணி வளைநாஞ்சிலவை
சலம்புரி தண்டேந்தினவை
வலம்புரி வயநேமியவை
வரிசிலை வயவம்பினவை
புகரிணர்சூழ் வட்டத்தவை *புகர்வாளவை

---

நீரை வெளவுதலையுடையமேகமும் இருளும் நீலமணியும்போலுமேனி யனாய் எல்லா உலகினும் வெளிப்பட்டு அவ்விடத்து உயிர்ப்பன்மையது மறுக்கத்தைச் செய்யும் பிறவித்துன்பத்தைக் களைவோன் † அன்புபட்டு இருங்குன்றத்தின் கண்ணானாதலால்,

‡ புவ்வமென்பது (49) பாகதச்சிதைவு.

இவ்வளவும் குன்றத்தையேத்திக் கண்டார்க்கும் அதன்சிறப்புக்கூறி மேல் அதன்கணின்ற இருவரையும் வாழ்த்தி வேண்டிக்கொள்கின்றார்.

57. கூர்மையணிந்த வளைநாஞ்சிலையுடையை.

58. கோபமிக்க தண்டினையேந்தினை.

59. வலம்புரியொடு வெற்றிநேமியையுடையை.

60. வரிசிலையொடு வெற்றி அம்பினையுடையை.

61. புகரொழுங்கு சூழ்ந்த § [2] பாராவளையினையுடையை.

இவ்வாழ்த்துக்களுள், ஒள்ளொளியவை, ஒருகுழையவை (55),வள்ளணி

---

* "புகர்கொள் பொற்சுரிகை" தே. சுந்தர. திருநாகை.

† "மாலிருஞ்சோலை தன்னைக் கருதியுறைகின்ற கார்க்கடல் வண்ணன்" பெரியாழ்வார், 4. 2:1.

‡ புவ்வம் - பூர்வம் ; "அங்க புவ்வ மாதி யாய வாதி நூல்" (யா. வி. சூ. 25; யா. கா. சூ. 13, மேற்.), "அங்கபுவ் வாதி மெய்ந்நூல்" யசோதர. 1:51.

§ பாராவளை - சுழல் படை; "சுழல்படை வட்டம் பாரா வளையே" (பிங்கலந்தை, 1560); 'மாலையைப் பாராவளையமாக வெறிந்தும்' (சீவக. 2656, ந. உரை) என்பதும், "தொல்கதை பாரா வளைவளை யெறிகோல்" (திருவால. 39:19) என்பதும் இங்கே அறியற்பாலன.

பி-ம். [1] களனணி. [2] பாறாவளையத்தினை.

*எனவாங்கு*
*[1] நலம்புரீஇ யஞ்சீர் நாம வாய்மொழி*
*[2] இதுவென வுரைத்தனெ முள்ளமர்ந் திசைத்திறை*
*இருங்குன்றத் தடியுறை யியைகெனப்*
**பெரும்பெய ரிருவரைப் பரவுதுந் தொழுதே.*

கடவுள் வாழ்த்து.

இளம்பெருவழுதியார் பாட்டு.
மருத்துவன் நல்லச்சுதனார் இசை.
பண்ணோதிறம்.

---

வளைநாஞ்சிலவை (57), சலம்புரி தண்டேந்தினவை (58) என வந்தன பலதேவன ; ஏனைய வா தேவன.

63-6. அழகிய சீரையும் அஞ்சப்படுதலையுமுடைய வேதம் தனக்கு நன்மையைவிரும்பி அவர்பெருமை ஈதென்று சொல்லுதலால் யாமும் உள்ளம்மேவி அச்சொற்களுள் அறிந்தவற்றைக்கூட்டி உரைத்தேமாய்ப் பெரும்புகழையுடைய இருவரையுந் தொழுதுவேண்டுதும் ; எமக்கு இவ்விருங்குன்றத்து அடியின்கண் உறைதல் எய்துகவென்று. எ-று. (15)

---

*"பானிற வுருவிற் பனைக்கொடி யோனும், நீனிற வுருவி னேமி யோனுமென், றிருபெருந் தெய்வமு முடனின் றாஅங்கு" புறநா. 58.

பி-ம். [1] நலம்புருந்தஞ்சீர. [2] இதுவுரைத்தனெம.

# பதினாறாம் பாடல்

## வையை

கரையே, *கைவண் டோன்ற லீகை போன்மென
†[1] மைபடு சிலம்பிற் கறியொடுஞ் சாந்தொடும்
நெய்குடை தயிரி னுரையொடும் பிறவொடும்
எவ்வயி னானு மீதுமீ தழியும்
துறையே, முத்துநேர்பு புணர்காழ் மத்தக நித்திலம்
‡ பொலம்புனை யவிரிழை [2] கலங்கலம் புனன்மணி
வலஞ்சுழி யுந்திய [3] திணைபிரி புதல்வர்
கயந்தலை முச்சிய முஞ்சமொடு தழீஇத்
தத்தந் துணையோ டொருங்குட னாடும்
தத்தரிக் கண்ணார் தலைத்தலை வருமே
செறுவே, விடுமலர் சுமந்து பூநீர் நிறைதலிற்

---

## (பதினாறாம் பாடலுரை)

1. கைவண்மையையுடைய பாண்டியனது ஈகைபோலுமென்று கண்டார் கூற.

3-4. நெய்குடை தயிர்போலும் நுரையோடும் பிறவற்றோடும் நீர்பெருகல் எவ்விடத்தும் மேன்மேல் அழியாநிற்கும்.

நீர்பெருகலென்பன அவாய்நிலையான்வந்தன.

5-10. ஒத்து முத்துச்சேர்ந்தவடம், தலைக்கோலமுத்து, பொன்னணி, வலமாகச் சுழிக்கும் யாற்றவாகிய கலங்குதலையுடைய புனல் கொண்டுவந்த மணிகள் இவற்றை இல்வாயில்போந்து நீராடும் புதல்வர் மென்றலைமுச்சியவாகிய முஞ்சமென்னும் அணியொடுகொண்டு தத்தம் கணவரோடு ஒருங்குகூடி ஆடும் தத்தரிக்கண்ணாரிடந்தோறும் நீர் வாரா நிற்கும்.

திணைபிரிதல் (7) - இல்லினின்று சேறல்.

11. விடுமலர்சுமத்தலும் பூநீர்நிறைதலும் வயலுக்கும் அரங்கிற்கும் சிலேடையாகலின், வயலுக்கு அவிழ்ந்த மலர்களைச் சுமந்து பொலிந்த

---

* "வள்ளற் கைத்தல மாந்தரின் மால்வரைக், கொள்ளை கொண்ட கொழுநிதிக் குப்பையை, உள்ள மில்லவர்க் கூர்தொறு முய்த்துராய், வெள்ள நாடு மடுத்து விரைந்ததே" சீவக. 36.

† "மைபடு சென்னிப் பயமலை" கலி. 43 ‡ முருகு.18

பி-ம். [1] மைபடி. [2] கருவினன்கலங்கற்றண்புனன். [3] திணைப்பிரி.

*படுக ணிமிழ்கொளை பயின்றன ராடும்*
*களிநா ளரங்கி னணிநலம் புரையும்*
*காவே, சுரும்பிமிர் தாதொடு தலைத்தலை மிகூஉ.*
*நரந்த [1] நறுமலர் நன்களிக் கும்மே*
*[2] கரைபொழுகு தீம்புனற் கெதிர்விருந் தயர்வபோற்*
*கானலங் காவுங் கயமுந் துருத்தியுந்தேன்*
*தேனுண்டு பாடத் * திசைதிசைப் பூநலம்*
*பூத்தன்று வையை வரவு.*
*சுருங்கையி னாயத்தார் சுற்று [3] மெறிந்து*
*குரும்பை முலைப்பட்ட பூநீர் துடையாள்*
*பெருந்தகை மீளி வருவானைக் கண்டே*
*இருந்துகிற் றானையி னொற்றிப் பொருந்தலை*
*பூத்தன ணீங்கெனப் பொய்யாற்றாற் றோழியர்*
*[4] தோற்றமோ ரொத்த மலர்கமழ் தண்சாந்தின்*

நீர்நிறைதலாகவும் அரங்கிற்குக் † கமலவர்த்தனைக்கண் தூவிய மலர்களைச் சுமந்து ‡ பூதர் அருச்சனைப்பூவும் நீரும் நிறைதலாகவும் உரைக்க.

12-3. படுகின்ற இயங்களின் கண்ணொலியையும் பாட்டினையும் பயின்ற மகளிர் ஆடுகின்ற அரங்கினது அலங்கரித்த அழகையொக்கும்.

14-5. மேன்மேலும் நெருங்கும் சுரும்புகள் இமிரும் தாதுடனே நரந்தம்போலும் நறிய மலர்களை மிக அளிக்கும்.

14-6. கா, தமக்கு விருந்தயர்ந்த ஒலித்தொழுகும் தீம்புனற்கு எதிர்விருந்தயர்வனபோல நன்களிக்குமென்க.

இவைய... ... ... ... ... ... ...

17-9. மணத்தையுடைய காவினும் கயங்களினும் ஆற்றிடைக் குறையினும் மதுவையுண்டு தேன்கள் பாடப் பூவினாகிய அழகு திசைதோறும் பொலிந்தது, வையை வரவின்கண்.

கானலங்காவென்புழி (17), அல்லும் அம்மும் சாரியை.

20-31. வேயினாலே ஆயத்தார் சுற்றுநின்றெறியத் தன்குரும்பை முலைக்கட்பட்ட அரக்குநீரைத் துடையாளாய் இருந்துகிலின் தானையினால் ஒற்றி நிற்ப, அவள்பால் தலைமகன் வருகின்றவனைத் தோழியர்கண்டு,

*"திசைதிசை தேனார்க்குந் திருமருத முன்றுறை" கலி .26.

† கமலவர்த்தனை : சீவக. 675-ஆம் பாடலின் உரையைப்பார்க்க; இது கமலவட்டணையென்றும் வழங்கும்.

‡ பூதர் - வருணப்பூதர்; சிலப். 3 : 107, உரை.

பி-ம். [1] நாறுமலர். [2] கரைபொழியுந்தீம்புனற். [3] மெறிந்த. [4] தோற்றமாரொத்த.

நாற்றத்திற் போற்றி நகையொடும் போத்தந்
திருங்கடற் கூங்கிவரும் யாறெனத் [1] தங்கான்
மகிழக் [2] களிப்பட்ட தேன்றேறன் மாற்றிக்
குருதி துடையாக் குறுகி மருவினியர்
பூத்தன ணங்கை பொலிகென நாணுதல்
வாய்த்தன்றால் வையை வரவு.
மலையி னிழியருவி மல்கிணர்ச் சார்ச்சார்க்
கரைமரஞ் சேர்ந்து கவினி [3] மடவார்
நனைசேர் கதுப்பினுட் டண்போது மைந்தர்
மலர்மார்பிற் சோர்ந்த மலரிதழ் தாஅய்
மீனாரம் பூத்த வியன்கங்கை நந்திய
வானம் பெயர்ந்த மருங்கொத்த லெஞ்ஞான்றும்
தேனிமிர் வையைக் கியல்பு.
[4] கள்ளே புனலே புலவியிம் மூன்றினும்

பூத்தனள், அவளைப்பொருந்தாதே நீங்கென்று பொய்யாற்றாற்சொல்ல, அப்பூப்பின் தோற்றத்தை ஒருதலையாக ஒத்த செஞ்சாந்தின்நாற்றத்தால் பூப்பின்மையை அறிந்துவைத்தும் [5] சனத்திடையானாதலான் அவன் ஆண்டுநின்றும் நகையொடும் போந்து பின் இல்லின்கட் கடலைநோக்கி மலையினின்றும் பரந்துவரும் யாற்றையொக்க விரைந்துசென்று மகிழுமாறு களிப்புமிக்க பழத்தேனாற்செய்த தேறலையும் நுகராது குருதிபோலும் பூநீரைத் துடைத்து அணுகி மருவுதலின், அவர் அவளில்லத்தார்க்கு நங்கை பூத்தனள் பொலிகவென்று சொல்ல, அதற்கு அவள் நாணுதலைப் பயந்தது, வையையது வரவு.

இதுவும் வருகின்றனவும் காதற்பரத்தையைக் குறித்துக் கூறியன.

32-7. மலையினின்றும் இழிந்த அருவி போந்து கரையிடந்தோறும் இடந்தோறுமுளவாகிய மல்கிணர்மரத்தைச் சேர்ந்து அவற்றதுபூவால் அழகுபெற்று மடவார்கதுப்பினிற்றீர்ந்த தேன்சேர் தண்போதுகளும் மைந்தர்கள் மார்பிற்றீர்ந்த மலரிதழ்களும் பரக்கப்பட்டு மீனாகிய முத்துப் பூத்துவிளங்கிய வானத்தின்கட் கங்கைபெயர்ந்தகூற்றை ஒத்தலுடைமை.

39-46. ஒளிகிளர் உண்கட்கெண்டை, மதுபானம் புனலாட்டு புலவியென்னும் இம்மூன்றினாலும் ஒள்ளியநிறம் சிவக்க, வண்டினம் வாயைச்சூழும் அழகுடனே மயிரினின்று நீங்குநீர்மையையுடைய பூக்களி னின்றுந்தேனொழுக மிக்கநீரின்கண் ஆடும்பரத்தையரை அடுத்தடுத்துப்

பி-ம். [1] தாங்க. [2] கனிப்பட்ட. [3] மடவாரநதனைசொ. [4] புள்ளே. [5] சந்தனத்திடையானாதலால்.

ஒள்ளொளி [1] சேய்தா வொளிகிளருண் கட்கெண்டை
பல்வரி * வண்டினம் வாய்சூழ் கவினொடும்
[2] சென்னீர் வீவயிற் றேன்சோரப் பன்னீர்
அடுத்தடுத் தாடுவார்ப் புல்லக் குழைந்து
வடுப்படு மான்மதச் சாந்தா ரகலத்தான்
எடுத்தவே † யெக்கி நூக்குயர்பு தாக்கத்
தொடுத்ததேன் சோரும் வரைபோலுந் தோற்றம்
கொடித்தேரான் வையைக் கியல்பு.
வரையார்க்கும் புயல்கரை
திரையார்க்குமித் தீம்புனல்
கண்ணியர் தாரர் கமழ்நறுங் கோதையர்
பண்ணிய வீகைப் பயன்கொள்வா [3] னாடலால்
நாணா ளுறையு நறுஞ்சாந்துங் கோதையும்
‡ பூத்த புகையு மவியும் புலராமை

---

புல்லுதலால் நெகிழ்ந்து அழிந்ததும் அழியாததுமாகிய கத்தூரிக்குழம்பு பார்ந்த அகலத்தான், பனியால் வளைந்த வேய் அப்பனிநீங்க மேலே கிளர்ந்து [4] மிசைச்சென்று தாக்குதலால் தேன்சோர்ந்துவிழும் வரையை யொக்கும் தோற்றமுடைமை.

கெண்டை நிறஞ்சிவக்கவெனப் (40) பண்பின்றொழில் பொருண்மேல் நின்றது.

48-9. மேகம் வரைக்கண்ணே ஆராநிற்கும் ; அவ்வளவில் இவ்வகைத்தாகிய தீம்புனலுள் திரை கரைக்கண்ணே ஆராநிற்கும்.

இவ்வளவும் தோழி தன்னுள்ளே கூறுவாளாய்ப் புனலாடிய வரலாறு கூறி, மேல் வையையை நோக்கிக் கூறுவாளாய் வாயில் மறுக்கின்றாள்:-

50-55. வையாய்! கண்ணியராய்த் தாரராகிய மைந்தரும்

---

*"வரிவண்டு வாய்சூழும் வளங்கெழு பொய்கை" கலி. 71.

† எக்கி: திசைச்சொல் ; தெலுங்கு.

‡ "புகைபூ, அவியா ராதனை யழல்பல வேந்தி" பரி. 6 : 11.

பி-ம். [1] செய்தாரொளி. [2] செனனனீவுவீவயிற. [3] னாடலின.
[4] விசை.

*மறாஅற்க வான [1] மலிதந்து நீத்தம்*
*அறாஅற்க வையை நினக்கு.*

*என்பது, காதற்பரத்தையுடன் புனலாடிய தலைமகன் தோழியை வாயில்வேண்ட அவள் புனலாடியவாறு கூறி வாயின்மறுத்தது.*

[2] நல்லழிசியார் பாட்டு.
நல்லச்சுதனார் இசை.
பண்ணோதிறம்.

---

கமழ்நறுங்கோதையராகிய மகளிரும் முன் பொருள்களைத் * தானம் பண்ணி அதன் பயனாகிய போகத்தை நுகரவேண்டி நாடோறும் ஆடுதலான் அவர்கையுறையாகிய † பொன்மீன் முதலியவும் அவரணிந்த சாந்தும் மாலையும் ஈரணிபுலர்த்தும் பொலிந்தபுகையும் நினக்குத்தரும் உண்டியும் இடையறாமல் மழை மறாதொழிக ; அம்மழையினாகிய வெள்ளம் பெருகி நினக்கு வற்றாதொழிக. (16)

---

* "தானத்தாற் போகந் தவத்தாற் சுவர்க்கமாம்" சிறுபஞ்ச. 36.

† இப்புத்தகத்தில் 40-ஆம் பக்கத்துக் கீழ்க்குறிப்பைப் பார்க்க.

பி-ம். [1] மலிந்து. [2] நல்லழுசி.

# பதினேழாம் பாடல்

## செவ்வேள்

தேம்படு மலர்குழை பூந்துகில் வடிமணி
ஏந்திலை சுமந்து சாந்தம் [1] விரைஇ
விடையரை யசைத்த வேலன் கடிமரம்
பரவின ருரையொடு பண்ணிய விசையினர்
விரிமலர் மதுவின் மரநனை குன்றத்துக்
கோலெரி கொளைநறை புகைகொடி யொருங்கெழ
மாலை மாலை யடியுறை யியைநர்
மேலோ ருறையுளும் வேண்டுநர் யாஅர்
ஒருதிறம், பாணர் யாழின் றீங்குரலெழ
ஒருதிறம், யாணர் வண்டி னிமிரிசையெழ
ஒருதிறம், கண்ணார் குழலின் கரைபெழ

---

## (பதினேழாம் பாடலுரை)

1-8. கோலப்படும் எரியும் இசையியங்களும் சந்தனமுதலிய விரைகளும் அகிற்புகையும் கொடிகளும் ஒருங்கே வரத் தாம் தேன் விளைந்தமலர்களையும் குழைகளையும் பூத்தொழில்களையுடைய துகில்களையும் வடித்தமணியினையும் ஏந்தப்படும் இலையினையுடைய வேலினையும் சுமந்துவந்து கடிமரமாகிய * கடம்பை உரையாலே ஏத்தினராய், † ஆளத்தியாலாக்கிய இசையினராய் விரிமலர்மதுவான் மரங்கள்நனையுங் குன்றத்து அடியின்கண் உறைதலை மாலைகடோறும் பொருந்துவாருள் தேவருலகத்து உறைதலை வேண்டுவாருளரோ?

2-3. சந்தனத்தைத் தெளித்து அரைக்கண்ணே வேலன் விடையைக் கட்டின பூசையையுடைய மரமெனக் கூட்டுக.

கோலெரி (6) - தீபம்.

எழவெனவும் சுமந்தெனவும்நின்ற வினையெச்சங்களும், பரவினர் இசையினரென்னும் முற்றுவினையெச்சங்களும் இயைநரென்னும் தொழிற் பெயருள் இயைதலொடு முடிந்தன.

10. பூக்களாகிய புதுவருவாயினையுடைய வண்டு.

11. கரைபு ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

---

* "கடம்பம ரணிநிலை" பரி. 19.

† ஆளத்தியினியல்பைச் சிலப்பதிகாரத்திற் காண்க. (பக். 85); இப்பெயர் ஆலாபனமென்று வழங்கும்.

பி-ம். [1] விரைஇய.

ஒருதிறம், பண்ணார் தும்பி பரந்திசை யூத
ஒருதிறம், மண்ணார் முழவி னிசையெழ
ஒருதிறம், அண்ண னெடுவரை யருவிநீர் ததும்ப
ஒருதிறம், *[1] பாடனல் விறலிய ரொல்குபு நுடங்க
ஒருதிறம், வாடை யுளர்வயிற் பூங்கொடி நுடங்க
ஒருதிறம், பாடினி முரலும் பாலையங் குரலின்
நீடுகிளர் கிழமை நிறைகுறை தோன்ற
ஒருதிறம், ஆடுசீர் மஞ்ஞை யரிகுர றோன்ற
மாறுமா றுற்றனபோன் மாறெதிர் [2] கோடல்
மாறட்டான் குன்ற முடைத்து.
பாடல் சான்று பல்புகழ் முற்றிய
கூடலொடு பரங்குன்றினிடைக்
கமழ்நறுஞ் சாந்தி னவரவர் திளைப்ப
[3] நணிநணித் தாயினுஞ் சேஎய்ச் சேய்த்து

12. ... ... ... ... ... போலும் இசையினை.

15. பாடுதல் நல்ல விறலியர்.

வினையது நன்மை வினைமுதன்மேல் நின்றது.

16. உளர்வயின் - அசைந்த விடத்து.

17-8. பாலையையுடைய அழகிய மிடற்றுப்பாடற்கண் நாலு தாக்குடைய கிழமையும் இரண்டுதாக்குடைய ... ...குறையும் தோன்ற.

19. சீருக்கு இசைய ஆடுகின்ற மயிலது அரிந்தகுரல்.

20. கல்விகளால் மாறுமாறாந் தன்மையுற்றனபோல இகலை ஏற்றுக் கோடல்.

9-19. † யாழின்குரலொடுவண்டிசைக்கும், குழலின்கரைபொடு தும்பியிசைக்கும், முழவிசையொடு அருவிநீரொலிக்கும், விறலியர் நுடக்கத்தொடு கொடி நுடக்கத்திற்கும், கிழமைநிறைகுறைகளின் தோற்றத்தொடு அரிகுரற்றோற்றத்திற்கும் கொள்க.

22-5. பாடுதலமைந்து பலபுகழும் முற்றுப்பெற்ற கூடற்கும்

*பரி. 16 : 12-3; பதிற். 51 : 10-11; மதுரைக். 217-8.

† "குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட, மழலை வண்டின நல்லி யாழ்செய்ய", "கொம்பர்த் தும்பி குழலிசை காட்டப், பொங்கர் வண்டின நல்லியாழ் செய்ய" (மணி. 4 : 3-4; 19 : 57 - 8); "அருவி, தாழ்ந்து வீழ்ந்தவை முழவிற் றதும்பின", "படுகண் முழவினிமிழருவி" (சீவக. 1560, 2172), "வல்லியென்னுமாதராடு நாடகங்கண்டு" சூளா. சீய. 216.

பி-ம். [1] பாடல்விறலியர், யாடனல்விறலியர். [2] கொள்ளன. [3] நணிந்தணிததாயினுஞ்.

மகிழ்மிகுதேளங் கோதையர் கூந்தல் குஞ்சியிற்
[1] சோர்ந்தவி ழிதழி னியங்குமா றின்று
வசைநீங்கிய வாய்மையால் வேள்வியாற்
றிசைநாறிய *குன்றமர்ந் † தாண்டாண்
டாவி யுண்ணு மகில்கெழு கமழ்புகை
வாய்வாய் மீபோ யும்பரிமை பிறப்ப
தேயா மண்டிலங் காணுமா றின்று
வளைமுன்கை வணங்கிறையார்
அணைமென்றோ ளசைபொத்தார்
தார்மார்பிற் றகையியலார்
ஈரமாலை யியலணியார்
மனமகிழ் தூங்குநர் பாய்புட னாடச்
சுனைமலர்த் தாதூதும் வண்டூத லெய்தா
அனையபரங் குன்றி னணி.

---

பரங்குன்றத்திற்கும் இடைநின்ற நிலம் மிக அணித்தாயினும் மகளிரும் மைந்தரும் நெருங்கி விளையாடுதலால் மிகச் சேய்த்தாகா நின்றது.

26-7. மகிழ்ச்சிமிக்க அவர்கள் கூந்தலினின்றும் குஞ்சியினின்றும் வீழ்ந்து அவிழ்ந்த மாலையால் தடுக்கப்பட்டு இயங்குநெறி இன்றாகா நின்றது.

29-32. ‡ புகழால் திசையெங்கும் பரந்த குன்றின்கண் மேவி உலகத்தார் பலவிடத்தும் செய்கின்ற பூசைக்கண் முருகன் ஆவியாகக் கொள்ளும் அகிற்புகை அவ்விடந்தோறும் மேலே போதலான் உம்பர் இமையாநின்று நீங்குவார் ; ஆதித்தமண்டிலமும் ஆண்டுக் காணும் இயல்புடைத்தன்று.

32. தேயாமண்டிலமென்றார், § ஏனைமண்டிலம் தேய்தலின்.

33-9. ஈரமாலை இயலணியாராகிய வளைமுன்கை வணங்கிறையாரும் அவர் அணைமென்றோளின்கட் டங்கி அன்பொத்தாராகிய தார்மார்பிற் றகையியலாரும் மனமகிழ்தூங்கி உடனே பாய்ந்தாடுதலால், வண்டுகள் வெருவிச் சுனைமலர்த்தாதினை ஊதப்பெறா; பரங்குன்றினது அலங்காரம் அத்தன்மைய.

---

* "குன்றமர்ந் துறைதலு முரியன்" முருகு. 77.

† "ஆண்டாண் டுறைதலு மறிந்த வாறே" முருகு. 249.

‡ "இசையாற் றிசைபோய துண்டே" சீவக. 31.

§ "ஏனைமண்டிலம் - சந்திரமண்டிலம்; "மதியிற் றேய்வன" (மதுரை. 665-6); "தேய்த லுண்மையும்" புறநா. 27.

பி-ம். [1] சோர்ந்தவிதழின்.

*கீழோர், வயல்பரக்கும் வார்வெள்ளருவி பரந்தா னாதரோ*
*மேலோர், இயங்குதலால் வீழ்மணி [1] நீலஞ் செறுவுழக்கு*
*தெய்வ விழவுந் திருந்து விருந்தயர்வும்* [மரோ
*அவ்வெள் ளருவி யணிபரங் குன்றிற்கும்*
*தொய்யா விழுச்சீர் வளங்கெழு வையைக்கும்*
*கொய்யுளை மானறேர்க் கொடித்தேரான் கூடற்கும்*
*கையூழ் தடுமாற்ற நன்று.*
*எனவாங்கு*
**மணிநிற மஞ்ஞை யோங்கிய புட்கொடிப்*
*பிணிமுக மூர்ந்த வெல்போ ரிறைவ*
[2] *பணியொரீஇ நின்புக ழேத்தி.*

---

என்றது, முன்னர்ச் சொல்லுகின்றவற்றை.

40-41. மலைக்கண் வார்வெள்ளருவி ஆனாது பரந்து உழவரது வயலின்கட் பரக்கும். மேல் விளையாடுமகளிர் இயங்குதலால் அவர் பூணினின்றும் விழுந்த மணிநீலம் உழுநிலத்தைச் சிதைக்கும்.

இரண்டு அரோவும் அசை.

42-6. பிரிந்ததலைவர் வினைமுடித்துக் கடிதின்வந்து கூடுதற்கு அவ்வெள்ளருவியணிந்த பரங்குன்றின்கண் தலைவியர்செய்யும் தெய்வ விழாவும் அங்ஙனம் கூடியவழிக் கெடாத விழுப்புகழையுடைய வளங்கெழு வையையின்கண்ணும் ஏனையார் கொய்யுளைமானறோற் சூழப்பட்ட கொடித்தேரையுடையான் கூடற்கண்ணும் அவர்செய்யும் திருந்து விருந்தயர்வும் தம்மிற் காரணகாரியங்களாய்த் தடுமாறிவருதல் இல்லற நெறியாதலின் அவர்க்கு நல்லொழுக்கமாயிற்று.

வையையின்கண் விருந்தயர்தலாவது, அவரோடு புதுப்புனலாடுதல்.

கற்புடைமகளிரும் தலைவரது அறம்நிமித்தமாகப் பூசைசெய்து அதன் பயன் நுகர்வரென்றலின், இதுவும் கடவுண்மேலதாயிற்று.

இவ்வளவும் முருகனது பரங்குன்றத்தைப் புகழ்ந்து, மேல் அவனை எதிர்முகமாக்கி வாழ்த்துகின்றார்:-

48-53. மணிநிற மஞ்ஞையினையும் உயர்ந்த கோழிக் கொடியினையும்

---

*"மணிமயி லுயரிய மாறா வென்றிப், பிணிமுக வூர்தி யொண் செய் யோனும்" புறநா. 56.

பி-ம். 1 நீலஞசேறுழக்கும், நீலஞ்சிதைக்கும். 2 பணியொரீஇய.

*அணிநெடுங் *குன்றம் பாடுதுந் தொழுதும்*
*அவை, யாமுமெஞ் சுற்றமும் பரவுதும்*
*†ஏம வைகல் பெறுகயா மெனவே.*

கடவுள் வாழ்த்து
[1] நல்லழிசியார் பாட்டு.
நல்லச்சுதனார் இசை.
பண்ணோதிறம்.

‡ பிணிமுகத்தைஊர்ந்து செய்யப்பட்ட வெல்போரையுமுடைய தலைவ! மக்கண்மாட்டுப் பணிமொழியையொழிந்து நின்புகழையேத்தி ... ... ... யாமும் எம் சுற்றமும் வேண்டிக்கொள்ளாநின்றேம், பிறவித் துன்பம் சாராத வைகலைப் பெறுகவென்று. (17)

*"பயமலை யேத்தி யகவினம் பாடுவாநாம்" (கலி. 40); "தேமுயர் சிமையக் குன்றம் பாடும்" (அகநா. 208); "நின்னுநின் மலையும் பாட" (புறநா. 143); "தாங்கரு மரபிற் றன்னுந் தந்தை, வான்பொரு நெடுவரை வளனும் பாடி' சிறுபாண். 127-8.

† "சேவலங் கொடியோன் காப்ப, ஏம வைக லெய்தின்றாலுலகே" குறுந். கடவுள்.

‡ பிணிமுகம் - முருகக்கடவுளுக்கு உரிய யானை; பரி. 5 : 2; "ஊர்ந்ததை...வேழம்" (பரி. 21 : 1-2); "ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி" (முருகு. 247); "கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந்தாங்கு" (பதிற்.11); மிடல்கெழு வேலவன் களிற்றின் மீது", "அடர்ந்திடு களிற்று வாகனனாய் இலிங்க. 70: 9, 80:7.

பி-ம். [1] நல்லமுசியார்.

# பதினெட்டாம் பாடல்

## செவ்வேள்

போரெதிர்ந் தேற்றார் மதுகை மதந்தபக்
காரெதிர்ந் தேற்ற [1] கமஞ்சூ லெழிலிபோல்
நீர்நிரந் தேற்ற நிலந்தாங் கழுவத்துச்
சூர்நிரந்து சுற்றிய [2] மாதபுத்த வேலோய்நின்
சீர்நிரந் தேந்திய குன்றொடு [3] நேர்நிரந்
தேறுமா [4] றேற்குமிக் குன்று.
ஒள்ளொளி †மணிப்பொறி யான்மஞ்ஞை நோக்கித்தன்

---

## (பதினெட்டாம் பாடலுரை)

1-6. தம்முட்கூடிப் போரையேற்ற அவுணரது வலியானுண்டாகிய பெருமிதம் கெட, விசும்பின்கட்பரந்து கார்காலத்தையெதிர்ந்த நிறைந்த சூலையுடைய மேகம்போலிருண்டு நீரைப்பரந்தேற்ற நிலத்தால் தாங்கப்படும் கடற்பரப்பினுட் பரந்துசுற்றிய சூர்மாவைத் தபுத்தோய்! நின்னைப்பயந்த புகழைத் தான் அகன்று ஏந்திய ‡ இமயத்தொடு நேர் நின்று ஏறுமாறாதலை யேற்கும், இப்பரங்குன்று.

மதந்தப மாதபுத்தோயென இயையும்.

6. § ஏறுமாறென்பது, பகைத்தற்கு ஓருலகவழக்கு.

நீ விரும்புதலால் இப்பரங்குன்று நின்னைப்பயந்த இமயம்போலப் புகழ்பெற்றது என்றவாறு.

இனி முருகவேளைப் படர்க்கையாக்கி இம்மலைச்சிறப்புக் கூறுகின்றார்:-

7-13. ஒள்ளொளிமணிபோலும் பொறியினையுடைய ‖ ஆலுமயிலை

---

* இப்பாடலின் முதல்நான்கடிகளும், "அணங்குடை யவுண ரேமம் புணர்க்கும், சூருடை முழுமுத றடிந்த பேரிசைக், கடுஞ்சின விறல் வேள்" (பதிற். 11) என்பதும், "அவுணர் நல்வல மடங்கக் கவிழிணர் மாமுத றடிந்த...வேற்சேய்" (முருகு.59-61) என்பதும், 'அவுணரெல்லாரும் தம்முடனே எதிர்ந்தார்வலியிலே பாதி தங்கள் வலியிலே கூடும் படி மந்திரங்கொண்டிருந்து சாதித்ததொரு மாவை வெட்டின சேய்' என்னும் அதன் விசேடவுரையும் ஒப்பிட்டு ஆராய்தற்பாலன.

† "மணிப்பொறிக் குடுமிப், பீலி மஞ்ஞை யாலும்" நற். 357.

‡ "பரங்குன் றிமயக் குன்ற நிகர்க்கும்" பரி. 8 : 11.

§ "ஏறுமா றாக விருப்பளே யாமாயின்" தனிப்பாடல்.

‖ "ஆலுமிம் மஞ்ஞை" சீவக. 236.

பி-ம். [1] கயஞ்சூழெழிலி. [2] மாதபுத்தோய். [3] நீர் நிரந். [4] றேற்றருங்குன்று.

உள்ளத்து நினைப்பானைக் கண்டன டிருநுதலும்
உள்ளிய துணர்ந்தேனஃ துரையினி நீயெம்மை
எள்ளுதன் மறைத்தலோம் பென்பாளைப் பெயர்த்தவன்
காதலாய் நின்னியல் களவெண்ணிக் களிமகிழ்
பேதுற்ற விதனைக்கண் டியானோக்க நீயெம்மை
[1] ஏதிலா நோக்குதி யென்றாங் குணர்ப்பித்தல்
ஆய்தேரான் குன்ற வியல்பு.
ஐவளம் பூத்த வணிதிகழ் குன்றின்மேல்
மைவளம் பூத்த மலரேர் மழைக்கண்ணார்
கைவளம் பூத்த வடுவொடு காணாய்நீ
மொய் * வளம் பூத்த முயக்கம்யாங் கைப்படுத்தேம்
மெய்வளம் பூத்த [2] விழைதகு பொன்னணி
நைவளம் பூத்த நரம்பியைசீர்ப் பொய்வளம்
பூத்தன பாணாநின் பாட்டு.

நோக்கி, அதனழகையும் களிப்பினையும் தன் உள்ளத்தாற் குறிக்கொள்ளும் கானவனைத் திருநுதல்கண்டு 'நீ நினைத்ததறிந்தேன்; இனி, அதனை எமக்கு உரை; எம்மை நோக்காது இகழலை மறைத்தலொழி' என்று ஊடுவாளை அவன் அதனைமாற்றி, 'யாம் செய்யுங்காதலையுடையாய்! தன்னாற் களவுகொள்ள அரிதாய நின்சாயலைக் களிமகிழாற் களவுகொள்ள எண்ணி அதுதான் பெறாது வருத்தமுற்ற இதனைக் கண்டு யான் அவ்வருமையை நினைக்க, நீ எம்மை இகழ்ந்தேமாகக் கருதாநின்றாய்' என்று அவ்வூடலை அப்பொழுதே உணர்ப்பித்தல்.

15-21. மெய் அழகுபூத்தற்கு ஏதுவாகிய விழைதகு பொன்னணி யினையுடைய பாணா, ஐந்துவளமும் பொலிந்த பரங்குன்றின்மேல் வாழும் மழைக்கண்ணாரது இறுகன்மிகுதியையுடைய முயக்கத்தை அவருகிர் செய்தவடுவால் யாம் தெளியவறிந் ... ... ... ... ... ...நட்டபாடை யென்னும் பண்ணைத்தருகின்ற யாழ்நரம்பிற்கு இயைந்த நின் பண்டைப் பாட்டு (?) நின்னையல்லது பரத்தைமையானென்னும் இயலொடு கூடுதலால் நின் பொய்ம்மிகுதியையுணர்த்திற்று.

மலைவளம் ஐந்தாவன : † "அரக்கிறலி செந்தே னணிமயிலின் பீலி, திருத்தகு நாவியோ டைந்து" என்பதனாலறிக.

* வளம் - மிகுதி; "வினைவள நீறெழ" திருச்சிற். 118.

† இச்செய்யுள், "அரக்குலண்டு" என்ற பாடபேதத்துடன், காடுபடுதிரவியத்திற்கு மேற்கோளாக வேறுரைகளில் வழங்குகின்றது.

பி-ம். 1 ஏதிலானோக்குதி. 2 விழைதரு மெய்யணி.

*தண்டளிர் தருப்பபடுத் தெடுத்துரைஇ*
*மங்குன் மழைமுழங்கிய விறல்வரையாற்*
*கண்பொருபு சுடர்ந்தடர்ந்திடந்*
*திருள்போழுங் கொடிமின்னால்*
*வெண்சுடர் வேல்வேள் விரைமயின்மேன் ஞாயிறுநின்*
*ஒண்சுட ரோடைக் களிறேய்க்கு நின்குன்றத்*
**தெழுதெழி லம்பலங் காமவே ளம்பின்*
*தொழில்வீற் றிருந்த நகர்.*
*ஆர்ததும்பு மயிலம்பு நிறைநாழி*
*சூர்ததும்பு வரைய காவாற்*
*கார்ததும்பு [1] நீர்ததும்புவன சுனை*
*[2] ஏர்ததும்புவன பூவணி செறிவு*

---

இது, பாணனுக்குத் தலைவன்பரத்தைமை கூறுகின்றாளொருதலைவி கூற்று.

இதனால் அத்தன்மைத்தாகிய இன்பத்தென்பது பெறப்பட்டது.

இனி அவனை எதிர்முகமாக்கி,-

23-9. வேலையுடைய வேளே! விரைந்த மயின்மேல் வரும் ஞாயிறே! மழை முழங்கிய சிகரமும் அதன்கட் கொடிமின்னும், நின் ஓடையையுடைய களிற்றையொக்கும்; நின்குன்றத்தின்கண் எழுதிய அழகையுடைய அம்பலம் அம்பினது ஏத்தொழில் நிலைபெற்ற காமவேள் † சிரமச் சாலையை யொக்கும்.

... ... ...த்துமின்னும் வழக்கு நோக்கி ... ... அம்பின்தொழிலென்றார்.

‡ மழைக்கு முழக்கம் கூறினமையான், யானைக்கும் முழக்கம் கொள்ளப்படும்.

30-33. சூர்நிறைந்த வரையவாகிய சோலைகளும் மேகத்தால் நிறைந்த நீர்துளும்புவனவாகிய சுனைகளும் பூவணிந்த செறிவால் அழகு துளும்புகின்றவை ஆர்மிக்க கூரிய அம்பு நிறைந்த அவன்தூணியை யொக்கும்.

---

*பரிபாடல், 19 : 48-57.

† சிரமச்சாலை-ஆயுதப்பயிற்சி செய்யுமிடம்; "சிரமநீதி சான்றவர்" (திருவால. 35:4) "சிரமநிலை காண்மின்" வி.பா. வாரணாவத. 54.

‡ பரி. 8 : 17-8.

பி-ம். [1] நீர்தயங்குவன. [2] ஏர்தயங்குவன, பேர்தயங்குவன.

*போர்தோற்றுக் கட்டுண்டார் கைபோல்வ [1] கார்தோற்றும்*
*காந்தள் செறிந்த கவின்.*
*கவின்முகை கட்டவிழ்ப்ப தும்பிகட் டியாழின்*
*புரிநெகிழ்ப்பார் போன்றன கை.*
*அச்சிரக் காலார்த் [2] தணிமழை கோலின்றே*
*வச்சிரத் தான்வான வில்லு.*
*வில்லுச்சொரி பகழியின் மென்மலர் தாயின*
*வல்லுப்போர் வல்லாய் மலைமேன் மரம்*
*வட்டுருட்டு [3] வல்லாய் மலைய நெட்டுருட்டுச்*
*சீர்ததும்பு மரவ முடன்சிறந்து*
*போர்ததும்பு மரவம் போலக்*
*கருவி யார்ப்பக் கருவிநின்றன குன்றம்*
*அருவி யார்ப்பமுத் தணிந்தன வரை*

---

34-5. கார் தோன்றுவிக்கும் காந்தட்குலைகள் நெருங்கிய அழகாற் போர்தோற்றுக் கட்டுண்டார் கையையொக்கும்.

36-7. தும்பி கட்டவிழ்ப்பனவாகிய கவினையுடைய காந்தண் முகைகள் கட்டுதலையுடைய யாழ்நரம்பினது புரியை நெகிழ்ப்பார்கையை ஒத்தன.

உவமை, மலராது குவியாது இடையதாகிய நிலைமைபற்றி நின்றது.

38-9. அழகியமேகம் முன்பனிக்காலத்தின்கண் ஆர்த்து இந்திரனது வானவில்லை வளைத்தது.

ஆர்ததும்பும் (30) என்பது முதலாய இந்நான்குறுப்பிற்கும் குன்றத்தென்பது அதிகாரத்தான் வருவிக்க.

40-41. சூதுப்போர்வல்ல நினது மலைமேன்மரங்கள் அவ்வில்லுச் சொரியுங் கணைகளுளவாயின் அவற்றையொக்க மெல்லிய மலரைப் பரப்பின.

42-5. வட்டுருட்டுதல்வல்ல நின் மலைக்கட்குன்றத்துப் போரின் கண்மிகும் அரவம்போலத் திரளாகிய தாளமொலிக்கும் ஒலியொடு சிறந்து இயங்களார்ப்ப மேகத்தொகுதியும் அவ்வார்ப்பொடு நின்றன.

ஈண்டுக் குன்றமென்றது, முருகவேள் கோட்டத்தையும் அதனைச் சூழ்ந்த இடத்தையும்.

46. மலைக்கட் சிகரங்கள் அருவி * ஆர்த்தலால் முத்தணிந்தாலொத்தன.

---

* ஆர்த்தலால் - ஒலித்து இழிதலால்; "அருவி யார்க்கும்" (புறநா. 128) என்பதன் உரையைப் பார்க்க.

பி-ம். 1 கார்தோற்றற் காந்தளஞ் செறிந்த. 2 தணிமணி மழை. 3 வல்லாயமலை நெருட்டுருட்டுக.

*குருவி யார்ப்பக் குரல் குவிந்தன தினை*
*எருவை கோப்ப வெழிலணி திருவில்*
*வானி *லணித்த வரியூதும் பன்மலராற்*
*கூ னி வளைத்த சுனை.*
*புரியுறு நரம்பு மியலும் புணர்ந்து*
*சுருதியும் பூவுஞ் சுடருங் கூடி*
*எரியுரு ககிலோ டாரமுங் கமழும்*
*செருவேற் றானைச் [1] செல்வநின் னடியுறை*
*† உரிதினி னுறைபதிச் சேர்ந்தாங்குப்*
*பிரியா திருக்கவெஞ் சுற்றமோ டுடனே.*

கடவுள் வாழ்த்து
குன்றம்பூதனார் பாட்டு.
நல்லச்சுதனார் இசை.
பண் காந்தாரம்.

---

47. தினைகள், குருவியார்க்குமாறு கதிர்கள் விளைந்தன.

48-50. சுனைகள், கரையினின்றும் சாய்ந்த வேழத்தை முட்டுவன பல நிறத்துமலராற் கூனற்பட்டு எழிலணிந்த ‡ திருவில்லை வளைத்த வானையொப்பவாகி வண்டூதும் அழகுடையவாயின.

இவ்வளவும் மலைச்சிறப்புக்கூறி மேல் வாழ்த்திமுடிக்கின்றார்:-

51-6. செருவேற்றானைச் செல்வ! நின்பூசைக்கட் புரிதலுற்ற நரம்பினது ஒலியும் புலவர்பாடிய இயற்பாட்டுக்களும் பொருந்தி வேதவொலியும் உபசாரமாகிய பூவும் தீபமுங்கூடி எரியின்கண் உருகுமகிலும் சந்தனமும் தூபமாய்க் கமழாநிற்கும் நின் அடியின்கண்உறைதலை எமக்கு உரித்தாக உறையும்பதியைச் சேர்ந்தாற்போல எம் சுற்றத்தோடு கூடியாம் பிரியாதிருப்பேமாக. (18)

---

* அணித்த - அழகு செய்த.

† "உரிதமர்துறக்கம்" (பரி. 13:13); "உரிதி னொருதலை யெய்தலும்" (கலி. 62); "அரிதுற் றனையாற் பெரும வுரிதினிற், கொண்டாங்குப் பெயர்தல்" அகநா. 10:7-8.

‡ திருவில் - இந்திரவில் ; சிலப். 15:156 ; மணி. 6:10.

பி-ம். [1] செல்வனின்.

# பத்தொன்பதாம் பாடல்

## செவ்வேள்

*நிலவரை யழுவத்தான் வானுறை புகறந்து
புலவரை [1] யறியாத புகழ்பூத்த † கடம்பமர்ந்
தருமுனி மரபி ‡ னான்றவர் நுகர்ச்சிமன்
இருநிலத் தோரு மியைகென வீத்தநின்
தண்பரங் குன்றத் தியலணி நின்மருங்கு
சாறுகொ டுறக்கத் தவளொடு
மாறுகொள் வதுபோலு மயிற்கொடி வதுவை
புலத்தினும் போரினும் போர்தோலாக் கூடற்
கலப்போ டியைந்த விரவுத்தீ ரெல்லை
§ அறம்பெரி தாற்றி யதன்பயன் கொண்மார்
|| சிறந்தோ ருலகம் படருநர் போல
உரிமாண் புனைகல மொண்டுகி றாங்கிப்
புரிமாண் புரவியர் போக்கமை தேரர்

---

((பத்தொன்பதாம் பாடலுரை)

1–7. வானின்கண் உறைதற்கு ஏதுவாகிய விருப்பத்தை நீ நில வெல்லையிடையுங்கொண்டு அறிவெல்லையால் அறியப்படாத புகழையுடைய கடம்பினை மேவி, பெறுதற்கரிய இறைமையானமர்ந்த தேவரெய்தும் நுகர்ச்சியை... ... மக்களும் எய்துகவெனத் தந்த நின்னுடைய பரங்குன்றத்து இயல்கின்ற அலங்காரத்தையுடைய மயில்போலும் வள்ளியது வதுவை துறக்கத்துத் தெய்வயானையது சாறு... ...கொள்வது போலும்.

அலங்காரத்தையுடைய (5) வதுவை (7) என இயையும்.

8–18. அறிவினும் வீரத்தினும் பிறரைப் போர்வெல்லுங் கூடற்கண் மகளிரும் மைந்தரும் புணர்ச்சியொடுவந்த இரவு நீங்கிய வைகறைக் கண் இவ்வுலகத்து அறத்தைப் பெரிதாகச் செய்து அதன் பயன் நுகர வேண்டித் தேவருலகத்துச் செல்வாரைப்போலத் தமக்கேற்ற மாட்சிமை

---

* "நிலவரை யிறந்த குண்டுகண் ணகழி" புறநா. 21.

† "கடம்பம ரணிநிலை" 104-ஆம் அடி.

‡ ஆன்றவர் - தேவர் ; "அவியுணவி னான்றாரோடு" குறள், 413.

§ "புண்ணியம் புரிந்தோர் புகுவது துறக்கம்" கம்ப. நகர. 5.

|| சிறந்தோர் - தேவர் ; பரி. 14 : 26.

பி-ம். [1] யறியாது.

*தெரிமலர்த் தாரர் தெருவிருள் சீப்பநின்*
*குன்றொடு கூட லிடையெல்லா மொன்றுபு*
*நேர்பூ நிறைபெய் திருநிலம் பூட்டிய*
*தார்போலு மாலைத் தலைநிறையாற் றண்மணல்*
*ஆர்வேலை யாத்திரைசெல் யாறு.*
**சுடரொடு சூழ்வரு தாரகை மேருப்*
*புடைவரு [1] சூழல் புலமாண் வழுதி*
*மடமயி லோரு மனையவ ரோடும்*
*கடனறி காரியக் கண்ணவ ரோடுநின்*
*†சூருறை குன்றிற் றடவரை யேறிமேற்*

யுடைய புனைகலங்களையும் நல்லதுகில்களையும் அணிந்து விருப்பமாண்ட புரவியராய் ஓட்டமமைந்த தேரராய்த் தெரிமலர்த்தாரராய் விளக்கம் தெருவின்கண் இருளை அகற்றப் போந்து நின்குன்றிற்கும் கூடற்கும் இடையெல்லாம் நெருங்கி, யாத்திரை செல்கின்ற தண்மணலார்ந்த கானல்போலும் வழி, அவர் மாலையையுடைய தலைகள் இடைவெளியற நிறைதலால் ஒத்த பூக்களை நிறையவைத்துக் கட்டி இருநிலத்திற்கு இட்ட மாலை போலும்.

முதற்கண் போர் என்பதூஉம் கூடலென்பதூஉம் (8) ஆகுபெயர்.

'சீப்ப' (14) என்னும் எச்சத்திற்கு முடிபாகிய 'போந்து' என்னுஞ் சொல் வருவிக்கப்பட்டது.

தாங்கிப் (12) புரவியராய்த் தேரராய்த் (13) தாரராய் (14) வைகறைக்கட் (9) போந்து நெருங்கிப் (15) படருநர்போலச் (11) செல்கின்ற வழி (18) தார்போலும் (17) என்க.

19-29. படுமணியானை நெடியாய் ! அறிவுதிருந்திய வழுதி, மடமயிலனைய மகளிரோடும் காரியக்கடனறிந்த தன் கண்ணாகிய அமைச்சரோடுங் கூடி நாடும் நகரும் தன்னையடைய வந்து நின்குன்றில் தடவரை மேலேறி நீமேவிய கடிநகரைப் ‡ பாடுண்டாக வலந்திரியும் பண்பினாற் சூழ்தலை உவமை சொல்லுங்கால் மதியுடனே... ... ... மேருவின் பக்கத்துச் சூழ்வருதலையனைத்து. 21. ஒருமென்பது அசை.

22 § "ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டும், தெற்றென்க மன்னவன் கண்" என்பதனாற் கண்ணவரென்றார்.

* சுடர் - சந்திரன் ; புறநா. 397.

† "சூர்புக லடுக்கம்" மலைபடு. 239.

‡ பாடு - பெருமை. § திருக்குறள், 581.

பி-ம். [1] சூழிற்.

பாடு வலந்திரி பண்பிற் பழமதிச்
சூடி யசையுஞ் சுவன்மிசைத் தானையிற்
பாடிய நாவிற் பரந்த வுவகையின்
நாடு நகரு மடைய வடைந்தனைத்தே
படுமணி யானை *நெடியாய்நீ மேய
கடிநகர் சூழ்நுவலுங் கால்.
தும்பி தொடர்கதுப்ப தும்பி தொடராட்டி
வம்பணி பூங்கயிற்று வாங்கி மரனசைப்பார்
வண்டார்ப் புரவி வழிநீங்க வாங்குவார்
திண்டேர் வழியிற் செலநிறுப்பார் கண்டக்
கரும்பு † கவழ மடுப்பார் நிரந்து
பரிநிமிர் தானையான் பாசறை நீர்த்தே
குருகெறி வேலோய்நின் குன்றக்கீழ் நின்ற
இடைநிலம் யாமேத்து மாறு.

---

24-7. பழைய வரிசையாற் சூடிச் சுவன்மிசையசையும் பரிவட்டத்தினும் ஏத்தியநாவினும் பரந்த உவகையினும் நாடும் நகரும் அடையவெனக் கூட்டுக.

3-37. மதத்தால் தும்பிகள் தொடரும் கபோலத்தையுடைய யானைகளை வழிநின்று வாங்கிக் காலிற்றொடரையாட்டிக் கச்சணிந்த [1] புரசைக் கயிற்றால் மரங்களிற் கட்டுவார், அவற்றிற்குக் கண்டமாக முறித்த கரும்பை மடுப்பார், தார்ப்புரவிகளை வழியினீங்க வாங்குவார், திண்டேர்களை வழியினின்றுஞ்செல்ல நிறுத்துவாராக, அவை பரந்து, நின்குன்றத்தின் கீழ்நின்ற இடைநிலம் வழுதியின்பாசறை நீர்மையினை யுடைத்து.

அவை கூடலினின்றும் போந்து குன்றின்மேல் ஏறாவாய் இடையே நிற்றலின் இடைநிலம் ... ... ... ... ... ... ...பு.

36. குருகு : ஆகுபெயர்.

37. யாம் அவ்விடைநிலத்தை உயர்த்துக் கூறுமாறு இது.

என்றது உவமையால் உயர்க்குங்கால் அதுவும் அவன் பாசறையல்லது பிறிதில்லையென்னும் நினைவிற்று.

'இது' என்னுஞ்சொல் வருவிக்கப்பட்டது.

இனி முருகவேளைப் படர்க்கையாக்கி மேல் வழுதியுடன் ஏறியோரது

---

*"நெடியாய்நின் குன்றின் மிசை" என்பர் பின்னும்; அடி. 84.

† கவழம் - கவளம்: "கவழக் களிப்பியன்மால் யானை" - எதுகை - திணைமா. 42.

பி-ம் [1] புரிசை.

குரங்கருந்து பண்ணியங் கொடுப்போரும்
கரும்பு கருமுகக் கணக்களிப் போரும்
தெய்வப் பிரமஞ் செய்கு வோரும்
கைவைத் [1] திமிர்புகுழல் காண்கு வோரு
மியாழி னிளிகுரல் சமங்கொள் வோரும்
வேள்வியி னழகியல் விளம்பு வோரும்
கூர நாண்குரல் கொம்மென வொலிப்ப
[2]ஊழுற முரசி னொலிசெய் வோரும்
என்றூ ழுறவரு மிருசுடர் நேமி
ஒன்றிய சுடர்நிலை யுள்படு வோரும்
இரதி காம னிவளிவ னெனாஅ

வினோதங் கூறுவாராய் மலைச்சிறப்புக் கூறுகின்றார்:-

38. குரங்கருந்தும் பண்டங்களை அவற்றிற்குக் கொடுப்பாரும்.

39. கருமுகக்கணம் - முசுத்திரள்.

40. தெய்வத்தன்மையையுடைய பிரமவீணையை எழுப்புவோரும்.

41. கைவைத்து ஊதிக் குழலின் இசையை அளப்போரும்.

42. யாழின்கண் *இளிவாய்ப்பாலையையும் குரல்வாய்ப்பாலையையும் வலியவும் மெலியவுமாகத் தாக்காது சமனாகத்தாக்கி அதனின்பத்தைக் கொள்வோரும்.

43. வேள்வி - பூசை.

44-5. யாழினது நாண்குரல் கொம்மென ஒலித்த அளவிலே அத்தாளத்திற்கு ஏற்ப முரசினொலியை எழுப்புவோரும்.

46-7. நாண்மீன்களையும் தாரகைகளையுமுடைய † சுடர்ச்சக்கரத்தைப் பொருந்திய ஆதித்தன் முதலாகவரும் கோட்களது நிலைமையை எழுதியவாற்றான் அறிவோரும்.

48. இவள் இரதி, இவன் காமனென்று.

* "குரல்வா யிளிவாய்க் கேட்டனள்" (சிலப். 8 : 35) என்பதும் அதனுரையும் ஈண்டு ஆராய்தற்பாலன.

† சுடர்ச்சக்கரம் - துருவசக்கரம் ; "உருவமுத் துடுவா வம்முத் துடுத்தபல் காசு கோளா, மருவவக் காசு சூழ்ந்த மாமணி கதிராய்க் கங்குல், வெருவவிட் டிமைக்கு மார மேருவின் புறஞ்சூழ்ந் தாடும், துருவசக் கரம்போற் கொங்கை துயல்வர விளங்கச் சூட்டி" திருவிளை. திருமண. 161.

பி-ம். [1] திமிரிக்குழல். [2] ஊழுறு.

விரகியர் வினவ வினாவிறுப் போரும்
இந்திரன் பூசை யிவளக லிகையிவன்
சென்ற [1] கவுதமன் சினனுறக் கல்லுரு
ஒன்றிய படியிதென் றுரைசெய் வோரும்
இன்ன பலபல வெழுத்துநிலை மண்டபம்
துன்னுநர் சுட்டவுஞ் சுட்டறி வுறுத்தவும்
நேர்வரை விரியறை வியலிடத் திழைக்கச்
சோபன நிலையது துணிபரங் குன்றத்து
மாஅன்மருகன் மாட மருங்கு.
பிறந்த தமரிற் பெயர்ந்தொரு பேதை
[2] பிறங்க லிடையிடைப் புக்குப் பிறழ்ந்தியான்
வந்த நெறியு மறந்தேன் சிறந்தவர்
ஏஎ யோஒ வெனவிளி யேற்பிக்க

49. விரகியரென்றதனால், வினவுகின்ற மகளிர் பிரியாமைக் குறிப்பினராதலும் அவ்வினாவிற்கு இறைசொல்லுவார் கணவராதலும் பெற்றாம்.

50-52. இப்*பூசை இந்திரன்; அவ்விடத்திற் சென்ற கௌதம முனிவன்; இவன் † சினன் மிகுதலால் இவள் கல்லுருவெய்தியவாறு இதுவென்று ‡ கொண்டோற் பிழைத்த தண்டங் கூறுவாருமாய்.

53-7. 3 தேரப்படும் பரங்குன்றத்து மான்மருகனது மாடத்தின் பக்கம், சென்றவர் கையாற் சுட்டிக் கேட்கவும் கேட்டவற்றை அறிவிக்கவும் இத்தன்மைய பலபல § சித்திரம் நிற்றலையுடைய மண்டபங்களைச் செவ்விய மூங்கில்களையும் விரிந்த பாறைகளையுமுடைய அகன்ற இடத்துச் செய்தலாற் சோபனமான நிலைமையினையுடைத்து.

58-66. ஒரு பேதைப் பருவத்தாள் பிறத்தலானாகிய தன் தமரினீங்கிக் காண்டல் விருப்பினாற் பிறங்கின கற்களின் இடையிடைப்புக்குத் திகைத்து,

*பூசை - பூனை; "பூசையாய்ப் போக லுற்றான்" கம்ப. அகலிகை. 77.

† சினம் 'சினன்' என்றும் நூல்களில் வழங்கும் ; "சினனே காமங் கழிகண் ணோட்டம்" பதிற். 22.

‡ "கொண்டோற் பிழைத்த தண்ட மஞ்சி" மணி. 13:6.

§ சித்திரம் நிற்றலையுடைய மண்டபம் - சித்திரசாலை; "எழுதெழி லம்பலம்" (பரி. 18:28); "வித்தக வினைஞர் பத்தியிற் குயிற்றிய, சித்திர சாலை" பெருங்கதை, 3. 4: 14-5.

பி-ம். [1] கௌமதன். [2] பிறக்கல். [3] தொழப்படும்.

ஏஎ யோஒவென் றேலா வவ்விளி
அவ்விசை முழையேற் றழைப்ப வழைத்துழிச்
செல்குவ ளாங்குத் தமர்க்கா ணாமை
மீட்சியுங் கூஉக்கூஉ மேவு மடமைத்தே
வாழ்த்துவப்பான் குன்றின் வகை.
[1] நனிநுனி நயவரு சாய்ப்பி னாறிணர்ச்
சினைபோழ் பல்லவந் தீஞ்சுனை யுதிர்ப்ப
உதிர்த்த சுனையி னெடுத்த தலைய
அலர்முகிழுற வவைகிடப்பத்
தெரிமலர் [2] நனையுறுவ
* ஐந்தலை யவிர்பொறி [3] யரவ மூத்த
மைந்த [4] னருகொன்று மற்றிளம் பார்ப்பென
[5] வாங்கிள மகளிர் மருளப் பாங்கர்

சிறந்தவரேயெனவும் சிறந்தவரோவெனவும் அவரை விளியேற்பிக்க, ஆண்டை முழைகள் அவ்விளியை ஏலாவாய் அவ்விசைதன்னையே ஏற்றுத் தாமும் அழைப்ப அதனை அறியாது அவரும் தன்னை அழைக்கின்றாராகக் கருதி அவ்வழைத்தவிடத்துச் செல்கின்ற அவள் ஆண்டுத் தமரைக் காணாது மீளுமிடத்தும் கூவுதலைக் கூவுதலை மேவா நின்றாள்; அதனால் அன்பரது வாழ்த்தினையுவப்பானது குன்றின் இட வேறுபாடு சிறார்க்கு மடமை செய்தலை யுடைத்து.

இனி அவனை எதிர்முகமாக்கிக் கூறுகின்றார்:-

67-74. மிக நயக்கப்படும் நுனிசாய்ப்பினையுடைய சினையைப் போழ்ந்து புறப்பட்ட பல்லவங்களைத் தாம் விளையாட்டு வகையால் இனிய சுனைக்கண்ணே உதிர்ப்ப, அவை அவ்வுதிர்த்த சுனையின்கண் எடுத்த தலையவாய் அலரையும் முகையையும் உறக்கிடப்ப, அவற்றுள் அலரையுறக் கிடந்ததனை இது விரிதரும் ஐந்தலையினையும் அவிர்பொறியினையுமுடைய அரவென்றும் அதனருகு முதிர்ந்த

* ஐந்தலையரவு - ஐவாயரவம் ; "ஐவா யரவி னிடைப்பட்டு, நைவாரா" (கலி. 62) ; "ஐவாய நாகம்" (திணைமா. 13); "உடம்பா றிரண்டிற் குயிரொன்றென வொன்றியைவாய், விடம்பா யரவம் விழுங்குமிரை யொத்து" திருவிளை. பன்றிக் குட்டிகளை. 13.

பி-ம். [1] நளிதுனி. [2] களையுறழ. [3] யரவினது மூத்த. [4] னருகி லொன்று. [5] மைந்துறுமகளிர்.

*பசும்பிடி யிளமுகிழ் நெகிழ்ந்தவா யாம்பல்*
** கைபோற் பூத்த கமழ்குலைக் காந்தள்*
*எருவை நறுந்தோ † டெரியிணர் வேங்கை*
*உருவமிகு தோன்றி யூழிணர் நறவம்*
*பருவமில் கோங்கம் பகைமல ரிலவம்*
*நிணந்தவை கோத்தவை நெய்தவை தூக்க*
*மணந்தவை போல [1] வரைமலை யெல்லாம்*
*[2] நிறைந்து முறழ்ந்து நிமிர்ந்துந் தொடர்ந்தும்*
*விடியல் வியல்வானம் போலப் பொலியும்*
*‡ நெடியாய்நின் குன்றின் மிசை.*

முகிழையுறக்கிடந்ததனை அருகிலொன்று அதன் மூத்தமைந்தனென்றும் இளமுகிழையுறக் கிடந்ததனை மற்றையதன் இளம்பார்ப்பென்றும் இளைய மகளிர் மருளா நிற்க.

சாய்ப்பிற் (67) பல்லவம் (68) என்க.

74. பாங்கர் - அதனருகே.

75. § பசும்பிடி இளமுகிழ் - பச்சிலையது இளைய கொழுந்து. மகளிர் வாய்போல் மலர்ந்த ஆம்பல்.

77. எருவையது நறுந்தோட்டையுடைய பூ.

|| எருவை யென்பது, ¶"எருவை செருவிளை மணிப்பூங் கருவிளை" எனக் கபிலர் பாடிய பெருங்குறிஞ்சியினும் வந்தது.

78. உருவம் - நிறம். ஊழிணர் - அலர்ந்த இணர்.

79. காலங்குறியாது பூக்கும் கோங்கு ; அக்கோங்கம்போதொடு நிறத்தாற் பகைத்த மலரையுடைய இலவம்.

80-84. இவையெல்லாம் தெற்றினமாலைகள்போல மலர்நிறைந்தும் கோத்தமாலைகள் போல நிறம் மாறுபட்டும் தொடுத்த மாலைகள்

*"கோடற் குவிமுகை யங்கை யவிழ" (முல்லை. 95); "கைவிரிந்தன காந்தளும்" சூளா. நாட்டு. 11.

† "எரிமரு டோன்றல வொண்பூ வேங்கை" அகநா. 218.

‡ குமரவேளை இங்ஙனமே நெடியனெனவும் நெடுவேளெனவும் வழங்கல் மரபு ; "சேவலங் கொடிய னெடியன்" (முருகு. 210-11); "நெடுவேட்பேண", "வெறிகமழ் நெடுவேள்", "நெடுவேண் மார்பிலாரம் போலச், செவ்வாய் வானந் தீண்டிமீ னருந்து, பைங்காற் கொக்கு", "காடுகெழு நெடுவேள்" (அகநா. 22, 98, 120, 382); "கடம்பமர் நெடுவேள்" (பெரும்பாண். 75); "நெடுவேள் குன்ற மடிவைத் தேறி" சிலப். 23 : 190.

§ குறிஞ்சிப்பாட்டு, 70. || எருவை-பஞ்சாய்க்கோரை, கொறுக்கைச்சி.

¶ குறிஞ்சிப்பாட்டு, 68. பி-ம் [1]வரைவரை. [2]நிரைந்து.

[1] நினயானைச் சென்னி நிறங்குங்கு மத்தாற்
புனையாப்பூ [2] நீரூட்டிப் புனைகவரி சார்த்தாப்
பொற்பவழப் பூங்காம்பிற் பொற்குடை யேற்றி
மலிவுடை யுள்ளத்தான் வந்துசெய் வேள்வியுட்
பன்மண மன்னு பின்னிருங் கூந்தலர்
*தன்னிமை கனிந்த காலத் தார்நின்
கொடியேற்று வாரணங் கொள்கவழ மிச்சில்
மறுவற்ற மைந்தர்தோ ளெய்தார் மணந்தார்
முறுவற் றலையளி யெய்தார்நின் குன்றம்
குறுகிச் சிறப்புணாக் கால்.
குறப்பிணாக் கொடியைக் கூடியோய் வாழ்த்துச்
சிறப்புணாக் [3] கேட்டி செவி.

---

போல இடையிட்டும் தூக்கிக்கட்டின மாலைகள் போல நெருங்கியும் பூத்தலால், [4] மயங்கு அலர், நின்குன்றின் மிசை † வரைமலையெங்கும் விடியற்காலத்துப் பலநிறத்து மேகமார்ந்த வானம்போலப் பொலியும்.

பூத்தலாலென்பது வருவிக்கப்பட்டது.

மலர் பொலியுமென்க.

85-94. நின்குன்றத்தைக் குறுகி நின்கொடியை ஏற்றப்படும் நின் யானையின் கும்பத்தின்நிறத்தைக் குங்குமத்தால் அலங்கரித்துப் பூவொடு கூடிய நீரை இனிதாக ஊட்டிச் செவிக்கவரிகளைச் சார்த்திப் பொலிந்த பவளத்தாற் செய்த நல்லகாம்பினையுடைய பொற்குடையை மேலெடுத்து உவகையுள்ளத்தான் வந்து செய்யும் பூசைக்கண் அவ்வியானை கவழங் கொள் மிச்சிலைச் சிறப்போடு உண்ணாதொழியிற் பலமணமும் நிலை பெற்ற பின்னிருங்கூந்தலையுடைய மகளிர் தம் காதலர் முறுவலொடு கூடிய தலையளியை எய்தார். கன்னிமைகனிந்த காலத்தார் குறைவற்றமைந்த மைந்தர் தோளைக் கூடார்.

இவ்வாறு மலைச்சிறப்புக் கூறி, மேல் வாழ்த்துவான் முகம்புகுகின்றார்.:-

95-6. குறப்பெண்ணாகிய வள்ளியை மணந்தோய்! எம் வாழ்த்தினை நின்செவிக்குச் சிறப்புணாவாகக் கேட்டல்வேண்டும்.

அன்புடைமையின்... ... ...னம் எய்தினை யன்றே? அதுபோல அருளுடைமையான் ஒவ்வாவாழ்த்தும் கேட்டல் வேண்டும் என்றவாறு.

---

*"கன்னிமை கனிந்து முற்றி" சீவக.1260.

† வரைமலை - மலைக்குவடு.

பி-ம். [1] நினையானை. [2] நீரினிதூட்டி. [3] கொட்டிசெவி. [4] மயக்கலா.

*உடையு மொலியலுஞ் செய்யைமற் றாங்கே
படையும் பவழக் கொடிநிறங் கொள்ளும்
உருவு முருவத்தீ யொத்தி முகனும்
விரிகதிர் முற்றா விரிசுட ரொத்தி
எவ்வத் தொவ்வா மாமுத றடிந்து
தெவ்வுக் குன்றத்துத் திருந்துவே லழுத்தி
அவ்வரை யுடைத்தோய்நீ யிவ்வரை மருங்கிற்
†கடம்பம ரணிநிலை பகர்ந்தேம்
உடங்கம ராயமொ டேத்தினந் தொழுதே.

கடவுள் வாழ்த்து
நப்பண்ணனார் பாட்டு.
மருத்துவன் நல்லச்சுதனார் இசை.
பண் காந்தாரம்.

---

97. ஒலியல் - கடம்பமாலை.
செய்யையென உடையதுதொழில் உடையான்மேல் நின்றது.
98. அவையொழிய நின்வேலும் அவ்வாறே பவழக்கொடி நிறத்தைக் கொள்ளும்.
குருதி தோய்ந்துழியல்லது அந்நிறம் இயல்பன்மையிற் கொள்ளுமென்றார்.
99. நிறனும் எரிகின்ற தீயை ஒப்பை.
பண்பின்றொழில் பொருண்மேல் நின்றது.
99-100. முகனும் இளைய ஆதித்தமண்டலத்தை ஒப்பை. சினைவினை முதன்மேல் நின்றது.
101. உலகிற்கு எவ்வஞ்செய்தலான் நீதியிற்றப்பிய சூர்மா.
102. பகைமை பொருந்திய குருகுபெயர்க்குன்றத்து.
103.-5. உடன் மேவிய சுற்றத்தோடு ஏத்திப் பரங்குன்றத்துக் கடம்பின்கண் அமர்ந்த நல்லநிலையை வாழ்த்தினேம்; எம் வாழ்த்து இது.
'எம் வாழ்த்து இது' என்பது சொல்லெச்சமாயிற்று. (19)

---

*"குன்றி யேய்க்கு முடுக்கை...சேவலங் கொடியோன்" (குறுந். கடவுள்.); "செய்யன் சிவந்த வாடையன்" முருகு.206.

† திருப்பரங்குன்றத்தில் முருகக்கடவுள் கடம்பமரத்தினிடத்தே எழுந்தருளியிருந்தாரென்று இப்பாடல் 3 - ஆம் அடியாலும் இதனாலும் தெரிகின்றது ; இவ்வுண்மை, "கடம்பமர் மன்றற் றொங்கற் கந்தனைச் சிந்தை செய்வாம்" (திருவால. கடவுள்.18) என்பதனாலும், "கடம்பமர் நெடுவேள்" (பெரும்பாண். 75) என்பதனாலும் விளங்கும்.

# இருபதாம் பாடல்

## வையை

*கடல்குறை படுத்தநீர் கல்குறை படவெறிந்
துடலே றுருமின மார்ப்ப மலைமாலை
முற்றுபு முற்றுபு பெய்துசூன் முதிர்முகில்
பொருதிகல் புலிபோழ்ந்த பூநுத லெழிலியானைக்
குருதிக்கோட் டழிகறை தெளிபெறக் கழீஇயின்று
காலைக் கடல்படிந்து காய்கதிரோன் போயவழி
மாலை மலைமணந்து மண்டுயின்ற கங்குலான்
வானாற்று மழைதலைஇ மரனாற்று மலர்நாற்றம்
தேனாற்று மலர்நாற்றஞ் செறுவெயி [1] லுறுகால
கானாற்றுங் கார்நாற்றங் கொம்புதிர்த்த கனிநாற்றம்
தானாற்றங் கலந்துடன் றழீஇவந்து தரூஉம் வையை

---

## (இருபதாம் பாடலுரை)

1-5. சூல் முதிர்ந்தமுகில் மலையொழுங்கைச் சூழ்ந்து சூழ்ந்து அதன்கல் துணிபட எறிந்து உடலாநின்ற உருமேற்றினம் ஆர்ப்பப் பெய்து கடலைக் † குறைபடுத்த நீராலே தன்னொடு பொருது மாறுபடும் புலியைப் போழ்ந்த புகர்நுதல் யானையது குருதிக்கோட்டின் கணின்று இகப்பரிய கறையைத் தெளிவுபெறக் கழுவிற்று.

மழைத்துளிகளது விசைகூறுவார் கறைகழுவிற்றென்றார்.

6-11. காலைப் பொழுதின்கட் கடலைமுகந்து மாலைப்பொழுதின் கண் ‡வெய்யோன் போயதிசைக்கண் மலையைச்சேர்ந்து கங்குற்கண் மேகந்தரும் மழை பெய்தலான் வையை மரங்கள்தரும் மலர்நாற்றமும் தேன்தந்த மலர்நாற்றமும் செறுவெயிலையும் மிக்க காற்றையுமுடைய

---

* குறைத்தலென்பது முகத்தலென்னும் பொருளில் வருமென்பதற்கு இவ்வடிமேற்கோள் ; திருக்குறள், 17, பரிமேல்.

† குறைபடுத்தல் - முகத்தல்; இச்சொல்லுக்கு இப்பொருளே இங்குச் சிறந்ததென்பதை, "கொளக்குறை படாமையின் முந்நீ ரனையை" (பதிற்.90) என்பதும், "மழைகொளக் குறையாது புனல்புக மிகாது, கரைபொரு திரங்கு முந்நீர்" (மதுரை 424-5) என்பதும் வலியுறுத்தும்.

‡ பரிபாடல், 12 : 1-2.

பி-ம். 1 லுறுகாலைக்.

*தன்னாற்ற மீது தடம்பொழி றான்யாற்று*
*[1] வெந்நாற்று வேசனை நாற்றங் *குதுகுதுப்ப*
*ஊரூர் பறையொலி கொண்டன் றுயர்மதிலில்*
*[2] நீரூ ரரவத்தாற் றுயிலுணர் பெழீஇத்*
*திண்டேர்ப் புரவி வங்கம் பூட்டவும்*
*வங்கப் பாண்டியிற் றிண்டே ரூரவும்*
*வயமாப் [3] பண்ணுந மதமாப் பண்ணவும்*
*கயமாப் பேணிக் கலவா தூரவும்*

---

வாகிய காடுகள் தரும் † வெங்கார் நாற்றமும் மரக்கோடுகள் உதிர்த்த கனிகளது நாற்றமுமாகிய இந்நாற்றங்களை உடன்கலந்து தான்கொண்டு வந்து பிறர்க்குக் கொடாநின்றது.

12-9. கரையில் தடம்பொழில்தான் தன்நாற்றத்தின்மேலே யாற்றினது வெம்மையால் தோற்றுதலையுடைய வேசனை நாற்றத்தை ஆசைப்படாநிற்ப ஊர்தொறுமூர்தொறும் ‡ பறை ஒலித்தல்கொண்டது; அப்பொழுது, மதிலிற் § சுருங்கையில் நீரோடுகின்ற அரவத்தால் துயிலுணர்ந்தெழுந்து தேரேறுவார் திண்டேர்ப்புரவியைப் பள்ளியோட வையத்திற் பூட்டி அதன்கண் ஏறவும் வங்கமேறுவார் வங்கப் || பாண்டிகளைப்பூட்டித் தேரையூரவும் குதிரைகளைப் பண்ணும் கலனை முதலாயினவற்றால் யானைகளைப் பண்ணவும் சிலர் மறப்பால் யானைகளை அலங்காரமடையாது நடத்தவும்.

---

*குதுகுதுப்ப - ஆசைப்பட ; "தேவர்களுங் குதுகுதுப்ப" காஞ்சி. நகரேற்று. 145; பெரிய. பத்தராய்ப். 1.

† 'மாரி நீரைச் சுமந்து....வெங்கார் மண்ணிலே சொரிய நிமிர்ந்த ஆவிபோல நாறும் மேனி முதலியவற்றையுடைய இலக்கணை' (சீவக. 2503, ந.) என்பதனால், வெங்கார்நாற்றம் இன்னதென்பதை அறிந்து கொள்க.

‡ "துன்று மிரவிற் பறையறையுஞ் சும்மை கேட்டு" (திருவால. 30:5) ; "எங்கணும் பறையறைந் தழைத்து" திருவிளை. 61:3.

§ சுருங்கை - கரந்துறை; 'ஒழுகுநீர்புகுகை ஒருத்தருமறியாதபடி மறைத்துப்படுத்த வீதி வாய்த்தலை' (சிலப். 14 : 65) என்பர், அரும்பதவுரையாசிரியர்.

|| பாண்டி - எருது ; பாண்டிலெனவும் வழங்கும்.

பி-ம். [1] வெந்நாற்ற. [2] நீரூரவாற. [3] பண்ணுநர்.

*மகளிர் கோதை மைந்தர் புனையவும்
மைந்தர் தண்டார் மகளிர் பெய்யவும்
முந்துறல் விருப்பொடு முறைமறந் தணிந்தவர்
ஆடுவார் பொய்த லணிவண் டிமிர்மணற்
கோடே றெருத்தத் திரும்புன லிற்குறுகி
† மாட மறுகின் மருவி மறுகுறக்
கூடல் விழையுந் தகைத்துத் தகைவையை
‡ புகைவகை தைஇயினார் பூங்கோதை நல்லார்
தகைவகை தைஇயினார் தார்.
வகைவகை தைஇயினார் மாலை மிகமிகச்
§ சூட்டுங் கண்ணியு மோட்டு வலையமும்
இயலணி யணிநிற்ப வேறி யமர்பரப்பின்
அயலய லணிநோக்கி யாங்காங்கு வருபவர்
இடுவளை யாரமோ டீத்தா னுடனாகக்
கெடுவளை பூண்டவண் மேனியிற் கண்டு
நொந்தவண் மாற்றா ளிவளென நோக்கத்
தந்த கள்வன் சமழ்ப்பு முகங்காண்மின்

22-6. தாந்தாம் முற்படுதல் விருப்பினால் அணியுமுறைமையை மறந்து மாறியணிந்தவரெல்லாம் விளையாடும் பருவத்து மகளிருடைய சிற்றிலணிந்த வண்டொலிக்கும் மணற்கரையது உயர்ந்த எருத்தத்தை வந்து பொருந்தின பெரும்புனலைச் சென்று குறுகவும் ஏனை அணியாதவர் இல்லினின்றும் புறப்பட்டு மாடமறுகினைப் பொருந்திச் செல்லுதற்கு வருந்தாநிற்கவும் இவ்வாற்றாற் கூடலிலுள்ளார் விழையுந்தகைமையையுடைத்து.

27-36. பூங்கோதைகளைப் புகைத்தவகையாலணிந்தாரும் தாரைத் தகைந்தவகையாலணிந்தாரும் மாலைகளை வகைவகையாலணிந்தாரும் சூட்டும் கண்ணியும் வலையமுமாகிய இவற்றான் மிகமிக இயன்ற அணிகளை யுடைய திரளும் வந்தேறி அக் கரைப்பரப்பின்கண்ணே நிற்ப அயலார் அயலாரணிந்த அணிகளைப் பார்த்து அவ்வவ்விடங்களின் வருவார் தம் தலைவி பூணும் வளையையும் ஆரத்தையும் பரத்தைக்கு ஈத்ததலைவன் அத்

* பரி. 6: 46-51, உரை ; "மைந்தர் கண்ணி மகளிர் சூடவும், மகளிர் கோதை மைந்தர் மலையவும்" பட். 109-10.

† "மாட மதுரையுந் தருகுவன்" (புறநா. 32); "மாடமலி மறுகிற் கூடற் குடவயின்" (முருகு. 71); "மாடக் கூடல்" (திருமுகப்பாசுரம்); "மாட மறுகின் மழை" பு-வெ.234.

‡ பரிபாடல், 9 : 27-8.

§ "சூட்டொடு கண்ணி யன்றே" சீவக. 484.

*செருச்செய்த வாளி சீற்றத் தவையன்ன*
*நேரித ழுண்கணார் நிறைகா டாக*
*ஓடி யொளித்தொய்யப் போவா ணிலைகாண்மின்*
*எனவாங்கு*
*ஒய்யப்போ வாளை யுறழ்ந்தோளிவ் வாணுதல்*
*நெறிமண னேடினர் செல்லச் [1] சொல் லேற்று*
*செறிநிரைப்பெண் வல்லுறழ் பியாது தொடர்பென்ன*
*மறலினாண் மாற்றாண் மகள்.*
*வாய்வாளா நின்றாள்*
*செறிநகை சித்தந் திகைத்து.*
*ஆயத் தொருத்தி யவளை யமர்காம*
† *மாயப்பொய் கூட்டி [2] மயக்கும் விலைக்கணிகை*

---

தலைவியோடு உடனாயிருக்கக் கெட்ட வளையைப் பரத்தை கையின்கட்கண்டு அதற்கு நொந்து அவட்கு இவள் மாற்றாளென்று ஆயத்தார் தம்முட் கருதிப் பார்க்க அப்பார்வையைக்கண்டு அவற்றை அவட்குக் கொடுத்த அக்கள்வனது... ... ...மின்

37-9. சீற்றத்தவையாய்ச் செருச்செய்த வாளிகளையொத்த கண்ணாரதுதிரள் மறையுங்காடாக ஓடியொளித்து அவ்வாயம் அவற்றைக் காணாமல் தப்பப்போகின்ற அப்பரத்தையது நிலையைக் காண்மின்.

40. எனத் தம்முட் காட்டி. ஆங்கு - அவ்விடத்து.

41-7. வையை கடலைமடுத்தாற்போல மகளிர்திரளுக்குள்ளே புக்கு அங்ஙனம் தப்பப்போகின்ற பரத்தையைக்கண்டு இவ்வாணுதல் மாற்றாளென்று தெளிந்து நெறிந்தமணற்கண்ணே... ... ... ...ண மிக மாறுபட்டு அவரோடு சொல்லுதலையேற்றுப் பெண்சாதி நிரைந்த நிரைக் கண்ணே நீயிர் என்னைத் தொடர்தற்குக்காரணம் யாதெனச் சொல்லி எதிர்ந்தாள்; எதிர அத்தலைவி சித்தந் திகைத்து ஒன்றும் சொல்லாது நின்றாள்.

42.. தெய்ய : அசை.

அவள் அங்ஙனம் நிற்பப் பரத்தை... ... ... ...சொல்லுவாள்:-

48-54. விரும்பப்படுங் காமத்தை வஞ்சனையையுடைய பொய் யொடுங்கூட்டிக் கொள்வாரை மயக்கும் விலைத்தொழிலையுடைய கணிகாய்! நின் பெண்மையது பொதுமையால் ஒருவராற் பேணப்படுத

---

* பரிபாடல், 10 : 1-8.

† "மாயப் பொய்ம்மொழி சாயினை பயிற்றி" அகநா. 6.

பி-ம். [1] செல்லேற்றச். [2] மயக்கி.

*பெண்மைப் பொதுமைப் பிணையிலி யைம்புலத்தைத்*
*துற்றுவ துற்றுந் துணையிதழ் வாய்த்தொட்டி*
*முற்றா நறுநறா மொய்புன லட்டிக்*
*காரிகைநீ ரேர்வயற் காமக் களிநாஞ்சில்*
*மூரி தவிர முடுக்கு முதுசாடி*
*மடமத ருண்கண் கயிறாக வைத்துத்*
*தடமென்றோட் டொட்டுத் தகைத்து மடவிரலால்*
*இட்டார்க் கியாழார்த்தும் பாணியி லெம்மிழையைத்*
*தொட்டார்த்து மின்பத் துறைப்பொதுவி கெட்டதைப்*
*பொய்தன் மகளிர்கண் காண விகுத்தந்திவ்*
*வையைத் தொழுவத்துத் தந்து வடித்திடித்து*
*மத்திகை மாலையா மோதி யவைவத்துத்*
*தொடர்ந்தே மெருது தொழில்செய்யா தோட*
*விடுங்கடன் வேளாளர்க் கின்று படர்ந்தியாம்*

---

லில்லாதாய்! ஐம்புலத்தையும் நுகர்வனவாகிய காமுக * ஏனங்கள் நுகரு ... ... ... ...இதழ்வாயையுடைய † தொட்டி ! காரிகைநீர்மையையுடைய வனப்பாகிய வயலிலே நறாவாகிய புனலைவிட்டுக் காமமாகிய களிநாஞ்சிலான் எம்மெருதுதான் மூரிபோகாது உழும் பழைய சாலே!

54. பலகால் உழப்படுதலின் முதுசாடி யென்றார்; சாலென்னும் பெயருடைமையாற் சாடியெனப்பட்டது.

55-8. பொருளிட்டாரைப் போகாமற் றடுத்து ... .. ... ... ...க் கண்ணைக் கயிறாக்கொண்டு தோளாகிய தறியொடு பிணித்துக் ‡ காமம் மிகுதற்பொருட்டு அவர்க்கு யாழிசையை ஆர்த்துமளவில் அதனையே யன்றி எம்மிழையைப்பூண்டு வளையைத்தொட்டு நின் அழகையும் ஆர்த்தும் இன்பத்தில் துறைபோலப் பொதுவாயுள்ளாய்!

ஆர்த்தும் பொதுவியென்க.

58-63. முன்னே கெட்ட எம் எருத்தை யாம் தேடித் திரிந்து இவ்விளையாட்டுமகளிர் கண்காண வணக்கி இவ்வையையாகிய தொழுவத்துப் புகுதவிட்டுச் செவ்விதாக வடித்து உரப்பி மாலை மத்திகையாகப்

---

* ஏனங்கள் - பன்றிகள்.

† தொட்டி - பன்றிக்கு உணவிடும் பாத்திரம் ; பத்தர்.

‡ "வீணைக் கிழவன் விருந்தார்கதிச் சென்றவாறும்" வீணை வேந்துறையும்" (சீவக. 28, 2598) என்பவற்றின் உரைகளைப்பார்க்க.

*தன்மார்பந் தண்டந் தருமாரத் தாண்மார்பு*
*நின்மார்பு மோரொத்த நீர்மையகொ லென்னாமுன்*
*[1] தேடினா ளேசச் சிலமகளிர் மற்றதற்*
*கூடினார் வையை யகத்து.*
*சிந்திக்கத் தீரும் பிணியாட் செறேற்க*
*மைந்துற்றாய் வெஞ்சொன் மடமயிற் சாயலை*
*வந்திக்க வாரென [2] மனத்தக்க நோயிது*
*வேற்றாரை வேற்றார் தொழுத லிளிவரவு*
*போற்றாய்கா ணன்னை புரையோய் புரையின்று*
*மாற்றாளை மாற்றாள் வரவு.*
*அ... ... ... ... ... ... ... ... ... ...சொ னல்லவை நாணாமற்*
*றந்து முழவின் வருவாய் [3] நீ வாய்வாளா*
*எந்தையெனக் கீத்த விடுவளை யாரப்பூண்*

---

புடைத்து இவ்வழக்குரைக்கும் அவையத்திலே எம்மெருதாதல் யாரும் அறியத் தொடர்ந்தேம், தம் எருதை உழுதற்றொழில் செய்யாமல் ஓட விடும் முறைமை வேளாளர்க்கு இன்றாதலால்.

64-70. தனக்குரிய தலைவன்மார்பை நினக்குத் தண்டமாகத் தரும் ஆரத்தையுடையான் மார்பும் அதனைக் களவுகொண்டுபூண்ட நின் மார்பும் ஒரு தன்மையவாக ஒத்த நீர்மையவாய் விட்டனவோவென்று வைது சொல்லிய அளவிலே, அவர்களால் தேடப்பட்ட அப்பரத்தை என்று கொண்டு அத்தலைவியைச் சில வெய்யவாகச் சொல்ல, அதற்குச் சில முதுமகளிர் வையையகத்துவெறுத்தாராய், கற்புடைமையாற் சிந்தித்த அளவிலே பாவம் நீங்குந் தன்மையாளைச் செறாதொழிக; நீ வெஞ்சொற் சொல்லி அறியாமையுற்றாய்; அதுநீங்க இம்மடமயிற்சாயலை வந்திக்க *வாரென்று சொல்ல.

மேல் பரத்தை:-

70-73. இது மன்னத்தக்க நோயாயிருந்ததெனத் தன்னுள்ளே சொல்லி, மேல் அம்முதுமகளிருள் ஒருத்தியை நோக்கி, அன்னாய்! பகைவரைப் பகைவர் தொழுதல் இளிவரவு; அதனை நீ அறிந்திலைகாண்; பெரியோய்! அவ்வாறே மாற்றாளை மாற்றாள் வணங்குதலும் பெருமையின்று என,-

மேல் தலைவி:-

74-8. நல்லவையாகிய மெல்லிய இனிய சொற்களை நாணாமற் பல அவைக்கண்ணுஞ் சொல்லி ஆடுதற்கு முழவுடனே வருவாய் !

---

* வாரென்று - வாவென்று : "வார டாவுனக் கியாது தானர்தம் மகளடுக்குமோ" வி. பாரதம். வேத்திர. 12.

பி-ம். [1] தேடினார். [2] மனறக்க. [3] நீயவாய.

*வந்தவழி நின்பான் மாயக் களவன்றேற்*
*றந்தானைத் தந்தே தருக்கு.*
**மாலை யணிய விலைதந்தான் மாதர்நின்*
*கால சிலம்புங் கழற்றுவான் சால*
*அதிரலங் கண்ணிநீ யன்பனெற் கன்பன்*
*கதுவா யவன்கள்வன் கள்விநா னல்லேன்*
*எனவாங்கு*
[1] *வச்சிய மானே மறலினை மாற்றுமக்கு*
*நச்சினா ரீபவை நாடறிய நும்மவே*

---

நின் மேம்பாடு சொல்லவேண்டா; எந்தை எனக்கிட்ட இடுவளையும் ஆரமுமாகிய பூண் நின்பால் வந்தவழி மாயத்தையுடைய களவன்றாயின் நினக்கு இவை தந்தவனைக் காட்டித்தந்து பின்னை மேம்படு; என,-

மேல் பரத்தை:-

79-82. † அதிரற் கண்ணியை யுடையாய்! நீ சால அன்புபூண்டவன் என்மாட்டு அன்புடையனாதலால் இவ்வளையும் ஆரமும் புணர்தற்கு விலையாகத் தந்தான்; அவன் இவையேயன்றி நாளை நின்காலவாகிய ‡ சிலம்புகளையும் கழற்றுந் தன்மையான்; அதனால் யான் கள்வியல்லேன்; அவன் கள்வன்; அவனைக் கதுவுவாயாக.

மேல், தலைமகற்கு வையை நீர்விழவு தான் கூறி, அதனுள் அணி நோக்கி வருவார் தம்முள் உவந்தவை காட்டிக் கூறியன கொண்டுகூறிய பாணன், பின்னும் ஒய்யப்போவாளை (41) என்பதுமுதல் இவ்வளவும் நிகழ்ந்தவை கூறி, அவ்வளவில் பரத்தையை வெகுளியாற் சொல்லி யன்வும் அத்தலைவியைக் கழறியனவும் கொண்டுகூறுகின்றான்:-

83. என வாங்கு - என்று அப்பரத்தை கூறிய அவ்வளவிலே.

84-5. வசிகரித்தலையுடைய மானே! மறுத்தலையொழி; நும்மை நச்சின காமுகர் நுமக்குத் தரும்பொருள்கள் நாடறிய நும்மனவே.

என்று பரத்தையைத் தணித்துப் பின் தலைவியை நோக்கி,-

---

* 'மாலை யணிய' என்பது இடக்கரடக்கல்; "மாலை வாங்குநர் சாலுநங் கொடிக்கென" சிலப். 3 : 166.

† அதிரல் - மோசிமல்லிகை, காட்டு மல்லிகை; சிலப். 13 : 156, உரை ; புனலி : முல்லை. 51 : புனலிப்பூ : குறிஞ்சி. 75, ந.

‡ "சிலம்புள கொண்மென" (சிலப். 9 : 73) என்பது இங்கே கருதற்பாலது.

பி-ம். [1] பச்சியமானே.

சேக்கை யினியார்பாற் செல்வான் மனையாளாற்
காக்கை கடிந்தொழுகல் கூடுமோ கூடா
தகவுடை மங்கையர் சான்றாண்மை சான்றார்
இகழினுங் கேள்வரை யேத்தி யிறைஞ்சுவார்
நிகழ்வ தறியாது நில்லுநீ நல்லாய்
மகளிரை மைந்துற் றமர்புற்ற மைந்தர்
அகலங் கடிகுவே மென்பவை யார்க்கானும்
முடிபொரு ளன்று முனியன் முனியல்
கடவரை நிற்குமோ காமங் கொடியியலாய்
எனவாங்கு
இன்ன துனியும் புலவியு மேற்பிக்கும்
தென்னவன் வையைச் சிறப்பு.
கொடியியலார் கைபோற் குவிந்த முகை
அரவுடன் றவைபோல் விரிந்த குலை
குடைவிரிந் தவைபோலக் கோலு மலர்
சுனைகழிந்து தூங்குவன நீரின் மலர்

86-9. புணர்ச்சி இனிய பரத்தையர்பாற் சென்று அமர்வானை மனையாளாற் செல்லாமற் காத்தலும் சென்றானென்று நீக்கியொழுகலும் கூடுமோ? அவை கூடா; சால்புடைமை மிக்காராகிய கற்புடைமங்கையர் தம்மைக் கேள்வர் இகழினும் தாம் அவரை ஏத்தாநிற்பர்.

90-93. தாம் மயக்குற்றுப் பரத்தையரை விரும்பி அவரைச் சேர்ந்த மைந்தரகலத்தை இனித் தோயேமென்றிருத்தல் மங்கையர் யார்க்கும் முடிவுபோவதன்று; முனியற்பாலையல்லை, முனியற்பாலையல்லை.

அடுக்கு, விரைவுபற்றி வந்தது.

94. காமம் தக்குழி நிற்குமோ?

95. என-என்று அவ்வணிநோக்கி வருவார் சொல்ல.

96. இத்தன்மையவாகிய * துனியினையும் புலவியினையும் ஏற்கப் பண்ணும்.

98-107. குவிந்த காந்தள் முகைகளும் † அரவுவெகுண்டு படம் விரிந்தவைபோல விரிந்தகாந்தட்குலைகளும் அக்காந்தளாற்கோலப்படுஞ்

* துனி - முதிர்ந்த கலாம்; புலவி - இளைய கலாம்; திருக்குறள், 1306, பரிமேல்.

† பெரும்பாண். 371-3.

*சினைவிரிந் துதிர்ந்தவீப் புதல்விரி போதொடும்*
*அருவி சொரிந்த திரையிற் றுரந்து*
*நெடுமால் *சுருங்கை நடுவழிப் போந்து*
*கடுமாக் களி † றணத்துக் கைவிடுநீர் போலும்*
*நெடுநீர் மலிபுன னீண்மாடக் கூடற்*
*கடிமதில் பெய்யும் பொழுது.*
*நாம மருட லுு நட்புந் தணப்பும்*
*காமமுங் கள்ளுங் கலந்துடன் பாராட்டத்*
*தாமமர் காதலரொ டாடப் புணர்வித்தல்*
*பூமலி வையைக் கியல்பு.*

*என்பது பருவவரவின்கண் தலைமகளது ஆற்றாமைகண்டு தூதுவிடச் சென்ற பாணன் தலைமகற்குக் கார்ப்பருவமும் வையை நீர்விழவணியும் கூறியது.*

ஆசிரியன்நல்லந்துவனார் பாட்டு.
நல்லச்சுதனார் பாட்டு.
பண் காந்தாரம்.

---

சுனையினின்றும் கழிந்து கீழ்விழும் நீரின் மலர்களும்... ... ...ப்பூக்களுமாகிய அருவிசொரிந்தனவற்றைத் திரையால் தள்ளிக்கொண்டு நெடிய பெரிய சுருங்கை நடுவாகிய வழியைப் போந்து பெருந்தன்மை மிக்க புனலைக் கடிமதில்சொரியும்பொழுது அப்புனல் கடுமாவாகிய களிறுகள் கையை எடுத்துவிடும் நீர்போலும்.

108-11. இவ்வாற்றால்... ... ...‡ புணர்தலும் பிரிதலுமாகிய இக்காமத்தையும் இதற்குச்செருக்கினை விளைக்கும் கள்ளையும் உடன் விரவி மகளிர் யாவரும்பாராட்டத் தாம் விரும்பின காதலரொடு புனலாடுமாறு முன்பிரிந்தவரைக் கொண்டுவந்து கூட்டுதல் வையைக்கு இயல்பு. (20)

---

* "சுருங்கை வீதி மருங்கிற் போகி" சிலப். 14 : 65.

† அணத்து - மேல்நோக்கி.

‡ 'இது புணர்ச்சி பிரிவென இருவகைப்படும்' திருக்குறள், காமத்துப்பால், அவதாரிகை.

# இருபத்தொன்றாம் பாடல்

## செவ்வேள்

*ஊர்ந்ததை, எரிபுரை யோடை யிடையிமைக்குஞ் சென்னிப்*
*பொருசமங் கடந்த புகழ்சால் வேழம்*
*தொட்டதை, தைப்பமை சருமத்திற் றாளியை தாமரை*
*துப்பமை துவர்நீர்த் துறைமறை யழுத்திய*
*வெரிநத் தோலொடு முழுமயிர் மிடைந்த*
*வரிமலி யரவுரி வள்புகண் டன்ன*
*புரிமென் பீலிப் போழ்புனை யடையல்*
*கையதை, *கொள்ளாத் தெவ்வர்கொண் மாமுத றடிந்து*
*புள்ளொடு பெயரிய பொருப்புப்புடை திறந்தவேல்*
*பூண்டதை, சுருளுடை †வள்ளி யிடையிடு பிழைத்த*
‡ *உருளிணர்க் கடம்பி னொன்றுபடு கமழ்தார்*
*அமர்ந்ததை, புரையோர் நாவிற் புகழ்நல முற்றி*
*நிரையே ழடுக்கிய நீளிலைப் பாலை*

---

### (இருபத்தொன்றாம் பாடலுரை)

1-2. விளக்கத்தால் எரியையொத்த ஓடைநடுவே கிடந்து விளங்குஞ் சென்னியை யுடைத்தாய வேழம்.

3-7. தொட்டது, தாமரைத்தாளிற்கு இயைந்த பவழம்போலும் துவர்நீர்த்துறையிலே மறைய அழுத்திய சருமத்தால் தைத்தலமைந்த முதுகிற்றோலுடனே அதன் முழுமயிர் மிடைந்த பாப்புத்தோலைக் கீறின வாரையொத்த பீலிப்போழாற் புனைந்த அடையற்செருப்பு.

தாளியை தைப்பமை யென்பனவும் அடையலென்பதனோடு இயையும்.

8. நின்னை மதியாத அவுணர்தமக்குத் துணையாக மதித்த மா.

9. புள்-அன்றில். புடை-பக்கம்.

10-11. சுருளுதலையுடைய. இடையிட்டுத் தொடுத்த கடம்பம் பூவினையுடைய ஒன்றுபட்டு அலர்ந்த தார்.

13. § ஏழு நிரையாக அடுக்கிய நீண்ட இலையையுடைய பாலை; என்றது, ஏழிலைப்பாலையை.

---

* கொள்ளல் - மதித்தல். † பரிபாடல், 14 : 22. ‡ பரிபாடல், 5 : 81.

§ மதநாற்றத்திற்கு உவமை கூறப்படும் பூக்களையுடைய ஏழிலைப் பாலையும் இலகடமும் சூழியும் கூறப்பெற்றமையின் பரங்குன்றம் யானையாக உருவகஞ் செய்யப்பெற்றமை புலனாகின்றது.

அரைவரை மேகலை யணிநீர்ச் சூழித்
தரைவிசும் புகந்த தண்பரங் குன்றம்
* குன்றத் தடியுறை யியைகெனப் பரவுதும்
வென்றிக் கொடியணி செல்வநிற் றொழுது.
சுடுபொன் ஞெகிழத்து முத்தரிசென் றார்ப்பத்
† துடியி னடிபெயர்த்துத் தோளசைத்துத் தூக்கி
‡ அடுநறா மகிழ்தட்ப வாடுவா டகைமையின்
[1] நுனையிலங் கெஃகெனச் சிவந்த நோக்கமொடு
துணையணை கேள்வனைத் துனிப்பவ ணிலையும்
§ நிழல்காண் மண்டில நோக்கி
அழல்புனை யவிரிழை திருத்துவாள் குறிப்பும்

---

14-5. அதனையுடைய அரைமலையாகிய இலகடத்தினையும் அருவியாகிய படாத்தினையுமுடைத்தாய்த் தரையின்கணின்று விசும்பையுற ஓங்கிய பரங்குன்றம்.

16. இக்குன்றத்து அடியின்கணுறைதல் மறுபிறப்பினும் இயைகவென.

17. வென்றியாற் கொடியை அலங்கரித்த செல்வ!

18. ஓடவைத்த பொன்னாற் செய்த || சிலம்பில் முத்தாகிய அரி எங்குங் கேட்ப ஆர்ப்ப.

19. அடியினைத் துடியொலிக்கு இயைய.

20. அடுநறாவுண்ட மகிழ்ச்சி தடுப்ப ஆடுவாள் அழகுகாரணமாக.

22. துனித்தலாவது, ¶ இவளழகு எமக்குங் கூட வியப்பாயிற்று, இனி இவற்குச் சொல்லவேண்டுமோவென உட்கொண்டு கேள்வன் துணையாய் அமராநிற்கவும் அவனை வெகுளிமிக்க நோக்கமொடு துனித்தல்.

23. இவளினும் எனக்கு அழகுண்டாயவழி இவளை நோக்கானென்று கருதிக் கண்ணாடியை நோக்கி.

24. அழல்போல் அவிராநின்ற இழை.

---

* பரிபாடல், 15 : 95-6.

† அடி, 60-61; பு. வெ.29. ‡ குறள், 1090.

§ நிழல்காண்மண்டிலம் - கண்ணாடி ; அகநா. 71.

|| "யாமுடைச் சிலம்பு முத்துடை யரியே" சிலப். 20 : 69.

¶ சீவக. 587, 2447 ; கம்ப. சூர்ப்பநகை. 60.

பி-ம். [1] நனையிலங்கெஃகின்.

*பொதிர்த்த முலையிடைப் பூசிச் சந்தனம்*
*உதிர்த்துப் பின்னுற வூட்டுவாள் விருப்பும்*
*பல்லூ ழிவையிவை நினைப்பின் வல்லோன்*
*ஓவத் தெழுதெழில் போலு மாதடிந்*
*திட்டோய்நின் குன்றின் மிசை.*
*மிசைபடு * சாந்தாற்றி போல வெழிலி*
*[1] இசைபடு பக்க மிருபாலுங் கோலி*
*விடுபொறி † மஞ்ஞை பெயர்புட னாட*
*விரல்செறி தூம்பின் விடுதுளைக் கேற்ப*
*முரல்குரற் றும்பி யவிழ்மல ரூத*
*யாணர் வண்டினம் யாழிசை பிறக்கப்*

25-6. பொங்கின முலையிடத்தே சந்தனத்தைப் பூசியுதிர்த்து நாற்றம் நிலைபெற்றவழி என்னைத்தழுவுமென்று கருதி அதனைப் பின்னும் பின்னுஂ ஊட்டுவாள்.

27. மற்றும் இத்தன்மைய் இத்தன்மைய பலமுறை நிகழ்கின்ற மகளிர் தொழில்களை நினைப்பின், கைவல்லானெழுதிய ஓவியத்து அழகு போலும்.

என்றார், அவ்வொரு தொழிற்கண்ணே நிற்றலான்.

30-32. மேல் எடுத்துக் காட்டப்பட்ட சாந்தாற்றிபோல எழிலியிசை யொலிக்கின்ற இடத்து இரண்டு இறகையும் விரித்து விளங்கும் பொறியையுடைய மயில்கள் எழுந்து ஆட.

33. விரல் செறிந்து விடுகின்ற வங்கியத்தின் துளைக்கு இசைய.

35. யாழினது இசையை மேன்மேலு... ... ... ... ... ... .... ...

*'நீல ஆலவட்டம் விரித்தாற்போலத் தன் கோலக் கலாவம் கொளவிரித்து...இளமயிலாடுவது' (இறை. சூ.2, உரை) ; "நீலவால வட்டத்தி னிறங்கொளக், கோலும் பீலிய கோடுயர் குன்றின்மே, லாலு மாமழை நீண்முகி லார்த்தொறு, மாலு மாமயி லாலுமொர் பாலெலாம்" சூளாமணி, நாடு. 15.

† "பாடின் னருவிப் பனிநீ ரின்னிசை, தோடமை முழவின் றுதை குரலாகக்,...குரற் றூம்பொடு, மலைப்பூஞ் சாரல் வண்டியா ழாக, இன்ப லிமிழிசை கேட்டுக் கலிசிறந்து, ...கழைவள ரடுக்கத் தியலி யாடு மயில் (அகநா. 82); சூளா. சீய. 194.

பி-ம். [1] இசைபக்கலிருபாலும்.

பாணி முழவிசை யருவிநீர் ததும்ப
ஒருங்கு பரந்தவை யெல்லா மொலிக்கும்
இரங்கு முரசினான் குன்று.
தாழ்நீ ரிமிழ்சுனை நாப்பட் குளித்தவண்
மீநீர் நிவந்த விறலிழை கேள்வனை
[1] வேய்நீ ரழுந்துதன் கையின் விடுகெனப்
[2] பூநீர்பெய் வட்ட மெறியப் புணைபெறா
தருநிலை நீரி னவடுயர் கண்டு
கொழுநன் மகிழ்தூங்கிக் [3] கொய்பூம் புனல்வீழ்ந்து.
தழுவுந் தகைவகைத்துத் தண்பரங் குன்று.
வண்டார் பிறங்கன் மைந்தர் நீவிய
தண்கமழ் சாந்தந் [4] தைஇய வளியும்
கயல்புரை கண்ணியர் கமழ்துக ளுதிர்த்த
புயல்புரை கதுப்பக முளரிய வளியும்
*உருளிணர்க் கடம்பி † னெடுவேட் கெடுத்த

36. ‡ பாணியென்னுந் தாளத்தையுடைய முழவிசைபோல.

37. இவ்வாற்றால் தம்முள் வேறுபட்டனபலவும் ஒருங்கொலிக்கும்.

39-45. நீரொலிக்கின்ற ஆழ்ந்த சுனைநடுவே மூழ்கி அவ்விடத்து நீர்மேலெழுந்த விறலிழை கரையில் நிற்கின்ற கேள்வனைப் புணையாகிய வேயை நீரில் அழுந்துகின்ற தன்கையின்கட் டருகவென அவன் அதனைக் கொடாது அரக்குநீர்கரந்த வட்டை எறிதலாற் புணைபெறாது அவள் அருநிலையான நீரிற் படுகின்ற துயரத்தைக்கண்டு கொழுநன் இன்புற்றுப் பின் அந்நீரின்கண் வீழ்ந்து தழுவும் தன்மையினையுடைத்து.

46. பிறங்கற்கண்.

47. சந்தனத்தைத் தடவிப் புலர்த்துங் காற்றும்.

48-9. கமழ்தாதுதிர்த்த கதுப்பகத்தை ஊடுபுக்கு அசைத்த காற்றும்.

50-51. கடம்பின்கண் மேவிய நினக்குப் பூசைக்கட் காட்டும் பாத்திரத்தெடுத்த கமழ்புகையூடு நுழைந்த காற்றும்.

50. நெடுவேள் : முன்னிலைப்பெயர்.

*பரி. 5:81. 21 : 11. †பரிபாடல், 14 : 20.

‡ பாணி - ஒரு தாளத்தின் முதல் எடுக்கும் காலத்தைத் தன்னிடத்தேயுடையது; கலி. கட. ந.

பி-ம். [1] வேய்நீர்த் தன்கையிற் புணையவை விடுகென. [2] பூநீர் செய். [3] கொய்பூ நீரமபுனல் வீழ்ந்து. [4] தைஇயவளிவளியும்.

முருகு கமழ்புகை நுழைந்த வளியும்
*அசும்பு மருவி யருவிடர்ப் பரந்த
பசும்பூட் சேஎய்நின் குன்றநன் குடைத்து.
கண்ணொளிர் திகழட ரிடுசுடர் படர்கொடி மின்னுப்போல்
ஒண்ணகை தகைவகை நெறிபெற விடையிடை யிழைத்தி
செண்ணிகைக் கோதை கதுப்போ டியல [யாத்த
மணிமரு டேன்மகிழ் தட்ப வொல்கிப்
பிணிநெகிழப் பைந்துகி னோக்கஞ் சிவப்பூரப்
பூங்கொடி போல நுடங்குவா ளாங்குத்தன்
சீர்தகு கேள்வ னுருட்டுந் துடிச்சீராற்
கோடணிந்த முத்தார மொல்க வொசிபவளேர்
ஆடை யசைய வணியசையத் தானசையும்
வாடை யுளர்கொம்பர் போன்ம்.

52-3. இடையறாது ஒழுகும் அருவி அரிய விடரின்கண்ணே பரந்த நின்குன்றம் உடைத்து.

47-53. பலவகை நறுநாற்றமுடைமை கூறினவாறு.

54-6. இடுசுடர் பரந்த கொடிமின்னுப்போற் கண்ணிற்கு ஒளிர்ந்த திகழாநின்ற அடராலே ஒண்... ... ... ...அழகும் நெறிப்பும் இடையிடை பெறச்செய்து யாத்த தொழிலையுடைய.

மின்னுப்போற் கோதையென இயையும்... ... ... ...

54. ஒளிர்திகழ் : வினைத்தொகையடுக்கு.

56. அக்கோதை கதுப்போடசைய.

57-8. மாணிக்கத்தையொக்கச்சிவந்த...கள்ளை நுகர்ந்த மகிழ்ச்சி தடுப்பப் பசுமையையுடைய துகிலுடை நெகிழ.

57-63. கள்ளுணர் ... ....ராக்க நுடங்குவாளாய்த் துடிச்சீரின் கண்ணேமுலைக்கணணிந்த முத்தாரமசைய ஆடுவாளது அழகு. வாடையாலுளரப்பட்டு ஆடையசையவும் அணியசையவும் அசையுங் கொம்பருண்டாயின் அதனழகையொக்கும்.

59. ஆங்கு : ஆசை.

* பரிபாடல், 8 : 128-30.

*வாளி புரள்பவை போலுந் துடிச்சீர்க்குத்*
*தோளூழ் பெயர்ப்பவள் கண்.*
*மாறம ரட்டவை மறவேல் பெயர்ப்பவை*
*ஆறிரு தோளவை யறுமுகம் விரித்தவை*
*நன்றம ராயமோ டொருங்குநின் னடியுறை*
*[1] இன்றுபோ லியைகெனப் பரவுதும்*
*ஒன்றார்த் தேய்த்த செல்வநிற் றொழுதே.*

கடவுள் வாழ்த்து
நல்லச்சுதனார் பாட்டு.
கண்ணகனார் இசை.
பண் காந்தாரம்.

---

64-5 சீர்க்கு இசையத் தோளைப் பெயர்ப்பவள் கண் அம்புடைபெயர்வன போலும்.

என்று இவ்வாற்றான் மலைச்சிறப்புக் கூறி மேல் வாழ்த் முடிக்கின்றார்:-

66. மாற்றாரை அமரின்கட்கொன்ற படையை.

68-70. எமக்கு விரும்பின சுற்றத்தோடு கூடி நின் அடிக்கண் உறைத இன்றுபோல என்றும் இயைகவென்று பரவுதும். (21)

---

பி-ம். [1] இன்றுபொலிகென.

# இருபத்திரண்டாம் பாடல்

## வையை

ஒளிறுவாட் பொருப்ப னுடல்சமத் திறுத்த
களிறுநிரைத் தவைபோற் கொண்மூ நெரிதர
*அரசுபடக் கடந்த வானாச் சீற்றத்தவன்
† முரசதிர் பவைபோன் முழங்கிடி பயிற்றி
ஒடுங்கா ருடன்றவன் றானை வில்விசை
‡ விடுங்கணை யொப்பிற் கதழுறை சிதறூஉக்
கண்ணொளி § ரெஃகிற் கடிய மின்னியவன்
வண்மைபோல் வானம் பொழிந்தநீர் மண்மிசை
ஆனாது வந்து தொகுபீண்டி மற்றவன்
தானையி னூழி... ... ... ..தாவூக் கத்திற்
போன நிலமெல்லாம் போரார் வயல்புகுத
... ... ... ... ... ... ... ... ...நீக்கி பபு .. ... ... ... .. ...
கான மலைத்தரை கொன்று மணல பினறி
வான மலைத்த...வ.. ... ... ... .. ...
.. ... ... லைத்தவ மணமுர செறிதரத்
தானைத் தலைத்தலை வந்துமைந் துற்றுப்
பொறிவி யாற்றுறி துவர்புகை சாந்தம்
எறிவன || வெக்குவ ¶ வீரணிக் கேற்ற

---

## (இருபத்திரண்டாம் பாடலுரை.)

* * * *

18-9.. ... ... ...ய நறவு.

---

* "அரசுபட" மதுரை. 128.

† "கைவண் செழியன், ஆலங் கானத் தமர்கடந் துயர்த்த, வே< னும் பல்லூழ் மின்னி முரசென, மாயிரு விசும்பிற் கடியிடி பயிற்றி (அகநா. 175); "நிடதநா டளிக்கு, மன்னர் மன்னவன் மண்டம கடந்தவொள் வேலின், மின்னி யாங்கவன் முரசென விண்ணிடை யதிர்ந்து நைடதம், நாட்டு. 2.

‡ "பெயலுறழக் கணைசிதறி" மதுரை. 183.

§ "செல்வக் கடம்பமர்ந்தான் வேன்மின்னி" ஐந்திணைஐம்பது.

|| எக்குதல் : பரிபாடல், 16 : 45.

¶ ஈரணி : பரிபாடல், 6 : 28; 7 : 61.

நறவணி பூந்துகி னன்பல வேந்திப்
பிறதொழின...ம் பின்பின் றொடரச்
செறிவினைப் பொலிந்த செம்பூங் கண்ணியர்
ஈரமை வெட்சி யிதழ்புனை கோதையர்
தாரார் முடியர் தகைகெழு மார்பினர்
மாவுங் களிறு மணியணி வேசரி
காவு நிறையக் கரைநெரி பீண்டி
வேலாற்று மொய்ம்பனின் விரைமல ரம்பினோன்
போலாற்று முன்பிற் புனைகழன் மைந்தரொடு
தாரணி மைந்தர் * தவப்பயன் சான்மெனக்
காரணி கூந்தல் கயற்கட் கவிரிதழ்
வாரணி கொம்மை வகையமை மேகலை
ஏரணி யிலங்கெயிற் றின்னகையவர்
சீரணி வையைக் கணிகொல்லோ வையைதன்
நீரணி நீத்த மிவர்க்கணி கொல்லெனத்
தேருநர் தேருங்காற் றேர்தற் கரிதுகாண்

---

19. அணி-ஆபரணம் ... ...

20. பின்னே பின்னே தொடர முறப்பட்டு.

21-2. மகளிர், செறிந்த தொடைத்தொழிலாற்பொலிந்த... ... மாலையராய் வாடாமையமைந்த ... ... ... ... ...சக... ... ...கோதையராய்.

23. மைந்தர், தாரார்ந்த முடியராய்ச் சுற்றிய மாலைபொருந்திய மார்பினராய்.

24. வேசரி - கோவேறுகழுதை.

25. நெரிய ஈண்டி ... ... ... ... ...காவின் கண் நிறைய.

26-8. வேற்போரைச் செய்யும் மொய்ம்பினையுடையோனாகிய முருகனைப்போல ஆற்றலோடு கூடிய வலியினையும் புனைகழலையுமுடைய மைந்தரும் விரைமலரம்பினோனாகிய காமனைப்போலத் தாரையும் அழகினையுமுடைய * மைந்தருஞ் செய்த தவத்துப்பயன் பெரிதென்று கண்டார் கூற.

29. கவிர் - முருக்கு.

30. கொம்மை - இளமுலை. வகைவகையாகக் கோத்த மேகலை.

சான்மென (28) என்னும் வினையெச்சம்...இனிய நகையினையும் (31) உடையவென இரண்டாவதனொடு விரிந்த பெயரெச்சவினை கொண்டது.

---

* "அருந்தவ மாற்றியார் நுகர்ச்சிபோ லணிகொள" கலி. 30.

*தீரமும் வையையுஞ் சேர்கின்ற கண்கவின்*
*மண்கணை முழவி னின்க ணிமிழ்விற்*
*கெதிர்வ பொருவி........மேறுமா றிமிழ்ப்பக்*
*கவர்தொடை நல்யா ழிமிழக் காவிற்*
**புகர்வரி வண்டினம் பூஞ்சினை யிமிர*
*ஊதுசீர்த் தீங்குழ லியம்ப மலர்மிசைத்*
*தாதூது தும்பி தவிர்பல வியம்ப*
*........துடிச்சீர் நடத்த வளிநடன்*
*மெல்லிணர்ப் பூங்கொடி மேவர நுடங்க*
*ஆங்கவை தத்தந் தொழின்மாறு கொள்ளும்*
*தீம்புனல் வையைத் † திருமருத முன்றுறையாற்*
*கோடுளர் குரற்பொலி யொலிதுய லிருங்கூந்தல்*
*... ... ... ... ... ... ... ...புரைதீர் நெடுமென்*
*தோடாழ்பு தழைமலர் துவளா வல்லியின்*

---

32-5. அவ்விருதிறத்தாரையும் கரையையும் வையையைஞ் சேர்கின்ற கட்புலனாகிய அழகு தேர்தற்கு அரிது.

காணெனன்பது (34) முன்னிலையசை.

36-7. மார்ச்சனையையுடைய முழவின் இனிய கண்ணின் இமிழ்விற்கு எதிரே விண்ணின்கட்டம்மிற் ... ... ... ... ... ... ... ...மறாதினகண் உருமேறு மாறாய் முழங்க.

38. கவர்தொடை -விரும்பப்படும் பாலைக்கோவை.

39. பூக்களையுடைய சினைக்கண்ணே இமிர.

தாளத்தி ... ... ...னமகளிரா... ... ... ... ...நத.

42. வளியாகிய நடன்.

இவ்வாற்றான் ஆண்டுள்ள... ... ... ... ... ...னொன்றோடொன்று மாறுகொள்ளு நதி ... ... ... ... ... ... ... ...

46. கொத்துக்களாற் பொலிந்து தழைத்து அசைகின்ற கரிய கூந்தலையுடைய.

47-8. பொருந்திய விறை... ...தோளிற்றாழ்ந்து தழையும் ... ... ... ... ...கொடி... ... ... ... ... ... ...

---

*சீரிடமென்பது வாய்த்த இடமென இறந்தகால வினைத்தொகையா மெனப் பொருள்கூறி, "புகர்வரிவண்டு" என்னும் இப்பகுதியை எடுத்துக்காட்டிப் புகர்த்த வரிவண்டெனப் பொருளும் எழுதியிருக்கின்றனர்; திருக்குறள், நுண்பொருண்மாலை, 821; செந்தமிழ், தொகுதி, 7, பக்கம் 641. † பரிபாடல், 7:83; 11:30.

*நீடாழ்பு தோக்கை *நித்தில வரிச்சிலம்பு†*

* * * *

49. நீண்டு தாழ்ந்த தொங்கல் உள்ளிடும் நித்திலத்தினையுடைய சிலம்பு.

வாடாத மாலை...லை சூடாத நறவு:வெளிப்படை.

நறவால் இனிதாகமகிழ்ந்து கண்ணாராயத்துநின்ற தம் காதலனை. தாங்கடாங்கள், தவிராது தவிராது, செல்லும்புனல் ஈர்த்தீர்த்துக் கொண்டு செல்ல மிக ஒழுகுவாளைத் தன்மார்பத்து அணைத்து நீந்துதற்குரிய கைகளுள் ஒருகை தாங்கத் தோண்மேல் வைத்து மற்றைக் கையால் நீரை நீங்கத் தள்ளிவருவான்... ... ...

... ... ... ...மெடுத்தவன்பனுமென்னும் உம்மை இசைநிறை.

கலைஇ - கலாய்த்து. தேற்றுதல் - வெகுளி நீக்குதல். அக்கங்கை நீர்க்கு நடுவே யென்றதனால், வெகுண்டது பு... ... ... ...யாயிற்று.

புங்கவம் - ஏறு. திளைப்பின்கட் சேராமைப் பொருடானுடை... ... வல்குற்கலங்காரமாகாத வேறோரழகுடனே... ... ... ...வளை ஈர்த்துக் கொணடாமத்தைப்பொருந்த. எமக்கு அவலத்தைச் செய்ய.

அடுத்தடுத்தென்னும் அடுக்கு அவள் துயரமிகுதியும் அதற்கு ஆயம் ஒரு செயலின்றி நின்றமைய ... .. ...

... ...கொளவைத்தபொழுது எவ்விடத்தும் கடிப்பிடுகின்ற துடியினது ஒலிகெ ‡ ... ... * * * * (22)

---

* பரி. 21 : 18; சிலப். 20 : 67.

† இந்தப் பகுதியின் பின்பு இருக்கவேண்டிய ஒரேடு பண்டைக் காலத்திலேயே சிதைந்துபோய்விட்டமையால், இந்தப் பாடலின் பிற்பகுதியும் இதன் உரையின் முற்பகுதியும் தெரிந்துகொள்ளக்கூடவில்லை.

‡ எழுபது பரிபாடல்களுள் தொடர்ச்சியாக எனக்குக் கிடைத்த மூலமும் உரையும் இவ்வளவே.

ௐௐௐ

# பரிபாடற்றிரட்டு*

## திருமால்

(1) †வானா ரெழிலி [1] மழைவள நந்தத்
தேனார் சிமைய மலையி னிழிதந்து
‡நான்மாடக் கூட லெதிர்கொள்ள வானா
மருந்தாகுந் தீநீர் மலிதுறை மேய
§ இருந்தையூ ரமர்ந்த செல்வநின்
திருந்தடி தலையுறப் பரவுதுந் [2] தொழுது (இது தரவு)
ஒருசார், அணிமலர் வேங்கை மராஅ மகிழம்
பிணிநெகிழ் பிண்டி [3] நிவந்துசேர் போங்கி
மணிநிறங் கொண்ட மலை.
ஒருசார், தண்ணறுந் தாமரைப் பூவி னிடையிடை
[4] வண்ண வரியிதழ்ப் போதின்வாய் வண்டார்ப்ப
விண்வீற் றிருக்குங் கயமீன் விரிதகையிற்
கண்வீற் றிருக்குஞ் [5] கயம்.
ஒருசார், [6] சாறுகொ ளோதத் திசையொடு மாறுற்

---

* மூலமும் உரையும் தொடர்ச்சியாக இருந்த கையெழுத்துப் பிரதிகளிற் காணப்படாமல் பண்டையுரையாசிரியர்களாற் காட்டப்பட்ட மேற்கோள்களிலிருந்தும் புறத்திரட்டிலிருந்தும் தெரிந்த பரிபாடல்கள்.

† இப்பாடல், தொல்காப்பியம் செய்யுளியல், சூ. 121, பேராசிரியர், நச்சினார்க்கினியருரைகளிற்கண்டது.

‡ "நான்மாடக் கூடன் மகளிரு மைந்தரும்" (கலி. 92) என்பதும், 'நான்கு மாடம் கூடலின் நான்மாடக் கூடலென்றாயிற்று; அவை திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர்; இனிக் கன்னி, கரியமால், காளி, ஆலவாயென்றுமாம்' என்னும் அதன் விசேடவுரையும், "கன்னிதிரு மால்காளி யீசன் காக்குங் கடிமதில்சூழ் மாமதுரை" (திருவால. பயன் முதலியன) என்பதும் அறியத்தக்கன.

§ இருந்தையூர், ஸ்ரீ இருந்தவளமுடையார் கோயிலென்ப; சிலப். 18: 4, அரும்பதவுரை; சங்கப்புலவர்களின் பெயர்களுள், இவ்வூரை அடுத்த பெயர்களாக இருந்தையூர்க் கருங்கோழி மோசியார், இருந்தையூர்க் கொற்றம்புலவனென இரண்டு பெயர்கள் காணப்படுகின்றன.

பி-ம். [1] மழைவளந்தந்த. [2] தொழுதே. [3] சிவந்து. [4] வண்டுண்வரி. [5] கயல். [6] காறுகளோதத்திரையென.

றுழவி னோதை பயின்றறி விழந்து
[1] திரிநரு மார்த்து நடுநரு மீண்டித்
திருநயத் தக்க வயல்.
ஒருசார், * அறத்தொடு வேதம் [2] புணர்தவ முற்றி
† விறற்புகழ் நிற்ப விளங்கிய கேள்வித்
திறத்திற் றிரிவில்லா வந்தண ரீண்டி
அறத்திற் [3] றிரியா பதி.

(இவை நான்கும் கொச்சகம்)

ஆங்கொருசார், உண்ணுவ பூசுவ பூண்ப வுடுப்பவை
மண்ணுவ மணிபொன் மலைய கடல
பண்ணிய மாசறு பயந்தரு காருகப்
புண்ணிய வணிகர் புனைமறு கொருசார்
விளைவதை வினையெவன் மென்புல வன்புலக்
களம ருழவர் கடிமறுகு பிறசார்
[4] ஆங்க, அனையவை நல்ல நனிகூடு மின்பம்
இயல்கொள நண்ணி யவை.

(இது கொண்டுநிலை.)

வண்டு பொரேரென வெழ
வண்டு பொரேரென வெழும்
கடிப்புகு வேரிக் [5] கதவமிற் றோட்டிக்
கடிப்பிகு காதிற் கனங்குழை தொடர
[6] மிளிர்மின் வாய்ந்த விளங்கொளி [7] நுதலார்
ஊர்களிற் றன்ன செம்ம [8] லோரும்
வாயிருள் பனிச்சை வரிசிலைப் புருவத்
தொளியிழை யொதுங்கிய வொண்ணுத லோரும்
புலத்தோ டளவிய புகழணிந் தோரும்
நலத்தோ டளவிய ‡ நாணணிந் தோரும்

---

*பதிற்றுப். 24 : 6-8; பு - வெ. 163.

† "மண்ணாணப் புகழ்பரப்பியும்" புறநா. 166.

‡ "எஞ்ஞான்று மெங்கணவ ரெந்தோண்மேற் சேர்ந்தெழினும், அஞ்ஞான்று கண்டேம்போ னாணுதுமால்" நாலடி. 385.

பி-ம். [1] திரிதருமாரித்துநகரு. [2] புரைதவம். 3 றிரியாப்பதி. [4] ஆங்கு. [5] கதர்வபிற். [6] மின்மினிவாய்ந்த. [7] நுதலாளூர். [8] லோரு மவ்வாய்.

*விடையோ டிகலிய விறனடை யோரும்
நடைமட [1]மேவிய நாணணிந் தோரும்
† [2] கடனிரை திரையிற் கருநரை யோரும்
‡ [3] சுடர்மதிக் கதிரெனத் தூநரை யோரும்
மடையர் குடையர் புகையர்பூ வேந்தி
இடையொழி வின்றி யடியுறையா ரீண்டி
விளைந்தார் வினையின் விழுப்பயன் றுய்க்கும்
துளங்கா விழுச்சீர்த் துறக்கம் [4] புரையும்
இருகே ழுத்தி யணிந்த வெருத்தின்
வரைகெழு செல்வ னகர்.
வண்டொடு தும்பியும் வண்டொடை யாழார்ப்ப
விண்ட [5] கடகரி மேகமொ டதிரத்
தண்டா வருவியொ டிருமுழ வார்ப்ப
அரியுண்ட கண்ணாரொ டாடவர் கூடிப்
புரிவுண்ட பாடலொ [6]டாடலுந் தோன்றச்
[7] சூடு நறவொடு [8]காமமகிழ் விரியச்
[9] சூடா நறவொடு காமம் விரும்ப
இனைய பிறவு மிவைபோல் வனவும்
அனையவை யெல்லா மியையும் புனையிழைப்
பூமுடி நாகர் நகர்.

(இவையும் கொச்சகம்)

மணிமரு டகைவகை நெறிசெறி [10]யொலிபொலி
அவிர்நிமிர் புகழ்கூந்தற்
பிணிநெகிழ் [11]துளையினை தெளியொளி [12]திகழ்ஞெகிழ்
தெரியரி மதுமகிழ் பரிமலர் மகிழுண்கண் வாணுதலோர்
§ மணிமயிற் றொழிலெழி [13]லிகன்மலி திகழ்பிறி
திகழ்கடுங் கடாக்களிற் றண்ண லவரோ

---

* "செல்லு மழவிடைபோற் செம்மாந்து" நள. சுயம். 156.

† பரிபாடல், 10 : 22.

‡ "நிலவுநூற் றன்ன பித்தை நெடுந்தவர்" கூர்ம. அனுக்கிர. 31.

§ "நடைமயிலே" என்பதற்கு 'மணிமயிற்றொழில்' என்பது மேற்கோள் ; பிரயோக. சூ. 42, உரை.

பி-ம். [1] மேவுநாணிழந்தோறும். [2] கடனுரை. [3] தொடர்மதி. [4] புரைதரவிரு. [5] கடதடமேகம். [6] டாறுந்தோன்ற. [7] கூடு. [8] காமமுகிழ். [9] கூடா. [10]மொலிபொலி. [11] துணையிணை. [12] திகழபு. [13] விகலிமலி திகழவிழ.

டணிமிக வந்திறைஞ்ச [1] வல்லிகப்பப் பிணிநீங்க
நல்லவை யெல்லா [2] மியைதருந் தொல்சீர்
வரைவாய் தழுவிய கல்சேர் கிடக்கைக்
குளவா யமர்ந்தா னகர்.

(இது முடுகியல்)

திகழொளி முந்நீர் கடைந்தக்கால் வெற்புத்
[3] திகழ்பெழ வாங்கித்தஞ் சீர்ச் [4] சிரத் தேற்றி
மகர மறிகடல் வைத்து நிறுத்துப்
புகழ்சால் சிறப்பி நிருதிறத் தோர்க்கும்
அமுது கடைய விருவயி னாணாகி
மிகாஅ [5] விருவட மாழியான் வாங்க
உகாஅ வலியி *னொரு [6]தோழங் காலம்
அறாஅ தணிந்தாருந் தாம்.
மிகாஅ மறலிய மேவலி யெல்லாம்
புகாஅவெதிர் பூண்டாருந் தாம்.
மணிபுரை மா † மலை ஞாறிய ஞாலம்
அணிபோற் பொறுத்தாருந் தாஅம் பணிவில்சீர்ச்
செல்விடைப் பாகன் றிரிபுரஞ் செற்றுழிக்
கல்லுயர் சென்னி ‡ யிமயவி னாணாகித்
தொல்புகழ் தந்தாருந் தாம்.

(இவையும் கொச்சகம்)

§ [7]அணங்குடை யருந்தலை யாயிரம் விரித்த
கணங்கொள் சுற்றத் தண்ணலை வணங்கி
நல்லடி யேத்திநிற் பரவுதும்
|| [8] எல்லேம் பிரியற்கெஞ் சுற்றமொ டொருங்கே.

(என்பது ஆசிரியச் சுரிதகம்.)

---

*தோழம் - ஒருபேரெண் ; "உண்ணற் கரிய நஞ்சை யுண்டு வொருதோழந் தேவர், விண்ணிற் பொலிய வமுத மளித்த விடைசேர் கொடியண்ணல்" திருப்புறவம், ஞான. தே; திருவா. திருவெம். 10.

† "மலைநாறிய வியன்ஞாலத்து." மதுரை. 4.

‡ பரிபாடல், 5 : 24, உரை ; கலி. 38.

§ பரிபாடல், 1 : 1.

|| இவ்வடி, தொல், பெயர். சூ. 12, ந ; செய். சூ, 121, பேர். மேற்கோள்.

பி-ம். [1] வல்லலிகப்ப. [2] மேய்தரும். [3] திகழ்வெழ. [4] சிரத்தொற்றி. [5] விருபடம். [6] தோளங்கால. [7] அன்னவணங்குடை. [8] எல்லாம்பிரியற்க வெஞ்சுற்றம்.

## வையை

(2) *மாநிலந் தோன்றாமை மலி [1] பெய றலைஇ
† ஏமநீ ரெழில்வான மிகுத்தரும் பொழுதினான்
நாகநீண் மணிவரை நறுமலர் பலவிரைஇக்
காமரு வையை கடுகின்றே கூடல்
நீரணி கொண்டன்று வையை யெனவிரும்பித்
தாரணி கொண்ட வுவகை தலைக்கூடி
[2] ஊரணி கோல மொருவ ரொருவரிற்
சேரணி கொண்டு நிறமொன்று வெவ்வேறு
நீரணி கொண்ட நிறையணி யங்காடி
[3] ஏரணி கொண்டா [4] ரியல்
கைபுனை தாரினர் கண்ணியர்
ஐயெனு மாவிய ராடையர்
‡நெய்யணி கூந்தலர் பித்தையர்
மெய்யணி யானை [5] மிசையரா யொய்யெனத்
தங்காச் சிறப்பிற் றளிரியலார் [6] செல்லப்
பொங்கு புரவிப்புடைப் போவோரும் [7] பொங்குசீர்
வையமுந் தேரு [8] மமைப்போரு மெவ்வாயும்
பொய்யாம் [9] போ யென்னாப் புடைகூட்டிப் போவநர்
மெய்யாப்பு மெய்யார மூடுவார் வையத்துக்
கூடுவா ரூட லொழிப்பா ருணர்குவார்
ஆடுவார் பாடுவா ரார்ப்பார் நகுவார்நக்
கோடுவா ரோடித் தளர்வார்போ யுற்றவரைத்
தேடுவா ரூர்க்குத் திரிவா ரிலராகிக்
கற்றாருங் கல்லா தவருங் கயவரும்

---

* இப்பாடல், தொல்காப்பியம், செய்யுளியல், சூ. 118, இளம் பூரணருரையிற் கண்டது. இதன் முதலடியின் பொருளும், "நீர்பரந் தொழுகலி னிலங்கா ணலரே" (குறுந். 355) என்பதன் பொருளும் ஒத்துள்ளன. † புறநா. 1 : 11-2, உரை.

‡ இப்பாட்டின் 85 - ஆம் அடியைப் பார்க்க.

பி - ம். [1] பெயனிலைஇ. [2] வாரணி. [3] பேரணி. [4] ரிகல். [5] மிசைக்கொண்டொய்யென. [6] சொல்லப். [7] பொங்குநீர். [8] மமை வோருமெய்வாயும். [9] பொய்யென்னாப்புனைபடை கூட்டிப் போவார் மெய்.

பெற்றாரும் *பெற்றாற் பிழையாத பெண்டிரும்
பொற்றேரான் றானும் பொலம்புரிசைக் கூடலும்
முற்றின்று வையைத் துறை.
துறையாடுங் காதலர் தோள்புணை யாக
[1] மறையாடு வாரை யறியார் மயக்கிப்
பிறையேர் நுதலிய ரெல்லாருந் தம்முன்
நிகழு நிகழ்ச்சி யெம்பாலென் றாங்கே
இகல்பல செல்வம் விளைத்தவட் கண் டிப்பால்
[2] அகலல்கும் வையைத் துறை.
காதலான் மார்பிற் கமழ்தார் புனல்வாங்கி
ஏதிலாள் கூந்த லிடைக்கண்டு மற்றது
தாதாவென் றாளுக்குத் தானே [3] புறன்றந்து
வேய்தந்த தென்னை விளைந்தமை மற்றது
நோதலே [4] செய்யே னுணங்கிழையா யிச்செவ்வி
போதலுண் டாங்கொ லறிந்து புனல் [5] புணர்த்த
தோஒ பெரிதும் வியப்பு.
கயத்தக்க பூப்பெய்த காமக் கிழமை
நயத்தகு நல்லாளைக் கூடுமா கூடும்
[6] முயக்குக்குச் [7] செவ்வி முலையு முயக்கத்து
[8] நீரு மவட்குத் துணைக் [9] கண்ணி நீர்விட்டோய்
நீயு மவட்குத் துணை.
பணிவி லுயர்சிறப்பிற் பஞ்சவன் கூடல்
மணியெழின் மாமேனி முத்த முறுவல்
அணிபவளச் செவ்வா யறங்காவற் [10] பெண்டிர்
மணியணிந்த [11] தம்முரிமை மைந்தரோ டாடித்
தணிவின்று வையைப் புனல்.
புனலூடு போவதோர் பூமாலை கொண்டை
எனலூழ் வகையெய்திற் றென்றேற்றுக் கொண்ட
புனலூடு [12] நாடறியப் பூமாலை யப்பி
நினைவாரை நெஞ்சிடுக்கண் செய்யுங் கனல்புடன்

* நான்மணி. 21 ; குறள், 58; அகநா. 86: 14.

பி-ம். [1] மறைபாடுவாரை. [2] அகலல்குற்பையேய்த்தது. 3 புனறந்து. [4] செய்தே. [5] புணர்த்ததொன்றே. [6] முயக்கக்கு. [7] செல்வல். [8] நீறாம். [9] கண்ணினீர். [10] பெண்டா. [11] தமமுனிமை. [12] நாடியறியப்.

கூடாமு னூடல் கொடியதிறங் கூடினால்
ஊடாளோ [1] வூர்த்தலர்வந் தூர்ந்து.
எனவாங்கு
ஈப்பா *யடுநறாக் கொண்டதிவ் யாறெனப்
† பார்ப்பா ரொழிந்தார் படிவு.
மைந்தர் மகளிர் மணவிரை [2] தூவிற்றென்
றந்தணர் [3] தோயல ராறு.
வையைதே மேவ வழுவழுப் [4] புற்றென
ஐயர்வாய் பூசுறா ராறு.
[விரைபிரை விரைநுரை கரையழி பிழியூரவூர்தரும்புனல்
கரையொடு கடலிடை வரையொடு கடலிடை நிரைநிரை நீர் [தருநுரை
நுரையுடன் மதகுதொ றிழிதரு புனல் கரைபுரளிய [செலுமறிகடல்
புகுமள [5] வளவியலிசை சிறைதணி வின்று வெள்ளமிகை
வரைபலபுரை யுயர்கயிறணி பயிறொழில்
மணியணி யானைமிசை மைந்தரு மடவாரும்
நிரைநிரை குழீ இயின ருடன்சென்று]
குருமணி யானை யியறேர்ப் பொருநன்
‡ திருமருத முன்றுறை முற்றங் குறுகித்
தெரிமருதம் பாடுப பிணிகொள்யாழ்ப் பாணர்
பாடிப் பாடிப் பாய்புனல்
ஆடி யாடி யருளியவர்
ஊடி யூடி யுணர்த்தப் புகன்று
கூடிக் கூடி மகிழ்பு மகிழ்பு
தேடித் தேடிச் சிதைபு சிதைபு
சூடிச் [6] சூடித் தொழுது தொழுது
[7] மழுபொடு நின்ற மலிபுனல் வையை

---

* அடுநறா : பரிபாடல், 21 : 20. † மேற்படி. 6 : 44-5.

‡ மேற்படி. 7 : 83 ; 11 : 30 : 22 : 45.

பி-ம். [1] ஊர்த்தலர் தூர்ந்து. [2] பூசிற்றென்று. [3] தூவலராறு. [4] புற்றன்றையர். [5] வளவயலிற்சிறை. [6] சூடிக்கைதொழுது. [7] மிழுதொடுசென்ற.

விழுத்தகை நல்லாரு மைந்தரு மாடி
இமிழ்வது [1] போன்றதிந் நீர்குணக்குச் சான்றீர்
முழுவது மிச்சிலா வுண்டு.
சாந்துங் கமழ்தாருங் கோதையுஞ் சுண்ணமும்
கூந்தலும் பித்தையுஞ் சோர்ந்தன பூவினு மல்லாற்
சிறிதானு நீர்நிறந் தோன்றாதிவ் வையையாறு
மழைநீ ரறுகுளத்து வாய்பூசி யாடும்
கழுநீர மஞ்சனக் குங்குமக் கலங்கல்
வழிநீர் விழுநீர வன்று வையை
வெருவரு கொல்யானை வீங்குதோண் மாறன்
உருகெழு கூட லவரோடு வையை
வருபுன லாடிய தன்மை பொருவுங்கால்
இருமுந்நீர் வையம் [2] படித்தென்னை யானூர்க்
கொருநிலையு மாற்ற வியையா வருமரபின்
அந்தர வானியாற் றாயிரங் கண்ணினான்
இந்திர னாடுந் தகைத்து.

பி-ம். [1] போன்றவினனிகானகுணக்குச். [2] பிடித்தென்னை.

## வையை

(3) *செறுநர் விழையாச் செறிந்தநங் கேண்மை
[1] மறுமுறை யானு மியைக நெறிமாண்ட
தண்வரல் வையை யெமக்கு.

(4) †மண்ணார்ந் [2] திசைக்கு முழவொடு கொண்டதோள்
[3] கண்ணா துடன்வீழுங் காரிகை கண்டோர்க்குத்
தம்மொடு நிற்குமோ நெஞ்சு.

(5) ‡முன்புற் றறியா முதற்புணர்ச்சி மொய்குழலை
இன்புற் றணிந்த வியலணியும் வன்பணியும்
நாணேனுந் தொல்லை யணியென்ன நன்னுதலை
... ... ... ... ... ...னந்து.

---

* என்பது, பரிபாடல் ; வெள்ளைச் சுரிதகத்தான் இற்றதற்கு மேற்கோள் (தொல். செய். சூ.121, பேர். ந. உரை) ; இப்பகுதி, "அறவோ ருள்ளா ரருமறை காப்ப" என்னும் பரிபாடலின் இறுதியென்று தெரிகின்றது.

† என்பது, பரிபாடல், வெண்பாவுறுப்பான் வந்ததற்கு மேற்கோள்; தொல். செய். சூ. 120, பேர். ந, உரை.

‡ என்பது அணிந்துழி நாணியது உணர்ந்து தெளிவித்தற்கு விதியாகக் காட்டப்பட்டுள்ளது ; நாற்கவி. சூ. 129; உரை.

பி-ம். [1] அறுமுறை, [2] திசைத்த. [3] கண்ணோடெனவிழூஉம்.

## மதுரை

(6) *உலக மொரு [1] நிறையாத் தானோர் நிறையாப்
புலவர் புலக்கோலாற் றூக்க--உலகனைத்தும்
தான்வாட வாடாத தன்மைத்தே தென்னவன்
நான்மாடக் கூட னகர்.

(7) †மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையுஞ் [2]சீரூர் பூவின்
இதழகத் தனைய தெருவ மிதழகத்
தரும்பொகுட் [3]டனைத்தே யண்ணல் கோயில்
தாதி [4] னனையர் தண்டமிழ்க் குடிகள்
தாதுண், பறவை யனையர் பரிசில் வாழ்நர்
பூவினுட் பிறந்தோ [5] னாவினுட் பிறந்த

*"உலகு மழிசையு முள்ளுணர்ந்து தம்மிற், புலவர் புகழ்க்கோலாற் றூக்க - உலகுதனை, வைத்தெடுத்த பக்கத்து மாநீர் மழிசையே, வைத்தெடுத்த பக்கம் வலிது" (திருச்சந்தவிருத்தம், தனியன்), "மலரு மித்திரு நாட்டியல் வாணர்சொற் கோலால், உலக னைத்தையு நிறுப்பமுன் வாடிடா தோங்கு, மலகில் வண்புக முடையது மதுரையாங் கதனை, இலக யான்சிறி தறிந்தவா றியம்புவல் கேண்மின்" (திருவால. திருநகர. 1), "கைத்தலநான் கிரண்டுடைய மலர்க்கடவுண் மேலொருநாட் கயிலை யாதி, எத்தலமு மொருதுலையிட் டித்தலமு மொருதுலையிட் டிரண்டுந் தூக்க, உத்தமமாந் திருவால வாய்மிகவுங் கனத்ததுகண் டுலகின் மேலா, வைத்ததல மிதுவென்றா லிதன்பெருமை யாவரே வழுத்தற் பாலார்" (திருவிளை. தலவிசேட. 20), "கச்சிமா நகரோர் தட்டுங் கடவுள ருலகோர் தட்டும், வச்சுமுன் னயனார் தூக்க மற்றது மீது செல்ல, நிச்சய முறுகித் தாழ்ந்து நிலமிசை விழுமிவ் வூரை, இச்சகத் தூர்க ளோடு மெண்ணுதன் மடமைப் பாற்றே" (காஞ்சி. திருநகர. 1) என்பவை இதன் கருத்தைத் தழுவிவந்தன.

"உலக மொரு நிறையா" என்பது முதலிய இவ்வுறுப்புக்களாறும், புறத்திரட்டில் நகரென்னும் பகுதியிற் காணப்பெற்றன.

† "நீனிற வுருவி னெடியோன் கொப்பூழ், நான்முக வொருவற் பயந்த பல்லிதழ்த், தாமரைப் பொகுட்டிற் காண்வரத் தோன்றிச், சுடும ணோங்கிய நெடுநகர் வரைப்பின்" பெரும்பாண். 402-5.

பி-ம். [1] துலையாத்தானோர் துலையா. [2] சீறூர். [3] டனையதே. [4] னனைய. [5] னாவினிற்.

*நான்மறைக் கேள்வி நவில்குர லெடுப்ப
ஏம வின்றுயி லெழுத லல்லதை
வாழிய வஞ்சியுங் கோழியும் போலக்
கோழியி னெழாதெம் [1] பேரூர் துயிலே.

(8) தண்டமிழ் வேலித் தமிழ்நாட் டகமெல்லாம்
நின்று நிலைஇப் † புகழ்பூத்த லல்லது
குன்றுத லுண்டோ மதுரை கொடித்தேரான்
குன்றமுண் டாகு மளவு.

(9) செய்யாட் கிழைத்த திலகம்போற் சீர்க்கொப்ப
வையம் விளங்கிப் புகழ்பூத்த லல்லது
பொய்யாத லுண்டோ மதுரை புனைதேரான்
வையையுண் டாகு மளவு.

(10) கார்த்திகை காதிற் கனமகர குண்டலம்போற்
சீர்த்து விளங்கித் திருப்பூத்த லல்லது
கோத்தையுண் டாமோ மதுரை கொடித்தேரான்
வார்த்தையுண் டாகு மளவு.

(11) ஈவாரைக் கொண்டாடி யேற்பாரைப் பார்த்துவக்கும்
சேய்மாடக் கூடலும் செவ்வேள் பரங்குன்றும்
வாழ்வாரே வாழ்வா ரெனப்படுவார் மற்றையார்
போவாரார் புத்தே ளுலகு.

---

* "ஓத லந்தணர் வேதம் பாட" (மதுரை. 656); "கோதி லாத செஞ் சூட்டுடை வாரணங் கூவ, ஓத ஞாலத்து மற்றைய தலத்துளார் விழிப்பர், ஈத லேற்றலோ டறுதொழி லிருபிறப் பாளர், வேத நாதத்தின் விழிப்பதவ் வியனகர் மாக்கள்" திருவாப்பனூர்ப்புராணம், ஆப்பனூர்ச் சருக்கம், 9.

†"மிக்குப்புக ழெய்திய பெரும்பெயர் மதுரை" (மதுரை. 699); "அலகில் வண்புக ழுடையது மதுரை" திருவால. திருநகர. 1.

பி-ம். [1] பேரிருந்துயிலே.

## *விசேடக் குறிப்பு

### (1 - ஆம் பாடல்)

1. ஆயிரம் ... ... ...தலை : 3 : 59, 13 : 27-8, 'வானா ரெழிலி'; 79 ; (ப. 168).

3. மாயுடை - மாவை உடைய ; மா - திருமகள்.

4. பணை மிசை - மூங்கில் முளையை உண்ணுகின்ற ; வேழத்திற்கு அடை.

5. வளைநாஞ்சில் ஒருகுழையொருவன் : 15 : 57; சிலப். 14 :9. ஒரு குழை யொருவன் - பலராமன் ; கலி. 26 : 1, 105 : 11.

4-5. வேழமேந்திய ... ... ...ஒருவனை; வேழம் - யானை ; பலராமருக்கு வேழக் கொடியும் உண்மை, "நின்னொான் றுயர்கொடி யானை" (4 : 40) என்பதனாலும் பெறப்படும்.

6. எரிமலர் - தாமரைமலர். 9. மணி - கௌஸ்துபம்.

9-10. ஒப்பு : 13 : 1-2.

11. சேவல் - கருடன் ; "சேவலோங்குயர் கொடியோயே" 4 : 36. 13. மு. 2 : 57.

அந்தணர் அருமறை : 3 : 14, 4 : 65 ; இறை. சூ. 1.

28. இருவர் - பிரமனும் காமனும்; காமனும் சாமனுமெனினுமாம்.

34. வல்லா - வன்மையில்லாத ; சிலப். 16 : 99.

35. மெல்லிய - புன்மையையுடையன ; "மடவர் மெல்லியர் செல்லினும்" புறநா. 106 : 4, உரையைப் பார்க்க.

35-6. அல்லியந்திரு ; அல்லி - அகவிதழ் : "அல்லிசே ரணங்கிற் கணங்கு", "அல்லிசே ரணங்கு", "அல்லியுட்பாவை" சீவக. 162, 1329, 1505.

36. திருமறுமார்ப : 4 : 59, உரை முதலியவற்றைப் பார்க்க; கலி. 104. 10.

37-8. அந்தணர் காக்கும் அறன் : அந்தண ரென்போ ரற வோர்" குறள். 30.

41-2. அங்கண்... ... ..திங்கள் : "அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்கும், திங்கள்" நாலடி. 151. 43. பி-ம். 'உயரிய'

46. புலம் - வேதம் ; 6 : 45.

---

* நூற் பெயரோடு இல்லாத எண்கள் பரிபாடலுக் குரியவையெனக் கொள்க.

47. வலனுயரெழிலி : முல்லை. 4-5; நெடுநல். 1-2.
மாக விசும்பு : மதுரை. 454, அடிக்.

48. நீடிய இமயம் : புறநா. 2 : 19-24; மிக உயர்ந்த இமயமுமாம்; "ஓங்கிய வரையளந் தறியாப் பொன்படு நெடுங்கோட், டிமயம்" புறநா. 39 : 13-5.

55. நின்னொக்கும் புகழ்நிழலவை : 3 : 46.

58. எள்ளுநர்... ...நேமியவை : 2 : 48-9. கடந்தட்ட - வஞ்சியாது எதிர்நின்று கொன்ற.

59. "நின்னது திகழொளி சிறப்பிரு டிருமணி" 2: 52.

64. ஏம் = ஏமம் - இன்பம். 65. வாய்மொழி - வேதம் ; 3 : 12.

ஃஃஃ

## (2 - ஆம் பாடல்)

4. ஊழிகள் எழுவகையினவென்பதொரு செய்தி, "ஊழியே மூான வொருவா போற்றி", "ஏழு கொலாமவ ரூழி படைத்தன" என்னும் தேவாரங்களால் பெறப்படுகிறது.

1-4. ஒப்பு : 3 : 21-3.

1-4. உரை. மாறிவருதலாகிய ... ..ஞாயிறும் : "மாறி வருதி" புறநா. 8 : 8.

5-6. உரை. வளிமுதற்... ...வானம்: 'தன்னை ஒழிந்த நான்கு பூதமும் தன்னிடத்தே அகன்று விரிதற்குக் காரணமான பெரிய ஆகாயம்' பெரும்பாண். 1, உரை.

7-12. உரை. வேதத்துள்ளும் கூறப்பட்டது: கூறப்பட்ட இடம் புருஷ ஸூக்தம் முதலியன.

13. ஆம்பல் : 3 : 44 ; பதிற். 63 : 39. சங்கம் : "சங்குதரு நீணிதியம்" (சீவக. 493); புறநா. 18, உரை.

14. கமலம் - இது தாமரையெனவும் வழங்கும். வெள்ளம் : ஐங்குறு. 281 ; பதிற். 21 : 38, 63 : 20.

13-4. "ஐயம் பல்லென வருஉ மிறுதி, அல்பெயரெண்" (தொல். புள்ளிமயங்கு. சூ.98) என்பதன் உரையைப் பார்க்க.

20. புறநா. 56: 1-10, அடிக் ; மதுரைக்கோவை, 143.

22. உடுக்கை : இவ்வுடை யமுனை நதியால் அளிக்கப்பட்ட தென்பது புராண வரலாறு. பொலம்பனைக் கொடியோன்: "பொற்பனை வெள்ளை" இன்னா. 1.

25. கேள்வி-வேதம் : 61 : பு.வெ.163, கொளு; பதிற். 21: 1

30. அ-அழகு ; 12 : 44, உரை.

41-4. வீரர் தலைக்குப் பனங்கனி: பெருங். 1. 46 : 20-22; சீவக. 2227; களவழி. 24; மேருமந்தர. பலதேவர். 15.

52. திருமணி : 1 : 59; இருளும் திருமணியுமெனலுமாம்: 13 : 42-3, 15 : 50.

54. வாய்மை வயங்கிய வைகல் : கலி. 35 : 25 ; பதிற். 21 : 4.

55. குறள், 151. 56. புறநா. 105 : 7, அடிக்.

57. மு. 1:13. 61. கேள்வி - வேதம்; அடி, 25, விசேடக்.

76. கொடும்பாடு : இனியது. 30; இன்னா. 7; திருச்சிற். 90.

ஃஃஃ

## (3 - ஆம் பாடல்)

1. 'மாயன், மாஅயோயே என அன்னீறும் அயல் திரிந்து இறுதி யகரவொற்றாய் ஏகாரம் மிகுதலும்' இ.வி. சூ. 209, உரை.

2. 'பிறவிப் பிணிக்கு மருந்தாகலின் நற்றாளென்றார்' (குறள். 2, பரிமேல்.) 3. மணிதிகழுருபு : 2 : 52, விசேடக்.

5. உரை. வேள்விமுதல்வன் - இயமானன். அட்டமூர்த்தங்கள்: "வெண்சுடர் செஞ்சுட ராகிய விண்ணொடு, புவிபுன லனல்கான் மதிபுல வோனென, முழுது நிறைந்த முக்கட் பெருமான்" (கல்லாடம்); "எண் கூறவ னொருபேருரு" (தக்க. 452.) பாம்புகள் - இராகு கேதுக்கள் ; இவற்றைச் சாயாக்கிரகங்களென்பர்.

8. தருமனும் மடங்கலும் : "மடங்கலுங் கணிச்சியுங் காலனுங் கூற்றும்" (கலி. 105: 20); கூற்றம் வேறு யமன் வேறென்பது, "சொற்பல சொல்லி யென்கொலுயிர் வீசுபாசம் விடுகாலன் யாவர் துணையே. பற்பல கோடியண்ட மொருதண்டி லெற்றும் யமராசன் யாவர் படையே" (தக்க. 444), "அந்தக னத்துணை யமைச்ச னாகிய, வெந்திறற் காலனை விளித்து" (கந்த. மார்க்கண்டேய. 216) என்பவற்றாலும் விளங்கும்.

உரை. குதிரைப்பெட்டை: "ஒட்டகங் குதிரை கழுதை மரையிவை, பெட்டை யென்னும் பெயர்க்கொடைக் குரிய" தொல். மரபு. சூ. 52.

11. வாய்மொழி : 1 : 65, விசேடக்.

14. அந்தணரருமறை : 1 : 13, விசேடக்.

16. உரை. ஒட்டம் - பந்தயம் ; "நின்னை வெல்வி னொட்டம் யாவு நீகொடுக்க" வி. பா. சூதுபோர். 172.

18. சேவல் : 1 : 11, விசேடக்.

17-8. பயந்தோள்... ... சேவலோயே : கொடியோயென விகுதி பிரித்தல் வேண்டுமென்பர் ; பிரயோக. 19.

19-20. உரை. 'தமிழ்கூறு நல்லுலகத்து' என்னுமிடத்தும் உலகினுட் பாகுபாட்டை உலகென்றார்; "நாவல் பெயரிய ஞாலம்" (பு. வெ. 126.) 21. கூற்றமும் ஞமனும் : 8, விசேடக்.

23-4. வராகாவதாரம் : 2 : 15-9.

25. உரை. புட்கல முதலிய மேகங்கள் : சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம் என்னும் ஏழுமாகும். இவற்றுட் புட்கலாவர்த்தம் பொன்மழை பொழிதலாற் சிறந்ததென்பர் ; "மைக்கு லத்தினிற் புட்கலா வர்த்தமா மெனவே" (வி.பா. குருகுலச். 28); "புட்கலா வருத்த மாதி" திருவிளை. 14 : 41.

28-30. உரை. நின்தொன்மையும் ... ... ...வேற்றுமையின்று : 'வல்லார்க்கும் மாட்டார்க்கும் ஒப்பப் புகழ்ந்து முடிய ஒண்ணாமையின் மாயோனன்ன வென்றார்' புறநா. 57:1-3, உரை.

31. உரை. கூந்தன்மா : "கூந்தன்மா கொன்று குடமாடிக் கோவலனாய்" முத்தொள்ளாயிரம்.

33. அச்சு : "அச்சா றாக" கலி : 75: 20.

37. அறுகை நெடுவேளென்றது தத்தாத்திரேயரை நினைந்து கூறியதுபோலும்.

38. எழுகையாள : அக்கினிக்கு ஏழுகையுண்டென்பராதலின் அக்கினி வடிவுடையனென்பது கருதிக் கூறப்பட்டதுபோலும். எண்கை யேந்தல் : இது பிரமனை நினைந்து கூறியதுபோலும்; "தாமரைப் பூவினுட் பிறந்தோனுந் தாதையும், நீ" 13-4.

40. மதவலி - மிக்க வலியை யுடையாய் ; முருகு. 232.

43. ஆறறிகடவுள் - ஆறு வேதாங்கங்களாலும் அறியப்படும் கடவுளே. 44. ஆம்பல் : 2 : 13, விசேடக்.

52-3. மதியுண்டிஅமரர் : "வழியது பக்கத்தமர ருண்டி, மதி" (11 : 35 -6); "உம்ப ருண்ணவுண்ணத், தொலையாத வாரமுதே" மதுரைக்கோவை, 232.

54-6. உரை. அணுத்திணிந்த நிலவுலகம் : 'அணுச்செறிந்தநிலம்' புறநா. 2 : 1, உரை.

57-8. "நினக்கு, மாற்றோ ரும்மிலர் கேளிரு மிலர்" 4 : 53-4.

59. சேடனுக்கு ஆயிரம் தலை : 1 : 1, விசேடக்.

76. ஏமத்தை - காக்குந் தொழிலையுடையாய்.

78. உரை. "பாரிடை யைந்தாய்ப் பரந்தாய் போற்றி, நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி, தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி, வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி, வெளியிடை யொன்றாய் விளைந்தாய் போற்றி" (திருவா. போற்றித்.) ; தே. பார்க்க ; திருச்சந்த. 1 - பார்க்க.

77-8. உரை. பூரணப்பொருள் : இதுபற்றி நான் எழுதிக்கேட்ட பொழுது மதுரைச் செந்தமிழ்ப்பத்திராசிரியர்களாகிய ஸ்ரீமத். திருநாராயணையங்காரவர்கள் எழுதியன வருமாறு:-

வடமொழியில் எண்ணுப் பெயர்களில் சங்கியாவாசகமென்றும் சங்கியா பூரணவாசகமென்றும் இரண்டுவகையுண்டு. அவற்றுள் சங்கியாபூரண வாசகங்களுக்குரிய இலக்கணம் (பாணிநீயம்) அஷ்டாத்யாயியில் ஐந்தாவது அத்தியாயம் இரண்டாவது பாதம் 48-ஆவது சூத்திரம்முதற் சொல்லப்பட்டுள்ளது. இவ்வெண்ணுப் பெயர்கள் ஒருமைப் பெயர்களாயுள்ளன. தமிழிலக்கணங்களில் இரண்டு முதலிய எண்ணுப் பெயர்களெல்லாம் பன்மைப்பெயர்களென்று சொல்லப்பட்டன. பூரணப்பொருட்டாவது : இரண்டு முதலிய எண்ணுப்பெயர்கள் அவ்வெண்ணப்படும் பொருள்களின் சமுதாயத்தை உணர்த்திப் பன்மைப் பெயராகாது, அவ்வெண்ணுப் பொருளை நிரப்பும் (பூரணஞ்செய்யும்) அவ்வெண்ணுவரிசையின் இறுதிப்பொருள் ஒன்றையே உணர்த்துவது. இரண்டு முதலிய பெயர்கள் இரண்டாவது என்றற்றொடக்கமான பொருளுடையனவாக வந்து எண்ணுப் பொருளை நிரப்பி (பூரணஞ் செய்து) நிற்கும் பொருளை உணர்த்துமிடத்து அப்பொருள் பூரணப் பொருளெனப்படும்.

79. உரை. மான் - மகத்தத்துவம்.

77-9. நன். சூ. 423, மயிலை. மேற்.

80. உரை. தத்துவம் இருபத்தைந்து : "அரிய தத்துவ மையைந்தின் பேதமும், மரபி னாடினர் வாலுணர் வெய்திய, திருவி னாயகன்" கந்த. மேருப். 74.

83. காவலன் - காத்தலில் வல்லவன்: காத்தற்கடவுளென்றபடி

87. உரை. வனமாலை - திருத்துழாய் ; "அணிகொண் டலர்ந்த வனமாலை சூடி" **சூளா.** அரசியற். 197.

88. பொலம்புரியாடை - பீதாம்பரம்.

91-4. உரை நிறைந்த... ... ...தோன்றாத: "உருகொழு மாநில மியற்றுவான், விரிதிரை நீக்குவான்" (கலி. 106 : 18-9) ; "வையகம் போர்த்த வயங்கொலி நீர் - கையகலக், கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தே" பு.வெ. 35.

## (4 - ஆம் பாடல்)

6-7. உரை. அடுத்து வரலுவமை : சீவக. 107, ந. திருமணி புரையுமெய் : 1 : 59, விசேடக். 8. மாஅமெய் - கரியமேனி.

ஃஃஃ

18. படி : 'படியோரென்பது பிரதியோரென்னும் வடமொழித் திரிவு' (அகநா. 22 : 5, உரை) ; 'படிச்சந்தமென்பது பிரதிச்சந்தமென்பதன் வடமொழிச் சிதைவு' (சிற். 78, பேர்.) என்பவற்றால் இச்சொல் பிரதியென்பதன் சிதைவென்று தெரிகின்றது.

19. இடி முரசு : 22 : 4. 26. சாயல் - அருள்; 2: 56, உரை.

25-6. ஞாயிறும் திங்களும் உவமை: புறநா. 55 : 13-5, அடிக்.

27. வண்மைக்கு மாரி : புறநா. 54 : 6, அடிக்..

28. நோன்மைக்கு ஞாலம்: 2 : 55, விசேடக்.

30. நீரின் அகலம் : "நீரினு மாரள வின்றே" (குறுந். 3 : 2); "நன்மை கடலிற் பெரிது" குறள், 103.

30. உரை. திருமாலுடைய உருவம் நீரென்பது ஒரு சாரார் கொள்கை; தானொரு கூறு சலமய னாமே (திருமந்திரம், பாயிரம்); "புனலன்", "மாய னுதகத் திருவுடம்பு" தக்க. 710-11.

34. ஏமம் - இன்பம்.

33-5. உரை. இவை முதலியவற்றை இங்கே இவர் விளக்கினது போலவே, "செய்குன் றுவையிவை சீர்மலர் வாவி விசும்பியங்கி, நைகின்ற திங்களெய்ப் பாறும் பொழிலவை" (திருச்சிற். 223) என்பதனுரையில், 'இவையென்பது தன் முன்னுள்ளவற்றை; உவையென்பது முன்னின்றவற்றிற் சிறிது சேயவற்றை; அவையென்பது அவற்றினும் சேயவற்றை' எனப் பேராசிரியரும் விளக்கியுள்ளார்.

36. சேவலோங்குயர்கொடி : 1 : 11, விசேடக்.

38-40. பலதேவர் கொடிகள் : 1 : 4-5. 47. 18-ஆம் அடி

50. செம்மை-நடுநிலை. 54. படிமதம் : 3 : 57-8.

53. ஏமாற்றல்- ஏமமாற்றல். 59. உரை. திருவாகிய மறு : 1 : 36, விசேடக்.

60-61. உந்தித்தாமரை கண்ணுக்கு : 15 : 49.

65. அந்தணரருமறை : 1 : 13, விசேடக்.

70. எவ்வயினோயும் நீயே என்றது 'விஷ்ணு' என்னும் சொற் பொருளை விளக்கியவாறு.

ஃஃஃ

## (5 - ஆம் பாடல்)

1-7. முருகு. 45-61, அடிக் ; "மாகடல் கலக்குற மாக்கொன்ற மடங்காப்போர், வேல்வல்லான்" கலி. 104 : 13-4.

9. குருகொடு பெயர்பெற்ற வரை : "குருகுபெயர்க் குன்றம்" (சிலப். குன்றக்; மணி. 5 : 13.) 9-10. 21 : 9.

11. முழவுத்தோள் : "முழவுறழ் தடக்கை" முருகு. 215.

12. ஞாயிற்றேர் நிறத்தகை : முருகு. 1-3.

14. சால்வ : "வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ" முருகு. 265.

14-5. உரை. கண்டார்க்கு அச்சஞ்செய்யும் வெறியாட்டு விழா: "முரணின ருட்க, முருகாற்றுப் படுத்த வுருகெழு வியனகர்" முருகு. 243-4.

17. உரை. இங்கே எழுதியவுரையைப் பதப்பொருளாகக் கொள்ளாமற் கருத்தாகக் கொள்க; 'ஆதிபகவன் முதற்றேயென உலகின் மேல் வைத்துக் கூறினார் ; கூறினாரேனும் உலகிற்குமுதல் ஆதிபகவனென்பது கருத்தாகக்கொள்க' (குறள். 1, பரிமேல்.) என்பது காண்க.

24. உரை. இமயம் வில்லாக : பரி. திரட்டு, 1 : 76-7: "இமயவில் வாங்கிய வீசன்" கம்ப. கார்முக. 12.

25. ஓரழலம்பு : "மந்தர வில்லி னந்தணன் விட்ட, தீவா யம்பு" (பெருங். 1. 43 : 120-21) ; "திரிபுர மெரியத் தேவர் வேண்ட, எரிமுகப் பேரம் பேவல் கேட்ப" (சிலப். 6 : 40-41); "கயவர்புரமோரம்பாற் செற்றவன்" திருநா. தே.

24-5. "ஓங்குமலைப் பெருவிற் பாம்புஞாண் கொளீஇ, ஒரு கணை கொண்டு மூவெயி லுடற்றி" புறநா. 55 : 1-2.

33. வாய்மையன் : "அருந்தவ முதல்வன்போற் பொய்கூறாய்" (கலி. 100 : 7-8) ; சிவபெருமான் களக்கா டென்னும் தலத்தில் சத்திய வாகீசரென்னும் திருநாமத்தோடும், திருப்பூந்துருத்தியில் பொய்யிலியப்பரென்னும் திருநாமத்தோடும் எழுந்தருளியிருத்தல் இங்கே கருதற்குரியது.

22-54. உரை. அமரர்சேனைக்குத் தலைவன் : "வானோர் வணங்குவிற் றானைத் தலைவ" முருகு. 260.

44. உரை. கடவுட்கற்பு : "கடவுட் கற்பொடு" அகநா. 184 : 1.

45. உரை. மறுவற்ற கற்பு - அறக்கற்பு ; "மறுவில் கற்பின்" முருகு. 6, உரையைப் பார்க்க.

48. 'நீலப்பைஞ்சுனை' என்பதற்கு, "தருப்பைவளர்ந்த பசியசுனை' என்று உரைகூறி, 'நீலம், நீல நிறத்தையுடைய தருப்பைக்கு ஆகுபெயர்' என்பர் நச்சினார்க்கினியர்; முருகு. 253, உரை.

49. பதுமத்துப்பாயல்; "சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மா ரறுவர், திருமலைப்பா லுண்டான்" (சிலப். 24 : உரையினி" ); "சரவணப் பூந்தொட்டி லேறி யறுவர்கொங்கை, விரும்பி" கந்தரலங்காரம்.

61. திருந்துகோன் ஞமன்: "தெரிகோன்ஞமன்ன் போல" (புறநா. 6 : 9) என்பதும், 'ஞமன் - யமனெனினும் அமையும்' என்னும் அதன் உரையும் இங்கே ஒப்புநோக்கற்குரியன.

76. மடவோரென்றது உலோகாயதரை ; இதற்குக் கூறியவுரை யோடு, "இம்மையு மிம்மைப் பயனுமிப் பிறப்பே, பொய்ம்மை மறுமை யுண் டாய்வினை துய்த்தல்" (மணி. 27 : 275 - 6) என்பதும், 'இறந்த

வுயிர் பின் பிறவாதென்றும்... ...சொல்லும் உலோகாயதம்' (குறள். 281, பரிமேல்.) என்று இவ்வுரையாசிரியரே எழுதியிருப்பதும் கருதற்பாலன..

79. உரை. 'அறத்தினாற் பொருளாக்கி அப்பொருளாற் காம நுகர்வல்' தொல். அகத். சூ. 41, ந..

80. உரை. எமக்கு வீடுபயக்கும்...அன்பு: "அருளென்னு மன்பீன் குழவி" (குறள். 757); "புத்தியை வாங்கிநின் பாதாம் புயத்திற் புகட்டியன்பால், முத்தியை வாங்க வறிகின்றிலேன்" கந்தரலங்காரம்.

81. உருளிணர் - தேருருள் போன்ற பூக்களையுடைய கொத்து; முருகு. 11, ந.

ﮩﮩﮩ

## (6 - ஆம் பாடல்)

7-8. "சீர்முற்றிப் புலவர்வாய்ச் சிறப்பெய்தி யிருநிலம், தார் முற்றி யதுபோலத் தகைபூத்த வையை" (கலி. 67 : 2-3); "புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி, வையை யென்ற பொய்யாக் குலக் கொடி" சிலப். 13 : 169-70.

11. அவி ஆராதனை அழல் : 10 : 84.

24. உரை. உடைப்பு அடைக்க ஆளேறுதற்குப் பறையறைதல்: 7 : 16, 10 : 7-8; "கார்த்தகான் மள்ளர் வெள்ளக் கலிப்பறை கறங்க" (கம்ப. ஆற்றுப். 18); "மன்ற றிகழ்தென் கரைகடந்து மதுரை நகருட் புகக்கண்டு, துன்று மிரவிற் பறையறையுஞ் சும்மை கேட்டு" (திருவால. 30 : 5) ; "வெறித்தடக்கைமத யானை மந்திரிகள் வேறுவேறுபல குடிகளும், குறித்தெடுத்தெழுதி யெல்லையிட்டளவு கோல்கிடத்திவரை கீறியே, அறுத்துவிட்டுநக ரெங்கணும்பறை யறைந்தழைத்துவிடு மாளெலாம், செறித்து விட்டவர வர்க்களந்தபடி செய்மினென்றுவரு வித்தனர்" திருவிளை. 61 : 3.

28. ஈரணி : "தார்கொண்டா டலைக்கோதை தடுமாறிப் பூண்ட நின், ஈரணி சிதையாதெம் மில்வந்து நின்றதை" கலி. 66 : 15-6.

29. தணிபுனல்: "தணிமழை" (9: 11) ; "தணியார்மதி" தே.

41-2. வையை நீரின் மணம் : 46-50, 16 : 32-8.

45. புலம் - வேதம் ; 1 : 46, விசேடக்.

46. உரை. தார் மைந்தராற் புனையப்படுவதென்பதும் கோதை மகளிராற் புனையப்படுவதென்பதும் பெரும்பான்மையான வழக்கு; 20 : 20-21 ; சீவக. 2119.

49. நாரரி நறவம் - முருங்கைமரம் முதலியவற்றின் பட்டைகளிலிருந்து அரித்துச் செய்யப்பட்ட கள்; பன்னாடையால் அரிக்கப்பட்ட கள்ளெனலுமாம்; புறநா. 170, 297, 367, 400.

69. சேஎய் குன்றம் : "கழறொடிச் சேஎய் குன்றம்" குறுந். 1 : 3.

69. உரை. சேய்குன்றத்தாணை : 95.

71. ஆமாம் : "இருப்புவண மேனியனே யென்றாலோ வாமாம், திருப்புவணத் தீசன் றிறம்" தனிப்.

71-4. காமத்திற்கு நீர்ப்பெருக்கு : "நீடிய மாஅத்த கோடு தோய் மலிர்நிறை, இறைத்துணைச் சென்றற் றாஅங், கனைப்பெருங் காம மீண்டுகடைக் கொளலே" குறுந். 99 : 4-6.

79. தீம்புனலிற் செல்மரம் : "கல்பொரு திரங்கு மல்லற் பேரி யாற்று, நீர்வழிப் படூஉம் புணை" புறநா. 192 : 8-9.

80. மார்பு புணை : "ஆர்கலி வெற்பன் மார்புபுணை யாகக், கோடுயர் நெடுவரைக் கவாஅற் பகலே, பாடின் னருவி யாடுத லினிதே" குறுந். 353 : 1-3.

89. உரை. அல்லாந்து : 99, 12 : 71; 'அல்லாப்பர் செம்மாப்ப ரென்பனபோலச் சோகாப்பரென்பது ஒருசொல்' (குறள், 127, பரிமேல்); "ஆக்க மிழந்தேமென் றல்லாவார்" (குறள். 593) என்ற விடத்து அல்லாவாரென்பதற்கு அலமராரெனப் பொருள் எழுதுவர்.

95. தலைதொட்டேன் : "தலையினாற் றொட்டுற்றேன் சூள்" (கலி. 108 : 56); "அணைவேனென்று நீர்தலையைத், தீண்ட" பிசஷாடன. 5.

104. உரை. உணர்ப்புவயின் வாரா ஊடல் : "உணர்ப்புவயின் வாரா வூடலுற் றோள்வயின், உணர்த்தல் வேண்டிய கிழவோன்" தொல். கற்பு. சூ.8.

ஃஃ

## (7 - ஆம் பாடல்)

9. உரை. மென்புலம் - மருதமும் நெய்தலும்; வன்புலம் - குறிஞ் சியும் முல்லையும்; புறநா. 42 : 17-8, உரை.

11. உரை. நரந்தப்புல் : இது நரந்தையெனவும் வரும்; "நரந்தை நறும்புன் மேய்ந்த கவரி" புறநா. 132 : 4.

13-6. "இருவினை மாமரம் வேர்பறித்து... ...மாப்புகைக் கரை சேர் வண்டுடைக் குளத்தின், மீக்கொள மேன்மேன் மகிழ்தலி னோக்கி, அருச்சனை வயலு ளன்புவித் திட்டுத், தொண்ட வுழவ ராரத் தந்த, அண்டத் தரும்பெறன் மேகன் வாழ்க" திருவா. திருவண்டப்.

20-22. "பன்மலர் மாலை வேய்ந்து பானுரைப் போர்வை போர்த்துத், தென்மலைத் தேய்ந்த சாந்த மான்மதச் சேறு பூசிப், பொன்மணி யாரந் தாங்கிப் பொருநையாங் கன்னி முந்நீர்த், தன்மகிழ் கிழவ னாகந் தழீஇக்கொடு கலந்த தன்றே" திருவிளை. நாட்டுப். 10.

25-6. மணலின் எழுதிய பாவை: "வாலிழை மடமங்கையர், வரிமணற் புனைபாவைக்கு" புறநா. 11 : 2-3.

34. "வாளையுஞ் செங்கண் வராலு மடலிளந் தெங்குகுத்த, பாளை யந் தேறல் பருகிக் களிக்கும் பழனங்களே" இறை. சூ.23. மேற்.

36. உணர்த்த உணரா மாதர் : உணர்ப்புவயின் வாரா ஊடலை யுடைய மகளிர் ; தொல். கற்பு. சூ. 8; இறை. சூ.50.

38-9. உரை. "விலாப்புடை மருங்கு விசிப்ப மாந்திய" (புறநா. 61 : 6) என்பதை உரை நடையாக அமைத்தனர்.

44-5. "சாய்குழைப் பிண்டித் தளிர்காதிற் றையினாள்" (11 : 95); "வண்காது நிறைந்த பிண்டி யொண்டளிர்" முருகு. 31.

46. தொய்யகம் தலைப்பாளை யென்பர்; சிலப். 6 : 107, அரும்பத.

47. உரை. துகிற்குள் அணியும் மேகலை : 'துகிலுக்குள்ளே நுழைந்து கிடந்த பவளமேகலை' சீவக. 1184, ந.

55. அணைமென்றோள் : கலி. 1 : 9, 40 : 8; பெருங். 2. 15 : 72; சீவக. 170.

கரும்பின் அணைமென்றோள் : "நெடுமென்றோட், பெய்கரும் பீர்க்கவும்" கலி. 143 : 31-2.

58. "இரும்பீர் வடியன்ன வுண்கண்" (கலி. 64 : 21); "எஃகுற், றிருவே றாகிய தெரிதரு வனப்பின், மாவி னறுவடி போலக் காண் டொறு, மேவ றண்டா மகிழ்நோக் குண்கண்" அகநா. 29 : 5-8.

63-4. கண்ணுக்கு நறவம்பூ : 8 : 75. பெரும்பாண். 386; அகநா. 19 : 9-11.

62-4. இருவகை நறா : பரிபாடற்றிரட்டு, 1 : 55-6.

70. சிகை-குறை; "அறுசுவை யுண்டி யமர்ந்தில்லா ளூட்ட, மறுசிகை நீக்கியுண் டாரும்", "இருசிகையு முண்டீரோ வென்று" (நாலடி. 1, 18.) சிகைகிடந்த ஊடல் : 10 : 32.

சேப்பு - செம்மை; "கழற்கால் சேக்குஞ் சேப்புடையார்" திருவாப்பனூர்ப் புராணம், பாயிரம், 1.

80. உரை. அரங்கேறிய தலைக்கோல் மகளிர்: சிலப். அரங்கேற்று காதை முதலியவற்றைப் பார்க்க.

83. திருமருத முன்துறை : 11 : 30, 22 : 45; பரி. திரட்டு. 2 : 72; கலி. 26 : 13 ; அகநா. 36 : 9-10; சிலப். 14 : 72.

85. உரை. விடிவுறுதல் : "குன்றுங் குழியுங் குறுகி வழிநடப்ப, தென்று விடியுமெமக் கெங்கோவே" (தனிப்பாடல்), "வடிந்திடத் திமிர வெள்ளம் வளர்ந்திடப் பரிதி காளிற் படிந்திடு மாத்திரேயன் படருறு

வினையோ நோயோ, முடிந்தநா ளதுவோ வென்று முடிவிலாப் பிறப்போ வெல்லாம், விடிந்தது விடிந்த தென்ன விடிந்தது கங்குற் காலம்" (திருக்குற். மந்தமாருத. 72) என்பவற்றில் உள்ள விடிதலென்பது துன்பம் நீங்குதலென்னும் பொருள் தருதல் காண்க.

ஃஃஃ

## (8 - ஆம் பாடல்)

4-7. முப்பத்து மூவர் : 3 : 6-8; முருகு. 167.

13. நின்னீன்ற நிரையிதழ்த் தாமரை : 5 : 12.

21. உரை. மறுதலை: சிற். 225, உரை.

40. ஆராக் காமம் : "ஆராக் காம மடூஉநின் றலைப்ப" அகநா. 322.

43. அடியோர் : "அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினுங், கடிவரை யிலபுறத் தென்மனார் புலவர்" தொல். அகத். சூ.23.

44. மகன்றிற் புணர்ச்சி : "பூவிடைப் படினும் யாண்டு கழிந் தன்ன, நீருறை மகன்றிற் புணர்ச்சி" குறுந். 57: 1-2.

51-5. உரை. பார்ப்பாராணை : 'பார்ப்பாரடியைத் தொடினும்' (67-8, உரை); உலகத்துச் சூளுறுவார் பார்ப்பாரையும் பசுவையும் பெண்டிரையும் தொட்டுச் சூளுறுவர்' இறை. சூ.18, உரை.

65-6. "நீயுறும் பொய்ச்சூ ளணங்காயின்" கலி. 88 : 20.

68. அறவர் - பார்ப்பார் ; குறள், 30.

75. நறவிதழ் மலருண்கண் : 7 : 63, விசேடக்.

77. முல்லை முகையை வென்று முத்தை ஒக்கும் வெண்பல் : "ஒத்தது வென்றதென் றொருபொருட் குவமை, வைத்தன வாயொரு தொடர்பினும் வருமே" மாறனலங்காரம், சூ. 106.

80-81. "நறும்புகை யெடுத்துக் குறிஞ்சி பாடி, இமிழிசை யருவியொ டின்னியங் கறங்க, உருவப் பல்பூத் தூஉய்" முருகு. 239-41.

86. எருமை - கூற்று; ஆகுபெயர் : "ஏற்றெருமை நெஞ்சிடந்திட்டு", "ஏற்றெருமை நெஞ்சம் வடிம்பி னிடந்திட்டு" (கலி. 101 : 25, 103 : 43.) 100-101. 5 : 64-8.

112. "நிரைவளை முன்கை நேரிழை மகளிர்... ...சுனைபாய் சோர்விடை நோக்கி" குறுந். 335:1-3.

113-5. "திருமுகங் கமல மிணைவிழி கமலஞ் செய்யவாய் கமலநித் திலந்தாழ், வருமுலை கமலந் துணைக்கரங் கமலம்" தணிகை. களவு. 43.

126. கடம்பமர் செல்வன் : 19 : 2, 104; முருகு. 225; பெரும் பாண். 75; ஐந்திணையம்பது, 1.

129. மா : வியங்கோளசைச்சொல் ; தொல். இடை. சூ.25.

ஷஷஷ

(9 - ஆம் பாடல்)

1-2. 'இமயத்திற்கு ஒருதரமாக உலகத்தைத் தாங்கும் ஆய் உளனாகவும்' (புறநா. 132, உரை, பிரதிபேதம்) என்பதனால் இமயம் உலகத்தைத் தாங்குதல் பெறப்படும்.

4. எரிமலர்த்தாமரை : 1 : 6.

14. காதற் காமம் : "காதலங் காமம்" 6 : 71.

14-5. பான்மைவகை - ஊழினது வகை.

25. பொருளியல்பிற் றண்டமிழ் : பொருளிலக்கணம் தமிழுக்குச் சிறப்புடையதென்பதையும் அதனுள் களவுப்பகுதி சிறப்புடைய தென்பதையும், ஆரிய வரசன் பிரகத்தனைத் தமிழ் அறிவித்தற்கு வந்த கபிலர், களவுப் புணர்ச்சியைக் கூறும் குறிஞ்சிப்பாட்டைப் பாடியதும் "இன்றமி ழியற்கை யின்பம்" (சீவக. 2063) என்பதும், "இனிய தமிழ் கூறிய இயற்கைப் புணர்ச்சியாகிய இன்பம்" (ந) என்னும் அதனுரையும் தமிழுக்கும் களவுப்புணர்ச்சிக்கும் உள்ள தொடர்பை விளக்கும், 'சிறப்பினாற் பெயர் பெற்றது களவியலென்பது ; என்னை? களவு கற்பென்னும் கைகோளிரண்டனுள் களவினைச் சிறப்புடைத்தென்று வேண்டும் இவ்வாசிரியன்' இறை. சூ. 1, உரை.

22. அப்புணர்ச்சி... ...ஊடலானாயது. "ஊடுதல் காமத்திற் கின்பம்" குறள். 1330.

16-26. உரை. முருகன் தமிழாய்ந்தது : 'அவருள் தலைச்சங்க மிருந்தார் அகத்தியனாரும் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும் குன்றெறிந்த முருகவேளும்' இறை. சூ.1, உரை.

34. உரை. "பெயினந்தி வறப்பிற்சாம் புலத்திற்குப் பெயல் போல்யான், செலினந்திச் செறிற்சாம்பு மிவள்" கலி. 78 : 19-20.

39-40. கோதை கோலாகப்புடைத்தல் : 12 : 58; "நல்லார் தங் கோதையா லலைத்தபுண்" (கலி. 67 : 6-7); "கொங்கலர் கோதை கொண்டுபுறத் தோச்சியும் பெருங். 1. 42 : 186.

43. கொண்டை : கொண்டைக் கூழைத் தண்டழைக் கடைசியர் புறநா. 61 : 1.

48-9. ஊதநுடங்கும் நுசுப்பார் : "வண்டுத வம்மருங்கு னோ மென்று" (சீவக. 1700) ; "ஈக்காற்றுக் காற்றா விடை" தனிப்பாடல்.

52. உரை. வடிக்கயிறு - குதிரையின் வாய்க்கயிறு ; சீவக. 794, உரை.

64. தொகை. தோகை யென்பதன் குறுக்கல்விகாரம் போலும்.

65. கோகிலமென்னும் சொல் கோகுலமெனவும் தமிழில் வழங்கும்; "கோகுல மார்தருக் குழாத்தி னூசன்மேற், பாகுல வின்சொலார் பனிக்கு மெல்லிடைக், காகுலம் பிறர்கொள மகிழ்வி னாடுவார்" "கோகுலப் பறவையுங் கொல்லுமோ வென்பான்" (கந்த. நாட்டுப். 43, குமாரபுரி, 48.) "கலங்கு தலைச்செய் தருள்வேல் விழிவளை கந்தரங்கோ, குலங்குதலைச் சொல்" சங்கரநயினார் கோயிலந்தாதி, 8.

68. தும்பை : ஆகுபெயர் ; "அதிரப் பொருவது தும்பை" ஆதலான்.

70. சூர்மா முதல் தடிந்து : 5 : 4.

72. இதிற் கூறப்பட்டது ஆடல்வென்றி; பு. வெ. 359.

73. பாடல்வென்றி; பு.வெ.360.

74. இதிற் கூறப்பட்டது சூதுவென்றி; பு.வெ.358.

72-4 தொல். புறத்திணை. சூ. 5, ந.

75. உரை. கல்விவென்றி: 'கூறுபடக் கல்வி முகத்தால் தம்மொடு மலைந்தோர் நாணத் தமது கல்வியான் வென்று தலையெடுத்து நடந்து' (புறநா. 47: 8, உரை); கல்விக்குக் கொடிகட்டும் மரபும் (பட்டினப். 170-71) வீரம் பிறப்பதற்குரிய ஏதுக்களுள் முதலாவதாகக் கல்வி கூறப்பட்டிருப்பதும் (தொல். மெய்ப். சூ.9) கல்விவென்றி யுண்மையைப் புலப்படுத்தும். கல்வியாற் புகழுண்டாதல்: 'இசைபட வாழ்தற்குக் கல்வி ஆண்மை முதலிய பிறகாரணங்களும் உள' குறள். 231, பரிமேல்.

## ௧௦
## (10 - ஆம் பாடல்)

1. அழிபெயல் - மிக்கபெயல்; 'அழிபசி - மிக்கபசி' (குறள், 226, பரிமேல்); 'அழிதருகம்பலை - மிகுதியைத்தருகின்ற ஓசை' (மதுரை. 544, ந) ; 'அழியும் - பெருகும்' சீவக. 1193, ந.

3. நிழத்த - சுருங்க ; "ஓய்த லாய்த னிழத்தல் சாஅய், ஆவயி னான்கு முள்ளத னுணுக்கம்" தொல். உரி. சூ.32.

உரை. பசி முதலிய துன்பங்கள் ; "பசியும் பிணியும் பகையும்" சிலப். 5 : 72 ; மணி. 1 : 70.

5. ஆணு - நேயம் ; 'ஆணுப்பைங்கிளி - நேயத்தையுடைய பைங்கிளி' (சீவக. 1002, ந) ; யாணு - அழகுமாம் ; "யாணுக்கவி னாகும்" தொல். உரி. சூ. 82.

6. உரை. புனல் மரச்சினைகளைத் தோய்ந்து செல்லல் : "நீடிய மரத்த கோடுதோய் மலிர்நிறை" (குறுந். 99 : 4) ; "புதுவது வந்த காவிரிக், கோடுதோய் மலிர்நிறை யாடி யோரே" அகநா. 166 : 14-5.

7. கரைகாவலரை அழைக்கின்ற பறை : 6 : 24, உரை, விசேடக்.

2-8. வையைப்புனல் கடல் தலைக்கூடப்போதல் : வையை கடலிற் கலக்கவில்லையென்பது பிற்காலத்தார் சிலர் கொள்கை; "புனலிற் புகுமே டிறைவை கையுடன் போகா விடினுங் கடல்புக் கனவே" (தக்க. 212) என்பதையும், 'வைகையானது சமுத்திரகா மினியல்ல; ஏடுகடல்புக்கவாறென்னெனிற் பாம்பாற்றுக் காலொடு கூடிக் கடல் புக்கதென வுணர்க' (மேற்படி நூலின் உரை) என்பதையும் இவற்றின் குறிப்புக்களையும் பார்க்க.

15. வேழப்பிணவு : "பன்றி புல்வாய் நாயென மூன்றும், ஒன்றிய வெனப பிணவென் பெயர்க்கொடை" (தொல். மரபு. சூ.58) என்பதனுள் 'ஒன்றிய' என்றதனால் பிணவென்பது யானைக்கு வருதலும் கொள்க.

17. தண்டு - காவுமரம்.

18. மூழ்த்தல் - மொய்த்தல்; "மூழ்த்திறுத்த வியன்றானை யொடு" (பதிற். 33 : 5) ; "முரணுடை வேட்டுவர் மூழ்த்தனர் மூசி" (பெருங். 1. 56 : 49) ; "மூழ்ந்த பிணிநலிய" நன். சூ.416, மயிலை. மேற்.

19. முகைப்பருவத்தர் : "முகைப்பதம் பார்க்கும் வண்டினம் போலத், தகைப்பருங் காமத்துத் தாம்வீழ் மகளிர், நகைப்பதம் பார்க்கு நனிநா கரிகத்து" (பெருங். 1. 35 : 212-4) 'முகைப்பதம் பார்க்கும் வண்டுபோலத் தலைவியரை நகைப்பதம் பார்க்கும் அறிவுடைமை காமத்திற்கு ஏதுவாமாகலின்' (தொல். மெய்ப். சூ.11 பேர்.); கிண்கிணி வாய்க்கொள்ளுங் கள்ளகத்த, கழுநீர் மலரிவள்" சிற். 123.

22. விரவுநரையோரும் வெறுநரையோரும் : "கடனிரை திரையிற் கருநரை யோரும், சுடர்மதிக் கதிரெனத் தூநரை யோரும்" (பரி. திரட்டு. 1 : 42-3) ; "நரைவிரா வுற்ற நறுமென் கூந்தல்" நெடுநல். 152, அடிக்.

23. பதிவதம் - பதிவிரதம் ; வதம் - விரதம்; "பின்னவ னுரிமை தானும் பெருவத மருவிற் றன்றே" (சூளா. இரதநூபுரச். 86); "கொழுங்களி யுணர்வி னாரைக் குணவதங் கொளுத்த லாமோ" சீவக. 378.

27. நீரணிமாடம் : சிலப். 10 : 215 ; சீவக. 2654 ; பெருங். 1.40: 17, 42 : 39. இம்மாடம் பள்ளியோடமெனவும் கூறப்படும்.

28. பேரணி - பெரும்படை.

உரை. தூசி - முன்படை.

30. "செல்புன லுழந்த சேய்வரற் கான்யாற்றுக், கொல்கரை நறும்பொழிற் குயில்குடைந் துதிர்த்த, புதுப்பூஞ் செம்மல் சூடிப் புடைநெறித்துக், கதுப்புவிரித் தன்ன காழக நுணங்கறல்" சிறுபாண். 3-6.

30-31. கான்யாற்றின் துருத்தியில் தழுவுவோர் : "வம்புவிரித் தன்ன பொங்குமணற் கான்யாற்றுப், படுசினை தாழ்ந்த பயிலிண ரெக்கர், மெய்புகு வன்ன கைகவர் முயக்கம், அவரும் பெறுகுவர் மன்னே" அகநா. 11 : 8-11.

32. யாமக்குறையூடல் : 7 : 70.

38-9. "பட்டினம் பெற்ற கலம்" நாலடி. 250.

45. உரை. புலிமுகமாடம் : "புலிமுக மாட மலிர வேறி" பெருங். 2. 9:68, 4. 15 : 108.

42-55. யானைக்கு மரக்கலம் உவமை : "பனைமீன் வழங்கும் வளைமேய் பரப்பின், வீங்குபிணி நோன்கயி றரீஇ யிதைபுடையூக், கூம்புமுதன் முருங்க வெற்றிக் காய்ந்துடன், கடுங்காற் றெடுப்பக் கல்பொரு துரைஇ, நெடுஞ்சுழிப் பட்ட நாவாய் போல, இருதலைப் பணில மார்ப்பச் சினஞ்சிறந்து, கோலோர்க் கொன்று மேலோர் வீசி, மென்பிணி வன்றொடர் பேணாது காழ்சாய்த்துக், கந்துநீத் துழிதருங் கடாஅ யானையும்" (மதுரை. 375-83) என்பதன் அடிக்குறிப்பைப் பார்க்க ; "அங்கட் கடலி னெடுங்கூம் பகநிமிர்ந்த, வங்கத் தலையுய்க்கு மீகான் றனைமானத், திங்கட் குடைநிழற்றத் தீந்தே மதங்கவிழ்க்கும், வெங்கட் களிற்றின் மிசைப்பவனி போந்தணைந்தான்" திருவிளை. வெள்ளை யானை. 7.

55. நீகான் : "நீகா னுடன்பள்ளி நீள்வங்க மேறி" தஞ்சை. 284.

60. தண்டம் - சேனை.

65-8. "எம்மு னாணுநர் போலத் தம்முள், மதுமறைந் துண்டோர் மகிழ்ச்சி போல, உள்ளத் துள்ளே மகிழ்ப" தொல். களவு. சூ. 23, ந. மேற்.

75. உரை. வெம்மை மிக்க நறவு: "வெப்புடைய மட்டுண்டு" "வெங்கட்டொலைச்சியும்" (புறநா. 24 : 5, 29 : 15); "உண்ணமது" பெருங். 1. 38 : 60.

74-5. கள்ளிடும் வள்ளத்துக்கு மதி உவமை : "கள்ளடு மகடூஉக் கைசோர்ந் திட்ட, வெள்ளி வள்ளம் பல்லுறக் கவ்விக், கூடக்

கூம்பி னீடிர ளேறி, உச்சிக் கிவருங் கட்கின் கடுவன், வீழ்ந்த திங்களை விசும்புகொண் டேறும், தெய்வ மகாஅரின்'' பெருங். 1. 40 : 70-75.

77. ''சுறவுவா யமைத்த சுரும்புசூழ் சுடர்நுதல்'' பெரும்பாண். 385.

80. நீராடியோர் குழலை முறுக்குதல் : ''பின்னிருங் கூந்தல் பிழிவனந் துவரி'' குறிஞ்சி. 60.

79-80. துகிலால் ஈரம்புலர்த்தல் : ''துகில்கொடு குஞ்சி யீரம் புலர்த்தி'' பெரிய. தடுத்தாட். 16.

78. உரை. தெய்வமகள் மதிக்கலையை யுண்ணுதல் : 3 : 52-3, விசேடக்.

86. விளைக பொலிக வென்பதொரு வழக்கு ; 'விளைக பொலிக, ஒருவழக்கென்பாரு முளர்' சீவக. 260. ந.

87-8. இரத்தற்குமுன் அளித்தல் : ''பேணி யாடும் பெரும் புனல் விழவினுள், நாணிச் செல்லா நல்குர வுடையோர்க், கரும்பொறி யணிகல மாரப் பெய்த, பெரும்பொறிப் பேழை யிவையெனக் கூறிக், கறைவாய் முரசங் கண்ணதிர்ந் தியம்ப, அறையவுங் கொள்ளுங் குறைவில ராகித், துறைதுறை தோறு மிறைகொண் டோருள், அணியாதோரை யாராய்ந் துழிதரும், பணியா வேந்தன் பணிநரைக் காண்மின்'', ''கன்னி காமம் போல வுள்ள, இன்மை யுரையா விடுக்க ணாளிரும்... ... வேண்டின கொள்ளப் பெறுதிர் நீரென'' பெருங். 1. 40 : 236 - 44 ; 4. 2 : 24-39.

89. ''மாசற மண்ணுற்ற மணியேசு மிருங்கூந்தல், வீசேர்ந்து வண்டார்க்குங் கவின்'' கலி. 77 : 16-7.

94-9. கண்ணுக்குக் காமபாணம் உவமை : ''பண்டாரங் காமன் படையுவள் கண்காண்மின்'' 11 : 123.

100. தண்டு - வாழைத்தண்டு ; 11 : 106, உரை.

110-11. புனற்பரப்புக்குப் போர்க்களம் : 6 : 29, 11 : 60-61.

116. பரவல் பெரும்பாலும் முன்னிலைக்கண் வருமென்பர் நச்சினார்க்கினியர் ; தொல். புறத். சூ. 27. உரை.

117. சீர் - தாளம் முடிந்துவிடுங் காலத்தினைத் தன்னிடத்தே கொண்டது. பாணி - ஒரு தாளத்தின் முதல் எடுக்கும் காலத்தினையுடையது 'ஒரு தாளத்திற்குப் பாணி தூக்கு சீரென்னும் மூன்றுமுளவேனும் ஒவ்வொன்றும் ஒவ்வோராடற்கு மிகுதிவகையாற் சிறக்கும்' கலி. 1, ந.

120. கூந்தலில் வண்டு ஊதுதல் : ''குழல்வளர் முல்லையிற் கோவலர் தம்மொடு, மழலைத் தும்பி வாய்வைத் தூத'' சிலப். 4 : 15-6.

123-5. புகைக்குப்பனி : "புகையெனப் புதல்சூழ்ந்து பூவங்கட் பொதிசெய்யா, முகைவெண்ப னுதிபொர முற்றிய கடும்பனி" (கலி. 31 : 19-20) ; "புகையிற் பொங்கி வியல்விசும் புகந்து, பனியூ ரழற்கொடி கடுப்பத் தோன்றும், இமயச் செவ்வரை", "புகைநிற வுருவி னற்சிரம்" அகநா. 265 : 1-3, 317 : 3.

126. இலம்படுபுலவர் : புறநா. 155 : 6.

ஃஃ

## (11 - ஆம் பாடல்)

2. உரை. ஈசனைத் தெய்வமாக உடைய ஆதிரை : "ஆதிரை முதல்வனிற்கிளந்த" (8 : 6) ; அங்கியைத் தெய்வமாகவுடைய கார்த்திகை : "எரி நாள்" (பிங்கலந்தை.) வேழத்திற்கு யோனியாகிய பரணி : 'பரணி யானை பிறந்தநாள்' (சீவக. 1813, ந.) ; "போதகம் பரணிப்பெயர்." பிங்கலந்தை.

5. படிமகன் - செவ்வாய்; குஜனென்னும் வடமொழிப் பொருளைக்கொண்டது.

8. உப்பால் : "உப்பாலைப் பொற்கோட் டுழையதா வெப்பாலும்" சிலப். 1 : 66.

19. இல்லத்தை மனைமரமென்றதனோடு, "காழிருள் வீடும்" (பெருங். 1. 41 : 33) என்பது ஒப்பிடற்பாலது.

20. கணவிரி : இது கணவீரமெனவும் வழங்கும் ; முருகு. 236.

21. தோன்றி - செங்காந்தள். தோன்றிக்குத் தீ : "தீவாய்த் தோன்றி" பெருங். 2. 12 : 26.

22. உரை. சுனைநீலம் : "சுள்ளி சுனைநீலம்" திணைமா. 2.

30. திருமருதந்துறை : 7 : 83, விசேடக்.

31-2. பிறைவளர்தல் : "குடமுதற் றோன்றிய தொன்றுதொழு பிறையின், வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றம்" (மதுரை. 193-4); "சுடர்ப்பிறை போலப் பெருக்கம் வேண்டி" பெருங். 2. 6: 35 - 6.

42. கை சிறுமையென்னும் பொருளதாதலின் 'கைகொள் கற்பு' என்பதற்கு இளிவந்த கற்பொழுக்கமென்று பொருள் எழுதினர்.

46-9. உடன்போக்கிடையீடு : தொல். அகத். சூ.41.

50. உரை. கிடைமுதலியவற்றாற் செய்யப்பட்ட வாளும் குந்தமும் : பெருங். 1. 41 : 4-10.

51. மகளிர் தேர்க்கு மகளிர் கோல் கொள்ளுதல்: "பாகனை யொழித்துக் கூன்மகள் கோல்கொள" பெருங். 3. 5:97.

52. பொலம்படை - பொன்னாலாகிய நெற்றிப்பட்டம்.

55. உரை. அரக்குநீர் கரந்த வட்டு : 12 : 67-8, 21 : 42; "குலிகநீர் நிறைந்த பந்திற் கொம்பனா ரோச்ச" (சீவக. 968) ; "அரக்குறு நறுநீ ரஞ்செங் குலிகம், குங்கும வூறலொடு கொண்டகத் தடக்கிய, எந்திர நாழிகை" பெருங். 1. 41 : 16-8.

56. மாலையால் வட்டிப்போர் : 9 : 39-40, விசேடக்.

57. நீரெக்குதல் : 10 : 12, 16 : 45, 22 : 18.

69. தெவி - தெவ்வி ; "தெவ்வுக் கொளற்பொருட்டே" தொல். உரி. சூ. 47. 81. உரை. தாயோடு நீராடல் : 91.

82. முதிய பெண்டிர் நீராட்டுவித்தல் : "தாமிள மகளிரைக் காமஞ் செப்பி, அஞ்சல் செல்லாது நெஞ்சுவலித் தாடுமிந், நங்கையர் நோற்ற பொங்குபுனற் புண்ணியம், நுங்கட் காகென நுனித்தவை கூறி, நேரிழை மகளிரை நீராட் டயரும், பேரிளம் பெண்டிர்" பெருங். 1. 41 : 101-6, 42 : 90-ஆம் அடி முதலியவற்றைப் பார்க்க.

86. தையல் - ஒப்பனை ; "அடற்கதிர் வேலோன் றொடர்ச்சி நோக்கித், தையற் பாங்கி யைய முற்றது" (சிற். 60, கொளு) என்பதனுள் 'தையல்' என்பதற்குப் புனையப்படுதல் என்று பேராசிரியரும் பொருளெழுதியிருப்பது இங்கே அறியத்தக்கது.

88. மையாடல் : "மதலைமை யாடு கென்றே", "ஐயாண் டெய்தி மையாடி" சீவக. 367, 2706.

94. வேய்த்தோள் : "வெறுத்த வேஎர் வேய்புரை பணைத்தோள்" அகநா. 2 : 11.

97-8. காதிற் குவளைப்பூவை யணிதல் : "மாதர் நுழைமருங்கு நோவ மணிக்குழைசேர், காதின் மிசைநீலங் கைபுனைவீர்" (தண்டி. மேற்); "பான லஞ்செவி மிசையணிந் தனளொரு பாவை" பிரபு. மாயை பூசை. 9.

101-2. குவளைப் பசுந்தண்டால் வளைசெய்து அணிதல்: புறநா. 63 : 12, அடிக்.

106. உரை. வாழைத்தண்டாலாகிய புணை : 10 : 100.

119. யாம்வீழ்வார் : "தாம் வீழ்வா ராகந் தழுவுவோர்" 10 : 31.

122. தாக்கணங்கு - தீண்டி வருத்தும் தெய்வம்; "நோக்கினா ணோக்கெதிர் நோக்குத றாக்கணங்கு, தானைக்கொண் டன்ன துடைத்து" குறள். 1082.

123. பண்டாரம் - சரக்கறை. கண்ணுக்குக் காமன்படை உவமை: 10 : 94-9, விசேடக்.

124. உரை. நீலநிறத்தையுடையதேன் : இந்நிறம் ஓரியெனப்படும்; "நீனிற வோரி பாய்ந்தென மீதழிந்து நெடுவரை, நேமியிற் செல்லு நெய்க்க ணிறாஅல்" மலைபடு. 524-5.

125. வண்டின் ஒலிக்கு யாழிசை : அகநா. 82 : 6, 88 : 11-2; மணி. 4 : 4, 19 : 58.

128. பண்கண்டு திறனெய்தாப் பண் : "திறம்விளரிக் கில்லது போற் செப்ப லகவல், இசைமருட்கு மில்லை யினம்" (யா - வி. மேற்.) ; பண் நிறைநரம்புடையது ; திறன் - குறைநரம்புடையது.

ஃஃஃ

## (12 - ஆம் பாடல்)

7. வையை நதிக்குக் கடல் : "வாழ்ந்து செல்வுழி மந்திரச் செந்தமி ழேடு, சூழ்ந்த தெண்டிரைக் கடலென வருநதித் துறைக்கட், சேர்ந்து மூழ்கிய தோசனை யொன்றரை சென்று" திருவால. 38 : 53.

8. காற்றின்வேகம் வையை வரவுக்கு : "கரைபடவெறி வதுவருவது கடுவிசைவளி யெனவே" திருவிளை. அன்னக்குழியும். 14.

21. உரை. கலவியால் வந்த நிறம் : "மதஞ்சேர், இந்நிற மும்பெறின் யானுங் குடைவ னிருஞ்சுனையே" (சிற். 69) ; "அந்தி யாரழ லெனப்பரி தியினொளி யடைந்தபி னணிமாடக், குந்தி போசன்மா மடமக ளெழினலங் கொண்டகொள் கைய ளாகி" (வி.பா. சம்பவச். 38); "ஏர்துளும்ப வெரீஇ யிறைவற் றழீஇக் கார்து ளும்புகொம் பிற்கவி னெய்தினார்" சீவக. 2672.

36-9. பலர் ஒருகாலத்தே பேசுதலால் தெரியக் கேட்க இயலாமை: "ஆரிய முதலிய பதினெண் பாடையிற், பூரிய ரொருவழிப் புகுந்த தாமென, ஓர்கில கிளவிக ளொன்றொ டொப்பில, சோர்வில விளம்புபுட் டுவன்று கின்றது" (கம்ப. பம்பை. 14) ; "பாய தொன்மரப் பறவைபோற் பயன்கொள்வான் பதினெண், தேய மாந்தருங்கிளந்தசொற் றிரட்சிதான் றூய, மாய காரிய வொலியன்றி வான்முதற் கருவின், ஆய காரிய வோசையே யாய்க்கிடந் தன்றே" திருவிளை. நகரப். 67.

44. அத்தக - அழகுதக ; 2 : 30, உரை.

47-8. யானையை நீரிற் செலுத்துதல் : 11 : 52-3.

58. கோதையைக் கோலாகக்கொண்டு புடைத்தல் : 9 : 39-40, விசேடக்.

63. பொய்ச்சுள் : 8 : 65-71, விசேடக்.

68. வண்ணநீர் பூரித்த வட்டு : 11 : 55, விசேடக்.

71. அல்லாந்து : 6 : 89, விசேடக்.

74-5. வையை இன்பத்தைத் தருதற்குக் காரணமாதல் : 6 : 105-6, 10 : 69-70.

82. மான்மாலை - மயக்கத்தைச் செய்யும் மாலை ; "புலம்புகொண் மான்மாலை", "தூங்கிருண் மான்மாலை" பு.வெ. 308, 320.

90-92. அவயவம் - நகில் ; இவ்வடிகளில் குறிப்புநுட்ப மென்னும் அணி அமைந்துள்ளது; "மைய கண்ணியொர் மங்கையொ ராடவன், கைய டிக்கவின் காணிய மாதுநீ, செய்ய விச்சினைத் தேமல ரெட்டுபு, கொய்ய வல்லைகொ லென்றலுங் கூசினாள்" சீகாளத்திப். கண்ணப்பச். 49.

102. உரை. இவ்வுலகு... ...நின்புகழை அடக்க மாட்டாது : "மண்டேய்த்த புகழினான்" (சிலப். 1 : 36) என்பதும், 'பூமி சிறுகும் படி வளர்ந்தபுகழாதலின், மண்டேய்த்த என்றார்; 'புகழ்வளரப் பூமி சிறுகுதலான்' என்னும் அதன் உரைகளும் அறிதற்பாலன. "சுழலு மிசைவேண்டி" (குறள், 777) என்பதும், 'வையத்தைச் சூழுமெனவே, அதன் பெருமை பெற்றாம்' என்னும் அதனுரையும் இங்கே ஒப்புநோக்கத் தக்கன.

ஂஂஂ

## (13 - ஆம் பாடல்)

1-2. திருமாலும் பீதாம்பரமும் : 1 : 9-10. திருமாலுக்கு மலை : "மாயோ னன்ன மால்வரை" (நற். 32 : 1). ஞாயிறு குடைக்கு : "முன்னங் குடைபோன் முடிநா யகமணிபோல், மன்னுந் திலகம்போல் வாளிரவி - பொன்னகலம், தங்கு கவுத்துவம்போ லுந்தித் தடமலர்போல், அங்க ணுலகளந்தார்க் காம்" தண்டி. மேற்.

3-4. தாருக்கு அருவி : "மாயோன் மார்பி லாரம் போல, மணி வரை யிழிதரு மணிகிள ரருவி" தொல். செய். மேற்.

6. நேமி அசுரரை வருத்துதல் : 1 : 58, 2 : 48 - 9, 4 : 9.

7-9. சங்கு சக்கரங்களுக்குச் சந்திர சூரியர் : "இருசுட ரிரு புறத் தேந்தி... ... ... ... ... ...வருவபோற் கலுழன்மேல் வந்து தோன்றினான் (கம்ப. திருவவதார. 13); "அழகொடு திருக்கைவளை திகிரிகளி னொப்புடைய வலர்கதிரிரட்டை தருவோம்" (குலோத். பிள்ளைத். முத்தப். 10) ; "சங்கு திகிரி சந்த்ர சூரியர்" தக்க. 700.

11. ஆரத்திற்கு அருவி : "பேரார, நிபுட மாலை மால்யாறு நிமிர வீழ்வ போல்வீழ" தக்க. 106, விசேடக் குறிப்பைப் பார்க்க.

14. இசைமை - கேள்வி.

17-22. விசும்பு முதலியவற்றின் குணங்கள் : 3 : 77-8, விசேடக்; "காற்றிற் பெருவலி யிருவ ராகி, மண்ணகத் தைவர் நீரி னால் வர்தீ யதனின் மூவர், விண்ணகத் தொருவர் வீழி மிழலையுள் விகிர்த னாரே" (தே. திருநா.) 23. மூவேழுலகம் : 3 : 9.

27-8. ஆதிசேடன் : 1 : 1, விசேடக் ; "மாயிரும் பரப்பகம் புதையப் பாம்பின், ஆயிர மணிவிளக் கழலுஞ் சேக்கை" மார்க்கண்டேயனார் காஞ்சி.

29. உரை. யோக உறக்கம் : "சந்திர னொடுங்கி நிற்பத் தபனனே சரிக்கு மாறு, பந்தனை யிலாதான் யோகத் துயில்வரப் பள்ளி கொண்டான்" வி.பா. வாசுதேவனைப். 8.

32-3. விறன்மிகு..நாஞ்சிலோன் : "கொடுமிட னாஞ்சிலான்" (கலி. 36: 1); "வலியொத் தீயே வாலி யோனை" (புறநா. 56 : 12); "விறல்வெள்ளை யாயவன்" சிலப். 17: "மாயவன்".

40. ஏ - இசை; "ஏஎ இனகிளத்தலின்" 3 : 62.

41. நற்புகழவை : 1 : 60, விசேடக் ; "திருமா னிகரும் புகழண் ணலே" கரவை வேலன் கோவை, 199.

42-3. இருளும் மணியும் திருமாலின் திருமேனிக்கு : 2 : 52, விசேடக்.

48. இருமை வினையும் அடியார் இலர் : "இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன், பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" குறள், 5.

50. உரை. தாமரையிலை திருமால்மேனிக்கு உவமை : 'இலை மகா விஷ்ணுவின் திருமேனியிற் சோதிக்கு ஒப்பு' (தக்க. 278, உரை); "அக்கமலத் திலைபோலுந் திருமேனி யடிகளுக்கே" திருவாய்மொழி. 9. 7:3.

50-51. அடியும்... ... ...தாமரையென முடிக்க ; "கண்ணும், திருவடியுங் கையுந் திருவாயுஞ், செய்ய கரியவனை" (சிலப். 17 : ஆய்ச்சியர்குரவை) ; "கையு மலரடியுங் கண்ணுங் கனிவாயும், செய்ய கரிய திருமாலை" விக்கிரம. உலா, 158.

57. உரை. செறாதிருக்கச்செய்தே செய்ய கண்: "செயிர்தீர் செங்கட் செல்வ" (4 : 10) 'செறாஅச் செங்கண் - அருளையுடைய சிவந்தகண்' கலி. 54 : 10, ந.

௳௳

## (14 - ஆம் பாடல்)

3-4. வண்ணவண்டு இமிர்தல் : "வண்ணவண் டிமிர்ந்தானா வையைவா ருயரெக்கர்த், தண்ணருவி நறுமுல்லைத் தாதுண்ணும் பொழுதன்றோ" கலி. 35 : 9-10.

10. கொன்றைக்கு மாலை: "அயந்திகழ் நறுங்கொன்றை யலங் கலந் தெரியலாய்" கலி. 150 : 1.

11-2. வேங்கைப்பூவிற்குப் புலி : "உறுபுலி யுருவேய்ப்பப் பூத்த வேங்கை" (கலி. 38 : 6) ; "புலிப்பொறி வேங்கைப் பொன்னிணர்" (ஐங்குறு. 396); "குறவ ரூன்றிய குரம்பை புதைய, வேங்கை தாஅய தேம்பாய் தோற்றம், புலிசெத்து" (அகநா. 12: 9-11); "புலிப்பற மூன்ன பூஞ்சினை வேங்கை" தொல். மரபு. சூ.10, பேர். மேற்.

உரை. அழுகை தீரப் புலிவரவைச் சொல்லல்: "புல்லுளைக் குடுமிப் புதல்வன்... ... ...உள்ளில் வறுங்கலந் திறந்தழக் கண்டு, மறப்புலி யுரைத்தும்" புறநா. 160: 18-22.

23-4. மகளிர் கணவரோடு இருத்தலை விரும்பி முருகனைப் பணிதல் : 8 : 43-5, 102-5, 11 : 116-7; சிலப். 24 : 'கயிலை', 'மலைமகள்', 'குறமகள்' என்றற் றொடக்கத்துச் செய்யுட்களைப் பார்க்க.

28. உரை. வைதிக அறம் - வேள்வி முதலியன; "மந்திர விதியின் மரபுளி வழாஅ, அந்தணர் வேள்வியோர்க் கும்மே யொருமுகம்" (முருகு. 95-6), "அந்தண்மறை வேள்வி காவற்கார" (திருப்புகழ்) "மறையுணர்ந்தோ ராற்றும், அறங்குலவு மகத்தழலு மவுணமட வார்வயிற்றி னழலு மூள, மறங்குலவு வேலெடுத்த குமரவேள்" திருவிளை. கடவுள். 11.

28-32. வழிபாடே வேண்டுதல் : 13 : 61- 4; "கூடு மன்பினிற் கும்பிட லேயன்றி, வீடும் வேண்டா விறலின் விளங்கினார்" (பெரிய. திருக்கூட்டச். 8) ; "ஆனபய பத்திவழி பாடுபெறு முத்தியது வாகநிகழ் பத்தசன வாரக்காரனும்" திருவேளைக்காரன் வகுப்பு.

ஃஃஃ

## (15 - ஆம் பாடல்)

9-10. மைபடுகுடுமிய குலவரை: "மைபடு சென்னிப் பயமலை" கலி. 43 : 6.

8-10. தெய்வம் பெட்புறு குலவரை : "உலகிற் காணி யாகப் பலர்தொழப், பலவயி னிலைஇய குன்றின்" நற். 139: 1-3.

27. இருள் திருமால் திருமேனிக்கு : 2 : 52, விசேடக். "அல்லை யாண் டமைந்த மேனி யழகன்" கம்ப. குகப். 42.

29. கமழ்சீர் : "வியலிடங் கமழ, இவணிசை யுடையோர்க் கல்லது" (புறநா. 50 : 13-4) என்பதும், 'கமழ்தல், ஈண்டுப் பரத்தற்

பொருட்டாய் நின்றது' என்னும் அதனுரையும் இங்கே ஒப்புநோக்கத்தக்கன. 30. சுனைநீலம் : 11 : 22, விசேடக்.

40. மணிமருள் மயில் : "மணிமயி லுயரிய மாறா வென்றி".புறநா. 56:7.

42. அகவுநர் - அழைத்துப்பாடுவார் ; மதுரை. 223, ந.

45. கடந்தட்டான் - வஞ்சியாது எதிர்நின்று கொன்றான்; புறநா. 8 : 5, அடிக். 50. இருளும் மணியும் : 2 : 52, விசேடக்.

55. ஒரு குழையோன் : 1 : 5, விசேடக்.

57. வளைநாஞ்சில் : 1 : 5, 13 . 33.

58-61. இவ்வடிகளில் திருமாலின் பஞ்சாயுதங்களும் கூறப்பெற்றுள்ளன.

63-6. வேதம் சொல்லுதலால்... ...உரைத்தேம் : 3 : 10-11, 62. வேதம் தனக்கு நன்மையை விரும்பி... ...சொல்லுதல் : "வாழ்த்து வதும் வானவர்க டாம்வாழ்வான் மனநின்பால், தாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டி" திருவா. திருச்சதகம்.

65. குன்றத்தடியுறை : 17 : 5-7.

66. திருமாலும் பலதேவரும் : "மாமணி வண்ணனுந் தம்முனும்" மணி. 19 : 65.

ஃஃஃ

## (16 - ஆம் பாடல்)

2. மைபடு சிலம்பு : 15 : 9-10 ; குறுந். 371 : 2; கலி. 43 : 6. கறியும் சந்தனமும் : "கறிவளர் சாந்த மேறல் செல்லாது" அகநா. 2 : 6.

5. மத்தக நித்திலம் : "பொலம்பிறை யுட்டாழ்ந்த புனைவினை யுருள்கலம், நலம்பெறு கமழ்சென்னி நகையொடு துயல்வர" கலி. 81 : 3-4.

14-5. நறவம்பூ : "நறாஅவவிழ்ந் தன்னவென் மெல்விரற் போது கொண்டு" கலி. 54 : 9.

14-6. கா மலர்களை அளித்தல் : "வேனில் வெயிற்குலர்ந்த மெய் வறுமை கண்டிரங்கி, வானின் வளஞ்சுரந்த வண்புயற்குத் - தானுடைய, தாதுமே தக்க மதுவுந் தடஞ்சினையால், போதுமீ தேந்தும் பொழில்" தண்டி. சூ. 54, மேற்.

17. உரை. அல்லும் அம்மும் சாரியை : சிற். 11, பேர்.

20. உரை. அரக்குநீர் : 10 : 12.

20-30. புனல்விளையாட்டு : சீவக. 2664 - 6.

32-8. வையை மலரேந்தி வருதல் : 6 : 41-2, விசேடக்.

36-8. வையைக்குக் கங்கை உவமை : பரி. திரட்டு, 2 : 95-6.
53. புகையும் அவியும் : 6 : 11.

ருருரு

## (17 - ஆம் பாடல்)

6. 'நறை - குங்குலியம் முதலான நறுநாற்றம்' என்பர் புறப் பொருள் வெண்பாமாலை உரையாசிரியர் ; 79.

15-6. ஆடுங் கொடிக்கு விறலி : 21 : 60-63.

20. கல்விகளால் மாறுமாறாந் தன்மை : 9 : 72-5, விசேடக்.: "சொற்போர் புரிவர் நான்மறையா றங்க முணர்ந்த தொழுகுலத்தோர், விற்போர் புரிவர் நெடியசிலை யிராம னனைய விறல்வேந்தர்" பிரபு. மாயை உற்பத்தி. 15.

9-20. யாழோசைக்கு வண்டினோசை முதலியன : 21 : 30-37.

22. பாடல் சான்ற புகழ் : "பாடல்சால் சிறப்பிற் பரதம்" மணி. பதி. 22, 18 : 57.

26. கூந்தல் - மகளிர் தலைமயிர் ; குஞ்சி - ஆடவர் தலைமயிர்.

29. உரை. புகழால் திசையெங்கும் பரந்த குன்று : 'புகழான் உயர்ந்து காணாதார்க்கும் செவிப்புலனாகத் தோன்றும் அவன் உளனாய காலத்து' (புறநா. 114, உரை); 'திரிதருந்தெரியல் - புகழ்ச்சியால் எங்குந் திரியும்...மாலை' மதுரைக். 437, ந.

34. அணைமென்றோள் : "அணைபுரை மென்மை யமைபடு பணைத்தோள்" பெருங். 2. 15 : 72, அடிக்.

35. தார்மார்பிற் றகையியலார் - மைந்தர் ; 6 : 46, விசேடக்.

37-8. மகளிர் சுனைபாய்தல் : 8 : 112, விசேடக்.

42-6. உரை. பிரிந்த தலைவர் வினைமுடித்து வந்துகூடும் பொருட்டு மகளிர் பரங்குன்றில் முருகனை வணங்குதல் : செய் பொருள் வாய்க்கெனச் செவிசார்த்து வோரும், ஐயம ரடுகென வருச்சிப் போரும்" 8 : 107-8.

48. மயிற்கொடி : "பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யகவ" (முருகு. 122); கொடிநுடங்கு மறுகிற் கூடற் குடாஅது, பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யுயரிய, ஒடியா விழவி னெடியோன் குன்றத்து" (அகநா. 149 : 14-6) ; தக்க. 23, 114, உரை.

42-9. உரை. தலைவரைச் சேர்ந்த மகளிர் விருந்தயர்தல் : "அருந்தொழின் முடித்த செம்மற் காலை, விருந்தொடு நல்லவை வேண்டற் கண்ணும்" (தொல். கற்பு. சூ.5) என்பதனையும் அதன் உரையையும் பார்க்க.

49. பிணிமுகம் : 5 : 2, அடிக்.

ருருரு

### (18 - ஆம் பாடல்)

1-4. சூர்மாத் தடிந்தது : 5 : 1-7, **விசேடக்.**

13. ஏதிலா நோக்குதி : "ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல், காதலார் கண்ணே யுள" குறள்.1099.

17. உரை. உகிர்செய்த வடு : "கூருகிர் சாடிய மார்பும்" கலி . 91 :11.

38. அச்சிரம் : ஐங். 223, 470; சிலப். 14 : 105.

46. அருவிக்கு முத்து ; "மலைகடோறுந் தண்டரள வருவிவிழ" வி.பா. வசந்த. 5.

47. குருவி தினையிற் பாய்தல்; "இருவி யிருந்த குருவி வருந்துற" (ஐங். 295); "ஏனலிற் குருவி பாயும்" கம்ப. கலங்காண். 40.

48-50. பலநிற மலர்களுக்கு இந்திரவில் : பெரும்பாண். 292-4, அடிக்.

53. எரி உருகு அகில் : "சுட்டுருக் ககிலின் வட்டித்துக் கலந்த" பெருங். 1. 38 : 190.

55. உரிது : "உரிதென வுணராய்நீ யுலமந்தாய் போன்றதை" கலி. 76 : 17.

ஓஓஓ

### (19 - ஆம் பாடல்)

2. கடம்பமர்ந்து : 8 : 126, விசேடக்.

10-11. அறஞ்செய்து துறக்கம் அடைதல் : பரி. திரட்டு, 1:46-7; "வெல்புகழ் மன்னவன் விளங்கிய வொழுக்கத்தால், நல்லாற்றி னுயிர்காத்து நடுக்கறத் தான்செய்த, தொல்வினைப் பயன்றுய்ப்பத் துறக்கம்வேட் டெழுந்தாற்போல்" கலி. 118 : 1-3.

74-5. உரை. ஆம்பலுக்குப் பாம்பு : "தண்ணிள வாம்பலைச், சேரை யென்று புலம்புவ தேரையே" கம்ப. ஆறுசெல். 43.

76. கைக்குக் காந்தள் : 20 : 98; "கொடிச்சியர் கூப்பி வரைதொழு கைபோல், எடுத்த நறவின் குலையலங் காந்தள்", "அடுக்கநாறலர்காந்த ளுண்ணேர்தண் ணேருருவிற், றுடுப்பெனப் புரையுநின் றிரண்டநே ரரிமுன்கை" கலி. 40:11-2, 59 : 3-4.

77. எரியிணர் வேங்கை : "எரியகைந் தன்ன வீததை யிணர, வேங்கையம் படுசினை" (நற். 379 : 3-4); "முதிரிண ரூழ்கொண்ட முழவுத்தா ளெரிவேங்கை" கலி. 44 : 4.

86. **உரை.** யானைச்செவியிற் கவரிகளை யணிதல் : "மெய்ச் செவிக் கவரி தூங்க வேழமா முகங்கொண் டுற்ற, கச்சியின் விகட சக்ர கணபதிக் கன்பு செய்வாம்" கந்த. காப்பு. 2.

97. உடை - செய்யவுடை ; "குன்றியும் கோபமும் ஒன்றிய வுடுக்கை" (தொல். உவம. சூ.11, பேர். மேற்.) ஒலியல் - மேலாடையு மாம்; 'தோளிலே கிடந்தசையும் ஒலியலினையும்' (மதுரைக். 485, ந.); 'இடத்தோளினின்றும் நழுவி வீழ்ந்த அழகினையுடைய ஒலி யலை இடப்பக்கத்தே யணைத்துக் கொண்டு' நெடுநல். 181, ந.

99-100. முருகக் கடவுளின் திருமுகத்துக்கு இளஞ்சூரியன் உவமை: "குழவி ஞாயிற் றெழிலிகந் தெள்ளும் ; திருமுக மருங்கிற் செருமீக் கூரி" (பெருங். 1. 55: 4-5); "பருதி மண்டில மெனப் பொலி முகத்தினன்" கம்ப. வருணனை. 15.

(20 - ஆம் பாடல்)

10. உரை. வெங்கார் நாற்றம்: "வெங்கார் வயல்சூழ் வெஞ்சமாக் கூடல்" சுந்தர. தே.

13. வேசனை - ஆவேசித்தல்; புகுதல்.

குதுகுதுப்ப : "ஈசருக்கே யன்பானார் யாவரையுந் தாங்கண்டாற், கூசிமிகக் குதுகுதுத்துக் கொண்டாடி" பெரிய. பத்தராய். 1.

14. ஊரூர் - ஊர்தொறும் ஊர்தொறும்; "ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்" முருகு. 220, ந.

வெள்ளத்திற்குப் பறை அறைதல் : 6 : 24, விசேடக்.

20-21. கோதையும் தாரும் : 6 : 46, விசேடக்.

46. வாய் வாளாநிற்றல் : "வாய்வாளே னிற்ப" கலி. 65 : 15.

50-51. ஐம்புலத்தைத் துற்றுவ : "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும், ஒண்டொடி கண்ணே யுள" குறள், 1101.

52. நறாமொய்புனல் : "காம, அருத்திய பயிர்க்கு நீர்போ லரு நற வருந்து வாரை" கம்ப. ஊர்தேடு. 107.

54. மூரிபோதல் - சோம்புபோக்குதல்; "பொய்த்ததோர் மூரியா னிமிர்ந்து போக்குவாள்" கம்ப. உண்டாட்டு. 35.

58. துறைப்பொதுவி : 'மக்களும் மாவும் முதலாயின சென்று நீருண்ணுந் துறைபோல' (தொல். புறத். சூ. 1, ந.) என்பதனால் துறையின் பொதுத்தன்மை பெறப்படும்.

55-8. இசையாற் காமம் மிகுதல்: 'பாட்டுக்காமத்தை விளை வித்தலின் யாழைவாசித்து வீழ்துணை தழீஇயென்றார்' (மதுரை. 559 - 61, ந); 'இசையுங் கூத்தும் காமத்திற்கு உத்தீபன மாதலின் (சீவக. 2597, ந.); "கிளைநரம் பிசையுங் கூத்துங் கேழ்த்தெழுந் தீன்ற காம,

விளைபயன்'' (சீவக. 2598); ''அவ்விய மதர்வேற் கண்ணா ரந்தளிர் விரன டாத்தும், திவ்விய நரம்புஞ் செவ்வாய்த் தித்திக்கு மெழாலுந் தம்மிற், கவ்விய நீர வாகிக் காளையர் செவிக்கா லோடி, வெவ்விய காமப் பைங்கூழ் விளைதர வளர்க்கு மன்றே'' திருவிளை. திருநகரச். 52.

61. மாலையை மத்திகையாக மோதல் : 9 : 39-40, வீசேடக்.

62. தலைவனை எருதென்றல் : ''இழுதார் சுடர்வே விளையா னகலத், துழுதீ ருடன்வெம் முலைகாள் வயிரத், தொழுவாய் விடையைத் தொடர்கிற் றிலிரென், றழுதா டடமா கவணங் கிழையே'' சீவக. 1523.

64-70. உரை. தனக்குரிய தலைவன் மார்பு : தலைவியருக்குத் தலைவர்மார்பு உரியதென்பது, ''நாடன், மார்புரித் தாகிய மறுவி னட்பே'' (குறுந். 247: 6-7) என்பதனாலும் பெறப்படும்.

86-7. மனையாள் கடிந்தொழுகல் கூடுமோ : கலி. 67.

94. கடவரை நில்லாக்காமம், 'இடங்கழி காமம்' எனப்படும்; மணி. 10 : 22, 18 : 119.

உரை. தக்குழி - தக்க இடம் ; பெருங். 1. 36 : 282.

98. கைக்குக் காந்தளின் துடுப்பு : 19 : 76, அடிக்; வீசேடக்.

99. காந்தட் குலைக்கு அரவு : ''கடிசுனைக் கவினிய காந்தளங் குலையினை, அருமணி யவிருத்தி யரவுநீ ருணல்செத்து (கலி. 45 : 2-3); ''அணர்த்தெழு பாம்பின் றலைபோற் புணர்க்கோடல், பூங்குலை யீன்ற புறவு'' கார். 11.

100. காந்தள் மலருக்குக் குடை : ''குடையலர் காந்தட்டன் கொல்லிச் சுனைவாய்'' பு.வெ. 240.

106. நீண்மாடக் கூடல் : 20 : 25, அடிக்.

ஙஙங

## (21- ஆம் பாடல்)

3. 'தைப்பமை சருமத்து' என்றது சான்றோர் செய்யுட்கண் வடசொற் கிளவி சிதைந்து வந்ததற்கு மேற்கோள்; தொல். எச்ச. சூ.6, ந.

7. போழ்புனையடையல் : ''போழ்வார் போர்த்த தாழகச் செருப்பினன்'' கண்ணப்பதேவர் திருமறம்.

3-7. துவர்நீர்...அடையல் : ''குவப்பெருந் தடக்கை வேடன் கொடுஞ்சிலை யிறைச்சிப் பாரம், துவர்ப்பெருஞ் செருப்பா னீக்கி'' திருநா. தே. சாய்க்காடு.

8. உரை. அவுணருக்குத்துணையாக மதித்த மா : 'சூருடை முழு முதலென்றது, சூரபன்மாத் தனக்கு அரணாகவுடைய மாவின் முதலென்றவாறு' பதிற். 11 : 5, உரை.

9. புள்ளொடு பெயரிய பொருப்பு : 5 : 9-10, வீசேடக்.

18. சுடுபொன் ஞெகிழம் : "காலவை, சுடுபொன் வளைஇய வீரமை சுற்றொடு, பொடியழற் புறந்தந்த செய்வுறு கிண்கிணி" (கலி. 85 : 1-2.) 20. நறாமகிழ் தட்ப : 57.

19-20. இங்கே சொல்லப்பட்டது துடிக்கூத்து; 60-61, 64; "கைகால் புருவங்கண் பாணி நடைதூக்குக், கொய்பூங்கொம் பன்னாள் குறிக்கொண்டு - பெய்பூப், படுகளிவண் டார்ப்பப் பயில்வளைநின் றாடும், தொடுகழன் மன்னன் றுடி" பு.வெ.359.

30-32. மேகவொலி தாளமாக மயிலாடுதல் : "ஆலி மாமுகி லதிர்தர வருவரை யகடுற முகடேறிப், பீலி மாமயி னடஞ்செயுந் தடஞ்சுனைப் பிருதி" பெரியதிருமொழி. 1. 2:1.

35. யாணர் வண்டினம் - பூக்களாகிய புதுவருவாயினையுடைய வண்டினம்; 17 : 10, உரை.

30-37. மயில் முதலியனவும் அவற்றுக்குரிய உவமைகளும் : 17 : 9-20, அடிக்: விசேடக்.

42. பூநீர்பெய் வட்டம்: 11 : 55, விசேடக்.

39-42. "கூடியார் புனலாடப் புணையாய மார்பினில், ஊடியா ரெறிதர வொளிவிட்ட வரக்கினை" கலி. 72: 15-6.

49. கதுப்பகம் உளரிய வளி : "விரைவளர் கூந்தல் வரைவளி யுளர" (புறநா. 133 : 4, அடிக்.)

59. ஆடும் மகளுக்குப் பூங்கொடி : 17 : 15-6.

60. உருட்டுந்துடி : "உருடுடிமகுளியின்" (அகநா. 19 : 4); "துடியுருட்டி விம்ம" (பு.வெ. 29, பி-ம்.) 60- 61. துடியாட்டு : 19-20. 70. தேய்த்த - இல்லையாக்கிய.

ஃஃஃ

## (22- ஆம் பாடல்)

1. பொருப்பன் - பொதியில் மலையையுடைய பாண்டியன்; பொருப்பென்பது பொதியிலுக்கு ஒருபெயர்; "காமர் கடுந்திண்டேர்ப் பொருப்பன்", "வகையமை தண்டாரான் கோடுயர் பொருப்பின் மேல்", "சினையலர் வேம்பின் பொருப்பன் பொருத" (கலி. 35:24, 57:16, 92: 27); (அகநா. 137:14, 338 : 5-6); "பொருப்பிலே பிறந்து" வி.பா. சிறப்பு.1.

2. மேகத்துக்கு யானையையும் யானைக்கு மேகத்தையும் உவமை கூறுதல் மரபு; "அந்தி வானத் தாடுமழை கடுப்ப, வெண்கோட் டிரும் பிணம்" (பெரும்பாண். 413-4); "புரைதப வுயரிய மழைமருள் பஃறோல்", "வானத் தன்ன வளமலி யானை" மலைபடு. 377, 530.

3. அரசுபடக்கடந்த : "அரைசுபடக் கடந்தட் டாற்றிற் றந்த, முரைசுகெழு முதுகுடி" (கலி. 105 : 1-2); புறநா.211 : 6.

4. இடிக்கு முரசு உவமை : 4 : 19.

6. உறை - துளி. மழைத்துளிக்குக் கணை உவமை : "கார்த்துளி கடுப்பக், கடுங்கணை சிதறி", "கணைத்துளி பொழிந்த கார்வரைச்சாரல்" பெருங். 3. 27 : 98-9, 121.

8. வண்மைபோல் வானம் பொழிந்தநீர் : 4 : 27 ; "பொழி பெயல் வண்மையான்" (கலி. 57 : 12) ; புறநா. 54 : 6-7, அடிக்.

42-3. துடிக்கூத்து : 21 : 19-20, விசேடக்.

45. திருமருத முன்றுறை : 7 : 83, விசேடக்.

ஃஃஃ

# திரட்டு

## (1 - ஆம் பாடல்)

3. நான்மாடக் கூடல் : திரட்டு, 6, 11; "மாடம் பிறங்கிய மலி புகழ்க் கூடல்" மதுரைக். 429.

6. திருந்தடி - இலக்கணத்தால் திருந்திய அடி ; பிறக்கிடாத அடியுமாம்; புறநா. 7 : 2, உரை. 7. மராஅம் - வெண்கடம்பு.

8. பிணிநெகிழ் பிண்டி - அரும்புகள் அவிழ்ந்த அசோகமரம்.

9. மணிநிறங்கொண்ட மலை : 74; "மணிமலை" (சிறுபாண்.1); "மண்ணுறு மணியிற் றோன்றும், தண்ணறுந் துறுக லோங்கிய மலையே" (குறுந். 367 : 6-7) ; "மணிநிற மால்வரை", "மணிநெடுங் குன்றே", மணிநிறங் கொண்ட மாமலை வெற்பின்" (ஐங். 208, 209, 224); மண்ணா மணிபோலத் தோன்றுமென் மேனியைத், துன்னான் றுறந்தான் மலை" 41 : 33-4.

26. மென்புலம்-மருதமும் நெய்தலும் ; வன்புலம் - குறிஞ்சியும் முல்லையும் ; 7 : 9, உரை, விசேடக்.

33. கனங்குழை - கனவியகுழை யென்பர் பரிமேலழகர் (குறள், 1081, உரை); பொன்னாற்செய்த குழையென்பர் நச்சினார்க்கினியர்; கலி. 66 : 13, உரை.

36. பனிச்சை - முன்னுச்சிமயிர்.

38. புலம் - அறிவு.

42. கடலில் வரிசையாக வருகின்ற அலைகளைப்போலக் கரிய நிறத்தினிடையே நரைமயிர்விரவப் பெற்றவர்.

46-7. வினையின் நற்பயனைத் துய்க்கின்ற துறக்கம் : 19 : 10-11, விசேடக்.

50. வண்டு, தும்பி இவற்றின் ஓசைக்கு யாழோசை : 22 : 38-9.

51. யானைமுழக்கிற்கு மேகமுழக்கம் : 8 : 19-20, அடிக்.

52. அருவியிசைக்கு முழவோசை : 17 : 13-4, அடிக்; 22 : 36-7.

55. சூடுநறவு - நறவம்பூ.

56. சூடாநறவு - காமபானம் ; இது வெளிப்படையென்னும் இலக்கணத்தின்பாற்படும். கள் காமத்தை மிகுவித்தலின் 'நறவொடு காமம் விரும்ப' என்று கூறினார்; "முற்றா நறுநறா மொய்புன லட்டி" (20 : 52) என்பதன் விசேடக் குறிப்பைப் பார்க்க.

55-6. இருவகை நறா : 7 : 63-4.

58-9. போகத்திற் சிறந்ததாகலின் நாகருடைய நகரை ஒக்கு மென்றார்; "நாகநீ ணகரொடு நாகநா டதனொடு, போகநீள் புகழ் மன்னும் புகார் நகர்" (சிலப். 1 : 21-2) ; "பள்ளிமாட மண்டபம் பசுங்கதிர்ப் பவணமே" சீவக.146.

60. மணிமருள் கூந்தலென இயைக்க.

61. அரி மது மகிழ்பு - அரித்துச் செய்யப்பட்ட கள்ளை உண்டு.

6_. மணிமயில் : 15 : 40, விசேடக்.

64. கல்சேர் ... ... ...நகர் : இத்தொடர் மாடக்குளக்கீழ் மதுரை யென்பதை நினைப்பிக்கின்றது ; "கொண்மு மாடங்கள் கூடலி ன் மீறியும், நண்ணி நீள்கடல் கொள்ளா நகரிதான், மண்ணின் மாடக் குளக்கீழ் மதுரையென், றெண்ணில் காலத் திலங்கிய தெங்கணும்" திருவால. 12 : 13.

67. இருதிறத்தோர் - தேவரும் அசுரரும்.

74. மணிபுரைமாமலை : 9, விசேடக்.

79-80. சேடன் : 1 : 1, விசேடக்.

ௐௐ

## (2 - ஆம் பாடல்)

2. ஏமநீர் - உலகிற்குப் பாதுகாவலாகிய நீர்; "எல்லா வுயிர்க்கு மேம மாகிய, நீர்" புறநா. 1 : 11-2, 18 : 30, பார்க்க.

3. நாகநீள் மணிவரை : திரட்டு. 1 : 9, விசேடக்.

3-4. வையை நீரின் நறுநாற்றம் : 6 : 41-2, 46-50, 16 : 32-8.

9. நீராடும் இடத்தே அமைத்த அங்காடி - கடைத்தெரு; "ஊரங் காடி யுய்த்துவைத் ததுபோல், நீரங் காடி நெறிப்பட நாட்டிக், கூல வாழ்நர் கோன்முறை குத்திய, நீலக் கண்ட நிரைத்த மருங்கின், உண்ண மதுவு முரைக்கு நானமும், சுண்ணமுஞ் சாந்துஞ் சுரும்பிமிர் கோதையும், அணியுங் கலனு மாடையு நிறைந்த, கண்ணகன் கடைக ளொண்ணுத லாயத்துக், கன்னி மாண்டுழித் துன்னுபு நசைஇய, தூதுவர் போல மூசின குழிஇ" பெருங். 1. 38 : 56-65.

29. மறையாடுவாரை - மந்தணமாக ஆடுவாரை.

46. பஞ்சவன்-பாண்டியன் ; ஐந்துவகை நிலங்களையும் உடைமையால் இப்பெயர் பெற்றனனென்பர்.

48. அறம் - கற்பு ; 'பெண்டிர்க்கு அறமென்பது கற்பு' இறை.

58. ஈப்பாயடுநறா : "புள்ளெறி பிரசம்" குறிஞ்சிப். 189.

63. வாய்பூசுதல் : பெருங். 1. 53 : 87, 2. 4 : 150.

72. திருமருத முன்றுறை : 7 : 83, விசேடக்.

90-96. வையைக்குக் கங்கையுவமை : 16 : 36-8.

ΩΩΩ

## (3 - ஆம் பாடல்)

மறுமுறை - மறுபிறப்பு : 11 : 138-40 ; "எமர்தர வாரா தாயினு மிவணோற், றவணுறை யுலகத் தழித்துப்பிறந் தாயினும், எய்துதல் வலித்தனென்" பெருங். 1. 36 : 113-5.

ΩΩΩ

## (4 - ஆம் பாடல்)

மண் - மார்ச்சனை.

ΩΩΩ

## (6 - ஆம் பாடல்)

புலக்கோல் - அறிவாகிய கோல். நான்மாடக்கூடல் : திரட்டு, 1 : 3. அடிக் ; விசேடக்.

ΩΩΩ

## (7 - ஆம் பாடல்)

1-4. பெருங்கதையில் இராசகிரியமென்னும் நகரத்தைத் தாமரைப்பூவாக உருவகஞ்செய்திருத்தல் இங்கே அறிந்து இன்புறுதற்குரியது.

5. தாதுண்பறவை : "தாதுண் பறவை பேதுற லஞ்சி" (அகநா. 4: 11.) பரிசில் வாழ்நர் : "பரிசில் வாழ்க்கைப் பரிசிலர்" சிறுபாண். 218.

10. கோழி - உறையூர்.

ΩΩΩ

## (11 - ஆம் பாடல்)

ஈவாரைக் கொண்டாடி : "உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப் பார்க்கொன், றீவார்மே னிற்கும் புகழ்" (குறள். 232) ஏற்பாரைப் பார்த்துவத்தல் : "ஈத்துவக்கு மின்பம்" (குறள். 228) "கவர்வனர் போலக் காதலி னுய்த்தும்" (பெருங். 1. 39:54) சேய்-(இங்கே) பாண்டியன்.

## தொல்காப்பியம், தெய்வச்சிலையாருரையில்
# மேற்கோளாக எடுத்தாளப்பட்ட இந்நூற்பகுதிகளும் இடமும்

**(1 : 55 - 8)**

'*பரிபாடலகத்து நின்னொக்கும் புகழ்நிழலவை... ... விகனேமியவை யென்பன அகரத்தோடு சிவணி வந்தன வெனினும் அமையும் ; இவை அஃறிணைப் பொருளன்றோவெனின், தெய்வப் பொருண்மையான் உயர்திணையாம்*' **கிளவி.** சூ. 53.

ꣲꣲꣲ

**(3 : 18)**

'*நிவந்தோங்குயர் கொடிச்சேவலோயென்றவழிச் சொல்லுவான் குறிப்பு மாயவனை நோக்கலிற் சேவல் கருடனாயிற்று*' **கிளவி.** சூ. 53.

ꣲꣲꣲ

**(மேற்படியுரை 33-4)**

'*சினையிற் கூறும் முதலறி கிளவியாவது ... ... ..நகையச் சாக நல்லமிர்து கலந்த, நடுநிலை திறம்பிய நயமிலொருகை யென்பதும் அது*' **வேற்றுமை மயங்கு.** சூ. 30.

ꣲꣲꣲ

**(8 : 57-8)**

'*ஒப்பின் முடித்தலென்பதனான் முறைமை சுட்டாத மகனென்னும் பெயரும் ஏயொடு சிவணுமென்று கொள்க; ... ... ... சான்றாள ரீன்ற தகாஅத் தகாஅ மகாஅ, ஈன்றாட் கொருபெண் ணிவளென ஆகாரமாகியும் வரும்*' **விளிமரபு.** சூ. 18.

ꣲꣲꣲ

# அரும்பத முதலியவற்றின் அகராதி

## (எண் - பக்க எண்)


அகத்தியனென்னுமீன் 85.
அகநானூறு 60,76,112,113, 131,136,143,149,156,157,161.
அகரச்சுட்டு 10
அகரம் இசைநிறையும் இடைச்சொல் 29.
அகரு - அகில்மரம் 96.
அகலத்தைத்தொழுதல் 105,106.
அகலம் - பெருமை ; 25.
மார்பு 8, 101, 125, 153.
அகலிகை கல்லுருவானமை 141.
அகவ - ஆட 39, 119.
அகவயல் - மருதம் 50.
அகவுநர் - பாடுவார் 119.
அகழ் புழுதி 107.
அகில் - ஒரு மரம் 40,136.
அகிலின் ஆவி 78.
அகிற்சாந்து 78, 97
அகிற்புகை 129.
அகிற்புகைக்கு வெண் மேகம் உவமை 113.
அங்கணேர்வானம் 3
அங்காடி 169.
அங்கி - கார்த்திகை, 85 ; தீ 35.
அச்சிரம் - முன்பனிக்காலம் 135.
அச்சு - அச்சம் 16.
அசும்பும் - இடையறா தொழுகும் 159.
அசும்புறு செல்வம் 64.
அசுரர் 13.
அசை : (அதை, அரோ, ஆங்க, ஆங்கு, ஆர், ஓர், ஓரும், தெய்ய முதலியன), 19, 20, 29, 59, 75, 87, 89, 115, 130, 138, 149, 159.
அசைப்பார்-கட்டுவார் 139.
அசைபு - தங்கி 129.
அசைவரூஉம் - அசையும் 56.
அசைவிட - இளைப்பாற 39.
அஞ்சிய - அஞ்சுதற்குக்காரண மாகிய 113.
அட்டமூர்த்தம் 12.
அட்டல்-சொரிதல் 150.
அட்டவசுக்கள் 13.
அட்டவை-கொன்றபடையாய் 160.
அடர்-தகடு 97,159.
அடிக்கடி 58.
அடிதொடுகுன்று - வணங்கப் படும் குன்று 60.
அடிதொடுதல் - சூளுறுதல் 59.
வணங்கப்படுதல் 60.
அடிப்படுத்ததை - அடிப்படுத்ததொழில் 24.
அடிமேலடிமேலொதுங்கி 103.
அடியின் நலன்-பழைய உருவு 43.
அடியுறை-அடியின் கண் உறைதல் 5, 71, 121, 127, 136, 160.
அடியுறை மகளிர் 57,111.
அடியுறையார் 167.
அடியோர்-அடியுறை மகளிர் 57.
அடுக்க-அடுத்து 110.
அடுக்கம்-பக்கமலை 111.
அடுக்கல்-அடுக்குதல் 17.
அடுக்கு 11,18,80,89,104,159,164.
அடுக்கு, காலநீட்டங்குறித்து வருதல் 110.
அடுக்கு, பன்மை குறித்து வருதல் 11,104.
அடுக்கு, விரைவுபற்றி வருதல் 153.
அடுத்தடுத்து 91,114,164
அடுத்துவரலுவமை 23.
அடுநறா-கள் 156,171.
அடை-இலை 109.
அடைத்தர-நினைந்த அளவில் 11.

அடைந்தக்கண்ணும்-சேர்ந்த இடத்தும் 46.
அடையல்-அடையற் செருப்பு 155.
அடையற் செருப்பு 155.
அடையிறந்து அவிழ்ந்த வள்ளி தழ்த் தாமரை 109.
அண்மைவிளி 22, 33.
அணங்கு-தெய்வம், வருத்தம் 1,3,100168.
அணங்குடை அருந்தலை ஆயிரம் 168.
அணங்குடை அருந்திறல் 3.
அணங்குதல்-வருத்துதல் 27,105.
அணங்கும் வேலும் வருத்துதல் 59.
அணத்து-மேல்நோக்கி 154.
அணர்தலை-கிளர்ந்ததலை 18.
அணவர-மேல்நோக்க 1.
அணி-அலங்காரம்80,89,135,169; திரள், 41,148; நன்மை 145.
அணிகயிறு-அடிக்கயிறு 69.
அணிகொள-ஒக்க 105.
அணித்த-அழகுடையவாயின136.
அணிந்த-அழகுசெய்த 117.
அணிமழை 135.
அணிவனப்பு 105.
அணுத்திணிந்த நிலவுலகம் 18.
அணை-பஞ்சணை 52.
அணைக்குப் பாறைப்பரப்பு உவமை 102.
அணைகள்-கரைகள் 50.
அணைபோலுந்தோள் 52.
அத்தக-அழகுதக 99.
அத்தகுமதி-அழகியமதி 8.
அத்திரி-கோவேறு கழுதை 73.
அத்து அல்வழிக்கண் வருதல் 6.
அதர்-வழி 39.
அதிகரித்தற்கரிய வேதம் 55.
அதிர்ப்பு -அதிர்த்தல் 56.
அதிரதிர-அதிர அதிர 57.
அதிரலங்கண்ணி 152.
அதிரற்கண்ணி 152.
அந்தக்கரணம்-மூன்று-மனம், புத்தி அகங்காரமென்பன 21.
அந்தணர் 2,3,10,11,29,42,90,71
அந்தணர் அருமறை 2,10,14,29.
அந்தணர் அறன் அமர்ந்தோன்-முருகன் 113.
அந்தணர் இயல்பு 166
அந்தணர் காக்கும் அறன் 3
அந்தணன்-வியாழன் 85.
அந்தரம் 172.
அந்தரியாமி 7.
அந்நிலை-அப்பொழுது 35.
அநாதி 17.
அநிருத்தன் 21.
அம்பலம் 134.
அம்பா-தாய் 90.
அம்பாவாடல்-தைந்நீராடல் 90.
அம்பி-தெப்பம், விமானம் 45,89.
அம்பின்றொழில்-அம்பினது ஏத்தொழில்1 34.
அம்பினவை-அம்பினை யுடையை 120.
அம்ம 56.
அமர்தல் 106.
அமர்ந்ததை-விரும்பியது 155.
அமர்ந்து 36.
அமர்பு 153.
அமரர் 14. 55.
அமரர்க்கு அமுதருத்தியது 17.
அமரர் செல்வன் 36-7.
அமரருண்டி-மதியம் 87.
அமராபதி 14.
அமளி 74.
அமிர்தபானம்-அமிர்தம் போலும் காமபானம் 63.
அமிர்தன்ன நோக்கம் 100.
அமைதி-தாழ்ச்சி 29.
அமைந்த-பொருந்திய 48.
அமைந்தது-ஏற்றது 88.
அமைந்தன 52.
அமையாப்புணர்ச்சி 34.
அயர்ந்து-மயங்கி 18.
அயர்பு-செய்து 8.
அயரியோர்-கூடாவொழுக்க முடையோர் 37.
அயிலம்பு 134.
அரக்கின் நீருக்கு நெய்த்தோர் 72.
அரக்கு 133.
அரக்குநீர் 72,88,101,123,158.
அரக்குநீர் நிறைந்தவட்டு 101.
அரங்கத்தாளம் 62.

அரங்கு 122-3.
அரங்கேறுதல் 54.
அரசர்சேனை சந்திக்கு இயைந்தும் முற்சொல்லநாணல் 77.
அரசுபடக் கடத்தல் 161.
அரணம்-காவல், சட்டை 30.
அரம் 80.
அரவிந்தம் 102.
அரவின்படம் காந்தட் குலைக்கு 153.
அரவின் பார்ப்பு 142.
அரவின் மைந்தன் 142.
அரவுசெறிமதி கையில் ஏந்திய வள்ளத்துக்கு உவமை 78.
அரவு மலரையடுத்த தளிர்க்கு 142.
அரற்றெடுப்ப 92.
அராகம்-பரிபாட்டுறுப்பினு ளொன்று 2.
அராவணர் 116.
அரி-பருக்கைக்கல், 157; வண்டு 93.
அரிகாற்சூடு 50.
அரிகுரல்-அரிந்த குரல் 128.
அரிகுரற்றோற்றத்திற்கு, கிழமை நிறைகுறைகள் உவமை 128.
அரிமாலையர் 89.
அரிவையர் 99.
அருச்சிப்போர் 62.
அருந்தலை 107.
அருநிலைநீர் 158.
அருப்பம்-திண்மை 77.
அரும்பாலை 94.
அருமறை 2,10,14,29.
அருமறைப்பொருள்-உபநிடதப் பொருள் 10.
அருமை-இன்மை 83.
அருவி-உருவில்லாதது 43; நீர் வீழ்ச்சி 49,56,64,90,128,135, 158,167.
அருவிக்கு முத்தணி 135.
அருவி தாருக்கு 105, 116, 117.
அருவி நீரொலிக்கு முழவின் ஒலி 128.
அருவியாகிய படாம் 156.
அருள் 38.
அருள் குடையாக 20.
அருள்வயின் மொழி 108.
அருளிலணங்கு 59.
அரைக்குநர் 79.
அரைமலையாகிய இலகடம் 156.
அரோ : அசை 130.
அல்கல்-கிடத்தல் 143.
அல்கி-தங்கி 67.
அல்கும் 170.
அல்குல்(ஆடவருறுப்பு) 109.
அல்லதை-அல்லது 37.
அல்லல் 36.
அல்லா-அல்லாந்து 46.
அல்லாந்து-அலமந்து 46,101.
அல்லாப்பு 47.
அல்லி 102.
அல்லியந்திரு 3.
அல்லும் அம்மும் சாரியை 123.
அல்வழிச் சாரியை 6.
அல-அலப்படையை யுடையாய் 21.
அலங்காரம் அடையாது 147.
அலங்கும்-அசையும் 117.
அலர்தரு பக்கம் 86.
அலர்தூற்றல் 66.
அலர்ந்த புகழோன் 24.
அலர்ந்து-மிக்கு 48.
அலரஞ்சல் 77.
அவ்வயின்-அவ்விடத்து 119.
அவ்வும்-அப்பொருள்களும் 10,26.
அவரவரேவலாளனும் நீயே 30
அவாய்நிலை 71,122.
அவி-தேவருணவு 35,40,126.
அவி ஊட்டுதும் 60.
அவிதல்-குறைதல் 23.
அவிப்பாகம் 34.
அவிய-கெட 46.
அவியமரழல் 79.
அவியா விளக்கம்-நந்தாத விளக்கு 62.
அவுணர் 9,18,32,55,119.
அவுணர் கடலிற் பாய்ந்தது 18.
அவுணர்தலைகளுக்குப் பனங்குலை 9.
அவையம் 150.
அழல்-தீக்கொழுந்து 32,40,79,90.
அழல் நுடக்கம் 9.
அழல-வெதும்ப 34.

அழலம்பு-தீயாகிய அம்பு 34.
அழிகரை 146.
அழிதவப்படிவம்-கூடாவொழுக் கால் அழிந்த தவவொழுக்கம் 37.
அழிப்பும் படைப்பும் 4.
அழிபு 8,49.
அழிபெயல்-மிக்கபெயல் 72.
அழுகை மகளிர்க்கு உழுவை செப்பல் 112.
அழுங்கன் மூதூர் 104.
அழுவம்-கடற்பரப்பு 132,137.
அளத்தல் 99.
அளப்பரியவை-அளத்தற்கரியாய் 28.
அளறு-குழம்பு, 40,78; நீர், 9,61.
அளி-அன்பு 3.
அளிது-அளிக்கத்தக்கது 59.
அளைஇய-கலந்த 4.
அறங்காவற் பெண்டிர் 170.
அறங்கொண்டோர் 37.
அறங்கோலாக 20.
அறஞ்செய்தோர் சுவர்க்கம் புகுதல் 137.
அறத்தினுள் அன்புநீ 19.
அறநெறிச்சாரம் 117.
அறவர்-பார்ப்பார் 59.
அறவரடிதொடல் 59.
அறன் 3,12,38.
அறனமர்ந்தோன்-முருகன் 113.
அறாஅ-நீங்காத 109.
அறிதுயில்-யோகஉறக்கம்107,108.
அறிந்து வைத்தும் 23,124.
அறியற்க 11.
அறிவறியாமைகள் 107.
அறிவாரா-காணப்படாத 6.
அறுகுளம் 172.
அறுகை நெடுவேள்-திருமால் 17.
அறுபு-அற்று 8.
அறுவர் 35.
அறுவர் தெய்வமுனிவர் 65.
அறுவேறு துணி 36.
அறை-சாந்தம்மி, 78; பாறை 112.
அறைஇய-ஒலித்தற்குக்காரண மாகிய 85.
அறைச்சுனை 69.
அறையணிசுனை 69.
அறையூஉ-முழக்கி 72.
அன்பது-அன்பு 120.
அன்பன் 53.
அன்பு-மென்மை 19, 38,40
அன்பொத்தவர் 40.
அன்மொழித்தொகை ஆகு பெயராதல் 33.
அன்ன எனற்பாலது அன் எனக் குறைந்து நிற்றல் 29.
அன்னச்சேவல் 15.
அன்னச் சேவலாகித் திருமால் மழையை வற்றச்செய்தது 15.
அன்னப்பெடை 98.
அன்னமரபு 3.
அன்னை-அத்தன்மையை110,114.
அன்னோர்-அத்தன்மையை யுடையோர் 4, 38.
அன்னோரல்லா-அத்தன்மையர் அல்லாத 29.
அனலன்-அக்கினி 36.
அனற்றினை- வெதும்பச்செய்தாய் 46.
அனைத்தின் 19.
அனைத்து 174.
அனைத்தும்-எல்லாம் 17,19.
அனையோய் 3.
ஆக்கின்று-ஆக்கிற்று 57.
ஆகமங்கள் 17.
ஆகாயம் 6.
*ஆகாயம் எல்லாப் பண்பிற்கும் முன் தோன்றுவது 20
ஆகாயமுதற் பூதங்களைந்து 20.
ஆகாயவூழி-ஆகாயமட்டும் தோன்றும் ஊழி 2.
ஆகின்று-ஆகின்றது 55-6.
ஆகுபெயர் 6,16,20,22,29,33,36, 40,73,76,82,102,107,113,138-9.
ஆகுபெயர் அண்மை விளியேற்றல் 22.
ஆகுபெயர், செய்யப்படுவதாகிய தன்பொருட்கு ஏற்ற அடை [82 யடுத்துச்செய்வதன்மேனிற்றல்
ஆங்க-அசை 75.
ஆங்கதை யென்பன அசை 89.
ஆங்கு : அசை, 59,87,115,159.

உடுக்குறி (*) இடப்பெற்ற சொல்லும் பொருளும் ஐயரவர்கள் எழுதியவை. இவை இப்பதிப்பில் புதிதாகச் சேர்க்கப்பெற்றன.

ஆசான்-வேள்விக்கிறைவன் 10.
ஆசிரியச்சுரிதகம் 168.
ஆசிரியத்தளை 1.
ஆசிரியம் 3.
ஆசிரியனல்லந்துவனார் 48,64,95,154.
ஆசை வெள்ளம் 51.
ஆட்டயர்ந்து-விளையாட்டைச் செய்து 80.
ஆட-கூடுதற்கு 58.
ஆடல்-நீராடல் 167.
ஆடலறியா அரிவை 50.
ஆடலியல்பு 50.
ஆடி-பூசி 97.
ஆடுகொளல் 10.
ஆடுங்கடை-ஆடுங்காலத்து 53.
ஆடுப-விளையாடுவார்கள் 47.
ஆண்டாண்டு 129.
ஆணம்-காவல் 30.
ஆணிதிரண்ட முத்து 40.
ஆணியிடும் புணர்வளை 98.
ஆணு 72.
ஆணை 45,58,61.
ஆணைவகை 58.
ஆதரித்து 53.
ஆதல் 107.
ஆதித்த மண்டிலம் 129.
ஆதித்தர் பன்னிருவர் 13,55.
ஆதிப்பிரமன் 13.
ஆதியந்தணன்-பிரமன் 34.
ஆதிரைநாள் 90.
ஆதிரை முதல்வன்-சிவபெருமான் 55.
ஆதிவராகம் 8.
ஆநாள்-தோன்றிய நாள் 86.
ஆம்பல்-ஒருபேரெண், 6,17 ஒரு வகை நீர்ப்பூ 102,142.
ஆம்பல்வாய் 78.
ஆமாம் 45.
ஆய்பு-ஆராய்ந்து 115.
ஆய்மா 73.
ஆய்வந்திலார்-ஆராயாதவர் 66.
ஆயத்தார் 123.
ஆயம்-கூட்டம் 83,92.
ஆயா-சுருங்கி 75.
ஆயிடை 53,91.
ஆயிதழுண்கண் 63.
ஆயிரங் கண்ணினான் 172.
ஆயிரங்கதிர்ஞாயிறு 14.
ஆயிரங்கை 17.
ஆயிரந்தலை 107.
ஆயிரம் விரித்த அணங்குடை அருந்தலைப் பாம்பு 1,3,168.
ஆயிர வணர்தலை 18.
ஆர் : அசை 19.
ஆர்குரல் - குறைவற்ற குரல்111
ஆர்த்திமிழ்பு-மிக ஆர்த்து 117.
ஆர் ததும்பும் அயிலம்பு 134.
ஆர்ந்த 26.
ஆர்வம் 3.
ஆர்வலர்-அன்பர் 3,29.
ஆரணிநித்திலம்-அரிய அழகிய முத்து 8.
ஆரப்பூண் 151.
ஆரம்-சந்தனம் 67,96,136 ; முத்தாரம் 148.
ஆரல்-கார்த்திகை 36,65.
ஆரல் ஆலெனக் குறைதல் 36.
ஆரற்பிறந்தோய் 65.
ஆராக்காமம்-வளராஇன்பம் 57.
ஆராதனை-பூசைப்பொருள் 40.
ஆராவுடம்பு-வளராவுடம்பு 36.
ஆல்=ஆரல்-கார்த்திகைநாள் 35.
ஆலம்-ஆலமரம் 29.
ஆலம், கடம்பு, யாற்றிடைக் குறை, குன்ற முதலிய இடங்களில் திருமால் வேறுவேறு பெயரையுடையவராக எழுந்தருளியிருப்பரென்பது 29.
ஆலுருபு ஒடுவின் பொருளில் வருதல் 81,113.
ஆவணியவிட்டம் 85.
ஆவது-ஆயிருத்தல் 59.
ஆவி-புகை 78,82.
ஆவியர் 169.
ஆவியுண்ணும் 129.
ஆழிப்படை 9.
ஆழிப்படையின் உடல், நிறம் 9.
ஆழிமோதிரம் 52.
ஆழியான் 168.
ஆளத்தி-*உரையொடு பண்ணிய இசை ; ஆலாபனை 127.

ஆளேறுதற்குப்பறையறைதல் 40.
ஆற்றலுடையார் பிறராணையை இகழ்தல் 61.
ஆற்றாமை 83.
ஆற்றிசின்-ஆற்றுவாயாக 60.
ஆற்றிடைக்குறை 123.
ஆற்றுதல்-தருதல் 146.
ஆற்றுப்படுத்த-வழிப்படுத்த 23,32.
ஆற்றுப்பெருக்கு மரச்சினை தோயச் செல்லல் 72.
ஆற்றும்-செய்யும் 161.
ஆறறிகடவுள் 17.
ஆறிருகை 37.
ஆறுதோயலர்1 71.
ஆறுபொறி-மனமும் ஐம்பொறிகளும் 21.
ஆறு மலர்போர்த்து வருதல் 72.
ஆன்மஞ்ஞை-ஆலும் மயில் 138.
ஆன்றவர்-தேவா 137.
ஆனா-அமையாத 34.
ஆனாச்சீற்றத்தவன் 161.
ஆனுருபு இறுதிக்கண் தொகுதல் 72.
இக, இகாவென ஈறுதிரிதல் 92.
இகந்து-கடந்து 36.
இகப்ப 167.
இகல்-புலவி, 67 ; போர் 41.
இகழ்ச்சி 41.
இகறலைக்கொண்டு-மாறுகொண்டு 66.
இகா. இகவென்பதன் திரிபு 92.
இகுத்தரும்பொழுது 169.
இகுத்தல்-வணக்குதல் 150.
இச்சம்-ஆசை 51.
இசின்:முன்னிலையொருமை 60.
இசை-ஒலி, 6 ; மிடற்றுப்பாடல் 54.
இசைக்குரிமையுடையவராகிய பாணரும் கூத்தரும் 82.
இசைச்சுருதி 56.
இசைநிறையும்மை 76,82,97,164.
இசைப்பகுப்புப்படைத்தபுலவர் 5.
இசைப்பா 5.
இசைப்புலவர் 115.
இசை முழவம் 62.
இசைமை-ஒலி 106.
இசையும் பாட்டும் மனத்தை நெகிழ்வித்தல் 77.
இடத்துநிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல்நிற்றல் 6,109,111.
இடப்பொருட்டு 8.
இடபவீதி 84.
இடவல-இடமும் வலமுமாயினோய் 21.
இடவலவ 21.
இடனறிந்தூடல் 47.
இடித்து-உரப்பி 150.
இடிமுரசு 24.
இடிமுழக்கிற்கு முரசமுழக்கு 161.
இடியெதிர் கழறும்-இடியை யொக்கும் 8.
இடியொலி பாஞ்சசன்னிய ஒலிக்கு 8.
இடீஇ-இட்டு 72.
இடுக்கண்-துன்பம் 14.
இடுதுனி 60.
இடுபு-இட்டு 109.
இடுவளை 148.
இடைச்சுரத்துச் சென்று பொருதல் 88,155.
இடை நிலம் 139.
இடைமுறை 19.
இடையிடுபு-இடையிட்டு 109.
இடையெண்-பரிபாட்டின் ஒருறுப்பு 5.
இடையொழிவு 167.
இணர்-ஒழுங்கு 120 கொத்து 49,56,112,143.
இணர்க்குப் பொன்மாலை 112.
இணர்த்துழாய் 116.
இணருதிராத 56.
இணருழ்ப்ப 56.
இணரூழா 55.
இணைதல்-பொருந்துதல் 9.
இணைப்பிணையல் 9.
இணையவை-இணையையுடையாய் 29.
இதா-இதனைப் பார் 59.
இதுவோ-இத்தன்மைத்தோ 59.
இதை-கப்பற்பாய் 76.
இந்தா 59.
இந்திரன் 57,65,141,172.
இந்திரன் இமயத்தைக்காத்தல் 65.
இந்திரன் குதிரை 14.
இந்திரன் சாபமேற்றது 141
இந்திரன் முதலிய எண்மர் 55.

இந்திரனது நீர்விளையாட்டு வையை நீர்விளையாட்டுக்கு உவமை 175.
இந்திரனுக்குஇரதம் வாராமை 35.
இந்திரியம்செவிமுதலிய ஐந்து 23.
இம்மை யின்பங்குறித்துக் கன்னியர் தைந்நீராடல் 91.
இமயக்குன்றப்பொய்கை பரங்குன்றச்சுனைக்கு உவமை 55.
இமயக்குன்றம் பரங்குன்றத்திற்கு 55.
இமயம் 4,34,65,168.
இமயவில் 168.
இமிர்குரல் 111.
இமிர்பு-ஊதி 140.
இமிழ்-ஒலி 123.
இமிழ்ப்ப-முழங்க 163.
இமிழ்பு-மிக ஆர்த்து 117.
இமிழ்வது 172.
இமிழ்வு 163.
இமைக்கும்-விளங்கும் 155.
இமைபு-இமையாநின்று 129.
இமையாநாட்டம்-இறைவன் 34.
இமையுண்கண்மான்மறிவள்ளி 65.
இயம்ப-ஒலிப்ப 24.
இயமென்னடை மாந்தர் மென்னடைக்கு உவமை 74.
இயல்-இயற்பாட்டு, 136 ; சாயல் 133.
இயல்பு-இலக்கணம் 66.
இயல-அசைய 159.
இயலணி 148.
இயலா-தோன்றாத 22.
இயவு-வழி 24,41.
இயற்கை யழகு 97.
இயற்பழித்தல் 104.
இயற்பா 16.
இயைந்து 8.
இரட்டைகள் 13.
இரண்டாவது விகாரத்தால் தொகுதல் 106.
இரண்டு-ஓசையும் ஊறும் 106; காற்று 20.
இரண்டு தாக்கு 128.
இரண்டேகால்நாள் ஓர் இராசிக்கு 84.
இரணியன் 24.
இரத்தல்-வாயில்வேண்டல் 47,66.
இரதி 140.
இரவுக்குறி 43.
